[illegible]

[illegible] – [illegible] 2000

©

# தமிழரசு

ஜனவரி 1-31, 2000 ரூ. 10






# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031, மார்கழி – தை

ஜனவரி 1–31, 2000

மலர் : 31  இதழ் : 13 & 14

விலை ரூ.10




இந்த இதழில்...


- என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா ---------- 2
- திருக்குறள் மனித வாழ்க்கையை மையமாக கொண்ட தத்துவ நூல் ---------- 10
- சமுதாயப் புரட்சி செய்யும் தத்துவப் பெருஞானி -- மகத்துவம் மிகக் கொண்ட மனிதகுலத் திருவிளக்கு ---------- 14
- குறள் பரிசு ---------- 23
- வள்ளுவன் தன்னை உலகினுக்கே ---------- 25
- மதச்சார்பின்மைக்கு வழிவகுத்த முன்னோடி ---------- 27
- வள்ளுவருக்குப் பேரன் ---------- 31
- இணையத்தில் திருக்குறள் ---------- 33
- திருக்குறள் உலகை ஆளும் ---------- 38
- பொய்யாமொழி ---------- 40
- வள்ளுவரும் மருத்துவமும் ---------- 41
- திருக்குறளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ---------- 49
- குறள் : கவிதையும் நீதியும் ---------- 57
- வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும் ---------- 63
- திருவள்ளுவருக்கு கலைஞரின் திருப்பணிகள் ---------- 68
- திருவள்ளுவர் சிலை திறப்பு விழா கவியரங்கம் ---------- 71
- கோட்டம் முதல் குமரி வரை ---------- 87
- தலைவர்கள் புகழாரம் ---------- 91


*முதல் மற்றும் இரண்டாம் பக்க அட்டையில்*

*கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா*

*மூன்றாம் பக்க அட்டையில்*

*திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா கண்காட்சியில் இடம் பெற்ற படங்களில் சில.*

*கடைசிப் பக்க அட்டையில்*

*திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா சிறப்பு மலரான 'கோட்டம் முதல் குமரி வரை' மலரில் இடம் பெற்ற வண்ணப் படங்களில் சில.*

**திருக்குறள்**

**தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவற்கு.**

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*



22/1/93

# என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா

**திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர்**

நேற்றும் இன்றும் நடைபெற்று வருகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழா, எழுச்சி விழா, என் உள்ளம் கவர்ந்த விழா என் உயிரோடு உயிரணுக்களோடு கலந்த விழா என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் அனைவரும் மிக நன்றாக உணர்வீர்கள். அதனால்தான் இந்த விழாவிலே கண்ட எழுச்சியை வியந்து நம்முடைய மூப்பனார் அவர்கள் இங்கே இலட்சக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லம் எழுந்து நிற்கச்செய்து, "கருணாநிதியைப் பாராட்டுங்கள். பாராட்டுவதற்கு அடையாளமாக அனைவரும் எழுந்து நின்று கையொலி செய்யுங்கள்" என்று கேட்டு, நீங்களும் உற்சாகத்தோடு கையொலி செய்து என்னைப் பாராட்டி வாழ்த்தியிருக்கின்றீர்கள்.

என்னுடைய அருமைச் சகோதரர் சிவாஜி அவர்கள் உணர்ச்சிமிக்க சில வார்த்தைகளை இங்கே கொட்டி என்னையும் ஒரு கண நேரம் உணர்ச்சி வயப்படச் செய்தார். ஏற்கெனவே, கடந்த ஆண்டு நடைபெற்ற என்னுடைய பவள விழா நிகழ்ச்சியில் அவர் மனம் உருகப் பேசியதும், நானும் உருகியதும் உணர்ச்சிவயப்பட்டதும் ஊரெல்லாம் உள்ள தொலைக்காட்சி வாயிலாக நீங்கள் அனைவரும் கண்ட ஒன்றுதான். அதைப்போல இன்றைக்கு என்னுடைய தாய்–மன்னிக்க வேண்டும். அவருக்கும் தாய்தான். அந்த அஞ்சுகத்தாயை நினைவுபடுத்தி, "அவர் இருந்து பார்த்தால் என்ன உணர்ச்சிவயப்படுவாரோ, அதே உணர்ச்சியோடு நான் உன்னை வாழ்த்துகிறேன்" என்று அவர் இங்கே சொன்னபோது நான் என்ன ஆகியிருப்பேன் என்பது அவருக்குத் தெரியும். அப்படி நாங்கள் இருவரும் பாலபருவத்திலிருந்து பழகிய பாசமுள்ள நண்பர்கள். இடையிலே சில நேரங்களில் புயல், சோதனை, சூறாவளி இவைகள் சுழன்று அடித்தபோதிலும் எங்களுடைய நட்பை எந்த ஒரு நிகழ்வுகளாலும் அசைக்க முடியவில்லை என்பதை நாடறியும். நாங்களும் மிக நன்றாக அறிவோம். அவருடைய வாழ்த்து, அவருடைய பாராட்டு இந்த விழாவிலே எனக்கும், இந்த அரசுக்கும் இந்த வள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே கிடைத்திருக்கிறது.

பல கட்சிகளின் தலைவர்கள் இங்கே என்னை வாழ்த்தியிருக்கிறார்கள். நம்முடைய வாழப்பாடியார் அவர்கள் ஒரு கோரிக்கையை இங்கு வைத்தார். "காலப் பெட்டகம் ஒன்றை அமைக்கவேண்டும். இப்போதே நடைபெற்றுள்ள சம்பவங்களையெல்லாம் அதிலே எழுதி வைத்து காலப்பெட்டகத்தை புதைத்து வைக்க வேண்டும். எதிர்காலத்திலே புதிய சமுதாயம் அதை எடுத்துப் பார்த்து இந்த வரலாற்றை உணர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



காலப்பெட்டகம் தயாரிக்கின்ற அளவிற்கு நான் இன்னும் பல சாதனைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை உணராமல் இல்லை. அப்படி உணருகின்ற காரணத்தால் தான் இன்னும் நாம் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன என்ற காரணத்தால்தான் வழிகாட்டக்கூடிய வள்ளுவனுடைய சிலையைத் திறந்துவைத்து அந்த அய்யன் வழி நின்று நம்முடைய பணிகளைத் தொடருவோம் என்கின்ற உறுதியை, சூளுரையை இன்றைக்கு இங்கே நாம் எடுத்துக் கொள்கிறோம்.

தம்பி வைகோ உணர்ச்சிகரமாக பல செய்திகளை இங்கே எடுத்துச்சொல்லி திராவிட இயக்கத்தினுடைய தாக்கம் பற்றி குறிப்பிட்டார். வாழப்பாடியார் அவர்களும் அதையே சொன்னார்.

திராவிட இயக்கத்தினுடைய தாக்கத்தால் திருவள்ளுவர் நினைவும், திருவள்ளுவரைப் பற்றிய சிந்தனைகளும் திருவள்ளுவருடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற மனப்பான்மையும் தமிழகத்திலே உருவானது என்ற வரலாற்றுச் சான்றுகளை எடுத்துச் சொன்னார்கள்.

### பாமரர்களின் கைக்கும் திருக்குறள்

எங்களையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள் திருவள்ளுவருடைய பெருமைச் சொல்ல திருக்குறளின் தத்துவங்களை எடுத்துக்காட்ட சென்னை மாநகரத்திலே 1942ஆம் ஆண்டு வாக்கில் திருக்குறள் மாநாடு ஒன்றை நடத்திய பிறகுதான் பண்டிதர்களுடைய நூலகங்களில் மாத்திரம் இருந்த திருக்குறள் பாமர மக்களுடைய கைக்கு வந்தது என்பதை யாரும் மறக்க முடியாது. இப்படி பெரியார் அவர்களால் பாமர மக்களுடைய கைக்கு அனுப்பப்பட்ட திருக்குறள் இன்றைக்கு எல்லோராலும் போற்றப்படுகிற, எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கின்றது. இதில் திராவிட இயக்கத்துக்கு மட்டும் உரிமை கொண்டாட நான் விரும்பவில்லை.

இங்கே தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பலர் இருக்கிறார்கள். தேசிய இயக்கத்திலே இருந்து தொண்டு புரிந்தவர்கள், தியாகம் செய்தவர்கள் எல்லாம் மேடையிலே வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். இலக்கியச் செல்வர் குமரிஅனந்தனைப் போன்றவர்களெல்லாம் திருக்குறளிலே ஊறித் திளைத்தவர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, திராவிட இயக்கத்திற்கென்று நான் தனிச் சொந்தம் கொண்டாட விரும்பவில்லை. அது ஒரு கட்டத்திலே திருவள்ளுவரை உணர்ந்து கொள்வதற்கு, அறிமுகம் செய்வதற்குப் பயன்பட்டிருக்கலாம். ஆனால், எல்லா இயக்கத்திற்கும், எல்லா கட்சிகளுக்கும், எல்லா கட்சிகளிலே இருக்கின்ற தமிழ்ப்பெருங்குடி மக்கள் அனைவருக்கும் உரிய ஒன்றுதான் திருக்குறள் நூல். திருவள்ளுவர் வகுத்த மார்க்கம், அவர் கண்ட வழி.

திருவள்ளுவரை சில பேர் கவிஞர், புலவர் என்றெல்லாம் இங்கே சொன்னார்கள். மன்னித்துக் கொள்ளவேண்டும். நான்கூட இதுவரையில் அப்படிச் சொல்லியிருந்தால் நானும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். திருவள்ளுவரை கவிஞர் என்ற ஒரு வட்டத்திற்குள் அடைக்க நான் விரும்பவில்லை. நேற்றைக்கு நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். ஒரு வட்டத்திற்குள்ளே திருவள்ளுவரை அடைக்க முடியாது என்று குறிப்பிட்டார்கள். அதைத்தான் நானும் சொல்கின்றேன்.

இங்கே நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போதும் அதைக் குறிப்பிட்டார். ஒரு கவிஞன், ஒரு புலவன் என்கிற அளவோடு திருவள்ளுவரை நிறுத்த முடியாது. அவர் ஒரு தத்துவ ஞானி மாத்திரமல்ல. பொருளாதார மேதை, பொருளாதார மேதை என்றால் நம்முடைய அருமை நண்பர் சங்கரய்யா அவர்கள் முழுமையாக ஒத்துக்கொள்ளமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய பேச்சிலே கூட அது வெளிப்பட்டது. அதையும் நான் கவனித்தேன். ஆனால், வள்ளுவர் குறளிலே சொல்கிறான்.

*ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை.*

– என்ற இந்த ஒன்றே அவருடைய பொருளாதார நிபுணத்துவத்திற்குச் சான்று என்று நான் கருதுகிறேன்.

*ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை.*

– அதாவது இதற்கு பொருள்; 'வரவு குறைவாக இருந்தாலும், வருகின்ற வழி சிறியதாக இருந்தாலும் சுருக்கமானதாக இருந்தாலும், கவலைப்படத் தேவையில்லை. வருவாய் குறைவாக இருந்தாலும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால், அதனால் எந்தக் கேடும் இல்லை. எப்பொழுது? போகாறு அகலாக் கடை. அதாவது செலவு அதிகமாக ஆகாமல் இருக்கிற வரை வரவு குறைவாக இருந்தால் கவலைப்படத் தேவையில்லை'.

– என்கின்ற இந்த கருத்து முதலமைச்சராக மாத்திரமல்ல நிதியமைச்சர் பொறுப்பையும் ஏற்றிருக்கின்ற எனக்கு எவ்வளவு பயன்படக்கூடிய கருத்து என்பதை எண்ணிப் பார்த்தால் திருவள்ளுவன் பொருளாதாரத்துறையிலும் எவ்வளவு நுணுக்கம் வாய்ந்தவராக இருந்திருக்கிறார் என்பதை திருக்குறள் எந்த அளவிற்கு நுணுக்கத்தைத் தெரிவிக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

### பேராசிரியருக்கும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் நன்றி

இந்த விழாவிலே நான் முதலில் சில பிரச்சினைகளைப் பேசுவதற்கு முன்பு முதலில் நன்றியினை தெரிவிக்க வேண்டும். யார் யாருக்கு என்றால்; இந்த விழா சிறப்பாக நடைபெறுவதற்கு விழாக் குழுவின் தலைவர் பொறுப்பை ஏற்று இவ்வளவு சிறப்பாக இரண்டு நாள் விழா நடைபெற ஒத்துழைத்த – காரணமாக இருந்த விழாக்குழுவின் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கும், துணைத்தலைவர் தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தம்பி தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், இங்கே சிலை வைக்கப்படவேண்டும் என்று நான்கு ஆண்டுகாலமாக நடைபெறுகின்ற இந்தப் பெரும் பணியில் அவ்வப்போது குமரிமுனைக்கு வந்து, சிற்பி கணபதி ஸ்தபதி அவர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கலந்து பழகி ஒவ்வொரு நாளும் நடைபெறுகின்ற செய்திகளை என்னிடத்திலே அறிவித்து மாதம் மூன்று நான்கு முறை குமரி மாவட்டத்திற்கு வந்து உழைத்து இந்த சிலை உருவாகக் காரணமாயிருந்த செய்தித்துறை அமைச்சர் தம்பி முல்லைவேந்தனை மறக்கமுடியாது, அவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.





மேடையிலே இன்றைக்கும் நேற்றைக்கும் நான் சந்தித்த பல பெரும் புலவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கருத்துரையாளர்கள், வெளிநாட்டிலிருந்து வந்த வித்தகர்கள் இவர்களெல்லாம் வருவதற்கும் அவர்களுக்கான நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்கும் காரணகர்த்தாவாக விளங்கிய தம்முடைய முனைவர் தமிழ்க்குடி மகன் அவர்களையும் நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

இந்தக் குழுவின் உறுப்பினர்கள் தம்பி ஆலடிஅருணா, தம்பி சுரேஷ்ராஜன், திருமதி. ஜெனிபர் சந்திரன் ஆகியோர்களுக்கும் நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளையெல்லாம் முடுக்கிவிட்டு இந்தப் பணிகளை ஆற்றுவதற்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பணியாற்றிய தலைமைச் செயலாளர் திரு.முத்துசாமி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மிக அழகான ஒரு மலரை – இதுவரையில் வெளிவந்ததில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு ஒரு அற்புதமான மலரை, 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற தலைப்பிலே வெளியிடுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இறையன்பு அவர்களுக்கும், செய்தித்துறை அதிகாரிகள் ராமு, ஐ.ஏ.எஸ்., முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., ஆகியோர்களுக்கும் இந்த மாவட்ட ஆட்சியாளர் திரு.பாண்டியன், ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

### எல்லோருக்கும் மேலாக நன்றி தெரிவிக்க வேண்டியவர் சிற்பி கணபதி ஸ்தபதி

இதற்கெல்லாம் மேலாக எனக்கும் மேலாக நன்றி தெரிவிக்க வேண்டியவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் சிற்பி கணபதி ஸ்தபதி என்று நான் சொல்ல விரும்புகிறேன். நின்றுகொண்டு எனக்கு கை தட்டினீர்கள். உட்கார்ந்துகொண்டு அவருக்காக, அவரை பாராட்ட கைதட்டுங்கள் என்று உங்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவு கடினமான உழைப்பு, அவ்வளவு ஆர்வம், அவ்வளவு அக்கறை.

அந்த உணர்வோடு அவர் பாடுபட்ட காரணத்தால்தான் ஏற்கெனவே 75ஆம் ஆண்டு சிந்தித்து அறிவித்து அதற்குப்பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் 79ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி பிறகு ஏறத்தாழ பத்தாண்டுகாலம் அந்த அடிக்கல்லைப் பற்றி யாரும் கவலைப்படாமல் இருந்து பிறகு 89–லே பணி தொடங்குகின்ற விழா நடத்தி இரண்டாண்டு காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டு விட்ட காரணத்தால் 91–க்குப் பிறகு இதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகையெல்லாம் வேறு சில பணிகளுக்காக செலவிடப்பட்டு – வேலையே நடக்காமல் போயிருந்த நேரத்தில் 96ஆம் ஆண்டு மீண்டும் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு நான் வந்தவுடன் கணபதி ஸ்தபதியை அழைத்து அவரிடத்தில் பொறுப்பை ஒப்படைத்து "என்ன செய்வீர்களோ தெரியாது? இதை மீண்டும் தொடங்குகின்ற காரணத்தால் தொடங்கும் போதெல்லாம் ஆட்சிக்கு ஆபத்து வருகிறது. இருந்தாலும் நான் அந்த நம்பிக்கைக்கு ஆட்பட்டவன் அல்ல. எனவே இந்த சிலையை நீங்கள் முடித்துத் தரவேண்டும்" என்று கேட்டேன். அவரும் அதற்கு இணக்கம் தெரிவித்து எத்தனையோ கஷ்டங்கள், எத்தனையோ சோதனைகள், எத்தனையோ எதிர்ப்புகள், மறைமுகமான சூழ்ச்சிகள் இதையெல்லாம் வெற்றி கண்டு இந்தச் சிலை இன்றைய தினம் உங்கள் முன்னால் 133 அடி உயரத்தில் நின்று கொண்டிருக்கிறது.

கணபதி ஸ்தபதி அவர்கள்தான் பூம்புகார் சித்திரக் கலைக்கூடத்தை நிர்மாணித்துத் தந்தவர். அவர்தான்

பாஞ்சாலங்குறிச்சியிலே கட்டபொம்மன் கோட்டையைத் திரும்பக் கட்டியவர். அவர்தான் வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்தவர்.

வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்தபோது, அதைத் திறந்துவைக்கின்ற பேறு எனக்குக் கிடைக்காமல் போயிற்று. அதை மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு இன்று காலையில் பேசும்போது குறிப்பிட்டு அனைவருடைய கண்களையும் கலங்க வைத்தார். மிசா நேரம். சென்சார் கொடுமை பத்திரிகைகளுக்குக்கூட. 500–க்கும் மேற்பட்டவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சிறைச்சாலைகளிலே இருந்தார்கள். மேடையிலே இருக்கின்ற பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூட அன்றைக்கு சிறைச்சாலையிலே இருந்தார்கள் மிசா கொடுமையின் காரணமாக. அந்த நேரத்திலேதான் நான் கட்டி முடித்த வள்ளுவர் கோட்டத்திற்கு திறப்பு விழாவிற்கு தேதி வைத்த கட்டத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அந்தத் தேதியில் வள்ளுவர் கோட்டத்தை நான் திறந்து வைத்து விடக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே ஒரு வாரத்திற்கு முன்பு ஆட்சி கலைக்கப்பட்டது.

நான் திறந்து வைக்கவில்லையே என்ற ஏக்கம் அல்ல. அந்த வள்ளுவர் கோட்டம் முழுமையடைந்துவிட்டதை உள்ளே சென்று பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கத்தில் நான் முரசொலியிலே எழுதிய கடிதத்திலேதான், ''அரும்பாடுபட்ட வளர்த்த அழகு மகளுக்கு திருமணமாகிற நேரத்தில் மணமேடைக்குச் செல்ல முடியாத தாய், பந்தலிலே இருக்கின்ற ஓலைக்கீற்றின் இடுக்கு வழியாக பார்த்து மகிழ்வதைப் போல் நான் வீட்டிலே இருந்து பார்த்துக் கொண்டே மகிழ்கிறேன் தம்பி'', என்று உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதினேன். பதிமூன்று ஆண்டு காலம் – அதைத்தான் தம்பி டி.ஆர்.பாலு இங்கே சுட்டிக் காட்டிப் பேசினார்.

## அடிக்கல் நாட்டிய என் பெயர் இல்லாமலே 13 ஆண்டுகள் வள்ளுவர் கோட்டம் இருந்தது

13 ஆண்டு காலம் என்னுடைய பெயர் இல்லாமலேயே, அடிக்கல் நாட்டிய அந்தக் கல் இல்லாமலே வள்ளுவர் கோட்டம் 13 ஆண்டு காலம் இருந்தது.

"பக்ருதீன் அலி அகமது அவர்கள் வந்து அதைத் திறந்து வைத்தார்கள்; ஆளுநர் கே.கே.ஷா தலைமையில்'' என்ற அந்தக் கல்தான் அங்கே இருந்தது. ஆனால் நான் வள்ளுவர் கோட்டத்திற்காக நாட்டிய அடிக்கல் இடம் பெறவில்லை. அது மாத்திரமல்ல; வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி முழுவதும் முடிந்த பிறகுகூட, நான் திறப்புவிழாவிற்குத் தயாராக இருந்தபொழுது – வேறு கல் வைக்கப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது. அடிக்கல் 13 ஆண்டு காலம் இடம் பெறவில்லை. எனக்குள்ள வருத்தம் எல்லாம், என்னுடைய ஜாதகத்தைப் பார்த்ீர்களா? இரண்டு நாளாக சில பத்திரிகைகளில் எழுதுகிறார்கள், 79ஆம் ஆண்டு வைக்கப்பட்ட அடிக்கல் எங்கே? எங்கே? என்று கேட்டு எழுதுகிறார்கள். நான் அவ்வளவு அற்ப புத்தி படைத்தவன் அல்ல. அந்தக் கல் வைக்கத்தான் போகிறோம். அந்தக் கல்லின் மாடல்தான் இங்கே முன்னால் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதைக் கூட தம்பி திருநாவுக்கரசு இங்கே சுட்டிக் காட்டினார். சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களும் எடுத்துக்காட்டினார்.

இந்தக் கல்தான் அங்கே வைக்கப்படப் போகிறது. அதை யாரும் மறைக்கத் தயாராக இல்லை. ஆனால், அந்த 13 ஆண்டு காலத்தில் எனக்காகக் குரல் கொடுக்க தமிழகத்தில் யாரும் இல்லையே ஏன் என்றுதான் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இத்தனை சோதனைகளையும் – இத்தனை சோதனைகள் என்றால் – எறியும் ஈட்டிகளல்ல, குத்தும் பாணங்களல்ல, மோதும் கணைகள் அல்ல, சக்கராயுதங்களை அல்ல, சூலாயுதங்களை அல்ல, அந்த எதிர்ப்புக்களை அல்ல – நான் அலட்சியப்படுத்தப்படுகிறேன் என்ற அந்த எதிர்ப்பைத் தாங்கிக் கொள்வது சாதாரணமான விஷயம் அல்ல. அதையும் தாங்கிக் கொண்டேன். காரணம், வள்ளுவன் மீது எனக்கிருக்கின்ற அன்பு. யார் திறந்தால் என்ன? யார் திறப்பு விழா நடத்தினால் என்ன? என் அய்யன் வள்ளுவருக்கு ஒரு மண்டபம் – பிறகு நான் துடித்தேன். பதைத்தேன். அது எதற்காகத் தெரியுமா? ஏன் தெரியுமா?

இலக்கியச் செல்வர் இங்கே குறிப்பிட்டதைப் போல, அந்த வள்ளுவர் கோட்டத்தில் இடையிலே ஐந்தாண்டு காலம் நடக்கக் கூடாதது எல்லாம் நடைபெற்றது. அதைக் கேட்டும் பார்த்தும் – அதைப் படமெடுத்து சில பத்திரிகைக்காரர்கள் போட்டார்களே, அதைப் பார்த்தும் துடித்திருக்கிறேன். கேட்டும் பதைத்திருக்கிறேன். பதறியிருக்கிறேன். அதையும் மறந்துவிடக்கூடாது.

நம்முடைய பேரவைத் தலைவர் திரு.பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் நேற்றுக் காலையில் திறந்துவைத்த ஓவியக் கண்காட்சியிலே இருக்கின்ற எல்லா ஓவியங்களையும் சென்னையிலே இருக்கின்ற வள்ளுவர் கோட்டத்திலே வைத்து அழகு பார்க்கவிருக்கின்றோம். அழகு பார்க்க மாத்திரமல்ல. அறிவூட்டவிருக்கின்றோம். அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கெல்லாம் வள்ளுவத்தைக் கற்பிக்க –வள்ளுவத்தை உணர்ந்துகொள்ள ஒரு வழி காட்டக் கூடிய அளவிற்கு அந்த ஓவியங்களையெல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே வைக்க விருக்கிறோம் என்ற அந்தச் செய்தியையும் உங்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

இதென்ன கன்னியாகுமரியிலே சிலை, ஓவியக் கண்காட்சி அங்கேயா! என்று குமரி



மாவட்டக்காரர்கள் யாரும் கோபித்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் இங்கே அதற்காக ஒரு மண்டபம் கட்டி அதற்கொரு கோட்டம் கட்டுவதற்கு செலவுக்கு பணமில்லாத காரணத்தால் – ஆகாறு அளவிட்டதாயினும் கேடில்லை போகாறு அகலாக்கடை– என்ற குறளைப் பின்பற்றி; ஏற்கெனவே இருக்கின்ற கோட்டத்திலே கொண்டு போய் இவைகளை வைக்கலாம் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கின்றது.

அருமை நண்பர் கோவை செழியன் இங்கே பேசும்போது பெங்களூரிலே பத்தாண்டு காலமாக திருவள்ளுவருடைய சிலை ஒன்று மூடிக் கிடக்கின்றதே, அது என்னவாயிற்று என்று கேட்டார். வாழப்பாடியார் அதற்காக தான் கடிதம் எழுதியதாகவும், அதற்கு பதில் வரவில்லையென்றும் கூறினார் . அதை ஏன் கவனிக்கக் கூடாதா என்று பக்கத்திலே இருந்த மக்கள் தலைவர் மூப்பனார் என்னைப் பார்த்துக் கேட்டார். குமரிஅனந்தன் அதைப் பற்றி கோபாவேசமாகப் பேசினார். எல்லோரும் பேசியிருக்கிறார்கள்.

ஆனால் நான் ஒரு உறுதி எடுத்திருக்கிறேன். அதை மூன்று மாதத்திற்கு முன்பு கர்நாடகத்திலிருந்து ஒரு அமைச்சர் சென்னை மாநகரில் வந்து பேசியபோது "தமிழக முதலமைச்சர் கலைஞர் விரைவிலே எங்கள் ஊருக்கு வரவேண்டும்" என்றும், "ஒரு விழாவிலே கலந்து கொள்ள வேண்டும்" என்றும் கோரிக்கை வைத்தார். நான் அதற்கு பதிலளித்துப் பேசும்போது, "பெங்களூருக்கு ஒரு விழாவிற்கு வருவதென்றால் – நான் அங்கே இனி கலந்து கொள்கின்ற முதல் விழா அந்த திருவள்ளுவருடைய சிலை திறப்பு விழாவாக இருந்தால்தான் வருவேனே தவிர வேறு எந்த விழாவிற்காகவும் நான் அடியெடுத்து வைக்க மாட்டேன்" என்று சொல்லி விட்டேன்.

வராவிட்டால் என்ன, நன்றாகப் போய் விட்டது என்று சொல்ல மாட்டார்களா, அதற்காக நாம் போராட வேண்டாமா என்று கேட்கக்கூடும். இங்கே பேசிய இல. கணேசன் கூடக் குறிப்பிட்டார். அவரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

இங்கேயிருக்கின்ற எல்லா கட்சித் தலைவர்களையும் – இந்தியா ஒரு நாடு, பல மொழி பேசுகின்ற மக்கள். ஆகவே மொழி வழி மாநிலங்கள் என்று பிரிந்தாலுங்கூட, நம்முடைய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் சோதனைக்கு ஆளாகக் கூடாது.

அதை சோதனைக்கு ஆளாக்குகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மீறி நாம் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் நிலை நாட்ட வேண்டும். அதற்கும் வள்ளுவம்தான் பயன்பட வேண்டும். பெங்களூரிலே இருக்கின்ற வள்ளுவருடைய சிலையை திறப்பதற்கு அனுமதிக்கிறார்களா? இல்லையா என்று கேட்டு உள்ளபடியே ஒற்றுமையிலே, ஒருமைப்பாட்டிலே மத்தியிலே இருக்கின்ற அரசுக்கோ அல்லது மாநிலத்திலே இருக்கின்ற அரசுக்கோ நம்பிக்கை




இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து விட வேண்டியதுதான். காலையில் வந்த செய்தி உண்மையாக இருந்தால், அதிகார பூர்வமாக இருந்தால் மகிழ்ச்சி. இல்லாவிட்டால் அதைப்பற்றி என்ன செய்யலாமென்று இந்த மேடையிலே இருக்கின்ற நாமெல்லாம் உட்கார்ந்து ஒரு முடிவெடுப்போம். முடிவெடுக்க நீங்கள் எல்லாம் வரவேண்டுமென்று இந்த வள்ளுவர் சிலை திறப்பு விழாவிலே உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வள்ளுவருக்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க – "வள்ளுவர் நாள்" என்று ஒரு நாளை நிர்ணயிக்க வேண்டுமென்று தமிழக அரசு கடந்த காலத்திலே எண்ணி 1969ஆம் ஆண்டு நான் முதல்வராக

ஆனபோது அமைச்சரவையிலே ஒரு முடிவெடுத்து ஒவ்வொரு ஆண்டும் பொங்கலுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என்று அறிவிக்கப்பட்டது. அது முதல் பொங்கல் விழாவிற்கு மறுநாள் வள்ளுவர் விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டும் கொண்டாடப் போகிறோம். அது மாத்திரமல்ல.

திருக்குறளை ஒப்புவிக்கும் திறன் கொண்ட குழந்தைகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் அனுப்பப்படும் என்று நேற்று அறிவித்திருக்கிறேன். அதை இங்கே பேசிய பலரும் பாராட்டினார்கள். அவர்களுக்கெல்லாம் இந்த மாதம் முதலே அந்தத் தொகை அனுப்பப்படும். எங்களுக்கும் உண்டா என்று சில பெரியவர்கள் கேட்டார்கள். நான் குழந்தைகளுக்கென்று தான் அறிவித்திருக்கிறேன். வயதானால் நாங்களும் குழந்தைகளென்று தான் என்று விவாதிக்கக்கூடும். ஆனால் அந்த வாதம் சரியான வாதமாக இருக்காது என்பது அவர்களுக்கும் தெரியும். குழந்தைகள் நான்கு வயதாக இருந்தால் அந்த வயது முதல் 20 வயது வரையிலே உள்ளவர்கள் திருக்குறளிலே தங்களுடைய திறமையைக் காட்டுவார்களானால் – ஆற்றலைக் காட்டுவார்களேயானால் அவர்களுக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் நிச்சயமாக வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் 22 சிறாரும், இளைஞர்களும் தங்களுடைய திறமையைக் காட்டினார்கள். அந்த எண்ணிக்கை 25 ஆக ஆகலாம். 100 ஆகக்கூட ஆகலாம். அப்படியானாலும் கூட கவலையில்லை. அவர்களுக்கெல்லாம் குறள் பரிசு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். அப்படியாவது திருக்குறளை எல்லோரும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு படிக்க மாட்டார்களா என்கிற ஆசையிலேதான் இதனை அறிவிக்கிறேன்.

இன்னொன்று; கடந்த காலத்திலே திருவள்ளுவர் மன்றங்கள் பல இடங்களிலே இருக்கும். திருவள்ளுவர் படிப்பகங்கள் பல இடங்களிலே இருக்கும். அரசின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலேயும் கேட்டுக் கொள்கிறேன். எல்லா கட்சித் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒரு படிப்பகம் திருவள்ளுவருடைய பெயரால் அமையவேண்டும். வரும் ஜனவரி 16 திருவள்ளுவர் நாள் முதல் அப்படி நிச்சயமாக அமைவதற்கான வழிவகைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று இங்கே என்னோடு வந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் திரு. முத்துசாமி ஐ.ஏ.எஸ். அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாக இந்த ஆண்டு திருவள்ளுவர் நாள். 15ஆம் தேதி பொங்கல் நாளுக்கு அடுத்து 16ஆம் தேதி வருகின்றது.

அன்றைய தினம் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா ஊராட்சி மன்றங்களிலும் – குறைந்தபட்சம் ஊராட்சி மன்றம் என்று சொல்கிறேன். பேரூராட்சிகளும், நகராட்சிகளும் இடம் பெறலாம். நகராட்சிகளில் பல இடங்களிலே ஏற்படலாம். அங்கெல்லாம் திருவள்ளுவர் நூலகங்கள், படிப்பகங்கள் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சிகளும் அரசின் சார்பிலே எடுக்கப்படும். அதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும்**

தமிழ் ஆண்டு என்று இந்த ஆண்டை அழைக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதிலே எனக்கு முழுமையான கருத்தொற்றுமை இல்லை. சங்கரய்யா எண்ணக் கூடும். இவர் சொன்னால் வாஜ்பாய் சம்மதிக்க மாட்டார். எனவே சமாளிக்கிறேன் என்று கூட அவர் கருதக்கூடும். அதல்ல காரணம். நான் கேட்பது அதென்ன ஓராண்டு மாத்திரம் தமிழ் ஆண்டு. ஒவ்வொரு ஆண்டும் தமிழாண்டாக இருக்க வேண்டும் என்பதுதானே தமிழனுடைய எண்ணமாக இருக்க முடியும். இருந்தாலும்கூட – இதைக் கூடச் செய்ய கூடாதா என்று கேட்கின்ற கேள்விக்கு இடமில்லாமல், சென்ற ஆண்டு சமஸ்கிருத ஆண்டு என்று அறிவித்ததைப் போல இந்த ஆண்டை தமிழ் ஆண்டு என்று அறிவியுங்கள் என்ற அந்தக் கோரிக்கையை ஒரு தீர்மானமாகவே இங்கிருந்து அனுப்புவதாக மத்திய அரசு எண்ணி அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்று கேட்டார்கள். அது உலக நூல். அதை ஏன் இந்திய அளவிற்கு ஆக்க வேண்டுமென்று கூறுகிறீர்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் குமரி அனந்தன் கோபத்தோடு கேட்டிருக்கிறார். மற்றவர்களும் அதைப்பற்றி இங்கே பேசியிருக்கிறார்கள். இதற்கு முன்பே இதைப்பற்றி தம்பி வைகோ பல இடங்களிலே பேசி நான் பத்திரிகையிலே படித்திருக்கிறேன்.

**திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்**

இங்கே பேசிய பலரும் திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது உலக நூல், அதை தேசிய நூல் என்று இந்திய அளவிலே அடக்க நான் விரும்பவில்லையென்றாலுங்கூட குறைந்தபட்சம் தேசிய நூலாக ஆவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற அந்தக் கருத்தை உங்களுடைய கோரிக்கையாக நானும் ஏற்றுக்கொண்டு திருக்குறளை தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்கிற அந்த முன்மொழிவையும் மத்திய அரசுக்குத் தெரிவிக்க - கடமைப்பட்டிருக்கிறேன்.



# குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை

திருவள்ளுவர் சிலை திறப்பு விழா 31-12-1999, 1-1-2000 ஆகிய இரண்டு நாட்கள் கன்னியாகுமரியில் எழுச்சியுடன் நடைபெற்றது. முதல் நாளில் ஓவியக் கண்காட்சி, கலைஞர் தலைமையில் கவியரங்கமும் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 1-1-2000 அன்று காலையில் தொடங்கியது.

முதல் நிகழ்ச்சியாக 'குறள் அமுதம்', 'கோட்டம் முதல் குமரி வரை' சிறப்பு மலரினையும், கனடா இராம் மோகனின் குறுந்தகடு ஆகியவற்றையும் மத்திய வனத்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு வெளியிட்டார். சிறப்பு மலர்கள், குறுந்தகட்டினை முனைவர் வ.அய்.சுப்பிரமணியமும், முனைவர் வா.செ.குழந்தைசாமியும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து காலை 10 மணியளவில் குறள் கருத்தரங்கம் தொடங்கியது. அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமை தாங்கினார்.

கருத்தரங்கில் முனைவர் க.ப.அறவாணன், பேராசிரியர் பா.நமச்சிவாயம், முனைவர் திருமதி. சக்தி பெருமாள், முனைவர் சிலம்பொலி செல்லப்பன், பெருங் கவிக்கோ வா.மு. சேதுராமன், முனைவர் பா.வளனரசு, சிகாகோவைச் சேர்ந்த ரிச்சர்ட்வீஸ், புலவர் இரா. இளங்குமரன், வலம்புரி ஜான், ஜப்பானைச் சேர்ந்த திருமதி.யூகோ புக்குராய், முனைவர் சி.நயினார் முகமது, திருமதி. இளம்பிறை மணிமாறன் ஆகியோர் பேசினர்.

இக்கருத்தரங்கில் ஐந்து வயதான மூன்று சிறுமிகள் குறளை மிக அழகாக ஒப்பித்தனர். முதல்வர் கலைஞர் அவர்களைப் பாராட்டினார்.

சிலை திறப்பு விழா – மாலை 4–30 மணிக்கு சீர்காழி சிவ.சிதம்பரம், டி.கே.எஸ். கலைவாணன் ஆகியோரின் 'தமிழ்த்தாய் வாழ்த்து' ஒலிக்க இனிதே தொடங்கிற்று!

இந்த வரலாற்று நிகழ்ச்சிக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்.

செய்தி – விளம்பரத் துறை அமைச்சர் திரு. வ.முல்லைவேந்தன் வரவேற்புரையாற்றினார்.

வான்புகழ் வள்ளுவருக்கு விண்முட்ட சிலை எழுப்பிய முதல்வர் கலைஞர் அவர்கள் – மாலை சரியாக 7–30 மணியளவில் சிலையினைத் திறந்துவைத்தார்.

திக்கெங்கிலுமிருந்து ஒளி வெள்ளம் திருவள்ளுவர் சிலை மீது பொழிய – வானுயர் வள்ளுவர் சிலை பார்ப்போரை பிரமிப்பிலும், அளவிலாக் களிப்பிலும் ஆழ்த்தியது.

தமிழறிஞர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக, முதலமைச்சர் கலைஞர் விழாப்பேருரையாற்றினார்.

சிலையினை சிறப்பாக வடிவமைத்த திரு. கணபதி ஸ்தபதிக்கு முதலமைச்சர் பொன்னாடை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி பெருமைப்படுத்தினார். இப்பணிக்கு உறுதுணை புரிந்த திரு. சண்முக ஸ்தபதி, சேகர் ஸ்தபதி, செல்லையா ஆசாரி, ஆறுமுக ஆசாரி ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்தார்.

சுற்றுலா அமைச்சர் திரு.சுரேஷ்ராஜன் நன்றியுரை ஆற்றினார்.



இன்று நான் சிலையைத் திறக்க முடியுமா என்று மாலையிலே எண்ணினேன். காரணம் சிலை திறக்கின்ற நேரத்தில் என்னுடைய உள்ளம் என்னவாகும் என்கின்ற அச்சம். என்ன ஆகுமென்ற பயம், என்ற சந்தேகம். அதற்காகவே மயக்கம் வரக்கூடாத மாத்திரை ஒன்றை சாப்பிட்டு விட்டுத்தான் நிகழ்ச்சிக்கு வந்தேன். ஏனென்றால் இந்தச் சிலையோடு நான் அந்த அளவிற்கு உணர்ச்சிகரமாக ஒன்றிப்போய் இருக்கிறேன். எனவேதான் உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன். புலவர்களே, தலைவர்களே, இளைஞர்களே, அடிகளார் அவர்களே, எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன். இனி என் அய்யன் திருவள்ளுவனை கவிஞர் என்று அழைக்காதீர்கள், புலவன் என்று அழைக்காதீர்கள், அவனை அய்யன் என்றே அழையுங்கள். அய்யன் என்பதிலே ஒரு தெய்வாம்சம் இருக்கிறதே என்று தெய்வத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எண்ணினால் கூட நான் நாத்திகன் தான். இருந்தாலும் இந்தத் தெய்வத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறி வாழ்க வள்ளுவர் என்றுரைத்து விடைபெறுகிறேன்.

– கன்னியாகுமரி கடற்பாறையில் அய்யன் திருவள்ளுவர் சிலையை 1-1-2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து.

★ ★ ★

## திருக்குறள் :

# மனித வாழ்க்கையை மையமாக கொண்ட தத்துவ நூல்

*கல்வியமைச்சர்*
*பேராசிரியர் க. அன்பழகன்*

விழாவின் பெருமையை, விழா குறித்து பேசப்பட்ட எழுச்சிமிக்க, உணர்ச்சிமிக்க, ஆர்வமிக்க பேச்சுக்களால் நான் என்னையே இழந்திருந்தேன் என்று சொன்னால் அது தவறாகாது. நான் நினைவோடு இருந்தால்தான் உணர்ச்சியோடு பேச முடியுமே தவிர என்னை இழந்திருந்த நிலையில் வள்ளுவர் கோமானுக்கு அதுவும் கலைஞர் அவர்கள் சொன்னது போல அய்யன் திருவள்ளுவருக்கு இவ்வளவு பெரிய ஒரு சிலையை எடுத்து அந்த அடிப்படையில் திறப்பு விழா நடைபெறுகிறபோது இத்தனை தலைவர்கள், இத்தனை பேச்சாளர்கள், இத்தனை அறிஞர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியிருக்கிறபோது என் மனம் நிறைந் திருக்கிறது. என் வாழ் நாளில் பல நாள் என் உள்ளத்தில் தோன்றுகிற குறை காரணமாகத்தான் நான் பேசிப் பழக்கப் பட்டவன். முழு நிறைவு- வாழ்விலோர் திருநாள் என்று என் திருமணத்தின் போது பேசிய நினைவு வருகிறது.



### தமிழ் உணர்வு வளர்ப்பதற்கான ஒரு திருநாள்

இன்றைக்கு மறுபடியும் வாழ்விலோர் திருநாள். அன்பழகனுக்கு மட்டுமல்ல, கலைஞருக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு வாழ்விலோர் திருநாள். வாழ்வெல்லாம் நினைக்கின்ற ஒரு திருநாள். வாழ்வு இழந்த மக்கள் தலைதூக்குவதற்காக ஒரு திருநாள். வழி இழந்த மக்கள் தெளிவதற்காக ஒரு திருநாள். தேய்ந்துபோன திராவிடம் நிமிர்வதற்கான ஒரு திருநாள். தமிழ் உணர்வு மங்கிப் போனதை வளர்ப்பதற்கான ஒரு திருநாள். நெறியறியாத மக்களுக்கு நெறியூட்டுவதற்காக ஒரு திருநாள். இன்னும் சொல்வதாக இருந்தால் உலகத்தை வாழ்விப்பதற்கான திருநாள் இந்தத் திருநாள் என்று நான் உணருகிறேன், மகிழ்கிறேன்.

கடந்த நூற்றாண்டிலேதான் வள்ளுவனை உணருகிற வாய்ப்பு நமக்கு கிடைத்தது. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கிரவ் என்ற அறிஞர் அதை மொழிபெயர்த்து அந்தக் கருத்து மேல்நாட்டுக்குச் சென்ற காரணத்தால், அதைத் தொடர்ந்து ஜி.யூ. போப் மொழிபெயர்ப்பு காரணமாக அவர் எழுதிய முன்னுரை காரணமாக, நாலடியார் மொழிபெயர்ப்பு என்ற நூலில் அவர் வரைந்த அந்த முன்னுரையால் தமிழன் வள்ளுவரைப் பற்றி அறிந்து கொள்கிற வாய்ப்பை பெற்றான்.



ஜி.யூ.போப் அந்த நாளில் எழுதினார் - திருக்குறளும் நாலடியார் போன்ற அரிய ஒழுக்க நூல்களை, பண்பாட்டு நூல்களை பெற்றிருக்கிற தமிழ்நாட்டு மக்கள், தன்னுடைய பண்பாடு பற்றியோ, தாய்மொழி பற்றியோ, தாழ்வானது என்று எண்ணி வெட்கப்பட்டு நடக்க வேண்டிய அவசியமில்லை. உலகத்தில் உள்ள வேறு எந்த மொழியிலும், நாகரீகத்திலும் கிடைக்காத உயர்ந்த கருத்துக்கள் இந்த நூல்கள் மூலமாக உலகத்திற்கு கிடைக்கின்றன. அது குறித்து தமிழர்கள் பெருமைப்படலாம் என்று எழுதினார்.

### தமிழின் எழுச்சியை மக்களிடம் சேர்த்தது திராவிட இயக்கமே

இதற்கு என்ன காரணம் என்றால் திருக்குறள் என்றாலும் சரி, அல்லது தமிழில் பிறந்த இலக்கியங்கள் என்றாலும் ஒரு காலத்தில் தாழ்வாக கருதப்பட்டது. அப்படி ஒரு தாழ்வு தமிழன் மீது சுமத்தப்பட்ட காலம் கடந்த நூற்றாண்டு வரையில். மனோன்மணீயம் சுந்தரனார் தமிழுக்கு ஒரு எழுச்சியை ஏற்படுத்தினார். தேசியக் கவி பாரதியார் இன்னொரு வகையில் உணர்ச்சியை ஊட்டினார். அந்த உணர்ச்சி தொடர்ந்து வளர்ந்தது. வடலூர் வள்ளலாரும் அதை உணர்ந்தார். ஆனால், மக்களிடம் ஒரு இயக்கமாகச் சேர்கிற ஒரு வாய்ப்பை இங்கே வாழப்பாடி இராமமூர்த்தி குறிப்பிட்டதைப் போல திராவிடர் இயக்கம்தான் ஏற்படுத்தியது.

திருக்குறளை ஒரு ஏடாக சிலர் பயில்வார்கள். ஒரு நூலாக சில பேர் விளக்கம் செய்வார்கள். அது தமிழனுடைய தனி பண்பாட்டு அடிப்படையில் பிறந்து உலகமெல்லாம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக விளங்குகிறது என்பதை எடுத்துவைப்பதற்கான உணர்வு அன்றைக்கு இல்லை. மறைமலையடிகளாரோ பல்கலைப் புலவர் கா.சு. பிள்ளை அவர்களோ, நாவலர் சோமசுந்தர பாரதியாரோ, அவர்களையொட்டி வேறு பல தமிழ் அறிஞர்களோ தொடர்ந்து ஏற்படுத்திய அந்த எண்ண அலைகள் மக்களிடத்திலே திராவிடர் இயக்கத்தால் எடுத்துச் சொல்லப்பட்ட காரணத்தால் தான் ஒரு குலத்திற்கு ஒரு நீதி பேசுகிற மனுநீதியை விட பல மடங்கு திருக்குறள் உயர்ந்த ஒப்பற்ற நூல் என்று தமிழ்நாட்டு மக்களிடம் பரவியது. ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திருவள்ளுவருடைய பெருமைக்கு உரிய தகுதி இந்தியாவில் கிடைக்கவில்லை. திருவள்ளுவர் பேசப்படுவது வேறு மாநிலங்களில் இல்லை. கர்நாடகத்தில் சிலை திறக்க அனுமதிக்கவில்லை என்றால் ஒரு காரணம் திருவள்ளுவர் பெருமையை அவர்கள் அறிய மாட்டார்கள். இன்னொரு காரணம் அவர்கள் சொந்த வரலாற்றையே அறிய மாட்டார்கள்.

திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியபோது, கன்னடம் கிடையாது. அவர்கள் பேசியது தமிழ். தெலுங்கு கிடையாது. அங்கே அவர்கள் பேசியது தமிழ். உச்சரிப்பு வேறுபாடு இருக்கலாமே தவிர, தமிழ்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆந்திரம், கர்நாடகாவிலே, கேரளத்திலே பேசப்பட்டது. திருவள்ளுவர் அன்றைக்கு கர்நாடகத்திற்கும் சேர்ந்த புலவர்தான். ஆந்திரத்திற்கும் சேர்ந்த புலவர்தான், ஆனால், அந்த வரலாற்றை அறியாததால் வள்ளுவர் சொன்ன குறள் கருத்து சில, சொற்கள் சில இன்றைக்கும் கன்னடத்திலே விளங்கினாலும்கூட திருவள்ளுவர் தமிழ்நாட்டுப் புலவர் என்று எண்ணுகிற ஒரு எண்ணம் இருக்கிறது. வரலாற்றை நாம் மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

### தத்துவ நூல் திருக்குறள்

அப்படிப்பட்ட திருவள்ளுவர் வரைந்த திருக்குறள் மனித வாழ்க்கையை மையமாக வைத்து இயற்றப்பட்ட தத்துவ நூல். மற்றவர்களெல்லாம் சமய அடிப்படையில் தான் நூல்களை இயற்றினார்கள். அது பகவத் கீதையாக இருந்தாலும் சரி, வேறுபல சமய நூல்களாக இருந்தாலும் சரி, மதச் சார்பு அடிப்படையில்தான் இந்த நூல்கள் பிறந்தன. திருவள்ளுவர் நூல் ஒன்றுதான் எந்த மதச் சார்பும் இல்லாமல் விளங்குகின்ற நூல்.

இங்கே பேசிய நண்பர்கள் கேட்டார்கள் - வள்ளுவனுக்கென்று ஒரு இயக்கம் அந்த குறளைப் பரப்ப - கொள்கையை பரப்ப அடியார்கள் கூட்டம் ஏன் தோன்றவில்லை என்று கேட்டார்கள். தோன்றாததற்கு எது காரணம் என்றால் அது சமய நூலாகத் தோன்றவில்லை. சமயத்திற்கு அப்பாற்பட்ட நூலாகத் தோன்றியது.

வடலூர் வள்ளலார் பாடல்கள் அவர் சீர்திருத்தவாதியாக இருந்தாலும்கூட சமய உணர்வோடு சைவப்பற்றும் சீர்திருத்தமும் கலந்து பாடப்பட்டது. அந்த வாய்ப்பு வள்ளுவருக்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால் வள்ளுவர் நூல் ஏன் அரங்கேறவில்லை என்று கேட்டார்கள். எந்த அரசும் அதை ஏற்கவில்லையா என்று கேட்டார்கள். வள்ளுவரைப் போல தன்மானம் மிக்க, தெளிவு மிக்க, சிந்தனை மிக்க ஒரு அறிஞன் தன் நூலை இன்னார், இன்ன இடத்தில் அரங்கேற்ற வேண்டும் என்று விரும்பியிருக்கவே மாட்டான். வள்ளுவர் நூலை அரங்கேற்றுகிற அளவிற்கு தகுதியுடைய நூல் என்று



சொல்கிற தகுதி மிக்க புலவர்கள் வள்ளுவர் காலத்தில் இல்லை.

இன்னொரு வகையில் எண்ணிப் பார்த்தால் வள்ளுவரே ஒரு மன்னன். மன்னனாக இல்லாவிட்டாலும்கூட ஒரு குறுநில மன்னன். ஒரு சிற்றூர் தலைவன். அவன் நூலைக் கொண்டுபோய் இன்னொரு இடத்தில் 'அரங்கேற்றுவதற்கு அவசியமில்லை. ஆனால், மக்கள் மன்றத்தில் அரங்கேறும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்திருக்கத்தான் வேண்டும். அந்த மக்கள் மன்றத்தில் அரங்கேற்றுவதிலேதான் திராவிடர் இயக்கம் முன்னோடியாக இருந்தது.

இன்றைக்கும்கூட எண்ணிப் பார்த்தால் கிரேக்க நாட்டு சாக்ரடீசோ, சீன நாட்டு கன்பூசியஸோ அல்லது வேறு பல தத்துவ ஞானிகளோ பல்வேறு விதமான, மக்களுக்குத் தேவையான அரிய கருத்துக்களைச் சொன்னாலும்கூட, வள்ளுவனைப் போல, முழுமையாகச் சொன்ன இன்னொரு புலவன் உலகத்தில் இதுவரை பிறக்கவில்லை.

இங்கே பேசிய துணைவேந்தர் வி.சி.குழந்தைசாமி பேசும்போதுகூட கேட்டார். வள்ளுவருடைய தத்துவத்தை ஏன் தத்துவத் துறை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கேட்டார். தத்துவத்துறையே தடுமாறுகிற துறையாக நீண்ட காலமாக இருக்கிறது. தத்துவத்துறை என்று சொன்னால் மக்கள் உணர முடியாத, அறிய முடியாத செய்திகளை, விளக்கங்களைக் கொண்டதாக, கருத்துக்களைக் கொண்டதாக படிக்கட்டுகளை அமைத்ததாக இருந்தால்தான் அது தத்துவம் என்று கருதுகிறார்கள்.

வள்ளுவம் கண்ட தத்துவம் மனிதன் உணரக்கூடிய தத்துவம். இங்கே ஒரு நண்பர் சொன்னதைப் போல் மனிதனுக்காகத்தான் கடவுள் சிந்தனை. கடவுளுக்காக - கடவுள் தோற்றுவித்ததாக மனிதன் இல்லை. மனிதன் உயர்வதற்கும் அவன் உயர்ந்த ஒரு நிலையிலே பக்குவம் பெறுவதற்கும் கடவுள் தத்துவமோ, சிந்தனையோ பயன்பட வேண்டுமே தவிர, கடவுளுக்காக மனிதன் அல்ல. கடவுள் இட்ட கட்டளையின் விளைவு மனிதனல்ல.

அறிஞர் அண்ணா சொல்வார், ''மக்கள் வாக்கே மகேசன் வாக்கு'' என்பார். விவேகானந்தர் சொன்னார், ''மக்கள் தொண்டுதான் மகேசன் தொண்டு'' என்றார். இன்னொரு வகையிலே பார்த்தால் மக்களுக்காகத் தான் தத்துவம். அந்த மனித வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை வள்ளுவன் சொன்னதைப் போல வேறு எந்த நூலிலும் எடுத்துக்காட்டவில்லை.

அறம்-பொருள்-இன்பம் இது வடமொழியில் அறம் என்பது தர்மம். அது தனி. அதில் கட்டளைகள் தனித்தனியாகப் பிறக்கும். அதைப் போல அவர்களின் அர்த்த சாஸ்திரம் என்பது அரசன் ஆட்சி நடத்த என்னென்ன செய்ய வேண்டுமோ அது. இன்பம் என்பது எப்படி வேண்டுமானாலும் அடையக் கூடியது. வள்ளுவர் கண்ட இன்பம் தூய நல்லின்பம். வள்ளுவர் வகுத்த பொருள் - முயற்சியினால் தேடுகிற பொருள் அடிப்படையில் உலகியல் வாழ்க்கைக்கு தேவையான எல்லாம் என்பதாகும். வள்ளுவர் கண்ட அறம் - மனத்துக்கண் மாசிலன் ஆதல்.

### பண்பாட்டை பெரிய தத்துவமாக்கினார் வள்ளுவர்

மனிதன் மூன்று வகையில் வாழ்கிறான் ஒன்று மனிதன் மனத்தால் வாழ்கிறான். மனம் மனிதனை ஆண்டு கொண்டிருக்கிறது மனிதன் அறிவால் முன்னேறுகிறான். அறிவு அவனுக்கு துணையாகிறது. மனிதன் உடலால் இயங்குகிறான். அதை அவன் தவிர்த்து கொள்ள முடியாது. உடலோடு கூடிய இயற்கை இன்ப நாட்டம். அறிவோடு கூடிய செயற்பாடு முயற்சி. அந்த முயற்சியின் விளை பொருள். அதன் விளைவு அரசியல் வரையில், மனம் - அறிவு - உடல் இந்த மூன்றையும் மனிதன் விட்டு விலக முடியாது. உடம்பை கட்டுப்படுத்தலாம். அறிவை நெறிப்படுத்தலாம். மனதை ஆண்டு ஆண்டு, பழக்கிப் பழக்கி தவறான வழியில் போகாமல் நிறுத்தலாம். இந்த மூன்றுக்கும் தேவையான அறம்-பொருள்-இன்பத்தை வள்ளுவர் வகுத்தபோது மனிதனை உயர்த்துவதற்கான அடிப்படையில் அவர் வகுத்தார். மனிதனை வாழ்விக்கச் செய்வதற்கான அடிப்படையை வகுத்தார்.

இந்த அடிப்படையைத்தான் தென்னகத்து மக்களுடைய தொன்மை நாகரீகத்தில் முகிழ்த்த கலாச்சாரத்தின் விளைவு எளிய மக்களின் வாழ்க்கையிலே இழையோடியிருந்த பண்பாட்டை வள்ளுவர் பெரிய தத்துவமாக்கினார்.

எனவே, அப்படி ஒரு அற்புதமான அடிப்படை வள்ளுவரால் உலகத்திற்கு கிடைத்தது. நமக்கு கிடைத்தது. நமக்கு கிடைத்த அற்புதத்தை நாம் உணரவில்லை. காரணம் மதம் நம்மை பல்வேறு வகையில் ஆண்டது. ஜாதி பல்வேறு வகையில் நம்மை கெடுத்தது. தீண்டாமை போன்ற கொடுமைகள் நம்மிடம் மெல்ல, மெல்ல புரையோடிய புண்ணாக வளர்ந்தது. மனிதத் தன்மையை நாம் இழந்தோம். வள்ளுவரைப் புரிந்து கொள்ள நாம் தவறினோம்.

எனவே, காலம் மாறுகிறது. வள்ளுவரைப் புரிந்து கொள்கிற ஒரு நல்ல சூழல் உருவாகிறது. மேலும் மேலும் உருவாகும்.

இப்படிப்பட்ட அரும்பெரும் வாய்ப்பாக - தமிழ்மக்கள் எல்லோரையும் உயர்த்துவதாக - எந்த பாகுபாடுக்கும் இடம் தராததாக - எல்லா சமயத்தவரையும் இணைப்பதாக ஒரு அடிப்படை அமைத்த திருவள்ளுவரின் திருக்குறள் இந்திய அரசியல் சட்டத்திற்கு இந்தியாவில் இருக்கிற ஒரே ஒரு சான்று நூல். இன்றைக்கு சமயச்சார்பற்ற கொள்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது சட்டம். சமய நல்லிணக்கம் மக்களிடையே தேவை. இது நம்முடைய வேண்டுகோள். ஜாதி எண்ணம் அடியோடு ஒழிய வேண்டும். இது நம்முடைய குறிக்கோள். தீண்டாமை ஒழிய வேண்டும். அந்த நல்லெண்ணம் நம்மிடம் வளர வேண்டும். இப்படி எத்தனையோ,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று வள்ளுவர் சொன்னதுகூட மனிதன் பிச்சையெடுத்து வாழலாம் என்று சில சமயங்கள் சொல்லியிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் துறவிகள் பிச்சை எடுத்துத்தான் வாழவேண்டும். துறவி தனக்கென்று எதுவும் தேடிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அப்படி ஒரு இலக்கணம்.

வள்ளுவர் சொன்னார் - எந்த காரணத்திற்காகவும் ஒருவர் பிச்சை எடுத்து வாழ்ந்து துறவு நிலையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருத்துப்பட ஒரு பொது நோக்கில் கூறினார்.

ஆயிரம் உண்மைகள் தமிழன் பெருமை சொல்ல திருக்குறளில் உண்டு. அதை முற்றும் உணர்ந்தவர் என்னுடைய பெருமைக்குரிய தலைவர் கலைஞர். அவர் உணர்ந்தார். உரை எழுதினார். அதை ஓவியமாக்கினார். மக்கள் உள்ளம் கொள்ள அதை பல்வேறு நேரங்களில் எடுத்து வைக்கிறார். தொடர்ந்து திருக்குறளுக்கு கலைஞர் ஆற்றியிருக்கிற பணிகளே ஒரு இருபது பணிகள் இருக்கும். அதன் சிகரமாக வள்ளுவருடைய திருவுருவச் சிலையை இங்கே அமைத்தார்.

அப்படி அமைத்த கலைஞர் புகழ் வள்ளுவர் சிலையையும், வள்ளுவர் நூலையும் போல என்றைக்கும் நிலைத்து நின்று மக்களுடைய உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டதாகத் திகழும் என்பதை தெரிவித்து, கலைஞர் சொல்லியிருக்கிறார் - என் மிகப் பெரிய ஆசையை நிறைவேற்றி விட்டேன். மகிழ்கிறேன் - என்று சொல்லியிருக்கிறார். நாங்களும்தான் மகிழ்கிறோம். உங்கள் ஆசையை நிறைவேற்றிவிட்டதாகச் சொல்லி நீங்கள் மகிழ்கிறீர்கள். நாங்களும் மகிழ்கிறோம். எங்கள் ஆசையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் தொடர்ந்து வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

*- திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில்*
*கல்வி அமைச்சர்*
*பேராசிரியர் க. அன்பழகன்*
*ஆற்றிய தலைமையுரை.*



# சமுதாயப் புரட்சி செய்யும்
# தத்துவப் பெருஞானி
# மகத்துவம் மிகக் கொண்ட
# மனிதகுலத் திருவிளக்கு

– முதலமைச்சர் கலைஞர்



அடலேறு மொழித் தமிழே – இன்பக்
கடலேறு தனித் தமிழே – சோலை
மடலேறு சுவைத் தமிழே – நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்,
வணங்குகின்றேன்.
பேரன்பு கொண்டோரே
பெரியோரே
பெற்ற தாய்மாரே
நல் இளஞ் சிங்கங்காள்
பேராசிரியப் பெருந்தகையீர்
பேரவையின் அருந்தலைவ
ஒளிமிகுந்த கருத்தளித்து எமை மகிழ்விக்க
வெளிநாட்டிலிருந்தும் வந்துள்ள உறவினர்காள்!
அமைச்சர் பெருமக்காள்
அவை சிறக்க வந்திருக்கும்
ஆன்றோரே, சான்றோரே,
நமை வளைத்திருக்கும் முக்கடலின்
வயிற்றுக்குள் இருக்கின்ற முத்தைப் போல்
வாரி வழங்கத் தமிழ்க் கவிதை
வடித்தெடுத்து வந்துள்ள பாவலர்காள்!

கடற்கரையின் மென்காற்றும், நும்
கவிதையெனும் இளங்காற்றும் – எம்
துன்பமெல்லாம் நொடியில் ஆற்றும்



– 31–12–1999 அன்று திருவள்ளுவர் சிலைத்திறப்பு விழாக் கவியரங்கில்
முதலமைச்சர் கலைஞரின் தலைமைக் கவிதை



தூய தமிழ்ப் புகழைச் சாற்றும்
குருட்டு மதியை மாற்றும்
குறளைப் போற்றும்....
குவலயத்தின் மத்தியிலே
குன்றா விளக்கை ஏற்றும்
அறம் பொருள் இன்பமெனும்
அறிவுப் பதாகைதனைப் பிடிப்போம்
ஆதி பகவன் மைந்தன் ஆணை வழி நடப்போம்
அதைத் தடுக்க முனைவோரின் செயல்களையே முடிப்போம்.



இலக்கணத்தை எதிர்க்கும் எண்ணம் என்பால் இல்லை
இலக்கணம்தான் என்னோடு ஊடல் செய்யும் அன்புக்கிள்ளை
ஒருபாட்டும் இலக்கணமுடன் ஒருப்பட்டு வராவிடினும் நான்
தரும்பாட்டு தமிழ் உணர்வைக் கொல்லாதெனும் துணிவுடனே
கரும்பாட்டும் ஆலையிலே வேம்பொன்று புகுந்தது போல்
கவிக்கூட்ட மேடையிலே வீரமாய்ப் புகுந்துவிட்டேன் – தென்றல்

அரும்பாட்டும் பூங்காவில் உங்கள்
அரும் பாட்டு, தமிழ் மாலையிலே பூவாம்
அந்தப் பூவாடும்
கரும்பாட்டம் இருக்கின்றீர் நீங்கள், நானோ
குரும்பாட்டம் இருக்கின்றேன் உம்மிடையே
எறும்பு ஆட்டும் இரும்புத் தூண் என்றால், என்
வெறும் பாட்டும் வென்று விடும் நும்மை

[illegible] பாடும்
கோலமயில் ஆடும்
ஞானக்கிளி தாவும்
மோனத் தவமிருக்கும்
வானத் திருமேனி
வண்ணப்பொடி தூவும்
வானவில்லும் வளையும்
காலைக்கதிர் விளையும்
நீலக் கடலோரம்
நித்தம் தவம் புரியும்
குமரி எல்லை வந்தோம்
குதிகுதித்து நின்றோம் – இங்கு
வான் முட்டும் சிலையொன்று
வள்ளுவர்க்கு அமைத்துள்ளேன்
வருக நீவிர் வாழ்த்துரைக்க என்று
வாஞ்சையுடன் அழைத்துள்ளேன்.



குமரிக்கடல் குலுங்க கையொலித்து
குன்றங்கள் நடுநடுங்க வாழ்த்துரைத்து
அய்யன் வள்ளுவனின்அடிதொடர சூளுரைப்பீர்...
உய்ய வழி வேறில்லை குறளைத் தோள் சுமப்பீர்.
ஓவியம் வரைந்தேன் குறட்பாக்களுக்கு – உரைக்
காவியம் வரைந்தேன் திருக்குறள் முழுமைக்கும்.
இன்னும் இன்னும் எண்ணிப் பார்க்கின்றேன்
என்ன இல்லை எதை எழுத விட்டு விட்டான் அய்யன் என்று
கன்னத்தில் கை வைத்துச் சிந்திக்கின்றேன்.
அன்னத்தின் தூவியிலே கறுப்பின்
சின்னத்தைக் காணப்போமோ?
அதனால் தான் குறையிலாக் குறள் என்றும்
அணுக்கூட கறையில்லா மறை என்றும் கூறுகின்றோம்...

சமத்துவப் பேரொளியாய்
சமுதாயப் புரட்சி செய்யும்
தத்துவப் பெரு ஞானியாய்
மகத்துவம் மிகக் கொண்ட மனித குலத் திருவிளக்காய்
பூமிக்கே புனித உரை வகுத்தளித்து
புத்தெழுச்சி பெற்றுத் தந்த புனிதனவன்.
அருளாதாரம் வழங்கி அனைத்துயிரும் போற்றியவன்
– அரசியல்

பொருளாதாரம் என ஆய்வுரையை ஆற்றியவன் – ஆளும்
கலாச்சாரம் எதுவெனக் காட்டியவன்! வள்ளுவன்!
வள்ளுவன்! வள்ளுவன்!
அறத்துப் பால் முப்பத்திஎட்டு அதிகாரம்
அதுதான் இங்கே வள்ளுவன் சிலைக்கு அடிபீடம்
அதிகாரத்திற்கொரு குறளை அடியேன் எடுத்து
அதி – காரமின்றி படைக்கின்றேன் தொகுத்து!
ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனின்
உயர் அடியொற்றி நடப்பவரை
வாட்டும் தொல்லை வருத்துவதில்லையெனக் குறளில்
காட்டுவதும் வள்ளுவன் தானே!

(தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது !)

மழைதான் அமிழ்தமென்றும் உயிர் வாழ
மருந்தும் அதுவே என்றும் மொழிவதும் குறட்பா தானே!

(வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று)

ஐம்புலப் பசியை அடக்க முடியாமல்
அவதிப்பட்டான் இந்திரன் என்று
பொல்லாதார்க்கும் புலன் அடக்கப்
புத்தியைத் தீட்டுவதும் வள்ளுவம்தானே!

(ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி)

மனத்தூய்மைதான் நல் அறமென்றும்
மற்றவை எல்லாம் மன்பதையில்
ஆரவார கோஷங்களே என்றும்
அறிவுறுத்துவதும் குறள் நெறி தானே!

(மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற)

பளிங்கு எனப்படுமே
பழிப்பதற்கு இடமில்லா மனைமாட்சி
இல்லறம் என்பது அதுவே என்று
இசைப்பதும் இனிய குறள் தானே!

(அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று)

பெய் எனச் சொன்னதும் பெய்யும் மழையாய்
பெண் குலம் அடிமைப்படுவதை விடுத்து
மெய்யுரை கண்டு மெல்லியல் நிமிர்ந்திட
அய்யன் படைத்தது அருங்குறள் என்போம்...





(தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை)

ஏழேழு தலைமுறைக்கும்
எந்தத் தீமையும் தீண்டாதிருக்க
சீரோடு புதல்வரை வளர்த்தல் நன்றாமென
செப்பிடும் உரையும் செந்நூல் குறள்தானே!

(எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்)

என்பும் பிறர்க்கு ஈவார் அன்புடையார்
எல்லாம் தமக்கென்பார் அன்பில்லார்
குணக்கேடர் செயல் தோலுரித்து
கொடையுள்ளம் போற்றுவதும் குறள்வழி தானே!

(அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு)

விருந்தினர்க்கே முதலிடமாம் மிஞ்சியதே வீட்டுக்கென்போன்
விதையைக் கூட நிலத்துக்கன்றி விருந்துக்கே சேர்த்தளிப்பான்
விரிந்து பரந்தவன் மனமென்று
தெளிந்து சொல்வதும் திருக்குறள் தானே!

(வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிக்சில் மிசைவான் புலம்)

பிஞ்சும் காய்களும் ஒரு மரத்தில் குலுங்கிட
பிறிதோர் மரத்தில் கனிக்குலை தொங்கும்
கனி விடுத்துக் காய் புசித்தவனைக் கண்டு
இனிய உளவாக இன்னாத கூறுவார்க்கு
உவமையாக்கியதும் இந்த உலக மறை தானே!

(இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று)

என்றோ செய்த நன்மையை நினைத்து – அவன்
இன்று விளைத்த தீமையை மறந்திடுக என்பதும்
செய்நன்றி அறிதற்கு இலக்கணம் எனச்
செப்பியவரும் செந்நாப்போதார் தானே!

(செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது)

எச்சத்தால் காணலாம் தக்கார் தகவிலரை
என்பதற்கு அவர்தம் மக்களைச் சுட்டின் பொருந்தாதென்று
உச்சத்தில் அவர் கொண்டிருந்த புகழைத்தான் எச்சமென
உரைத்திட்ட உண்மையின் புதையல் குறளேயன்றோ!

(தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்)

“நாகாக்க என்றானே; நாயகன் வள்ளுவன் – அதை
நடுத்தெருவில் போவோர் வருவோர்க்கெல்லாம் சொன்னானா?”
துடுக்காக இப்படியொரு வினா எழுப்பியவரை மன்றில்
மடக்கிப் போட்டார் அண்ணா நாக்கு இருப்பவர்க்கு
மட்டும் தான் சொன்னான் என்று

(யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு)





இழிந்த குடியென்று ஒழுக்கம் ஒழிந்ததையும்
சிறந்த குடியென்று ஒழுக்கத்தில் உயர்ந்ததையும்
இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டியதும்
இரு நிலை உணர்த்தியதும் இந்தப் பொய்யா மொழியன்றோ!

(ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்)

வேறொருவர் மனைவியை நோக்குங்கால்
விழி நோக்கு இழி நோக்கு நோக்காதார்
விரிகடல் ஒழுக்கத்தார் வரிசையிலே
வீற்றிருப்பார் என விளம்புவதும் இந்த வித்தகர் தானே!

(பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற வொழுக்கு)

நாள்தோறும் தன் தலையில் குப்பை கொட்டிய பெண் ஒருத்தி
நலிவுற்றுப் படுத்திருந்த சேதி கேட்டு – அவள்
நலம் கேட்க ஓடினாராம் நபிகள் நாயகம்!
சிலுவையில் அறைந்த போதும் சிரித்த முகம் இயசேவுக்கு!
அடக்குமுறை அடுக்கடுக்காய் சகித்துக் கொண்டார் அப்பர் பெருமான்!
அதனால்தான்
அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலையென்றான் என் அய்யன்.

(அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை)

எட்டுத் தலைப்பில் பாட இருக்கின்ற கவிஞர்க்குள்
போட்டியிருக்க வேண்டும் பொறாமை தலைகாட்டக் கூடாது.
காட்டாதென இந்தக் கலைஞனும் அறிவேன்
அழுக்காறு என்பதென்ன? அது அயலூர்ப் பொருளல்ல;
அது நம் உள்ளத்தின் உற்பத்தி
உடலோடு பிறந்த தீயசக்தி
அப்பாவி நம்மை ஒழிப்பதற்குள்
அப்பாவி யாய் இராமல் நாம் அவனை ஒழித்திடுவோம்
அய்யன் வள்ளுவனின் ஆணையாம் இஃது – இம்
மெய்யுரை கேட்பின் மேன்மை பல உண்டாம்!

(அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்)

பறிப்பதொன்றே பெரும்பணி பிறர்பொருளை என்றே
பழகிக் கொண்ட பகற் கொள்ளைக்காரருக்கு
பகுத்தறியும் நுண்ணறிவு இருந்தென்ன போயென்ன
தொடுத்திடும் இவ்வினாவும் என்அய்யன் வகுத்த குறளே!

(அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்)

சாவது நலமாம் சாற்றுகின்றான் அய்யன்– எப்போது?
ஆனது ஆகட்டுமென்று புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்ந்திடும்போது!
சாவது நலமாம் என்று
சாற்றுகின்றான் அய்யன்.

(புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்)

மண்ணில் காணும் தானியத்தில் பதர் உண்டாம்





மனிதரிலும் பதர் உண்டாம் உண்டாம்! பலர்முன்
பயனற்றவை கூறிப் பயன்பெற முனையும்
பகல் வேடதாரியைப் பதர் எனப் பகருகின்றான் அய்யன்!

(பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்)

இருட்டில் இருக்குமிடந் தெரியாமல்
வெளிச்சத்தில் மட்டும் வெளிப்படும் நிழலைப்போல்
தீச்செயல் புரிவோரை விட்டு விலகாமல்
தீமையும் ஒட்டிக் கொண்டே இருக்குமென
உவமை காட்டி உரைத்திட்ட புலமை என்னே;
உலகில் இந்தக் குறள் விளைத்த புதுமை என்னே!

(தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று)

ஒப்புரவு எனும் பிறர்க்கு உதவும் பண்பினை
இன்றைய உலகிலும் இனிவரும் புதியதோர் உலகிலும்
காண்பது அரிது எனக் கண்டறிந்து சொன்ன
கற்கண்டுக் குறளுக்கு ஈடேது இணைதான் ஏது?

(புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற)



ஆதாயத்தை எதிர்பார்த்துக் கொடை வழங்காதே;
ஆகாரத்தை எதிர்நோக்கி ஏங்குவோர் குடலுக்கு ஏதேனும் வழங்கிடுக!
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று
வள்ளலார் சொன்னது வள்ளுவன் சொன்னது தானே!

(வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து)

தோன்றின் புகழொடு தோன்றுக என்றால் தொட்டதுறையில்
தொடர்புகழ் எய்துக; அல்லால் எத்துறையும் தொடாதே
என்பது ஆன்றவிந்தடங்கிய ஆசான் அறிவுரை
சான்றுகள் பற்பல இந்த ஜகத்தினில் காணலாம்.

(தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று)

பொருள் இலார்க்கு இல்லறம் சிறக்காதென்பதையும்
அருள் இலார்க்கு துறவறம் நிலைக்காதென்பதையும்
இவ்வுலகம் அவ்வுலகம் என்று காட்டுகின்றான் – இனி,
எவ்வுலகம் உதித்தாலும் அவ்வுலகில் காண இயலா அறிவாசான்!

(அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலம் இல்லாகி யாங்கு)

தீராதோ துன்பமென்றும்; வாராதோ கோரிய வரங்களென்றும்;
தீயிலிட்டுப் பொருள்களை வீணே கொளுத்தும் வேள்விகள் ஆயிரம் செய்வதை விட
பண்ணிய பாவங்கள் தொலைந்திட இனியும்
புண்ணியமென ஒன்றிருந்தால் அது வந்து புகுந்திட
உயிர் ஒன்றைப் போக்காமல் அதனை
உணவாக ஆக்காமல் இருந்தாலே போதுமென
உளமுருகச் செய்கின்ற உபதேசம்; ஊருக்கல்ல –
உனக்குமெனக்கும் சேர்த்துத்தான் என உரைத்தவன்
உத்தமப் பெரியோன் வள்ளுவனன்றோ –
நித்திலமன்றோ அவன் தந்த திருக்குறளும்!



(அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று)



பொழியும் மழையில் பொல்லாக் கோடையில்
புற்றுகள் வளரினும் புதர்கள் மூடினும் – கடவுள்
புலப்படும் வரையில் கடுந்தவம் புரிவேன் என்று
பலப்பல சொல்வதெலாம் தவமல்ல என்பார்...
எந்த உயிருக்கும் தீங்கு இழைக்காதிருப்பதும்
எதையும் தாங்கும் இதயம் பெற்றிருப்பதுமே
தவமெனப் படுமென்று தகைவாய்ச் சொல்வார்
தரணிக்கே மறை தந்த தமிழ் மறை ஞானி!

(உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு)

பச்சைக்கிளிகளையும் பால்நிறப் புறாக்களையும் பிடிப்பதற்கு
இச்சையுடன் கண்ணி வைத்துப் புதரில் மறைந்துள்ள
பொல்லா வேடனைப் போல்
பாவையரைக் காமவேட்டையாட பாழும் துறவியர் சிலர்
பாசறை அமைத்து அதனைப் பக்தி மடமென்று பசப்புகின்றார்
பகல் வேடதாரியிடம் பகவான் பேரால் ஏமாற்றும் எத்தனிடம்
எப்போதும் எச்சரிக்கை என்றுரைப்பதுவும் எங்கள்அய்யன் தானே!

(தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று)

எல்லைக்குள் வாழ்க்கையைச் செம்மையாய் அமைத்திடாதார்,
கொள்ளைப் பொருள் சேர்த்திடவே நாட்டம் கொண்டிடுவார்!
தொல்லை தரும் ஆடம்பரத்தை, போலிப் பளபளப்பை
தொடாமலே விட்டு விடச் சொன்னதுவும்
தொலை நோக்குக் குறள்மொழி தானே!

(அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்)



உண்மை மெய்ம்மை வாய்மை என்பதற்கு எல்லாமே
ஒரு பொருள்தான் என எண்ணத் தோன்றும்...
வாய்மைக்குத் தனியாக வடித்தெடுத்த பொருள் ஒன்றுண்டு
ஆய்ந்திடும் இடத்து "பொய் அல்லாதது" என்ற பொருள்அல்ல
வாய்மை எனப்படுவது யாதெனின் எவருக்கும்
தீமையில்லாத சொல்லைச் சொல்லுதல்
இத்தனை தெளிவாய் இதற்குப் பொருளைப் பிழிந்து தந்திடும்
அத்தன் – அய்யன் – ஆசான் – குறள் ஞானி
வள்ளுவன் தானே!

(வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்)

எதற்காக நான் சினம் காக்க வேண்டுமென்று எக்காளச்
சிரிப்பு முழக்கி இளந்தளிர் ஒன்றை
கசக்கிக் கொன்றான் கடுஞ்சினப் பிறவியொருவன் – அக்
கணமே மாமலை மனிதன் ஒருவன் மார்தட்டி அங்கு வந்தான்
"மடையனே மல்யுத்தம் புரிய வருகிறாயா?" என்று
மாமனிதன் கேட்டதுதான் தாமதம்;
சிறுவனைக் கொன்ற சிறுமதியாளன்
சினங் காப்பது என் பண்பு எனச் சொல்லி
சிறகடித்துப் பறந்து விட்டான்.
'செல்லிடத்து சினங்காக்காமல் அல்லிடத்துக்
காத்தால் என்ன காவாக்கால் என்ன' என்று
வள்ளுவன் வாய் மணக்கக் கூறியதை
தெள்ளு தமிழ் வேதமெனல் பொருத்தம்தானே!

(செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்)





தீமை எனக்குச் செய்தவரை தெண்டனிடச் செய்ய வேண்டும்
ஆமை போல அடக்கி ஒடுக்கிப் போட வேண்டும்
அதற்கென்ன வழியென்று ஒரு பிள்ளையாண்டான்
அடர்ந்த மீசையை முறுக்கி விட்டான். அப்போது
அங்கு வந்த வள்ளுவர் அவனைப் பார்த்து
அதற்கு ஒரு வழி சொல்வேன் என்றார்
அதிர்ச்சியுற்று இளைஞன் பார்த்தான்!
"அடலேறே! உனக்கின்னா செய்தவன்
தலை குனிய வேண்டும், அதுதானே உன் ஆசை;
தயங்காமல் இப்போதே அவனுக்கு நன்மை செய்து விடு!"
"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்வது தான்" என்ற
இறையன்றோ எங்கள் அய்யன் ... ஒரு
குறையுண்டோ இந்தக் குறட் பாவுக்கு!

(இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்)

சான்றோர் கூடிய சபையொன்றில்
நூலோர் தொகுத்தவற்றில் தலை எதுவென
தர்க்கமொன்று நடந்ததாக ஒரு கற்பனை!
பக்கம் நின்று பல்லோர் பார்த்திருக்க
வர்க்கபேதம் ஏற்காத வள்ளுவன் அங்கே வந்து
வான்புகழ் குறட்பாவால் விளக்கம் தந்தான்
இருப்போர் இல்லாதார் என்றில்லாமல்
இருப்பதை அனைவரும் பகிர்ந்து கொண்டு
எல்லா உயிரும் வாழ வேண்டுமென்ற
சமநிலைக் கொள்கையே நூலோர் தொகுத்தவற்றுள், தலை! என்றான்
அந்தத் தலைமகன் வள்ளுவன் குறளைத் தமிழ்மறை என்பது தவறு;
தரணி முழுமைக்கும் அதுவும் ஒரு மறையன்றோ!

(பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை)



காளை போனவன் இன்னும் திரும்பவில்லையே என
நாளைக் கோடுபோட்டு எண்ணிக் கலங்கி
பாளைச் சிரிப்பழகு பதுங்கிக் கொள்ளும் காதல்
பாவையர் கவலைகள் அன்றைக்கு நடைமுறை!
அப்போதே வள்ளுவன் நாளுக்கும் வாளுக்கும்
உவமை காட்டி உரைத்திட்டான் ஒரு குறள்!
நாள் என்பது ஒருவரின் ஆயுளை அன்றாடம்
வாள் போல அறுத்துக் கொண்டே யிருப்பதென்றான்.
வாளுக்கும் நாளுக்கும் ஒப்பிட்டு
வள்ளுவன் மொழிந்த குறள் தெவிட்டாத தெள்ளமுதமன்றோ!

(நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்)

பூவுலகப் பற்றெல்லாம் துறந்து விட்டு
மேலுலகப் பற்றே தமக்கு மேன்மை யென்று
சூளுரைத்து வாழ்ந்திருந்த துறவியொருவர்– மடத்தில்
எலிகளைப் பிடிக்க பூனையொன்று வளர்க்கலானார்.
"பாவம்; பூனைக்குப் பசி யெடுத்தால்
பால் தர வேண்டு"மென்று பசு மாடு வாங்கச் சொன்னார்.
மாடுதனைப் பராமரிக்க மங்கை யொருத்தி வந்துதித்தாள் – பக்தி
ஏடுகளைப் புரட்டும் சாக்கில் பலகணியைத் திறந்து வைத்தார்.
அவளோ பசுவுக்குத் தீனி போட்டாள் துறவிக்கு வைத்த
பாலுக்கும் அருகில் வந்து ஜீனி போட்டாள்
கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்
கரங்களிரண்டும் காதல் கொக்கி.....

ஒன்றின் மேல் பற்று வைப்பின் – அது
மென்மேலும் பற்றுகளைப் பெருக்கிவிடும் என்று
வள்ளுவன் துறவுக்குச் சொன்ன வளமான கருத்து
துறவியொருவர் துறவறம் துறந்த கதையில் முடிந்தது.

(இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து)

வானமும் வசப்படும் என்கின்றோம்
வளர்ந்து வரும் விஞ்ஞான வேகம் கண்டு!
இரண்டாயிரம் ஆண்டின் முன்னே வள்ளுவன்
இதற்கோர் குறளை வரைந்து விட்டான்
ஏற்படும் அய்யங்கள் அனைத்தையும்
ஏற்றதோர் ஆராய்ச்சி செய்து தீர்ப்போம்
வானம் நம்மருகில் வந்துவிட்டதாக
வற்றாத ஊக்கம் பெருகிடப் பார்ப்போம்!
தொலைநோக்கு திறன் கொண்ட நம்
தொன்மை நூல் குறள் என்பது மெய் தானே!

(ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வைய்யத்தின்
வானம் நணிய துடைத்து)

வற்றாத செல்வம் என்பதற்கு; நம் வள்ளுவ ஞானச் செல்வம்
வழங்குகின்ற விளக்கம்தான் என்ன சொல்வேன்! நன்மைக்குப்
பங்கம் விளைக்கின்ற தீய ஆசைகளை விட்டு விட்டால் அதுவே
சங்க நிதி பதும நிதி எனும் பெறற்கரிய பெருஞ்செல்வமாகும்.

(வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில்)

இயற்கை நிலையை மாற்றுதற்கு
எப்பாடு பட்டும் உழைக்கின்ற மனிதர்களை
செயற்கை நிலை சில நேரம் கை விட்டு விடும்போது

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறு” மென
இயற்கை நிலையே முதன்மையாக வென்று நிற்கும்

ஊழ் என்று அதற்கொரு பெயர் உரைக்கின்றோம் – அந்த
ஊழையும் உப்பக்கம் காண்பதற்கு வாரீர்!

உலைவின்றித் தாழாது உஞற்றுபவர் வாரீர்!
நிலைகுலையா நெஞ்சினரே வாரீர்!

வங்கம், இந்து, அராபி எனும்
தங்க மகளிர் தரங்கம் பாடி

அங்க மெலாம் அழகு சூடி
சங்கத் தமிழர் நாடு தேடி,

சிங்க மறவர் தோளினை நாடி
இங்கு வந்தனர் குமரிக் கோடி!

முக்கடல் சங்கமம் – பெண்கள்
நெற்றியில் குங்குமம்.
மேனியில் சந்தனம் புனுகு
மினுக்கும் பொன்னகை புன்னகை

அந்தப் புன்னகை புயலென மாறுமுன்னே
கயல் எனும் விழிகளில் கண்ணகி தோன்றுமுன்னே

ஊழையும் உப்பகம் காண்பதற்கு
உலைவின்றித் தாழாது உஞற்ற வாரீர்!

உடன் வாரீர்! உங்கள் உடன்பிறப்பு
அழைக்கின்றேன்; உடன்வாரீர்! உடனே வாரீர்!








குமரிமுனையில் முக்கடல் சங்கமத்தில் விண்முட்ட எழுந்துள்ள **133** அடி உயர திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் **31–12–1999** அன்று தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கின.

முதல் நிகழ்ச்சியாக ஓவியக் கண்காட்சி மற்றும் நூல்கள் கண்காட்சித் திறப்பு விழா நடைபெற்றது. தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.டி.ஆர். பழனிவேல்ராசன் கண்காட்சிகளைத் திறந்துவைத்தார். கண்காட்சிகள் திறக்கப்பட்டவுடன் முதலமைச்சர் கலைஞர், கல்வியமைச்சர் பேராசிரியர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

அதைத் தொடர்ந்து முனைவர் கு.மோகனராசு நடத்திய திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

**1.** கா.உமாபதி, கும்மிடிப்பூண்டி; **2.** த. சத்தியப் பிரியா, அருப்புக்கோட்டை; **3.** த. சுகந்தி, இராஜபாளையம்; **4.** கோ.சீ. பிரதீபா, கூரந்தை, தஞ்சை மாவட்டம்; **5.** மீ. மெகருன்னிசா, சீவாபுரம், திருச்செந்தூர்; **6.** இரா.சிவதர அதியமான், குரோம்பேட்டை, சென்னை; **7.** ச. கனிமொழி, பெரம்பலூர்; **8.** கோ. திவ்யா, வடுவூர், திருவாரூர்; **9.** சு. முருகானந்தம், ஒட்டன் சத்திரம், திண்டுக்கல்; **10.** இர. காளிமுத்து காளமேகம், குரோம்பேட்டை; **11.** க. கார்த்திகா, ஒட்டன் சத்திரம், திண்டுக்கல்; **12.** ப.சித்திரப்பிரியா, குமராபுரி, சென்னிமலை, ஈரோடு; **13.** த. திருமூலநாதன், துறையூர் திருச்சி; **14.** க.சாந்தி, குல்லூர் சந்தை, அருப்புக்கோட்டை **15.** கோ.சீனிவாசன், காமராஜபுரம், சென்னை; பா.வினோதா, பெரிய ஒபுளாபுரம், கும்மிடிப்பூண்டி; **17.** மீ. செய்யது பெமிதா ஃபாத்திமா சிவாபுரம், திருச்செந்தூர்; **18.** ச.திலகவதி, திருத்துறைப்பூண்டி; **19.** ச.பவித்ரா, பெரிய ஓபுளாபுரம், கும்மிடிப்பூண்டி; **20.** மு. மணிலா, கேரம்பை, தேனி மாவட்டம்; **21.** மீ.சுஜீதா பேகம், சீவாபுரம், திருச்செந்தூர், **22.** இராம.காளிதாசன், ஒட்டப்பிடாரம்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற மழலைச் செல்வங்களை பாராட்டி முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை :




''திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவினையொட்டி இங்கே தற்போது முற்றோதல் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆற்றலாளர் முனைவர் மோகனராசு அவர்கள் இந்தக் குழந்தைகளையெல்லாம் அறிமுகப்படுத்திய போது திருக்குறளை தலைகீழாக ஒப்புவிக்கக் கூடியவர்கள் இவர்கள் என்றும், எந்தக் குறளை கேட்டாலும் அந்தக் குறளைச் சொல்லக்கூடிய ஆற்றலாளர்கள் என்றும், எந்த குறளுக்கு பொருள் சொல்லச் சொன்னாலும் அல்லது பொருளைச் சொல்லிக் குறளைச் சொல்லச் சொன்னாலும் அதனைக் கூறக்கூடிய திறமையைப் பெற்றவர்கள் என்றும் — இப்படி பல திறப்பட்ட திறமைகளைப் படைத்த சிறுவர், சிறுமியர் இங்கே வந்திருப்பதை எடுத்துச் சொன்னார்.

அதற்கு — ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப்போல — முற்றோதல் நிகழ்ச்சியில் நாமனைவரும் அதைக் கண்டோம். வள்ளுவருடைய எண்ணம் இன்றைக்கு நிறைவேறியிருப்பதை கன்னியாகுமரியிலே இந்த மேடையிலே நாம் கண்டிருக்கிறோம்.

சமத்துவம், சகோதரத்துவம் எல்லா மதங்களுக்கு இடையேயும், எல்லா சமூகங்களுக்கும் இடையே வேண்டுமென்பதுதான் திருக்குறளின் தத்துவம். அந்தத் தத்துவஞானி எந்தக் கனவு கண்டாரோ, அந்தக் கனவு குமரிமுனையிலே இன்று நிறைவேறிக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகளும், அதைப்போலவே பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த குடும்பத்துப் பிள்ளைகளும், குறள்பால் கொண்டிருக்கின்ற அன்பு, ஆர்வம், ஈர்ப்பு இவைகளையெல்லாம் காணும்போது — உள்ளபடியே இந்த ஆண்டின் தொடக்கம் வள்ளுவரின் கனவு நனவாகும் என்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்துகிறது.

இந்தச் சிறார்களுக்கு என்ன பரிசளிக்கலாம் என்று நானும், கல்வியமைச்சர் பேராசிரியரும் சிந்தித்தோம். சிந்தித்த பிறகு எடுத்த முடிவு — இங்கே இருபத்திரெண்டு (22) பேர் குறளில் தங்களுக்குள்ள திறமையைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தலா ஆயிரம் ரூபாய், ஒருமுறை மட்டுமல்ல, மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இது இந்த 22 பேருக்கு மாத்திரமல்ல. இதைப்போன்ற திறமைபெற்றவர்கள் இன்னும் வருவார்களேயானால் அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் வீதம் மாதந்தோறும் — அரசின் சார்பில் தலைமைச் செயலகத்திலிருந்து — அவர்கள் வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். இதற்கு 'குறள் பரிசு' என்று பெயர். இந்தத் திட்டம் தொடரும். தொடர வேண்டும். தொடர்ந்தே தீருமென்பதை எடுத்துக் கூறி குறளின்பால் தங்கள் உள்ளத்தைப் பதித்து, நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்திய இந்தச் செல்வங்களுக்கு என் இதயமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ★





# வள்ளுவன் தன்னை உலகினுக்கே...

உலகுக்கென்று ஒரு நூலை அளித்தவர் திருவள்ளுவர்.

'இதுகுறித்துத் தமிழ்மக்கள் இறும்பூதெய்தலாம்; இறுமாப்பு அடையலாம்; ஆனால் திருவள்ளுவரைத் தமிழ்நாட்டளவில் கட்டுப்படுத்தலாகாது. அது தளையாகும்; சிறையாகும்' என்பது தமிழறிஞர் திரு.வி.கல்யாண சுந்தரனாரின் கருத்தாகும். அவர் மேலும் கூறுவார் :

'உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை, உலகவர் என்று கோடலே சிறப்பு. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடியதும் ஈண்டு கருதற்பாலது என்பார் திரு.வி.க.

ஆம்; வள்ளுவரின் பார்வை மிக ஆழமானதும் கூர்மையானதும் உலகம் யாவையும் தழுவியதுமான விசாலப் பார்வை.

திருக்குறள் மதம், இனம், மொழி, நாடு என்னும் வரம்புகளையெல்லாம் கடந்து, மாந்தரை அவர் தம் மாண்புகளைச் செழுமைப்படுத்தும் உலகோர் அனைவருக்குமான பொது மறையாகும். இத்தகு



**ஜெயகாந்தன்**



உலகப் பொதுமறையைத் தமிழ் உள்ளம் ஒன்று தமிழில் தந்திருப்பது நமது மொழியின் உலகச் சிறப்புக்கோர் அடையாளம்.

மற்றபடி திருக்குறளில் தமிழ்நாட்டைப் பற்றியோ, தமிழர் பற்றியோ, தமிழ்மொழியைப் பற்றியோ, தமிழ் என்ற சொல்லையோ கூட ஓரிடத்திலேனும் குறித்தாரில்லை.

அறமும், பொருளும், காதலும் ஒரு வகுப்பார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ மட்டும் உரியன அல்ல. அவை உலக மொழியினர் அனைவருக்கும் பொது.

'முதன்மையும், தொன்மையும் வாய்ந்த தமிழர் பண்பாட்டில் உலக வாழ்க்கைக் கூறுகள் கருக்கொண்டன. கருக்கொள்ளல் இயல்பு. அக்கரு, தெய்வப்புலவராகிய திருவள்ளுவருக்குப் புலனாயிற்று. ஆகவே, அவர்பால் உலகநூல் ஒன்று மலர்ந்ததென்க' என்பார் திரு.வி.க.

வள்ளுவரின் பார்வையின் உயிர்ப்பு 'உலகம் ஒரு குலம்' என்பதே.

உலகம் ஒரு குலம் என்பது ப்ழந்தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்த்த மிக நவீனமான குறிக்கோளாகும்.

'அக்குறிக்கோள் திருவள்ளுவரில் படிந்து நின்று வளர்ந்து ஒரு சீரிய உலக நூலாயிற்று. அந்நூலின் உள்ளுறை நுண்ணியதாய்ப் பல பேரறிஞரிடம் புகுந்து புகுந்து பல மொழிகளில் பரிணமித்தது. இவ்வாறு திருவள்ளுவர் கருத்து பெருகிப் பெருகி இந்நாளில் விஞ்ஞானத்தில் விரவி மார்க்ஸியமாகவும், தெய்வீகத்தில் கலந்து காந்தியமாகவும் பரவியுள்ளது. விஞ்ஞான மார்க்ஸியமும், தெய்வீக காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக்கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நம்நாடு முற்பட்டால் உலகம் நலம் பெறும்' என்று உறுதி கூறுவார் திரு.வி.க.

அத்தகைய தொண்டின் ஒரு கூறே குறளை வீதிதோறும் பரப்புவதும், வள்ளுவர்க்குக் கோட்டம் அமைப்பதும், இப்போது குமரிமுனையில் வள்ளுவப் பெருந்தகைக்கு வானுயரச் சிலை வைப்பதுமாகும் என்றே துணிகிறேன்.

குமரிக்கடல் பாறையைத் தமது தவத்துக் கேற்ற இடமாக சுவாமி விவேகானந்தர் குறித்தது, நமது சிந்தனைக்குரியதாகும்.

உலக நாகரிகம் தோன்றிய ஓரிடம் கடலில் மூழ்கியதுபோக எஞ்சியுள்ள ஒரு பாறையின் மீது அமர்ந்து இந்த பாரததேசத்தையும் உலகையும் உயர்ந்து விசுவரூபம் கொண்டு தரிசனம் செய்ய இதனினும் சிறந்த இடம் இன்னொன்று உண்டா?

வடக்கே இமயமலை, தெற்கே வாழும் குமரிமுனை, கிழக்கிலும் மேற்கிலும் கிடக்கும் பெரியகடல் என்று பாரதி கண்ட காட்சி இந்த வள்ளுவப் பார்வையில் விளைந்த தரிசனம் அல்லவா?

**தக்க இடத்தில், தக்க தருணத்தில், தக்கோரால் தமிழுக்குச் செய்யப்படும் இவ்வுலகச் சிறப்புக்கு வள்ளுவரின் சிலையே மிகமிகத் தகுதியானது.**

திருக்குறள் எனும் நூலின் வடிவமே வள்ளுவரின் வடிவமாகும். வள்ளுவப் பார்வையின் வழியே காண்பவருக்கு இவ்வடிவத்தின் மூலம் திருக்குறளே புலனாகும். இஃது வெறும் சிலையன்று. இது தமிழர் தம் உலகப் பார்வைக்குத் தந்த ஓர் உருவாகும்.

**புதுயுகத்தை வரவேற்கும் உலக மாந்தர் அனைவர்க்கும் புதிய ஒளிதரும் பொருள் மிகுந்த இவ்விழாவினை வையகமே வாழ்த்துகிறது.**

வாழ்க வையகம்!

வளர்க வள்ளுவப் பார்வை!!





# மதச்சார்பின்மைக்கு வழிவகுத்த முன்னோடி !

வள்ளுவர் வாழ்ந்த காலத் தமிழகத்தில் பல சமயங்களும் வழக்கில் இருந்தன. பௌத்தம் இருந்தது. சமணம் இருந்தது. வேத மரபு சார்ந்த இந்து மதம் இருந்தது. உலகாயதமும் இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் ஆத்திகர்கள் இருந்தனர். நாத்திகர்கள் இருந்தனர். அன்றைய அரசு பொதுவாக அரசர் சார்ந்த மதத்தைச் சார்ந்தது. அரசர்கள் ஏதாவது ஒரு சமயத்தைத் தழுவியவர்களாகவே இருந்தனர். எனவே எந்த மதத்தையும் சாராத அரசு! எல்லா மதத்தினருக்கும் பொதுவான வாழ்வியல் தத்துவம் போன்ற சிந்தனைகள் இடம் பெறாதிருந்த காலம். முந்தைய அரசர்கள் பலர், மற்றும் முந்தைக் காலத்தில் ஆட்சியிலிருந்தோர் பலர், பிற மதத்தினரை மதித்தார்கள். பிற மதத்தினருக்கு நியாயம் வழங்கினார்கள்.

ஆனால் அரசு ஆள்பவர் சமயத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. 'மதச் சார்பின்மை' என்பது வரையறுக்கப்பட்ட, மதிக்கப்பட்ட, கடைப்பிடிக்கப்பட்ட தத்துவமாக இடம் பெறவில்லை. 'மதச் சார்பின்மை' என்ற சொல்லே அகராதிக்குப் புதியது; புதியதாக உருவாக்கப்பட்டது. 'குடியரசுத் தத்துவம்' அரசியல் நடைமுறையாக உருப்பெற்று வளர்ச்சியடைந்த பின்னர்தான் ஆட்சியிலிருந்து சமயம் பிரிக்கப்பட்டது. அதன் பின்னர்தான் அரசுக்கு எல்லா மதமும் சம்மதம் என்ற த்த்துவம் அரசு, 'எம்மதத்தையும் சாராமை'



வா. செ. குழந்தைசாமி



என்ற நிலைக்கு வளர்ச்சி பெற்று நடைமுறைப் படுத்தப் பட்டது. இன்றும் குடியரசு என்று கூறிக் கொள்ளும் நாடுகளில் 'மதச்சார்பின்மை'யை இந்தியா போன்று அரசியலமைப்பின் அங்கமாகக் கடைப் பிடிக்கும் நாடுகள் மிகச் சிலவே. இந்தியாவைச் சுற்றி இருக்கும் நாடுகளில், இந்தியாவின் அண்டை நாடுகளில், மதச்சார்பற்ற நாடு இன்றும் எதுவும் இல்லை. இந்தப் பின்னணியில், 'மதச் சார்பின்மை' என்பது ஒரு தத்துவமாக அறியப்படாத கால கட்டத்தில் வள்ளுவர் கடைப்பிடித்திருக்கும் அணுகுமுறை எண்ணி எண்ணி வியக்கத் தக்கதாகும்.

வள்ளுவரைப் பொருத்தவரை இரண்டு கூறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை.

அ) திருக்குறளில் எந்த விதமான சமயச் சார்பும் இடம் பெறவில்லை. எந்தச் சமயமும் முன்னிலைப் படுத்தப் படவில்லை.

ஆ) திருவள்ளுவர் தன்னளவில் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதையும் கூட, குறள் நூலில் இருந்து அறிந்து கொள்ள இயலவில்லை.

திருவள்ளுவமாலையில், கல்லாடர் பெயரில் இடம் பெற்றிருக்கும் வெண்பா, குறளின் சமயச் சார்பற்ற தன்மையை அப்பொழுதே அடையாளம் காட்டியிருக்கிறது.

'ஒன்றே பொருளெனின் வேறென்பர்;
வேறெனின்
அன்றென்பர் ஆறு சமயத்தார் –
நன்றென
எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி'

என்ற வெண்பா, திருவள்ளுவ மாலையில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். திருவள்ளுவர் அன்று வழக்கில் இருந்த சமயங்கள், தத்துவங்கள், புராண – இதிகாச மரபுகள் அனைத்தையும் அறிந்திருந்தார் எனத் துணிய இடமுண்டு. இந்திரன், செய்யாள், செய்யவள், தாமரையினான், முகடி, அடியளந்தான், தாமரைக் கண்ணான், காமன் ஆகிய பெயர்கள் குறளில் இடம் பெற்றுள்ளன. இவை வேத மரபுத் தெய்வங்கள். இவற்றை அவர் கடவுள் கோட்பாட்டு நிலையில் அறிமுகப்படுத்தவில்லை. அன்றைய வழக்கை முன்னிறுத்தி இலக்கிய உத்தியாகிய எடுத்துக் காட்டுகளாகவே பயன்படுத்துகிறார். வேத மரபான வேள்வியில் உயிர்ப்பலி, பிறப்பில் உயர்வு, தாழ்வு போன்றவற்றை அறிந்திருந்த தோடு அவற்றை மறுக்கிறார்.

நீத்தார் பெருமை, புலாலுண்ணாமை, கொல்லாமை பற்றிய கருத்துகளும், துறவு நிலைக்கு, இல்லறத்திற்குச் சமமாக இன்றேனும் அதற்கு அடுத்த நிலையில் முக்கியத்துவம் கொடுத்திருப்பதும் பௌத்த சமண சமயங்களின் தாக்கத்திற்குச் சான்றுகளாக அறிஞர் கருதுவர். எனவே, அவர் வாழ்ந்த காலத்திய சமயங்கள், தத்துவங்கள், அவற்றுக்குள் இருந்த முரண்பாடுகள் அனைத்தையும் அறிந்திருந்தார். அவற்றை

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற நிலையில் நின்று தமது நூலைப் படைத்தாரேயன்றி எந்த ஒரு சமயத்தையும் முன்னிலைப் படுத்தினாரில்லை.

பாயிரவியலில் இடம் பெற்றுள்ள கடவுள் வாழ்த்து என்பது நூலாசிரியர் வழிபடு கடவுளையோ, அல்லது நூல் பேசும் பொருளுக்கு ஏற்புடைக் கடவுளையோ வாழ்த்துதல் மரபு எனினும் இந்த அதிகாரத்தில் அவர் எந்தத் தனிப்பட்ட சமயக் கடவுளரையும் வெளிப்படையாக இனங் காட்டவில்லை. கடவுளைச் சுட்டுவதற்கு அவர் பயன்படுத்தும் பண்புப் பெயர்கள் ஒவ்வொரு சமயத்தவரும் தங்கள் கடவுளை அடையாளம் காணக் கூடியனவாகவே உள்ளன. கடவுள் உண்மையை உணர்த்துவதாகவும் அவரை வழிபடுவதால் அடையும் பயன் பற்றிக் கூறுவதாகவும் மட்டுமே இவ்வதிகாரம் அமைந்துள்ளது. நாத்திகர் தவிர்த்து மற்ற அனைத்துச் சாரார்க்கும் ஏற்புடைத்தாகவே இவ்வதிகாரம் அமைந்துள்ளது. நாத்திகர்கட்குக் கூட,





'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற குறள்கள் அமைதி தரத் தக்கவை. வள்ளுவர் பகுத்தறிவுத் தளத்தின் மேல் நிற்பது கண்டு மனநிறைவு பெறலாம். குறள் நூல் முழுவதிலும் கூறப்பட்டிருக்கும் கருத்துகள் அனைத்தும் இந்த இரண்டு குறட்பாக்கள் தரும் அளவுகோலுக்கு உட்பட்டவையே ஆகும். இந்தப் பிரகடனத்திற்கு விதிவிலக்கில்லை.

வள்ளுவர் கடவுள் நம்பிக்கையுடையவராகவே இருந்திருக்கிறார்; ஊழ், அதன் விளைவு பற்றிப் பேசுகிறார். முற்பிறப்பு, மறுபிறப்புப் பற்றிப் பேசுகிறார். எனவே, அவர் தமது நூலை ஒரு பொது வாழ்வியல் தத்துவமாக அளித்திருந்தாலும் தனிப்பட்ட முறையில் அவருக்கென ஒரு சமய நம்பிக்கை இருந்திருக்கலாம். அது அன்றுள்ள சமயங்களில் ஒன்றாகவோ, அல்லது அவர் தனக்கென வகுத்துக் கொண்ட கடவுட் கோட்பாடாகவோ இருக்கலாம். ஆனால் வள்ளுவரின் கடவுட் கொள்கை என அடையாளம் காட்டத்தக்க ஒன்றை அவர் முன்



வைக்கவில்லை. தன்னுடைய நம்பிக்கைகள் கொள்கைகள் எவையாயினும் அவற்றை அவர் முதன்மைப்படுத்தாது, ஓர் பொது அறத்தை முன்வைக்கிறார். அவருடைய இந்த அணுகு முறை வள்ளுவரை மத அடிப்படையில் அடையாளம் காட்ட முடியாதவராக நம்முன் நிறுத்துகிறது. ஒவ்வொரு சமயத்தினரும் அவரைத் தம் சமயத்தினராகக் காண்கின்றனர்.

திரு.வி.க. 'தமிழ் நூல்களில் பௌத்தம்' என்னும் தமது நூலில் 'எனது சிற்றாராய்ச்சியில் திருக்குறள் சமண அறத்தை அடிப்படையாகக் கொண்ட முந்த பொது நூல் என்று விளங்கியிருக்கின்றது' என்கிறார்.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை 'தமிழ்ச் சுடர் மணிகள்' எனும் நூலில் 'கடவுள் வாழ்த்திலே வருகின்ற மலர்மிசை ஏகினான் முதலிய தெய்வப் பெயர்களை நோக்கும் போது வள்ளுவரைச் சைன மதத்தைச் சார்ந்தவர் என்பது தான் பொருத்தமாகும் என்கிறார்.

திருக்குறளை நன்கு ஆராய்ந்த காஞ்சிபுரம் வச்சிரவேல் முதலியார் தக்க பல ஆதாரங்களைக் காட்டித் 'திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே' என் மெய்ப்பிக்க முயல்கிறார். மறைமலையடிகள் தமது 'பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' எனும் நூலில் 'பௌத்த, சமணச் சமயக் குருக்கண்மார் இல்லறத்தை இகழ்ந்து, துறவறத்தையே பெரிதும் கொண்டாடி நிற்பர். இவ்வுண்மை கண்டு தெய்வத் திருவள்ளுவர், அவர் தம் கொள்கையை மறுத்தற் பொருட்டே,



இன்பத்தின் வழித் தாகிய இல்லறத்தை முன்வைத்து நூல் செய்ததும், இல்லறத்தைத் தமிழ்ச் சான்றோர் வழக்குப் பற்றித் துறவறத்தினும் மிக்கெடுத்துக் கூறிய 'தூஉ மென்க' என்கிறார்.

பல சமயங்களும், சமயச் சார்பான ஆழ்ந்த சிந்தனைகளும் இடம் பெற்றிருந்த சூழ்நிலையில், 'சமயச் சார்பின்மை' என்பதை ஒரு தத்துவமாக எண்ணிப்பார்க்கும் வளர்ச்சி நிலை இடம் பெறாத காலகட்டத்தில் தமது சமயம் என்ன என்று அடையாளம் காட்டாது, பின்னணியில் நின்று, சமயச் சார்பற்ற ஒரு வாழ்வியல் நூலை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன், மன்னராட்சிக் காலத்தில் படைத்தளித்திருப்பது எந்த அடிப்படையில் பார்த்தாலும் எண்ணி, எண்ணி வியக்கத் தக்கதேயாகும்.

திருக்குறளைப் புலவருலகம் ஒரு நீதி நூலாகவே நீண்ட நாளாகப் பார்த்து வந்திருக்கிறது. அதன் பரிமாணங்களை நாம் ஆழமாக ஆராயவில்லை; முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. கீதை வேதமரபை அடிப்படையாக வைத்து வாழ்வியல் வகுத்த மறை நூல். திருக்குறள் தமிழ்ச் சமுதாயப் பண்பாட்டின் பின்னணியில், அன்பையும், அறத்தையும் அடிப்படையாக வைத்து, வேத மரபை, அன்றைய பௌத்த, சமண, உலகாயதச் சிந்தனைகளை மனத்திற் கொண்டு, வள்ளுவர் தம் ஆழ்ந்த சிந்தனையின், மேதையின், விளைவாக உருவாக்கிய வாழ்க்கைத் தத்துவம். புதுப் படைப்பு. சில கூறுபாடுகளில் புரட்சிப் படைப்புங்கூட. அது மதச் சார்பின்மைக்கு மட்டுமன்றி இன்றைய உலக நடைமுறையில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கும் 'மனித நேயத்திற்கும்' (Humanism) ஒரு முன்னோடி. வள்ளுவம் நாம் அறிதொறும் அறியாமை காணும் வாழ்வியல் தத்துவம்.

✡ ✡ ✡ ✡

## COSMOPOLITAN OUTLOOK

Tirukkural is the well known literary composition in the Sangam classics. This work proclaims the basic principles for the moral and material life of the people. The aphoirsms about 'loving-kindness' reveal the humane approach of the poet to the problems of life. The lofty ideals that are enshrined in thus didactic work transcends the barriers of race, creed, place and time. Besides, this universal and cosmopolitan outlook, Tirukkural shines supreme in its poetic excellences.

*- Dr. Wilfried Noelle*





# வள்ளுவருக்குப் பேரன்



தலைவி கண்ணாடி முன் அமர்ந்திருக்கிறாள். கையில் கண்ணுக்கு மை தீட்டும் கோல்.

ஆனால் மை தீட்டாமல் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

இதைப் பார்த்த தோழி, ''கையில் கோலெடுத்துக் கொண்டாய். ஆனால் மை தீட்டாமலிருக்கிறாயே, ஏன்?'' என்று கேட்கிறாள்.

ஒரு கவிஞனைச் சிறந்த கவிஞனாகக் காட்டுவது அவனுடைய கவிதை மட்டுமல்ல.

கவிதை படைப்பதற்காக அவன் உருவாக்கிக் கொள்ளும் சந்தர்ப்பமும் ஒரு நல்ல கவிஞனை இனம் காட்டிவிடும்.

வள்ளுவர் உருவாக்கிக் கொண்ட சந்தர்ப்பமே அவரை ஒரு சிறந்த கவிஞராக இனம்காட்டி விடுகிறது.




இதற்குத் தலைவி பதில் சொல்ல வேண்டும்.

இது கவிதை படைப்பதற்கான அழகான சந்தர்ப்பம் (Situation)

வள்ளுவர் இப்படி ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்கிறார்.

இந்தச் சந்தர்ப்பம் அழகான கவிதையைத்தான் உருவாக்கும்.

வள்ளுவருக்கும் அழகான கவிதை பிறக்கிறது.

தலைவி பதில் சொல்லுகிறாள்:

என் காதலர் எப்போதும் என் கண்ணிலேயே இருக்கிறார். நான் மை தீட்டும் அந்தக்





கணப்பொழுது அவர் மறைந்து விடுவார். அந்தப் பிரிவைக் கூட என்னால் தாங்க முடியாது. அதனால்தான் நான் கண்ணுக்கு மை தீட்டவில்லை.

'கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து ' (1127)

- என்ன அழகான பதில்! என்ன அழகான கவிதை!

ஒரு நல்ல கவிதை என்றால் அதைப் படிக்கும் கவிஞனையும் கவிதை எழுதத் தூண்ட வேண்டும்.

வள்ளுவரின் இந்தக் கவிதையைப் படித்ததும் எனக்குள் தீப்பற்றிக் கொண்டது.

உணர்ச்சிகள் பொங்கின. கற்பனைகள் சுரந்து பீறிட்டன.

இதே சந்தர்ப்பத்தில் தலைவி என்னென்ன பதில் சொல்லியிருக்கக் கூடும் என்று என் சிந்தனை ஓடியது.

விளைவு - எனக்கும் ஓர் அழகான கவிதை பிறந்தது.

கண்ணில் ஏன்
மை தீட்டவில்லை
என்கிறாயா தோழி?
சொல்கிறேன்:

கண்ணுக்குள் என்
காதலர்.

அவர் முகத்தில்
கரி பூசலாமா?

என் சூரியன் மீது
இருட்டைத் தடவுவதோ?

வீட்டிற்குள்ளே அவர்;
வாசலில் எதற்கு
வரவேற்புக் கோலம்?

அவரையே தீட்டி
அழகுபெற்ற கண்ணுக்கு
மையலங்காரம்
வேண்டுமா?

கண்ணைவிட
மென்மையானவர்
என் காதலர்.
கோல் பட்டால்
வலிக்காதா?

அவரை வைத்த
இடத்தில்
வேறொன்றை வைப்பது
கற்புக்கு இழுக்கல்லவா?

இந்தக் கவிதைக்கு நான்தான் தாய். ஆனால் தந்தையோ வள்ளுவர் படைத்த சந்தர்ப்பம்.

அந்த உறவு முறையில் என் கவிதை வள்ளுவருக்குப் பேரன்.

* * * * *







# இணையத்தில் திருக்குறள்

மு. ஆனந்தகிருஷ்ணன்

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மேலை நாடுகளில் இணையம் வேரூன்றி தழைத்துவந்தபோது அந்நாடுகளில் வாழும் தமிழர்கள், தமிழ் மொழியை இணையத்தில் ஈடுபடுத்தப் பல முயற்சிகளை மேற் கொண்டனர். பிரதிபலன் எதிர்பாராமல் தமிழார்வத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இம்முயற்சிகளால் விழுதுகள் போல நூற்றுக்கணக்கான இணைய வெப் தளங்கள் உருவாகின. தமிழ் நாட்டில் இணையத் தொடர்பு செம்மையாகச் செயல்படாத நிலையில் நமது தமிழ் ஆர்வலர்கள் இத்தகைய முயற்சிகளில், சென்ற இரண்டாண்டு வரை பங்கேற்கும் வாய்ப்பு இல்லை. தற்போது எண்ணிக்கையில் வேகமாக வளர்ந்துவரும் தமிழ் வெப் தளங்களில் பல்வேறு செய்திகள் இடம் பெறுகின்றன. தமிழ்மொழி மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல பொருள்களை இவை கொண்டுள்ளன. தமிழ் இலக்கிய நூல்கள், தற்காலத் தமிழ்ப் படைப்புகள், செய்தித் தாள்கள், தமிழில் வந்துள்ள திரைப்படங்கள், இசை வகைகள், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்கள், வழிபாட்டுத் தலங்கள், கல்வி நிலையங்கள், பதிப்பகங்கள், நூலாசிரியர்கள், மற்ற நாடுகளில் உள்ள தமிழ் சார்ந்த படைப்புகள், தமிழ் கற்பிக்கும் வழிகள் – இதுபோன்ற ஏராளமான வகைகளில் பல்வேறு வெப் தளங்கள் செயல்பட்டு வருகின்றன.

சிதறிக் கிடக்கும் தமிழ் சார்ந்த தளங்களை ஒருங்கே தொகுத்துப் பட்டியலிடும் முயற்சியில் ஒருசிலர் ஈடுபட்டனர். தற்காலத் தொழில் நுட்பம் மூலம், இப்பட்டியலில் உள்ள தளங்களைத் தனித் தனியாகக் கோடிட்டு, அதைச் சுட்டிக் காட்டி சொடுக்கினால் அந்த அசல் வெப் தளத்தைச் சென்றடையும் தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளனர். இத்தொகுப்புகளில் குறிப்பிடத்தக்கவை :

**www.directoryindia.com/state/tamil**

இந்த வெப் தளத்தை உருவாக்கி நடத்திச் செல்பவர் அமெரிக்காவில், டொலீடோ என்ற நகரில் வாழும் திரு. சரவணன் அவர்கள். இத்தளத்தில் தமிழ் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த பல வகையான பொருட்கள் கொண்ட பல்வேறு வெப் தளங்கள் தொகுத்துக் கோடிடப்பட்டுள்ளன.

மற்றொரு தொகுப்புத் தளத்தை சுவிட்சர்லாந்து நாட்டில் லூசான் நகரில் வாழும் திரு. கு. கல்யாணசுந்தரம் அவர்கள் உருவாக்கிச் செயல்படுத்திவருகின்றார். அதன் தள முகவரி :

**www.geocities.com/athens/5180/index.html**

இதுபோல ஆஸ்திரேலியாவில் வாழும் திரு. பாலபிள்ளை அவர்கள் நிர்வகிக்கும் **www.tamil.net** என்ற வெப் தளமும், கனடாவில் டொராண்டோ நகரிலிருந்து செயல்படும் **www.tamil.org** என்ற வெப் தளமும் குறிப்பிடத்தக்கவை.



தொகுப்பு வெப் தளங்கள் நமக்குத் தேவையான செய்தி களையும் விவரங்களையும் எளிதில் கிடைக்கப் பேருதவி யாக உள்ளன. இங்கு தொடங்கி ஆங்காங்கு உள்ள பல்வேறு தமிழ்த் த்ளங்களில் சேமிக்கப்பட்டுள்ளவற்றைப் பெறலாம். இனி திருக்குறளைப் பற்றி இணைய வெப் தளங்களில் உள்ளவற்றைப் பார்ப்போம்.

### திருக்குறள் திடல்கள்

இணையத்தில் தமிழை ஈடுபடுத்த வேண்டும் என்ற ஆர்வம் தொடங்கிய காலத்தி லிருந்தே, பல்வேறு வெப் தளங்களில் திருக்குறள் பதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க சில கீழே தரப்பட்டுள்ளன.

**http://www.cs.utk.edu/~siddhart/thirukkural**

திரு. சித்தார்த்தன் ராமசந்திரமூர்த்தி என்பவரால் உருவாக் கப்பட்ட இந்த வெப் தளத்தில் 1330 குறட் பாக்களும் தரப் பட்டுள்ளன. அதோடு கூட Rev. Dr. G.U. போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பும் (தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 1982ஆம் வருடப் பதிப்பு) இத்தளத்தில் தரப் பட்டுள்ளது. இத்தளத்தில் திருக்குறளில் உள்ள எந்த ஒரு சொல்லையும் ரோமன் எழுத்து வடிவத்தில் குறிப்பிட்டு அச்சொல்லைக் கொண்ட குறள்களைத் தேடி அடைய வகை செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் உள்ள இமாலயன் அகாடமியின் முயற்சியில் **"Holy Kural"** என்ற தலைப்பில் குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாங்கிலத் தொகுப்பை டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தின்

**http://www.cc.utexas.edu/~janahan/kural.html**

என்ற வெப்தளத்தில் காணாம்.

மற்றொரு பாராட்டத்தக்க முயற்சியைத் திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் அமெரிக்காவில் அட்லாண்டாவில் வாழும் திரு. குமார் மல்லிகார்ச்சுனன் அவர்களும் "மதுரைத் திட்டம்" என்ற முயற்சியின் அடிப்படையில் மேற்கொண்டு பல்வேறு பண்டைக்காலத் தமிழ் இலக்கியங்களை



**www.tamil.net/projectmadurai**

என்ற வெப் தளத்தில் பதிவு செய்துள்ளனர். இந்த "மதுரைத் திட்டத்தில்" உலகில் உள்ள தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் எவரும் உறுப்பினராகச் சேரலாம். அவர்கள் தன்னிச்சையாகத் தங்களிடம் உள்ள பண்டைக்காலத் தமிழ் இலக்கிய நூல்களை



இந்த வெப் தளத்தில் உள்ளிடலாம். இந்தக் கூட்டு முயற்சியால் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட தமிழ் இலக்கிய மின் தொகுப்பு உருவாகி வருகின்றது. இந்த முயற்சியில் முதலாவதாகச் சேர்க்கப்பட்டது திருக்குறள் ஆகும். அதோடு கூட திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் செயல் படுத்தி வரும் முன்பு கூறிய தொகுப்பு வெப்தளத்தில் உள்ள தமிழ் மின் நூலகம் வழியாக மற்ற வெப் தளங்களில் உள்ள திருக்குறள் தொடர்பான பல சிறப்புச் செய்திகளைக் காணலாம்.

### பண்டைய வரிவடிவில் திருக்குறள்

பழங்காலத் தமிழ் வரி வடிவங்களில் திருக்குறளைக் காணவும் இணையம் வழி செய்கிறது.

சென்னைக் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர்கள் திருவாளர்கள் கிப்ட் சிரோமணி எஸ். கோவிந்தராஜன், எம். சந்திரசேகரன் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட ஆய்வுத் திட்டத்தின் அடிப்படையில் பண்டைய கால எழுத்து வரிவடிவங்களில் அமைந்த திருக்குறளைக் கீழ்க்கண்ட தளத்தில் காணலாம்:

**www.geocities.com/Athens/5180/kural1.html**

கி.மு.250–லிருந்து கி.பி.250 வரையுள்ள காலத்திய தமிழ் வரி வடிவத்தில் குறள் எப்படி இருந்திருக்கும் என்பதை,

**www.geocities.com/Athens/5180/kural1.jpg**

என்ற வெப் தளத்தில் காணலாம். இத்தளத்தில் கீழ்க்கண்டவாறு தற்போதைய வரிவடிவம் மற்றும் பழைய வரிவடிவம் இரண்டிலும் திருக்குறளைக் காணமுடியும் :

*'இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்*
*வல்லது அவர் அளிக்குமாறு'*

*'ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி*
*வாடினும் பாடு பெறும்'*

*'புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ*
*நிலத்தொடு*
*உள்ளம் உடைக்கும் படை'*



கி.பி.557 முதல் கி.பி.590 வரையிலான காலகட்டத்தில் காணப்பெற்ற தமிழ் எழுத்து வரிவடிவ அமைப்பில் திருக்குறள் எவ்வாறிருந்தது என்பதை

**www.geocities.com/Athens/5180/kural2.jpg**

என்ற வெப் பக்கத்திலிருந்து அறியலாம்.

*'தம்மில் இருந்து தமதுபார்த்து உண்டாற்றால்*
*அம்மா அரிவை முயக்கு'*

*'வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை*
*போழப் படாஅ முயக்கு'*

*'ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்*
*கூடியார் பெற்ற பயன்'*

கி.பி.737–லிருந்து கி.பி.795 வரையிலான காலகட்டத்தில் திருக்குறளின் வடிவமைப்பு எவ்வாறிருந்தது என்பதை **www.geocities.com/Athens/5180/kural3.jpg**

என்ற வெப் பக்கத்திலிருந்து அறியலாம்.

*'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை'*

*'உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது*
*எழுவாரை எல்லாம் பொறுத்து'*

*'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்*
*தொழுதுண்டு பின் செல்பவர்'*

### மொழி பெயர்ப்புகள்

**www.geocities.com/Athens/5180/thkrl.html**

என்ற வெப் தளத்தில் உலகின் பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டுள்ள விவரம் தரப்பட்டுள்ளது. மொழிபெயர்த்த ஆசிரியர் பெயர், மொழி பெயர்க்கப்பட்ட ஆண்டு ஆகிய விவரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. அஸ்ஸாமி மொழியில்–2, பர்மிய மொழி–1, சீனம்–1, செக்–1, டச்சு–1, ஆங்கிலம்–25, ஃபிஜிய மொழி–1, ஃபின்னிய மொழி–1, ஃபிரெஞ்சு–5, ஜெர்மன்–6,



குஜராத்தி – 1, ஹிந்தி–7, கன்னடம்–4, லத்தீன்–2, மலேயா–2, மலையாளம்–6, ஒரியா–1, பஞ்சாபி–1, போலந்து மொழி–1, ராஜஸ்தானி–1, ரஷ்ய மொழி–2, சமஸ்கிருதம்–1, சௌராஷ்டிரம்–1, சிங்களம்–2, சவீட மொழி–1, தெலுங்கு–2, உருதுவில்–2 மொழிபெயர்ப்புகள் உள்ளன என்ற விவரத்தை இந்த வெப் தளத்தின் மூலம் நாம் அறியலாம். திருக்குறளைப் படிக்க விரும்பும் பிற மொழியினருக்கு இது பேருதவியாக உள்ளது.

இவையன்றி, பெர்கீலி பல்கலைக் கழகத்தினரின்,

**http://tamil.berkeley.edu**

என்ற வெப் தளத்தில் திருக்குறளின் ஒரு சில அதிகாரங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன. திரு. ஆர். ரவீந்திரன் அவர்கள் செயல்படுத்திவரும்,

**www.iupui.edu/~rravindr/arappal.html**

என்ற வெப் தளமும் குறிப்பிடத்தக்கது.

### தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் நூலகம்

இவ்வாண்டு சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்கில் (தமிழ்நெட்–99) தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகம்







ஒன்று நிறுவப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி அவர்களது தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு மேற் கொள்ள வேண்டிய வழிமுறைகளைக் குறிப்பிட்டுள்ளது. இப்பல்கலைக் கழகத்தின் ஒரு முக்கிய அம்சமாகத் தமிழ் மின் நூலகம் ஒன்று செயல்படும். இந்த நூலகத்தின் தமிழைக் கற்கவும் கற்பிக்கவும் வேண்டிய பாடங்களுடன் பண்டைய, தற்கால நூல்கள், அகராதிகள், செய்தித் தாள்கள் போன்றவை ஒலி–ஒளி வடிவில் அமைக்கப்படும். தற்போது உலகெங்கிலும் பரவியுள்ள தமிழ்மொழி சார்ந்த பல்வேறு வெப் தளங்களுக்குக் கோடிட்ட தொடர்பு களும் அளிக்கப்படும்.



தமிழ்நெட்–99 மாநாட்டைத் தொடர்ந்து அரசினால் ஒப்புத லளிக்கப்பட்ட தமிழ் எழுத்துகளுக்கான குறியீட்டு முறைகளைப் பயன்படுத்தி இந்த மின் நூலகத்திலுள்ள எல்லா நூல்களையும் காணமுடியும்.

### உரைநூல்கள் இல்லாமை

மேற்கண்டவாறு திருக்குறள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பதிவாகி உள்ளன. ஆனால் குறளுக்கான உரைநூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியிடப்பட்டிருந்தும் அவற்றில் ஒரு சில கூட எந்த வெப் தளத்திலும் இடம் பெறவில்லை. காப்புரிமை உடையோரிடமிருந்து தேவையான உரிமங்களைப் பெறவேண்டியுள்ளதே இதற்குக் காரணம். வருங்காலத்தில் இவ்வாறான நூல்களுக்கான உரிமைகளைப் பெற்று இணைய நூலகத்தில் அவற்றை இடம் பெறச் செய்யும் முயற்சியை தமிழ் இணையப் பல்கலைக்கழகம் மேற்கொள்ளலாம்.

### வருங்கால வளர்ச்சி

இணையத்தில் தமிழ் மேலும் பன்மடங்கு வளர்வதற்குப் பல புதிய தொழில்நுட்பச் சாதனங்களும் மென்பொருட்களும் வெளியாகி வருகின்றன. தற்போது பெரும் அளவுக்குத் தமிழ் நூல்கள் வெளியிடுவோர் அவற்றைக் கணிப்பொறியில் பதிவு செய்து அச்சிடுகின்றனர். அவ்வாறு பதிவு செய்யப்படும் மின்தகடுகளின் நகல்களைத் தேவையான உரிமங்களைப் பெற்று இணையத்தில் உடனுக்குடன் இணைக்கலாம். இதுபோலவே, ஓலைச்சுவடிகளை மின்பதிவுகளாக அமைத்து இணையத்தில் சேர்க்கலாம். தமிழ் நூல்களை இணையத்தின் மூலம் படிப்பவர்களுக்கு ஏற்றவாறு குரல் ஒலி, நிழற்படம் மற்றும் அசையும் படங்கள் போன்றவற்றைச் சிறந்த முறையில் பயன்படுத்தி, கற்பதை எளிமையாக்குவதற்குத் தொழில் நுட்ப வசதிகள் பல உள்ளன.

இணையத்தில் தமிழ் தழைக்க வேண்டும் என்று இவ்வாண்டு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்றிய சுடர், பல ஆண்டுகள் தொடர்ந்து ஒளி வீசுவதன் மூலம் தமிழ் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும் என்பது உறுதி.

❋ ❋ ❋





# திருக்குறள் உலகை ஆளும்

திருக்குறள் மறைநூல் ஒன்றே
தேசத்தின் நிறைநூ லாகும்!
கருப்பொருள் செறிந்த நூலே!
காலத்தைக் கணிக்கும் நூலே!
ஒருகுறள் படித்தால் கூட
உள்ளத்தை வெளிச்ச மாக்கும்!
அருங்குறள் முப்பால் ஒன்றே
அனைத்துக்கும் விழிநூ லாகும்!

எப்பொருள் அறிவ தற்கும்,
எத்தன்மை காண்ப தற்கும்,
முப்பால்கண் ணாடி யாகும்;
முறையாகத் தொகுத்த நூலே!
குப்புறப் படுத்த வாழ்வில்
குறைநீக்கி எழுச்சி யூட்டும்.
கப்பிய இருளின் மப்பைக்
கலைத்திடும் கதிர்நூல் ஆகும்!

ஒழுக்கத்தை ஊட்டும் தாய்நூல்;
உயர்வுக்கு வானே போலும்!
அழுக்காற்றை நீக்கும் நன்னூல்;
அறிவூட்டும் அறத்தின் ஆண்நூல்!
பழச்சாறு கருத்தின் ஊற்று;
பழுதில்லா தமிழக் காற்று!
விழிப்பூட்டும் வெளிச்ச வீடு!
விவேகத்தின் விளைச்சல் காடு!







காமத்துப் பாலில், உண்மைக்
காதலின் மென்மை உண்டு!
சாமத்தில் மலரும் பூக்கள்
தரும் நோய்க்கு மருந்தும் உண்டு!
ஏமாற்றும் அரசும் நீதி
இல்லாது வறுமை தந்தால்
பாமரக் கண்ணீர் சாய்க்கும்;
பாடமும் இதிலே உண்டு!

பாவுக்கோ யாப்பும் வேண்டும்;
பயிருக்கு வேலி வேண்டும்;
பூவுக்கு மணமும் வேண்டும்;
பூவைக்குக் கற்பும் வேண்டும்;
நாவுக்கோ அடக்கம் வேண்டும்;
நல்லார்க்கு வாய்மை வேண்டும்;
ஆவிற்கு மடியும் வேண்டும்;
அனைத்துக்கும் குறளே வேண்டும்!

இல்லாமை இதிலே இல்லை!
இப்புவிக் கல்விக் கான
சொல்லாத சொல்லும் இல்லை!
சுருக்கிய அடிக ளாலே
எல்லார்க்கும் தெரியும் வண்ணம்
இமயம்போல் கருத்தைக் காட்டி,
கொல்லாமை அறத்தைக் கூறும்
குறளிந்த உலகை ஆளும்!

**சுரதா**



# பொய்யாமொழி

வாலி



நீ
நினைப்பதெல்லாம் -
நடக்கவில்லையா?
அதற்காக -
நினைப்பதையே -
நிறுத்திவிடாதே;

நீ
கேட்டதெல்லாம் -
கிடைக்கவில்லையா?
அதற்காகக்
கேட்பதையே -
நிறுத்திவிடாதே;

நீ
விதைப்பதெல்லாம் -
முளைக்கவில்லையா?
அதற்காக -
விதைப்பதையே -
நிறுத்திவிடாதே;

உன்
உழைப்பு உன்னை -
உயர்த்தவில்லையா?
அதற்காக
உழைப்பதையே -
நிறுத்திவிடாதே;

நம்பிக்கைதான் -
வாழ்க்கையை
நகர்த்திக் கொண்டு போகிறது;

கனி விழாவிடினும் -
கல்லெறிவதை நிறுத்தாதே!

'முயற்சி தன் -
மெய்வருத்தக் கூலி தரும்!'

வள்ளுவம் பொய்க்காது; அதன் -
வாசகம் கைக்காது!









# வள்ளுவரும் மருத்துவமும்



மருத்துவம் பற்றிய தமிழரின் சிந்தனைகள் காலப் பழமையான நோயை எதிர் கொள்வதினும் நோய் வாராது காப்பதுவே அவர்தம் குறிக்கோளாக இருந்தது. அதனால்தான் மருந்தென்று தலைப்பிட்டும் அந்த அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை நோய்த்தடுப்புச் சிந்தனைகளுக்கே முதலிடம் தந்துள்ளார். இன்றளவும் உலகளவில் நோய்த்தடுப்புக்கு ஆதாரவித்தாகக் கருதப்படுவது உணவுதான். வளர்ச்சியடைந்த நாடுகள் வலியுறுத்தும் பாதுகாப்பு மருத்துவத்தின் தலையாய மூன்று அடிப்படைகளுள் உணவு முதன்மையானது.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் மேம்பாடு, ஆய்வுகள் நடத்திக் கண்டுபிடித்துக் காட்டியிருக்கும் இந்த உண்மையை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழறிஞர் ஒருவர், அனுபவநோக்கால், ஆறிரண்டு பன்னிரண்டு வரிகளில் அறிவுறுத்தியிருப்பது தமிழர்தம் மருத்துவ அறிவின் செம்மாந்த நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. வள்ளுவர் வகுத்திருக்கும் உணவுக் கோட்பாடுகள் எளிய வழி காட்டல்களே. ஆனால் ஆழமான ஆய்வுப் பின்புலம் கொண்டவை; அறிவியல் உண்மைகளாய் விளைந்தவை.

## உண்பதைப் போற்றியுண்க

உடலுக்கு மருந்து தேவையில்லை; நோய் வந்தால்தானே மருந்து; நோய் வாராதிருக்கு மாறு உடலை வைத்துக்கொள்ள எவ்வழி சாலச் சிறந்தது? 'அருந்தியது போற்றி உணின், அற்றது போற்றி உணின்' என்று இரண்டு வழிகள் வள்ளுவப் பெருந்தகையால் காட்டப்பட்டுள்ளன. எதை உணவாய்க் கொள்கிறோமோ, அதைப் போற்றி உண்ணல் வேண்டும். 'தினமும் இட்லிதானா?' என்று சலித்துக் கொள்வதைவிட, 'நாளும் இட்லி கிடைக்கிறதே' என்று மகிழ்தலோடு, 'உளுந்திலுள்ள புரதமும், அரிசியிலுள்ள மாவுச்சத்தும், வைட்டமின்களும், தாது உப்புகளும் நம்மை வலிமைப்படுத்த, நம் வாழ்வு நலவாழ்வாகச் சிறக்க, இட்லியாய் வடிவெடுத்து வந்துள்ளன' என்ற சத்தான எண்ணத்தோடு காலையுணவு ஏற்கவேண்டும்.

விருப்பமின்றி உண்ணும்போது, சரியான உணர்வுத் தூண்டல்கள் கிடைக்காமையால் செரிமான நீர்கள் தேவையான அளவில் சுரப்பதில்லை. அதனால் உண்ணும் உணவு, அது எத்தனை எளிமையான உணவாக இருந்தாலும் முழுமையாகச் செரிக்கப்படாமல், அதன் சத்துக்கள் உடலைச் சேராதொழிவது ஒருபுறமும், குறைச்செரிமானத்தால் வயிற்றழற்சி ஒருபுறமும் எனத் தீங்குகளை விளைவிக்கிறது. 'விருப்பத்தோடு உண்ணுதல்', உணவருந்துதலில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. உண்ணுதலில் உணர்வுகள் வகிக்கும் இந்த ஆளுமையை நன்கறிந்தே வள்ளுவர், 'அருந்துவது போற்றி உண்க' என்றார்.

## செரித்தமை அறிந்து உண்க

உண்ட உணவு செரிப்பது மிக முக்கிய மானது. இந்தச் செரிமானம் உணவைக் கொள்ளும்போதே தொடங்கிவிடுகிறது. வாய், இரைப்பை, சிறுகுடல் என உணவுப் பாதையின் பல இடங்களில் நிகழும் இந்தச் செரிமானம், கொள்ளும் உணவைப் பொறுத்துக் காலம் எடுத்துக் கொள்கிறது. ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் செரிமானமாகும் உணவின்

□ இரா. கலைக்கோவன்



# பொய்யாமொழி

**வாலி**



நீ
நினைப்பதெல்லாம் -
நடக்கவில்லையா?
அதற்காக -
நினைப்பதையே -
நிறுத்திவிடாதே;

நீ
கேட்டதெல்லாம் -
கிடைக்கவில்லையா?
அதற்காகக்
கேட்பதையே -
நிறுத்திவிடாதே;

நீ
விதைப்பதெல்லாம் -
முளைக்கவில்லையா?
அதற்காக -
விதைப்பதையே -
நிறுத்திவிடாதே;

உன்
உழைப்பு உன்னை -
உயர்த்தவில்லையா?
அதற்காக
உழைப்பதையே -
நிறுத்திவிடாதே;

நம்பிக்கைதான் -
வாழ்க்கையை
நகர்த்திக் கொண்டு போகிறது;

கனி விழாவிடினும் -
கல்லெறிவதை நிறுத்தாதே!

'முயற்சி தன் -
மெய்வருத்தக் கூலி தரும்!'

வள்ளுவம் பொய்க்காது; அதன் -
வாசகம் கைக்காது!









# வள்ளுவரும் மருத்துவமும்

மருத்துவம் பற்றிய தமிழரின் சிந்தனைகள் காலப் பழமையான நோயை எதிர் கொள்வதினும் நோய் வாராது காப்பதுவே அவர்தம் குறிக்கோளாக இருந்தது. அதனால்தான் மருந்தென்று தலைப்பிட்டும் அந்த அதிகாரத்தில் வள்ளுவப் பெருந்தகை நோய்த்தடுப்புச் சிந்தனைகளுக்கே முதலிடம் தந்துள்ளார். இன்றளவும் உலகளவில் நோய்த்தடுப்புக்கு ஆதாரவித்தாகக் கருதப்படுவது உணவுதான். வளர்ச்சியடைந்த நாடுகள் வலியுறுத்தும் பாதுகாப்பு மருத்துவத்தின் தலையாய மூன்று அடிப்படைகளுள் உணவு முதன்மையானது.

இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் மேம்பாடு, ஆய்வுகள் நடத்திக் கண்டுபிடித்துக் காட்டியிருக்கும் இந்த உண்மையை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழறிஞர் ஒருவர், அனுபவநோக்கால், ஆறிரண்டு பன்னிரண்டு வரிகளில் அறிவுறுத்தியிருப்பது தமிழர்தம் மருத்துவ அறிவின் செம்மாந்த நிலையைக் காட்டுவதாக அமைந்துள்ளது. வள்ளுவர் வகுத்திருக்கும் உணவுக் கோட்பாடுகள் எளிய வழி காட்டல்களே. ஆனால் ஆழமான ஆய்வுப் பின்புலம் கொண்டவை; அறிவியல் உண்மைகளாய் விளைந்தவை.

## உண்பதைப் போற்றியுண்க

உடலுக்கு மருந்து தேவையில்லை; நோய் வந்தால்தானே மருந்து; நோய் வாராதிருக்கு மாறு உடலை வைத்துக்கொள்ள எவ்வழி சாலச் சிறந்தது? 'அருந்தியது போற்றி உணின், அற்றது போற்றி உணின்' என்று இரண்டு வழிகள் வள்ளுவப் பெருந்தகையால் காட்டப்பட்டுள்ளன. எதை உணவாய்க் கொள்கிறோமோ, அதைப் போற்றி உண்ணல் வேண்டும். 'தினமும் இட்லிதானா?' என்று சலித்துக் கொள்வதைவிட, 'நாளும் இட்லி கிடைக்கிறதே' என்று மகிழ்தலோடு, 'உளுந்திலுள்ள புரதமும், அரிசியிலுள்ள மாவுச்சத்தும், வைட்டமின்களும், தாது உப்புகளும் நம்மை வலிமைப்படுத்த, நம் வாழ்வு நலவாழ்வாகச் சிறக்க, இட்லியாய் வடிவெடுத்து வந்துள்ளன' என்ற சத்தான எண்ணத்தோடு காலையுணவு ஏற்கவேண்டும்.

விருப்பமின்றி உண்ணும்போது, சரியான உணர்வுத் தூண்டல்கள் கிடைக்காமையால் செரிமான நீர்கள் தேவையான அளவில் சுரப்பதில்லை. அதனால் உண்ணும் உணவு, அது எத்தனை எளிமையான உணவாக இருந்தாலும் முழுமையாகச் செரிக்கப்படாமல், அதன் சத்துக்கள் உடலைச் சேராதொழிவது ஒருபுறமும், குறைச்செரிமானத்தால் வயிற்றழற்சி ஒருபுறமும் எனத் தீங்குகளை விளைவிக்கிறது. 'விருப்பத்தோடு உண்ணுதல்', உணவருந்துதலில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. உண்ணுதலில் உணர்வுகள் வகிக்கும் இந்த ஆளுமையை நன்கறிந்தே வள்ளுவர், 'அருந்துவது போற்றி உண்க' என்றார்.

## செரித்தமை அறிந்து உண்க

உண்ட உணவு செரிப்பது மிக முக்கிய மானது. இந்தச் செரிமானம் உணவைக் கொள்ளும்போதே தொடங்கிவிடுகிறது. வாய், இரைப்பை, சிறுகுடல் என உணவுப் பாதையின் பல இடங்களில் நிகழும் இந்தச் செரிமானம், கொள்ளும் உணவைப் பொறுத்துக் காலம் எடுத்துக் கொள்கிறது. ஏறத்தாழ மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் செரிமானமாகும் உணவின்

இரா. கலைக்கோவன்



சத்துக்கள் குடலுறிஞ்சிகளால் ஏற்கப்பட்டு இரத்தத்தோடு கலந்து செல்களைச் சென்றடைகின்றன.

இந்தச் செரிமானத்தின் சிறப்பறிந்த வள்ளுவர், 'ஒரு முறை உணவு உட்கொண்ட பிறகு, அடுத்த உணவை எப்போது கொள்ளலாம்' என்ற கேள்விக்கு விடையிறுக்கும்போது, 'முதலில் உண்ட உணவு செரித்த பிறகு' என்று மறுமொழிக்கிறார். இதைத்தான் அவரது 'அற்றது போற்றி உணின்' சுட்டுகிறது. செரித்ததை அறிந்து உண்டால் உடலுக்கு மருந்து தேவையில்லை. இன்றைய உணவியல் அறிஞர்களும் நெடுநாள் வாழும் வழியாக, நோயின்றி வாழும் வழியாக இதைத்தான் அறிவுறுத்துகிறார்கள்.

## துவரப் பசித்துப் பின் துய்க்க

செரிமானம் நிறைவுற்றதை எப்படி அறிவது? உண்ட உணவைச் செரித்தனுப்பிய உணவுப் பாதை உறுப்புகள், அடுத்த உணவைக் கொள்ளத் தயாராகும் நிலையே 'பசியாக' உணர்த்தப்படுகிறது. 'பசித்துப் புசி' என்ற சொற்றொடர் பொருள் பொதிந்தது. பசியின் காரணமாய் விளையும் உணர்வுத் தூண்டல்கள் செரிமான நீர்களைச் சுரக்கும் சுரப்பிகளை உற்சாகப்படுத்தி, அடுத்துவரும் உணவின் தேவைக்கேற்ப உரிய நீர்களைச் சுரக்குமாறு செயற்படுத்துகின்றன. 'பசி' எனும் தேவை, உணவுச் செரிமானத்தின் முடிவில் படிப்படியாய் வளர்வது — பசியெனும் தேவையின் தொடக்கத்திலேயே அடுத்த உணவைக் கொள்ளவேண்டியதில்லை. நன்கு பசித்ததும், தேவை தெளிவாக உணர்த்தப்பட்டதும் அடுத்த உணவை ஏற்றால் போதுமானது. இதைத்தான் 'துவரப் பசித்துத் துய்க்க' என்னும் கோட்பாடு வலியுறுத்துகிறது. துவரப் பசித்த பின் உண்பது மகிழ்வு தருவது, நலம் விளைவிப்பது என்றறிந்தமையால்தான் அப்படி உண்ணும் செயலைத் 'துய்க்க' என்ற சொல் கொண்டு குறித்தார் வள்ளுவப் பெருந்தகை. 'துய்த்தல்' மிக மேன்மையான நுகர்வின்பத்தைக் குறிக்கும் ஆழமான, பொருளமைந்த தமிழ்ச்சொல். அதை உணவருநதுதலுக்கு வள்ளுவர் ஏன் தந்தார் என்பதைத் துவரப் பசித்து உண்பவர்கள் அனுபவத்தால் துய்த்தறிவர்.



## அளவறிந்து உண்க

செரித்த பின், பசியுணர்வு அறிந்து அடுத்த உணவு கொள்ளலாம் என்று வழிகாட்டும் வள்ளுவர், அங்கும் ஓர் எச்சரிக்கையை முன்வைக்கிறார். 'அளவு' எல்லாவற்றிலும் இன்றியமையாதது. அளவு தெரியாத வாழ்க்கை அவலத்தில் முடிந்துவிடும். அதனால்தான் 'ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு' எனும் தமிழ்ச் சிந்தனை பிறந்தது. அதன் காரணமாகவே பொருள் போற்றி வழங்கும் நெறி சுட்டுமிடத்து வள்ளுவரும், 'ஆற்றின் அளவறிந்து ஈக' என்று, அறஞ்செயுமிடத்தும் அளவின் இன்றியமையாமையை அறிவுறுத்துகிறார். 'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றாக் கெடும்' என்பதும் வள்ளுவச் சிந்தனைதான்.

இந்த 'அளவு' என்ற சொல் எதைக் குறிக்கிறது? பசியின் அளவையா? கொள்ளவேண்டிய உணவின் அளவையா? இரண்டையுமே என்று கொள்வதுதான் சாலப்பொருந்தும். வள்ளுவம் 'தீயளவு' என்ற சிந்தனையையும் முன்வைக்கிறது. 'தீயளவின்றித் தெரியான் பெரிதுண்ணின் நோயளவின்றிப் படும்'. 'படுதல்' எனும் சொல் இறத்தலைக் குறித்தது. தீயின் அளவு தெரியாமல் தேவைக்கு மேல் உணவு உட்கொள்பவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி உயிரிழப்பர் எனும் பொருளிலமைந்த இச்சிந்தனை குறிக்கும் தீயளவைப் பசித்தீயின் அளவாகவும் கொள்ளலாம், உடலுக்குத் தேவையான வெப்ப அளவைச் (கலோரி) சுட்டும் உணவளவாகவும் கொள்ளலாம். வள்ளுவருக்குக் கலோரி தெரியுமா? கலோரி என்ற சொல் அவர் காலத்து இல்லைதான். ஆனால் உணவின் அருமை பற்றியும் அதன் செரிமானம், தேவை, பயன்பாடு, ஒவ்வாமை என உணவுத் தொடர்பான அனைத்து அறிவியல் உண்மைகளையும் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருந்த உணவியல் மேதையாக, மருத்துவ அறிஞராக வெளிப்படும் வள்ளுவர், கலோரி என்ற சொல்லால் இன்றைய அறிவியல் எதைச் சுட்டுகிறதோ, அதைத்தான் 'தீ'யென்ற சொல்லால் சுட்டியுள்ளார்.



உணவியலின் இன்றைய சிந்தனை, குறைந்த கலோரி குறைந்த கொழுப்பு உணவே நலம் காக்கும் என்கிறது. பல்வேறு ஆய்வுகளுக்குப் பின் தரப்பட்டிருக்கும் இவ்வறிவூட்டல், வள்ளுவத்தின் காலத்தால் முற்பட்ட உணவுக் கோட்பாடுகளின் உண்மைத் தன்மைக்கு உரைகல்லாகின்றது. ஒரு மனிதன் அவன் சார்ந்த பணிச்சூழல்களில் இயல்பாகச் செயற்படுவதற்குக் கொள்ள வேண்டிய உணவளவை உடலமைப்பு, பணித்தேவை, வாழுமிடம் கொண்டு நிர்ணயிக்கிறார்கள். அமர்ந்து பணியாற்றுபவர்கள் **2,400** கலோரியும், உடல் உழைப்பு மிக்கவர்கள் **3,900** கலோரியும் த்ரக்கூடிய உணவைக் கொள்ளவேண்டும். பெண்கள் பேறு காலத்தில் **2,400** கலோரியும் பிற காலத்தே **1,900** கலோரியும் தரக்கூடிய உணவைக் கொள்வதே நலம் பயக்கும். இவ்வளவுகளைப் பற்றிக் கவலைப்படாது, இவற்றினும் குறைவாகவோ அல்லது மிகையாகவோ உண்பவர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவது கண்டுகூடு.

நன்கு பசித்திருக்கும் நிலையிலும், தனக்குரிய அளவு உணவையே ஒரு மனிதன் உட்கொள்ளவேண்டும். அதுவே அவன் உடலை நீண்டகாலம் நலத்தோடு காப்பாற்றும் வழியாகும்.

## மாறுபாடு இல்லாதன உண்க

பல்வேறு வகையான ஒவ்வாமைகளில் உணவு ஒவ்வாமை குறிப்பிடத் தக்கது. எல்லாரும் எல்லா வகையான உணவுகளும்



கொள்ள முடியாது. சிலருக்குச் சில உணவுகளை உட்கொண்டால் உடனே அழற்சியோ, ஒவ்வாமை வெளிப்பாடுகளோ, வாந்தியோ, வயிற்றுப் போக்கோ ஏற்படும். ஏற்கனவே நோயுற்றிருப்பவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டு குணமடைந்தவர்களுக்கும் மருத்துவர்கள் உணவுக் கட்டுப்பாடுகள் விதிப்பதுண்டு. நீரிழிவு நோயுள்ளவர்கள் சர்க்கரை, கிழங்குகள், இனிப்பு வகைகள், மாவுச்சத்து அதிகமுள்ள பழங்கள் கொள்ளக்கூடாது. இரத்த அழுத்தம், இதய நோய் உள்ளவர்கள் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அறவே தவிர்க்கவேண்டும். வறுவல் வகை உணவுகள் இவர்களுக்குக் கூடாது. இவையெல்லாம் நலத்தில் மாறுபாடுகளைத் தோற்றுவிப்பன என்பது வள்ளுவம். அதனால் பசித்துண்ணும்போது, அளவறிந்து உண்பதோடு, மாறுபாடில்லாத உணவாகக் கொள்ள வேண்டும். 'மாறல்லது துய்க்க' என்னும் சொற்களால், உடலுக்கு ஏற்புடைய, நலத்திற்கு உரிய உணவுகளைக் கொள்ள வழிகாட்டும் வள்ளுவப் பெருந்தகை, அதை ஒழுங்கு நெறியாகக் கொள்ளவேண்டுமென்பதை அறிவுறுத்தலே 'கடைப்பிடித்து' என்ற சொல்லையும் பெய்து வைக்கிறார்.

***அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல***
***துய்க்க துவரப் பசித்து.***

**மறுத்துண்க**

விருந்தூட்டல் தமிழர் பண்பாடு. செவ் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பழக்கத்தில் ஊறியவர்கள் தமிழர்கள் என்பதை நன்கறிந்திருந்த நிலையில்தான், இந்நாளைய உணவியலாளர்கள் கூடச் சிந்தித்துப் பார்த்திராத ஓர் அரிய கருத்தை உணவியல் கோட்பாடாக முன்வைக்கிறார் வள்ளுவப்பெருந்தகை. விருந்துக்கு ஆட்படுவாருள் நோய் வயப்பட்டவரும் இருப்பர். நோய் தீர்ந்து நலம் வளர் நிலையில் உள்ளாரும் இருப்பர். அளவாய்க் கொள்ளவேண்டும், ஏற்புடையனவே கொள்ளவேண்டும் என்று மருத்துவர்களால் அறிவுறுத்தப்பட்டோரும் இருப்பர். விருந்தூட்டுபவர்கள் இவர்தம் நிலையறியாதிருக்கலாம்; அல்லது நிலையறிந்தும், 'ஒருநாள்தானே, ஒன்றும் ஆகாது, கொள்ளலாம்' என்ற எண்ணத்தில் ஆகாதனவற்றைக்கூட அள்ளியிடும் ஆர்வத்தோடு செயற்படலாம். இத்தகு போக்குகளையெல்லாம் உணர்ந்தவராகவே வள்ளுவர், விருந்தோம்பல் பேசியவரல்லவா, மிகுந்த எச்சரிக்கையோடு நடந்துகொள்ளுமாறு விருந்துண்பவர்களுக்கு வழிகாட்டுகிறார்.

மாறுபாடு இல்லாத உணவு கொள்க; அதையும் மறுத்துக் கொள்க. தேவைக்கு மேல் வைக்கும்போது தவிர்த்துவிடுக. 'மறுப்பது' மரியாதைக் குறைவல்ல. நலவாழ்வு அவரவர் கைகளில்தான் உள்ளது. அதனால் நமக்கு எவை தேவையோ, எவ்வளவு தேவையோ, அவற்றை அந்த அளவில் கொள்வோம். அவற்றிற்கு மாறுபட்டனவோ, மிகுதி பட்டனவோ, வழங்கப்படும்போது மறுத்துவிடுவதே சால்புடையது. அதுவே நலம் காக்கும் நல்ல வழி. அதனால்தான் மறுத்துண்பார் உயிருக்கு ஊறுபாடில்லை என்றே உறுதிப்பாடு வழங்குகிறார் வள்ளுவர்.

உண்பது எதுவாயினும் அதை மகிழ்ந்து, மனநிறைவோடு உண்பதும், உண்ட உணவு செரித்தமை அறிந்து, நன்கு பசித்தபிறகு அடுத்த உணவு கொள்வதும், அப்படிக் கொள்ளும் உணவையும் மாறுபாடு இல்லாதனவாகத் தேர்ந்து, நம் தேவைக்கேற்ற அளவில், அதிகம் இடப்படின் மறுத்துக் கொள்வதும் நலம் வளர்க்கும் வழிகளாம். உடம்பு நெடிதுய்க்க, மருந்தில்லாது வாழ வள்ளுவம் வழங்கும் இந்த ஆறு உணவுக் கோட்பாடுகளைத் தான் இன்றைய அறிவியலும் காப்பு மருத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடு முன்வைக்கிறது.

**மருத்துவக் கல்விக் கோட்பாடுகள்**

வள்ளுவம் மருத்துவம் சார்ந்த பல்வேறு சிந்தனைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் நிறைந்த அளவில் கொண்டிருப் பினும் காலங்கடந்து வாழும் அதன்





மருத்துவக் கல்விக் கோட்பாடுகள், அனைத்திலும் தலையாயனவாய்ச் சிறந்தொளிர்கின்றன.

மருத்துவக் கல்வி இன்றைக்கு மிக முன்னேறியிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. நோய்களைப் பற்றிய அறிவும், அந்நோய்களுக்கான காரணிகளைப் பற்றிய தெளிவும், அவற்றை வெல்லக்கூடிய வழிமுறைகளைப் பற்றிய தொடர்ந்த ஆய்வுப்போக்குகளும், அவை வழி எளரும் நலப்படுத்தும் திறனும் என மருத்துவத்துறை இன்று எண்ணிப் பார்க்கமுடியாத வளர்ச்சியை எய்தி, அரிய பல சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிறது.

இப்படி இமயமாய் வளர்ந்து கொண்டிருக்கும் மருத்துவக் கல்வியின் இன்றைய அடிப்படைக் கோட்பாடுகளை இரண்டே அடிகளில் தந்திருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இவ்வடிகளில் வந்து விழுந்திருக்கும் ஒவ்வொரு சொல்லும் பொருள் பொதிந்த சொல்லாகும்.

'நோய் நாடி' என்ற சொற்றொடரை முதலில் பார்ப்போம். மருத்துவக் கல்வியில் நோய் நாடுதலே இன்றைக்கும் தலையாய கோட்பாடாக மதிக்கப்படுகிறது. இந்நோய் நாடுதல் மூன்று உட்பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. நோயாளியின் பொது வரலாறு அவரைப் பற்றியும், அவருடைய மரபு,



இட, வாழ்க்கைச் சூழல்களைப் பற்றியும் அறிய உதவும். நோயாளியை ஆட்கொண்டிருக்கும் நோய் தோன்றி வளர்ந்த வகையும் அது நோயாளிக்குத் தெரியுமாறு ஏற்படுத்தியிருக்கும் உடலநிலை மாறுதல்களும் நோய் வரலாறாகப் பெறப்படும். நோயாளியின் உடலில் நோய் ஏற்படுத்தியிருக்கும் உள்ளார்ந்த அறிகுறிகள்



பொது ஆய்வின் கீழ் அறியப்படும். இம்மூன்றின் திரண்ட தரவுகள் கொண்டே நோயாளியை ஆட்கொண்டிருக்கும் நோய் எத்தகையது, எந்தப் பிரிவைச் சார்ந்தது என்ற முடிவுகளுக்கு மருத்துவரால் வரமுடியும். நோய் நாடல் இல்லாமல் மருத்துவமில்லை என்பதால்தான் மருத்துவக் கல்வியின் முதல் பண்பாக அதை நிறுத்தியுள்ளது வள்ளுவம்.

நோய்நிலை அறிந்தபிறகு அந்த நோய்க்கான காரணியைக் கண்டறிய வேண்டும். நோய் முதல் அறியாத மருத்துவரால் நோயைக் களையும் மருத்துவத்தைச் செய்யமுடியாது. உயிர் வேதியியல், நுண்ணுயிரியல் நுண்மியல், நோய் இயங்கியல் என்னும் நான்கு பெரும் மருத்துவத் துறைகளும் நோய்முதல் நாடலுக்காகவே செயற்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் துறைகளோ, இவற்றைப் பற்றிய தெளிவோ இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் 'காரணியைக் காண வேண்டும்' என்ற நிலையில் இத்துறைகளின் முதற்படிகளை மனித மனங்கண்டு, வளர்ச்சி நிலைகளை அவாவியுள்ளதைத்தான், வள்ளுவரின் 'நோய் முதல் நாடி' நமக்கு உணர்த்துகிறது. கிரேக்க ஞானி ஹிப்போகிரேட்ஸின் மருத்துவச் சிந்தனைகளை வள்ளுவம் இந்நிலைகளில் பெரிதும் ஒத்துப் போகிறது.

தொண்ணூறுகளில் இணையற்ற வளர்ச்சி கண்டிருக்கும் ஆய்வுக்கூட நெறிகளும், கருவிகளும்கூட நோய்முதல் நாடுதலில் அடைக்கலமாகிவிடும். இதய மின்னலை வரைபடம், எக்ஸ் கதிர்ப்படம், மூளை மின்னலை வரைபடம் என்று தொடங்கி எக்கோ, ஸ்கேன் என அத்தனைக் கருவிகளும், அமைப்புகளும் நோய்க் காரணம் காணவே பயன்படுகின்றன, முயற்சிகள் பெருகியிருக்கின்றன; முறைகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் நோய்முதல் நாடலெனும் அடிப்படைக் கொள்கையில் மாற்றமேயில்லை. இன்னும் சொல்லப்போனால் அந்தக் கொள்கையின் பரந்துபட்ட பரிணாம வளர்ச்சியே இன்றைய அறிவியல் முதிர்ச்சி. நோயையும், அதன் காரணியையும் அறிந்த பிறகு நோய்த் தணிக்கும் வழிநாடுதல்தானே முறை. அதனால்தான் மருத்துவக் கல்வியின் அடுத்தபடி நிலையாக நோய் நீக்கும் வழிநாடலை வள்ளுவம் கொண்டுள்ளது. இங்கும்கூட நோய் தணிக்கும் மருந்து நாடி என்று சுட்டாமல், நோய் தணிக்கும் வாய்நாடி என்று பொதுநிலையில், நோய் தவிர்ப்பு முறைகள் அனைத்தையும் அகப்படுத்தி வள்ளுவர் பெய்திருக்கும் வாய்நாடி எனும் சொற்றொடரின் பொருளாழம், அந்தத் தமிழ்நெஞ்சின் அறிவார்ந்த சிந்தனைகளின் முத்தாய்ப்பாகக் கொள்ளத்தக்கது.

தொற்றுநோய்களுக்கு முனைப்பான மருத்துவம் தேவை. நாள்பட்ட நோய்களுக்குத் தொடர்ந்த மருத்துவம் இன்றியமையாதது. சில நேரங்களில் மருத்துவம், மருந்து மாத்திரைகளுடன் நிற்கும். சிலபோதுகளில் ஊசிகள், அறுவை எனத் தொடரும். உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு கூடச் சில நோய்களுக்கு மருத்துவ முறைகளாகும். இரத்த உயர் அழுத்த நிலையில் உணர்வுக் கட்டுப்பாடு, அமைதி காணல், ஆழ்நிலைத் தியானம் என்பன அறிவுறுத்தப்படுகின்றன. 'வாய் நாடல்', இதனால் பல்நோக்குடையதாய் உருப் பெறுகிறது. மருத்துவம் வளர்நிலைகளைக் கண்டு பல்கிப் பெருகிவிடும் என்பதை அந்நாளிலேயே வள்ளுவர் உணர்ந்திருந்தமையால்தான், மிகச் சுருக்கமான மருத்துவமுறைகளே அமைந்திருந்த இரண்டாம் நூற்றாண்டில் இப்படியொரு முன்னோக்குச் சிந்தனை கொள்ள முடிந்தது.

நோய் நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடிய பிறகு செய்யப்படும் மருத்துவம், வாய்ப்பச் செய்வதாக அமைய வேண்டும். இங்கு 'வாய்ப்ப' எனுஞ்சொல் நோயாளியை நோக்கி நிற்கிறது. நோய் தீர்க்கும் வழி இது எனத் தெரிந்தபிறகும், அந்த வழி நோயாளிக்கு வாய்ப்பானதா என்பதில் அக்கறை வேண்டும். ஒரு நோய்க்கு ஊசி மருத்துவம் தேவையானதாக இருக்கலாம். அதே சமயம் மருந்து மாத்திரைகளாலும் அந்நோய் தீர்க்கக்கூடியதாக இருப்பின் நோயாளியின் வாய்ப்பறிந்து, எது அவருக்கு உகந்ததோ, அம்முறையைக் கைக்கொளல் வேண்டும். அதுபோலவே ஒவ்வாமை;



பலருக்கும் பல பொருள்களுக்கு ஒவ்வாமை உண்டு. பெனிசிலின் ஒவ்வாமை, சல்பா ஒவ்வாமை என்று மருந்துகளுக்கு ஒவ்வாமை மட்டுமல்ல; சிலருக்கு ஊசி போட்டால் ஊசி போட்ட இடம் சிவந்து விடும். இது ஊசியிலுள்ள உலோகத்துக்கு மனித உடல் காட்டும் ஒவ்வாமை வெளிப்பாடாகும். போட்ட ஊசியை எடுப்பதற்கு முன்பே மருந்து ஒவ்வாமையால் இறந்தவர்கள் உண்டு. அதனால் தான், வள்ளுவர் மிகமிக எச்சரிக்கையாக 'வாய்ப்பச் செயல்' என்று அறிவுறுத்துகிறார்.

மருத்துவத் துறையின் அடிப்படைத் தூண்களாக நோயுற்றவர், அவர் நோயை ஆராய்ந்து, கண்டறிந்து நலப்படுத்தும் மருத்துவர், அதற்காகத் தரப்படும் மருந்து, நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையில் நின்று இருவர்க்கும் உதவிடும் துணைவர் ஆகிய நால்வரையும் சுட்டும் வள்ளுவர், 'கற்றான்' என்ற சொல்வழி, அந்நாளில் மருத்துவநூல்கள் இருந்தமையையும் அவற்றைப் பழுதறக் கற்றவர்களே மருத்துவர்களாக அறியப் பட்டார்கள் என்பதையும் தெளிவாக்குகிறார். முறைப்படி பயின்ற மருத்துவர்கள் நோயுற்றவரின் அளவு, நோயின் அளவு, அந்நோய் நோயுற்றாரை ஆட்கொண்ட கால அளவு எனும் மூன்றையும் கருதியே மருத்துவம் மேற்கொள்வர். நோயுற்றவரின் அளவு என்னும் சொல்லாட்சி, நோயுற்ற மனிதரின் பொதுநல நிலையைக் குறிக்கிறது. நோய் எந்த உறுப்பைத் தாக்கியிருக்கிறது என்பதையறிவது நோயளவு. இந்த இரண்டுடன் நோய்க் காலமும் அறிந்த பிறகே மருத்துவம் தொடங்கும். இன்றைக்கும் மருத்துவமுறை இதுதான்.

உணவு, உழைப்பு இவ்விரண்டினுள் எதுமிகுந்தாலும், குறைந்தாலும் வளி, பித்தம், சளி காரணமாய் நோய் வந்துறும் என்ற வள்ளுவச் சிந்தனை, கிரேக்க மருத்துவ ஞானி ஹிப்போகிரேட்டஸின் சிந்தனையை ஒத்தது. பித்தம், உணவுப் பாதை நோய்களையும், சளி, மூச்சுப்பாதை நோய்களையும் தோற்றுவிக்க வல்லன. வளி இவ்விரு பாதைகளையுமே பாதிக்க வல்லது. இதயம், மூளை ஆகியவற்றின் செயற்பாட்டிற்கும் வளி இன்றியமையாதது. உடலின் எந்தவொரு செல்லும் வளியின்றி வாழாது. இந்நுட்பங்களையெல்லாம் அறிந்த மருத்துவப்பெருந்தகைகள் அவற்றை அரிய பல நூல்களாக ஆக்கிவைத்திருந்ததை 'நூலோர்' எனும் சொல்லாட்சியில் குறிக்கிறார் வள்ளுவர்.



## காப்பு மருத்துவம்

வருமுன் காத்தலே நலவாழ்வின் அடிப்படைக் குறிக்கோள். இன்றைக்கு உலகெங்கும் **'Preventive Medicine'** என்ற பெயரில் இதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார்கள். மருத்துவக் கல்வித்திட்டத்தில் காப்பு மருத்துவத்திற்குச் சிறப்பிடம் தரப்பட்டுள்ளது. ஒரு தனிப்பாடமாகவே அது கற்றுத் தரப்படுகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு தளத்திலும் தேவைப்படும் இந்தக் காப்புணர்வு பற்றி வள்ளுவமும் கருத்துக்களை முன்வைத்துள்ளது. குற்றம் கடிதல் அதிகாரத்தில் இடம்பெறும் இரண்டு குறட்பாக்களும் மனித நலவாழ்விற்கு வள்ளுவம் வழங்கியிருக்கும் சிந்தனைக் கொடைகள். வருமுன்னர்க் காத்துக் கொள்ளாதான் வாழ்க்கை கொழுந்து விட்டெரியும் தீயின் முன்வைத்த வைக்கோல் போலக் கருகிச் சாம்பலாகும் என்ற எச்சரிக் கைக்குரலும், வரக்கூடிய ஒன்றை அறிந்து, அதனின்றும் தம்மைக் காத்துக்கொள்ளும் அறிவுடையார்க்கு எந்நாளும் துன்பமில்லை என்னும் உறுதிப்பாட்டோடு கூடிய நம்பிக்கையளிப்பும் காப்பின் இன்றியமையாமையை வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களுக்குமாய் வலியுறுத்துகின்றன.

மருத்துவ உலகின் தந்தையாகக் கருதப்படும் கிரேக்கப் பேரறிஞர் ஹிப்போகிரேட்டஸின் கருத்துக் குவியலில் கூடக் காணப்படாத இந்தக் காப்புச் சிந்தனை, உலகிற்கே தமிழர் கொடையாக வள்ளுவம் வழி வழங்கப் பட்டிருப்பது பெருமைக்குரியது. இந்நாளில் மட்டுமல்லாது எந்நாளிலும், மனிதன் என்றல்லாது அனைத்து உயிர்களின் நலவாழ்விற்கும் வள்ளுவக் காப்புச்



சிந்தனைகள் பொருத்த முடையனவாக, ஏற்புடையனவாக விளங்கும் என்பது கண்கூடு.

## மனநலச் சிந்தனைகள்

உடல் நலம், உளநலம் இரண்டும் இணையும் போதுதான் நலவாழ்வு கூடும். உடல் நலத்தைப் போற்றுதல் எத்தனை முக்கியமோ அத்தனை முதன்மையானது உளநலம் போற்றுவதும். இன்றைக்கு நம்மிடையே பெருகிவரும் முதியோர் இல்லங்களும், அனாதைக் காப்பகங்களும், மனநோய் மருத்துவமனைகளும் வாழ்க்கையின் விரைவுப் போக்குகள் உண்டாக்கியிருக்கும் மனநலச் சீரழிவின் விளைவுகளெனலாம். மனநலம் தனியரைப் பொறுத்தும், சூழலைப் பொறுத்தும் அமைவதாகும். பெரும்பாலும் சூழல்தான் மனநலனை உருவாக்குவதில் பேரங்கம் வகிக்கிறது. இந்தச் சூழலை சரியானதாக, வளம்மிக்கதாக உருவாக்கிக்கொள்வது நம்மிடம் தானுள்ளது. சிற்றினஞ் சேராமை என்றொரு அதிகாரத்தையே வள்ளுவர் படைத்தது மனநலத்தின் முக்கியத்துவம் கருதிதான். 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்' என்ற அவரது அறிவிப்பு அனுபவபூர்வமானது.

மனநலம் காக்கும் வழிகளுள் தலையாயது சிற்றினஞ் சேராமையே என்று அழுத்தமாகக் கூறும் வள்ளுவர், மனநலம் வளர்க்கும் முறைகளையும் ஆங்காங்கே பல அதிகாரங்களில் பகிர்ந்து கூறியுள்ளார். எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு அவ்வதுறைவது அறிவு, ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும், பிறன்மனை நோக்காத பேராண்மை ஒழுக்கு, உலகம் பழித்தது ஒழித்துவிடு, சினம் காக்க; காவாக்கால் கொல்லும் சினம், யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல் அதனின் இலன், மெய்ப்பொருள் காண்பதறிவு, வேண்டாமை விழுச்செல்வம், பெரியாரைப் பேணித் தமராகக் கொளல், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், இடுக்கண் வருங்கால் நகுக, நட்பு ஆய்ந்து கொளல், உண்ணற்க கள்ளை, அச்சம் கீழ்களது ஆசாரம் என்பன போன்ற வழிகாட்டல்கள், அறிவுரைகள், வலியுறுத்தல்கள் வள்ளுவம் எங்கும் காணக் கிடக்கின்றன.

உடல் நலத்தை ஓர் அதிகாரத்தில் 'உணவு' கொண்டு முடிக்கும் வள்ளுவர், உளநலம் பற்றிப் பேசும்போது மட்டும் ஏன் இவ்வளவு முன்னெச்சரிக்கையோடு ஒவ்வோர் அதிகாரத்திலும் மனவளச் சிந்தனைகளைப் பெய்து வைக்கவேண்டும் என்ற கேள்வி இயல்பானதே. உடல்நலக்கேடுகள் மிக எளிதான தீர்வுகளில் சரிப்படக் கூடியவை. அவற்றிற்கு மருந்துபோதும். அந்த மருந்து உணவு, பயிற்சி, மருத்துவம் எனும் மூன்றனுள் ஒன்றாகவோ அல்லது மூன்றுமிணைந்தோ அமையலாம்.

ஆனால் உளநலக்கேடுகள் வாழ்க்கையை உருக்குலைத்துவிட வல்லன. ஓர் எளிய உளத்திரிபு கூட ஒரு தனியரின் ஆளுமையைப் பெருமளவில் பாதித்து விடக்கூடும். தோன்றுவதும் தெரியாமல், வளர்வதும் தெரியாமல் நிலைப்படும் உளநிலைத் திரிபுகள் ஆட்கொல்லியாய்ச் செயற்படுவன என்பதறிந்தே, அவற்றைத்தோன்றி, வளர்ந்த நிலையில் சீர்மை செய்தல் அத்தனை எளிமையானதல்ல என்பதும் உணர்ந்தே, வள்ளுவம் மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் என்று முழங்குகிறது. அம் மனநலம் காக்கும் வழிகளையும் நூலெங்கும் தொகுத்துத் தந்து உள்ளது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது தமிழர் நம்பிக்கை. அந்த மரபார்ந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்க்கையை நெறிப்படுத்த விழைந்த வள்ளுவம், அந்த வாழ்க்கைக்கு அடிப்படையான உடல் நலம், உளநலம் இரண்டிலும் பற்றுக்கொண்டு, அவற்றைக் காக்கும் வழிகளில் கருத்துச் செலுத்தியுள்ளது. வள்ளுவம் வரையறுத்திருக்கும் மருத்துவக் கோட்பாடுகளும் வழங்கியிருக்கும் நலச் சிந்தனைகளும் மனிதவாழ்வின் காப்புக் கவசங்கள். கருத்தோடு பின்பற்றினால் நலவாழ்வு நாளும் நமக்காகும். ❀





# திருக்குறளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

சுந்தரா. ஆவுடையப்பன்

எது சலித்துப்போகாமல் இருக்கிறதோ, அது வாழ்கிறது என்று பொருள். எது நம்மைச் சலிப்படையாமல் வைத்திருக்கிறதோ அது நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கிறது என்று பொருள். ஓர் இலக்கியம் வாழ்கிறது என்றால் அது மனிதகுலத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிறது; வாழ்க்கைக்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொண்டே இருக்கிறது என்று பொருள். அந்த வகையில் தமிழில் ஈராயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை விளக்க நூல் திருக்குறள்.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பர். நல்ல இலக்கியம், தோன்றும்போது தோன்றிய காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்தாலும் அது, காலநிலைகளைக் கடந்து வாழும்போது, ஒவ்வொரு நிகழ்காலத்திலும் அவ்வக்காலத்தின் முகம் விளக்கும் கண்ணாடியாகவும் பரிணாமம் பெறுகிறது. காலம், அந்த இலக்கியக் கண்ணாடி வழிக் கண்டு முகம் திருத்திக் கொள்ளவும் செய்கிறது. அதனால்தான் வாழும் வள்ளுவத்தின் நிலைத்த தன்மையை நோக்கி, "எல்லாப் பொருளும் இதன்பால் உள" என மதுரைத் தமிழ் நாகனார் திருவள்ளுவ மாலையில் போற்றுகின்றார்.

இன்று உலகை அச்சுறுத்தும் பல சிக்கல்களுக்கும் திருக்குறளில் தீர்வு இருக்கிறது. அதனைத் தேடிப் பெற்றுக்கொள்வதே வாழும் மனித அறிவாண்மைக்கு அடையாளம்.

அண்மைக் காலத்தில் மனிதகுலத்தையே அச்சுறுத்தி வரும் மிகப் பெரிய அறிவியல் ஓலமாகச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திகழ்கிறது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க உலக நாடுகளெல்லாம் ஒன்றுகூடித் திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குறித்த சிக்கல்களுக்குத் தீர்வுமுகம் காண வள்ளுவக் கண்ணாடியை இக்கட்டுரை கூர்ந்து நோக்குகிறது.

## சுற்றுச்சூழல்

நீர், நிலம், காற்று, வானம் ஆகிய இயற்கை வளங்களுக்கும், மனிதன், பிற உயிரினங்கள், நுண்ணுயிர்கள் ஆகியவற்றிற்கும் இடையே உள்ள தொடர்புகளைப் பற்றி விரிவாகச் சிந்திப்பதே சுற்றுச்சூழல் சிந்தனை ஆகும். தொடர்புகள் சமன்பாடாக இல்லாமல், சமன்பாடு குறையும்போது சுற்றுச்சூழல் மாசுபடுகிறது; இயற்கை வளங்களில் சீர்கேடு ஏற்படுகிறது; அதனால் மனிதகுலத்தின் இருப்புக்கான அச்சுறுத்தல் பெரிய ஓலமாக மாறுகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கெனத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன; திட்டங்களை உறுதியாகச் செயல்படுத்தச் சட்டங்களும் உருவாக்கப்படுகின்றன.

இந்த வகையில்,

1. வன உயிரினப் (பாதுகாப்பு) சட்டம் **(1972)**
2. நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் **(1974)**



3. வனப் பாதுகாப்புச் சட்டம் (1980),

4. காற்று (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1981)

5. சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் (1986)

6. பொதுப் பொறுப்புக் காப்பீடு சட்டம் (1991)

எனச் சிறப்புச் சட்டங்களை இந்திய அரசமைப்பில் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்தச் சட்டங்களை நாம் மனிதர்களுக்காக எற்படுத்தியிருக்கிறோம். இயற்கை வளங்களான வானத்திற்கோ, நிலத்திற்கோ, நீருக்கோ, மரங்களுக்கோ, மலைகளுக்கோ ஏற்படுத்தவில்லை. ஏனெனில், யாரால் கேடு உண்டானதோ அவரால்தான் ஆக்கமும் உண்டாக வேண்டும். 'கேடும் ஆக்கமும் எய்துதற்குரியர் மக்கள்' என்பார் பரிமேலழகர் (குறள் விளக்கம் 15).

*"கேடு அறியாக் கெட்டஇடத்தும் வளம்குன்றா*
*நாடுஎன்ப நாட்டின் தலை"*

*(நாடு–736)*

கேடு வராமலும் கேடு வந்தாலும் அதனைச் சரிசெய்து இயற்கை வளம் குன்றாமல் காத்துக் கொண்டும் இருக்கின்ற நாடே நாடுகளுக் கெல்லாம் தலைமையானது என்பது வள்ளுவக் கூற்று.

**சுற்றுச்சூழல் சிந்தனைக்கான தேவை**

இன்று வானத்தில் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்திருக்கிறது. நிலத்தில் அமில மழை பெய்திருக்கிறது. பசுங்கூட விளைவு (Green house effect) பற்றிப் பேசுகிறோம். ஓசோன் படலத்தில் ஓட்டை அதிகரித்தால் சூரியனின் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக மனிதர் முதலான உயிரினங்களைத் தாக்கிக் கேடு விளைவிக்கக் கூடும். பசுங்கூட விளைவினால் பூமியின் வெப்பம் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. துருவப் பனிப் பிரதேசங்கள் உருகவும், கடல் மட்டம் உயரவும், தீவுகள் முதலான நிலப்பரப்புகள் நீரில் மூழ்கவும் அதிக வாய்ப்புகள் உள்ளன.

இம்மாதிரியான விளைவுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் காற்று மாசடைந் திருக்கிறது; நீர் மாசடைந்திருக்கிறது; நிலம் மாசடைந்திருக்கிறது; காடுகள் குறைந்துள்ளன; கடல்வளம் மாசடைந்துள்ளது; மழைவளம் குறைந்துள்ளது; மலைவளம் குன்றியுள்ளது; மரங்கள் குறைந்துள்ளன என்று அடுக்கிக் கூறலாம். இந்த மாசுகளுக்கெல்லாம் அடிப்படைக் குற்றவாளி மனிதன்தான். தொழிற்சாலைகளும் வாகனங்களும் ஏற்படுத்தும் நச்சுப் புகையினால் 'காற்று மாசு' தொழிற்சாலைக் கழிவுகள் நீரில் கலப்பதனால் நதிநீர், கடல்நீர், குடிநீர் மாசு; பிளாஸ்டிக் போன்ற பொருள்களின் பரவலான உபயோகத்தினால் மண்மாசு; காற்று மாசினால் வானம் மாசடைதல் அமில மழை உருவாதல்; மலைகளும் காடுகளும் பசுமை குன்றியதால் மழைக்குறைவு – அதனால் ஏற்படும் நீர்வளக் குறைவு எனப் பல்லாற்றானும் மனிதனின் வளமான வாழ்க்கைக்கு அச்சுறுத்தல்கள் பெருகியுள்ளன.

இந்த அச்சுறுத்தல்களையெல்லாம் வெற்றி காண்பது என்பது மிகவும் எளிது. இயற்கையை நேசிப்பது; இயற்கையோடு இயைந்து வாழ்வது; நகர்மயமாதலை இயற்கையோடு இயையத் திட்டமிடுவது என மரபான நமது முன்னோர் வழி நின்றாலே சுற்றுச்சூழலை மாண்புறப் பாதுகாக்கலாம்.

**சுற்றுச்சூழலும் வள்ளுவமும்**

திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அது எல்லாக் காலத்தும் எல்லா இடத்தும் வாழுகிற எல்லா வகை மக்களுக்கும் பொருந்துகிற கருத்துக்களை வலியுறுத்துகிற பாங்கை முதன்மைக் காரணமாகக் கூறலாம்.

நாடு என்பது எப்படி இருக்கும், இருக்க வேண்டும் என்று இலக்கணம் கூறவந்த திருவள்ளுவர்,

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு"* *(நாடு – 734)*

என்று கூறுகிறார். இயற்கை வளம் குன்றித் 'தள்ளா விளையுள்' இல்லாமற் போகும்போது



பசி ஏற்படுகிறது; உணவின் குறைபாடு, இயற்கை வள மாறுபாடு ஆகியவற்றால் பிணி உண்டாகிறது; பசியும் பிணியும் கொண்ட மக்கள் வலிவும் பொலிவும் குறைந்தவர்களாக ஆகிவிடுவதால், பகைவர்கள் உள்ளே புகுந்து நாடு பிடிக்க அல்லது நாடு குழப்ப ஏதுவாகிறது. ஆகப் பகையும் பிணியும் பசியும் நாட்டில் ஏற்பட இயற்கைவளக் குறைபாடே அடிப்படைக் காரணமாகிறது. அதனால்தான் நாட்டின் உறுப்பைக் குறிக்க வந்த வள்ளுவர்,

*"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்*
*வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு"* *(நாடு 737)*

என்கிறார். மழைநீர், ஊற்றுநீர், ஆற்றுநீர், மலை, அரண் ஆகியவை நாட்டிற்கு உறுப்பாகத் திகழுகின்றன. நீர், இயற்கை வளங்களுக் கெல்லாம் ஆதாரமாகத் திகழுவதால் அதனை மூன்று வகையாலும் முக்கியப்படுத்துகிற வள்ளுவத்தன்மை இங்கு உணரத்தக்கது. 'வாய்ந்த மலை' என்று கூறியதுகூட மழை பெய்வதற்கு மலைகள் மிகவும் உதவி செய்யக்கூடியவை என்ற இயற்கை உண்மையைக் குறிப்பிடத்தான் எனலாம். வலிய பாதுகாப்பு அரணும் இங்கு நாட்டின் உறுப்பாகச் சுட்டப்படுகிறது. 'அரண்' என்பதைப் பாதுகாப்பான கற்கோட்டை என்று ஒருவகையில் நாம் பொருள் கொண்டாலும் அந்த அரண்கூட இயற்கை அரணாக அமைந்திருந்தால் நலம் என்பதே வள்ளுவச் சிந்தை.



*"மணிநீம் மண்ணும் மலையும் அணிநிழல்*
*காடும் உடையது அரண்"* *(அரண் 742)*

ஆழநீர் அகழி, மண்திடல், மலை, அடுக்கிய காடு இவற்றை உடையதுதான் அரண் என்கிறார். இவற்றில் மண்திடல் தவிர்ந்த பிற அனைத்தும் நீர்வளம் சார்ந்தவை. எனவே நீர், நிலம், காற்று, வானம் சார்ந்த எல்லா இயற்கை நிலைக்களங்களையும் பேணுவதே நாட்டுக்குப் பாதுகாப்பு என்பது வள்ளுவர் கூறும் செய்தி எனலாம். இது நாட்டுக்கு மட்டுமல்லாது நாட்டில் வாழுகிற எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு என்பது பெறப்படுகிறது. ஏனெனில் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு எனும் ஐம்பூதங்களின் சேர்க்கைதான் மனித உடம்பு என்பது வள்ளுவக் கோட்பாடு.

*"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்*
*ஐந்தும் அகத்தே நகும்"* *(கூடா ஒழுக்கம் 271)*

வஞ்சமனத்தோடு கூடா ஒழுக்கம் புரிகிற மனிதனைப் பார்த்து அவனது அகத்தே இருக்கிற ஐந்து பூதங்களும் சிரிக்கும் என்பது குறள். எனவே புறத்தே இருக்கின்ற ஐந்து





பூதங்களுமாகிய இயற்கை வளங்கள் தூய்மையாக இருந்தால்தான் அந்த ஐந்து பூதங்களின் கலவையை அகத்தே கொண்டுள்ள மனிதன் நோயற்ற தூயவனாக இருக்கமுடியும்.

## வானும் மழையும்

வானத்தைக் கடவுளர் வாழும் மேலுலகமாகக் காட்டுவது ஆன்மீகத்தில் ஒரு நம்பிக்கை. எண்ணிலடங்கா ஒலியலைகளும் ஒளியலைகளும் வானத்தில் உருவமற்று உலா வருகின்றன; அவற்றிலிருந்து பூமியிலுள்ளோர் பெற்றுக்கொள்வது அறிவியல் விந்தை. மண்ணில் இறப்போரின் உயிர் யாவும் விண்ணில் சென்று சேருவதாகவும் ஒரு நம்பிக்கை உண்டு. பூமியிலிருந்து வெகு உயர்வில் வானம் இருப்பதால் வானம் உயர்வானது என்பதும் ஒரு கருத்து. இந்த எல்லாக் காரணங்களையும் புறம் தள்ளிவிட்டு, "வானம் சிறப்பானது; ஏன் தெரியுமா? அது மழையைத் தருகிறது!" என்ற வளம்தரும் காரணத்தைச் சொன்னவர் — திருவள்ளுவர். திருக்குறளைக் கடவுள் வாழ்த்தோடு தொடங்கியவர் இரண்டாவது அதிகாரமாக மழைவாழ்த்தை வைக்கிறார். அதற்கு 'வான்சிறப்பு' எனத் தலைப்பும் இடுகிறார். "வான்நோக்கி வாழும் உலகம்" (குறள் 542) என்பது வள்ளுவரின் அசைக்கமுடியாத நம்பிக்கை. வானம் பார்த்த பூமியில் சுற்றுச்சூழல் சிறப்புக்கள் யாவும் மழையினாலேயே அமைகின்றன.

*"வானின்று உலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று"*

*(வான்சிறப்பு 11)*

உலகத்தில் உயிர்கள் இடையறாது பிறந்து, தொடர்ந்து வருகிற நிலைத்த தன்மை ஏற்பட மழையே உதவுவதால் அதனை அமிழ்தம் என்று போற்றும் வள்ளுவப் பாங்கு வணங்கத்தக்கது. உலக இயக்கம் என்னும் நிலைபேற்றை மழையே வழங்குகிறது என்பதால் அது சாவாமருந்தாகிய அமிழ்தம் எனப்பட்டது. உண்பார்க்கு நல்ல உணவுகளை உருவாக்குவதோடு, தண்ணீராகித் தானே உணவாகவும் அமைவது மழை (குறள் 12). உணவை உருவாக்கித் தரும் உழவர்களுக்கு விளைபொருளை விட, விளைபொருளை உருவாக்க உதவும் மழையே 'வருமானம்' (வாரி) என்கிறார் வள்ளுவர்.

*"ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்"*

*(வான்சிறப்பு 14)*

முதலீடு இல்லாது தொழில் செய்ய முடியாது; உழவுத் தொழிலுக்கு மழையே முதலீடு என்பது இதனால் பெறப்படுகிறது.

தொடரும் குறளில் 'எல்லாம் மழை' (15) என்று கூறிக் கேட்டுக்கும் ஆக்கத்திற்கும் மழையே காரணம் என்று எச்சரிக்கை செய்கிறார். வானத்தை இவ்வளவு உயர்வாக வள்ளுவர் பாராட்டக் காரணம் என்னவெனப் புகுந்து ஆராய்ந்தால், ஓர் உண்மை நமக்குப் புலப்படும். உலகத்திலேயே மிகவும் ஆற்றல் மிக்க சக்தி என்னவென்றால் அது மழையை உருவாக்கித் தரும் சக்திதான் என்பது வள்ளுவர் தரும் செய்தியாக இருக்கிறது. தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுது எழுகிற பெண் மிக உயர்ந்த ஆற்றல்மிக்க பெண் (குறள் 55) என்பதைக் கூறவந்த வள்ளுவர் அவளுடைய ஆற்றலுக்கு அளவுகோலாக, அவள் பெய்யென்று சொன்னால் மழையும் பெய்யும் என்று சொல்கிறார். இதனை அடியொற்றித்தான் "வான்தரு கற்பின் மனையுறை மகளிர்" (மணிமேகலை) என்றும், "கற்பின் நின்றன காலமாரியே" (கம்பராமாயணம்) என்றும், "மழைக்குதவும் பெருங்கற்பின் மனைவியார்" (பெரிய புராணம்) என்றும் இலக்கியங்கள் கூறுகின்றன.

மழையின்றி மண்வளம் இல்லை; மண்வளமின்றிச் செடிகொடி மரமில்லை; இவையின்றி விளைச்சலில்லை; விளைச்சலின்றி உயிர்





வாழ்க்கை இல்லை; உயிர்வாழ்க்கையின்றி உலகமே இல்லை என்பதால் "நீரின்றி அமையாது உலகு" (குறள் 20) என்பதை வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

"புறந்தூய்மை நீரால் அமையும்" (வாய்மை 298) எனும்போது மனிதனின் உடல்தூய்மை மட்டுமல்லாது சுற்றுச்சூழல் தூய்மையே வானத்தாலும் மழையாலும் அமையும் என்பது பெறப்படுகிறது.

## மழையும் கடலும்

சுற்றுச்சூழல் மாசினால் கடலும் மாசடைகிறது; அதனால் கடல்வாழ் உயிரினங்களும் அற்றுப் போகின்ற வாய்ப்பு உண்டாகிறது என்று சூழலியலார் இப்போது வலியுறுத்தி வருகின்றனர். இந்த உலகம் கடலால் சூழப்பட்டிருக்கிறது. மழையில்லை என்றால் கடல் இருந்தும் பயனில்லை என்பது வள்ளுவர் வாக்கு.

*"விண்இன்று பொய்ப்பின் விரிநீர்*
*வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி"* *(வான்சிறப்பு 13)*



இந்த உலகம் கடலால் சூழப்பட்டது என்ற அறிவியல் உண்மையை விளக்க விரிநீர் வியனுலகம் என்றார் வள்ளுவர்.

*"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்*
*தடிந்தெழிலி*
*தான்நல்கா தாகி விடின்"*

*(வான்சிறப்பு 17)*

கடலால் சூழப்பட்ட உலகில், மழையை உருவாக்க உதவுகிற கடலும் மழை இல்லையென்றால், தான் இயல்பில் குறைந்துவிடும் என்பது இந்தக் குறளின் பொருள். நிலம்வாழ் மனிதனுக்கு உணவாகி உதவுகிற கடல்வாழ் உயிரினங்களும் மழை இல்லை என்றால் அழிந்துபடும் என்பதைக் குறிக்கத் "தன்நீர்மை குன்றும்" என்றார்.

ஆக, மழையைப் போற்றாவிடில் மழைக்கு உதவுகிற கடலும் நமக்கு உதவாதபடி மாசடைந்துவிடும் என்பது வள்ளுவ எச்சரிக்கை.

## மழையும் மரமும்

இன்றைக்குப் பூமியில் உள்ள காற்று மாசையும் ஒலி மாசையும் கட்டுப்படுத்த நிறைய மரங்களை உருவாக்கவேண்டும் என்று முனைந்து வருகிறோம். இவ்விரண்டு மாசுகளையும் குறைப்பதோடு மழைவளம் பெருகுவதற்கும் மரங்கள் பயன்படுகின்றன.

பயன்படாத மனிதனைக் குறைகூறச் சில இடங்களில் மரத்தை உவமையாக வள்ளுவர் பயன்படுத்தியிருந்தாலும் மரங்களின் பயன்பாட்டை அவர் நன்றாகவே உணர்ந்து பாராட்டியிருக்கிறார் என்பதையும் அறிய முடிகிறது.

*"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே*
*பசும்புல் தலைகாண் பரிது"* *(வான்சிறப்பு 16)*

என்ற குறளில் வானமழை இல்லையெனில் மண்ணில் புல்கூட இல்லை என்று கூறுகிறார். அதாவது, மண்ணில் இயற்கை வளங்கள் செழிக்கும் மரங்கள் மட்டுமல்லாது, ஓர் அறிவு



உயிராகிய புல்கூட முளைக்காது என்பது அவர் கருத்து.

மரங்களின் பயன்பாட்டுத் தன்மையை நல்லவை, தீயவை என இருவகையாகப் பிரித்துப் பார்க்கிறார் வள்ளுவர்.

"இளைதாக முள்மரம் களைக' (பகைத்திறம் தெரிதல் 879).

*"நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்*
*நச்சு மரம்பழுத் தற்று"*

*(நன்றியில் செல்வம் 1008)*

எனவரும் குறள்களில் மரங்களின் தீய தன்மையை விளக்குகிறார்.

*"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்"*

*(ஒப்புரவறிதல் 216)*

*"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்*
*பெருந்தகை யான்கண் படின்"*

*(ஒப்புரவறிதல் 217)*

எனவரும் பாக்களில் உள்ளூரில் பழுத்த பயன்மரம், வேர், மரம், கிளை, பூ, காய், கனி என எல்லா வகையிலும் மருந்தாகிப் பயன்படும் மரம் என மரங்களின் பயன்தரும் தன்மையைப் பாராட்டுகிறார். நாட்டுக்கு அரண் 'அணிநிழல் காடு' எனும்போது மரங்கள் செழித்து நெருக்கமாக அடுக்கி வளர்ந்திடும் காட்டைப் போற்றுகிறார்.



**காற்று**

காற்றைப் பற்றிய செய்தியையும் சூழல் போற்றலில் வள்ளுவர் விட்டுவைக்கவில்லை.

*"அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை*
*வளிவழங்கு*
*மல்லன் மா ஞாலம் கரி" (அருளுடைமை 245)*

இந்தக் குறளில் ''வளிவழங்கு மல்லல் மாஞாலம்'' என்பது ''காற்று இயங்குகிற வளப்பம் பொருந்திய உலகம்'' என்று பொருள்படும். வாழ்வு வளம் பொருந்தியதாக உலகம் இருக்க வேண்டுமெனில், தூய்மையாகக் காற்று இயங்க வேண்டும் என்பது வள்ளுவச் சிந்தை.

**நீர்**

நீரை மழைநீர், ஊற்றுநீர், ஆற்றுநீர் என மூவகைப்படுத்தியவர் திருவள்ளுவர். இம்மூவகை நீரும் தூய்மை கெடாமல் இருக்க வேண்டும் என்பதும் குறள் கூறும் செய்தி.

*"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு" (ஒப்புரவறிதல் 215)*

என்னும் குறளில் "உலக நடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவனுடைய செல்வம், ஊரில் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம் நீரால் நிறைந்திருப்பது போன்றது'' என்கிறார். ஏரி, குளம், தூய்மையான நீரால் நிறைந்திருக்க வேண்டும் என்றும் அது ஊரிலுள்ளோரால் விரும்பிக் குடிக்கப் பெறுதல்வேண்டும் என்றும் வலியுறுத்துகிற வள்ளுவர் இங்கே, அறிவுடையாளனின் செல்வத்திற்குக் குளத்து நீரை ஒப்புமை





கூறுகிறார். குளம், மழைநீராலும், ஆற்றுநீராலும், ஊற்றுநீராலும் நிறையும் என்பது அறிந்த உண்மை.

அறிவாளருடைய செல்வத்திற்கு நீரை உவமை கூறிய திருவள்ளுவர், பிறிதொரு குறளில் அறிவுக்கு உவமையாக நீரைக் குறிப்பிடுகிறார். ஆற்றுமணலைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போலக் கற்கக் கற்க அறிவு சுரக்கும் (குறள் 396) — மேலும்,

*"உணர்வது உடையார்முன் சொல்லல்*
*வளர்வதன்*
*பாத்தியுள் நீர்சொரிந் தற்று"*

*(அவையறிதல் 718)*

எனும் குறளில் "வளருகின்ற பாத்திக்கே நீர் சொரிய வேண்டும் என்ற நீர் நிர்வாகக் கருத்தை அறிவுணரும் தன்மை உள்ளவருக்கே அறிவுசொலல் வேண்டும் என்ற கருத்தோடு இயைத்துக் கூறுவது இன்புறத்தக்கது.

உவமையாக நீரை உவமையாக்கி நீரின் தூய்மையை வலியுறுத்துவது பெறப்படுகிறது.

**நீரும் நிலமும்**

வாழவைக்கின்ற மண்ணை வசையின்றிக் காக்கவேண்டும் என்பது சூழலியலார் கருத்து. நிலம் எப்படியிருக்கிறதோ அதே தன்மைக் கேற்ப நீரும் மாறிப்போகும் என்பது வள்ளுவர் கருத்து.

***"நிலத்தியல்பால் நீர்திரீந் தற்றுஆகும்***
***மாந்தர்க்கு***
***இனத்தியல்பது ஆகும் அறிவு"***

*(சிற்றினஞ்சேராமை 452)*

இயற்கையாகத் தண்ணீருக்கு மணம், நிறம்,



***"துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்***
***அளியின்மை வாழும் உயிர்க்கு"***

*(கொடுங்கோன்மை 557)*

என்ற குறளில் மழைத்துளியை மன்னனின் இரக்கத்திற்கு உவமையாகத் திருவள்ளுவர் கூறுகிறார். அதனால்தான் சிலப்பதிகாரத்தில் கடவுள் வாழ்த்துப் பாடாத — இளங் கோவடிகள் மாமழையை வாழ்த்திப் பாடினார்.

ஆகத் தூய்மையான அறிவாளன் செல்வம், தூய அறிவு, இரக்கம் ஆகியவற்றிற்கு

சுவை, நோயுண்டாக்கும் தன்மை என்று எதுவும் இல்லை. ஆனால் அது எந்த மண்ணோடு சேருகிறதோ அந்த மண்ணின் இயல்புக்கு ஏற்ப மணம், நிறம், சுவை, நோயுண்டாக்கும் மாசு முதலியவற்றைப் பெற்று விடுகிறது. காற்று மாசினால் மழைநீரும், மண்மாசினால் ஊற்றுநீரும் — ஆற்றுநீரும் இயல்புகெட வாய்ப்புள்ளது என்று வள்ளுவர் கூறும் எச்சரிக்கை நமக்கு நல்ல பாடம். இந்தக் குறளிலும்கூட நீரைத் தெளிந்த அறிவுக்கு — உவமையாக்கியுள்ளார் குறளாசிரியர்.



"நிழல்நீரும் இன்னாத இன்னா
தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்"
(உட்பகை 881)

எனவரும் குறளில் வாழுகின்ற இடமும் குடிக்கின்ற தண்ணீரும் நோயுண்டாக்குமானால் அவை தீயவையே என நேரடியாக எச்சரிக்கிறார்.

நிலத்தை மாசுள்ளதாக ஆக்கினால் அது நிலத்திற்குக் கேடு என்றாலும் அந்தக் கேடு முழுமையும் கேடு உண்டாக்கிய மனிதனுக்கே வந்துசேரும். இந்தக் கருத்தை ஓர் அருமையான உவமையாகக் கையாள்கிறார் திருவள்ளுவர்.

"சினத்தைப் பொருளென்று கொண்டவன்
கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"
(வெகுளாமை 307)

சினம் பற்றிக் கூறவந்த வள்ளுவர் நிலத்தை ஓங்கி அறைவதனால் நிலத்திற்குத் தீமை ஒன்றும் இல்லை; ஆனால் அறைகின்ற கைக்குத் தீமை நிச்சயம் என்கிறார். நிலத்தை எவ்வளவு வேகமாக அறைகிறோமோ அவ்வளவு வேகமாகத் தீமை நமக்கு வந்துசேரும் என்பதை நாம் உணர வேண்டும். மண்ணின் தன்மை கெடாத மாண்புறு செயல்களைச் செய்ய வேண்டும்.

**முடிவுரை :**

அறிவியல் உலகில் வாழ்ந்து வரும் நாம் வானின் உயரத்தையும் எட்டுமளவுக்கு அறிவியல் சாதனை புரிந்து கொண்டிருக்கிறோம். எவ்வளவு உயரத்திற்கு நாம் நமது கரங்களை உயர்த்தினாலும் நமது கால்கள் மண்ணில் பாவவில்லையெனில் ஆபத்து நமக்குத்தான். கைகளின் உயரங்களில் புதுமைகளைப் புரிந்தாலும் கால்களின் ஊன்றலில் மரபுகளைப் பேணவேண்டும். இயற்கை நேசிப்பே இனிய நேசிப்பு என்ற வள்ளுவச் சிந்தனைகளை மனதில் பதியம் போட்டால் சூழல் பாதுகாப்பு சுகமாகப் பூப்பூக்கும்.

* * * * *

மழையானது மக்கள் போற்ற வேண்டிய ஒன்று. ஏனெனில், அது உண்ணும் பொருள்களை உண்டாக்கிக் கொடுத்துத் தானும் உணவாக மாறுகிறது. பெரியோர்களைப் போற்றுங்கள். மனைவி, மக்களோடு வாழுங்கள். விருப்பு, வெறுப்பு அற்று வாழுங்கள். இது ஒரு தொகுப்பு.

'படி, படிக்க வேண்டியவைகளைப் படி! குற்றமறப் படி; படிக்காவிட்டாலும் கேள்; படித்து, கேட்டு அறிந்தபடி நட' இது ஒரு தொகுப்பு.

'சூதாடாதே! பொய் சொல்லாதே! புலால் உண்ணாதே! கள் குடியாதே! களவு செய்யாதே! வஞ்சகம் கொள்ளாதே! தீயன எண்ணாதே!' இது ஒரு தொகுப்பு.

"நட்புத் தேவை; அதை ஆராய்ந்துகொள்! தீயவர் உறவை நோயென விலக்கு! பெரியோரைத் துணைக் கொள்! பிறரோடும் அன்பாயிரு! மனைவியை மதி! மக்களைப் பெறு! அறிவை அடை! சொல்வதெல்லாம் நல்லதாக இருக்கட்டும்! செய்வதெல்லாம் திறமையாக இருக்கட்டும்! அறத்தின் வழி நின்று பொருளைத் தேடி இன்பத்தைப் பெறு! வீடு உண்டானால் அது உன்னைத் தேடி வரும்" என்பதே.

இவைதான் வள்ளுவருடைய கொள்கை. அதைத் தான் நீங்கள் திருக்குறளில் பார்க்க முடியும். இது எந்த நாட்டிற்கு, எந்த மக்களுக்கு, எந்த நிறத்தினருக்கு, எந்த மொழியினர்க்கு, எந்தச் சமயத்தினருக்கு வேறுபாடு உடையது? இராது! அவ்வளவு பெரிய உயர்ந்த கருத்துக்களைக் கொண்டவர் வள்ளுவர்.

— முத்தமிழ்க் காவலர்
கி.ஆ.பெ.விசுவநாதம்



# குறள்: கவிதையும் நீதியும்



குறைந்தது பத்து நூற்றாண்டுகளாகவாவது குறள் தமிழ்ச் சமூகத்தின் நீதியுணர்வின் சாரமாக இருந்து வந்துள்ளது. குறளுக்கு எழுதப்பட்ட புராதன உரைகள், குறள் குறித்த பாமாலைகள் என இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. ஆயினும் அந்த இடம் அறிஞர் மத்தியில் தான் இருந்தது. கல்வி எல்லைக்குட்பட்டு வழங்கப்பட்ட சென்ற காலங்களில் அதுவே இயல்வதும் கூட.

பிற்பாடு மக்களாட்சியின் சாத்தியங்களினூடாகக் கல்வி பரவலாக்கப்பட்டபோது தமிழில் மிக அதிகமாக வெகுஜனமயமாக்கப்பட்ட பேரிலக்கியம் திருக்குறளேயாகும். திராவிட இயக்கங்கள் இதில் பெரும் பங்காற்றின என்பது ஒரு வரலாற்று உண்மை. இன்றும் குறள் தமிழகத்து மேடைகளில் மீண்டும் மீண்டும் பேசப்படுகிறது. தமிழ்க்கல்வியின் அடிப்படை நூல் அதுவே. வாழ்வின் ஒவ்வொரு உச்சத் தருணத்திலும் கணிசமான தமிழ் மனங்கள் குறளைத் தொட்டு மீள்வதை எப்போதும் கவனித்து வருகிறேன். என்னைப் பொறுத்தவரை என் நீதியுணர்வு குறளுடன் இரண்டறக் கலந்தது. என்னால் குறளாசிரியன் மீது என் இலக்கிய ஞானத்தையோ, பகுத்தறிவையோ ஒருபோதும் செலுத்த முடியாது என்பதிலும் அவரை என் மனதில் இறைவனின் பீடத்தில் அமரச் செய்திருக்கிறேன் என்பதிலும் எனக்கு எவ்விதமான கூச்சமும் இல்லை.

ஆனால் குறளை நாம் இன்று புரிந்து கொள்வதில் சில மேலதிக விளக்கங்கள் தேவை. குறள் எழுதப்பட்ட காலத்தில் கவிதையே அறிவுலகின் இயல்பான தொடர்பு முறையாக இருந்தது. மருத்துவ நூல்களும், சிற்ப நூல்களும், இலக்கண நூல்களும் கவிதைக்குரிய யாப்பு வடிவில் எழுதப்பட்டன. அவற்றில் கவிதைக்குரிய அணிகளும் பயன்படுத்தப்பட்டன. அச்செய்யுட்களில் ஆங்காங்கே மேலான கவித்துவம் மிளிர்வதையும் காணலாம். ஆகவே கவிதையா நீதியா என்ற அடிப்படை வினா அன்று எழ வாய்ப்பில்லை. குறள் ஒரு பேரிலக்கியப் படைப்பாகவும் நீதி நூலாகவும் ஒரேசமயம் கருதப்பட்டது. பிற்பாடு குறள் நவீன சுதந்திர ஜனநாயகச் சூழலில் மறு கண்டுபிடிப்பு செய்யப்பட்டபோது, ஒரு நீதி நூலாக — ஆங்காங்கே கவிதைத் தன்மையும் கொண்ட ஒன்றாக மட்டுமே உணரப்பட்டது. அவ்வாறே அது இன்றும் கற்பிக்கப்படுகிறது, வலியுறுத்தப்படுகிறது. தமிழ்ச் சூழலில் அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அதற்கான அவசியம் இருந்திருக்கலாம். ஆனால் ஓர் உயர்தளத்தில் கவிதையா நீதியா என்ற பாகுபாட்டைத் துல்லியமாக நிகழ்த்திக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என்றுபடுகிறது.

திருக்குறள் ஒரு பெரும் நீதிநூலாக இன்று கருதப்படுவதன் மூலமாக அதன் வசிப்பின் ஓரிரு சாத்தியங்கள் மட்டுமே கண்டடையப்படுகின்றன என்பதே முதல் பிரச்சினையாகும். உதாரணமாக 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்ற அற்புதமான கவிதை இதில் 'உள்ளடங்கிய' நீதி எது என்ற வினாவுடன்

■ ஜெயமோகன்



படிக்கப்படுகையில், அவ்வரிகளில் உள்ள முடிவற்ற வாசல்கள் ஒவ்வொன்றாக மூடி இறுகிவிடுகின்றன. இவ்வரிகளைப் பற்றி ஒருமுறை பேசநேர்கையில் (நாராயண குருவின் மூன்றாம் தலைமுறை மாணவரான) நித்யசைதன்ய யதி 'உதடுகளால் முத்தமிட்டு அறியப்படும் குழலும் விரல்களால் தொட்டு தடவியறியப்படும் யாழும் என குழந்தையை அறியும் பேரனுபவம்' என்று குறிப்பிட்டார். குறள்பாக்களில் கணிசமானவை இவ்வாறு அதிதூய கவித்துவ நிலையில் தான் உள்ளன. நீதி என்று இவற்றை எடுத்துக்கொள்ளும்போது மிகச் சர்வ சாதாரணமான ஒரு லௌகீக உண்மை – அல்லது அனுபவம் – மட்டுமே நம்மை வந்து சேர்கிறது மட்டுமல்ல, எளிய உலகியலை அனைத்திற்கும் மேலாக முன்வைத்து வலியுறுத்துவதாக அவை தோற்றம் தரக்கூடும். தம் மக்கள் சிறு கையால் அளாவிய அந்தக் கூழ் தந்தையின் நெகிழ்ந்த மனம் ஆக மாறி படிமமாவதன் அனுபவத்தை அப்போது நாம் இழக்க நேரிடும்.

இரண்டாவது சிக்கல் நீதியின் கவிதையும் கவிதையின் நீதியும் முற்றிலும் வேறுவேறானவை என்பதே. குறள் ஆய்ந்து தெளிந்த நீதியை முன்வைக்கவும், விளக்கவும் கவிதைக்குரிய கூறுமுறைகளை எடுத்தாள்கிறது என்பதே பரவலாகக் கூறப்படும் தரப்பாக உள்ளது. அதாவது, அதிலுள்ள கவிதையானது நீதியை விளக்கும் நோக்கத்துடன் அடையப் பெற்ற ஒன்று மட்டுமே என்று கூறப்படுகிறது. அந்த நீதியை அடையும் விதம் கவிதைக்கு அப்பால் வாழ்வனுபவம் தந்த விவேகத்தாலோ, தத்துவ சிந்தனை தந்த தெளிவினாலோ தான் தீர்மானிக்கப்படுகிறது என்பது இக்கருத்தின் விரிவாக்கம். ஆனால் குறளின் கவித்துவத் தினூடாகப்பயணம் செய்கையில் நீதியை விட கவித்துவம் சாராம்சமாகத் தோற்றம் தருவதை மீண்டும் மீண்டும் நாம் காண்கிறோம். குறளின் நீதிதரிசனங்கள் எல்லாம் கவிதை மூலம் அறியப்பட்டதாகவே உள்ளன. 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து கெடுக உலகியற்றியான்'. இது நீதியா, கவிதையின் நீதியெழுச்சியா? மிக அடிப்படையானது இக்கேள்வி. குறளின் நீதியை அடையும் மெய்காண் முறையாகக் கவிதை என்ற தீவிரமான மன இயக்கமும் அமைந்துள்ளது என்பதை விரிவாக உதாரணங்கள் தந்து நிறுவலாம். உதாரணம்: 'அறத்தாறிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை'. அனுபவ விவேகமோ, குலமரபின் அறத்தரினமோ, தத்துவச் சிந்தனையின் தருக்கத் தெளிவோ நீதியை வழிநடத்துகையில் உருவாகும் தரிசனங்களுக்கும்,







கவித்துவ எழுச்சி வழிநடத்துகையில் உருவாகும் தரிசனங்களுக்கும், அடிப்படையான சில வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைத் தோராயமாக வகுத்துக்கொள்வது இவ்விவாதத்திற்குத் துணையாகும்.

அடிப்படையில் நீதி என்பது என்ன? அது எதற்காக மானுடனுக்குத் தேவைப்படுகிறது? மனிதனை ஒரு சமூக விலங்கு என்று எடுத்துக் கொண்டால் அவனுடைய வாழ்வை உள்ளுணர்வும், பரிணாமம் மூலம் உருவாகிப் படிந்த பழக்க வழக்கங்களும்தான் தீர்மானித்து வந்துள்ளன. ஒரு கட்டத்தில் அவனுக்குத் தன்னையும் தன்னைச் சார்ந்த பிறரையும் குறித்த பிரக்ஞை உருவானபோது தனக்கும் பிறருக்குமான பொதுவான நடைமுறை விதிகளை உருவாக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதல் நீதி பிறந்தது. நீதி என்பது அடிப்படையில் பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு சமூக ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் சமூக வன்முறையினால் – தண்டனையினால் – மட்டுமே நிலைநிறுத்தப் பட்டிருக்க முடியும். இன்றும் பழங்குடிச் சமூகங்களிலேயே தண்டனைகள் தளர்வில்லாத மூர்க்கத்துடன் நடைமுறைப்படுத்தப் படுகின்றன என்பதைக் காணலாம். இந்தச் சமூக ஒப்பந்தங்கள் நம்பிக்கைகளாக மாற்றப்பட்டன. சடங்குகளாகவும் மரபுகளாகவும் உருவம் கொண்டன. இக்கால கட்டங்களில் எங்கும் 'நீதி' என்ற தனியான அமைப்பு தேவையாக இருக்கவில்லை. பழங்குடி' சமூகங்கள் எதிலும் அனேகமாக நீதிநூல்களே இல்லை. நாம் இன்றும் 'நடைமுறை நீதி' 'குலமரபு நீதி' ஆகிய பழங்குடி அமைப்புகளையே நமது அன்றாட வாழ்வின் இயக்கத்திற்குச் சார்ந்திருக்கிறோம் என்பதைக் கவனிக்கலாம். அப்படியானால் நீதி என்ற தனிக் கருதுகோளும் நீதி நூல் என்ற அமைப்பும் எப்போது உதயமாகின? தத்துவச் சிந்தனை உருவாகி வலுப்பெற்ற, பிறகுதான் என்று ஓரளவு கூறலாம். ஒவ்வொன்றையும் நடைமுறைத் தளத்திலிருந்து பிரித்து மிகப் பொதுவான தளத்திற்கு எடுத்துச்சென்று தூயதருக்க நிலையில் நிறுத்தி யோசிக்கும் செயல்பாட்டையே நாம் தத்துவச் சிந்தனை என்கிறோம். இப்படிப்பட்ட ஒரே சிந்தனை முறை சங்க காலத்தில் இருந்தது என்பதற்கான தடயங்கள் இலக்கியத்தில் இல்லை. வாழ்வின் நேரடியான கவித்துவ வெளிப்பாடும், அக்கவிதையைப் பொதுவாக நிர்ணயித்துக் கொள்ளும் இலக்கண விதிகளும் மட்டுமே அப்போது காணக் கிடைக்கின்றன. அப்போது நீதி குலமுறை சார்ந்த ஒன்றாகவே பெரிதும் இருந்திருக்கக் கூடும். தத்துவச் சிந்தனையின் ஊற்றுமுகங்கள் இருந்திருக்கக் கூடும். தத்துவம் எப்போதும் பெரிய அமைப்புகளைச் சார்ந்து, அவற்றின் தேவையினால் நெருக்கப்பட்டு உருவாவது என்பதற்கு ஆதாரமுள்ளது. வரலாற்றில் எப்போதும் பெரும் தரிசனங்கள் (அதாவது மதங்கள்) பேரரசுகள் ஆகியவற்றுடன் இணைந்தே தத்துவச் சிந்தனையின் வளர்ச்சியும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. தமிழ் வரலாற்றுப் பரப்பில் பௌத்த, சமண மதங்களின் வருகை மிக முக்கியமானது. அதற்கு முன்பு இங்கு இருந்தவை மத நம்பிக்கைகள் அல்லது வழிபாட்டு முறைகள் மட்டுமே. ஒருங்கிணைவுள்ள மையத் தரிசனம், ஒருங்கிணைவுள்ள வழிபாட்டுமுறை ஆகிய இரண்டு தளங்களும் இணைகையில்தான் மதங்கள் உருவாகின்றன. பிற்பாடு சைவ, வைணவ மதங்களாக வளர்ந்த தரிசனங்கள் எளிய வழிபாட்டு முறைகள் தமிழ் மரபில் முன்பே இருந்தன எனினும் தமிழகத்தின் முதற்கட்ட மதங்கள் பௌத்தமும் சமணமுமேயாகும்.

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்துவரும் வழிபாட்டுமுறை ஒன்று மதமாக மாறுவது, அது பிற வழிபாட்டு முறைகளுடன் உரையாடவும், வெல்லவும், தன்னுடன் இணைத்துக்கொண்டு தன் எல்லைகளை விரிவுபடுத்தவும் முயலும்போது தான். ஆக, பெரும் 'தொகுப்புச் செயல்பாடு' ஒன்றின் மூலமே ஒரு வழிபாட்டு முறை மதமாக ஆகிறது. இத்தொகுப்புச் செயல்பாட்டை நாம் 'மத உருவாக்கம்' என்று பொதுவாக விவாதங்களில் குறிப்பிடுகிறோம். எதனடிப்படையில் பல்வேறு வாழ்க்கைக் கூறுகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன? அந்த மதத்தின் மையத் தரிசனத்தின் அடிப்படையில்.



ஆனால், அத்தரிசனம் தன் தொகுப்புச் செயல் பாட்டின் போக்கில் படிப்படியாக விரிவும் உட்சிக்கலும் அடையும். சமரசம் செய்து கொள்ளும் இந்த வளர் சிதை மாற்றத்திற்கு விரிவான விவாதக் களம் ஒன்று தேவை. அதன் பொருட்டு மதம் தத்துவப் பரப்பு ஒன்றைத் திரட்டி எடுக்கிறது. அத்தத்துவப் பரப்பின் தீவிரமான இயக்கம் மூலம் பல்வேறு வாழ்க்கைக் கூறுகள் இணைந்து பொதுவான வாழ்க்கைத் தரிசனம் ஒன்று உருவாகும்போது, அதன் தொடர்ச்சியாகப் பேரரசுகள் உருவாகின்றன. அவை பல்வேறு சிறுசிறு அரசுகளின் தொகுப்பு மூலமே திரண்டு வருகின்றன. இது ஒரு விவாத உருவகம் மட்டுமே. ஒரு வேளை இந்த இயங்கு முறையில் நேர்மாறான போக்குகளும் இருக்கலாம். பெரிய மதம், ஒருங்கிணையும் தத்துவப் பார்வை, பேரரசு மூன்றும் ஒரே சமயம் ஒன்றையொன்று பயன்படுத்திக் கொண்டு வளரும் மூன்று சக்திகள் என்று மட்டும் குறைந்தபட்சம் உறுதியாகக் கூறமுடியும்.

தமிழ்ச்சூழலை எடுத்துக் கொண்டால் பண்டைத் தமிழ் மரபின், பெரிதும் பழங்குடித்தன்மை கொண்ட, வாழ்வுக் கூறுகளை பௌத்தமும், சமணமும் சந்தித்த போதுதான் தத்துவப் பிரச்சினைகள் எழுந்தன. இரு பெரும் காப்பியங்களிலும் நாம் காண்பது விரிவான, ஓய்வற்ற, தத்துவப் போராட்டத்தையே. தமிழ் மரபின் வழிபாட்டு முறைகளை (பத்தினி வழிபாடு முக்கியமாக) பௌத்தம் தன் மையத் தரிசனத்தின் சரடில் கோப்பதன் சித்திரத்தையே இக்காப்பியங்கள் தருகின்றன. அதாவது 'குலமரபு நீதி' என்பது தத்துவ விவாதத்தினூடாகப் 'பொதுநீதி'யாக மாறும் காலகட்டம் இது. சடங்குமுறை, குலமரபு, நம்பிக்கை ஆகிய நடைமுறைத் தளத்திலிருந்து நீதி மேலெழுந்து பொதுவான ரீதியாகத் தொகுக்கப்பட்டதே இக்காலகட்டத்தின் சாதனை. அதற்கேற்ப 'அறம்' என்ற சொல்லில் வந்த மாறுதலை (அல்லது குடியேறிய கனத்தை) நாம் கூர்ந்து பார்க்கவேண்டும். இல்லறம், துறவறம், அறம் X மறம் முதலிய சொற்களில் வரும் அறமல்ல அரசியல் பிழைத்தாருக்குக் கூற்றாகப் பேருருவம் கொள்ளும் அறம்.

இவ்வாறு நீதி புறவயமாக ஆன பிறகுதான் நீதிநூல்கள் எழுதப்பட்டன. அவ்வாறு 'எழுதப்படுவதன்' அவசியத்தை இங்கு கவனிக்கவேண்டும். சான்றோர், அறவோர் மத்தியில் ஒரு பொதுப் புரிதலாக அது இருந்தால் போதுமானதல்ல என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எழுதப்படுகையில் அது கால, இட எல்லைகளைத் தாண்டுகிறது. எல்லாருக்கும் உரியதாக ஆகிறது. பேரரசுகள் உருவானதால் நீதி பொதுமையாக்கப்பட்டதா, அல்ல நீதி பொதுமையானதாக மாறியதன் விளைவாகப் பேரரசுகள் உருவாயினவா என்பது ஓர் அடிப்படை வினா. விரிவாக வரலாற்றை முன்வைத்து எழுப்பிக் கொள்ள வேண்டிய ஒன்று அது.



காப்பிய காலகட்டத்தைத் தொடர்ந்து நீதிநூல்களின் காலகட்டம் உருவானதன் நியாயம் இது. மிகப்பெரிய அளவில் இக்காலகட்டத்தில் நீதிநூல்கள் எழுதிக் குவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் காலவெள்ளத்தைத் தாண்டியும் ஏராளமான நூல்கள் கிடைப்பதை வைத்து ஊகிக்கலாம்.





இக் காலகட்டத்தின் தலையாய படைப்பு குறளேயாகும். ஆனால் குறள் இவற்றில் ஒன்று மட்டுமல்ல. ஏனெனில் அது வெறும் நீதிநூல் அல்ல.

பெரும் தத்துவ விவாதத்திற்குப் பிறகு, திரண்டு வந்த பொதுநீதியைச் சுருக்கமாகவும் அனைவருக்கும் பொதுவாகவும் முன் வைப்பதையே பொதுவாக நீதிநூல்கள் செய்கின்றன. அவை முன்வைக்கும் நீதி உடனடியாக சமூக நடைமுறையாக மாற்றப்பட வேண்டியது. எனவே அவற்றின் குரல் திட்டவட்டமானதாக, சமரசங்களுக்கான வாய்ப்புகளற்றதாக் இருக்கும். அவற்றின் ஒரு நுனி பழங்குடிகளின் நீதியில் வேரூன்றி யிருக்கும். மறுநுனி விரிந்து பரவும் கிளைகளுடன் எதிர்கால நீதியைத் தேடிக் கொண்டிருக்கும். முற்றிலும் நடைமுறை சார்ந்த ஒரு நீதிநூல் வெறும் ஆச்சாரத் தொகுப்பாக மாறி, காலத்தில் பொருளிழந்து போகும். முற்றிலும் இலட்சியவாதம் சார்ந்த ஒரு நீதிநூல் வெற்றுக் கனவாக அந்தரத்தில் நின்றுகொண்டிருக்கும். எல்லா நீதிநூல்களும் இவ்விரு புள்ளிகளின் நடுவே நின்று கொண்டிருப்பதையே நாம் இன்று காண்கிறோம். 'அர்த்த சாஸ்திரமும்', 'மனுநீதி சாஸ்திரமும்', 'ஆசாரக் கோவையும்' நடைமுறை வாதம் சார்ந்த எல்லையில் நிற்கின்றன. குறள் நேர் எதிர் திசையில், இலட்சியக்கனவின் அருகாமையில் நின்றுகொண்டிருக்கிறது. இந்த அம்சமே குறளைக் கவிதை நோக்கி நகர்த்தி, அதை நீதிநூல் என்ற அடையாளத்தை மீறி ஒரு பேரிலக்கியமாக மாற்றுகிறது.

தத்துவம் எவ்வாறு தருக்கத்தைத் தனது அறிதல் முறையாகக் கொண்டிருக்கிறதோ, அவ்வாறு இலக்கியம் தனது அறிதல் முறையாகக் கற்பனையைக் கொண்டிருக்கிறது. தருக்க ரீதியான அறிதல்முறை தொகுத்தல் பகுத்தல் ஆகிய செயல்பாடுகளினூடாக சமரசப் புள்ளிகளைக் கண்டடைந்து அப்புள்ளிகள் இணைந்து உருவாகும் கோடு வழியாக முன்னகர்கிறது. மாறாக, கற்பனை ஒவ்வொரு புள்ளியிலிருந்தும் அதன் அதிகபட்ச சாத்தியங்களைக் கண்டடைய முயல்கிறது. 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!' என்பது தருக்கபூர்வமாக அடைந்த தரிசனமல்ல. உச்சகட்ட மனஎழுச்சியில் உருவான தரிசனம். தத்துவத்தில் அது ஓர் எளிய மன எழுச்சி என்பதற்கு மேல் அர்த்தப் _ படுவதில்லை. இலக்கியத்தில் அது நூற்றாண்டுகளை அதிரவைக்கும் மானுடப் பெரும் தரிசனம். குறளின் இயங்குமுறை பெரிதும் இலக்கியம் சார்ந்ததாகவே உள்ளது. ஒரு வாழ்க்கைச் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொண்டு எது அதன் சாராம்சமான நெறி என்று வகுத்துக்கூற அது பெரும்பாலும் முயல்வதில்லை. மாறாக, அவ்வாழ்க்கைச் சந்தர்ப்பத்திலிருந்து கற்பனையின் மின்னலால் தூரங்களில் பளீரிட்டுப் பாய்ந்து சாத்தியமான அதிகபட்ச தூரத்தைக் கடந்து செல்கிறது. 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்பது ஒரு நீதியே அல்ல. அது ஒரு பெரும் கனவு. மானுடத்தை இன்றுவரை தூண்டிவரும் பெரும் இலட்சியங்களுள் ஒன்று. இந்த அம்சமே குறளைப் பேரிலக்கியமாக ஆக்குகிறது.

ஒரு பேரிலக்கியத்தை வாசிப்பதற்கும் ஒரு நீதிநூலை வாசிப்பதற்கும் இடையேயான வித்தியாசம் மிக முக்கியமானது. அதுவே இப் பாகுபாட்டைத் துல்லியமாக நிகழ்த்திக் கொள்ள நம்மை வலியுறுத்துவது. ஒரு நீதிநூலை அதன் மிகச் சிறந்ததும், மிகப் பொருத்தமானதுமான அர்த்தம் என்ன என்ற கோணத்திலேயே நாம் அணுகுகிறோம். அதில் மாற்று வாசிப்புகளுக்கு இடம்தருவது பல சமயம் நீதியை நம் வசதிக்கேற்ப விளக்கம் தந்துகொள்வதாகவே அமையும். அதாவது நீதிநூல் அடிப்படையில் ஒரு தத்துவ நூலேயாகும். அதில் உள்ள இலக்கிய உத்திகளைக் கூட ஒரு தத்துவ நூலின் எல்லைக்குட்பட்டே நாம் அணுகவேண்டும். உதாரணமாக, அதில் உள்ள உவமைகளை பதிலி பிம்பங்களாக (அலிகரி) மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். திட்டவட்டமான ஒரு பொருளை மேலும் துல்லியமாக விளக்கும் பொருட்டு தரப்பட்ட உதாரணங்கள் மட்டுமே அவை. மாறாக இலக்கியப்படைப்பு நம்மை எந்த அளவு கற்பனை செய்யவைக்கிறது



என்பதன் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகிறது. மிக அதிகமான வாசிப்புச் சாத்தியங்களையே அதன் இலக்கியப் பண்பாக நாம் கருதுகிறோம். அது எதையும் திட்டவட்டமாக நம்மில் நட்டு விடுவதில்லை. கற்பனையின் நீரை நம் அந்தரங்கத்தில் பெய்வதனூடாக அது நமது விதைகளை முளைத்தெழச் செய்கிறது. ஓர் இலக்கியப் படைப்பிடம் ஒருபோதும் கேட்கக் கூடாத கேள்வி 'இதன் திரண்ட கருத்து யாது?' என்பதேயாகும். ஏனெனில் அக்கேள்வி இலக்கியப் படைப்பின் விரிந்து செல்லும் சாத்தியங்களையெல்லாம் குறுக்கி ஒரு புள்ளியில் அதை முளையடித்துக் கட்டிவிட வழிவகுக்கும். அவ்வாறு 'திரண்டு வந்த' கருத்து அவ்வாசகன் அவ்வாசிப்புத் தருணத்தில் அடைந்தது மட்டுமேயாகும். அவ்வாசிப்பே அப்படைப்பு என்பது ஓர் அழகிய பெண்ணைப் புகைப்படம் எடுத்து வைத்துக்கொண்டு அவளைக் கொன்றுவிடுவதற்கு நிகராகும்.

ஓர் இலக்கியப் படைப்பில் உள்ள அத்தனை அணிகளும் வாசிப்பின் சாத்தியங்களை முடிவின்றி பெருக்கும் பொருட்டு உருவானவையேயாகும். நவீன கவிதையியல் இவற்றைப் படிமங்கள் (Poetic images) என்ற பொதுச் சொல்லால் குறிப்பிடுகிறது. ஒரு படிமம் எதையும் குறித்து நிற்பதல்ல. அது ஓர் மன எழுச்சியின் அல்லது ஒரு குறிப்பிட்ட வகை அறிதலின் சாரமானது ஒரு புறப்பொருளில் பிரதிபலிப்பது மட்டுமேயாகும். அது தரும் அர்த்தங்கள் அனைத்துமே அதற்குரியவைதான். ஆனால், எந்த அர்த்தமும் அதற்குரிய விளக்கமல்ல.

குறள் மீதான இன்றைய வாசிப்பு அதை ஓர் இலக்கியப் படைப்பாகக் கண்டு, அதன் கவிதைகளின் முடிவற்ற வாசிப்புச் சாத்தியங்களினூடாக கற்பனையை விரித்து முன்னகர்வதாக அமையவேண்டியது அவசியம். குறளை ஒரு நீதிநூல் என்று வரையறுத்து விடுவதே இவ்வகை வாசிப்பின் பெரிய தடை. அதாவது வேறு சொற்களில் சொல்லப் போனால் இன்று ஒரு புதுக்கவிதை எவ்வாறு வாசிக்கப்படுகிறதோ, அவ்வாறே குறளும் வாசிக்கப்படவேண்டும். உதாரணம், 'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு' என்ற குறள் மரபான வாசிப்பில் இரண்டாவது பகுதிக்கு, அதாவது நீதிக்கு, மேலதிக அழுத்தம் தந்து வாசிக்கப்பட்டு வந்தது. அந்த நீதியைச் சற்று தெளிவுபடுத்தும் ஓர் உருவகமாக முதல் வரி கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், ஒரு நவீன வாசிப்பு வெள்ளத்தை உள்ளமெனக் கொள்ளும்போது சரசரவென்று பிம்பங்களை உருவாக்கி அடுக்கியபடியே செல்லும். வெள்ளத்தின் அலை, ஆழம், அதில் பிரதிபலிக்கும் நிழற்கோலங்கள், அதில் ஊடுருவும் ஒளி, அதன் அடிப்பரப்பு, அங்கு வேர்விட்டு எழும் மலர். அந்த மலர் எது என்ற வினா மேலும் அதிகக்கவிதைக் கனவுகளுக்கு அவ்வாசகனை இட்டுச் செல்லும். உள்ளத்தின் அடியாழத்துச் சேற்றில் வேர்கொண்டு, அதன் அலைமேல் ததும்பி நின்றாடி, விண்நோக்கி மலர்ந்து, ஒளி உண்டு, மிளிரும் அம்மலர் அவன் மனதிலும் அப்போது மலரக்கூடும். அதுவே கவிதையனுபவம் என்பது.

தமிழ்ப் புதுக்கவிதைக்கு அரைநூற்றாண்டு வயதாகிவிட்டது. அதன் பிரபலமான போக்கு இன்றும் அனைவரும் அறிந்த கருத்துக்களுக்கு அனைவரும் அறியச் சாத்தியமான உவமையணிகளை உருவாக்குவதிலேயே ஈடுபட்டுள்ளது. ஆனால் 'எழுத்து' இதழில் தொடங்கி, சிற்றிதழ்களினூடாக வளர்ந்து, இன்று மைய இடத்தைப் பிடித்துள்ள புதுக்கவிதையின் உண்மையான மரபுச் சொற்களையல்ல, சொற்களின் இடையே தேங்கும் மௌனத்தையே புதுக்கவிதை வாசகன் வாசிக்கவேண்டும் என்று ஏறத்தாழ நிறுவிவிட்டது. புதுக்கவிதையை வாசித்து விரித்தெடுக்கும் கணிசமான வாசகர்கள் இன்று தமிழில் உருவாகியும் விட்டார்கள். ஆனால் அவர்களுடைய கவனம் இன்னமும் குறள் மீது விழவில்லை. காரணம் அதன் மீது சுமத்தப்பட்டுள்ள நீதி நூல் என்ற முத்திரையேயாகும். அந்த எல்லையைத் தாண்டி நவயுகத்தின் புதிய புதிய வாசிப்புகளுக்குத் தமிழின் இப்பேரிலக்கியத்தை ஆளாக்க வேண்டிய அவசியம் இன்று உள்ளது. ●



# வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும்



தமிழண்ணல்



திருவள்ளுவரின் சமகாலப் பின்புலமும் சங்க காலத் தமிழகச் சூழ்நிலையும் தெரிந்தால்தான், வள்ளுவர் புதுமை மட்டும் படைத்தாரல்லர்; புரட்சியும் செய்தாரென்பது விளங்கும். மேலும் திருக்குறளை, 'தோள் கண்டார் தோளே கண்டார், தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார்' என்றாற்போலப் பகுதி பகுதியாகப் படித்தவர்களைவிட, முழுவதும் பயின்றவர்களாலேதான், அதன் நீரோட்டம் போன்ற உயிரோட்டமான கருத்து உணரப்படும்.

ஒரு செவிவழிச் செய்தியுண்டு. மதுரையில் திருவள்ளுவர் குறளை அரங்கேற்றியது பற்றிய கதைகள் அவை. பொற்றாமரைக் குளத்தில்,



திருக்குறள் ஏடுகளைப் போட, அவை மிதந்துவந்து பொன் தாமரையில் அமர்வதைக் காட்டி, ஔவையார் குறளை ஏற்குமாறு, சங்கப் புலவர்களைச் சம்மதிக்க வைத்தார் என்பது ஒரு கதை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில், சங்கப் பலகை ஒன்று இருந்ததாம். அது தகுதிவாய்ந்த புலவர் வந்தால்தான், சற்றே நீண்டு அவர் அமர இடம் கொடுக்குமாம். திருவள்ளுவர்க்கு அது இடம் கொடுக்காது காலம் தாழ்த்தபோது, ஓர் 'அசரீரி' – வான்வழியாக ஒலித்ததாம். அத் தெய்வக் குரலைக் கேட்ட பிறகுதான், வள்ளுவர்க்குச் சங்கப் பலகையில் இடம் கிடைத்ததாம்!

இதில் ஓர் அடிப்படை உண்மை இருப்பதை மறுக்கமுடியாது. திருவள்ளுவர் எளிதாகச் சங்கப் புலவர்களால் ஏற்கப்படவில்லை; திருக்குறளும் எளிதாக அரங்கேற்றப் பட வில்லை. அதற்குக் காரணம் அவர் கூறியுள்ள புதுமைக் கருத்துக்களும் புரட்சிச் சிந்தனை களுமேயாகும்.

அவர் காலத்தே நிறுவனச் சமயங்கள் கிளைத்துப் பல்கியிருந்தன. வைதிகம், சமணம், பௌத்தம் என்பன தலைமை வாய்ந்தவை. தமிழ்ப் பண்பாட்டுவழி அரும்பிய சிவனியமும் மாலியமும் (சைவ, வைணவம்) தனித் தன்மையுடன் விளங்கின. திருவள்ளுவர் இவற்றிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொண்டாரே தவிர, எதனுடனும் சார்ந்து தம்மை அடையாளப் படுத்திக்கொள்ளவில்லை. தாமே தமக்கென்று ஒரு புதிய சமயத்தைப் படைத்துக்கொள்ளவும் விரும்பவில்லை. 'சமயக் கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்' எனக் கல்லாடர் கூறுவதுதான், பொருத்தமான மதிப்புரையாகும். இதனால் திருவள்ளுவர் யாருடைய ஆதரவுமின்றித் தனித்து நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்.

சிவநெறி, மால்நெறி இவற்றுடன் திருக் குறள் நெருங்கிய கருத்துத் தொடர்புடன் விளங்குகிறது. சிவநெறி கூறும் வினைக் கோட்பாடும், இல்லற நெறிகளும் குறள் நூலுக்குப் பொருந்தி வருகின்றன. இவற்றுக்குக் காரணம், இவை யாவும் தமிழ்ப் பண்பாட்டில் முகிழ்த்தவையாய் இருப்பதேயாம்.

### இறை வாழ்த்து

திருவள்ளுவர் பண்புருவமான இறை வனைக் காட்டி, அவனைத் தொழுவதன் மூலம் உயிர்களும் அப்பண்புடையனவாக ஆதல் வேண்டுமென்பது புதிய பார்வையாகும். வாலறிவனைத் தொழுவது, தாமும் அத் தூய அறிவைப் பெறுவதற்கேயாம். அவ்வாறன்றிக் கற்பது மட்டும் போதாது. கல்வியால் காரறிவும், புல்லறிவும் கூட வளர வாய்ப்புண்டு. தனக்குவமை இல்லாத இறைவன், மனக் கவலையற்றவன். அவனைச் சேர்ந்தாலன்றி, நாம் நம் மனக் கவலைகளை மாற்ற இயலாது. சேர்தல், இடைவிடாது நினைத்தல் என்பார் பரிமேலழகர். அதுதான் மன ஓர்மை, தியானம் என்பது. இங்ஙனம் பண்பின் திருவுருவமாக இறைவனைக் காட்டி, அப்பண்புருவகத்தையே இடைவிடாது நினைத்து, உயிர்கள் தாமும் அவற்றை அடையவேண்டுமென்பது, பகுத்தறிவுக்கும் ஒத்து வரும் இறை வழிபாடாகும். திருவள்ளுவர் முதல் அதிகாரத்தில் செய்துள்ள புதுமையே, மிகப்பெரிய மெய்யியல் தத்துவமாகத் தனிநூலில் விரிக்கத்தக்க, புதியதொரு இறைக் கோட்பாடாகும்.

### ஒழுக்கம் தவறாத நீத்தார்

நீத்தார் பெருமை, துறவு அதிகாரங்களில் குடும்பத்தை விடுதல், பெண்ணாசை தவிர்த்தல், பெண் ஒரு தளை எனல், காவி உடுத்தல், கமண்டலம் ஏந்துதல், காட்டிற்குப் போதல் என எதனையும் குறித்தாரல்லர். ஒழுக்கத்துடன் பண்பாளராய் வாழ்தலையே விளக்குகின்றார். 'பொய்தீர் ஒழுக்க நெறி' என்று முன்னே குறித்தார். பின்னர் 'கூடா ஒழுக்கம்' என்று, காவி உடைக்குள் மறைந்துகொண்டு கயவர் களாய் வாழ்வதைக் கண்டிக்கவேண்டிய மட்டும் கண்டித்தார். நீத்தாராய் வாழ்பவர்கள் உலகப்பற்றை நீத்தல் வேண்டும்; ஒழுக்கத்தில் தவறாதவராக வாழவேண்டும்; ஐம்புலன்



# வள்ளுவர் செய்த புதுமையும் புரட்சியும்



அடக்க வேண்டும்; செயற்கரியன செய்யவேண்டும்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக வேண்டும். இவை யாவும் நடத்தை பற்றியனவே. தந்நலம் நீத்தார், அறிவியலறிஞர்கள் வரலாற்றில் காண்பதுபோலச் செயற்கரிய கண்டுபிடிப்புகளுக்காக 'வாழ்க்கை வசதிகளைத் துறந்தார் யாவரும் நீத்தாராவரேயன்றி, புற வேடதாரிகளை மட்டும் நீத்தாரென ஒப்பத் திருக்குறள் இடந்தரவில்லை.

### இல்லறத்திற்குத் தலைமை

வட இந்தியச் சமயங்கள் அனைத்தும் இவ்வுலக வாழ்க்கையை வெறுப்பு நோக்கில் பார்க்க வைத்தன. துறவு, இல்லறம் என வரும்போது, துறவு நிலைகளுக்கே முதன்மையும் தலைமையும் தந்தன. இல்வாழ்வைக் கையுதறவும் பெண்ணை ஓர் ஆன்மா என்றுகூடக் கருதாது, பாவப் பிறப்பு எனக் கருத்துருவாக்கவுமே முயன்றன. இச் சூழலில், தமிழ்ப் பண்பாட்டு வழிவந்த திருவள்ளுவர், இல்லறத்திற்கே தலைமையும் முதன்மையும் தந்தார்; ஏனைய துறவு நிலைகட்கும் அந்நிலையில்





இயல்பாக வாழ்பவர்கட்கு இல்லறத்தாரே துணை என்றார்; இல்லறத்தில் வாழும் நெறிப்படி வாழ்பவர் வானுறையும் தெய்வத்திற்கு நிகராவர் என்றார். இந்தியச் சிந்தனை வளர்ச்சியில், இவ்வுலக வாழ்க்கையை, விருப்பு நோக்கில் பார்க்க வைத்தவர் திருவள்ளுவர் ஒருவரே எனச் செருமானியப் பேரறிஞர் ஆல்பர்ட்டு சுவைட்சர் கூறியுள்ளமை நினைவிற்கொள்ள வேண்டிய கருத்தாகும். 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே' என்பது, வள்ளுவரின் முடிந்த முடிவாகும்.

### இல்லறத்தின் தொடர்ச்சியே துறவு

இல்லறமும் துறவறமும் சமயங்கள் கூறுவது போலத் தனித்தனி நிலைகள் அல்ல. இல்லறத்தின் தொடர்ச்சியே துறவு. இல்வாழ்வே இயற்கைக்குப் பொருந்திய வாழ்வு. அதில் காம இன்பம் துய்த்து, வேட்கை தீரப்பெற்ற ஒருவர், வாழ்க்கைப் பற்று முதலியன மனத்தளவில் நீங்கி, சிறந்தன, அரியன, பொது நலனுக்குரியன பலவும் செய்து வாழ்தலே துறவாகும்.

*'காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும்*
*கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'*
(1138)

— என்று, தொல்காப்பியரும் துறவு, தவம் என்றெல்லாம் கூறாது, சிறந்தன யாவையும் செய்தலே வாழ்ந்து முடிந்ததன் பயனாகும் எனக் குறிப்பதுதான், வள்ளுவத்திலும் இடம் பெற்றுள்ளது.

சில அதிகார முதற் குறள்கள், அவ்வவ் அதிகாரத் தலைப்புக்கேற்ற இலக்கணம் அல்லது புதுவிளக்கம் கூறுவனவாக அமையக் காணலாம். இனியவை கூறல் முதற் குறளும் வாய்மை அதிகார முதலிரு குறள்களும் அவைபற்றிய இலக்கணம் கூறுதல் கருதத் தக்கது. அவைபோலவே, துறவு, தவம், வேள்வி மூன்றனுக்கும் திருவள்ளுவர் புது இலக்கணம் வகுக்கின்றார்.

*'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்'.*

*'உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண்*
*செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு'.*

*'பரிந்துஓம்பிப் பற்றுஅற்றேம் என்பர்*
*விருந்துஓம்பி*
*வேள்வி தலைப்படா தார்'.*

— சிறுகச் சிறுகப் பற்று விடுதலே துறவு. தனக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதலும் பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம். விருந்தோம்பல் ஒரு வேள்வி. இவை யாவும், திருக்குறளை முழுமை நோக்கில் பார்த்து, அதன் கருத்து நீரோட்டத்துடன் இணைத்துப் பார்க்கத்தக்கன. அன்றைய பின்புலத்தில் இவை புதுமை மட்டுமன்றிப் புரட்சிகரமானவையுமாகும்.

### சங்க இலக்கியப் பின்புலத்தில் திருக்குறள்

தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் பற்றிய தெளிந்த அறிவுடையவர்க்கே, திருக்குறளின் 'உள்ளொளி', தெள்ளிதிற் புலனாகும். இவண் ஒரேஒரு காட்டினைக் காட்டுதல் தகும். அதியமான் நெடுமான் அஞ்சி போர்க்குணம் மிக்கவன். போர் இல்லாதபோது, வீட்டின் இறப்பிலே செருகிவைத்த தீக்கடை கோல் போல, மிக அமைதியாக இருப்பான். போரென்று வந்துவிட்டால், அத் தீக்கடை கோல்களைச் சுழற்றியதும் தோன்றும் காட்டுத்தீயைப் போல வெளிப்பட்டுக் கூவிளரியும் நெருப்பாகத் தோன்றுவான். இவ்வாறு அஞ்சியின் வீரத்தை ஒளவையார் புனைகின்றார்.

*'..... நெடுமான் அஞ்சி*
*இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போலத்*
*தோன்றா திருக்கவும் வல்லன்; மற்று*
*அதன்*
*கான்றுபடு கனைஎரி போலத்*
*தோன்றவும் வல்லன்தான் தோன்றுங்*
*காலே' (315)*





இறை — வீட்டு இறப்பு. தாழ்வாரம். செரீஇய — செருகிவைத்த. ஞெலிகோல் — தீக்கடை கோல். கான்று படு — காட்டில் தோன்றும். கனை எரி — கூவி எரியும் நெருப்பு. இப் பாடலில் அஞ்சி 'தோன்றாது இருக்கவும் வல்லவன், தோன்ற நேரின் கனை எரிபோலத் தோன்றவும் வல்லன்' என வரும் சொல், தொடர், கருத்தமைவு, ஒரு குறளை நமக்கு நினைவூட்டுகிறது.

*' தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று'*



என்ற குறளுக்கான விளக்கம், முன்னைய புறநானூற்றுப் பாடலடிகளில் கிடைக்கிறது. அதாவது ஒரு முயற்சியில், செயலில் ஈடுபட்டுத் தோன்றினால் புகழோடு தோன்றவேண்டும்; அத்திறமை இல்லாதார் தோன்றாதிருப்பதே நல்லது — ஒரு செயல் முயற்சியில் ஈடுபடாதிருப்பதே நல்லது.

புறநானூற்று ஒளவை பாடலுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய ஒற்றுமையிருப்பதைக் கூர்மையாய்ப் படித்துணர வேண்டும். 'பிறந்தால் புகழுக்கேற்ற குணத்தோடு பிறக்கவேண்டும்: அக் குணநலம் இல்லாதார் மக்களாய்ப் பிறந்ததைவிட, விலங்காய்ப் பிறந்திருக்கலாம்' என்பதும் 'பிறந்ததைவிடப் பிறவாமல் இருந்திருக்கலாம்' என்பதும் பழைய உரைகள். அவை தவறு என்பதைப் புறநானூற்று ஒளவை பாடல் தெளிவுபடுத்துகிறது.

திருக்குறளின் உள்ளொளி இங்ஙனம் இயல்பாகவும் முழுமையாகவும் துலங்கவேண்டும். அங்ஙனம் நாம் விளங்கிக்கொண்டு, உலக மொழிகளில் தரவேண்டும்.

* * * * *



**TEXT-BOOK ON MORAL LIFE**

It is a text-book of indispensable authority on moral life. The maxim of Valluvar has touched my soul.

*Mahatma Gandhi*

# திருவள்ளுவருக்கு கலைஞரின் திருப்பணிகள்

திருக்குறளின் பாதிப்பு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு இளமை காலம் முதலே இருந்து வந்திருக்கிறது. அவரது முதல் சொற்போர் பள்ளி பருவத்தில் 'நட்பு' என்ற பொருள் பற்றித்தான். இந்த தலைப்பே திருக்குறள் – 'நட்பு' என்னும் அதிகாரப் பெயரின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும்.

திருவள்ளுவருக்கும் திருக்குறளுக்கும் கலைஞர் அவர்கள் முன்னின்று செய்த சிறப்புகள் இங்கே பட்டியலிடப்பட்டுள்ளன.

### திருமயிலையில் திருவள்ளுவர் சிலை

சென்னை மயிலாப்பூர் பகுதியில் தி.மு.கழகத்தின் பொறுப்பில் சென்னை மாநகராட்சி நிர்வாகம் வந்ததற்குப் பிறகு, வாழ்வுக்கு வழிவகுத்த தமிழ்த் தலைவன் – உலகப் பெரும்புலவன் – மக்களாட்சித் தத்துவம் உரைத்திட்ட மாமேதை – 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று பேசிய பகுத்தறிவுப் பகலவன் – 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து கெடுக உலகியற்றியான்!' என்று ஆண்டவனுக்கே அறைகூவல் விடுத்திட்ட புரட்சிப் பொறி, திருவள்ளுவருக்குச் சென்னை மயிலாப்பூரில் 2–6–1966 அன்று சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

### பேருந்துகளில் திருக்குறள்

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டில் ஆட்சியை உருவாக்கிய பொழுது பொதுப்பணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக கலைஞர் பொறுப்பு வகித்தபோது, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பேருந்துகளிலெல்லாம் திருவள்ளுவரின் படத்தை அமைத்து, திருக்குறளையும் பொறிக்கச் செய்தார்.

### சுற்றுலா மாளிகைகளில் திருவள்ளுவர் படமும் திருக்குறளும்

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டில் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த எல்லாச் சுற்றுலா மாளிகைகளிலும் – அரசாங்கச் சுற்றுலா மாளிகை – நகராட்சிப் பயணிகள் விடுதி போன்றவைகளில் எல்லாம் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை வைக்கவேண்டுமென்றும், அதில் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்ற குறள் எழுதி வைக்கப்பட்டது.

### கடற்கரையில் திருவள்ளுவர் சிலை

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டையொட்டி 2–1–1968 அன்று, சென்னை கடற்கரையில் திருவள்ளுவர் சிலையை முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள், கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் திறந்துவைத்தார்.

### திருக்குறள் ஆராய்ச்சி

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று இலட்சமும், மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு மூன்று இலட்சமும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மூன்று இலட்சமுமாக மொத்தம் ஒன்பது இலட்சம் ரூபாய் திருக்குறள் ஆராய்ச்சிக்காக அளிக்கப்பட்டது.

### திருவள்ளுவர் திருநாள்

முதல்வர் கலைஞர் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் 30–10–1969 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் பொங்கல் விழாக் கொண்டாடப்படும் நாளுக்கு அடுத்த நாள், 'திருவள்ளுவர் நாள்' என்றும், திருவள்ளுவர் நாள் விடுமுறை நாள் என்றும், 3–11–1969 அன்று அரசின் ஆணையாக வெளியிடப்பட்டது.

### காவலர் பதக்கத்தில் திருவள்ளுவரின் திருவுருவம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு, அவரது பிறந்த நாளில், காவல்துறையைச் சேர்ந்த திறமையானவர்களுக்கு முதல்வர் பதக்கமும், சிறந்த சேவைக்காகப் பொற்கிழியும், நற்சான்றிதழும் தரவேண்டும் என்று முடிவெடுத்து – அப்படி



வழங்கப்படும் பதக்கத்தில் திருவள்ளுவரின் திருவுருவம்தான் பொறிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்தவர் கலைஞர்.

### திருவள்ளுவர் ஆண்டு

கலைஞர் முதலமைச்சராக இருந்தபொழுது 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும், திருவள்ளுவர் ஆண்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

### திருவள்ளுவர் நினைவாலயம்

சென்னை – திருமயிலை திருவள்ளுவர் நினைவாலயம் திருப்பணிக்கான அடிக்கல் 27–4–1973 அன்று கலைஞர் அவர்களால் நாட்டப்பெற்று பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

### வள்ளுவர் கோட்டம்

'ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறையாம்' அந்தக் குறளோவியத்தின் கோட்டம் அதாவது வள்ளுவர் கோட்டம் வடிவமைக்கப்பட்டது. சென்னை நுங்கம்பாக்கத்தில் 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 18–9–1974 அன்று திருவாரூர் தேர் வடிவில் அமைக்க முடிவு செய்து, முதல்வர் கலைஞர் அடிக்கல் நாட்டினார். திராவிடக் கட்டடக் கலாச்சாரத்தை அடிப்படையாக வைத்து "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறளுடன் தோரண வாயில் அழகிய வடிவில் அமைக்கப்பட்டது. இங்கிருந்து தலைவாயிலை அடையும் வரை உள்ள நடைபாதைக்கு இருபுறமும் பச்சைப் போர்வை விரித்தது போல் எழிலார்ந்த புல்வெளித் தோட்டம் அமைக்கப்பட்டது. அறம், பொருள், இன்பம் என்ற திருக்குறளின் 1330 பாக்களும் திறந்த புத்தக வடிவில் கலைவண்ண நயத்துடன் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டன. திருவள்ளுவரைப் போற்றும் "திருவள்ளுவர் மாலை" பாக்களும் பொறிக்கப்பட்டன. கோட்டத்தின் மேல்தளமான வேயா மாடத்தின் வடக்குப்புறத்தில் சிற்பத் தேரின் கருவறையில் திருக்குறளின் முப்பாலைக் குறிக்கும் வகையில், மூன்று விரல்களை உயர்த்திய நிலையில் அழகிய பீடத்தில் ஒளிமிக்க கருங்கல்லினால் ஆகிய திருவள்ளுவர் சிலை உயிரோட்ட அழகோடு அமைக்கப்பட்டது.

தேர்ச்சக்கரத்திற்கும், 'திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பளிங்கு பீடத்திற்கும் இடையில் உள்ள தேரின் மத்திய பாகத்தில் 133 குறட்பாக்களுக்குப் பொருள் விளக்கம் அளிக்கும் அழகிய சிற்பங்கள் உயிரோவியங்களாய்ச் செதுக்கப்பட்டன.

### தமிழ்நாடு இல்லத்தில் சிலை

புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் அரசின் சார்பில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு, அந்தச் சிலை 16–1–1976 அன்று திறந்துவைக்கப்பட்டது.

### குறளோவியம்

ஒன்றுக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களுக்கோ பதவுரை, விரிவுரை என்று எழுதிக்கொண்டிராமல், பலரும் விரும்பிப் படிக்கத்தக்க வண்ணம் அவர்களைக் கவர்ந்திழுத்துக் கருத்துக்களை நெஞ்சத்தில் பதிய வைத்திட வேண்டுமென்ற ஆசைத்துடிப்புத்தான், கலைஞர் அவர்கள் "குறளோவியம்" என்ற தலைப்பில் தொடர்ந்து எழுதிட வைத்ததாக அவரே குறிப்பிட்டுள்ளார். "குறளோவியம்" நூலில் முன்னூறு குறள்கள் இடம் பெற்றுள்ளன. பயன்படுத்தப்பட்டுள்ள குறட்பாக்கள் 354 ஆகும். அறத்துப்பாலில் 76 குறட்பாக்கள்; பொருட்பாலில் 137 குறட்பாக்கள்; இன்பத்துப்பாலில் 141 குறட்பாக்கள்.

### திருவள்ளுவர் ஓவியம் தீட்டியவருக்கு உதவி

"குறளோவியம்" வெளியீட்டு விழா 17.2.1985 அன்று சென்னையில் நடைபெற்றபோது திருவள்ளுவருக்கு ஓவியம் தீட்டிய வேணுகோபால் சர்மாவை அந்த விழாவிற்கு அழைத்து, அவருக்கு நூலின் விற்பனையின் மூலம் கிடைத்த தொகையில் பத்தாயிரம் ரூபாய் கொண்ட பொற்கிழியை கலைஞர் அவர்கள் வழங்கினார்.

ஓவியர் திரு. வேணுகோபால் சர்மா அவர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்று ஓவியரின் புதல்வர் 24.5.1989 அன்று முதல்வர் கலைஞரை சந்தித்து விவரத்தைத் தெரிவித்தவுடன் முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாயை ஓவியருக்கு வழங்க உத்தரவிட்டார்.

வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கான உரிமையைத் தமிழக அரசு பெற்றுக்கொண்டு, அவரது குடும்பத்தாருக்கு 3 இலட்சம் ரூபாய் வழங்கும்" என்று கலைஞர் அறிவித்து, அதன் தொடர்ச்சியாக, 1990 ஏப்ரல் 7 ஆம் தேதியன்று தலைமைச் செயலகத்தில் ஓவியரின் குடும்பத்தாருக்கு மூன்று இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

### திருக்குறள் உரை

354 குறட்பாக்களைக் கொண்டு குறளோவியம் எழுதி முடித்தபிறகு, 1330 குறட்பாக்களுக்கும் உரையெழுத வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு கலைஞரை ஆட்கொண்டது. அதனை நிறைவேற்றி மகிழ "முரசொலி" நாளேட்டில் ஒவ்வொரு நாளும்



அவர் எழுதிய திருக்குறள் உரைகளின் தொகுப்பு 1996ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் நாள் திருக்குறள் உரை நூலாக வெளியிடப்பட்டது.

### திருவள்ளுவர் கலையரங்கத்திற்கு உதவி

1996ஆம் ஆண்டில் கலைஞர் அரசால் புதுதில்லியிலுள்ள தில்லித் தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவர் கலையரங்கம் அமைத்திட 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது.

### கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை

முக்கடல் சந்திக்கும் குமரி முனையில் வான்புகழ் வள்ளுவருக்குச் சிலை அமைக்க 31–12–1975ஆம் நாளன்று கலைஞர் தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டு, சிலை அமைப்புக்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது 1976ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அரசு கலைக்கப்பட்டது.

15–4–1979 அன்று இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் திரு.மொரார்ஜி தேசாய் அவர்கள் அடிக்கல் நாட்டிய போதிலும் சிலையமைப் பதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை.

மீண்டும் 6–9–1990 அன்று குமரி முனையில் திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணியை கலைஞர் தொடங்கி வைத்தார்.

1990ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் சிலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருந்த போதிலும், 1991ஆம் ஆண்டு முதல் 1996ஆம் ஆண்டு மே திங்கள் வரையிலான காலத்தில் பணிகள் மிகவும் தொய்வடைந்து நின்றுவிட்ட நிலையில் இருந்தன.

நான்காவது முறையாக முதலமைச்சராக கலைஞர் மீண்டும் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 25.6.1997 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், 1999ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சிலை அமைக்கும் பணிகளை முடித்திட வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. அத்துடன் சிலை அமைப்புப் பணிகளுக்குத் திருத்திய செலவின மதிப்பீடாக 6.14 கோடி ரூபாயும், தமிழ்நாடு கட்டுமானக் கழகத்திற்குரிய திருத்திய செலவின மதிப்பீடாக 1.72 கோடி ரூபாயும் வழங்க 30–7–1997 அன்று அரசு அனுமதி வழங்கியது.

18–4–1998 அன்று கன்னியாகுமரிக்கு நேரடியாகச் சென்று சிலை அமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு அவற்றை விரைவுபடுத்துவதற்கான கருத்துக்களை வழங்கினார்.

சுமார் 9 கோடி ரூபாய்ச் செலவில் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழும் திருவள்ளுவர் சிலைதான் கன்னியாகுமரியில் 2000 ஆண்டில் ஜனவரித் திங்கள் முதல் நாளில் முதலமைச்சர் கலைஞரால் திறந்துவைக்கப்பட்டது.

அரசு அலுவலகங்களிலும் அரசு நிறுவனங்களிலும் திருவள்ளுவரின் பழைய படத்திற்கு பதில் 1–1–2000 அன்று புதிய படம் வைக்கவேண்டும் என்று கலைஞர் ஆணை பிறப்பித்தார்.

### திருக்குறளை முற்றோதல் செய்த குழந்தைகளுக்கு பரிசு

சிலை திறப்பு விழாவில் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சியில் பங்குப்பெற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.1000 குறள் பரிசாக வழங்கப்படும் என்று கலைஞர் அறிவித்தார்.

### அய்யன் திருவள்ளுவர் படிப்பகம்

அதுபோன்றே தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊராட்சி மன்றப்பகுதியிலும் அய்யன் திருவள்ளுவர் படிப்பகங்கள் 16–1–2000 தொடங்க கலைஞர் ஆணை பிறப்பித்தார். ★



# திருவள்ளுவர் சிலை திறப்பு விழா

# கவியரங்கம்




குமரிமுனையில் அய்யன் வள்ளுவர் சிலை திறப்பு விழாவில் 31-12-99 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் தமிழகத்தின் முன்னணிக் கவிஞர்கள் பங்கேற்ற கவியரங்கக் கவிதைகளிலிருந்து...

## அகத்தே நகும்!

– கவிஞர் சுரதா

கன்னியா குமரியிலே, இன்னூற் றாண்டின்
கடைசிநாள் வரும்வரைக்கும் காத்திருந்து,
இந்நாளைத் தேர்ந்தெடுத்து வள்ளுவர்க்கு
இவ்விடத்தில் சிலைவைத்து விழாவெடுக்கும்
பண்பட்ட முதல்வர்க்கு முதல் வணக்கம்!
பாவலர்க்கும் மற்றவர்க்கும் என் வணக்கம்!
அன்றாடம் திருக்குறளைப் பரப்பு கின்ற
ஆரூரா ரே!இதனைக் கூர்ந்து கேளீர்!

கடலழித்த தமிழகத்தின் பரப்பு மேலும்
காலத்தால் அழிந்துவிடக் கூடா தென்றே
இடந்தேர்ந்து வள்ளுவனைத் தேர்ந்தெடுத்து
ஈரடியின் பேருருவை நிறுத்தி விட்டாய்

கடல்கண்ட நாடுகளில் இதற்கீ டாகக்
கண்கவரும் சிலையைத்தான் யார்கண்டார்கள்
அடடாநீ ஒருவன்தான் இனத்தை மீட்கும்
அருஞ்செயல்கள் செய்வதற்கும் முதல்வன்
ஆனாய்!

அடக்கமாய் நாட்டை ஆண்ட
அண்ணாவின் நிழலே! வாங்கும்
வடக்கிலே தெற்கை வைத்து
வாதிடும் நிதியே! நம்மை
ஒடுக்கினார் தம்மைத் தேர்தல்
ஊஞ்சலில் இருந்து தள்ளிப்
படுக்கையில் படுக்க வைத்துப்
பார்த்திட்ட தலைவர் நீங்கள்!

தேரோடும் கோயில் சென்று
தேவாரம் பாடி டாத
ஆரூரர்! ஆளும் கட்சி
அரசியல் அப்பர்; தீமை
தாராத கூட்ட ணிக்குச்
சம்பந்தர்; எதிர்ப்பை எல்லாம்
கூரான மதிநுட் பத்தால்
குடைசாய்க்கும் முதல்வர் நீங்கள்!

இப்போது முதல்வ ராக
இருக்கின்றீர் எனினும்; நீங்கள்
எப்போதும் கலைஞர்! ஈட்டி
எழுத்தாளர்! பெரும்பேச் சாளர்!
பொய்ப்போர்வைக் கதைக்குள் தூங்கும்

புராணத்தின் பகைவர்! நீங்கள்
முப்பாலின் முதற்பால்! கொத்து
முத்தமிழ் உமக்குத் தாய்ப்பால்!

கூடா ஒழுக்கம் கொண்டவர் தம்மை
அவருள் இருக்கும் ஐம்பூ தங்கள்
நகைக்கும் என்று நவின்றார் வள்ளுவர்,
அல்லவை தன்னை நல்லவை ஆக்கித்
திருத்திட நமக்குத் திருக்குறள் தந்தார்!
அவரது கருத்தை அடியொற்றிப் பாடிட
இங்கு வந்துள்ளேன் இதனைக் கேளீர்!

மெய்மைதனை ஒதுக்கிடுவார் வேடம் கண்டும்,
மெய்கண்டார் எனும்பெயரால் வாழ்ந்துகொண்டும்,
கையூட்டாம் இலஞ்சத்தை வாங்கிக் கொண்டும்

கூடுவிட்டுப் போகும் உன் ஆவி'' என்று
கூறிவென்ற மேனகையை அறிவோம்; இந்த
நாடின்னும் தாடி, மீசை, சாமி யாரை
நம்புவதில் பொருளுண்டா? அதனால் நேரும்
கேடுகண்டும் திருந்தாரை, ஐம்பூ தங்கள்
கேடுகெட்டார் என்றவரைப் பழித்தி டாதா?

அவனின்றி ஓரணுவும் அசையா தென்றே
அளப்பார்கள்; காவியுடை உடுத்தி யுள்ள
தவவேடத் துறவிகளின்கோலம் கண்டும்
தெய்வத்தின் மாற்றுருவாய்ச் சொல்லிக் கொண்டும்
குவளைக்கண் நங்கையரை கற்ப ழிக்கும்
கொடியவரின் செயல்கண்டும் அவ்வப்போது
அவருக்குள் இருக்கின்ற ஐம்பூ தங்கள்
''அடப்பாவி'' என்றவரை நகைக்கு மன்றோ!



காரியத்தை முடிக்காதோர் தம்மைக் கண்டும்
பொய்பேசி ஏமாற்றிக் கொண்டி ருக்கும்
புன்சிரிப்புக் கூட்டத்தின் செயலைக் கண்டும்
ஐம்பூத மாம் நிலம் நீர் காற்று வானம்
அன்றாடம் அன்னாரை நகைக்கும் அன்றோ!

மேடுகட்டி இருக்கின்ற இடத்தில் உள்ள
மேலாடை தனைச்சிறிது நீக்கி விட்டால்,

சாதுவேடம் போட்டுக் கொண்டி ருப்போர் எல்லாம்
சாதுவல்லர்; சண்டியர்கள் அங்கே உண்டு!
மாதுவேடம் போட்டிருப்பார்; அவருக் குள்ளும்
மனிதவெடி குண்டுகளும் மறைந் திருக்கும்
யாதுகேடு பயக்குமென்று அறிந்திடாமல்
ஆதரித்துக் கொண்டிருந்தால் அதுவே ஓர் நாள்
தீதுதரும்; உணராரை; ''ஐம்பூ தங்கள்''
தினந்தோறும் அவரகத்தே நகுமே நாளும்! ★



# பறியா நகும்!

- கவிஞர் அப்துல்ரகுமான்

குறள் என்றால் குள்ளம்
ஆனால் இந்தக்
குள்ளம்தான் நம்மை
உயர்த்தியது!
உயர்ந்தவருக்கு
நம்மை உயர்த்தியவருக்கு
உயரமான சிலை

வடக்கே!
உன் இமய உயரத்தால்
கர்வப்படாதே
தெற்கு உன்னைவிட உயரம்
உன் உயரம்
வெறும் கல் உயரம்
தெற்கின் உயரமோ
சொல் உயரம்
வள்ளுவரின் சொல் உயரம்
விலங்கு
ஈரடியால் நடந்த போது
மனிதன் ஆனது
தமிழ், குறளென்ற
ஈரடியால் நடந்தபோது
மனிதம் பெற்றது

திருக்குறள் -
தமிழ் பருவமடைந்தபொழுது
வள்ளுவர் தந்த மாராப்பு

'நூ'லென்றால் சிக்கல் விழும்
வள்ளுவரின் 'நூ'லோ
சிக்கல்களைத் தீர்க்க வந்த நூல்

என்ன அதிசயம்!
ஒரு நூலே நமக்கு
ஆடையானதே!

ஒரு நூலே
ஊசி இல்லாமல்
நம் கிழிசல்களையெல்லாம்
தைத்துவிட்டதே!

போர்க்களம் -
வேலே எழுதுகோலாய்
விழுப்புண்களே எழுத்தாய்
வீர காவியம்
எழுதும் ஏடு
அங்கே -
வீரன் ஒருவன்; அவனோ
புண்படா நாளை
எண்படா நாள் என்பவன்

ஒரு வேல் ஏந்தும்
மனிதனோடு போர் புரிவதைவிட
'இருவேல்' ஏந்தி
எதிர்க்கவரும் யானையுடன்
மோதுவதே வீரம் எனும்
கொள்கை உடையவன்

எனவே, அவன்
மனிதர்களைத் தவிர்த்து
மண்மேல் நடந்துவரும்
மாமிச மலைகளைத்
தேடிச் சென்றான்
அப்போது-
களத்தில் அவனை நோக்கிக்
களிறொன்று வந்தது; அவன்
களிப்போடு தன்
கைவேலை அந்தக்
களிற்றின்மேல் எறிந்தான்
களிறு பிளிறிக் கொண்டு
களத்தில் சாய்ந்தது

அப்போது
யாரோ எறிந்த வேல்
அவன் மார்பில் தைத்தது
அவன்
வேலைப் பறித்தெடுத்தான்
எடுத்தபோது நகைத்தான்
அவன் ஏன் நகைத்தான்?

அடிபட்டால் அழுவது
கோழைகளின் குணம்
அவனோ வீரன்
அதனால் நகைத்தானா?

இல்லை; இந்தக்
காயத்தால் எல்லாம் என்
'காயம்' சாயாது என
எய்தவனைப் பார்த்து நகைத்தானா?

'வெறுங்கையோடு நின்றேன்
வீரத்தைக் காட்ட ஒரு
வேல் இல்லையே என
ஏங்கினேன்

கிடைத்துவிட்டது' என்று
நகைத்தானா?

எதிரி
தன் மரணத்துக்குத்
தன் ஆயுதத்தையே
கொடுத்ததை எண்ணி
நகைத்தானா?

இல்லை.
தன் காயம் என்ற வாய்
வேலைப் பார்த்து
நகைத்ததைக் கண்டு
நகைத்தானா?

இல்லை,
விழுப்புண்ணை,
யுத்த மகளின்
ரத்த முத்தத்தை,
வீரத்தின் கையெழுத்தை
விரும்பி வந்தோம்
கிடைத்துவிட்டது என்று
மகிழ்ச்சியால் நகைத்தானா?

வெறுங்கையோடு நின்ற
என்மீது
வேலெறிந்தானே
அவனும் ஒரு வீரனோ என
ஏளனமாய் நகைத்தானா?

இல்லை,
நிராயுதபாணியாய்
நிற்கும் தன்மேல்
பகைவனின் ஆயுதம்
தவறிப் போய்ப் பட்டாலும்
அவன் வீரத்திற்குக்
களங்கம் வரும்
இப்போது
பகைவனின் மானம் காக்கத்
தன் கைக்கு வேல் வந்ததை
எண்ணி
ஆறுதலாய் நகைத்தானா?

இல்லை,
தன் உடலே அம்பறாத்தூணியாய்
ஆனதை எண்ணி
வேடிக்கையாய் நகைத்தானா?

இல்லை,
மைக்கூடாய் என்
மெய்யிருக்கிறது
குருதி என்ற
மை இருக்கிறது
எழுதுகோல் இல்லையே
என்று ஏங்கினேன்
கிடைத்துவிட்டது என்று
நகைத்தானா?

இல்லை,
வெற்றி அல்லது
வீரமரணம் என்ற
முடிவோடு வந்தேன்
இதோ-
மரணலோகத்திற்குச் செல்ல
ஒரு வாசல் திறந்துவிட்டது
என்று நகைத்தானா?

அவன் நகையின் காரணம்
எதுவென்று யாரறிவார்?
அது எதுவாயினும்
அந்த நகை
வீரமகள் அவனுக்கு
விருதாகத் தந்த 'நகை'
அந்த நகை வாழ்க! ★





# மெல்ல நகும்!

– கவிஞர் வைரமுத்து

அரங்கின் தலைவா!
ஆட்சியின் தலைவா!
தமிழின் தலைவர்!
தமிழர் தலைவர்!

எனக்கொரு சந்தேகம்!

திருக்குறளுக்கும்
திருக்குவளைக்கும் நெடுநாள் பந்தமா?

வள்ளுவன் என்ன உன்
தூரத்துச் சொந்தமா?

இல்லை
உனக்கும் அவனுக்கும்
ஓரே ரத்தமா?

எத்தனை ஒற்றுமைகள்
உனக்கும் அவனுக்கும்?

அவன் அகரத்தில் தொடங்கி
'ன' கரத்தில் முடித்தவன்

நீயும்தான்
அண்ணா என்ற அகரத்தில் தொடங்கி
தமிழன் என்ற 'ன' கரத்தில் முடிப்பவன்!

ஆச்சரியம் பாருங்கள்

இருவருமே
அதிகாரம் படைத்தவர்கள்

அவனும் நீயும்
பெரியாரைத் துணைக்கோடல்
நன்றென்று சொன்னவர்கள்

அவன் காவியம் செய்தான் – நீ
குறளோவியம் செய்தாய்

அவன் தமிழின் கரை கண்டான்
கரை கண்டவனுக்கே – நீ
உரை கண்டாய்!

இன்னுமொரு கருத்து
அவன் பெயரும் ஐந்தெழுத்து
உன் பெயரும் ஐந்தெழுத்து

உன்னைப் புகழ்பாடுவதாய்ப் புலவர்கள் மீது
குற்றப்பத்திரிகை வாசிக்கிறார்கள்

குற்றமா?

புலவன் புரவலனைப் பாடினால்
அது சிறுமை

ஒரு புலவனையே புலவன் பாடுவது
பெருமை

வள்ளுவன்!
எங்கள் மொத்த இனத்தின்
முழு முதல் அவன்

உலகம் அவனைப் பார்க்கிறது
தாடிவைத்த தமிழென்று

நான் அவனைப் பார்க்கிறேன்

நுரைக்க நுரைக்கக்
காதலித்த கவியென்று

அறத்துப்பாலும் பொருட்பாலும்
மனிதம் வாழ வகுத்த கணிதம்

அவன்
காமத்துப் பால்தான்
கவிதையெனும் புனிதம்

அவன் அறம்பொருள் எழுதியது ஆணிகொண்டு
காமத்துப்பால் எழுதியது பீலிகொண்டு

வானம் பிழிந்து நீலம் எடுத்து
வாழ்வைப் பிழிந்து சாரம் எடுத்து

நிலவைப் பிழிந்து பாலை எடுத்து
நெஞ்சைக் குடைந்து ஞானம் எடுத்து

தீயைப் பிழிந்து ஈரம் எடுத்து
தென்றல் பிளந்து வாசம் எடுத்து

இதயம் புகுந்து காதல் எடுத்து
பெண்மை திறந்து உண்மை எடுத்து

உயிரைக் குடைந்து உணர்ச்சி எடுத்து
தமிழைக் கடைந்து வார்த்தை எடுத்து

சத்தம் அர்த்தம் ஒன்று கலக்க
சித்தம் ரத்தம் ரெண்டும் இனிக்க

காலம் இடம் எனும் எல்லைக்கப்பால்
வள்ளுவன் செய்தான் காமத்துப்பால்



அதிகாலைச் சிரிப்புக்கு
அத்தர் வாசம்
ரோஜாவாய்ப் போனேன்
அத்தராய், ஆனேன் என்று
சொல்லும்

வாசுகி சிரித்தாள்
வாயு மண்டலமே
வாசனை மண்டலமானது

வள்ளுவன் கேட்டான்:
யான் நோக்கிய காலை ஏன்
நிலன் நோக்கினாய்?

புன்னகைத்தாள் வாசுகி
புலவர்க்கு இதுகூடப் புரியாதா?

வேட்கைகொண்ட நிலம் இங்கே
வாழ்க்கை தரும் உழவன்
எங்கே

இந்தச்
செறிவான அர்த்தத்தின்
அறிவான சிருங்காரம்
அதுவல்லவா?

கள்ளியடி நீயென்று
கன்னங் கிள்ளினான்
வள்ளுவன்

''யான் நோக்கும் காலைநிலன் நோக்கும்
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்''

ஏன் மெல்ல நகும்?
தண்டோராபோட்டுத் தாமரைகள் உடைவதில்லை
சத்தங்கள் போட்டபடி சந்திரன் உதிப்பதில்லை

வாய்விட்டுச் சிரித்தால்
ஓரே ஓர் அர்த்தம்தான்

சிக்கனச் சிரிப்புக்கு
வெவ்வேறு அர்த்தங்கள்

பெண்ணின் சிரிப்புக்கு
வாசனை உண்டென்றான் வள்ளுவன்

வாசனையா என்றாள் வாசுகி

அந்திச் சிரிப்புக்குச்
சந்தன வாசம்
தொட்டுக்கொள் என்று சொல்லும்

இரவுச் சிரிப்புக்கு
மல்லிகை வாசம்-கையில்
சுற்றிக்கொள் என்று சொல்லும்

கையில் ஒட்டிய வெட்கத்தைத்
தாடியில் துடைத்துக் கொண்டான்
அவள்
களுக்கென்று சிரித்தாள்

செத்துவிட இப்போதே
சித்தமென்றான் வள்ளுவன்

வஞ்சி அஞ்சி ஓடி வாய் பொத்தினாள்

என்னைஅடக்கம் செய்ய
வசதியான இடமொன்று வாய்த்தால்
செத்துவிடச் சித்தமென்றேன்
அந்த இடம் இன்று கண்டேன் என்றான்

தப்புத் தப்பென்று
தன்னிரண்டு கைகொண்டு
செப்புத் திருமார்பு
சேயிழையாள்தான் மறைத்தாள்

என் அடக்கமுடைமை
உன் நெஞ்சுக்குழியல்ல பெண்ணே
கன்னக்குழியென்றான்



காமத்துப்பாலன்

ஒருநாள்
ஊடலில் வாசுகி
ஒருக்களித்து படுத்திருந்தாள்

வாதம்செய்தான் வழியில்லை
பாதம்தொட்டான் பயனில்லை

புள்ளிவைத்த கவிதையே
பள்ளியெழு என்றான்

புள்ளிவைத்த கவிதையாள்
பொசுக்கென்று எழுந்துகொண்டாள்

ஆம் அழகே!

பாட்டெழுதும்போது
பனையோலை கிழியுமென்று
ஒற்றெழுத்துக்கெல்லாம் யாம் புள்ளி
வைப்பதில்லை

நீயும் கவிதைதான்
உனக்குத்தான் எத்தனை புள்ளிகள்

கன்னத்தில் ஒரு மச்சம்
கழுத்தடியில் திருமச்சம்

புள்ளிமயில் நீதான்
புள்ளிவைத்த கவிதை என்றான்

உன் பெயரை
என்னையன்றி யாரும்
உச்சரிக்கக்கூடாது
எச்சரிக்கை என்றான்

ஏனென்றாள்

உன்னை
வா-சுகி என்று
எவரேனும் அழைக்கலாமா
என்னையன்றி யென்றான்

அவள்சில்லென்று சிரித்தாள்

அந்த ஓசையில் உடைந்த
ஒரு லட்சம் மொட்டுக்கள்

அன்புத் தமிழ்க்குலமே!
அனைத்துலக மாந்தர்களே

இந்த பூமியைக் காப்பது
ஓசோன் கூரையல்ல

மெல்லிய சிரிப்பென்ற
மென்படலம்தான்

உதடுகள் செய்யும்
உலக சேவை
முத்தமல்ல
புன்னகைதான்!

பூமியை முத்தமிட வரும்
புத்தம் புதிய நூற்றாண்டே!

யோசித்து யோசித்து
யாசிக்கிறோம் உன்னிடம்

புன்னகை வேண்டும்
போர்கள் வேண்டாம்

வெய்யில் வேண்டும்
வெப்பம் வேண்டாம்

காற்று வேண்டும்
கடும்புயல் வேண்டாம்

நதிகள் வேண்டும்
வெள்ளம் வேண்டாம்

பசி வேண்டும்
பட்டினி வேண்டாம்

சத்து வேண்டும்
சதைகள் வேண்டாம்

புதிய நூற்றாண்டே!
சவுக்கை எறிந்து
சாமரம் கொண்டு வா

பள்ளங்கள் நிரப்ப வா
பாலங்கள் எழுப்ப வா

பிறக்கும் குழந்தையின்
அலறல் தவிர
பூமியில் வேறு கூக்குரல் வேண்டாம்

ஆண் பெண் நிகழ்த்தும்
அகிம்சையான வன்முறை தவிர
வாழ்வில் வேறு
வன்முறை வேண்டாம்

தானம் வழங்கும் ரத்தம் தவிர
வேறெங்கும் ரத்தம்
வெளிப்பட வேண்டாம்

எழுத்துக்களின் நெடுங்கணக்கில்
இருந்துவிட்டுப் போகட்டும்

அஃதன்றி வேறெங்கும்
ஆயுதம் வேண்டாம்

நெஞ்சமென்ற கிண்ணத்தில்
நேசம் நிறையட்டும்

உயிர்கள் மீதெல்லாம்
பாசம் பரவட்டும்

பறவைகளின் காலனியில்
இழவென்றாலும்
இறுதிஊர்வலத்தில்
மனிதர் நடக்கட்டும்

தேம்ஸ் நதிக்கரைகள்
திருக்குறள் படிக்கட்டும்

சீனப் பெருஞ்சுவர்
பைபிள் எழுதட்டும்

வாடிகன் வாசலில்
குர் ஆன் ஓதட்டும்

வள்ளுவர் வாழட்டும்
கலைஞர் ஆளட்டும்! ★

# நல்லாள் நகும்!

– கவிஞர் ஈரோடு தமிழன்பன்

திருக்குறளை
எத்தனையோ பேர் கற்கிறார்கள்
ஒருவன் நீதான்
ஓயாமல் காதலிக்கிறாய்!

ஒன்றே முக்காலடியில்
ஒரு காதலியா?
அவளைத் தந்தவனுக்கு
நூற்று முப்பத்து மூன்றடியில்
ஒரு சிலையா?

ஓவியத்தில் அவளைத் தீட்டிய
எழுத்து – இரவிவர்மன் நீ!
கோட்டத்தில்
அவளைக் குடி வைத்த
கொற்றவன் நீ!

நூற்று முப்பத்து மூன்று
வீதிகள்
ஆயிரத்து முந்நூற்றுமுப்பது
வீடுகள்
பத்துப் பள்ளிகள்
மூன்று நூலகங்கள் இப்படி
ஊர் ஒன்று செய்து
குறளூர் என்று பெயர் கொடுப்பாயா?
அதன் திறப்பு விழாக்
கவியரங்கம் – உன் தலைமையில்;
அழைப்பாயா பாட எங்களை?

சொல்லை அடைகாத்துச்
சுடுகவிதை தருபவனே – நீ
முள்ளை அடைகாத்தால்கூட
மொட்டு மொட்டாய் மலர்ந்துவிடும்
பாறாங்
கல்லை அடைகாத்தாலும் –
குஞ்சு பொரித்துவிடும்
அத்தனை சூடானவன் நீ!

என் தலைப்பு
நல்லாள் நகும் என்பது
மெய்தான்
நல் ஆள் நகும்! தீய ஆள் அழும்!

நிலம் என்னும்
நல்லாள்
உழைக்காதவனைப் பார்த்து
உரக்கச் சிரிக்கிறாள்!

ஒருவிதை தூவினால்
நூறு மணிகள் தருகிறாள்
ஒருகிளை நட்டால்
ஒரு மரம் தருகிறாள் அவள்!
அவள்
மகசூல் எல்லாம்
சுகசூல்!

அவள்,
கரியை
வைரமாக்கித் தருகிறாள்!
மனிதனிடம் வைரத்தைக் கொடுத்தால்
கரியாக்கி விடுகிறான்!

புழுவையும்
பட்டுப் பூச்சியாக்குகிறது இயற்கை!
மனிதனோ
பட்டுப் பூச்சியைக் கொடுத்தால்
புழுவாக்கி விடுகிறான்!

ஈரவிழியோரம் இருந்தும்
இமை முடிகள் நீண்டு வளர்வதில்லை!–
(அது இயற்கை)
வளர வாய்ப்பிருந்தும் – மனிதன்
வளராமல் இருக்கலாமா?
கையைத் தாண்டாத ரேகைகள்போல்
கட்டுப்பட்டுக் கிடப்பவனா மனிதன்!



மரணம்கூட
ஓயாது உழைக்கிறது!
வாழ்க்கை – ஏன்
உழைக்க மறுக்கிறது?

உழைப்பவனைத்
தொடும்போது மரணத்திற்கும்
வாழ்க்கை வந்து விடுகிறது!

சோம்பேறியைத்
தொட்ட மரணம் –

அடுத்த ஆளைத் தொடும்முன் – எந்த
டெட்டால் போட்டுக்
கையைக் கழுவும்!

முயற்சி தன்
மெய்வருத்தக்
கூலி தரும் என்ற வள்ளுவன்,
தெய்வத்தைக் கொண்டுபோய்
எழும்பூர் அருங்காட்சியகத்தில்
வைக்கச் சொன்னான்.

ஆனால்,
விடியா மூஞ்சிகள்
வேலைக்குப் போனால்
விதை குழிகளும் புதை குழிகளாகும்!

சோம்பேறிகள்
முகம் பார்த்தால் சூரியனும் நமுத்துப்
போவான்!

சிரிப்பதென்றால்கூடச்
சிலருக்கு
உதடு திறந்து வைக்கவும்,
சிரித்த பின்
உதடு மூடி வைக்கவும்
உதவிக்கு ஆள் வேண்டும்.

நிலமகள்
சிரிக்காமல் என்ன செய்வாள்?
மெல்லுவதற்கே
யோசிக்கும் தேசத்தில்
மனிதர்க்குப்
பல் எதற்கு முளைக்க வேண்டும்?

சாய்வு நாற்காலியில்
படுத்துக் கொண்டே
சதுரங்கம் ஆடுபவனைக் காய்கள்
வெட்டிவிடும்!
அவனால் காய்களை வெட்ட முடியாது

ஓட முடியாதவன்
கிரிக்கெட் மைதானத்தில் இறங்கினால்
கிரிக்கெட்
மட்டையே
அவனை அடித்துத் துரத்தும்!

தன் கண்களையே
தவணை முறையில் திறப்பவன்
உலக இருட்டை எப்படி ஓட்டுவான்?

மர்மமான முறையில்
மகரிஷி
ஒருவர் இறந்தபோது,
மருத்துவர்கள்
சவப் பரிசோதனை
செய்து பார்த்ததில்
பத்துப் பெண் சடலங்கள்
கைப்பற்றப்பட்டனவாம்!

மகிரிஷி
ஜீரணம் செய்துவிட்ட மற்றப்
பெண்ணுடம்புகளின்
எண்ணிக்கை பற்றிச்
சீடர்களுக்குள்ளே கருத்து மாறுபாடாம்!

ஒரு
சோம்பேறி
உடம்பைச் சோதித்துப் பார்த்தால்
ஆமையின் இதயமும் – செத்த
நத்தையின் வேகமும் இருப்பது தெரியலாம்!

உழைப்பு சிலருக்கு
உத்த மனைவி
ஆனாலும்,
சோம்பல் என்னும்
சின்ன வீட்டிலேயே
சுருண்டு கிடப்பார்கள்

உழைப்புச்
சிலருக்குக் காலைக் கடிக்கும் செருப்பு...
கழற்றிவிடவே பார்ப்பார்கள்!

தலைவா
உனக்கும் மற்றவர்களுக்கும்
ஒரே ஒரு வேறுபாடுதான்...
நீ
உறங்கும்போது உழைக்கிறாய்!
மற்றவர்கள்
உழைக்கும்போதும் உறங்குகிறார்கள்.
அவர்கள்
படுத்து எழுந்த இடம்கூடக்
குறட்டை விட்டுக் கொண்டிருக்கும்!

உன்
காலடிச் சுவடும்
காரியாலயம் திறக்கும். ★

# கண்பாடு அரிது

- கவிஞர் மு. மேத்தா

கன்னியாகுமரியில் அலை
கலைஞர் கைகளில் வலை
அகப்பட்டுக் கொண்டது
வள்ளுவர் சிலை!

அறியாமைக் கடலில்
அலைமோதுபவர்க்கு
திருக்குறள் ஒரு
கலங்கரை விளக்கு!
அந்தக்
கலங்கரை விளக்கிற்கே
வெளிச்சம் ஏற்றுகிறது
கலைஞரெனும் கிழக்கு!

வள்ளுவப் பெருந்தகை
இன்று இங்கே வந்தால்
ஒரு குறள் சொல்லுவார் :
கற்க கலைஞர் கருணையைக்
கற்றபின்
நிற்க அவர்க்குத் தக...

தலைவா!
உன்னை நம்பி வாழ்கிறது
ஒரு நூறு தலைமுறை
அதனால்
உன் உழைப்பிற்கு
ஒரு நாளும் தர மாட்டோம்
விடுமுறை!

கலைஞர் தலைமை என்பதால்
அலைகளுக்கு ஆசை வந்து
கரையேறப் பார்க்கிறது!
அலைகள் கரையேற வழியில்லை
அபலைகள் கரையேற வழியுண்டு
கலைஞர் தலைமை ஏற்பதால்...

வள்ளுவர்
133 அதிகாரங்களில்
நடைபோட்டார்
தீமைக்கும் தீயவர்க்கும்
144 தடை போட்டார்!

வள்ளுவன் வார்த்தது முப்பால்!
காலத்தை கடந்து நிற்கிறான்
ஜாதி மதங்களுக்கு அப்பால்!

வள்ளுவன் கரம்பட்ட
எழுத்தாணி...
குமரிக் கடலோரம்
எழுந்தாய் நீ!

வள்ளுவனே
உன் எழுத்தாணியின் கூர்முனை
எங்கள்
இதயவயலை உழுத
ஏர்முனை!

ஆயிரம் ஆயிரம்
ஆண்டுகளுக்குப் பின்னும்
உன் எழுத்தாணி
முனை மழுங்காமல் இருக்கிறது

எங்கள் தமிழர்கள் தான்
சமயத்தில்
மழுங்கிப் போய்விடுகிறார்கள் ....



இல்லையென்றால்
தமிழ் வழிக் கல்விக்கு எதிராக
ஆங்கிலப் பள்ளிகள்
ஆர்ப்பரிக்க முடியுமா?

உலகிலேயே திருக்குறளை
முதன் முதலில் வாசித்தவர் யார்?
திருக்குறளோடு வசித்தவர் -
முதன் முதலாய் வாசித்தவர்

ஆம்... திருக்குறளின்
முதல் வாசகி
வாசுகி!
அவர்தான்
காமத்துப்பாலின்
கதாநாயகி!

சிலை இதைப்படைத்த
சிற்பிகளுக்கு என்
சிரம் தாழ்த்துகிறேன்
ஏனென்றால் ...
செதுக்கிச் செதுக்கிக்
குனிந்த தலையோடு அவர்கள்
நிமிர்ந்து நிற்க வைத்தார்கள்
வள்ளுவனை!

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது

வறுமை என்பது என் தலைப்பு!
உலகத் தமிழினத்தின் தலைவர்
உரிமையைச் சிலர்க்குத் தந்தார்
திறமையைச் சிலர்க்குத் தந்தார்
அருமையைச் சிலர்க்குத் தந்தார்
பெருமையைச் சிலர்க்குத் தந்தார்
வறுமையை எனக்குத் தந்தார்!
வறுமையை எனக்கேன் தந்தார்?

தாங்குவான் - இவன் என்று
தலைவர் நினைத்தாரோ?
வறுமையைத்
தாங்க முடியாதென்று
வள்ளுவரே சொல்லுகிறார் ....
தலைவர் கொடுப்பதை
வாங்க முடியாதென்று
நான் சொல்ல முடியுமா?

வறுமை என்று
தலைப்பை எழுதினேன்
எழுதும் பேனாவிற்கும்
வறுமை
வந்து சேர்ந்து விட்டது
ஆமாம்... மை... தீர்ந்து விட்டது.

தண்ணீர் விட்டு எழுதினேன்
பசிக்குத்தான் தெரியும்
தண்ணீரின் அருமை!

வறுமை என்பது வேறொன்றுமில்லை
வயிற்றுப் பிரதேசத்தை
நெருப்பு ராணுவம்
கைப்பற்றிக் கொள்ளும் ...

வெறிபிடித்த தீவிரவாதிகளால்
கடத்தப்பட்ட விமானத்தில்
உள்ளே
அகப்பட்டுக் கொண்டவர் போல்
ஒவ்வொரு நிமிடமும்
உயிர் ஊசலாடும் ....

வாழ முடிவதில்லை ..
சாகவும் முடிவதில்லை ...
அதுதான் வறுமையின் எல்லை!

காசென்றால் கடவுள்கூட
கறாராய் இருக்கிறார் ...
கோவிலுக்கு வருபவர்க்கு
தரிசனம் காட்டுகிறார்
தரிசனம் தரும் முன்பே
உண்டியலை நீட்டுகிறார்!

ஆகாயத்திற்கும் ஒருநாள்
வறுமை வருகிறது
அப்போது - அது
நட்சத்திர நகைகளை
அடகு வைக்கிறது
வெள்ளி நிலாவையும்
விற்று விடுகிறது
அன்று
அமாவாசை என்று
அறிவிக்கிறது!

வறுமை ...
இலை உதிர்காலமாய்
வரும் போது
மரம் மொட்டையடிக்கப்படுகிறது ...
மரத்தை விட்டு
இலைகள் தான் ஓடுகின்றன
வறுமை வந்தால்
மனிதனை விட்டு
மனிதர்களே ஓடுகிறார்கள்!

அறிவின் வறுமை - வண்ணத்திரை
தமிழின் வறுமை - சின்னத்திரை!

பூமியின் வறுமை வறட்சி
பொறுமையின் வறுமை புரட்சி!

வறுமையின் தலைநகரம்
வயிறு!
வயிற்றில் அது கொடியேற்றும்போது

மனிதனின்
தலை என்னும்
தலைமைச் செயலகம்
செயலிழந்து விடுகிறது!

வறுமை -
இயற்கையின் படைப்பில் நேர்ந்த
இலக்கணப் பிழை!
எந்தக் காரணத்தை முன்னிட்டும்
வறுமைக்கு மட்டும்
வழுவமைதி கிடையாது!

இறைவன் தான் தலை எழுத்தை
எழுதினான் என்றால்
காசோலைகளில்
கையெழுத்துப் போடுபவர் யார்?

சிலருக்குப் பசியென்றால்
என்னவென்றே தெரியாது
[illegible]க்குப் [illegible]சியைத் தவிர வேறு
[illegible]வென்றே தெரியாது

மருத்துவர்களைக் கேட்கிறேன்
'பசிக்க வில்லை' என்றால்
மருந்து தருகிறீர்களே ...
'பசிக்கிறது' என்றால்
மருந்து தர
முடியுமா உங்களால்?

வறுமையின் முகம் -
ஏழையர் தம்
இல்லத்தில்!
வறுமையின் முகவரி - அவர்
இதயத்தில்!

வறுமைக்குப் பற்கள் உண்டு
அதனால் தான்
வயிற்றைக் கடிக்கிறது!

வயிற்றில் எரியும்
நெருப்பு வளர்ந்தால்
கட்டாயம் ஒருநாள்
இந்த
தேசமே தீக்குளிக்கும்!

வறுமையை
எப்படி வெளியேற்றுவது?
வெளியேறு வெளியேறு என்றால்
எருமையே வெளியேறாது
வறுமையா வெளியேறும்?
'போடு' 'போடு' என்றால்
மயில் இறகு போடாது ....
'போடு போடு' என்று
போட்டால்தான் போடும் ...! ★

# செயல் அரிது

- கவிஞர் பொன். செல்வகணபதி

மேலே நீலவானம்
மேடையிலே தமிழ்வானம்
சூரியராய்ச் சந்திரராய்ச்
சுற்றியுள்ளார் கவிவாணர்!

கவிஞர் படை கவிகட்டும்
கலைஞர் படை கைதட்டும்
ஆரவாரம் விண்முட்டும்
அதில் மயங்கும் திசையெட்டும்!

கவிராஜர்கள் நாட்டில்
கணக்கின்றி இருக்கிறார்கள்
தலைவா
நீ மட்டுந்தான் ராஜகவி!

கவியரங்க மேடைகள்
கணக்கில்லை என்றாலும்
நீ தலைமை ஏற்றால்தான்
ராஜகளை!

பக்கத்தில் முக்கடல்
மேடையில் தமிழ்க்கடல்
கரையெல்லாம் மக்கள் கடல்
ஆகமொத்தம் ஐந்து கடல்!

ஐந்து கடலும்
முத்தெடுக்க
மூழ்கும் கடல்
முப்பால் கடல்!

அந்தநாள் எழுத்தாளனுக்கு
இந்தநாள் எழுத்தாளன் நீ
எடுத்த சிலை இது!

அவனோ
தமிழ்மறை ஆசான்
நீயோ எங்கள் தமிழாசான்!



உன் குரலே
திருக்குறள்!

நீ முப்போதும் அருந்தும்பால்
முப்பால்!
எப்போதும் அருந்தும்பால்
தமிழ்ப்பால்!
மற்றதெல்லாம்
இதற்கு அப்பால்!

தமிழுக்குச்
சிலை செய்தார் வள்ளுவர்
அதுதான் திருக்குறள்!

அவரை வணங்குகிறேன்
அவையை வணங்குகிறேன்
கவியைத் தொடங்குகிறேன்!

இந்த விழா யாருக்கு?
இனியதமிழ் வேருக்கு!

இது சிலையா
இல்லை!
இந்தியத் தராசில்
இமயக் கல்லுக்கு
ஈடாக
எடுத்து வைக்கப்பட்ட
எடைக்கல்!

உலக ஒருமைப்பாட்டுக்கு
இது ஒரு படிக்கல்!

இது சிலையா
இல்லை!
உலகை அளக்கும் அளவுகோல்
மனதைத் திறக்கும் திறவு கோல்
கற்பவர் நெஞ்சைக்
களவாடும் கன்னக்கோல்!
தூக்கி நிறுத்திய துலாக்கோல்!

அலைகடலுக்குள் இருக்கும் முத்து
ஆணி முத்து!
வள்ளுவர் சிலையோ
கடலுக்கு மேலே உள்ள
கரை முத்து
தரை முத்து

கலைக் கடலைக்
கடைந்தெடுத்த
அமுத முத்து
அதுதான் நம்சொத்து

அமெரிக்கச் சுதந்திரதேவி சிலை
அதற்கோர் ஈடே இலை
என்ற நிலை
இனிமேல் இல்லை!

இனி இந்த
வள்ளுவர் சிலையை
வந்துவந்து பார்ப்பார்!
வந்துபார்த்த பின்னே
வாய்பிளந்து வேர்ப்பார்!

வடக்கே
வானுயர் இமயம் எல்லை!
தெற்கே
வள்ளுவனின் இதயம் எல்லை!

இதை உருவாக்கிய
என் தலைவனே
உனைப் புகழ
என்னிடம் சொல்லே இல்லை!

வள்ளுவரை இமயமென்று
வருணிக் கின்றார்!
ஒரு வேறுபாடு!
இமயத்திற்கு
இதயம் இல்லை!

எம் வள்ளுவருக்கோ
இதயம் உண்டு
அந்த
இதயத்திற்குள் ஓர்
இமயம் உண்டு!

இமயம் உருகும்
வள்ளுவம் உருக்கும்!
இமயம் வளராது
வள்ளுவ இமயமோ
வளர்ந்து கொண்டே
இருக்கும்!

மதுவிலக்கை
அமுல் செய்த
முதல் மகாத்மா
வள்ளுவர்!

புலால்! உண்ணாமையைப்
போற்றிப் பாடி
அஹிம்சையை அறிமுகப்படுத்திய
அண்ணலும் அவரே!

மக்கள் தொகையைக்
கட்டுப்படுத்த
அரசுகள் முயல்கின்றன!

கடவுள் தொகையைக்
கட்டுப்படுத்த

முயற்சி செய்த
முதல் மனிதர் வள்ளுவர்!

அதனால்தான்
உருவமற்ற பெயருமற்ற
ஒரு கருத்தைக் கடவுளாக்கி
உலகுக்கு அறிவித்தார்
உருப்படுங்கள் என்றார்.

சிற்றூரே உலகமென்ற
சிந்தனை இருந்த காலத்தில்
உலகமொரு சிற்றூர் என்று
உரைத்தவர் வள்ளுவர்!

கற்றவர்க்கு உலகம்
கையில் வரும்!
மற்றவர்க்கோ
அடுத்த தெருகூட
அந்நிய தேசந்தான்!

இதை

இருபதாம் நூற்றாண்டில்
எல்லோரும் சொல்கிறார்கள்!

இருபது நூற்றாண்டுகளுக்கு முன்
எப்படி முடிந்தது வள்ளுவனால்!

வள்ளுவன் கை எழுத்தாணி
இதயக் கிழிசல்களை
இழுத்துத் தைக்கும் ஊசி!
நூல் திருக்குறள்!

கிறித்துவம் ஒருவழி
இசுலாம் மறுவழி
இந்துவியம் இன்னொரு வழி!

வள்ளுவமோ
எல்லோருக்கும் பொதுவழி
மனிதகுலப் பொது மொழி!

தமிழ்மறையைச் சிலர்
தவறாகப் புரிந்து கொள்வதுண்டு!

ஆதிபகவன் முதற்றே உலகு

இது ஏட்டுக் குறள்!

சாதிபகவன் முதற்றே உலகு
இது நாட்டுக் குறள்!
இது
தமிழ் மறைக்கே இழுக்கு
தமிழகத்தில் படிந்த அழுக்கு!

திருக்குறள்
விற்பனைக்கு வந்த
கற்பனை நூலல்ல!

திருக்குறள்
செயல்முறை
முயன்றால்
நடைமுறை!

# வெல்லல் அரிது

- கவிஞர் நிர்மலா சுரேஷ்

தமிழன்,
தன் உயரத்தைக் காட்டும்
விழா இது!





சாரமற்றுப் போன
இனத்துக்கு
உணர்வூட்ட வந்த
உப்பளத் துடிப்பு!

திண்ணைகளைச் சுற்றியே
அகழிகள் அமைத்துத்
தீவுகளாய்ப் போன
தமிழர்களுக்குத்
திசைகளைக் காட்டும்
திருநாள்!

கங்கையாடி, காவிரியாடி
குமரித்துறை நீராடி
குற்றங்கள் நீங்கிய
முனிவர்கள் ஏராளம்!

இன்றோ,
ஒரு குவளை வந்து
திருக்குவளை வந்து
குமரியிலே தீர்த்தமாட
இந்தக் கதம்பநிற
மண்வாச
மனக் குறையெல்லாம்
நீங்கியது!

குறளையே வேதமாக்கிய
குவளை – இனி இந்தக்
குவலயத்தையே ஈர்க்கும்!

சிற்பக் கலையும்
கட்டட நுட்பமும்
திறம்படத் தெரிந்த
காரணத்தால்
''கலைஞர்
ஐந்தமிழ் அறிஞர்''
என்றே
கணபதி ஸ்தபதியால்
போற்றப் பட்டவர்!

பத்தினிக்குக் கோட்டம்
கண்ட செங்குட்டுவன்
பத்தினிக்கு இலக்கணம் சொன்ன
செந்நாப் புலவனுக்கு
சின்னம் ஏதும் நிறுவவில்லை!

பல்லவரோ,
பாண்டவர்க்கு
இரதம் சமைத்து
'படைமாட்சி' உரைத்த
பல்நோக்குக் கவிஞனுக்கு
சுவர்ச்சித்திரம் கூடத்
தீட்டவில்லை.

தன்னிகரல்லா இராஜராஜன்
தஞ்சைத் தரணியில்
நிழல் விழாத கோபுரம்
எழுப்பியும்,
கறைபடியாத கருத்துச் சொன்ன
குறளாசிரியன் மீது
சிந்தை செலுத்தவில்லை!

பிற்கால மன்னர்களும்
படையெடுத்து வந்தவரும்
நூற்றுக்கால்
ஆயிரங்கால் மண்டபங்கள்
கட்டினரேயன்றி,



சொந்தக்காலில் நிற்கச்
சொல்லித் தந்த வள்ளுவனுக்குச்
சிலையேதும் வடிக்கவில்லை!

அறம், பொருள், இன்பம்
என்னும் மூன்று மட்டுமே கூறி
மோட்சம் சொல்லாததால்
மோசம் போனானோ
வள்ளுவன்!

மூடப்பட்ட சுரங்கமாய்ப்போன
வள்ளுவனைத்
திறந்ததொரு அரங்கமாக்கியவர்
கலைஞர்.

குறளுக்கு உரையெழுத முயன்று
அதை உறையிலிட்டவர் அநேகம் பேர்.
அதன் மறைபொருளை மன்றத்துக்குக்
கொண்டு வந்த
தென்றல் கலைஞர்.

குறளை மொழிபெயர்த்தவர்
G.U.Pope
பொருள் பெயர்த்தார்
கலைஞர்!

திருக்குறள்,
கதைகளுக்குள்ளேயே
தலையைப் புதைத்துக் கொண்ட
நெருப்புக் கோழி அல்ல!

இல்லற துறவறங்களை
முணுமுணுத்து முறையிடும்
சுவர்க்கோழி அல்ல?

அனைத்துலகுக்கும்
சேதி சொல்லும்
அஞ்சல் புறா!

அர்த்தங்களை
சாஸ்திரமாக்கினான் கௌடில்யர்.
அர்த்தங்களை வாழ்க்கையாக்கினான்
வள்ளுவன்

பிளேட்டோவின் அரசியல்
அறத்தின் விருந்தில்கூடக்
கை நனைக்காத ஆசாரம்!

மாக்கியவல்லியின் அரசியல்
அறத்தைத் தன் விருந்துக்கழைத்து
நஞ்சு வைத்துக் கொல்லும்!

வள்ளுவனின் அரசியலோ
அறத்தை மருந்தாக்கித்
தான் விருந்தாகும்

பிளேட்டோவின் குடியரசில்
நீதியுள்ள குடிமகன்
நீதியுள்ள மனிதனில்லை!
அது ஒரு
கடன்கன்னிக் கோட்பாடு!

மாக்கியவல்லியின் 'இளவரசன்'
'தான்' மகுடம் சூடிக் கொள்ள
நீதிக்கு மலர்வளையம் தயாரிப்பவன்
அது ஒரு டயனசார் பண்பாடு!

வள்ளுவரோ
நீதியையும், அரசையும்
இரட்டைக் குழந்தைகளாய்ப்
பிரசவித்தார்!

மனிதன், குடிமகன், தலைவன்
என்று குறளின்
முப்பரிமாணமாய், பிரிசமாய்
நெஞ்சுக்கு நீதி சொல்லி
வாழும் இதயம் ஒன்றுண்டு!
அது 'யார்?' என்னும்
ஊரறிந்த இரகசியத்தை
நிறைவாக நான் சொல்வேன்!

''சொலல் வல்லன்
சோர்விலான் அஞ்சான்
அவனை இகல்வெல்லல்
யார்க்கும் அரிது''

இது- திருக்குறள்
'யுரேகா' சொன்ன இடம்

வள்ளுவன் சுட்டிக்காட்டும்
அந்த மனிதனைப்
பேசி வெல்ல முடியாது எவரும்!








- சொல்லில் வடித்த நினைவுச் சின்னம்
- படிக்கவும் பார்க்கவும் ஒரு மலர்
- கலைஞரின் காதல்!
- ஒன்றே முக்கால் அடியில் ஒரு கைக்குலுக்கல்
- கருத்துக் கருவூலம்

- இவைகள் குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் வெளியிடப்பட்ட 'கோட்டம் முதல் குமரி வரை' மலர் குறித்து பத்திரிகைகள் அளித்துள்ள பாராட்டுக்கள். அதுபோன்றே ஏராளமானவர்கள் கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் பாராட்டியது எங்களுக்கு மகிழ்சியையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது. அவர்களுக்கெல்லாம் மலர்க்குழுவின் நன்றியும் கைகூப்பும்.

அதுபோன்று பல்வேறு பத்திரிகைகள் மலர் குறித்து வெளியிட்ட விமர்சனங்களைத் தொகுத்து அளிப்பதில் மகிழ்கிறோம்.

★ ★ ★

## சொல்லில் வடித்த நினைவுச் சின்னம்

குமரிமுனையில் நடந்த திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலர் - 'கோட்டம் முதல் குமரி வரை'.

கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற பல்வேறு வெளிப்பாட்டு முறைகள் மூலம் குறளின் பன்முகத்தன்மையை உணர்த்திடும் வகையில் மிளிர்கிறது மலர்.

வழக்கமாக மலர்களில் காணப்படும் - குறிப்பாக அரசு சார் மலர்களில் காணப்படும் - மந்தத்தன்மை கிஞ்சித்தும் இம்மலரில் இல்லை என்பது இதற்கான கூடுதல் சிறப்பு.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் கட்டுரைகளே இது போன்ற மலர்களில் வழமையாக அணிசெய்யும். ஆனால், இந்த மலரை நவீன இலக்கியப் படைப்பாளிகளின் படைப்புகளும் அலங்கரிக்கின்றன.

அ.ச.ஞானசம்பந்தன், ஜெயகாந்தன், வா.செ. குழந்தைசாமி, கி. ராஜநாராயணன், தமிழண்ணல், கார்த்திகேசு சிவதம்பி, பொன்னீலன், ஜெயமோகன் முதலானோரின் 27 கட்டுரைகளும் சுரதா, அப்துல் ரகுமான், சிற்பி, வைரமுத்து உள்ளிட்டோரின் 9 கவிதைகளும், பிரபஞ்சன், இந்திரா பார்த்தசாரதி, பா.செயப்பிரகாசம், பாலகும்மி பத்மராஜு [தெலுங்கு] ஆகியோரின் கதைகளும் 43 வண்ண ஓவியங்களும் அடங்கிய கனமுள்ள தொகுப்பு இது.

'திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல்' என்ற தலைப்பில் முதல்வர் கருணாநிதி 36 பக்கங்களில் கட்டுரை தீட்டியிருக்கிறார்.

தன் வாழ்வோடு பின்னிப் பிணைந்த வள்ளுவத்தையும் தனது அரசியல் செயற்பாடுகளில் வள்ளுவப் பணிக்கு அளித்து வந்த முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

குறளை மையப் புள்ளியாக வைத்து அதன் வழி ஒரு நெடிய வரலாற்று நிகழ்வைக் கோர்வையாகச் சொல்லிச் செல்லும் சிறப்பான உத்தி முறையில் கட்டுரை அமைந்திருக்கிறது.

1927ஆம் ஆண்டு தொடங்கி சொற்பொழிவுகள் மூலமாகவும் எழுத்து வாயிலாகவும் புத்தர் கொள்கைகளையும், திருக்குறளையும் முன்வைத்துப் பெரியார் பிரசாரம் தொடங்கியது. அண்ணா அதைத் தொடர்ந்தது, திரைப்படத்தில் கலைவாணர் பாட்டுருவில் சாதாரண மக்களுக்கும் சென்றடையச் செய்தது. சட்டமன்றத்தில் திருவள்ளுவர் படம் வைத்தது. அரசு போக்குவரத்து ஊர்திகளில் திருக்குறள் வாசகம், திருவள்ளுவர் நாள், மயிலையில் திருவள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டத் தோற்றம், குறளோவியப் பணி, திருக்குறள் உரை...என்று பல்வேறு வரலாற்று போக்குகளைத் தொட்டுச் செல்கிறது இக்கட்டுரை.

தொடர்ந்த அவமதிப்பின் தாக்கத்தாலேயே தமிழகத்தில் தனியாகச் செய்திப் படப்பிரிவு தொடங்கப்பட்டது என்ற விஷயத்தையும் இக்கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

மற்றோர் செறிவுள்ள கட்டுரையைத் தந்திருப்பவர் வை. கணபதி ஸ்தபதி. வள்ளுவனைக் கல்லில் வடித்த இச்சிற்பி அந்த மாபெரும் பணி குறித்துச் சொல்லில் வடித்துள்ளார்.

சிற்ப சாஸ்திர ஞானம் ஏதுமற்ற ஓர் எளிய வாசகன் கூட உட்புகுந்து பரவலான மனச்சித்திரங்களை உருவாக்கிக் கொள்ளும் வகையிலான கட்டுரை.

தரைமட்டத்தில் 133 அடி சிலையை நிறுவுவதில் கடினம் ஏதுமில்லை. ஆனால் அலைமோதும் கடல் மீது 3 டன் முதல் 8 டன் வரையிலான செதுக்கிய கற்களைப் படகிலேற்றி, 30 அடி உயரப் பாறை மீது கிரேன் கொண்டு தூக்கி வைத்துச் செய்யும் பணி குறித்து ஸ்தபதி விவரிக்கையில் பிரமிப்பின் உச்சிக்கே செல்ல வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் சிலை நிர்மாணம் குறித்தான ஓர் ஆவணப் படத்தைப் பார்த்த திருப்தி இக்கட்டுரையின் வழி கிடைக்கிறது.

வண்ணமயமான ஓவியப் பகுதி மலரின் வனப்பைக் கூட்டும் மற்றோர் அம்சம். ஆதிமூலம், மருது, வீரசந்தானம் உள்ளிட்ட நவீன ஓவியர்கள் குறளுக்கான சித்திரங்களைத் தீட்டியிருப்பது புதிய பரிமாணத்தைச் சேர்க்கிறது.

*அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்*

- என்ற குறளுக்கான கோபுலுவின் ஓவியம் - அற்புதமான கவிதை.

ஐ.ஏ.எஸ். அதிகாரி வெ. இறையன்பு இம்மலரைத் தயாரித்திருக்கிறார். தற்கால இலக்கியப் போக்குகளோடு மிகுந்த பரிச்சயமும் இதழியல் அனுபவமும் கொண்டவர். அதனால் 'அரசு வாடை' அடிக்காத மலராக அவரால் கொடுக்க முடிந்திருக்கிறது.

அச்சு, அமைப்பு, உள்ளடக்கம், வைப்புமுறை ஆகியவற்றில் சிரத்தையும், அழகுணர்ச்சியும் பளிச்சிடுகின்றன.

**- தினமணி** *(23-1-2000)*

★ ★ ★

## படிக்கவும் பார்க்கவும் ஒரு மலர்

ஒருமுறை அமரர் குன்றக்குடி அடிகளார் தம் பட்டிமண்டபத் தீர்ப்புரையில் சொன்னார், ''வள்ளுவர் ஏட்டில் வாழ்கிறார்; எழுத்தில் வாழ்கிறார்; எண்ணத்திலும், செயலிலுந்தான் இன்னும் வாழவில்லை'' என்று. இதையேதான் வைரமுத்துவும் நூலில் ''வள்ளுவரை வாழ்வாக்கு வா!'' என அறைகூவல் விடுகிறார்.

'குழலினிது, யாழ் இனிது' என்ற குறள் வரிக்கு ஜெயமோகன் எடுத்தாளும் நித்ய சைதன்யயதியின் சொற்கள் நம்மைச் சொக்க வைக்கின்றன.

''உதடுகளால் முத்தமிட்டு அறியப்படும் குழல்களும், விரல்களால் தொட்டு அறியப்படும் யாழும் என குழந்தையை அறியும் பேரனுபவம்''- அடடா!

'கோட்டம் முதல் குமரி வரை' என்ற நூலின் தலைப்பே கலைஞரின் கட்டுரைக்கும் தலைப்பாகப் பொருந்தும். அவரும், அவர் சார்ந்த இயக்கமும் வள்ளுவர் புகழ் பரப்ப மேற்கொண்ட, நாம் அறிந்த, முயற்சிகளின் தொகுப்பே நீண்ட, நெடிய கட்டுரை வடிவம் பெற்றுள்ளது. நூலில் இது சுருக்கமான முன்னுரையாகி, கலைஞரின் புதிய குறளோவியம் ஒன்று இடம் பெற்றிருந்தால் மலரின் மணம் கூடியிருக்கும் என்று நினைக்காமலிருக்க முடியாது.

தமிழ்க்குடிமகன் 'ஈன்றாள் பசி' என்பதற்கு 'கருவுயிர்த்துச் சில நாட்களே ஆன தாயின் பெரும்பசி' என்று புதிய நய உரைகாண முயன்றுள்ளார். ஆனால் அது பெற்ற தாய் பசிதீர்க்கவும் மகனே கூட சான்றோர் பழிக்கும் செயலை மேற்கொள்ளக் கூடாது என்ற அறக்கருத்தின் ஆழத்தை, வலிமையை இழந்துவிடுகிறதே!

முல்லைவேந்தன் கட்டுரையில், ''வள்ளுவர் திருக்குறளைவிடப் பழைமையான நூல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை'' என்கிறார்.

அ.ச. ஞானசம்பந்தனோ, ''தமிழகத்தின் வட பகுதியில் மிகப் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்த வடமொழியார் இயற்றிய தர்ம சாஸ்திரங்களும் வள்ளுவர் காலத்திற்கு முன்னரே பெரிதும் புழக்கத்தில் இருந்தன'' என்கிறார்.

ஜெயகாந்தன் தம்மை மறைத்துக் கொண்டு திரு.வி.க.வையே அதிகம் பேசவிட்டுள்ளார். கணித ஆசிரியர் சிலம்பொலியாரின் 'குறளில் கணித இயல்' குறளாசானின் விரிந்த அறிவை விளக்கி வியக்க வைக்கிறது. கலைக்கோவன் தம் கட்டுரையில் 'தீயாவின்றி...' குறளில் தீக்குக் ''கலோரி'' என்ற பொருளைப் பொருத்திக் காட்டுவதும் இத்தகையதே!

மலரில் கவிதை, கட்டுரைகளோடு குறள் நெறிக் கதைகளுக்கு இடமளித்துள்ளமை பாராட்டுக்குரிய முயற்சி. நான்கும் நான்மணிக்கதைகள்.

நயமான கவிதைகள் மலருக்குப் புகழ் கூட்டுகின்றன. அப்துல் ரகுமான் தம் உரையிடையிட்ட புதுக்கவிதையில் மங்கை மையிடுவதை ''வீட்டிற்குள்ளே அவர், வாசலில் எதற்கு வரவேற்புக் கோலம்?'' என்று சொற்கோலமிடுவது சுகமான கற்பனை.

எழுத்து மலருக்கு மணம் ஊட்டினால் ஓவியம் ஒளி ஊட்டுகிறது. மரபு ஓவியம் மட்டுமல்ல நவீன ஓவியமும் உண்டு. ஓவியர்களுக்கு ஓவியம் மட்டுமே பொறுப்பல்ல. கருத்துக்கிசைய ஓவியம் உருப்பெற வேண்டாமா? சில படங்கள் குறளைச் சரியாகப் பிரதிபலிக்கவில்லை.

இந்தக் குறள் மலர் இனிய ஒரு தமிழ் விருந்து; கல்விக் கூடங்களிலும், நூலகங்களிலும் அனைவரும் பயன்படுத்துமாறு போற்றிப் பாதுகாத்து வைக்க வேண்டிய தமிழ் நிதி!

**- கல்கி** *(23-1-2000)*

★ ★ ★

## கலைஞரின் காதல்!

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது, தமிழக அரசால் வெளியிடப்பட்ட 'கோட்டம் முதல் குமரி வரை' சிறப்பு மலர்



திருவள்ளுவரைப் பற்றிய சிறப்பான தகவல் களஞ்சியம்! திருவள்ளுவர் சிலை திறப்புக்கான காரணம் பற்றியும், நோக்கம் பற்றியும் முதல்வர் கருணாநிதியும் இதில் முப்பத்தி ஐந்து பக்கக் கட்டுரை எழுதியுள்ளார்.

''திருக்குறளும், இதனை யாத்து இவ்வுலகிற்கு அளித்த வாலறிவன் வள்ளுவரும், இளமையிலேயே எனக்கு அறிமுகமாகி, என் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எனக்கு உரத்தையும், தரத்தையும் தந்து, என்னுள் எங்கும், என்றும் நிறைந்த பொருளாய், எனை முழுதும் வியாபித்துள்ள வியப்பினும் வியப்பாய் விலகாது தொடர்ந்து வரும்...'' என்று கருணாநிதி எழுதியுள்ள வரிகளின் மூலம், அவரது திருக்குறள் தாகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

''1953ஆம் ஆண்டு கல்லக்குடி மறியல் போராட்டத்தில் அவர் கைதாகி சிறை சென்றபோது, சிறைக்குள் முதன்முதலாக 'திருக்குறள் மன்றம்' அமைத்தது; 1964-ல் தமிழக சட்டசபையில் திருவள்ளுவர் படம் திறந்துவைத்தது; 1969-ல் திருவள்ளுவர் நாளை அரசு விடுமுறை நாளாக அரசாணை பிறப்பித்தது; 1966-ல் மயிலாப்பூரில் வள்ளுவர் சிலை திறந்தது; 1967-ல் அரசு பேருந்துகளில் வள்ளுவர் படம் மாட்டி, திருக்குறளை எழுத வைத்தது; சட்டப் பேரவையில் முதல் நிகழ்ச்சியாக திருக்குறள் வாசிக்க வைத்தது;

1968-ல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது சென்னை கடற்கரையில் வள்ளுவருக்கு சிலை அமைத்தது; காவல்துறையில் சாதனை புரிந்தோருக்கு அளிக்கப்படும் பதக்கத்தில் வள்ளுவர் உருவத்தைப் பொறித்தது; 1971ஆம் ஆண்டு முதல் 'திருவள்ளுவர் ஆண்டு' என கடைபிடிக்க வைத்தது; 1973-ல் வள்ளுவர் கோட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தியது; 1976-ல் கருணாநிதி ஆட்சியில் இல்லாதபோது வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்டது. 1985-ல் அவரே குறளோவியம் எழுதியது; அதன் விழாவில் திருவள்ளுவரை ஓவியமாய் வரைந்த ஓவியர் வேணுகோபால் சர்மாவின் குடும்பத்திற்கு 3 இலட்ச ரூபாய் அளித்தது; 1996-ல் திருக்குறள் உரை எழுதியது; 1998-ல் திருவள்ளுவர் விருது பெறுவோருக்கான பரிசுத் தொகையை ஒரு இலட்ச ரூபாயாக அதிகரித்தது; 1975-ல் கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை அமைக்க முடிவு எடுத்தது; 1979-ல் அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடத்தியது; 1990-ல் சிலை நிறுவும் பணிக்கான நிதி ஒதுக்கீடு செய்தது; 2000-ல் சிலை திறந்தது...''

- என வள்ளுவர் சிலை திறப்புக்கான அடிப்படை நோக்கத்தைப் படிப்படியாகப் புரிந்துகொள்ளும் வகையில் கருணாநிதி தானே எழுதியிருக்கும் இந்த விவரங்கள் திருவள்ளுவர் மீதான அவரது காதலை வெளிப்படுத்துவதாக உள்ளது. வள்ளுவருக்காக அவர் மேற்கொண்ட ஆரம்ப கால முயற்சிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் நாவலர் நெடுஞ்செழியன் உடன் இருந்ததையும் நன்றி மறவாமல் குறிப்பிட்டிருப்பது அவரது அரசியல் நாகரிகத்திற்கு உதாரணம்.

வள்ளுவர் சிலையைச் செதுக்கிய கணபதி ஸ்தபதி, இப்பணிக்காக ஐநூறு பேர் உழைத்ததாகக் குறிப்பிடுகிறார். அன்பழகன், தமிழ்க்குடிமகன் போன்ற அமைச்சர்கள், தமிழண்ணல், கி. வேங்கட சுப்பிரமணியம், பொற்கோ போன்ற கல்வியாளர்கள், ஜெயகாந்தன், கி. ராஜநாராயணன், பிரபஞ்சன், வைரமுத்து, வாலி போன்ற பிரபல படைப்பாளிகள், ஞானக்கூத்தன், ஜெயமோகன், இந்திரன் போன்ற சிறு பத்திரிகை இலக்கியவாதிகள், பொன்னீலன் போன்ற இடதுசாரி இலக்கியவாதிகள் என சகல தரப்பில் இருந்தும், பல்வேறு பட்ட கொள்கைகள் உடைய எழுத்தாளர்கள் பலரும் இம்மலரில் எழுதியுள்ளனர்.

'வள்ளுவம்' என்ற ஒரே கொள்கை அடிப்படையில், முரண்பாடுகளை மறந்து இம்மலரின் மூலமாக, இவர்கள் இசைந்துள்ளார்கள் என்றே கூறலாம். தமிழில் இப்படி ஒரு மலர் இப்போதுதான் முதல்முறையாக வருகிறது. ஆகவே, இம்மலரின் வெற்றிதான் . கருணாநிதியை எழுத்தாளராக அங்கீகரிக்காத ஒரு சிலரும் இம்மலரில் எழுதியிருப்பது இன்னொரு சிறப்பம்சமாக உள்ளது.

வள்ளுவரைப் பற்றிய பரிமாணங்களை கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் என பல வடிவங்களாக இம்மலரில் பார்க்க முடிகிறது. மணியன் செல்வம், பத்மவாசன், கோபுலு, மனோகர், ஆதிமூலம் என பிரபலங்கள் பலரும் திருவள்ளுவருக்கான ஓவியங்களை வரைந்துள்ளனர்.

மலரில், 1330 திருக்குறள்களையும் உரையோடு பிரசுரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இம்மலர் சம்பிரதாயமான மலராக இல்லாமல், அரசின் சாதனை விளக்க மலராகவும் இல்லாமல், முழுக்க முழுக்க திருவள்ளுவரின் மலராக இருப்பதுதான் மற்ற எல்லாவற்றையும் விட சிறப்பு! விலை ரூ.100.

**- இதயம் பேசுகிறது** *(23-1-2000)*

★ ★ ★

## ஒன்றே முக்கால் அடியில் ஒரு கைக்குலுக்கல்

குமரிமுனை திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் தமிழக அரசு வெளியிட்ட 'கோட்டம் முதல் குமரி வரை' என்ற மலர்தான். அரசாங்க கெஜட் போல் போரடிக்காமல் பக்கத்துக்குப் பக்கம் படைப்புகளாலும், படங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது வெகு அழகு. ஜெயகாந்தன், அப்துல் ரகுமான், வாலி, வைரமுத்து, இந்திரா பார்த்தசாரதி, வலம்புரிஜான் என்று இலக்கியவாதிகளெல்லாம் அழகுக்கு அழகு செய்திருக்கிறார்கள். கடைசியாக, வள்ளுவர் சிலையை அமைத்த கணபதி ஸ்தபதியின் ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ஒரு டாக்டர் பட்டமே கொடுக்கலாம். நூறு ரூபாயில் ஓர் இலக்கியப் பெட்டகத்தைத் தந்த சிலை திறப்பு விழா மலர்க்குழுவிற்கு ஒன்றே முக்கால் அடியில் ஒரு கைக்குலுக்கல்.

**- குமுதம்** *(3-2-2000)*

★ ★ ★

## கருத்துக் கருவூலம்

ஒரு நூலைப் பார்த்தவுடன் படிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அதன் அட்டை அமைந்திருக்க வேண்டும் என்ற விதியில் தொடங்கி, கதை, கவிதை, கட்டுரைகளை எப்படி வரிசைப்படுத்துவது? யார் யாருக்கு எந்தெந்த இடம்? எழுத்துக்கு இடையே இடம்பெற வேண்டிய சிறிய சிறிய ஓவியங்கள் வரை எந்த ஒரு சிறிய அம்சத்தையும் தவறவிடாமல் உன்னிப்பாகக் கவனித்து ஒரு மலரை உருவாக்க முடியுமா?

முதன் முதலாக இந்த கேள்விக்கு முடியும் என்ற பதிலை அளித்திருக்கும் முதல் குழு குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா மலர்க்குழு, இக்குழு எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாகவே சாதித்திருக்கிறது! பழந்தமிழர் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காட்சிகளைப் பின்னணியாகக் கொண்டு குமரிமுனையில் வான்முட்ட எழுந்து நிற்கும் வள்ளுவர் சிலையின் எழிலுருவை முதற் பக்கத்திலும், வள்ளுவர் கோட்டத்தின் தேரை கடைசிப் பக்கத்திலும் மணியன் செல்வன் வரைந்த ஓவியத்தை அட்டைப்படமாகக் கொண்ட ''கோட்டம் முதல் குமரி வரை'' என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்த மலர் பார்த்தவுடன் படிக்க தூண்டும் அழகோடு விளங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்த நூற்றாண்டின் – புத்தாயிரம் ஆண்டின் – விடியலில் தமிழகம் பெற்ற பெரும் பேறான தென்குமரி திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பட்டுள்ள இந்த நூலில் அரசால் வெளியிடப்பட்ட நூல் என்று நம்ப முடியாத அளவிற்கு வெளியீட்டுத் துறையின் வித்பன்னர்களின் கை வண்ணத்திற்கு இணையாக வளம் மிகுந்ததாக இந்த மலர் அமைந்துள்ளது.

மலரைத் திறந்ததும் மணியன் செல்வன் வரைந்த வள்ளுவர் படமும் அதைத் தொடர்ந்து முதல்வர் கலைஞரின் வண்ணப் படமும் வரவேற்கின்றன. ''திருக்குறள் என் சிந்தையை நெய்திருக்கும் செந்நூல்'' என்ற முதல்வர் கலைஞரின் கட்டுரை முதலாவதாக இடம் பெற்றுள்ளது. அதில் திருக்குறளோடும், திருவள்ளுவரோடும் தனக்குள்ள ஈடுபாட்டை மட்டுமின்றி திராவிட இயக்க வரலாற்றில் திருக்குறளும், திருவள்ளுவரும் பெற்றிருந்த சிறப்பையும் முதல்வர் கலைஞர் அவர்கள் தொகுத்து வழங்கியிருப்பது சிந்தையள்ளும் வகையில் சிறப்பாக உள்ளது.

முதல்வர் கலைஞரின் கட்டுரையைத் தொடர்ந்து கல்வியமைச்சர் பேராசிரியர், அமைச்சர்கள் தமிழ்க்குடிமகன், வ. முல்லைவேந்தன், எழுத்தாளர் ஜெயகாந்தன், அ.ச.ஞானசம்பந்தன், கார்த்திகேசு சிவத்தம்பி, சிலம்பொலி சு.செல்லப்பன், கி.ராஜநாராயணன், வ.செ.குழந்தைசாமி, தேனுகா, சா.கந்தசாமி, மு.ஆனந்தகிருஷ்ணன், இரா.கலைக் கோவன், கி.வேங்கட சுப்பிரமணியம், தமிழண்ணல், அரசு மணிமேகலை, செ.அ. வீரபாண்டியன் மற்றும் ஆ.பத்மாவதி, பொற்கோ, சுந்தர ஆவுடையப்பன், இரா.செல்வகணபதி, ம.இராசேந்திரன, இந்திரன், பொன்னீலன், வலம்புரி ஜான், ஜெயமோகன், வை.கணபதி ஸ்தபதி ஆகியோரின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கணபதி ஸ்தபதி திருவள்ளுவர் சிலை உருவான வரலாற்றை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர்களான சுரதா, அப்துல்ரகுமான், சிற்பி, ஞானக்கூத்தன், ஈரோடு தமிழன்பன், அழகிய சிங்கர், அறிவுமதி, வாலி, வைரமுத்து ஆகியோர்களின் கவிதை மணமும் மலருக்கு மேலும் மணம் சேர்க்கிறது.

இவற்றோடு பிரபஞ்சன், இந்திரா பார்த்தசாரதி, பா.செயப்பிரகாசம், பாலகும்மி பத்மராஜு ஆகியோரின் கதைகளும் இடம்பெற்றுள்ளன.

திருக்குறளுக்கு விளக்கமளிக்கும் அற்புதமான ஓவியங்களும் இடையிடையே மலர்ந்து மணம் வீசுகின்றன. மணியன் செல்வன், மாருதி, ஆதிமூலம், ஆர். இளங்கோவன், பத்மவாசன், கோபுலு, மனோகர், வீரசந்தானம், கவுரிசங்கர், விஸ்வம், முத்து கிருஷ்ணா, வேதா, கோபால், சந்துரு, அருள், சிவகுமார், எம். இராமசாமி என்று ஏராளமான ஓவியர்களின் படையெடுப்பில் ஓவியங்கள் வண்ணக் களஞ்சியமாக மிளிர்கின்றன!

ஒவ்வொரு பக்கத்தையும் நினைத்து நினைத்து அழகுபடுத்தி அற்புதமாக வடிவமைத்திருக்கிறார் பத்மவாசன்.

மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் பல ஆய்வுக் கட்டுரைகள் என்ற அளவிற்கு உயர்வானவை! இவ்வாறு ஓரே நேரத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் மலர் இதுவரை வெளிவந்ததில்லை என்று கூறலாம்.

விழாவில் பேசிய குமரிஅனந்தன் காலப்பெட்டகம் புதைக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். அது நிறைவேறவில்லை. இந்த மலரை – கம்ப்யூட்டர் மூலமோ, வேறு நவீன வசதிகள் மூலமோ – பத்திரமாக பாதுகாத்தால் அவருடைய ஆசை நிறைவேறும். அந்த அளவிற்கு கருத்து கருவூலமாகவும், இலக்கியப் பெட்டகமாகவும் இந்த நூலை உருவாக்கி 100 ரூபாய்க்கு வழங்கிய மலர்க்குழு பாராட்டுக்குரியது! அரசு வெளியிட்டதால் தான் இது சாத்தியமாகியுள்ளது. தனியார் எவரும் இத்தகைய மலரை உருவாக்கினால் அதன் விலையை குறைந்தபட்சம் 3 மடங்காகவாவது உயர்த்தினால் தான் அடக்க விலையாவது கிடைத்திருக்கும்!

திருவள்ளுவர் சிலை வைத்த பெருமையோடு இந்த மலர் வெளியிட்டதன் மூலமும் தமிழக அரசு பெருமைக்குரியதாக உயர்ந்துள்ளது.

– முரசொலி *(புதையல்)* *30–1–2000*

★ ★ ★



# தலைவர்கள் புகழாரம்

திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவில் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அவ்வுரைகளிலிருந்து....

தமிழர்களுடைய சிறப்பும் வள்ளுவத்தினுடைய மாண்பும் உலகம் முழுவதும் எடுத்துரைக்கக் கூடிய வகையில் சாதனையைப் புரிந்திருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி வாழ்த்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

இங்கே அறிஞர் பெருமக்கள் குறிப்பிட்டதைப் போல 133 அடி உயரத்திற்கு சிலை செய்து. இந்தச் சிலையை 25 ஆண்டுக்காலமாக தன்னுடைய கனவிலே தேக்கி இன்றைக்கு செயல் வடிவமாக் கியிருக்கிற முதல்வர் கலைஞர் அவர்களை தமிழகம் மட்டுமல்ல; உலகத்திலே இருக்கக்கூடிய தமிழ்ச் சமுதாயம் என்றைக்கும் மறக்காது.

### திரு. மூப்பனார்

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு பேசுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இங்கு எல்லோரும் வள்ளுவரையும், கலைஞர் பற்றியும் பேசிய பிறகு என்னால் என்ன பேசுவதென்று தெரியவில்லை. 133 அடி உயரத்திலே உலகத்திலே எங்கும் சிலை அமைத்ததாக எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட சாதனையைச் செய்த கலைஞரை நான் பாராட்டுகிறேன்.

வள்ளுவரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே கலைஞர் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞருக்கு பெருமை செய்ய எனக்கு ஒன்றுதான் தோன்றுகிறது. அதை நீங்கள் செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று கைதட்டி அவருக்குப் பாராட்டுத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### திரு. வாழப்பாடி இராமமூர்த்தி

"இன்றைக்கு புதிய நூற்றாண்டின் தொடக்கம். இந்த வேளையில்



திருக்குறளும் வள்ளுவமும் தமிழகத்தில் மட்டுமல்ல; எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் செந்நாப் புலவருடைய புகழ் பரவியிருக்கிறது. அதற்கு தேசிய இயக்கம் மட்டும் காரணமல்ல; திராவிட இயக்கம் முக்கிய காரணம் என்பதை பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவரின் புகழைப் போல இந்தச் சிலையும் நீண்ட நெடிய காலம் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு முதல்வர் கலைஞர் அவர்கள்; ஒரு குழந்தையைப் பெற்ற தாய்க்கு எந்த அளவுக்கு அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் இருக்குமோ அதைப் போல எண்ணி இருக்கிறார்.

இங்கே பேசியவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முதல்வர் கலைஞர் அவர்கள் முன் எடுத்து வைத்தார்கள்.

தமிழ்மொழி மேடைப் பேச்சுக்கள் மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வளர்ந்தது என்பதை, தமிழர்கள் வரலாற்றினைக் காலப்பெட்டகமாக அதனை உருவாக்கி பதியவைக்க வேண்டும் என்பது தான் எனது கோரிக்கை.

முதலமைச்சர் கலைஞர், இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தமட்டிலுமல்ல; உலகளவிலே செய்திருக்கக் கூடிய சாதனை சாதாரண சாதனை அல்ல.

தமிழ் உள்ள அளவும் பூமி உள்ளளவும் இந்தப் புகழ் வாய்ந்த சிலை, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட சிலை நீடித்து நிற்கும். வள்ளுவர் புகழ் ஓங்கும், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் புகழும் சாதனையும் ஓங்கும்".

## திரு. வைகோ

"மலர்ந்திடும் புத்தாயிரம் நல்லாயிரமாக திகழ்ந்திட மனிதகுலத்திற்கே வழிகாட்டிய திருவள்ளுவரின் திருவுருவச்சிலையை அண்ணன் கலைஞர் அவர்கள் தனது திருக்கரங்களால் இன்று திறந்து வைத்திருக்கின்றார்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதியன்று இதே கடற்கரையில் வள்ளுவர் சிலைக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றபோது அண்ணன் பேராசிரியர் அவர்கள் கலந்துகொண்ட விழாவிலே கலைஞர் அவர்கள் பேசும்போது கூறிய சொற்கள் இன்னமும் என் செவிகளிலே ரீங்காரம் செய்துக் கொண்டிருக்கின்றன.

இரவு நேரங்களிலே பாறையின் மீது படுகின்ற உளியின் ஓசை என் செவிகளில் விழும். விவேகானந்தர் மண்டபம் எழுப்பிய நிகழ்ச்சி என் மனதிலே படும். திருவள்ளுவருக்கு சிலை அமைக்க வேண்டுமென்று இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் நேரத்தில் என் மனக் கண்களிலே எண்ணிப் பார்க்கிறேன். கனவு காணுகிறேன். தமிழகத்தின் கோடான கோடி மக்கள் நேரடியாகவும், தொலைக்காட்சி வாயிலாகவும் காணுகிற அந்தத் திருநாளை எதிர் நோக்குகிறேன். அந்த நாள் வராதா என்று கனவு காணுகிறேன் என்று பேசினீர்களே அண்ணன் கலைஞர் அவர்களே அந்தத் திருநாள் வாய்த்திருக்கிறது. அந்த விழாவில் கலந்துகொண்டு பேசியவன் என்ற முறையில் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இன்று புத்தாயிரத்தின் முதல் நாள். உலகிலே பல பேர் இந்த நாளை கொண்டாடுகிறார்கள். நீங்கள் இந்தச் சிலையைத் திறந்துவைத்திருக்கின்றீர்கள். இந்த விழாவிற்கு ஈடாக எந்த விழாவும் இல்லை என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

உலகில் யாருக்கும் இப்படியொரு சிலை அலைகடலில் எழுப்பப்பட்டதில்லை. ஒரு வீரனை ஒரு வீரன்தான் மதிக்க முடியும். ஒரு கவிஞனை இன்னொரு கவிஞன்தான் மதிக்க முடியும். எங்கள் தமிழகத்தின் கொற்றவனே! ஒரு கவிஞன் என்ற காரணத்தினால் கலைஞர் அவர்களே! நீங்கள் இந்தச் சிலையைத் திறந்து வைத்திருக்கின்றீர்கள்.



திருவள்ளுவருக்கு பத்துப் பேர் உரை எழுதியிருக்கிறார்கள். கலைஞர் அவர்களே! நீங்கள் குறளோவியம் தீட்டினீர்கள். வான்புகழ் வள்ளுவனுக்குக் கோட்டம் கண்டீர்கள். இன்று சிலையைத் திறந்துவைத்திருக்கின்றீர்கள். இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் வரும். அப்பொழுதெல்லாம் இந்த நாளை தமிழ்க்குலம் நினைவிலே வைக்கும். இந்த நாளும், நீங்களும் வரலாற்றின் பொன் எழுத்துக்களிலே நிலைத்து நிற்பீர்கள்.

உலகம் பல்வேறு நிகழ்ச்சிகளை அதிசயங்களாக நிர்மாணித்திருக்கின்றது. இங்கே எழுந்திருக்கிற திருவள்ளுவர் சிலை பலருடைய சிந்தனைச் செல்வமாக, வரலாற்றுச் சின்னமாக எழுந்திருக்கிறது. ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுந்த முதல் தமிழ்ச் சங்கம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய இடைச் சங்கம். பல சிந்தனையாளர்களை அறிஞர்கள் வரிசைப்படுத்துவார்கள். ஆனால் எந்தச் சிந்தனையாளர்களுக்கும் எட்டாத கருத்துக்களைத் தந்தார் நம்முடைய திருவள்ளுவர்.

அமைதி நிலவுகிற இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கிறேன். வாழ்க்கையில் வந்து போகிற நாட்கள் எல்லாம் சிறப்புடைய நாட்கள் அல்ல. அலைகளின் ஓசை எழுகிறது. மோனமான இரவுகளில் மக்கள் அயர்ந்து தூங்குகின்ற இரவு நேரங்களில் இந்த கன்னியாகுமரி கடல்களின் அலை ஓசை பாறைகளில் மோதிக் கொண்டே இருக்கும். அந்த அலைகள் எழுப்புகின்ற ஓசைகளின் ஒலி 'குறள், குறள்' என்றே ஒலிக்கும், 'வள்ளுவர், வள்ளுவர்' என்றே ஒலிக்கும், 'கலைஞர், கலைஞர்' என்றே ஒலிக்கும். அந்த ஒலியிலே தமிழ்த் தாயின் அருள்மழை இணைந்திருப்பதைக் கேட்கிறேன். பேரறிஞர் அண்ணாவின் வாழ்த்தொலி இணைந்திருப்பதைக் கேட்கிறேன். வளரட்டும் வள்ளுவர்! உயர்வடையட்டும் தமிழகம்!"

## திரு. சங்கரய்யா

"குமரிமுனையில், திருவள்ளுவருக்கு சிலை எழுப்பி இருப்பதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழுவின் சார்பாக என்னுடைய இதய பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக நான் இங்கே சொல்ல விரும்புவது; பயிற்றுமொழி. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமல்ல; கல்வியின் அனைத்து மட்டங்களிலும் தமிழ்மொழிதான் பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் தாய் மொழியில் கல்வி கற்றால்தான் அந்தக் கல்வி நிலைத்து நிற்கும்.

அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் ஆணையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது".

## திரு. இல. கணேசன்

"திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் போது மெல்ல மெல்ல ஒளி வந்தது. இரவில் ஒரு அருணோதயம் போல் அற்புதக் காட்சி தெரிந்தது. இதைச் செய்தவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இன்று காலை நான் எங்கள் கட்சி அமைப்புக் கூட்டத்தில் கலந்துகொண்ட நிலை வேறு. இப்போதைய மனநிலை வேறு. இந்தியாவில் தேசபக்தி துறவி என்று புகழ் பெற்றவர் விவேகானந்தர். தெய்வப் புலவர் என்ற புகழுக்குரியவர் திருவள்ளுவர் மட்டுமே.

## திரு. நல்லக்கண்ணு

"திருவள்ளுவர் உலக சிந்தனையாளர் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர் சொன்னதை இன்றும் மதித்து யோசித்து

செய்ய வேண்டியதிருப்பதால் நாம் இன்றும் திருக்குறளை பாராட்டிக் கொண்டு இருக்கிறோம். விவேகானந்தர் வங்கத்தில் பிறந்தாலும் தமிழர்கள் தான் அவரை அடையாளம் கொண்டு சிகாகோ நகருக்கு அனுப்பினர். அவருக்கு இன்று கன்னியாகுமரியில் நினைவு மண்டபம் எழுப்பப்பட்டுள்ளது. அதன் அருகே 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைத்து இருப்பது பொருத்தமாகும்.

கலைஞர் கற்பனை வளத்தில் அடிக்கு ஒரு அதிகாரம் வைத்து சிலையை எழுப்பி உள்ளார். இந்த சிலை வந்தது இந்தியாவுக்கும், தமிழுக்கும், உலகுக்கும் பெருமை. இந்த சிலையை கலைஞர் விசுவரூபமாக வடிவமைத்துள்ளார். இதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புத்தாண்டில் புது மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். அதற்கு திருவள்ளுவர் காட்டிய வழியில் நாம் அனைவரும் பாடுபட வேண்டும். இது தான் திருவள்ளுவர் சிலைக்கு நாம் செய்ய வேண்டிய கடமை".

## திரு. இராம. வீரப்பன்

"தமிழனின் வரலாற்றில் எழுச்சியும்–வீழ்ச்சியும் ஏற்பட்டதுண்டு. வள்ளுவர் வரலாற்றிலும் எழுச்சியும் – வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. 1975ஆம் ஆண்டு கலைஞரால் தொடங்கப்பட்டு தடைப்பட்டது. 1979இல் எம்.ஜி.ஆர். கலைஞர் எண்ணியதை நான் நிறைவேற்றுகிறேன் என்று அப்போதைய பிரதமரை கூட்டிவந்து அடிக்கல் நாட்டினார். பிறகு எம்.ஜி.ஆர். 89ஆம் ஆண்டு மறைந்தார். பின்னர் வந்த கலைஞர் அரசு, தொட்ட பணியைத் தொடங்கியது. 2 ஆண்டில் கலைஞர் ஆட்சி அப்போது போனது.

மீண்டும் கலைஞர் முதலமைச்சராக வந்து, தொட்டப் பணியைத் தொடர்ந்து முடித்து வள்ளுவர் சிலையை இங்கே திறந்துவைத்துள்ளார். தமிழ் இருக்கும் வரை கலைஞரை இந்த உலகம் மறக்காது".

## திரு. எஸ். திருநாவுக்கரசு

"அரசன் நெடுங்கிள்ளிக்கு பிறகு புலவனாகவும், அரசனாகவும் விளங்குகிறார் கலைஞர் அவர்கள். வள்ளுவரின் மறுபதிப்பாக அவர் விளங்குகிறார். குறளோவியம் கண்டவர். வள்ளுவர் கோட்டம் அமைத்தவர். இப்போது வள்ளுவருக்குச் சிலை அமைத்துள்ளார்".

## திரு. கோவை செழியன்

"தமிழ்மொழி இருக்கிற வரை கலைஞர் பெயர் நிலைத்து நிற்கும். 10 ஆண்டு காலமாக கர்நாடகாவில் வள்ளுவருக்கு சிலை வடிவமைத்து அதை திறக்க முடியாமல் உள்ளது. ஏன் யாராவது இதை கேட்டோமா? போராடினோமா? அப்போது என்ன இந்தியா? இந்திய தேசம் அங்கே வள்ளுவரை எல்.டி.டி.ஐ.யை சேர்ந்தவர் என்று வர்ணிக்கின்றனர்.

தமிழரிடையே தமிழன் என்ற உணர்வு உருவாக வேண்டும். ஒற்றுமை உருவாக வேண்டும். தமிழை காப்பாற்ற இந்திய கம்யூனிஸ்டு செயலாளர் நல்லக்கண்ணு கூறியதைப் போல அனைத்து தலைவர்களும் ஒன்று சேர வேண்டும். அந்த வேலையை இன்றே நீங்கள் செய்யுங்கள். அதை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம்".

## திரு. குமரிஅனந்தன்

"அய்யன் சிலையினைத் திறந்துவைக்க வேண்டுமென்ற எண்ணம் கலைஞர் உள்ளத்திலே உதித்தது. உதித்த எண்ணம் இன்று உருபட்டு எழுந்து நிற்கின்றது. அதிலே ஒளிவெள்ளம் பாய்ச்சும் நேரத்தில் நமது உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைத்து எத்தனையோ பேர் அந்தக் குறளுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று சொல்லி கல்லிலே ஓவியம் வடித்தார்கள். ஆனால் கலைஞர் அவர்களுக்குக் கல்லிலே ஓவியம் வடித்தவர்கள் யாரும் இல்லை.



இங்கே அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் சிலையைத் திரும்பிப் பார்க்கிறேன். குமரிக்கு எத்தனை எத்தனை பெருமையை கலைஞர் சேர்த்திருக்கிறார். கலைஞர்தான் விவேகானந்தருக்கு நினைவுச் சின்னத்தை எழுப்பினார். மகத்தான மனிதர் என்று நீங்கள் எழுதிய கட்டுரையையும் நான் படித்தேன். விவேகானந்தருக்கு நினைவுச் சின்னம் எழுப்பியபோதும் அதிலே உங்களுடைய கை வண்ணம் இருந்தது.

இங்கே பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டியதும் நீங்கள்தான். காட்சிக்கு எளியவனாக இருக்க வேண்டுமென்ற வள்ளுவனுக்கு இலக்கணமாக விளங்கிய ஒரு மனிதனுக்கு நாங்கள் பல ஆண்டுகாலம் போராட்டம் நடத்திய பிறகு கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதானே காமராஜர் நினைவகத்திற்கு அடிக்கல் நாட்டும் பெரும் பேறு கிடைத்தது. நான் உங்கள் கையாலே அந்த நினைவு மண்டபத்தை திறந்துவைத்து குமரிக்கு மேலும் பெருமை சேர்க்கிறீர்கள் என்பதை எண்ணி பூரிப்படைகிறேன்.

இங்கே உள்ள காந்தி மண்டபத்தின் உள்ளே அக்டோபர் 2ஆம் தேதி சூரிய ஒளி விழும். ஆனால் வள்ளுவரின் சிலையிலே எப்போதும் சூரிய ஒளி விழும். சந்திரன் ஒளியும் விழும், வெள்ளியின் ஒளியும் விழும். எல்லா ஒளியும் எந்நேரமும் விழும். தமிழுக்கு புதிய வாழ்வு கொடுத்துக் கொண்டிருக்கும் முக்கியமான நிகழ்ச்சி இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வள்ளுவனுக்கு கடலுக்கு மேலேயே நீங்கள் சிலை வைத்தீர்களே அது எவ்வளவு பெரிய காரியம். காமராஜர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் பத்தாவது வகுப்பு பாடத்திலே திருக்குறளை வைக்கவேண்டுமென்று சொன்னார். தமிழாசிரியர்கள் இன்று அணி வகுத்து வந்தார்களே அவர்களை நான் பாராட்டுகிறேன். கலைஞர் அவர்களின் கரத்தை பலப்படுத்துவதற்கு தமிழாசிரியர்கள் புறப்பட்டு வந்ததனை நான் பாராட்டுகிறேன். தமிழே பயிற்றுமொழி என்ற அற்புதத்தைச் சொன்ன கலைஞர் அவர்களுக்கும் நாம் பாராட்டு தெரிவிக்க வேண்டும்.

இன்று தமிழுக்கு நாம் வாழ்வு கொடுக்க வேண்டும். தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாக ஆக முடியாதென்ற நிலையை மாற்றி பெருந்தலைவர் காமராஜர் ஆணையிட்டதைத் தொடர்ந்து எத்தனை எத்தனை காரியங்களை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை எண்ணி எண்ணி நாங்கள் பெருமைப்படுகிறோம்.

நேற்று கவிதை பாடியபொழுது கரும்புக்குப் பக்கத்திலே வேம்பா என்று கேட்டீர்கள். நான் சொல்கிறேன். இந்த நாட்டிற்கு வேம்பு ஒரு இடத்திற்கு நிச்சயமாக வேண்டும். ஏனென்றால் உங்களிடம் அரசு இருக்கிறது. அரசுக்கு பக்கத்திலே வேம்பும் சேர்ந்திருந்தால்தானே இந்த நாட்டிலே சக்தி உண்டு என்று பரம்பரையாக நாம் சொல்லி வருகின்றோம். எனவே அரசை வைத்திருக்கின்ற நீங்கள் அரசாக இருந்து கொண்டிருக்கின்ற நீங்கள் அது நல்ல காற்று வரவேண்டுமென்பதற்காக பூச்சி அரித்து விடக்கூடாதென்பதற்காக தமிழை எந்தப் பூச்சியும் அரித்து விடக்கூடாதென்பதற்காக நீங்கள் வேம்பாகவும் இருத்தல் வேண்டும். நீங்கள் அரசாகவும் இருத்தல் வேண்டும். இந்த வேப்பங்காற்றும் அரசங்காற்றும் சேர்ந்தால் தமிழை எந்த பூச்சியும், புழுவும் அழித்துவிடாமல் நாம் பார்த்துக் கொள்ளமுடியும். எனவே நீங்கள் அரசாகவும் இருத்தல் வேண்டும் வேம்பாகவும் இருத்தல் வேண்டும்.

இன்று திக்கெல்லாம் புகழுகின்ற அளவுக்கு உங்கள் பெயர் போயிருக்கிறதே திக்கெல்லாம் புகழ் பரவுகின்ற அளவுக்கு இந்தப் பணியை நீங்கள் செய்ததற்கு நான் பெருமைப் படுகிறேன்.

இங்கே பெருந்தலைவர் காமராஜருக்கு மணிமண்டபம் எழுப்பியதை நினைத்துப் பார்த்து, இப்பொழுது நீங்கள் ஆட்சி செய்கிற அற்புதத்தையும் எண்ணிப் பார்த்து ஒன்றைச் சொல்கிறேன்.

இப்பொழுது தலையெழுத்தையெல்லாம் பலர் ஆங்கிலத்திலே எழுதுகின்றார்கள். ஆனால் நீங்கள் மு. கருணாநிதி என்றே தமிழில் எழுதுகிறீர்கள். உங்களுடைய புதல்வர் ஸ்டாலின் இருக்கிறாரே அவர் மு.க.ஸ்டாலின் என்றுதான் எழுதுகிறார். ஆனால் எங்களிலே பலபேர் தலையெழுத்தை ஆங்கிலத்திலே தான் எழுதுகிறார்கள். எனவே இந்த புத்தாயிரம் ஆண்டிலிருந்து திருவள்ளுவர் சிலையைத் திறந்துவைத்திருக்கிற நேரத்தில் உங்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்வது, வருகிற கல்வி ஆண்டிலிருந்து எந்தக் குழந்தையைப் பள்ளியில் சேர்த்தாலும் தந்தையின் தலையெழுத்தை போடுகிற போது அதை தமிழிலேதான் போடவேண்டுமென்ற ஒரு சட்டத்தை, பெயருக்குப் பின்னால் சாதி என்ற வால் சேர்க்கக்கூடாதென்ற ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டுவந்து தமிழனுடைய தலையெழுத்தும் தமிழ்தான் என்று சொல்கிற நிலையினை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்".

## டாக்டர் கிருஷ்ணசாமி

"குறள் தந்த வள்ளுவருக்குச் சிலை அமைத்த கலைஞரை பாராட்டுகிறேன். 2 ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் அப்போது ஆண்ட மன்னர்கள் திருக்குறளை அரங்கேற்ற தயக்கம் காட்டியது ஏனோ?

இயேசு மனிதராக பிறந்தார். அவரது கருத்துக்கள் உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவரது கருத்துக்கள் சமூக மாற்றத்துக்கு உதவியாக இருந்தது. இதுபோல் முகமது நபி, புத்தரின் கருத்துக்களும், சமூக மாற்றத்துக்கு உதவியாக இருந்தது. சமூக மாற்றத்துக்கு வள்ளுவரின் குறளில் உள்ள கருத்துக்கள் உள்ளது.

திருக்குறளுக்கு என்ன காரணமோ இன்று வரை அங்கீகாரம் இல்லை. இயேசு பிரானுக்கு தமிழகத்தில் சீடர்கள் உள்ளனர். முகமது நபிக்கு சீடர்கள் உள்ளனர். புத்தருக்கு சீடர்கள் உள்ளனர். இவர்களின் ஒத்தக்கருத்தைக் கொண்ட வள்ளுவருக்கு ஏன் சீடர்கள் இல்லை. எங்கே தவறு நடந்தது. எப்போது சீரமைக்கப் போகிறோம்.

தமிழ் மண்ணில் வள்ளுவனின் வழி நடக்க ஏன் தமிழன் உருவாகவில்லை. வள்ளுவன் பிறந்த மண்ணில் இன்று குலத்துக்கு குலம் நீதி இருக்கிறதே? திருக்குறள் எதற்கு போற்றி புகழ் பாடவா? 2 ஆயிரம் ஆண்டுகள் எப்படியோ கடந்து விட்டது. இனிமேலாவது ஏற்றத்தாழ்வுகள் ஒழிய கலைஞரே செயல் திட்டம் தீட்டுங்கள் அதற்கு நாங்கள் உறுதுணையாக இருக்கிறோம்".

## திரு. சிவாஜி கணேசன்

"விழாத்தலைவர் அவர்களே; என் அருமை நண்பரைக் கொண்டு வள்ளுவர் சிலையைத் திறந்துவைத்து நீங்கள் சரித்திரத்தை ஆரம்பித்திருக்கிறீர்கள். இது விழாவாக சில பேருக்குத் தெரியும். ஆனால் சரித்திரம். இந்த நூற்றாண்டு ஆரம்பிக்கிற நேரத்தில் தமிழனின் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். அதில் வள்ளுவரும் என் அருமை நண்பர் கலைஞரும்தான் இருப்பார்கள்".

## திரு. டத்தோ சாமிவேலு

"20ஆம் நூற்றாண்டில் ஈடுஇணையற்ற தலைவராக கலைஞர் உள்ளார். உலகில் உள்ள அனைத்து தமிழர்களுக்கும் ஒரே தலைவராக கலைஞர் உள்ளார். இன்று தமிழகத்தின் தலைநகரை குமரியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தமிழகமே குமரியில் திரண்டுள்ளது. திருவள்ளுவர் சிலை அமைவதால் தமிழர் கலாச்சார பண்பை எடுத்துக் கூறுவது மட்டுமல்லாமல் தமிழர் நெறிமுறைகளையும் எடுத்துக் காட்டும் மாபெரும் சிலையாக இங்கு அமைந்துள்ளது.

மொழியில் நீங்கள் தான் தலைவர். தமிழ் என்ற ரத்தம் இருக்கும் வரை உங்களையே தலைவராக ஏற்போம்". ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



தமிழரசு
பதிவு எண். M.8676
Licence No.TN/MS(C)/PP-23



பிப்ரவரி 1-15, 2000 ரூ. 5









**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031, தை – மாசி
பிப்ரவரி 1–15, 2000
மலர் : 31 இதழ் : 15
விலை ரூ.5


## இந்த இதழில்...


- பத்திரப் பதிவகங்களில் கணினி ---- 2
- நலவாழ்வு நம் கையில் ---- 4
- 3.000 குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் ---- 9
- தமிழ்க்கல்வி ---- 14
- எங்கள் ஊர் பிரச்சினை ---- 16
- திருவள்ளுவர் உணர்த்தும் மொழிசார் சிந்தனைகள் ---- 17
- புயல் ---- 21
- சென்னையில் இரு மேம்பாலங்கள் ---- 33
- இரண்டாம் வெண்மைப்புரட்சி ---- 38
- கிராமசபை ---- 41
- தமிழக தேசிய மாணவர் படை சாதனை ---- 43
- உலகக் கவி ---- 45
- ஆயிரம் ஆண்டுக்கு முற்பட்ட செக்கு ---- 46
- வருமுன் காப்போம் திட்டம் : படகில் சென்ற மருத்துவக் குழுவினர் ---- 47

*முதல் பக்க அட்டையில்*

குடிசைமாற்று வாரிய குடியிருப்பு திறப்பு விழா

*கடைசிப் பக்க அட்டையில்*

சென்னையில் இரு மேம்பாலங்கள் திறப்பு


### திருக்குறள்

எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# 2001-க்குள் எல்லா பத்திரபதிவகங்களிலும் கணினி

**– முதலமைச்சர் கலைஞர்**

இன்று பதிவுத் துறையில் ஒரு புதுமை உருவாகிறது என்பதை நாட்டிற்கு அறிவிக்கும் விழாவாக இந்த நல்ல விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தத் துறை தோன்றி 136 ஆண்டுகளாகின்றன. ஒரு பெரிய வரலாற்றை தன்னகத்தே கொண்ட துறை இது. 1864ஆம் ஆண்டில் தோன்றிய இந்தத் துறைக்கு 136 வயது இப்போது.

**வருவாய் ஈட்டும் பத்திரப் பதிவுத் துறை**

தமிழக அரசுக்கு வருவாய் ஈட்டும் துறைகளில் வணிக வரி, ஆயத்தீர்வை ஆகிய இந்த இரண்டு துறைகளுக்கு அடுத்து மூன்றாவது துறையாக இருந்து வருவாயை ஈட்டித் தருகின்ற துறை இந்தப் பதிவுத்துறை ஆகும். சென்ற ஆண்டு இத்துறையின் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் 858 கோடி ரூபாய் ஆகும். இந்த வருவாய் ஈட்டுவதைப் பொறுத்த வரையில் தமிழகம் இந்தியாவில் மராட்டிய மாநிலத்திற்கு அடுத்த நிலையிலே உள்ளது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்தியாவில் அதிக எண்ணிக் கையில் சார் பதிவகங்களைக் கொண்டுள்ள மாநிலமும் தமிழகமே என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். தமிழகத்தில் 600 சார் பதிவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்தப் பதிவகங்களில் ஆண்டு தோறும் 13 இலட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதன் தொடர்பாக ஏறத்தாழ 65 இலட்சம் பேரும், வில்லங்கச் சான்றுகள் தொடர்பாக ஏறத்தாழ 5 இலட்சம் பேரும், சான்றிட்ட நகல்கள் தொடர்பாக 1 இலட்சம் பேரும், திருமணப் பதிவுகள் தொடர்பாக 15 இலட்சம் பேரும், வழிகாட்டி மதிப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற ஏறத்தாழ 10 இலட்சம் பேரும், பிறப்பு இறப்புச் சான்றுகள் பெறுவதற்காக ஏறத்தாழ 25 ஆயிரம் பேரும், சீட்டுநிதி அமைப்புகள் தொடர்பாக ஏறத்தாழ 20 ஆயிரம் பேரும், சங்கப் பதிவுகள் தொடர்பாக 5 ஆயிரம் பேரும், கூட்டாண்மை நிறுவனப் பதிவுகள் (Partnership) தொடர்பாக 4 ஆயிரம் பேரும் என்று இப்படி மொத்தம் ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேலான மக்கள், இந்தச் சார்பதிவகங்களுக்கு நேரடியாக வருகைபுரிந்து - தங்களுக்குத் தேவையான அனைத்து வகைப் பதிவுகளையும் செய்துகொண்டு தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்து வருகின்றனர்.



இந்த ஸ்டார் திட்டத்திற்கு என்ன விளக்கம் என்பதை நம்முடைய தம்பி முரசொலி மாறன் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார். இந்தத் திட்டம் மாநகராட்சிப் பகுதிகளிலே அமைந்துள்ள 16 சார்பதிவகங்களிலும், 9 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும் 7-2-2000 முதல் செயல்படத் தொடங்குகிறது. இது முதற்கட்டம். இரண்டாவது கட்டமாக, 284 சார்பதிவகங்களிலும் 41 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும் தமிழ்நாடு மின்னணுவியல் (ELCOT) நிறுவனம் மூலமாக 2001ஆம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டங்களின் பயன்கள் என்ன என்பதை நாள் கணக்கில் காத்திருந்து பெறவேண்டிய விவரங்களை, உரிமங்களை நிமிடக் கணக்கில் பெறலாம். வாரக் கணக்கில் காத்திருந்து பெற வேண்டியவைகளை மணிக்கணக்கிலே பெறலாம். இப்படி விரைவுபடுத்தி பெற்றுத் தருகின்ற ஒரு சாதனமாக இந்தக் கணினி சாதனம் இன்றைக்கு புகுத்தப்பட்டிருக்கின்றது. இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பே இங்கே மத்திய அமைச்சர் முரசொலி மாறன் எடுத்துக்காட்டியதைப் போல நாம் கணினியிலே தமிழைப் புகுத்த வேண்டும். அப்படி புகுத்தப்படுகிற நேரத்திலே உலகமெங்குமுள்ள எல்லா கணினிகளிலும் இந்த பேதா பேதம் வராமலிருக்க ஒரு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று ஒட்டுமொத்த, ஒருமித்த கருத்தை உருவாக்க தமிழ் இணைய மாநாடு சென்னையிலே நாம் கூட்டியது உங்களுக்கு நினைவிருக்கும்.



அந்த மாநாட்டிலே எடுத்த முடிவுப்படி அனைவரும் ஏற்றுக்கொண்டு ஒருமித்த கருத்து உருவாகி அப்படி உருவான காரணத்தினாலேதான் நாம் மிக எளிதாக இன்றைக்கு தமிழ்மொழியிலே இந்தக் கணினியை பதிவகங்களிலே ஏற்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பை இன்றைக்கு நாம் பெற்றிருக்கிறோம்.

அதற்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையிலே எதிர்காலத்திலே இதிலே பயிற்சி பெறுபவர்களுக்கு இன்றும் சுலபமாக இருக்கின்ற வகையிலேதான் தமிழ்நாட்டிலுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சி மாணவர்களுக்கு அளிப்பது என்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக 666 பள்ளிகளிலே இந்தக் கணினிப் பயிற்சி இந்த ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

நான் பல இடங்களுக்கு சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில் திடீரென்று அந்த மேல்நிலைப் பள்ளிகளிலே நுழைந்து இந்தப் பயிற்சி செம்மையாக நடைபெறுகிறதா என்று பார்வையிட்டபோது நானே வியப்படைகின்ற அளவிற்கு நல்ல முறையில் அந்தப் பயிற்சி நடைபெறுவதையும் குறிப்பாக, கிராமப்புறத்து மாணவர்கள் பக்கத்திலே நகர்ப்புறப் பள்ளிகளிலே படிப்பவர்கள் தாங்கள் இதனால் பெறுகின்ற பெரும் பயனை மகிழ்ச்சியோடு தெரிவிக் கிறார்கள்.

இந்த அளவில் தமிழ்நாடு அரசு இந்தியாவில் எல்லா மாநிலங்களையும் காட்டிலும் மிகச் சிறப்பாக இந்தக் கணினிப் பயிற்சியிலும் சரி, கணினியைச் செயல்படுத்துவதிலும் சரி, முதல் நிலையிலே இருக்கின்றது என்பதை நான் தெரிவித்து, அதற்கு மற்றொரு எடுத்துக் காட்டுத்தான் இந்தத் தொடக்க விழா. இந்தத் தொடக்க விழாவினைத் தொடர்ந்து 2001-க்குள்ளாக எல்லா பதிவகங்களும் கணினி மயமாக ஆக்கப்படும் என்ற உறுதியையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

*– பத்திரப் பதிவுத்துறையில் கணினி மயத்தை தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6-2-2000 அன்று ஆற்றிய உரை.*



# நலவாழ்வு நம் கையில்

டாக்டர்
இரா. கலைக்கோவன்

மருத்துவத் துறையில் தற்போது அழுத்தம் தந்து அறிவுறுத்தப்படுவது காப்பு மருத்துவம்தான். உலகளாவிய நிலையில் 'வருமுன் காப்பு' வலியுறுத்தப்பட்டு நெடுங்காலமாகியும், நம்நாட்டில் அதற்கான கண்திறப்பு காலந்தாழ்ந்தே ஏற்பட்டது. பன்முனைப்பட்ட காப்புணர்வு எந்தத் தளத்திலும் எடுத்துரைக்கப்படாததால், எடுக்கப்பட்ட முயற்சிகள் பெருமளவு வீணாயின என்றே சொல்லவேண்டும். முற்றிலும் அகற்றிவிட்டதாக நாம் பெருமைகொண்ட மலேரியா, எலும்புருக்கி போன்ற நோய்கள் இப்போதும் உயிர்க்கொல்லிகளாக உலா வந்து கொண்டுதான் இருக்கின்றன. கொசுக்கள் ஒழியும்வரை மலேரியாவையோ, யானைக்கால் நோயையோ தவிர்க்க முடியாது. கண்ட இடத்தில் கூசாமல் துப்பும் பழக்கம் நம்மிடம் இருந்து அகலும்வரை எலும்புருக்கியைக் கட்டுப்படுத்துவது இயலாது. கொசுக்களை அழிக்கக் கொசுவர்த்திகளோ, வேதிப்புகையோ, மற்ற மருந்தினங்களோ ஒருநாளும் பயன்படா. வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள மனிதன் கற்கும்வரை கொசுக்களால் பரவும் நோய்களிலிருந்து விடுதலையில்லை. சுற்றுப்புறத்தூய்மை ஊராட்சி, நகராட்சி, அரசு ஆகியவற்றின் கடமையென்று கருதும் மனநிலையிலிருந்து மக்கள் மாறவேண்டும். நம் சுற்றுப்புறத்தை நாம்தானே தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை நமக்குள் வரவேண்டும். நலநோக்கு, நலக்காப்பு எனும் இவையிரண்டும் எதிர்வரும் நூற்றாண்டிலேனும் மக்களுக்கு வயப்படவேண்டும் என்ற எதிர்பார்ப்பில்தான் தமிழ்நாடு அரசு இப்போது வீடுகளை நோக்கிய நலப்பயணத்தைத் தொடங்கியிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தனையாற்றலில் விளைந்த எண்ணற்ற நலநோக்குத் திட்டங்களுள் ஒன்றே தற்போது தமிழ்நாட்டை வலம்வரத் தொடங்கியிருக்கும். 'வருமுன் காப்போம்' திட்டம். இந்தத் திட்டத்தின் அடிப்படை



எதிர்பார்ப்பு, தமிழ்நாட்டின் எந்தச் சிற்றூரில் வாழும் மனிதனுக்கும் அவன் வீட்டு வாயிலருகே அல்லது அவன் ஊருக்கருகே மருத்துவ வசதியைத் தருவதுதான் என்றாலும், இதன் உடன் விளைவாகத் தமிழ்நாட்டு மக்களின் நல, நோய்ப் புள்ளி விவரமும் கணக்கிடப்படுவது குறிப்பிடத்தக்கது. காப்பு மருத்துவத்தை முறையாக நிலைப்படுத்த இந்தப் புள்ளி விவரம் இன்றியமையாததாகும். இதற்கு முன் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் அனைத்துமே மருத்துவமனைகளில் பெறப்பட்டவை. நோய் இருப்பது தெரிந்து, நோயால் மிகத் துன்பமுற்ற நிலையில் மட்டுமே மனிதர்கள் மருத்துவமனைகளை நாடுகிறார்கள். வலி இல்லாத வீக்கங்கள், வளரிகள், கட்டிகள் ஆகியவற்றைச் சுமந்துகொண்டு அவற்றைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் வாழ்பவர்கள் ஆயிரக் கணக்கானோர். இவை இயல்புக்கு மாறானவை, இவற்றை மருத்துவரிடம் காட்டிக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் அவர்கள் நினைப்பதேயில்லை. இந்த அலட்சிய மனநிலைக்குப் பல காரணங்கள் உண்டு. அறியாமை முழுமுதற் காரணம். மருத்துவமனை நோக்கிய பயணம், அதற்கான செலவுகள் என ஏற்படும் தயக்கங்கள் அடுத்த நிலை.



இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்கள் எந்த வெளிப்பாடும் காட்டாமல் நெடுங்காலம் இருப்பதுண்டு. வெள்ளெழுத்திற்குக் கண்ணாடி போட வருபவர்க்குச் செய்யப்படும் வழக்கமான அக நோக்கிச் சோதனை பலமுறை இந்நோய்களைக் காட்டிக் கொடுத்துள்ளது. விழித்திரையில் ஏற்படும் இரத்தக்கசிவு, புது இரத்தக் குழாய்களின் தோற்றம், இரத்தக் குழாய் வீக்கம் போன்றவற்றின் மூலமே முதன்முறையாகக் கண்டறியப்படும் இந்நோய்கள், உடன் சிறந்த மருத்துவத்திற்கு ஆட்படுத்தப்பட்டும், காலங்கடந்த நிலையில் கண்டறியப் படுவதால் விளைவுகளை உண்டாக்காமல் கட்டுப்படுவதில்லை.

நோய் வெளிப்பாடுகள் இருந்தும் பல்வேறு காரணங்களுக்காக மருத்தவம் மேற்கொள்ளாமல் இருப்பவர்களும், வெளிப்பாடுகள் இல்லாமையால் நோய் இருந்தும் அதை அறியாதவர்களாய் இருப்பவர்களும் தமிழ்நாட்டில் எண்ணிக்கையில் மிக அதிகம். இவர்களை மருத்துவக் கண்காணிப்பின் கீழ்க் கொணர்வது இன்றியமையாதது. நடைமுறையிலிருந்தும் நல வாழ்வுத் திட்டங்கள் சில தேர்ந்தெடுத்த நோய்களைப் பற்றி ஊரக மக்களுக்கு அறிவூட்டல், தடுப்பூசிகள் தருதல், குறைந்தபட்ச மருத்துவ உதவி எனும் அளவிலேயே அமைந்துள்ளன. தமிழக முதல்வர் இப்போது அறிமுகப் படுத்தியுள்ள **வருமுன் காப்போம் திட்டம்,** இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஊரகப் பகுதிகளில் வாழும் ஒவ்வொரு வரையும் முழுமையான அளவிலான மருத்துவ சோதனைக்



குட்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். முன்புள்ள திட்டங்களில், நோய் அறியப்பட்ட நிலையிலும், அந்நோயை உறுதிப்படுத்திக் கொள்ளவோ, அதற்குரிய மருத்துவம் எங்கு மேற்கொள்வது என்பதற்கான தெளிவுபெறவோ வாய்ப்புக்களில்லை. வருமுன் காப்போம் திட்டம் இக்குறை களையெல்லாம் நீக்குவதற்காகவும், மருத்துவமனைக்கு வருவோர்க்கு மட்டுமே சோதனை என்றிருந்த நிலைமாற்றி, உலகளாவிய நிலையில் இன்று மேற்கொள்ளப்படும் புதிய நலக் கோட்பாடான 'இருப்பார்க்கெல்லாம் சோதனை-இருப்பதை யெல்லாம் அறிய' என்பதை நடைமுறைப் படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம், தமிழ்நாடு தழுவிய அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர், இணை இயக்குநர்-நலப் பணிகள் ஆகிய இருவரின் மேற்பார்வையில் சீரிய முறையில் திட்டமிடப்பட்டு, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மிகப் பரவலாக நடைமுறைப் படுத்தப்படுகிறது. மாவட்டத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலுமுள்ள துணை சுகாதார நிலையங்களும், ஆரம்ப சுகாதார நிலையங்களும் இத்திட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மாதத்திற்கு ஒன்றல்லது இரண்டு முகாம்கள் இத்திட்டத்தின்கீழ் நடைபெறுமாறு திட்டமிடப் பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வரும் அனைத்துத் துணை சுகாதார நிலையங்களும் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒரு முகாம் மேற்கொள்வதால், மாவட்டம் முழுவதுமுள்ள அனைத்து ஊர்களும் இத்திட்டத்தின் பயனைப் பெறுவது சாத்தியமாகிறது.

வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் முகாம்களுக்கென பல மருத்துவக் குழுக்கள் உருவாக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் நான்கு பொது மருத்துவர்கள் (MBBS), ஒரு மருந்தியல் மருத்துவர் (MD), ஓர் அறுவை மருத்துவர் (MS) ஆகியோருடன் குழந்தை நலம், மகளிர் நலம், எலும்பு நோய்கள், பல், கண், தோல், காது மூக்கு தொண்டை எனப் பல்வேறு சிறப்புத் துறைகள் சார்ந்த மருத்துவ வல்லுநர்களும் இடம் பெற்றுள்ளனர். சித்தம், யுனானி, ஓமியோபதி சார்ந்த மருத்துவர்களும் இம்முகாம்களில் பங்கேற்கின்றனர். முகாம்கள் எந்தெந்த ஊர்களில், எந்தெந்த நாட்களில் நடத்தப்படுகின்றன என்பது முன்கூட்டியே மாதக் கணக்கிற்குத் திட்டமிடப்பட்டு



விடுவதாலும், இப்பணியை அந்தந்த ஊராட்சி யமைப்புகளும், தன்னார்வ நிறுவனங்களும், துணை சுகாதார நிலைய அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்வதாலும், ஊரக மக்களுக்கு இம்முகாம்கள் பற்றிய அறிவிப்பு தருவது எளிதாகிறது.

இம்முகாம்களுக்கு வரும் அனைவரையும் பொதுநல மருத்துவர்கள் சோதிக்கின்றனர். நோய் வெளிப்பாடுகளோ, அறிகுறிகளோ இருப்பவர்கள் அவ்வத்துறை சார்ந்த வல்லுநர்களிடம் அனுப்பப் படுகின்றனர். அனைவருக்கும் இரத்த அழுத்தம் பார்க்கப்படுகிறது. முகாம்களிலிருக்கும் ஆய்வகத்தில், பயிற்சி பெற்ற ஆய்வர்கள் அனைவர்க்கும் இரத்தம், நீர், சளி பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். மிக இன்றியமையாத ஹீமோகுளோபின் அளவு, சர்க்கரை அளவு ஆகியவை சோதிக்கப்படுகின்றன. சிறுநீரில் சர்க்கரை இருந்தால் இரத்தத்திலும் அதன் அளவு பார்க்கப்படுகிறது. இச்சோதனைகளால் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், இரத்த சோகை நோய், எலும்புருக்கி நோய் ஆகியன உடன் கண்டறியப்படுகின்றன. அதற்கான மருந்துகள் நோயுள்ளோர்க்கு உடன் தரப்படுவதுடன் நலக்காப்பு அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன.

புற்று நோயைக் கண்டறிவதற்கான பேப் ஸ்மியர் சோதனை, தொழுநோய் அறியும் சோதனை ஆகியனவும் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு இங்கு நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது. 'அழகுத் தேமல்' என்று கருதித் தொழுநோய்த் தேமல்களைக் கண்டு கொள்ளாது இருப்பாரும், புற்று உள்ளே வளர்வதறியாது அதைச் சுமந்து கொண்டிருப்பாரும் தொடக்க நிலையிலோ அல்லது சற்று நாட்பட்ட நிலையிலோ இம்முகாம்களில் அடையாளப் படுத்தப்பட்டு முனைப்பான மருத்துவத்திற்கு ஆட்படுத்தப் படுவதால் பெருந்துன்பங்களிலிருந்து மீட்கப்படுகின்றனர்.

முகாம்களில் கண்டறியப்படும் நோயாளிகளில் தொடர் மருத்துவம் தேவைப்படுவோரும், அறுவை மருத்துவம் தேவைப்படுவோரும் முகாம் நடக்கும் இடத்திற்கு அருகிலுள்ள வட்ட மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப் படுகின்றனர். வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் (இக்குறிப்பிட்ட நாள் பெரும்பாலும் முகாம் நடக்கும் நாளிற்கு அடுத்த நாளாகவே பல மாவட்டங்களில் அமைந்துள்ளது) இந்நோயாளிகள் அங்குச் செல்லலாம். இவர்களை வரவேற்று வழிகாட்டுவதற்காக வட்ட மருத்துவமனைகளில் தனி வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ளோர் நோயாளிகளை உரிய மருத்துவப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்வதுடன் அவர்களுக்கு உள்ளிருப்போ, அறுவையோ தேவைப்படின்



முன்னுரிமை தந்து கவனிக்கின்றனர். எந்தத் தடங்கலும், இடையூறும் இல்லாது, பரிந்துரைக்கப்பட்ட முகாம் நோயாளிகள் வட்ட மருத்துவமனைகளில் உரிய மருத்துவம் பெறுவது மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது.

சோதனைகளுக்குப்பின் நோயற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டவர்களுக்கு நலச்சான்றிதழ் தரப்படுவதுடன், நலக்காப்புப் பற்றிய அறிவுரைகளும் வழங்கப்படுகின்றன. இதற்காக நலப்பணியாளர்கள்



பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றனர். தடுப்பூசிகள் பற்றிய தெளிவான வழிகாட்டல்கள் அனைத்துப் பெற்றோர்களுக்கும் சுவரொட்டிகள், அறிக்கைகள், அறிவுரைகள் வழி காட்டப்படுகின்றன. இந்த முகாமில் இல்லாதிருப்பது ஒன்றுதான் - மனநல மருத்துவம். இன்றைக்கு மக்களுக்குப் பெரிதும் தேவைப்படும் மனநல வழிகாட்டல்களும் இம்முகாம்களில் கிடைக்குமாயின், மாண்புமிகு முதல்வரின் நலநோக்கம் முழுமை யடைவதுடன், பெரும்பாலான சமுதாயச் சிக்கல்களும், உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளும் முடிவுக்கு வரும்.

இந்த முகாம்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வது மக்களுடைய தலையாய கடமை. வீட்டை நோக்கி மருத்துவமனை வந்திருக்கும் இந்த வாய்ப்பை வயது, பால் வேறுபாடின்றி தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் முழுமையான அளவில் பயன்படுத்திக் கொண்டால் நலவாழ்வு நம் கையில். 'நாம் நலமாகத்தானே இருக்கிறோம், நமக்குத்தான் எந்த நோய் வெளிப்பாடும் இல்லையே, நாம் ஏன் இந்த முகாமிற்குச் செல்ல வேண்டும்' என்று கருதாது, அனைவரும் இந்த வருமுன் காப்போம் திட்டத்தைத் தவறாது பயன்படுத்த வேண்டும். இதற்கு நலப்பணியாளர்களும், ஊராட்சி உறுப்பினர்களும் முழுப்பொறுப்பேற்று தத்தம் ஊர்மக்களை ஒருவர் விடாது முகாம் வருமாறு அறிவுறுத்த வேண்டும். பயன் களை விவரித்தால்தான் பாதங்கள் நகரும். தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த நலம் நோக்கி முதல்வரால் அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டம் அதன் நோக்கத்தை எய்த, இதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் கருத்தோடு உழைக்க வேண்டும். கவனிப்பு நன்றாக இருக்கிறது என்றால்தான் வருபவர்கள் எண்ணிக்கை கூடும். இந்திய மருத்துவ மன்றத்தின் தமிழ்நாடு கிளைத் தலைவர் மருத்துவர் மீ.சா. அஷ்ரப் தம்முடைய உரையொன்றில் குறிப்பிடுவதுபோல், மக்கள் நலப்பணிகளில் மருத்துவச் சமுதாயம் தனக்குள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் முழுமையான அளவில் வெளிப்படுத்திட இது ஓர் அரிய வாய்ப்பு. வீட்டுக் கதவைத் தட்டி நலம் விசாரிக்கும் இந்த அரிய திட்டம் முதல்வர் தமிழ்நாட்டிற்களித்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கொடை. இதை முற்றிலுமாய்ப் பயன்படுத்திக் கொண்டு மக்களும் மருத்துவர்களும் தங்கள் சமுதாயக் கடமையை நிறைவேற்று வார்களானால் தமிழ்நாடு நலநாடாய் மலரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

*நன்றி : 'தினமணி' 11-2-2000*



# தமிழ்நாடு அரசு :

# மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் - வசதி வாய்ப்புகளை கவனிக்கும் அரசு

## – முதலமைச்சர் கலைஞர்

**குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.க.சுந்தரம் தலைமையில் 3-2-2000 அன்று, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னையை அடுத்த ஒக்கியம் - துரைப்பாக்கம் பகுதியில் கட்டப்பட்டுள்ள 3,000 புதிய குடியிருப்புகளின் திறப்பு விழா - குடியிருப்பு ஒதுக்கீடுதாரர்களுக்கு - ஒதுக்கீடு ஆணைகளை வழங்கி முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.**

**விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

இன்று சென்னையிலிருந்து ஒரு புதிய நகருக்கு நான் வந்திருக்கின்ற உணர்வோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன். இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்க வேண்டிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி அவர்களும் சென்னை மேயர் தம்பி மு.க.ஸ்டாலின் அவர்களும் வர இயலவில்லை.

அதற்குக் காரணம், நேற்றைய தினம் தருமபுரியிலே உயிரோடு கொளுத்தப்பட்ட மூன்று மாணவிகளில் - ஒரு மாணவி தாம்பரத்திலே பிறந்து வளர்ந்தவர். அவருடைய உடல் இன்று மாலையில் தாம்பரம் வருவதாகச் செய்தி. அந்த உடலை ஏற்று இறுதி நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதற்காகப் பேராசிரியர் அவர்களும், ஆர்க்காடு வீராசாமி அவர்களும், மேயர் ஸ்டாலின் அவர்களும் சென்றிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி இருக்கின்ற காரணத்தால் நான் செல்ல இயலாத சூழ்நிலையில் என் சார்பாக அவர்கள் நேற்றைய தினம் மறைந்த அல்லது மறைக்கப்பட்ட - நேற்றைய தினம் வீழ்ந்த அல்லது வீழ்த்தப்பட்ட அந்தச் சின்னஞ் சிறு மலருக்கு இறுதி வணக்கம் செலுத்தி மரியாதை செய்வதற்காக அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி எத்தகைய எழுச்சி வாய்ந்தது என்பதை முன்னால் பேசிய மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலுவும், விழாத் தலைவர் தம்பி சுந்தரமும் மற்றவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா நினைவு நாள் இன்று. இந்த நாள் விழாத் தலைவர் குறிப்பிட்டதைப் போல, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒவ்வொரு மேடையிலும் எடுத்துச் சொன்ன அந்த வாசகத்திற்கு மீண்டும் ஒரு முறை பொருள் வழங்குகின்ற நாளாக அமைந்திருக்கின்றது.



அண்ணா அவர்களுடைய வாழ்நாள் எல்லாம் ஏழையெளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்குப் பாடுபடுவதே நம்முடைய பணியாக இருக்க வேண்டுமென்று அவருடைய உடன்பிறப்புக்களாகிய நமக்கெல்லாம் வழங்கப்பட்ட வாசகம் அதுதான். அதனை மனதிலே நிறுத்தித் தான் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் என்னுடைய ஆருயிர்ச் சகோதரர் அரங்கண்ணல் அவர்களைத் தலைவராகக் கொண்டு குடிசைமாற்று வாரியத்தை 70ஆம் ஆண்டு அமைத்தேன்.

அண்ணா பிறந்த செப்டம்பர் மாதத்தில் இந்த குடிசை மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட 70-ஆம் ஆண்டு முதல் இதுவரையிலே 67 ஆயிரம் குடியிருப்புகள் 350 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன.

இங்கே இன்றைக்குப் பறக்கும் ரயில் என்று சொல்லப்படுகின்ற விரைவு ரயில் சென்னையைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள அந்தப் பகுதிகளில் குடியிருந்தவர்கள் அங்கே குடியிருக்க இயலாத காரணத்தால் அவர்களுக்கு மாற்று இடம் தருவதாக வாக்குறுதி அளித்து, அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக இங்கே 3,000 குடியிருப்புகள் கட்டப்பட்டு அதிலே அவர்கள் குடியமர இருக்கிறார்கள்.

60 கோடி ரூபாய் செலவில், மொத்தம் 6,500 குடியிருப்புகள் கட்டுவதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம். மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் இருபதாண்டுகள் செலுத்தி அந்தக் குடியிருப்புகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளக் கூடிய அந்த வாய்ப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மூவாயிரம் பேரில் இதுவரை இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து கொண்டு நாளை முதல் இங்கே குடிவரவிருக்கின்றார்கள் என்பதையும் நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## மூன்றாண்டு காலத்தில் 10,470 வீடுகள் கட்டப்பட்டுள்ளன

70-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் மூலம் 67 ஆயிரம் வீடுகளை இந்த முப்பதாண்டு காலத்திலே கட்டி முடிக்கப் பட்டுள்ளது என்று சொல்கின்ற நேரத்தில் நீங்கள் ஒரு ஒப்பீட்டையும் பார்க்க வேண்டும்.

இந்த 67 ஆயிரம் வீடுகளில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் கட்டப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்புகள் 6,774. அது மக்கள் விஸ்வாச சர்க்கார்! அதனால் ஐந்தாண்டு காலத்தில் 6,774 வீடுகளை மெல்ல மெல்லக் கட்டி முடித்தார்கள்.

ஆனால் இந்த மக்கள் விரோத சர்க்கார் இருக்கிறதே, இது 96-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த மூன்றாண்டு காலத்தில் கட்டி வழங்கிய அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை 10,470. இது மக்கள் விரோத சர்க்கார், அதனால் மக்களுக்கு அதிகமாகக் கட்டிக் கொடுத்திருக்கின்றது என்பதை நீங்கள் எல்லாம் புரிந்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் 67-ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு இரண்டாண்டு கால ஆட்சிக்குப் பிறகு அண்ணா மறைந்த பின் அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு நான்கு முறை நான் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற காலக் கட்டத்தில், மக்களுக்காக எத்தகைய நன்மைகள், எத்தகைய திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன என்பதையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

இப்போது இந்த மூன்றரை ஆண்டுகளில் நாம் அறிவித்த நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்களை மாத்திரம் எண்ணினால் கூடப் போதும். ஏற்கனவே கண்ணொளித் திட்டம், பிச்சைக்காரர் நல்வாழ்வுத் திட்டம், குடிசைமாற்று வாரியத் திட்டம், குடிநீர் வாரியத் திட்டம், ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித்தருதல் போன்ற பல திட்டங்கள். இந்தத் திட்டங்களில் பலவற்றை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் நாம் நிறைவேற்றினோம். அதைப் பார்த்து அகில இந்திய அளவிலே இந்தத் திட்டங்களைத் தத்தெடுத்துக் கொண்ட ஆட்சி மத்திய ஆட்சி என்பதையும் உங்களுக்கு நான் சுட்டிக் காட்டுகிறேன்.

## கிராமப்புற மக்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித் தர அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

இந்த மூன்றாண்டு காலத்திலே தான் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஒவ்வொரு கிராமத்திலும் அடிப்படை வசதிகள் அனைத்தும் சீர்செய்யப்பட வேண்டும், அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட வேண்டும், குடிதண்ணீர், சுகாதார வசதி, தெரு விளக்கு போன்ற இத்தனை வசதிகளையும், வாய்ப்புக்களையும் அந்த மக்களுக்கு உருவாக்கித்தர அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தொடங்கி மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலே பாராளுமன்ற உறுப்பினர் களுக்குத் தான் பாராளுமன்றத் தொகுதித் திட்டம் என்ற பெயரால் அவர்களுக்கு ஒரு தொகை ஒதுக்கப்பட்டு ஏறத்தாழ தொடக்கத்திலே அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு அந்தத் தொகை பிறகு இரண்டு கோடி ரூபாயாக ஆக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதித் திட்டம் இன்றைக்கு இந்தியாவிலே நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

வேறு எந்த மாநிலத்திலும் தொடங்காத காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில் 96-ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்தவுடன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்த அந்தத் திட்டத்தைப் போல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு திட்டம் உண்டு என்று சொல்லி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் முப்பது இலட்சம் ரூபாய் என்று தொடங்கி இப்போது ஐம்பது இலட்ச ரூபாய் அவர்களுக்குத் தரப்படுகின்றது.





## இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீங்கள் கணக்குப் போட்டுப் பார்த்தால் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர். ஆகவே ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு அவர்களுக்கு தரப்படுகின்ற பணம் இரண்டு கோடி ரூபாய். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் நாம் தருகின்ற நிதி ஐம்பது இலட்சம். நீங்கள் இந்த ஐம்பது இலட்சத்தை ஆறு தொகுதிகளுக்கென்று ஆறால் பெருக்கிப் பார்த்தால் மூன்று கோடி ரூபாய் நாம் தருகிறோம் ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு.

இந்தத் திட்டம் இந்தியாவிலே தமிழ்நட்டைத் தவிர வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் கூட, அது தமிழ்நாட்டிற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட திட்டமாக இருக்குமே தவிர, நமக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட திட்டமாக இருந்திட முடியாது.

தொடர்ந்து 'நமக்கு நாமே' திட்டம், நம்முடைய பணிகளை நாமே செய்து கொள்ளவேண்டும். நம்முடைய ஊர் காரியங்களை - தேவைகளை - உதாரணமாக பள்ளிக்கூடம் தேவையா, மருத்துவமனை தேவையா, ஒரு சிறிய சாலை போட வேண்டுமா, ஒரு குளம் வெட்டிக்கொள்ள வேண்டுமா, இதற்கான நிதி எவ்வளவு தேவைப்படுகிறதோ, அதிலே ஒரு பகுதியைப் பொதுமக்கள் வசூலித்துத் தருவது, இன்னொரு பகுதியைச் சர்க்கார் தருவது. இந்த இரண்டையும் இணைத்து 'நமக்கு நாமே' திட்டத்தை அவர்களே பாடுபட்டு - பணம் தர இயலாத பொதுமக்கள் தங்களுடைய உழைப்பைத் தருவது - உழைப்பை ஒரு பங்காக வைப்பது என்று திட்டமிட்டு இந்த ஆட்சி கடந்த மூன்று நான்கு ஆண்டுக் கா்லமாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறது.

அதைத் தொடர்ந்து தான் உழவர் சந்தை. விவசாயிகள் தாங்கள் பயிரிடும் காய்கறிகளை இடைத் தரகர்களை வைத்துக் கொண்டு விற்பனை செய்கின்ற காரணத்தால் அதை வாங்கிச் சாப்பிடுகின்ற பொதுமக்களும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கின்றது. விவசாயிகளும் நல்ல இலாபத்தைப் பெற முடியவில்லை. இடையிலே வருகின்ற தரகர்கள் அந்த இலாபத்தைப் பங்கிட்டுக் கொண்டு போய் விடுகிறார்கள். எனவே இடைத்தரகர்களுக்கு இடம் இல்லாமல் அந்தக் காய்கறிகளை அவர்களே கொண்டு வந்து ஒரு இடத்திலே வைத்து விற்பதற்கேற்ற வகையிலே ஏறத்தாழ இருபது நகரங்களில் இன்றைக்கு உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. மொத்தம் 100 நகராட்சி மன்றங்களிலும் 100 உழவர் சந்தைகளை அமைக்கத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த ஆண்டு இன்னும் ஏழெட்டு மாதங்களில் 100 உழவர் சந்தைகளும் அமைக்கப்பட்டு விடும்.

மதுரையிலும், திருச்சியிலும் உழவர் சந்தைகளில் ஒவ்வொரு நாளும் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய், ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு விற்பனையாகிறது. சேலத்திலே ஒவ்வொரு நாளும் ஐம்பதாயிரம், அறுபதாயிரம் ரூபாய்க்கு உழவர் சந்தையிலே வியாபாரம் ஆகிறது. இப்படி இருபது ஊர்களிலும் வியாபாரமாகிறது. சில சின்ன ஊர்களில் மாத்திரம் தான் ஒரு நாளைக்கு இருபதாயிரம் ரூபாய், முப்பதாயிரம் ரூபாய் என்ற அளவிற்கு விற்பனையாகிறது.

## நேர்மையாக - நாணயமாக நடைபெறும் உழவர் சந்தைகள்

இது இந்தியாவிலே தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதத் திட்டம். உழவர் சந்தைக்கு விவசாயிகள்

காய்கறிகளைக் கொண்டு வரலாம். அவர்களுக்கு ஒதுக்கப்படும் இடம் - ஒவ்வொரு நாளும் யார் முந்தி வருகிறார்களோ அவர்களுக்கு இடம் தருவதில் முன்னுரிமை தரப்படும். அது மாத்திரமல்ல, அந்த இடத்திற்கு வாடகை கிடையாது. அந்த இடத்திற்கு வர அவர்கள் கிராமத்திலிருந்து பேருந்திலே வரும் போது அவர்களுக்கு மாத்திரம் தான் டிக்கெட். அவர்கள் கொண்டு வருகின்ற காய்கறி மூட்டைக்கு லக்கேஜ் கட்டணம் கிடையாது. அதுவும் இனாம். ஒவ்வொரு நாளும் காய்கறிகளுக்கான விலையை உழவர் சந்தையிலே அமைக்கப்படும் குழு கூடித் தீர்மானிக்கும். விலைப்பட்டியல் போர்டிலே எழுதி தொங்க விட்டுவிட வேண்டும். அதைப் பார்த்து வாங்க வருபவர்கள் பணம் கொடுத்து வாங்குவார்கள். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் வியாபாரம் நடைபெறும்.

ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் அரசாங்கமே அவர்களுக்கு தராசு, படிக்கல், எல்லாம் வாங்கிக் கொடுத்து விடுகிறது. கொடுப்பது மாத்திரமல்ல, அது ஒழுங்காக வேலை செய்கிறதா - இவர்கள் ஒழுங்காக வேலை செய்தால்கூட சில நேரங்களில் தராசு ஒழுங்காக வேலை செய்யாது. முள் ஒழுங்காக ஆடுகிறதா, படிக்கல் தேயாமல் இருக்கிறதா என்பதையெல்லாம் கண்காணிப்பதற்கு அதிகாரிகள். இப்படி உழவர் சந்தைகள் நேர்மையாக, நாணயமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலே நேர்மையாக, நாணயமாக ஒரு காரியம் நடைபெறுகிறதென்றால் அது எவ்வளவு கஷ்டம் என்பது உங்களுக்குத் தெரியும். ஏனென்றால் நாணயமில்லாதவர்களை ஆதரிக்கின்ற சிலபேர் நாட்டிலே இன்றைக்கு இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நேர்மை இல்லாதவர்கள் பக்கம் போகின்ற சிலபேர் இன்றைக்கும் நாட்டிலே இருக்கின்றார்கள். எனவேதான் உழவர் சந்தையிலே நேர்மை, நாணயம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக எல்லா விதமான கண்காணிப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அடுத்து 'வருமுன் காப்போம்' திட்டம். இந்தியாவிலே அப்படி ஒரு திட்டம் வேறெங்காவது உண்டா என்று கேட்டுப் பாருங்கள். வருமுன் காப்போம் திட்டம் நம்முடைய மருத்துவர்கள் மருத்துவ சாதனங்கள், மருந்துகள் இவைகளோடு ஒவ்வொரு மாவட்டமாகப் பிரித்துக் கொண்டு அந்த மாவட்டங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

முதன் முதலாகக் கடந்த மாதம் திருவள்ளூர் மாவட்டத்தில் இது தொடங்கப்பட்டது. அந்த ஒரு நாள் மாத்திரம் ஏறத்தாழ எட்டாயிரம் பேர், பத்தாயிரம் பேர் வந்து சிகிச்சை செய்து கொண்டார்கள். தங்களுக்கு உடலிலே என்ன நோய் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளவும், உடனடியாக அதற்கான மருந்தைப் பெற்று நோயைப் போக்கிக் கொள்ளவும், சில நோய்கள் பெரிய மருத்துவமனைக்குச் சென்றால் தான் தீருமென்றால் அந்தப் பெரிய மருத்துவமனைகளுக்கு அங்கிருந்தே சிபாரிசுக் கடிதங்கள் கொடுத்தனுப்பவும், நகரத்திலே உள்ள மருத்துவமனைகளிலே உள்ள டாக்டர்கள் அவர்களுக்கு இலவசமாகவே வைத்திய உதவிகளைச் செய்யுமான இந்த ஏற்பாட்டிற்குப் பெயர் 'வருமுன் காப்போம்' என்ற திட்டமாகும். இதிலே 8,400 முகாம்கள் தமிழ்நாடு முழுதும் நடைபெற வேண்டியிருக்கின்றது. இதுவரையிலே ஏறத்தாழ 500 முகாம்கள் நடந்து முடிந்திருக்கின்றன. மீதம் உள்ள முகாம்களும் இந்த ஆண்டு நடந்து முடியவிருக்கின்றன.

## ஜெயப்பிரகாஷ் நாராயண் பாராட்டிய குடிசைமாற்று வாரியத் திட்டம்

மனிதர்களை மாத்திரம் பார்த்தால் போதுமா? மனிதர்களை விட நன்றி உடையவை ஆயிற்றே கால்நடைகள். எனவே அந்தக் கால்நடைகளையும் கவனிக்க வேண்டும் என்பதற்காக கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வாயில்லாத ஜீவன்களுக்கு - மனிதர்களாவது வலிக்கிறது, மயக்கம் வருகிறது என்று சொல்லக் கூடிய அளவிற்கு வாய்த்திறன் பெற்றவர்கள். அம்மா என்று கதறுவதைத் தவிர வாயில்லாத ஜீவன்களாக இருக்கின்ற அந்தப் பிராணிகளுக்கு வைத்திய உதவி செய்ய நம்முடைய கால்நடைத் துறையினுடைய மருத்துவர்கள் கிராமம் கிராமமாகச் செல்கின்ற திட்டம் அண்மையிலே திருக்கழுக்குன்றத்திலே தொடங்கப்பட்ட தமிழ்நாடு முழுதும் பரவலாகப் பல மாவட்டங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இப்படி வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத மக்கள் நலத் திட்டங்கள், மக்களுடைய வசதி வாய்ப்புக்காக அவர்களையே நாடிச் செல்கின்ற திட்டங்களாக அமைக்கப்பட்டு, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய திட்டங்களோடு தான் 70-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் குடிசைமாற்று வாரியத் திட்டத்தையும் நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். இதைத் தொடங்கிய அந்தக் காலக் கட்டத்திலே இதற்குத் தலைவராக இருந்து பெரும்பணி ஆற்றியவர் என்னுடைய ஆருயிர் சகோதரர் அருமை அரங்கண்ணல் என்பதை நீங்கள் எல்லாம் நன்கறிவீர்கள். அவருடைய பெயரால் இரண்டொரு இடங்களிலே அரங்கண்ணல் நகரம் என்றே உருவாக்கியிருக்கிறோம்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் குடிசைமாற்று வாரியத் திட்டத்தைக் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார். பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் குடிசைமாற்று வாரியத் திட்டத் திறப்பு விழா ஒன்றிலே கலந்துக் கொண்டு பாராட்டியிருக்கிறார். ஆதிதிராவிடர்களுக்காக கட்டப்பட்ட வீடுகளைக் கண்டு அதிசயித்துப் போய் அதைப் பாராட்டியிருக்கிறார். இவைகளோடு இப்போது ஒரு புதிய திட்டமாக - இதற்கெல்லாம் ஒரு குடியிருப்புக்கு 60 ஆயிரம் ரூபாய், 70 ஆயிரம் ரூபாய் ஆகிறது என்பதால் இன்னும் எளிய முறையிலே வீடுகளைக் கட்டித்தர கல்நார் தகடுகளால் ஆன தீப்பிடிக்காத ஓட்டுக் கூரைகளோடு கூடிய வீடுகளை அமைக்கும் திட்டத்தை இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின்படி 12,500 ரூபாய்க்கு ஒரு குடும்பத்திற்காக ஒரு சிறிய வீட்டை அமைத்துத் தர முடியும், அதன்படி கடந்த இரண்டாண்டுகளில் இந்த அரசு அமைத்துள்ள புதிய கல்நார் தகடு வேய்ந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 20,611. இப்போது தான் ஆரம்பித்து இரண்டாண்டுகளில் இருபதாயிரம் கல்நார் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன.



கட்டித் தரும் திட்டம் நிறைவேறிக் கொண்டு வருகின்றது. எனவே மனிதனுடைய தேவைகளையெல்லாம் நிறைவேற்றுகின்ற அரசாக, மக்களுடைய வசதி வாய்ப்புகளைக் கவனிக்கும் அரசாக, இருக்கின்ற, இந்த அரசு உங்களுடைய அரசு.



## மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றுகிற அரசு

ஒரு நாட்டின் பிரஜையின் முக்கியமான தேவை உணவு, உடை, உறையுள். உண்ண உணவு வேண்டும், உடுக்க உடை வேண்டும், இருக்க வீடு வேண்டும். இந்த மூன்று முக்கியமான பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையை, உணவுப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு வருகிறோம். இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே தான் ரேஷன் கடைகளிலே அரிசி விலை குறைவு. அதைப் போலவே இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இங்கே தான் இப்படிப்பட்ட உறையுள், வீடுகளைக்

## 'கண்ணகி நகர்' எனப் பெயர் சூட்டல்

வீட்டுவசதித் துறை செயலாளர் கோவிந்தன் அவர்கள் இந்தப் புதிய நகருக்கு ஒரு புதிய பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் என்ன பெயர் சூட்டுவதென்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். இந்த ஆட்சியில் பல நல்லவர்களுடைய பெயர்கள் எல்லாம் சூட்டப்பட்டாகி விட்டது. அவர்கள் வேறு கட்சிக்காரர்களாக இருந்தாலும் வித்தியாசம் பாராமல் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் சூட்டப்பட்டாகி விட்டது. எனவே ஒரு இலக்கிய பெயராகவே சூட்டுவதென்று முடிவு செய்து ''கண்ணகி நகர்'' என்று பெயர் சூட்டி விடைபெறுகிறேன். ★



# தமிழ்க் கல்வி

தமிழ்க்கல்வி தமிழ்க்கல்வி என்றுபாடு – தமிழா!
தமிழில்கற்றுநீ முன்னேற்ற நடைபோடு!
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தன்மான முன்னேற்றச் சிந்தையோடு!
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தமிழோடு தமிழர்க்கு வாழ்வுதேடு!

அறிவிற்கு அடித்தளம் தமிழ்மொழியே – தமிழா!
ஆங்கிலம்போல் ஆகாதென்பது வீண்பழியே!
அறிவிற்கு மூலமும்–முதலும் தமிழ்மொழியே – தமிழா ! உன்,
பிள்ளைக்குக் கொடுப்பாய்த் தமிழ்க்கல்வியே!

முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை – தமிழா!
முடியாதென்பது மனிதனுக்கு அழகோ? இல்லை!
அனைத்தும் தமிழால் முடியுமென்று நம்பு!
அறிவிழந்து தமிழா! நீ, பேசாதே வம்பு!

தமிழ்மழலையர் தமிழில் பேசினால் தண்டனை – இது
ஆங்கிலப் பள்ளியின் அதிகார நிபந்தனை
எப்படி இருக்கிறது ஆதிக்கத் தோரணை – இது
ஆங்கில மோகத்தின் உச்சக்கட்ட வேதனை!

தலைமையும், முதன்மையும் தமிழுக்குத் தருவோம்– அறிவு
வளமையும், செழுமையும் வாழ்வினில் பெறுவோம்!
அயல்மொழி ஆதிக்கம் தமிழகத்தில் எதற்கு? – அதன்
பாதிப்புத் தெரியாது இப்போது நமக்கு!

அறிவார்ந்த தமிழ்க்கல்வியை அறியாமல் இகழாதே – தமிழா
'ஆங்கிலம்! ஆங்கிலம்!' என்று அலைந்து திரியாதே!
அன்னைத்தமிழை மறந்து அடையாளம் தெரியாமல் – தமிழா
அழிந்தொழிந்து போகாதே! இழிவுநீ அடையாதே!

தமிழ்வழிக் கல்வியைத் தமிழரின் உரிமையென்று கூறு!
தமிழ்வழிக் கல்வியே தமிழரின் பெருமையெண்ணிப் பாரு!
தமிழ்வழிக் கல்வியே தமிழகஅரசின் கடமையென்று கோரு!
தமிழுக்கு மாறானது வேண்டாதது; சிந்தித்துத் தேறு!

தமிழரின் சொல்லும் செயலும் தமிழாகட்டும்
தமிழரின் வாழ்க்கைக் கூறுகள் அனைத்தும்
தமிழரைத் தமிழரென்று அடையாளம் காட்டட்டும்
தமிழரின் தனித்தன்மை தமிழ்முகம் ஆகட்டும்!

தமிழ்மண்ணில் தமிழ்க்கல்வியைத் தமிழர்தாம்
ஏற்கவேண்டும் வளர்க்கவேண்டும் தமிழர் நாம்,
தமிழரென்று சொல்வதற்குத் தகுபொருளைத்
தமிழா! நீ சிந்தித்துச் செயலாக்க வேண்டும்!

தமிழ்மண்ணில் தமிழ்வழிக் கல்விக்கு எதிர்ப்பா?
ஆங்கிலத்திற்கு ஆதரவாக வழக்குத் தொடுப்பா?
இதற்குப் பெயர்தான் ஆங்கிலக்கல்வி வளர்ப்பா?
இவனெலாம் ஒருபிறப்பா? இதுவுமொரு பிழைப்பா?

மனிதஆற்றலை மலினப்படுத்திப் பணம்குவிக்கின்றார்!
பாவப்பட்டோர் தங்களின் பரிசுத்த வணிகத்தைப்
புனிதப்படுத்திக் கொள்ளப் போராட்டம் தொடுக்கின்றார்!
அவாகளை யாரென்று அடையாளம் காட்டுகின்றார்.

தமிழுர்மைத் தமிழ்மண்ணில் தமிழ்வழிக் கல்வியைத்
'திணிப்பு' என்று சொல்வது திமிரான திரிபுவாதம்;
மனச்சாட்சி அற்றோரின் மானமிலா வாக்குமூலம்!
மனநோய் மனிதர்களின் அநாகரிக அவலஓலம்!



– பழனி மகிழ்நன்






தமிழ்மண்ணில் தமிழ்மொழியை அன்னியமாக்கிப் பேசுதல்
கண்ணியமற்ற அறிவிலிகளின் உண்மையற்ற கதைப்பாகும்
ஈனப்பிறப்பின் அடையாளம் இதுவென்பதே சரியாகும்
இதற்குமேல் சொல்வது நமக்கன்றோ தாழ்வாகும்.

உரிமையெலாம் தமிழென்று உளம்கொள்வாய் தமிழா!
உயர்வெலாம் தமிழென்று உண்மைஅறிவாய் தமிழா!
நன்மையெலாம் தமிழென்று நாளும்செய்வாய் தமிழா
நானிலம்போல் வளர்வாய்! உயர்வாய்! தமிழா!



தமிழால் ஒருவர்க்கொருவர் உறவென்று
தமிழ்வழி ஒன்றுபடுவோம் தமிழரென்று
தமிழால் தமிழர்க்கு உயர்வுண்டு
தமிழ்வழிக்கல்வி காப்போம் உறுதிகொண்டு!

தமிழே தமிழரின் உயிர்க்கூறு
தமிழ்வழிக் காப்போம் தமிழ்ப்பண்பாடு
தமிழே தமிழரின் நிலைப்பாடு!
தமிழ்வழி நிற்பதே தமிழ்நாடு!

எங்கும் எதிலும் தமிழே!
என்னும் கொள்கை நமதே!
எங்கும் எதிலும் தமிழே!
என்னும் அரசும் நமதே!

வீதிக்கு வீதி தமிழ்முழக்கம்
தமிழ்க் கல்விக்குத் தரட்டும் நல்விளக்கம்!
வீட்டிற்கு வீடு ஆதரவைத்
தேடிப் பெறட்டும் சான்றோரின் தமிழியக்கம்!

நாடும் மக்களும் நம்பக்கம்
அரசிற்கு வேண்டாமே தயக்கம்!
தமிழ்வழிக் கல்விக்கிது தொடக்கம்;
தொடரட்டும் ஆகட்டும் சட்டம்!

கேட்டினைப் போக்கி நாட்டினைக் காத்திட
அரசினர் ஆக்கினர் தமிழ்வழிக் கல்வி
தமிழ்வழிக் கல்வியே தமிழர்க்கு ஆக்கம்
தமிழ்வழிக் கல்வியில் காட்டுவோம் ஊக்கம்!

தமிழ்வழிக் கல்விக்கு ஆணையிட்டத்
தமிழக அரசுக்கு நன்றிசொல்வோம்!
தமிழ்வழிக் கல்வியைச் சட்டமாக்கிடத்
தமிழக அரசைநாம் வேண்டிநிற்போம்!

ஆரம்பக்கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி முடிய
அனைத்தும் இங்கே தமிழாகட்டும்
அறிவியல்தமிழ் வளர்த்து அறிவியல் மாந்தராய்
அவனியில் தமிழர் வாழ்வுயரட்டும்!

தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தமிழில்கற்றுநீ முன்னேற்ற நடைபோடு!
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா!
தன்மான முன்னேற்றச் சிந்தையோடு
தமிழ்க்கல்வி! தமிழ்க்கல்வி! என்றுபாடு – தமிழா
தமிழோடு தமிழர்க்கு வாழ்வுதேடு! ★

## எங்கள் ஊர் பிரச்சினை

### பிரச்சினை

இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், தீர்த்தாண்டதானம் கிராமம். இந்த கிராமத்தில் மிகவும் புனிதம் நிறைந்த சகல வினையும் தீர்க்கும் சர்வதீர்தேஸ்வரர் ஆலயம் உள்ளது. ஆடி அமாவாசை, தை அமாவாசை காலங்களில் தீர்த்தம் ஆட வெளியூரில் இருந்து ஆயிரக் கணக்கானோர் வருகின்றனர். அது போல தினமும் 100க்கும் மேற்பட்டவர்கள் கடலில் நீராடி சுவாமி தரிசனம் செய்ய வருகிறார்கள். ஆனால் வருபவர்கள் சேது சாலையில் இருந்து ஊருக்குள் வரும் சாலை வழியாகக் கடலுக்கும், கோவிலுக்கும் வர மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்தச் சாலை போட்டு சுமார் 30 ஆண்டுகள் இருக்கும். மாவட்ட கவுன்சிலர், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சிமன்றத் தலைவரிடம் நாங்கள் முறையிட்டு அவர்கள் முயற்சியினால் ரோடு போட முயன்றால், அந்தச் சாலை கணக்குகளில் மீனவர் சாலை என்று இருப்பதால், யூனியன் மூலமாகவோ, பஞ்சாயத்து மூலமாகவோ போட முடியாத நிலை உள்ளது. எங்கள் கிராமத்தின் மீது கருணை கொண்டு, இந்தச் சாலையைத் தார்ச்சாலையாக போட்டுத்தர ஏற்பாடு செய்து, எங்களையும், ஆலயத்திற்கு வழிபட வருபவர்களையும், சிரமப்படாத வகையில் தார்சாலை அமைத்துத் தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*– கிராமப் பொது மக்கள் சார்பாக எஸ்.வள்ளிநாயகம்*
*தீர்த்தாண்டதானம் கிராமம், திருவாடானை ஒன்றியம்*
*இராமநாதபுரம் மாவட்டம்.*

### தீர்வு

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை ஊராட்சி ஒன்றியம் புல்லக்கடம்பன் ஊராட்சியில் அமைந்துள்ள தீர்த்தாண்டதானம் சர்வதேஸ்வரர் ஆலயத்திற்குச் செல்லும் சாலை மேம்பாடு மற்றும் தீர்த்தக்கரை அடிப்படை வசதிகள் செய்யும் திட்டத்தில் வேலையை “சமன்பாடு மற்றும் ஊக்க நிதி” 1999–2000–இல் (சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு) ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய தேர்வு செய்து பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு மற்றும் அனுமதி வரப்பெற்றவுடன் மேற்படி வேலையை எடுத்துச் செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*– கேபாலகிருஷ்ணன்*
*ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம்*
*திருவாடானை.*

### பிரச்சினை

நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் முதல்நிலை பேரூராட்சியில் 2–வது வார்டு கலைஞர் நகர் மதகடித் தெரு, பகுதிச் சாலையைச் சிமெண்ட் கான்கிரீட் சாலையாக்கிட “செயற்பொறியாளர், குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், திருச்சி” என்ற முகவரியில் இருந்து அதிகாரிகள் வந்து சாலையைப் பார்வையிட்டு அளந்து சென்றார்கள். மன்னார்குடியைச் சேர்ந்த திரு பூமிநாதன் அவர்கள், ஒப்பந்தப் பணியை எடுத்துள்ளதாகவும் அறிகிறேன். ஆனால், இரண்டு ஆண்டு காலமாக எந்தப் பணியும் நடைபெறவில்லை. பணி விரைந்து நடந்து முடிந்திட நடவடிக்கை எடுத்து உதவிட வேண்டுகிறேன்.

*– ச.இராமகிருஷ்ணன், துணைத் தலைவர்*
*கீழ்வேளூர், நாகை மாவட்டம்.*



### தீர்வு

பேரூராட்சிகளில் 1999–2000–ஆம் ஆண்டுக்கான சிமெண்ட் சாலை அமைக்கும் மான்யத் திட்டத்தில், கீழ்வேளூர் பேரூராட்சியில் 2–வது வார்டு கலைஞர் நகர் (மதகடித் தெரு) பகுதிச் சாலையை, சிமெண்ட் சாலையாக அமைக்க, ரூ.3.19 இலட்சத்தில் பணி மேற்கொள்ளப்பட்டு, 300மீ. நீளம் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி ஒப்பந்தக்காரர் திரு.ஏ.எஸ்.என்.ராஜாராமன் என்பவரிடம் 17.9.99–ஆம் தேதியில் ஒப்படைக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி இம்மாத இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

*– மு. பாலசுப்ரமணியன்*
*பேரூராட்சிகள் உதவி இயக்குநர்*
*பனகல் கட்டடம், தஞ்சாவூர் மாவட்டம்.*

* * *





# திருவள்ளுவர் உணர்த்தும் மொழிசார் சிந்தனைகள்

**பொற்கோ**

### மொழியியல்

மனிதனோடு கூடப்பிறந்த ஒரு ஈடு இணையற்ற கருவியாகவும் உறுப்பாகவும் செல்வமாகவும் விளங்குவது மொழி. மொழியைப் பற்றிய சிந்தனைகள் பழங் காலத்தில் இலக்கணம் என்ற அளவில் இருந்தது. இக்காலத்தில் மொழியைப் பற்றிய சிந்தனைகள் பல்வேறு கோணங்களில் விரிந்து பரந்து வளர்ந்திருக்கிறது.

### திருக்குறள் காட்டும் மொழிச் சிந்தனைகள்

திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ள செய்திகள் இன்ன இனத்துக்கு மட்டும் உரியது என்றோ, இன்ன சமயத்துக்கு மட்டும் உரியது என்றோ, இன்ன நாட்டுக்கு மட்டும் உரியது என்றோ கூற இயலாததாய் உலகப் பொதுமை பெற்றவை என்பதை மனத்திற்கொண்டு பார்க்கும்போது, அவர் மொழி பற்றிக் கூறிய செய்திகளும் இன்ன மொழிக்கு மட்டும் உரியது என்றில்லாமல் எல்லா மொழிக்கும் உரியதாய் அமைந்துள்ள உண்மை இனிது விளங்குகிறது. எழுத்தமைப்பு, சொல்லமைப்பு முதலாய மொழியமைப்புகளை விளக்குவதும் உலக மொழிகளின் வகைகளை ஆராய்வதும் திருவள்ளுவர் எடுத்துக்கொண்ட நூற்பணிக்கு இயைபில்லாதன. எனவே, அவருடைய நூலில் காணும் மொழிச் சிந்தனைகள் (1) சொற்பயன், (2) சொல்லாட்சி, (3) சொல்லின் தன்மை, (4) சொல் நயம், (5) கருத்துப் பரிமாற்றம் என இத்தகைய முறைகளிலேயே அமைந்துள்ளன. சொற்பயன், சொல்லாட்சி, சொல்லின் தன்மை, சொல் நயம், கருத்துப் பரிமாற்றம் முதலானவை மக்கள் வழங்கும் எல்லா மொழிகட்கும் பொதுவானவை, மொழியாராய்ச்சிக்கு இத்தகைய ஆய்வுகளும் ஒரு நிலையில் தேவையான ஆய்வுகளே.

### சொற்பயன்

பேசுவோர் மனநிலைக்கும் கேட்பார் மனதில் ஏற்படும் விளைவுகளுக்கும் ஏற்ப வள்ளுவப் பெருந்தகை சொற்களை இன்சொல் இன்னாச்சொல் எனப் பொதுவாக இருவகையாகப் பிரித்துள்ளார். இவையன்றியும் சொற்களைப் பயனுள்ள சொல், பயனிலாச் சொல் எனவும் பிறவாறும் வகை பிரித்துச் சுட்டுவார் வள்ளுவர்.

இனிய சொற்களையே ஆளுவதால் ஏற்படும் பயன்களைப் பற்றி வள்ளுவர் இனியவை கூறல் என்ற அதிகாரத்தில் பேசுகிறார். சுருக்கமாகச் சொன்னால்,

1. இன்சொல்லால் அறம் பெருகும் (96);
2. இன்சொல் நன்றி பயக்கும், அதாவது நன்மை உண்டாக்கும் (97);
3. இன்சொல் இன்பம் தரும் (98);
4. இன்சொல் இனிது ஈனும் (99)

— என்று கூறலாம்.

இவையன்றியும் பயனிலாச் சொற்களால் விளையும் கேடுகளைப் பற்றியும் பயனிலாச் சொற்களை விளக்கவேண்டிய இன்றியமை யாமை பற்றியும் பயனில சொல்லாமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கமாகப் பேசிச் செல்கிறார்.



ஒரு சொல் எப்படிப்பட்டவர் வாயிலிருந்து வருகிறது என்பதைப் பார்த்துத்தான் அதன் பயனைப் பற்றிச் சரியாக மதிப்பிட முடியும். சிறந்த ஒழுக்கமுடைய மனிதனின் வாய்ச்சொல் வழுக்கல் நிலத்தில் நாம் சறுக்கி விழாமல் நம்மைக் காப்பாற்றுகிற ஊன்று கோலைப் போல உதவிபுரியும் என்ற கருத்தில், "இழுக்கல்...வாய்ச் சொல்" (415) என்று கூறிச் செல்கிறார் வள்ளுவர்.

சொல் எத்தகையதோ அதற்கேற்றபடி பயன் மாறுபடும். சொல் யாரிடமிருந்து பிறந்ததோ அதற்கேற்றபடி அதன் பயன் மாறுபடும். சொல் யாரைச்சென்று சேர்கிறதோ அதற்கேற்பவும் அதன் பயன் வேறுபடும். சொல்லின் பயன்பற்றி வள்ளுவர் பல்வேறு வாய்ப்புகளில் ஆங்காங்கே பேசிச் சென்றிருக்கிறார்.

வள்ளுவர் சொற்களை எந்தெந்த முறையில் வகைப்படுத்துகிறார் என்றும், சொல்லின் பயனைப்பற்றி என்ன கருதுகிறார் என்றும் திட்டவட்டமாக ஆராய்வது பயனுள்ள முயற்சியாக இருக்கும். சொற்களை இலக்கண அடிப்படையில் பெயர், வினை இடை, உரி என்று வகைப்படுத்துவது வேறு; அவற்றையே மொழி வரலாற்று நோக்கில் இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வட சொல் என்று வகைப்படுத்துவது வேறு; பயன்பாட்டு நோக்கில் சொற்களைப் பயனுள்ள சொல், பயனில்லாச் சொல் என்றும் இன்சொல், கடுஞ்சொல், புன்சொல் என்றும் வகைப் படுத்துவது வேறு. ஆய்வுத் தேவைக்கேற்ப வகைப்பாடுகளும் வகைப் பாட்டின் அடிப்படைகளும் மாறுபட்டுள்ளன. நடைமுறை வாழ்வியல் நோக்கில் சொற்களைப் பாகுபடுத்திப் பார்த்தால் அந்த வகைப்பாடு திருக்குறளில் காணும் சொல் வகைகளை விளங்கிக் கொள்ள உதவும்.

**சொல்லாட்சி**

வாழ்வில் சொற்களை ஆளும் முறைமை பற்றித் தெளிவாகச் சில வழிமுறைகளை வகுத்துத் தருகிறார் வள்ளுவர். தன்மனதில் உள்ளபடியே கருதுகின்ற ஒன்றை வெளிப்படுத்த ஒருவன் சொல்லை அல்லது மொழியைக் கையாளுகிறான். அதனை நாம் வாய்மை என்போம். தான் உள்ளபடியே கருதாத ஒன்றை, உள்ளபடியே தான் அதைக் கருதுவதாகப் பிறர் நம்புகின்ற வகையில், வெளிப்படுத்தவும் ஒருவன் மொழியைக் கையாளலாம். அதனை நாம் பொய்மை என்போம். இவற்றுள் வாய்மையின் சிறப்பை வள்ளுவர் வாய்மை என்ற அதிகாரத்தில் விளக்கிச் செல்கிறார். பயனில்லாத சொற்களை ஆளுதல் வேறு; பொய் பேசுதல் வேறு. சொற்களை ஆளும்போது பயனில்லாத



முறையில் ஆள்வதை வள்ளுவர் கண்டித்து ஒதுக்குகிறார்.

பொய் பேசுதலும் பயனின்றிப் பேசுதலும் கடிந்து ஒதுக்கப்பட்டது போலவே புறம் பேசுதலும் வள்ளுவத்தில் கடிந்து ஒதுக்கப் படுகிறது. புறங்கூறாமை என்ற அதிகாரத்தில் புறங்கூறாமையின் சிறப்பையும் புறங்கூறலின் இழிவையும் விளக்கிச் சொல்கிறார் வள்ளுவர்.



ஒருவரையொருவர் நன்கு உணர்ந்து ஒத்த அன்பு பூண்ட காதலர்கள் சொற்களைச் சற்று வேறுபட்ட முறையில் ஆள்வதும் உண்டு. மிகுந்த அன்புடைய காதலி தன் காதலனிடம் பேசும்போது, சில நேரங்களில், வேண்டாத வர்களிடம் அல்லது அயலவர்களிடம் பேசுவது போல் பேசுதலும் உண்டு. இந்தப் பேச்சும் பொய்மையும் வேறு வேறு என்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய சொல்லாட்சியைப் பற்றி "செறாஅச்.....குறிப்பு" (1097) என்ற குறளின் மூலம் தெளிவாக உணர்ந்துகொள்கிறோம்.

மேலும் அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை முதலாய அதிகாரங்களில் சொல்லாட்சி பற்றி விளக்கிச் செல்கிறார் வள்ளுவர்.

**சொல்லின் தன்மை**

ஒரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி என்றும்; நிலைமொழி, வருமொழி என்றும்; தனிமொழி, தொடர்மொழி என்றும் சொற்களையும் தொடர்களையும் இலக்கண நூலார் மொழியியல் நோக்கில் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்திப் பேசுவர். ஆனால், வாழ்வியல் நோக்கில் சொற்களின் பயன்பாட்டுக்கேற்பவும், மன உணர்ச்சிக் கேற்பவும் வள்ளுவப் பெருந்தகை சொற்களை வேறொரு முறையில் வகைப்படுத்திப் பேசுகிறார். பயனில் சொல் (196), பண்பில் சொல் (194), இன்சொல் (91), கடுஞ்சொல் (566), ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல் (415), செறாஅச் சிறு சொல் (1097) என வள்ளுவர் வேறொரு அடிப்படையில் – வேறொரு நோக்கில் சொற்களை வகைப்படுத்திப் பேசுதல் காண்க. நடைமுறை வாழ்வியல் நோக்கில் சொற்களையும் தொடர்களையும் வகைப் படுத்துவதும் பயனுள்ள ஒரு ஆய்வாக அமையும். சொல்லின் தன்மைக்கேற்ப வள்ளுவர் பயன்படுத்திய குறியீடுகள் இந்த முறையில் நம் சிந்தனையைத் தூண்டுகின்றன.

**சொல் நயம்**



சொல் நயம் பற்றித் தனியே திருவள்ளுவர் பேசவில்லை யாயினும், சில குறள்களில் அவர் சொற்களை ஆண்டுள்ள முறை சொல் நயத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் திறனையும் நமக்கு உணர்த்துகிறது எனலாம். "யாரினும்...என்று" (1314) என்ற குறள் மேற்கூறிய கருத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. யாரினும் காதலம் என்ற தொடருக்கு இரு பொருள்கள் உண்டு. 1. நீயும் யானும் (நாம்) நம்மைப்போன்ற காதலர்கள் எல்லாரினும் அன்புடையேம் என்பது ஒரு பொருள். 2. யாம் (யான்) மற்றெல்லாரினும் உன் மீது காதலம் (அன்புடையேன்) என்பது இன்னொரு பொருள். தலைவன் முதலாவது பொருளிலேயே அத்தொடரை ஆளுகிறான் என்று தெரிந்தும் தலைவி இரண்டாவது பொருளில் அத்தொடரைத் தான் உணர்ந்ததாகக் காட்டிப் பொய்க் கோபம் கொண்டு யாரினும் யாரினும் என்று கேட்டு ஊடுகிறாள். இங்கே வள்ளுவர் பயன் படுத்தியுள்ள இரு பொருள் நயம் மொழியியல் நோக்கில் உணர்ந்து சுவைக்கத் தகுந்தது.

**கருத்துப் பரிமாற்றம்**

மேற்கூறிய எல்லாவற்றினும் மேலாகத் திருவள்ளுவப் பெருந்தகை கருத்துப் பரிமாற்றம் பற்றிக் கூறியுள்ள செய்திகள் எல்லா மொழியினரும் உணர்ந்து போற்றத் தக்கனவாம். உணர்தற்கரிய அரிய பொருள்களையும் நீ மற்றவர்க்குச் சொல்லும் போது எளிதில் அவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க முறையில் சொல்லுக; ஆனால், மற்றவர் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் சொல்லாவிட்டாலும் நீ அவர்களின் பேச்சில் உள்ள நுண் பொருள்களைத் தவறாமல் கண்டுகொள்ள வேண்டும். இந்தக் கருத்தில் திருவள்ளுவர் வழங்கிய "எண்பொரு ளவாக...அறிவு" (424) என்ற குறள், இங்கே குறிக்கத்தக்கது. கருத்துப் பரிமாற்றத் திறன்



வளரவும் அறிவுத் துறை வறுமை எய்தாமல் வளம பெறவும் இக்கருத்து என்றும் எங்கும் மிகவும் தேவையான கருத்து.

பிறர் விரும்பும்படி நீ பேசவேண்டும்; ஆனால், பிறர் வேறு வகையில் பேசினாலும்



நீ அவர்கள் பேச்சின் பயனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தக் கருத்தை "வேட்பத்தாம் சொல்லி...கோள்" ' (946) என்ற குறளின் மூலம் உணர்த்துகிறார் வள்ளுவர். "கேட்டார்ப் பிணிக்கும்...சொல்" (642) என்ற குறளும் கருத்துப் பரிமாற்றத் திறம் பற்றி வள்ளுவர் கொண்டுள்ள எண்ணத்தை நமக்கு உணர்த்துகிறது.

**மொழியின் தலையாய பயன்கள்**

பேசத் தெரிந்த நாள் முதல் மனித வாழ்வில் உணர்தலும் உணர்த்தலும் தொடர்ந்து நடக்கும் தொழில்கள், கற்றும கேட்டும் உணர்ந்து கொள்ளுதல் மொழியின் பயனபாடுகளுள் முதன்மையான ஒன்று. இதனைக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை முதலான அதிகாரங்களில் பல்வேறு கோணங்களில் வற்புறுத்துகிறார் வள்ளுவர்.

கற்றும் கேட்டும் உணர்ந்தவற்றைப் பிறரும் உணரும் வகையில் உணர்த்துகின்ற திறன் எவ்வளவு இன்றியமையாதது என்பதை, "இணரூழ்த்தும்...உரையாதார்" (650) என்ற குறளில் தெளிவுபடுத்துகிறார் வள்ளுவர்.

கற்றும் கேட்டும் உணர்ந்து கொள்ளுதல், கற்றதைப் பிறர் உணர விரித்துரைத்தல் ஆகிய இரண்டும் மொழியால் நேரடியாக விளையும் தலையாய பயன்களே. இவை இரண்டினும் மேலான இன்னொரு பயனும் உண்டு. தான் பக்குவம் பெற்று விளங்குதலே ஏனைய பயன்களினும் ஒருவனுக்குச் சிறந்த பயன் என்பதை, "ஓதி உணர்ந்தும்...பேதையார் இல்" (834) என்ற குறளில் தெளிவாக எடுத்துக் கூறி நம் உள்ளத்துக்கு வலிமையூட்டி ஒருமுகப்படுத்தி உயர்த்துகிறார் வள்ளுவர்.

✡ ✡ ✡ ✡ ✡

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; நல்வாழ்வு வாழ்ந்து நல்லின்பம் துய்ப்பது எப்படி என்பதை எடுத்துக் காட்டுவது. வள்ளுவர் கூறும் வழியில் மாநில மக்கள் ஒழுகுவார்களேயானால், இவ்வுலகு இன்பத்தின் நிலைக் களனாய் இனிது விளங்கும்.

— சி. இலக்குவனார்.

'கோட்டம் முதல் குமரி வரை' மலரிலிருந்து...





# புயல்

தெலுங்கு மூலம் – பாலகும்மி பத்மராஜு
தமிழில் – த.சா. கிரிபிரகாஷ்

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. புகைவண்டி தாமதமாக வந்தது. ராவ் அவர்கள் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்தார். அப்பொழுது அவருக்குத் தன் வீட்டின் நினைவு வந்தது. வீட்டுப் பொருட்களும், பழைய நிகழ்வுகளும் நிழலாடின. அவர் படிப்பறை சுத்தமாக இருந்தது. அங்கு, கரும்பலகை தென்பட்டது. அறையின் ஒரு மூலையில் பச்சை நிற தீபம் ஒளிர்ந்தது. அவர் அமர்ந்திருந்த நாற்காலியின் மெத்தை மேடு பள்ளங்களாகக் காட்சி தந்தது. மனைவி சோபாவில் அமர்ந்திருந்ததே தெரியவில்லை. அவருக்கு குழந்தைகள் நால்வர். இருவர் ஆண்கள், இருவர் பெண்கள். குழந்தைகளைப் பற்றிய பெருமிதம் அவருக்கிருந்தது.

ரயில்பெட்டியின் மூன்று இருக்கைகளையும் யாரோ பிடித்துக்கொண்டு படுக்கைகளைப் போட்டுள்ளனர். ராவ் வண்டியில் ஏறியதை,





அங்குள்ள பயணிகள் விரும்ப வில்லை. அதை அவர் யூகித்தார். வேறு பெட்டிக்குச் செல்வது நல்லது என்று நினைத்தார். ஆனால் 'போர்ட்டர்' அவருடைய பெட்டி, படுக்கைகளை நேரே இருக்கையின் மீது வைத்துச் சென்றுவிட்டான். வண்டியும் நகர்ந்தது. பெரியவர் ஒருவர் தன் விரிப்பைச் சுருக்கிக் கொண்டு, ராவுக்குக் கொஞ்சம் இடம் கொடுத்தார். ராவ் அங்கே அமர்ந்து, அக்கம் பக்கம் பார்க்கலானார்.

நால்வரும் வெகுதூரப் பயணிகள் என்று புரிந்து கொண்டார், ராவ். அவர்களுடைய காலணிகள் அனைத்தும் இருக்கைகளின் கீழ்க் கிடந்தன. சட்டைகள், பாண்ட்கள், கோட்டுகள் கொக்கிகளில் தொங்கின. நெகிழ்ச்சியான பைஜாமாக்களை ஆண் பயணிகள் அணிந்திருந்தனர். பொருட்கள் பலவாறு ஒழுங்கின்றிச் சிதறிக் கிடந்தன. ஜன்னல் ஓரத்தில் மெத்தையில் சாய்ந்துகொண்டு பெரியவர்கள் இருவர் இருக்கின்றனர். உள் இருக்கையில் ஓர் இளைஞனும், இளம் பெண்ணும் அமர்ந்திருக்கின்றனர். அவள் அவருடைய மனைவியாக இருக்கவேண்டும். சிகரெட் புகை நாற்றம், ராவின் மூக்கைத் துளைத்துச் சிறிது நேரம் கிறுகிறுக்க வைத்தது.

ரயில் பெட்டியில் புகை பிடிப்பது பற்றி ராவ் கடுமையான கருத்துக் கொண்டிருந்தார். பலவற்றில் அவருக்குத் தீவிரமான எண்ணங்கள் இருந்தன. உண்மையாக அவர் ஒரு வேதாந்தி. அவருக்குப் பிடித்த கொள்கை — கருத்து — ஒன்று உண்டு. வேதாந்தம் என்பது மனித வாழ்க்கையோடும், வாழ்க்கைப் போக்கோடும் மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே ஏற்படும் சிக்கல்களோடும் பின்னிக்கிடக்கும் ஒன்று என்பது அவர் கருத்து. வேதாந்தம் என்பது மனித வாழ்க்கைக்கும் பரந்த அனுபவங்களுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்பதும் அவர் கருத்து. அவருடைய வாழ்க்கை ஏற்றத்தாழ்வின்றி சீராக நடைபெற்று வந்தது. அதிருப்தியால் வாழ்க்கை பற்றி நிறைந்த உற்சாகத்தோடும், தூய்மையான உத்வேகத்தோடும் பேசுவார். அவர் ஒரு வேதாந்தியாக மட்டுமில்லாமல் சிறந்த பேச்சாளராகவும் புகழ் பெற்றார். அவர் வேதாந்தத்தைத் தனக்கு ஈடு இணையில்லாமல் வேகத்தோடு விளக்கிக் கொண்டிருப்பார்.

ஒரு சொற்பொழிவை நிகழ்த்துவதற்காகத் தான் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். "ஆஸ்திக மகா ஸமாஜம்" என்ற பெயர் கொண்ட அமைப்பின் அழைப்பின் பேரில் போகிறார். "சாம்யவாதமும் இரசனை இன்பமும்" என்ற பொருள் பற்றி. அவருடைய கருத்து, சாம்யவாதத்தில் இந்த இரசத்தின் ஆத்மா இருக்கிறதா? அல்லது அவ்விரண்டும் நேர் மாறுபாடு கொண்டனவா? அவற்றிற்கிடையே ஒரு பாலம் அமைக்க வேண்டுமா? இதை அறிவதற்கும் அவர் சொற்பொழிவு அடிப்படையாகும்.

ராவ், இளம் தம்பதியர்களைப் பார்த்தார். அந்தப் பெண்ணின் முகம் மிகவும் களைத்திருந்தது. அவளுக்கு உற்சாகம் ஊட்டுவதற்கோ என்னவோ, அந்த இளைஞன் சிரித்துக் கொண்டே அவள் காதில் ஏதோ சொன்னான். அவள், அவ்ன் உத்தியோகம் பார்க்கும் தூரதேசத்திற்கு முதன்முதலாகத் தன் கணவனோடு போகிறாள் போல் இருக்கிறது. ராவுக்கு சமீபத்தில் பேசிய சொற்பொழிவு நினைவுக்கு வந்தது. "சத்வமும் தத்துவமும்". அவருடைய பேச்சின் தலைப்புகளில் வெறும் சொற்கள் மட்டும் இருக்குமேயல்லாமல், பொருளாழம் இருக்காது என்பது அவருடைய நண்பர்களின் கருத்து. அவ்வாறு பேசி அவரைக் கேலி செய்வார்கள். அவரும் அதை மறுக்கவில்லை. ஒலியின் மூலம் பொருள் புலப்படும் என்பது அவர் வாதம். அவருடைய உபந்நியாசங்களில் மிகவும் சிறந்தது 'பிரகிருதியும் பரிஷ்கிருதியும்'.

காற்று வேகமாக வீசியது. சன்னல் கதவுகளை மோதுகிறது. திடீரென்று பெட்டி இருண்டது. ஆனால் இன்னும் இரவு வரவில்லை. ராவின் பக்கத்தில் அமர்ந்திருந்த பெரியவர், தெரிந்தும் தெரியாததுமாக இருக்கும் சிறு வெளிச்சத்தில், துப்பறியும் நாவல் ஒன்றை மிகவும் ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்.





புத்தகத்தை விலக்கிக் கொண்டு ராவிடம், "நேரம் என்ன?" என்று கேட்டார். ராவ், சிறிது யோசித்தார். அவர் கையில் கடிகாரம் இருந்தாலும் 'மூன்று மணியாகி இருக்கலாம்' என்றார்.

'எப்படி இருட்டி விட்டது' என்றார் வியப்போடு பெரியவர். ராவ், அதற்குப் பதில் கூறாமல், பெரியவரைப் பார்த்தார். அவருக்கும் சமவயது இருக்கும். இந்த வயதில் ஒரு துப்பறியும் நாவல் படித்து இன்புறுவது ராவுக்கு விந்தையாகத் தோன்றியது. எதிரில் அமர்ந்த ஒரு கிழவர் கம்பீரமாக, சுருட்டைப் பிடித்துக் கொண்டு, அதன் சுவையில் இன்பம் துய்த்துக் கொண்டிருந்தார். சில மனிதர்கள் சுபாவம் இயல்புகள் இப்படித்தான் இருக்கும் என்று நினைத்தார். எதிரே அமர்ந்திருந்த பெரியவரின் வயது ராவை விட அதிகம். ஆனால், அவர் முகத்தில் இளமை ஊஞ்சலாடியது. ஆனாலும், அவருடைய முகம், அவரது வயதை மறைக்க முடியவில்லை. கன்னங்களில் சுருக்கங்கள், நெற்றியில் மடிப்புகள் இருந்தன. அவை வயதைப் பறை சாற்றின.

ராவுக்கு, சொற்பொழிவுக்கு ஒரு தலைப்பு கிடைத்துவிட்டது. 'வயது முதிர்ச்சியும் மன விவேகமும்.'

தான் மிகவும் திடகாத்ரம் உடையவர் என்று ராவுக்குக் கர்வம். அவருடைய முகம் இருண்டு சுருண்டிருக்கும். அவரை நோக்கும் போது அவருடைய மனைவி அவரைவிட வயதான வளாகத் தோன்றுவாள். இதைத் தெரியா தவர்கள் அவர் மனைவியைப் பார்த்து அக்காவா அல்லது அம்மாவா என்று கேட்பார்கள் என்று கேலியாகச் சொல்வார். அவருக்கு இருபத்தைந்து வயது நிரம்பிய ஒரு மகன் இருப்பதும், அம்மகனுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதும், அவருடைய வக்கீல் தொழிலை அந்த மகன் பார்க்கிறான் என்பதும் ராவைப் பார்க்கும்பொழுது தோன்றாது. அவருடைய வயதில், இந்த அளவு சம்பாத்தியத்தைத் தரும் தொழிலை யாரும் விடமாட்டார்கள். ஆனால், அவர் தம் வாழ்க்கையில் சில நெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று முடிவு செய்தார். , நெறிகளைத் தாண்டாமல் இருப்பதற்கான உறுதியும் அவரிடம் இருந்தது. நீதி, நெறி ஆகியவற்றில் அவருக்கு வெறி கிடையாது. ஆனால், மனிதனுடைய வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்குச் சில நெறிமுறைகள் இருக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. அவர் தம் குழந்தைகளை மாதம் ஒரு முறை சினிமாவுக்கு அனுப்பி வைப்பார். அதற்கு மேல் அதிகம் போக விட மாட்டார். இளைஞர்களது கோரிக்கைகளின் நியாயத்தை அவர் உணர்ந்திருந்தார். அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் கருதினார். அப்பொழுதுதான் இளைஞர்கள் இதயம் பக்குவம் அடையும் என்பது அவர் கருத்து. ஆனால், கோரிக்கைகள் காரணமாக ஆன்மாவைக் கட்டிப் போடக்கூடாது என்பதும் அவர் கருத்து. அவர் வீட்டில் ஒரு ஒழுங்கான நடைமுறையை மிகச் சிரமப்பட்டுக் கொண்டு வந்தார். இந்த நெறிமுறை அவருடைய உடலுக்கும் உள்ளத்திற்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுத்தன.

அனைத்து ஜன்னல் கதவுகளும் அடைக்கப்பட்டன. வெளியே காற்றின் இரைச்சல், ஓலம், மழைத் தூறல்கள். கதவு இடுக்குகளின் வழியாக, மழைத் துளிகள் உள்ளே நுழைந்தன. தொட்ட இடமெல்லாம் சில்லிட்டது. அந்த இளைஞன், அந்த இளம் பெண்ணை நெருங்க முயன்றான். அந்தப் பெண் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு, சற்று விலகினாள்.

காற்றும் மழையும் கடுமையாக இருக்கிறது என்றான் இளைஞன். ராவின் பக்கத்தில் அமர்ந்திருந்தவர், முகத்தை நிமிர்த்திக் கொண்டு, ஏதோ சொல்ல வந்தவர், எதுவும் பேசாது, மறுபடியும் துப்பறியும் புதினத்தைப் படிக்கத் தொடங்கினார். இளைஞன் சிகரெட்டைப் பற்ற வைத்தான். அவள் முகத்தைச் சுளித்துக் கொண்டு, சிறிது நகர்ந்து சென்றாள். அவன் புன்னகையோடு புகைத்துக் கொண்டிருந்தான். அப்பெண்ணின் கூந்தல் இழைகள் நெற்றியிலும்,



கன்னத்திலும் அசைந்தாடின. தன்னுடைய குமாரிகள் எப்படித் தலை வார வேண்டும் என்பதை ராவ்தான் முடிவு செய்வார். அது அவர் நினைவுக்கு வந்தது. அவர்களுடைய அன்றாட நடைமுறைகள், நோன்புகள், நட்பு, ஆடைகள் அணியும் முறை ஆகிய எல்லாமே ராவ் கருத்துப்படி இருநதால்தான் அவை அவர்களுடைய அழகுக்கும் மதிப்புக்கும் உகந்தவாறு இருக்கும் என்பது ராவ் எண்ணம்.

எதிரில இருந்த பெரியவர், சுருட்டி வைத்திருந்த மெத்தையிலிருந்து சாம்பல் நிறச் சட்டையை எடுத்து அணிந்தார். அந்தச் சட்டையிலும், கோடிட்ட பைஜாமாவிலும் இருந்த அவர், விசிததிரமாகக காட்சி தந்தார். தன் குவளையிலிருந்த காஃபியை எடுத்துக் குடிக்கத, தொடங்கினார். அப்பொழுது, ராவுக்கு 'ஓவல்டின்' நிறைந்த குவளை நினைவுக்கு வந்தது. அதை எடுதது 'ஓவல்டின்னை' மிக சுவாரஸ்யமாகக குடிக்கத் தொடங்கினார். ராவுககு ஓவலடின் என்றால் மிகவும் பிரியம். விருப்பம். ஆனால. அதிகமாகக் குடித்து அடிமையாகவில்லை. அந்த இனிமையான சுவை நீரை ஒரு நாளைககு இரண்டு தரம் குடிப்பார்.

காறறு மிகவும் பயங்கரமாக வீசியது. பெரிய மழைததுளிகள் பெட்டியில் மோதின. அந்தச் சத்தததில் ரயில் சத்தம் அடங்கிவிட்டது. ரயில் ஓடிக கொணடிருப்பதை, அசைவு மூலம்தான் தெரிய முடிந்தது. 'புயல் வரும் போலிருக்கிறதே' என்றான, இளைஞன தன் மனைவியிடம். அவள் பதில் எதுவும் கூறாமல், கம்பளிப் போர்வையை எடுத்துப் போர்ததிக் கொண்டாள். அவள் முகததில் ஏதோ கவலைக் குறிகள் தெனபட்டன. ராவ், உள்ளத்தில் புயல் பற்றிய திகில் எழுந்தது.

ரயில் பெட்டியின் கதவு திறந்து கொண்டது. காற்றும் மழையும் பெட்டிக்குள் ஊடுருவின. கிழிந்த, நனைந்த உடைகளோடு ஒரு பெண் வண்டியில் நுழைந்தாள். உள்ளே இருப்பவர்கள் எவ்வளவோ தடுத்தும், இலட்சியம் செய்யாமல் ஈரத் துணிகளோடு ஒரு மூலையில் நின்றாள். முதியவர் கோபத்தோடு அவளை நோக்கி, "இது தூங்கும் பெட்டி. ரிசர்வ் செய்யப்பட்டது" என்று கூறினார்.

"தாத்தா... தாத்தா... இந்தப் பிச்சைக்காரிக்கு, நிற்பதற்குக் கொஞ்சம் இடம் கொடுங்கள்.

இரக்கம் மிகுந்த ஐயாக்களே! குழந்தைகளைப் பெற்றவர்களே! பிச்சைக் காரிக்கு காலணா கொடுங்கள் ஐயா!

பசி வயிற்றை எரிக்குது! பெரியவர்களே! பணம் படைத்தவர்களே! ஏழையை இப்படிச் சாக விடாதீங்க, ஐயா!".

ராவ் அவளைப் பார்த்தார். அவள் கண்களில் ஓர் ஏளனப் பார்வை, தளுக்கும் மினுக்கும் இருந்தன. அத்தோற்றம் ராவ் உள்ளத்தில் கோபக் கனலை மூட்டியது. அவளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். வயிறு நிறையச் சாபபிட்டவள் என்று சொல்ல முடியாவிட்டாலும், பசி எடுத்தவள் போலவும் இல்லை. திக்கற்றவள் என்றாலும் அவளிடம் உறுதி இருந்தது. பிச்சை எடுப்பது ராவுக்குத் துளியும் பிடிக்காது. வெறுப்பு அதிகம். ஏழைகள், வறுமையில் வாடுபவர்கள் மீது ராவுக்கு இரக்கம் உண்டு. ஆனால், பிச்சை எடுப்பது அவருக்கு வெறுப்பாக இருக்கும். இவர் அருகில் வந்து பிச்சை கேட்டாள். கொஞ்சமும் இரக்கம் இல்லாமல் வெறுப்பாக, 'போ' என்று இரைந்தார். அவள் முகத்தைச் சுழித்துக் கொண்டு, அடுத்த பக்கம் போனாள். எதிரில் அமர்ந்திருந்த முதியவர் கால்களைத தொட்டுக் கெஞ்சினாள். அவர் கால்களைப் பின்னிழுத்துக் கொண்டு, அசட்டுச் சிரிப்புச் சிரித்தார். 'போ! போ!' என்றார்.

"அப்படிச் சொல்லாதீங்க பெரியவரே! அவரைப் போல உங்களுக்குக் கல் நெஞ்ச மில்லை. அவருக்குத் துளி கூட இரக்கமில்லை. பசியோடு செத்துக் கொண்டிருக்கின்ற என்னைப் 'போ' என்று சொல்லிவிட்டார்".

நான் சொன்ன 'போ' என்ற சொல்லைத் திரும்பச் சொல்வதற்கு எவ்வளவு திமிர், இவளுக்கு இருக்கவேண்டும் என்று நினைத்தார், ராவ். ஆனால், எதுவும் சொல்லத் தோன்றவில்லை, விருப்பம் இல்லாவிட்டாலும் அவளைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். பெரியவர் இனம் புரியாத அவஸ்தைக்கு ஆளானார். அவளுக்குக் காசு கொடுத்து அனுப்பினால் மற்றவர்கள் விரும்ப மாட்டார்களோ என்ற சந்தேகம். கொடுக்காவிட்டால் அந்தப் பிச்சைக்காரி அவதூறு செய்வாள் என்ற பயம்! இவற்றில் எது நல்லது என்று அவருக்குப் புரியவில்லை. கடைசியில் கடுமையாக 'போ' என்று சொல்லிவிட்டார். பிச்சைக்காரி கத்தத் தொடங்கினாள். "இந்தப் பெட்டியிலே பணக்காரங்க இருக்கிறாங்க. பசியோடே என்னைச் சாக விட மாட்டாங்கன்னு ஆசையோடு வந்தேன். கடவுளே! இன்னைக்கு எனக்கு சாப்பாட்டுக்குக் காசு கிடைக்கும் என்று நினைச்சேன். மோசம் போயிட்டேன கடவுளே! இவங்களை விட மூன்றாம் வகுப்புப் பெட்டியிலே இருக்கிற ஏழைங்களுக்கு இரக்கம் இருக்கும். அவங்களுக்கு என் கஷ்டம் புரியும். பணக்காரத் துரைகள் எல்லாரும் கல்நெஞ்சக் காரங்கன்னு தெரியல்லையா? அந்தப் பக்கம் காத்தும் மழையும்! ரயில் ஓடிக் கொண்டிருக்கு. இரக்கம் உள்ளவங்ககிட்ட இங்கிருந்து எப்படிப் போறது கடவுளே! இங்கேயிருந்து எப்படிப் போறது கடவுளே!"

பிச்சைக்காரி எல்லாருடைய பார்வையையும் ஈர்த்தாள். ராவ் அருகில் இருந்த பெரியவர், துப்பறியும் நாவலை விட்டு விட்டு, அவளை விசித்திரமாகப் பார்த்தார். "உன் ஊர் எது?" என்று ஒரு தமிழன் தெலுங்கில் விசாரித்தான். "எங்கள மாதிரி இருக்கிற ஏழைகளுக்கு ஊரு ஏது? கிராமம் ஏது? உங்களை மாதிரிப் பெரியவங்களுக்கு ஊரும் இருக்கும், பேரும் இருக்கும், பெரிய பங்களாவும் இருக்கும். வாசலிலே 'வாட்ச்மேன்' உட்கார்ந்து, பிச்சைக்காரன்களை விரட்டிக்கிட்டு இருப்பாரு. என்னைப் போல ஏழைக்கு ஊரு ஏது? கிராமம் ஏது?", 'இவளுக்கு நாக்கு நீளம்' என்கிறார் அவர், ராவைப் பார்த்து.

"இங்கிலீசிலே எதுக்கய்யா திட்டறே! எனக்கு அந்த மொழி கிழி தெரியாது. ஒன்னும் தெரியாத முண்டை நானு! ஏழை!"



வெளியில் இருட்டி விட்டது. காற்று பலமாக வீசியது. ரயில் நீர்ப்பாம்பு போல ஊர்ந்து சென்றது. ராவ் இறங்க வேண்டிய நிலையம் நெருங்கி விட்டது. ஆஸ்திக சமாஜ நண்பர்கள் யாராவது வராமல் இருக்க மாட்டார்களா என்று ராவ் எண்ணினார். அவர் மனம் தடுமாறியது. நானும் சாமான்களோடு ரயிலிலிருந்து இறங்கவேண்டும். அதுதான் இப்போதிருக்கும் பிரச்சனை. உடன் பயணிகள் உதவி செய்வார்கள். காற்று சீறியெழும் கடல் போல் இரைந்து கொண்டிருந்தது. மரங்கள் விழும் அலங்கோல ஓசை காதில் விழுந்தது. அந்தக் காற்றுக்கும், மழைக்கும் முன்னர் ஊர்ந்து செல்லும் வண்டிக்காரனான மனித ஆற்றல் பயனற்றது போலவும், மிகவும் அற்பமான தாகவும் தோன்றியது. பெட்டி வசதியாகத் தானிருக்கிறது. ஆனால் அதிலிருந்து இறங்க வேண்டும்.

பிச்சைக்காரி இளம் தம்பதியருக்கு நடுவில் எதிரில் உட்கார்ந்தாள். சிறிது நேரம் கழித்துத் திரும்பவும் தொடங்கினாள்.

"அப்பாடா! என்னுடைய சின்னம்மா இங்கிருக்கிறாங்க. சின்னையாவும் இங்கயே இருக்கிறாங்களே! இனி என்ன? பாக்கவேயில்லை, பைத்தியக்காரி... சின்னம்மா! சின்னையாவிடம் சொல்லி, காசு கொடுக்கச் சொல்லம்மா! எதுக்குத்தாயி! முகத்தைத் திருப்பிக்கிறே! என்ன சின்னய்யாவுக்கும் — சின்னம்மாவுக்கும் சின்னச் சண்டை ஏதும் வந்துச்சா! சின்னையா எப்பப் பார்த்தாலும் சிகரெட் பிடிக்கிறாரே சின்னம்மா! குடிக்கவிடக் கூடாது. ஆகா! சின்னத்தாய்க்குச் சிரிப்பு வருது."

அந்த இளம் பெண்ணால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. இளைஞனும் வயிறு குலுங்கச் சிரித்தான். சொன்னான் அவன்:

"எங்களோட நீயும் வரக்கூடாதா? வேலை கீலை பாக்கலாம் — சாப்பாடும் துணியும் கொடுத்திடறோம்."



"ஏதாவது அவளுக்குக் கொடுத்து அனுப்பக் கூடாதா?" இளம் பெண் கேட்டாள் கணவனிடம்.

வேடிக்கையாக இருந்தது. ராவ் நெஞ்சம் எங்கோ இருந்தது. அவர் காற்றும் மழையும் பற்றியும், இறங்கிச் செல்வது பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.



''எனக்குத் தெரியும். சின்னம்மா இரக்கம் உள்ளவங்க. தாத்தா எனக்கு ஒரணா குறையாமல் கொடுப்பாரு. நான் ஒரு கிறுக்கு. அந்த ஐயாவுக்கு கோபம் வர்றாப்பலே நடந்திருக்கக்கூடாது. தாத்தாவை மாதிரி நல்லவங்க, எங்கேயும் கிடையாது. தாத்தா இரக்கமுள்ள ராஜா."

ராவைத் தவிர மற்றவர்கள் ஏதோ கொடுத்தனர். அவள் பேச்சு எல்லோருக்கும்

ரயில் நின்றது. ராவுக்கு ரயில் நின்றதே தெரியவில்லை. அப்பொழுது காற்றும் மழையும் தீவிரம் அடைந்தது. அவர் குடையும் கையுமாக



எழுந்தார். கதவைத் திறக்க முடியாத அளவுக்கு காற்று அவரைப் பின்னே தள்ளியது. அவர் கீழே விழுந்துவிட்டார். அதைப் பார்த்த அந்தப் பிச்சைக்காரி அவருடைய சாமான்களைக் கீழே இறக்குவதாகச் சொன்னாள். அந்த நேரத்தில் ராவ் நல்லது கெட்டதை யோசிக்க நேரமில்லை. அவள் உதவியை மறுக்க இயலவில்லை. ஆனால், சொல்ல முடியாத ஏதோ ஒரு துன்பம் அவர் உள்ளத்தை உறுத்தியது. இறங்கியதும் நேராக 'ஸ்டேஷனுக்குள்' ஓடினார். பிச்சைக்காரி அவருடைய பெட்டிப் படுக்கைகளைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ·மெதுவாக நடந்தாள. சாமான்களைத் தங்கும் அறையில் வைத்தாள. எங்கும் விளக்கில்லை. ராவ் ஏதோ பணம் கொடுக்கப் போனார். ஆனால், அவள் ஏதும கூறாமல் திடீரென மாயமாகிவிட்டாள்.

சலனம் ஏதுமின்றி ராவ் தங்கும் அறையில் உட்கார்ந்து கொண்டார். குளிரினால் கால்கள் நடுங்கின. ஆடைகள் நனைந்துவிட்டன. பெட்டியைத் திறப்பதற்கு அங்குமிங்கும் தடவினார். 'டார்ச் லைட்' கைக்குப் பட்டது. மகிழ்ச்சி அடைந்தாா. அவருக்கு அப்படி விளக்கு இருந்ததே நினைவில்லை. ஈர ஆடைகளைக் கழற்றி விட்டு, புதிய ஆடைகளை அணிந்து கொண்டார். கம்பளிச் சட்டையையும் அணிந்து கொண்டார். 'மப்ளர்' சுற்றிக் கொண்டார். பெட்டியைப் பூட்டவும் மறந்து நாற்காலியில் அமர்ந்தார். தன் நிலையைப் பற்றிச் சிந்திப்பதற்கும் கூட அவருக்குப் பிடிக்கவில்லை. புகைவண்டி நகர்ந்தது. யாரேனும் வெளியே இருக்கமாட்டார்களா என்று நினைத்து வெளியே வந்தார்.

யாரோ இருவர் நடைமேடையைத் தாண்டினார்கள். ராவ், அவர்களை உரக்கக் கூவி அழைத்தார். இருவரும் நின்றனர். ஒருவர் ஸ்டேஷன் மாஸ்டர். இன்னொருவர் சேவகர்.

"நான் ஊருக்குள்ளே போகவேண்டும்" என்றார் ராவ்.

"மிகவும் கஷ்டம். சாலையில் ஒவ்வொரு அங்குலத்திற்கும் மரங்கள் விழுந்து கிடக்குது. தொலைபேசித் தந்திகள் அறுந்து கிடக்குது. செய்தித் தொடர்பே இல்லை. காற்றும் மழையும் அடுத்த முப்பத்தாறு மணி நேரம் இருக்கும். ரயில் வண்டிகள் ஓடாது என்று எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆனால், ஸ்டேஷனில் வேறு யாருமில்லையே. நான் என்ன செய்வேன்? எப்படியோ ஸ்டேஷனில் நீங்கள் காலத்தை ஓட்டவேண்டும்".



ஸ்டேஷன் மாஸ்டர் போய்விட்டார். ராவ் திரும்பவும் தங்கும் அறைக்குச் சென்றுவிட்டார். 'ஈசி சேரில்' அமர்ந்தார். அறையின் கதவைத் தாளிட்டுக் கொண்டால, காற்றும் மழையும் வராது என்று அவர் நினைக்கவில்லை. ஜன்னல் கதவுகள் இரண்டும் உடைந்த நிலையில் இருந்தன. சில ஓடுகளும் பறந்துவிட்டன. ஏதோ கெட்ட சக்திகள் பகவான் படைப்புக்களை அழிக்க வந்தது என்று நினைத்தார். இத்தகைய சூழ்நிலைகளில் தெம்பு தரும் வேதாந்தம் எதுவும் ராவுக்குத் தோன்றவில்லை. நடைமுறை நியமங்கள், வாழ்க்கைக் குறிக்கோள்கள எல்லாம் அழிந்து போனதை – இப்பொழுது தான் வாழ்க்கையில்· முதன் முதலாகத் தெரிந்து கொண்டார். இயற்கை வெகுண்டெழுந்து எல்லாவறறையும் நாசமாக்கினால் மனிதன் எவ்வாறு தன்னைக் காத்துக் கொள்ள முடியும்? எப்பொழுதுமில்லாத பயம் ராவுக்கு ஏற்பட்டது. அந்தத் துன்பம் மிகவும் கடுமையாக இருக்கிறது, அவருக்கு. தன்னைச் சுற்றி எங்கும் மனித இதயமே இல்லை என்று நினைத்தார். காற்றும் மழையும் மேலும் உக்கிரமானது. அவர் உள்ளம் ஒரு கெட்ட கனவில் சிக்குண்டது போல் இருந்தது. அந்த அறையில் ஏதோ வேறொரு பொருள் இருப்பதாக ராவுக்குத் தெரிந்தது. திறந்த கதவு வழியாக யாரோ உள்ளே நுழைவது தெரிந்தது. 'டார்ச்' அடித்துப் பார்த்தார். பிச்சைக்காரி நடுக்கத்தோடு உள்ளே நுழைந்தாள். ஈர உடையுடன் – நீர் சொட்ட – மூலையில் நின்றாள். அவள் நனைந்த கூந்தல் முகத்திலும் கன்னத்திலும் படிந்திருந்தது. கூந்தலிலிருந்தும் நீர் வடிந்தது.



''பாபுகாரு! கதவைச் சாத்தவில்லையே! கொஞ்சம் வெப்பமாயிருக்குமே!" குரலைப் பெரிதாக்கிக் கொண்டு கேட்டாள். அவர் இயந்திரம் போல் ·எழுந்து கதவை மூடுவதற்கு முயன்றார். முடியவில்லை. அவள் உதவினாள். அவர் கதவை மூடித் தாளிட்டார். ஆனால், காற்று மிகுந்து வேகமாக வீசியது. தாழ்ப்பாள் கழன்று கீழே விழுந்துவிட்டது. இருவரும் உள்ளேயிருந்த மரச் சாமான்கள், மேசை, நாற்காலி ஆகியவற்றை அண்டை கொடுத்துக் கதவை மூடினர். கதவை மூடவேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்றாது இருந்தது என்று ராவ் ஆச்சரியப்பட்டார். இப்பொழுது கொஞ்சம் வெப்பமாக இருந்தது. பயமும் குறைந்துவிட்டது. எங்கிருந்தோ ஒரு பேரிரைச்சல் காதில் விழுந்தது. ஏதோ விழுந்துவிட்டது. "ஸ்டேஷன் உள்ளேயே ஏதோ விழுந்துவிட்டதோ என்னவோ? பாபுகாரு, என்ன காற்றும் மழையுமிங்கு! நான பிறந்ததிலிருந்து இப்படிப்பட்ட காற்று மழையைப் பார்த்ததில்லை" என்கிறாள் பிச்சைக்காரி. அவள் குரலில் எந்தவித சலனமும் இல்லை. இவ்வளவு அமைதியாக அவள் எப்படிப் பேசுகிறாள் என்று ராவ் வியந்தார்.

அவள் மீது ''டார்ச்'' அடித்தார். ஒரு மூலையில் கூனிக் குறுகிக் காலை மடக்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள். ராவ் பெட்டியைத் திறந்து, ஒரு வேட்டியை எடுத்து அவளிடம் வீசி, 'நனைந்த ஆடைகளை' நீக்கிவிட்டு இதைக் கட்டிக் கொள் என்கிறார். அவர் சொன்னது அவள் காதில் விழவில்லை. ஆனால், அவள் காய்ந்த ஆடைகளைக் கட்டிக் கொண்டாள், நன்றியோடு. அந்த மூலையில் ஈரமில்லாத இடத்தில் அமர்ந்தாள்.

ராவுக்குப் பசி நினைவுக்கு வந்தது. பெட்டியிலிருந்து ஒரு பிஸ்கெட் பாக்கெட் எடுத்தார். ஒவ்வொன்றாகச் சாப்பிடத் தொடங்கினார். மூலையில் உள்ளவள் முகத்தைப் பார்த்தார். அவளுக்கும் பசி இருக்கும் என்று எண்ணினார்.

"பிஸ்கெட் சாப்பிடுகிறாயா?" என்றார்.

"என்ன சொன்னீங்க!" என்றாள் அவள் உரத்த குரலில். காற்றின் ஒலியில் ஒருவர் பேச்சு, இன்னொருவருக்குக் கேட்கவில்லை. அவர் அவள் அருகில் வந்து சில பிஸ்கெட்டுகள் கொடுத்தார். ''இவைதான் இருக்கிறது சாப்பிடறதுக்கு," என்று ஏதோ தவறு செய்த பாணியில் கூறினார். "ஒன்றுமே இல்லாததுக்கு, இது நல்லது இல்லையா?'' தன்னுடைய இடத்திற்குத் திரும்பிப் போய், பெட்டியில் அமர்ந்தார். நாற்காலிகளை அண்டைக் கொடுத்திருக்கிறார். அவள் அறையில் இருப்பதால் அவருக்குத் தைரியம். யாருமே இல்லாத நிலையில், அவள் இருப்பது நல்லது. அவள் எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டாள். காற்றும் மழையும் அவளை எதுவும் செய்யாது. வாழ்க்கையில் கஷ்ட நஷ்டங்கள் அவளுக்கு சகஜம். அதனால் எந்த நிலையையும், அவள் அஞ்சாமல் சமாளிப்பாள். ராவ் கடிகாரத்தைப் பார்த்தார். அப்பொழுதுதான் மணி 9 ஆகியிருந்தது. ஆனாலும் ரயிலிலிருந்து இறங்கி பல யுகங்கள் கழிந்தன போல் தோன்றியது. அவர் மற்ற பயணிகளோடு அடுத்த நிலையம் வரையில் பயணம் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தான் இறங்குவது ஒரு சிறு நிலையம் என்றும், காற்றும் மழையும் மேலும் வெகுண்டு வீசும் என்றும் அப்பொழுது அவருக்குத் தோன்றவில்லை. நிலையத்திலிருந்து ஊர் சுமார் 2 மைல் இருக்கும். ஊருக்கு, அடுத்த நிலையத்திலிருந்து எளிதாகச் சேர்ந்திருக்கலாம். எல்லாவற்றையும் நன்றாகச் சிந்திக்கும் அவர் உள்ளம், காற்றின் வேகத்தைச் சிந்தித்துக் கொண்டிருந்தது. காற்று மணிக்குப் பெரும்பாலும் எண்பது அல்லது நூறு மைல் வேகத்தில் வீசலாம். அது பெரும் பயத்தை உண்டாக்கியது. இந்த அறையும் விழுந்து விடுமோ, வெளியில் போகும் வழியும் – மேசை நாற்காலிகளால் மூடி இருக்கிறது. பிச்சைக்காரி உட்கார்ந்திருக்கும் இடத்திற்கு அவர் திகிலோடு ஓடினார். ''இந்த வீடு விழுந்துவிடாது இல்லையா?" என்றார் அவர்.



"யாரால் சொல்ல முடியும்? பார்ப்பதற்கு வீடு பலமாகத்தான் இருக்கிறது. காற்று வேகமாக வீசினால் எது தாங்க முடியும்?"

அவள் பேச்சில் தைரியம் உண்டாக்கும் எதுவும் இலலாவிட்டாலும், ஏதோ ஒரு நெருக்கம் இருந்தது. அவர் மறுபடியும் பெட்டியின் மீது அமர்ந்தார். அவளும் அவர் இடத்திற்கு அருகில் உட்கார்ந்தாள். "அங்கு உட்கார்ந்தால் ஒருவர் பேச்சு இன்னொருவருக்குக் கேட்காது" என்றாள்.

"காற்றும் மழையும் இவ்வளவு கடுமையாகும் என்று நான் நினைக்கவில்லை" என்றார்.

"பாபுகாரு! எதற்கு அப்படிப் பயப்படறீங்க." ஒருவர் இருப்பதைவிட இருவர் இருக்கிறோமில்லையா? டிக்கெட் கலெக்டர், மிகவும் பொல்லாதவன். ரயில் போய்க்கிட்டு இருக்கும்போது என்னை இறக்கி விட்டுட்டான். என்ன செய்வேன். இங்கே இருந்துட்டேன். ஆனாலும் எனக்கென்ன கவலை? பாபுகாரு கட்டிக் கொள்ள ஒரு காய்ந்த துணி போட்டீங்க! என்னமோ, பசிக்குக் கொஞ்சம் உணவு போட்டீங்க! வர்ற டேஷனில் இந்த சுகங்கூட இருக்கும்னு எப்படி நினைக்க முடியும்? இருக்கிறதெ வைச்சுட்டு சுகமா இருக்கணும் பாபுகாரு. அதில்லை இதில்லை என்று சிரமப்படறதுலே என்ன பயன்?"

அவள் குரல் இப்படி ஓங்கி ஒலிக்கும்பொழுது அவர் உள்ளம் அமைதி அடைந்தது. அவள் உடலைப் பார்க்கும்பொழுது அவருக்கு அசிங்கமாகத் தோன்றியது. அவளுக்கும் அவருக்கும் அருவருப்பாக எவ்வளவோ வேறுபாடு. ஆனாலும் அந்தக் கும்மிருட்டில் தனக்குத் துணையாக அவள் இருப்பது, அவர் உள்ளத்தில் நன்றியுணர்வூட்டியது.

"உனக்கு யாரும் உறவினர் இல்லையா?" என்று கேட்டார், ராவ். இவ்வளவு அனுசரணையாகக் கேட்டதற்கு, சிறிது துணுக்குற்றார். தான் வண்டியில் அவளுக்கு ஒரு பைசாக் கூடக் கொடுக்காதது, அவளுக்கு ஏதேனும் கோபமிருக்குமோ? என்று அவர் சந்தேகித்தார். ஆனால், அவள் பேச்சிலோ, செயலிலோ எத்தகைய கோபமும் தென்படவில்லை. ஆனால், உரத்த குரலில் பேசுவதற்குத் தேவையில்லாமல் அவள் அருகில் வந்தார்.



"உறவினர்கள் எல்லோரும் இருக்கிறாங்க? என்ன பயன் பாபுகாரு. எங்கப்பன் குடிக்கிறான். அவனே எங்க ஆத்தாவைக் கொன்னுட்டான். எனக்குக் கல்யாணம் ஆவலே. ஆகட்டும் பாபுகாரு, ஒரு பொல்லாப் பயலோட சேர்ந்திருந்தேன். எனக்கு இரண்டு பசங்க. அவனுக்குச் சூதாட்டமும், குடிப்பழக்கமும் வந்துட்டுது. ஒவ்வொரு நாளும் ஆயிரக் கணக்கா ஜயிப்பான். தோத்துப் போவான்... என்ன செய்வேன் பாபுகாரு. வீட்டிலே சாப்பாடு கீப்பாடு என்னோட சம்பாத்தியம்தான். பசங்க இன்னும் சின்னவங்க. பிச்சை எடுக்கமுடியாது. என் புருஷனுக்குக் குடிக்க நாலணா கொடுப்பேன், ஒரு நாளைக்கு. அவனுக்கு எம் மேலே ரொம்பப் பயம். குடிக்கலைன்னா, என் முன்னாலே நிக்க முடியாது. அதுக்குத்தான் குடிக்கிறான். எல்லோருக்கும் குடிக்கிறது அப்படித் தூங்க பழக்கமாகுது."

"நீ எவ்வளவு சம்பாதிப்பே?" என்று அவர் கேட்டார்.

"சில நாளைக்கு அஞ்சு ரூபாய் வரைக்கும் கிடைக்கும். சில நாளைக்கு காலணா கூடக் கிடைக்காது. ஆனாலும் பாபுகாரு, நான் கேட்டு இல்லைன்னு சொன்னதில்லே, ஒங்களைத் தவிர. கொஞ்சம் நேரம் சிரிச்சுப் பேசினேன்னா கொடுத்துடுவாங்க."

தன்னையறியாமலேயே ராவ் 'டார்ச்' லைட்டை அவள் மீது அடித்தார். அவள் புன்னகைத்தாள். யாராக இருந்தாலும் அவள் சமாளித்துவிடுவாள். ஆனால், அவள் உள்ளத்தில் விருப்பு வெறுப்புக்கள் இல்லை என்று எண்ணினார். நிகழ்காலத்தைப் பற்றித்தான் அவள் சிந்தனை. கடந்த காலம்



எதிர்காலம பற்றி அவள் கவலைப்படுவதில்லை. அவள் நடத்தையை விளக்கும இலக்கணங்கள் ஏதும் இல்லை. அநத இலக்கணங்களுக்கு விதிவிலக்கும் இல்லை. ஒவ்வொரு நாளும் தர்மம், அதர்மம் பற்றிய சிந்தனை அவளுக்கு இல்லை. நாகரிகமான மனிதர்களுக்குரிய உள்ளப் பக்குவமும் இல்லை. தான் முன்பின் எப்பொழுதும் அறியாத ஆண்களுடன் இன்பமாக உடலுறவு கொள்வாள். ராவ் அவள் புன்னகையில் லயித்துவிட்டார்.



''என்னங்க, பாபுகாரு, என்னையே பார்த்துக்கிட்டே இருக்கீங்க!" என்றாள், அவள். ''முன்னாடி இருந்த நிறம் என்கிட்டே இல்லைங்க!"

ராவ் வெட்கத்தோடு தலைகுனிந்தார். கெட்ட எண்ணத்தோடு அவள் பேசுவது அவருக்கு வெறுப்பைத் தந்தது.

"உன்னை நான் பார்ககவில்லை" எனறாா ஆணித்தரமாக.

"டார்ச் லைட்டை அணைக்க மறந்துட்டேன்"

திடீரென்று பேரிரைச்சல் கேட்டது. அறையின் கதவுகள் சட்டென்று திறந்து கொண்டன. கதவுக்கு அணடை கொடுத்திருந்த மரக்கட்டைகள் சிதறி விழுந்தன. ஒரு கதவு முழுவதுமாக கீழே விழுந்தது; நாற்காலியில் மோதி விழுந்தது. ராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஓடிச் சென்று சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி, ஓடிக் குதித்து, அந்தப் பிச்சைக்காரியைக் கெட்டியாக அணைத்துக் கொண்டார். ஆனால், உடனே உணர்ந்து கூச்சப்பட்டார். நாணம் அடைந்தார். ஆனால், அவள் அவர் கையைப் பற்றிக் கொண்டு ஒரு மூலைக்கு இழுத்துச் சென்றாள். உட்காரச் செய்தாள். தானும் அவர் அருகில் உட்கார்ந்து, கைகளால் சுற்றி வளைத்தாள். அவளுக்கு அவ்வாறு செய்ததில் ஒரு சலனமும் இல்லை, ஆனால், ராவுக்கு ஒரு பிரளயமே தோன்றியது



போல இருந்தது. ஆனால், அந்த ஆலிங்கன வெப்பம், வெதுவெதுப்பு அவர் உயிருக்குத் தேவையாக இருந்தது. அவர் தடை செய்யவில்லை.

"சரியாக உட்கார்ந்து என்னை அணைத்துக் கொள்ளுங்கள். குளிருக்கு அடக்கமாக இருக்கும். பாவம்! பாபுகாரு நடுங்குகிறீங்க!"

அந்தப் பேச்சுக்கள் ராவுக்கு அநாகரிகமாகத் தோன்றின. அவள் மேலும் நகர்ந்து அவர் உடலின் மீது சாய்ந்து விழுந்தாள். அவர் முழங்கால் மீது தன் மார்புகளை உராய்ந்தாள். இவர் முழங்காலைச் சுருக்கிக் கொண்டு நாணத்தோடு சிந்தனையில் ஆழ்ந்தார். அவள் பேச்சைத் தொடர்ந்தாள்.

"இந்த மூலையில் பயமில்லீங்க! பாபுகாருக்கு வீட்டிலே அழகான பெண்கள் இருப்பாங்க. பாபுகாரு அவங்களை நெனச்சிட்டிருக் காங்களோ என்னவோ? எங்க குடிசை இன்னேரம் பறந்து போயிருக்கும். எங்க குழந்தைகளும் என்ன ஆனாங்களோ? அக்கம் பக்கம் இருக்கிறவங்க பாத்துக்கிருவாங்க. என் புருஷன் ஒரு பைத்தியம். எந்த வேலைக்கும் லாயக்கில்லாதவன். நல்லா குடிச்சு வந்திருந்தா குடிசை பறக்கிறது அவனுக்கு எப்படித் தெரியும்? பசங்க எப்படியிருக்காங்களோ?"

ஒரு மனித இதயத்திலிருந்து வெடித்து வந்த இந்தக் கருத்துக்கள், அவர் உள்ளத்தினைத் தொட்டு வெடித்துவிடும் போலிருந்தது. பெரிய வேதனையோடு, அந்தப் பிச்சைக்காரியை இறுக்கமாக அணைத்துக் கொண்டார். அவருடைய வேதனையைத்தான் புரிந்து கொண்டவள் போல பிச்சைக்காரி அவர் முழங்காலைத் தட்டினாள். படிப்படியாக அவர் மனது சிந்திப்பதைத் துறந்தது. காற்றின் பேரோசை மனதைச் சிதறடித்தது. அவர் கால்கள் மீதும், மார்பின் மீதும் புரண்டு கிடந்த மனித உடல் ஒன்றின் வெப்பம்தான் அவருக்குத் தெரிந்தது.

நேரம் மிக மெதுவாகவே நகர்கிறது. நேரம் போவது தெரியவில்லை. காற்றும் மழையும் மீண்டும் தீவிரமடைந்தன. நான்கு பக்கங்களிலிருந்தும் பேரிரைச்சல். காலை விடியும்பொழுது ஒரு மரமாவது விழாமல் இருக்குமா? என்று சந்தேகம் வந்தது. மேலே கூரையின் ஓடுகள் பெரும்பாலும் பறந்து போய்விட்டன. மழைத்தூறல்கள் மட்டும் அவர்களை நெருங்கவில்லை.



சிறிது நேரம் கழிந்தது. ராவின் கால்கள் மரத்துப் போய்விட்டன. படுத்துக்கொண்டே கால்களை மெதுவாக நகற்றினார். உள்ளம் மெதுவாக விழித்தது. 'டார்ச் லைட்டில்' அவள் முகத்தைப் பார்த்தார். தூக்கத்தில் அவள் முகம் ஒரு பாவமுமறியாதது போல், சலனமில்லாது இருந்தது. அவள் முகத்தில் புதுப்பொலிவு இருந்தது.

காற்றும் மழையும் மேலும் வெகுண்டு அடித்தது. ஆனால், அவர் மனதில் அமைதி நிறைந்திருந்தது. அவர் உடல் களைத்துப் போயிருந்தது. அவருக்கு ஓய்வு தேவையானது. மெதுவாக அவர் தன்னை மறந்து தூங்கிவிட்டார்.

தூங்கி எழுந்தபொழுது மழை குறைந்து இருந்தது. 'காற்று மட்டும் பலமாக வீசியது. பிச்சைக்காரி எழுந்து போய்விட்டாள். கடிகாரத்தைப் பார்த்தார். காலை மணி 5 ஆகியிருந்தது. எழுந்து நின்றார். முழங்கால் பிடித்துக் கொண்டது. தன்னையறியாமலேயே பைகளைத் தொட்டுப் பார்த்தார். அவர் முதல்முதலாக முணுமுணுத்தார்: "திருட்டு முண்டை அவள்!"

அவ்வாறு திருடியிருப்பாள் என்று எண்ணத் தோன்றவில்லை. அறையின் நான்கு மூலைகளிலும் தேடினார். எங்கும் காணவில்லை. நேற்று இரவில் பயத்தில் எங்காவது விழுந்துவிட்டதோ என்னவோ! அறையிலிருந்து வெளியே வந்தார். வெளித்தோற்றம் மிகவும் பயங்கரமாக அதிர்ச்சியளித்தது. பிளாட்பாரம் தவிர எல்லாமே தண்ணீரில் மூழ்கிக் கிடந்தன. சிலர் பிளாட்பாரம் படிக்கட்டு வழியாக நடந்தனர். அநேகமாக அவர்கள் ஊரிலிருந்து வரலாம் என்று நினைத்தார்.



விபத்துக்குள்ளானவர்கள் ஸ்டேஷனின் மறுபுறம் விழுந்து கிடந்தனர். தொலைவில் இருந்து பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டார். ஆஸ்பத்திரிகளில் வெண்மையான போர்வைக்குக் கீழே அடுக்கடுக்காக இருக்கும் உடல்களைப் போல் — அவர்கள் படும் துன்பங்களைப் போல் — சடலங்கள் கிடந்தன. அவருக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. பின்னே திரும்பினார்.

'டிக்கெட் கௌண்டர்' முழுமையும் விழுந்துவிட்டது. கதவுகள் எங்கும் காணப்படவில்லை. அறைக்கு உள்ளே மேசை நாற்காலிகள் சிதறிக் கிடந்தன. தங்கும் அறையும் விழுந்திருந்தால் என்னவாயிருக்கும் என்று நினைத்தார். இந்தக் காட்சிகளையெல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டே பிரமித்து நின்றுவிட்டார்.

உள்ளே இருக்கும் இருட்டுக்குப் பழக்கப்பட்ட கண்களுக்கு, சாமான்களிடையே ஏதோ ஒரு உடல் விழுந்து கிடப்பது போலத் தோன்றியது. விளக்கை அடித்துப் பார்த்தார். பிச்சைக்காரி. அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. குனிந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். அவள் இறந்து போய்விட்டாள். கைகள் இரண்டும் பக்கத்தில் விரிந்து கிடந்தன. கீழ்ப்பகுதிகள் நசுங்கிப் போய்விட்டன. ஒரு கையில் அவருடைய மணிப்பர்சு. இன்னொரு கையில் சில கரன்சி நோட்டுகள், சில்லறை இருக்கின்றன. டிக்கெட் விற்ற பணமாக இருக்கலாமோ என்னவோ! குமாஸ்தா, அந்தப் பணத்தை டிராயரில் வைத்துவிட்டு வீட்டுக்குப் போயிருப்பான்.

ராவ் சட்டென்று சிறு பிள்ளை மாதிரி அழத் தொடங்கிவிட்டார். குனிந்து சென்று அந்த நெற்றியை முத்தமிட்டார். முந்தைய இரவு நடந்த நிகழ்ச்சிகள் அவருக்குத் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தன. தனக்குத் தன்னம்பிக்கையையும் காற்றையும் மழையையும் தாங்கிக் கொள்ளும் சக்தியையும் கொடுத்த அந்தத் திருவுருவம் கீழே கிடக்கிறது. காற்றுக்கும் மழைக்கும் அவள் பலியாகிவிட்டாள். அவர் உள்ளம் புயலாக மாறியது. கடல் போன்று கொந்தளித்தது. அவருக்கு எஞ்சியிருந்த ஒரேயொரு இன்பமும் மகிழ்ச்சியும் போய்விட்டது போல் தோன்றியது. தன்னுடைய 'பர்சை' திருடியது குறித்தோ, அத்துணை காற்று மழையில் அந்த அறைக்குச் சென்று பணத்தை எடுத்ததற்கோ அவளை அவர் பழிக்கவில்லை. அவளின் கடைசி எண்ணம் அவருக்குத் தெரியும். இப்பொழுது அவளுடைய கேளிக்கையும் சிரிப்பும் அவரை மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது.

உள்ளத்தின் ஆழத்தில், அடித்தளத்தில் இருந்த மனிதத்தன்மை அப்பொழுதுதான் அவருக்கு மலர்ந்தது. அவருடைய மனைவியோ, குழந்தைகளோ இவளைப் போல அவரை நெருங்கி வர முடியவில்லை. இந்தப் பெண்ணுக்கு உயிர் கொடுக்க முடியும் என்றிருந்தால், அவர் கொண்டிருந்த தர்ம சிந்தனைகள், வேதாந்தங்கள், கொள்கைகள் எல்லாவற்றையும் கூட விடத் தயாரானார்.

மறுபுறம் மக்கள் நடமாட்டம் இருந்தது. ராவ், கண்களைத் துடைத்துக் கொண்டு சிந்தித்தார். பிறகு ஓர் உறுதிப்பாட்டுடன் அவள் கையில் இருந்த பணத்தைப் பிடுங்கி எடுத்துப் போட்டுவிட்டு மூடினார். ஆனால், தன்னுடைய பர்சை, அவள் கையிலிருந்து எடுப்பதற்கு அவர் மனம் இடம் தரவில்லை. தனக்குத் தொடர்புடைய ஏதோ ஒன்று அவள் உடம்பில் நினைவுச்சின்னமாக இருக்கவேண்டுமென்று நினைத்தார். மற்றவர்கள், இவள் திருடினாள் என்று நினைத்தால், பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால், அந்தப் பணப்பையில் உள்ள தன்னுடைய பெயர் அட்டையை எடுத்துவிட்டு, உள்ளச் சுமையுடன் அங்கிருந்து நகர்ந்தார். ✧

**கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை**
**உண்மையான் உண்டிவ் வுலகு.**

'கோட்டம் முதல் குமரி வரை' மலரிலிருந்து...



# சென்னை– சர்தார் பட்டேல் சாலை மேம்பாலம்

இன்றைய தினம் இரண்டு மேம்பாலங்கள் ...ன்னை மாநகரத்திலே திறந்து வைக்கப்படுகின்றன. ...ந்த ஆண்டு 31.1.99 அன்று மேம்பாலங்கள் அடிக்கல் ...ட்டு விழாவினை நான் நிறைவேற்றி வைத்தேன். ...5 கோடி ரூபாய் செலவில் பத்து மேம்பாலங்கள் ...டத் திட்டமிட்டு அடிக்கல் நாட்டுகின்ற விழா ...1.99–இல் நடைபெற்றது. சரியாக ஓராண்டு ...லத்திற்குள்ளாக இரண்டு மேம்பாலங்கள் ...டிவடைந்து இன்றைக்குத் திறப்பு விழாக்கள் ...த்தப்படுகின்றன.

நாங்கள் பொறுப்பு ஏற்றுக் ...காண்டிருக்கின்ற எந்த இடமானாலும் ...ங்கே நிறைவேறுகின்ற காரியங்கள் ...ரியாக நிறைவேறும். விரைவாக ...றைவேறும் என்பதற்கு இந்த இரண்டு ...லங்களுடைய திறப்புவிழா ஒரு ...ன்று என்பதை நான் இங்கே ...டுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக் ...ன்றேன்.

பத்து மேம்பாலங்கள் 115.5 கோடி ...பாய் செலவில் கட்ட திட்டமிட்டு ...ந்தப் பத்து மேம்பாலங்களிலே ...ன்றைய விழாவில் மாத்திரம் 15.50 ...காடி ரூபாய் செலவில் இரண்டு ...மம்பாலங்கள் திறக்கப்படுகின்றன. எஞ்சிய 8 ...மம்பாலங்களின் கட்டுமானப் பணிகளும் மிக ...வகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ...ரைவிலே அந்தப் பாலங்களுடையத் திறப்பு ...ழாக்களும் நடைபெற இருக்கின்றன.

பெரம்பூர் இரயில்வே நிலையத்தின் அருகில் 21 ...காடி ரூபாய் செலவிலே ஒரு மேம்பாலம். பீட்டர்ஸ் சாலை – வெஸ்ட்காட் சாலை சந்திப்பில் 8 கோடியே 50 இலட்ச ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம்.

பாந்தியன் சாலை – காசா மேசர் சாலை சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம். புரசைவாக்கம் நெடுஞ்சாலை – ஹண்டர்ஸ் சாலை சந்திப்பில் 12 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை – ராயப்பேட்டை நெடுஞ்சாலைச் சந்திப்பில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை – டி.டி.கே. சாலைச் சந்திப்பில் 15 கோடி ரூபாய் செலவில் ஒரு மேம்பாலம்.

> **நேரத்தை குறைக்க, தொலைவை குறைக்க, விபத்துக்களை தவிர்க்க இந்த பாலங்கள் பயன்படும்**
>
> – சென்னையில் இரு மேம்பாலங்கள் திறப்பு விழாவில் முதலமைச்சர் **கலைஞர்**.

ஆழ்வார்ப்பேட்டை – எல்டாம்ஸ் சாலை சந்திப்பில் 11 கோடி ரூபாய் செலவிலே ஒரு மேம்பாலம், சர்தார் படேல் சாலை – லாட்டிஸ் பாலம் சாலை சந்திப்பில் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு மேம்பாலம்.

இவை தவிர மேலும் 10 மேம்பாலங்கள் சென்னை மாநகரின் முக்கியச் சந்திப்புகளில் 125 கோடியே 50





இலட்ச ரூபாய் செலவில் கட்டுவதற்கும் திட்ட மிடப்பட்டுள்ள சூழ்நிலையிலே தான் இந்தப் பாலத்தை நான் இப்பொழுது உங்கள் முன்னால் திறந்து வைத்திருக்கின்றேன்.

பாலங்கள் கட்டுவது நம்முடைய வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரத்திற்கு மிகமிக அத்தியாவசியத் தேவை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

நேரத்தைக் குறைக்கவும், தொலைவைக் குறைக்கவும், செல்ல வேண்டிய இடங்களுக்கு விரைவிலேச் செல்லக்கூடிய வாய்ப்பை வழங்கவும் இந்தப் பாலங்கள் பெரிதும் பயன்படுகின்றன. முக்கியமாக விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும், பாலங்கள் பயன்படுகின்றன.

பாலம் கட்டவேண்டும் என்பது நகரைப் பொறுத்த மாத்திரமல்ல; நாட்டைப் பொறுத்தும் கூட சமுதாயத்திலே கட்டவேண்டிய பாலம் அதிகமிருக்கிறது. ஏற்றத்தாழ்வு இல்லாமல் பல்வேறு சமூகங்களுக்கிடையே பாலம் கட்டுகின்ற பணியிலே நாம் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் தான் சமத்துவபுரங்களைத் தமிழகத்திலே உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். அங்கே கட்டப்படுகின்ற பாலம் சமுதாயத்திலே ஒற்றுமை ஏற்படுத்த கட்டப்படுகின்ற பாலம். இந்தப் பாலம் ஜனநெருக்கடியைச் சமாளிக்கக் கட்டப்படுகின்ற பாலம்.

நாங்கள் எங்கே பொறுப்பிலே இருந்தாலும், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் நம்முடைய தம்பி மேயர் ஸ்டாலின் அமர்ந்திருக்கிற மாநகராட்சி மன்றப் பொறுப்பிலே இருந்தாலும் எந்தப் பொறுப்பிலே இருந்தாலும் அது திறந்த புத்தகம் என்பதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

ஒரு திட்டமிடுவது என்பது வேறு ஏதோ திட்டமிட்டு செய்யப்படுகின்ற திட்டம் அல்ல. அதெல்லாம் கடந்த காலத்திலே தான் திட்டங்கள் வேறு ஏதோ திட்டமிட்டு அறிவிக்கப்படுகின்ற திட்டங்களாக இருக்கும். இந்தக் காலத்திலே அப்படியல்ல. நான் இங்கே பாலத்தைத் திறக்க வந்திருக்கிறேன். சில பேர் தங்கள் பாவத்தைப் போக்க இந்த இடத்திற்கு வேறு நேரங்களிலே வந்து சென்றார்கள் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள மீண்டும் மீண்டும் விரும்புகின்றேன். பாலங்கள் 10, கட்டுகிறீர்கள், 20 கட்டுகிறீர்கள். ஒவ்வொரு பாலத்திற்கும் ஒரு பெயர் வைக்க வேண்டும் என்று சில பேர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். வேண்டாம் அந்த விபரீத யோசனை என்று எல்லோருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு பாலத்திற்குப் பெயர் வைத்தால் இன்னொரு பாலத்திற்கு இன்ன பெயர் வையுங்கள் என்று ஒரு குரலிலே கூட சொல்லமாட்டார்கள். பல குரலில் பல மனுக்கள் வர நேரிடும். எனவே எந்தப் பாலத்திற்கும் பெயர் இல்லை. எல்லா பாலத்திற்கும் ஒரே பெயர் தான். எந்தத் தெருவிலே அந்தப் பாலம் அமைந்திருக்கிறதோ அந்தத் தெருவின் பெயராலே அந்தப் பாலத்தை அழைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தப் பாலத் திறப்பு விழாவிலே உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு கிட்டியமைக்காக நன்றி தெரிவித்து, மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சென்னை–பீட்டர்ஸ் சாலை மேம்பாலம்

இன்று முதலிலே ஒரு பாலத்தைத் திறந்து வைத்துவிட்டு இரண்டாவதாக இந்தப் பாலத்தையும், இதையொட்டி சென்னை–கடற்கரை காமராசர் சாலையில் எழிலகத்திற்கு அருகேயுள்ள சுரங்க



நடைபாதையும் திறக்கின்ற நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கும் நல்வாய்ப்பை நான் பெற்றமைக்காக பெருமகிழ்ச்சியடைகிறேன்.

### குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நிறைவுற்ற பாலம் கட்டும் பணி

இந்தப் பாலம் கட்டுகின்ற மாபெரும் திட்டம் கடந்த ஆண்டு மாநகராட்சி மன்றத்தினால் தொடங்கி வைக்கப்பட்டு – தொடக்க நிகழ்ச்சியிலும் நான் கலந்து கொண்டு, எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே நிறைவேறி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ள எட்டு பாலங்களும் தொடர்ந்து மாதாமாதம் திறந்து வைக்கப்படும் நிகழ்ச்சிகள் நடைபெறுமென்று நான் நம்புகிறேன்.

இங்கே பேசிய தம்பி டி.ஆர்.பாலு மெத்த வருத்தத்தோடு இந்தப் பாலங்களைப் பற்றி யாரோ சில பத்திரிகைகளிலே எழுதியிருப்பதைச் சுட்டிக் காட்டினார். இவைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். மேயர் தம்பி ஸ்டாலின் பேசும்போது கட்டப்பட்டுள்ள இந்தப் பாலங்கள் எவ்வளவு பெரிய வாகனங்கள் வந்து மோதினாலும் அசையாது என்று சொன்னார்.

இந்தப் பாலம் தம்பி ஸ்டாலின் சொன்னதைப் போல நிச்சயமாக ஆடாது, அசையாது, நெளிந்து கொடுக்காது, வளைந்து சாயாது என்று நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய தம்பி வெற்றிவேல் இரண்டு மூன்று வரிகளிலே தன்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். அவர் பேசும்போது, வேறு பாலம்

இதைக்கூட சில பேர் குறை கூறக்கூடும். குறை பிரசவம் என்று கூடச் சொல்லக் கூடும். ஏனென்றால் நல்லது செய்தாலும், அல்லது செய்தாலும் இரண்டையும் பகுத்துப் பார்த்து எது நல்லது, எது அல்லது என்பதை நிர்ணயித்து விமர்சிக்காமல், இதை யார் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்து விமர்சனம் செய்கிற சமுதாய குறுகிய நோக்கு இன்றைக்கு இருக்கின்ற காரணத்தால் இதுவும் அவ்வாறு விமர்சிக்கப்படலாம். ஆனால் இது விரைவில் நடைபெற்று முடிந்துள்ள ஒரு அருமையான சாதனையாகும்.

### விரைந்து முடிவெடுக்கும் அரசு

விரைந்து செய்வதற்கும், அவசரப்பட்டு செய்வதற்கும் ஆங்கிலத்திலே இரண்டு சொற்கள் உண்டு. Hasty decision என்பது அவசரப்பட்டு எடுக்கின்ற முடிவு – Quick decision என்பது விரைந்து எடுக்கின்ற முடிவு. எப்போதுமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பு. அது ஆட்சிப் பொறுப்பாக இருந்தாலும், மாநகராட்சிப் பொறுப்பாக இருந்தாலும் Quick decision தான், Hasty decision இல்லை என்பதற்கு இன்றைய விழா ஒரு நற்சான்று என்று நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.



நினைவுக்கு வந்தது. 96–ஆம் ஆண்டு தி.மு.க.வுக்கும் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் பாலம் கட்டியவர்களில் ஒருவர் தம்பி வெற்றிவேல். நல்லவேளை, இன்றைக்குப் பாலம் கட்ட வராவிட்டாலும், பாலம் திறக்கின்ற நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறார் என்பதிலே எனக்கொரு மகிழ்ச்சி.

·நான் முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியில் குறிப்பிட்டேன். சமுதாயத்திலே நாம் கட்டவேண்டிய பாலங்கள், சமூக ஒற்றுமையைக் கட்ட வேண்டிய பாலங்கள். மதத்திற்கு மதம் கட்ட வேண்டிய ஒற்றுமைப் பாலங்கள். இந்தப் பாலங்களை நாம் கட்டி முடிக்க வேண்டும். அதற்கெல்லாம் எடுத்துக் காட்டாக இந்தப் பாலங்களின் திறப்பு விழாக்கள் இன்றைக்கு அமைந்திருக்கின்றன என்று நான் சொன்னேன். பாலு சொன்னதை நான் நினைவுப் படுத்தி அதைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலே இன்றைக்கு வந்த ஒரு செய்தியை நான் பார்த்தேன். தி.மு.க. 96–இல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நிதி நிலை அறிக்கையிலே ஒரு அறிவிப்பைச் செய்தோம். எந்தத் திட்டமானாலும் அவைகள் எல்லாம் ஒளிவு மறைவற்ற திட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னேன்.

அது மாதத்திரமல்ல, இன்னொன்று, Right to Information அதாவது அந்தத் திட்டத்தைப் பற்றி யார் வேண்டுமானாலும் தகவல் தெரிந்து கொள்ளலாம். யார் விரும்பினாலும் அந்தத் திட்டத்திற்கு மதிப்பீடு எவ்வளவு, டெண்டர் எப்படி விடப்பட்டிருக்கிறது, டெண்டரை எடுத்தவர் யார், அது Lowest டெண்டரா? Highest டெண்டரா? எதற்குத் தரப்பட்டுள்ளது என்ற இந்த விவரங்களையெல்லாம் தெரிந்து கொள்ள தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு குடிமகன் விரும்பினாலும் அவர்களுக்குத் தர நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் என்கிற அறிவிப்பு மாத்திரமல்ல, அதற்கான சட்டத்தையே செய்திருக்கின்ற ஆட்சி தான் தி.மு.க. ஆட்சி. அதைப் போல இன்றைக்கு நம்முடைய வெற்றிவேலைப் பற்றியும், இந்தப் பாலங்களைப் பற்றியும் ஒரு செய்தி.

அந்த ஆங்கிலப் பத்திரி கையைப் புரட்டினால் அழகான படம், பாலத்தின் படம் இருக்கிறது. பரவாயில்லை, இவர்கள் கூட படம் போட்டு செய்தி போட்டிருக்கிறார்களே, என்று ஆச்சரியத்தோடு கண்களை அகல விரித்துச் செய்தியைப் படித்துப் பார்த்தால், ஏதோ அந்தப் பாலம் கட்டியதிலே தவறு அல்லது முறைகேடு நடைபெற்றிருப்பதைப் போல தலைப்புச் செய்தி.

> **இதைக்கூட சில பேர் குறை கூறக்கூடும். குறை பிரசவம் என்று கூடச் சொல்லக் கூடும். ஏனென்றால் நல்லது செய்தாலும், அல்லது செய்தாலும் இரண்டையும் பகுத்துப் பார்த்து எது நல்லது, எது அல்லது என்பதை நிர்ணயித்து விமர்சிக்காமல், இதை யார் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்து விமர்சனம் செய்கிற சமுதாய குறுகிய நோக்கு இன்றைக்கு இருக்கின்ற காரணத்தால் இதுவும் அவ்வாறு விமர்சிக்கப்படலாம். ஆனால் இது விரைவில் நடைபெற்று முடிந்துள்ள ஒரு அருமையான சாதனையாகும்.**

விஷயம் என்னவென்று விளக்கமாகப் படித்துப் பார்த்தால், மாநகராட்சி மன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற வெற்றிவேல் அவர்கள் இந்த Right to Information என்ற சட்டத்தைப் பின்பற்றி இந்தப் பாலத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்க, அதிலே ஒரு பகுதி விவரங்கள் தரப்பட, மீதமுள்ள இதன் தொடர்பான விவரங்களும் தேவையென்று அவர் கேட்க, விரைவில் தரப்படும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது தான் செய்தி.

இதைப் போட்டு விட்டு ஏதோ விவரங்களே தரப்படவில்லை என்பதைப் போல அந்த ஆங்கிலப் பத்திரிகை தன்னுடைய இஷ்டத்திற்கு செய்தியை வெளியிட்டிருக்கின்றது. இது சகஜம்.

ஒரு ஆசிரியர் பள்ளியிலே அருமையாகப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். இலக்கியம், காவியம், சரித்திரம், பூகோளம் இவைகளை எல்லாம் கரைத்துக் குடிக்கிற அளவிற்கு உள்ள ஆசிரியர், மாணவர்களுக்கு அருமையாக பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது ஒரு பையன் பாடத்தைக் கவனிக்காமல் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு எலி சுவரில் உள்ள பொந்தில் நுழைந்து கொண்டிருந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தான். ஆசிரியர் அவன் காதைப் பிடித்துத் திருகி, "என்னடா? நான் சொல்லிக் கொடுத்தது உன் காதில் நுழைஞ்சுதா?" என்று கேட்டார். அதற்கு அவன் "நுழைஞ்சுது சார், வால் தான் பாக்கி" என்றான். என்னவென்றால் சுவரிலே உள்ள பொந்தில் எலியின் உடம்பு முழுவதும் நுழைந்து விட்டது. வால் மாத்திரம் பாக்கியிருந்தது. அதைத்தான் அந்த மாணவன் ஆசிரியர் கேட்டதைப் புரிந்து கொள்ளாமல் கூறினான்.

அதைப் போல வால் மாத்திரம் பாக்கியிருக்கின்ற ஒரு சில பேர் வழிகள் நாட்டிலே பத்திரிகை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் வேண்டுமென்றால் இதைப்பற்றியெல்லாம் எழுதலாம். அதற்காக நாம் கவலைப் படத் தேவையில்லை.

## நமது வழியில் ஒழுங்காக நடந்தால் விமர்சனங்கள் பற்றி கவலை தேவையில்லை

நாம் நம்முடைய வழியிலே நேராக நடந்தால், ஒழுங்காக நடந்தால், செம்மையாக நடந்தால், ஊழலற்ற தன்மையிலே நம்முடை நடையை அமைத்துக் கொண்டால் எந்தவிதமான விமர்சனங்களைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை. நம்முடைய மனச்சாட்சிக்கு, நாம்செய்வது சரி என்று



பட்டால், நம்முடைய மனச்சாட்சி நம்மை உறுத்தாமல் இருந்தால், நீ தவறு செய்து விட்டு நாட்டிலே நடித்துக்கொண்டிருக்கிறாய் என்று கூறுகின்ற அளவிற்கு நம்முடைய நிலை இல்லாமலிருந்தால் நாம் எதற்காகவும் கவலைப்படத் தேவையில்லை. அந்த வகையிலேதான் சென்னை மாநகராட்சி மன்றத்திலே பணிகள் இன்றைக்கு நல்ல நோக்கத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒரு பாலம் அமைப்பது அழகுக்காக அல்ல. பாலம் அழகாக இருக்கிறது. அது வேறு விஷயம். அனால் இந்தப் பாலத்தால் ஏற்படுகின்ற பயன்கள் என்னவென்று பார்த்தால் நெருக்கடியைச் சமாளிக்கிறது. நாம் நெருக்கடியையே சமாளித்தவர்கள் அல்லவா. எனவே நாம் பாலம் கட்டி ஜனநெருக்கடியை இங்கே சமாளிக்கவிருக்கிறோம். அது மாத்திரமல்ல, நேரத்தை மிச்சப்படுத்தித் தருகிறது.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இதே மேயர் தம்பி ஸ்டாலின் குழந்தையாக இருக்கும் போது கோடம்பாக்கம் கேட் என்று ஒன்று உண்டு. அந்தக் கோடம்பாக்கம் கேட்டைத் தாண்டி ஜக்கரியா காலனி உள்ளது. அங்கே நான் அப்போது ஒரு வாடகை வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தேன். அப்போது ஸ்டாலின் கைக்குழந்தை. ஒரு நாள் ஸ்டாலின் ஊர்ந்து சென்று ஒரு திறந்த ஊக்கை விழுங்கி விட்டான். உடனடியாக டாக்டரிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென்றுவீட்டில் உள்ளவர்கள் ஸ்டாலினைத் தூக்கிமடியில் வைத்துக்கொண்டு ஒரு காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள்.

புறப்பட்டால் நூறு கெஜ தூரத்திற்கெல்லாம் கோடம்பாக்கம் கேட் வந்துவிட்டது. அந்தக் கேட் மூடப்பட்டால் மீண்டும் திறக்க ஒருமணி நேரமாகும். எல்லா ரெயிலும் போய், சென்னைக்கும் செங்கற்பட்டிற்கும் போகிற மின்சார ரெயில் எல்லாம் போய் முடிந்து அதற்குப் பிறகு தான் அந்தக் கேட் திறக்கப்படும். இந்த ஒரு மணி நேரத்திற்குள் தொண்டை வரை போயிருந்த ஊக்கு வயிற்றுக்குள் போய்விட்டது. அதற்குப் பிறகு கேட் திறக்கப்பட்டு பிறகு டாக்டர் வீட்டிற்கு வந்து, அதற்குள் எல்லோரும் என்னவாகுமோ என்று அலறித் துடித்து, ஆப்பரேஷன் பண்ணித் தீர வேண்டுமோ என்ற அளவிற்கு வந்துவிட்டது. நான் அன்றைக்கு திருச்சியிலே ஒரு கூட்டத்திற்குச் செல்ல வேண்டும். பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டேன். திருச்சியிலிருந்து டெலிபோன் செய்து என்னவாயிற்று என்று கேட்டேன். பரவாயில்லை, ஊக்கு வெளியே வந்துவிட்டதென்று மகிழ்ச்சியாக சொன்னார்கள். அன்று ஊக்கை விழுங்கியவன் தான் இன்று ஊக்கத்தோடு சென்னை நகரமெங்கும் பாலங்களைக் கட்டியிருக்கிறார் என்பதைக் காணும் போது நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அந்தக் கோடம்பாக்கம் கேட்டை வைத்து நான் "அய்யோ ராஜா" என்ற தலைப்பிலே ஒரு கதை கூட எழுதினேன். ஸ்டாலின் விவகாரத்தை ஞாபகத்திலே வைத்துக் கொண்டு எழுதினேன். வி.ஐ.பி.க்கள் பல பேர் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கார்கள் எல்லாம் போவதற்காக போலீசார் ஆயிரக்கணக்கிலே ஆங்காங்கு நின்று வழி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கோடம்பாக்கம் கேட் மூடப்பட்டுள்ளது. ஒரு பெண் தன்னுடைய குழந்தைக்குத் தாங்க முடியாத காய்ச்சல் என்பதால் டாக்டரிடம் தூக்கிக் கொண்டு வருகிறாள். கேட் மூடப்பட்டு விட்டது. போக முடியவில்லை. ஒரு மணி நேரம் காத்திருந்து கேட்டிற்கு வெளியே நின்றிருந்த அந்தப் பெண், டாக்டரிடம் காட்ட வேண்டிய அந்தக் குழந்தையை சவமாக வீட்டிற்குப் தூக்கிக் கொண்டுப் போனாள் என்று 'அய்யோ ராஜா' என்ற தலைப்பிலே ஒரு கதை எழுதியிருந்தேன்.

## சென்னை மாநகரில் மேலும் 10 பாலங்கள்

இப்போது ஸ்டாலின் செய்துள்ள வேலை, இது போன்ற கதைகளை யாரும் எழுத முடியாத அளவிற்கு செய்துவிட்டார். அந்த அளவிற்கு இப்போது சென்னை மாநகரத்திலேப் பத்து பாலங்கள், ஏற்கனவே சிறிய சிறிய பாலங்களாக நாற்பது, ஐம்பது பாலங்கள் இந்த மூன்றாண்டு காலத்திலே கட்டப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு மேலும் பத்து பெரிய பாலங்கள் கட்டப்படும் என்று கூறியிருக்கிறார்.

எனவே எல்லா வகையிலும் சென்னை வளருகிறது. முன்னேறுகிறது. சிங்கப்பூர் போன்ற மாநகரங்களை நோக்கி இன்றைக்கு நடை போட்டுக் கொண்டிருக்கின்றது என்ற இந்த மகிழ்ச்சியான செய்தியை உங்களோடு நானும் பரிமாறிக் கொண்டு சென்னை மாநகராட்சி மன்றத்தை வாழ்த்துகிறேன். அவர்களுடைய இந்தச் செயலை வரவேற்கின்றேன்.

*– சென்னை பீட்டர்ஸ் சாலை மற்றும் சர்தார் பட்டேல் சாலை மேம்பாலங்களை 5–2–2000 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரைகளிலிருந்து...*

> **அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு.**
>
> – குறள்



# இரண்டாம் வெண்மைப் புரட்சி காணும் தமிழகம்

– இரா. சௌமியன் இளவல், எம்.ஏ.,

கிராமப்புறங்களை அதிகமாகக் கொண்டிருக்கின்ற நம் இந்திய நாடு கால்நடை வளர்ப்பில் குறிப்பிடத்தக்க அங்கம் வகிப்பதாக ஆய்வுக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. கால்நடை மூலமான வருவாய், விவசாயிகளின் மொத்த வருவாய் அளவில் மூன்றில் ஒரு பங்காக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், குறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும், கால்நடை என்பது அவர்களுடைய வாழ்வியலில் பெருஞ்சொத்தாகப் பேணப்படுகிறது; அதனாலேயே 'கால்நடைச் செல்வம்' என்று அழைக்கப்படுவது, மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல என்பது புலனாகும்.

ஏனெனில், கால்நடைகள் மூலமான வருவாயும், வேலைவாய்ப்பும் ஆண்டு முழுவதும் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. மேலும், கால்நடை வளர்ப்பில் 60 சதவீதத்திற்கு மேலாகப் பெண்களின் உழைப்பே செலவிடப்படுகிறது. எனவேதான், அரசின் நலிவுற்றோர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குவதில் கால்நடை வளர்ப்பிற்கு முன்னுரிமை தரப்படுகிறது.

மேலும், கிராமப்புறங்களில் அதிலும் குறிப்பாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு, முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு தொடர் வேலைவாய்ப்பினை கால்நடை வளர்ப்பின் மூலம் பெறமுடிகிறது என்றால், அது மிகையாகாது. இதனை ஒரு சுயவேலைவாய்ப்பு என்ற நோக்கில் பார்த்தால், மிகப்பெரிய அளவிலான முதலீடின்றி, வறிய நிலையிலிருப்பவர்கள் கூட 'சுயசேமிப்பு' அடிப்படையில் கால்நடை வளர்ப்பினை, அது கோழி வளர்ப்பாகவோ, ஆடு வளர்ப்பாகவோ, கறவை மாடு வளர்ப்பாகவோ மேற்கொள்ள முடியும்.

அதனாலேயே மத்திய–மாநில அரசின் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் கால்நடை வளர்ப்பு முன்னிலை வகிக்கிறது என்பது மிகையாகாது. அந்த அடிப்படையில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக என்று கூட இல்லாமல், விவசாயத்திற்கு இணையான தொழிலாக கால்நடை வளர்ப்பு அமைந்துவிடுகிறது. அதிலும் குறிப்பாக கிராமங்களில் வாழும் ஆண்–பெண் இருபாலரின் 'மனித உழைப்பு' நம் நாட்டில் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்ற கூற்று இன்றளவும் நிலவி வருகிறது. எனவேதான், நம் தேசப்பிதா காந்தியடிகள் கிராம சுயராஜ்யம் பற்றிக் குறிப்பிடுகையில், "நம் நாட்டில் பல்கிப் பெருகியிருக்கின்ற கிராமங்களில் மனித வளம் அதிகமிருந்தும், அவை உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு மனிதனும் சக்திக்கேற்ப உழைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். கிராமங்கள் உண்மையான பொருளாதார மேம்பாட்டினை எய்த வேண்டுமெனில், அந்தந்த வட்டாரத்தில் உள்ள சாத்தியக் கூறுகளை அடிப்படையாக வைத்து அனைவரும் உழைத்திட வேண்டுமென்பது காந்தியச் சித்தாந்தமாகும். அந்த நோக்கில் பார்த்தால்கூட, நடைமுறையில் எளிதாக சாத்தியப்படுவதும் கால்நடை வளர்ப்புதான்.

**இதனை ஒரு சுயவேலைவாய்ப்பு என்ற நோக்கில் பார்த்தால், மிகப்பெரிய அளவிலான முதலீடின்றி, வறிய நிலையிலிருப்பவர்கள் கூட 'சுயசேமிப்பு' அடிப்படையில் கால்நடை வளர்ப்பினை, அது கோழி வளர்ப்பாகவோ, ஆடு வளர்ப்பாகவோ, கறவை மாடு வளர்ப்பாகவோ மேற்கொள்ள முடியும்.**

வானம் பொய்த்துப் போகிற போதெல்லாம் கால்நடைகள் கைகொடுக்கின்றன. உழவனுக்கு காப்பீடு (Insurance) என்பது கால்நடை வளம்தான். ஆனால் முந்தைய கிராமிய அமைப்பில், விவசாய நிலம் அது நன்செய், புன்செய் என்பதோடு மேய்ச்சல் நிலம் என்ற பகுதியும் அதில் உள்ளடக்கி இருந்து வந்தது. பெருகிவரும் மக்கட்தொகையின் அசுரப் பசியின் காரணமாக, காலப்போக்கில் மேய்ச்சல் நிலம் என்று கூறப்பட்டவையெல்லாம் வெவ்வேறு பயன்பாடுகளுக்காக எடுக்கப்பட்டு விட்டன. எனவே, கால்நடைகளின் மேய்ச்சல் என்பது இப்பொழுது அருகிக் குறுகிப் போய் விட்டது என்றே சொல்லலாம்.

இந்நிலையில் கால்நடைகளைக் கட்டிவைத்துத் தீனி போட வேண்டிய கட்டாயம்; அப்படி அந்தத் தீனிகளை உற்பத்தி செய்ய மீண்டும் இடப்பிரச்சினை வரும். எனவேதான் நம்முடைய ஆராய்ச்சியாளர்கள், குறுகிய நிலப்பகுதியில், அதிக அளவில் உற்பத்தியாகக் கூடிய சத்து நிறைந்த புதிய தீவனங்களை ஆராய்ந்து அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க, கால்நடைகளை நோய்த் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றி, தரமான கால்நடை உற்பத்திப் பொருட்களை உண்டாக்குவதும் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்நோக்கில் நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், உழவுத்தொழிலுக்குத் தருகின்ற அதே முக்கியத்துவத்தை கால்நடை பராமரிப்பிற்கும் அளித்திட அரசு முன் வந்திருக்கிறது.

உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறி, கனி வகைகளை உரிய முறையில் விற்று இடைத்தரகரற்ற நிலையினை உருவாக்கிட 'உழவர் சந்தை' திட்டம் நல்ல வரவேற்பினைப் பெற்றுப் பன்முகப் பாராட்டினைப் பெற்றுள்ளது.



நடுத்தர வர்க்கத்து நுகர்வோர் இதனால் பெரும் பயன் அடைந்ததோடு, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கூறுவது போல் **Self Sufficiency** (உணவுச் சுயசார்பு) என்கிற நிலையில் இருந்து முன்னேறி **Nutrient Adequancy** (சத்துக்களிலும் தன்னிறைவு) எனும் நிலையை அடைய மிகவும் உதவும்.

அடுத்த முயற்சியாக, ஏழை விவசாயிகளும், நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களும் பயன்பெற்றிட வேண்டும் என்ற அடிப்படையில், தொடங்கப்பட்ட 'கால்நடை பாதுகாப்புத் திட்டம்' வரவேற்கக்கூடிய ஒன்றே.

தமிழகத்தில் கோழிகளைத் தவிர்த்து, **2.56** கோடி கால்நடைகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றைப் பராமரித்திட **2,126** துணை கால்நடை மருந்தகங்களும் (இதற்கு இணையாக **visiting sub-centres**), **141** கால்நடை மருத்துவமனைகளும், **838** கால்நடை மருந்தகங்களும் உள்ளன; இவற்றில் **1,642** கால்நடை மருத்துவர்களும், **3,188** ஆய்வாளர்களும் பணியாற்றுகின்றனர்.

கால்நடைகளை வெகுதூரம் மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வது சிரமம் என்பதாலும், துணை மருந்தகங்களில் பல ஆபத்தான நோய்களுக்கு சிகிச்சையளிப்பது கடினம் என்பதாலும், உயர்தரக் கால்நடைகளைப் பற்றியும், கலப்பினப் பசுக்களைப் பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது தேவை என்பதாலும், அருகி வரும் மேய்ச்சல் நிலங்களை அனுசரித்து சிறந்தத் தீவனப் பயிர்களைக் குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துவது அவசியம் என்பதாலும், நீலநாக்கு நோய் போன்றவற்றைத் தடுக்கும் பாதுகாப்பு முறைகளை விவசாயிகளுக்கு உணர்த்த வேண்டியிருப்பதாலும் ஒவ்வொரு துணை கால்நடை மருந்தகங்களை மையமாகக் கொண்டு சிறப்பு முகாம்களை நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. வழக்கமாக கால்நடை பராமரிப்புத்துறை நடத்துகிற முகாம்களில் கலந்துகொள்கிற அலுவலர்கள் குறைவு. ஆனால் அரசு அறிமுகப்படுத்தியுள்ள முகாம்களில் குறைந்தது 10 மருத்துவர்களாவது கலந்துகொள்வார்கள் என்பதும், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகமும் பங்கேற்கிறது என்பதும், இது வீரியம் மிகுந்த கவனம் குவிந்த மருத்துவ முகாமாக மலரும் என்கிற பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் மாதம் ஒன்றுக்கு ஒரு முகாம் நடத்துவது என்ற அடிப்படையில் இந்த அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முகாம்களில் நிபுணர்கள் அடங்கிய மருத்துவக்குழுவும், சில முக்கியப் பகுதிகளில் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் பங்கேற்பதால் கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் ஏற்படும் நோய்கள், நோய்த் தடுப்பு முறைகள் ஆகியவற்றை விளக்கும் கண்காட்சிகள் இடம்பெறுவது பெரிய விழிப்புணர்வை நோக்கிய முக்கிய படியாக அமையும்.

முகாமில் தீவனப் பயிர்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்லப்படுவதோடு விவசாயிகளுக்கு தீவனங்களின் விதைகள், கட்டைகள் போன்றவை விநியோகிக்கப்படும்;

விவசாயிகளுக்குத் தீவனப் பயிர்களை ஊடுபயிர்களாக வளர்ப்பது குறித்தும், தீவனத்தை மேம்படுத்து வதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கிச் சொல்லப்படும்;

அதிக அளவில் நாட்டு மாடுகளே உள்ள இடங்களைக் கண்டறிந்து அங்கு ரகமேம்பாடு (**Upgradation of germplasm**) செய்ய வழிவகை செய்யப்படும்;

செயற்கைக் கருவூட்டல், மலடு நீக்கம் போன்ற சிகிச்சைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து கால்நடை ரக மேம்பாடு உறுதி செய்யப்படும்.

முகாமில் பசுக்களுக்கும் எருமைகளுக்கும் மட்டும் ஒரு பதிவு அட்டை வழங்கப்பட்டு அது தொடர் சிகிச்சைகளைப் பதிவு செய்யும் ஆவணமாக இருக்கும்;

சிறந்த கால்நடைகளைத் தேர்ந்தெடுத்து இம்முகாம்களில் பரிசளித்து விவசாயிகளிடையே உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஏற்படுத்த வாய்ப்பு அளிக்கப்படும் என்கிற வரையறைகள் தொடர்ந்து கடைபிடிக்கப் படுமேயாயின் அவற்றால் நல்ல நன்மைகள் விளைய வாய்ப்புண்டு.

**கால்நடைகளை நோய்த் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றி, தரமான கால்நடை உற்பத்திப் பொருட்களை உண்டாக்குவதும் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்நோக்கில் நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், உழவுத்தொழிலுக்குத் தருகின்ற அதே முக்கியத்துவத்தை கால்நடை பராமரிப்பிற்கும் அளித்திட அரசு முன் வந்திருக்கிறது.**

எப்படிப்பார்த்தாலும் இந்த நல்ல முயற்சி கைகூடுமேயானால் தமிழ்நாட்டில் உண்மையான வெண்மைப் புரட்சி நிச்சயம் விளையும். ★



# கிராம சபை

கிராம மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் ஊராட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விவாதித்து, முடிவெடுக்கும் வகையில், ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் ஒரு ஆண்டில் நான்கு முறைகளாவது கிராம சபைகளைக் கூட்டி, பொதுமக்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து, கிராமங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில், 1996–ஆம் ஆண்டு, மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட பின், தமிழகம் முழுவதும் கிராமசபைக் கூட்டங்கள் நன்முறையில் நடத்தப்பட்டு, கிராம மக்கள் தங்களது கிராமங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கீழிலிருந்து மேல் நோக்கித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்துச் செயலாக்கும் மனப்பான்மையும், நடைமுறையும் உருவாகி வருகிறது.

இந்த ஆண்டில், குடியரசு நாளான சனவரி மாதம் 26–ஆம் நாள் கிராமசபைக் கூட்டங்கள் சிறப்பான முறையில் நடத்தப்பட வேண்டுமென்று, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதுபற்றிப் பல்வேறு நாளிதழ்கள் மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலும், முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் மொத்தம் உள்ள 12,619 ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கும் நேர்முகக் கடிதம் மூலமாகக் கிராமசபைக் கூட்டம் நடத்துவது குறித்தும், அந்தக் கூட்டங்களில் விவாதித்து முடிவெடுக்கப்பட வேண்டிய பொருட்கள் குறித்தும் விளக்கமாகத் தெரிவித்திருந்தார். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டும், ஒவ்வொரு கிராமத்திற்கும் கிராமசபைக் கூட்டம் நடப்பதை ஒருங்கிணைக்க ஒரு பற்றாளர் நியமிக்கப்பட்டும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், அனைத்து மக்களுக்கும் 26.1.2000ல் கிராமசபைக் கூட்டங்கள் கூட்டப்படுகின்ற தகவல் தெரிவிக்கப்பட்டது.

அனைத்துப் பணிகளையும் மேற்பார்வையிட்டு, சிறப்பு அறிக்கை அனுப்பும் பொருட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு உயர் அரசு அலுவலர் நியமிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவ்வாறு, தமிழ்நாட்டில் சனவரி 26–ஆம் நாள், 12,436 கிராம ஊராட்சி மன்றங்களில், கிராமசபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதில், 25 இலட்சம் மக்கள் கலந்து கொண்டு, கிராமசபைக் கூட்டத்தின் சிறப்பான நடவடிக்கைக்கு வழிவகுத்து, கிராம மக்கள், தாங்கள் ஆற்றிட வேண்டிய மக்களாட்சிக் கடமைகளை அறிந்து, உணர்ந்து சிறப்பாக நிறைவேற்றி உள்ளனர். ★

# நாட்டு நலப்பணித் திட்டம்

இந்தியாவில் 1969-ஆம் ஆண்டு முதன்முதலாக நாட்டு நலப்பணித் திட்டம் 37 பல்கலைக்கழகங்களில் செயல்பட ஆரம்பித்தது. தமிழ்நாட்டிலும் 1969-ஆம் ஆண்டு மாணவர்கள் பங்கேற்கும் நாட்டு நலப்பணித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் 3,000 மாணவர்கள் எண்ணிக்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் தற்போது 1,65,000 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கு மைய அரசும், மாநில அரசும் முறையே 7:5 என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கீடு செய்கிறது. இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.511.5 இலட்சம் ஆகும். இதில் மைய அரசின் பங்கு ரூ.298.375 இலட்சமும் மாநில அரசின் பங்கு ரூ.213.123 இலட்சமும் ஆகும்.

நாட்டு நலப்பணித் திட்டம் தொடர்ப் பணிகள், சிறப்பு முகாம்கள் ஆகிய இரு வகைகளில் செயல்படுகிறது.

அன்றாடப் பணிகளில் மருத்துவமனை சேவை, உடல் நலம் குறித்த கல்வி, சுற்றுப்புறச்சூழல், மாசுக்கட்டுப்பாட்டு விழிப்புணர்வு, சமூக பொருளாதார மதிப்பீடு, போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல், குருதி தானம், முதியோர் கல்வி, மரம் நடுதல், சிறு குடும்பம் குறித்து பிரச்சாரம் செய்தல், நுகர்வோர் பாதுகாப்பு, எய்ட்ஸ் விழிப்புணர்வு முதலியவை அடங்கும். சிறப்பு முகாம்களில் இணைப்புச் சாலைகள் போடுதல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், குறைந்த செலவில் வீடுகள் கட்டித்தருதல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், வேலி அமைத்தல், ஏரிகள் மற்றும் குளங்களில் தூர் எடுத்து ஆழப்படுத்துதல், தரிசு நிலம் சீராக்கம், வளாகத்தினைப் பசுமைப்படுத்துதல், பேருந்து நிழற்கூடங்கள் கட்டுதல் முதலியன அடங்கும்.

1988 முதல் புதுதில்லியில் குடியரசு தின அணிவகுப்பில் நாட்டு நலப்பணித்திட்டம் பங்கு பெற்று வருகிறது. இந்த நடவடிக்கைகளில் தமிழ்நாடு இந்நாட்டின் முன்னோடியாகத் திகழ்வதுடன் 1988 முதலே குடியரசு தின அணிவகுப்புகளில் கலந்து கொண்டு வருகிறது. இந்த அணிவகுப்பில் பங்குபெற நாட்டின் பல்வேறு இடங்களில் நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பு முகாம்கள் மூலம் தெரிவு செய்யப்படுகிறது. 1998/99-ஆம் ஆண்டில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் மேற்படி முகாம் நடந்தது.

நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து 7 மாணவர்கள், 7 மாணவியர்கள் 1 திட்ட அலுவலர் கொண்ட குழு புதுடில்லியில் 2000 ஆண்டில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் பங்கேற்றது.

இந்த அணிவகுப்பில் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியினைச் சார்ந்த செல்வி.வி.சி.விமலா என்ற மாணவி இந்த தேசிய அளவிலான நாட்டு நலப்பணித் திட்டக் குழுவினை வழி நடத்தியுள்ளார். தமிழ் நாட்டில் நாட்டு நலப்பணித்திட்ட வரலாற்றிலேயே முதன்முறையாக இந்நிகழ்வு தமிழ்நாட்டிற்குப் பெருமைச் சேர்ப்பதாக அமைந்துள்ளது.

2000 ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்ற நாட்டு நலப்பணிக்குழுவை ஆளுநர் அவர்கள் 2.2.2000 அன்று சிறப்பித்தார். ★

# தெருவிளக்கு, குடிநீர் வசதி - பராமரிக்க தீவிர நடவடிக்கை

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைகளின் பல்வேறு பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்ட போது, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நூறு சதவீதம் தொடர்ந்து எரிவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு காலாண்டிலும் இப்பணியினை மேற்கொள்ளும் துறைகளின் பிரதிநிதிகள், எல்லா தெருவிளக்குகளையும் பார்வையிட்டு, அனைத்து தெருவிளக்குகளும் நன்முறையில் எரிவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார். இதே முறையில், குடிநீர் வழங்கும் ஆழ்துளைக் கிணறுகள், விசைப் பம்புகள் மற்றும் கைப்பம்புகள் தொடர்ந்து நன்முறையில் பழுதின்றி இயங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

மேலும், கடந்த டிசம்பர் திங்கள் 23 மற்றும் 24 தேதிகளில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நடத்தப்படும் சிறப்பாய்வுக் கூட்ட நடவடிக்கைகளை மிகை ஆய்வு செய்து, ஆலோசனை வழங்குவதற்காக, மூத்த அரசு அலுவலர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்ப வேண்டும் என முதல்வர் கலைஞர் அவர்கள் முடிவெடுத்து அறிவித்திருந்தார். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள 29 மாவட்டங்களுக்கும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு அதிகாரி என்ற முறையில், 29 மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றாளர்களாக (Nodal Officers) நியமிக்கப்பட்டனர். இந்தப் பற்றாளர்கள், சனவரித் திங்களில் தங்களது முதல் சிறப்பாய்வினை, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியம் ஆகிய துறை அலுவலர்களுடன் மேற்கொண்டு, அரசுக்குத் தனி அறிக்கையினை அனுப்பியுள்ளனர்.

முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவுரைகளின் படி, அரசு மேற்கொண்டுள்ள இந்த சிறப்பு நடவடிக்கைகளின் காரணமாக 95 சதவீத தெருவிளக்குகளும், 97 சதவீத கைப்பம்புகளும், 95 சதவீத விசைப்பம்புகளும் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

### தெருவிளக்குகள்

ஊராட்சிகளில் 10,41,300 தெருவிளக்குகள்; பேரூராட்சிகளில் 2,79,776 தெருவிளக்குகள்; நகராட்சிகளில் 3,18,478 தெருவிளக்குகள்; மாநகராட்சிகளில் 2,01,868 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில், ஊராட்சிகளில் 9,71,936 தெருவிளக்குகள், பேரூராட்சிகளில் 2,74,985 தெருவிளக்குகள், நகராட்சிகளில் 3,11,173 தெருவிளக்குகள், மாநகராட்சிகளில் 1,97,867 தெருவிளக்குகள் நல்ல நிலையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 18,41,422 தெருவிளக்குகளில் 17,55,961 அதாவது, 95 சதவிகித தெருவிளக்குகள் சரியாக எரிகின்றன. எரியாமல் உள்ள 75,461 தெருவிளக்குகளை எரியச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### குடிநீர் வழங்கல்

குடிநீர் வழங்கும் சாதனங்களைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 1,73,191 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 24,506 கைப்பம்புகள், நகராட்சிகளில் 16,813 கைப்பம்புகள், மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 5,249 கைப்பம்புகள் உள்ளன. இதில், ஊராட்சிகளில் 1,68,598 கைப்பம்புகள், பேரூராட்சிகளில் 23,846 கைப்பம்புகள், நகராட்சிகளில் 15,989 கைப்பம்புகள், மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 5,136 கைப்பம்புகள் நன்முறையில் இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 2,19,759 கைப்பம்புகளில் 2,13,569 கைப்பம்புகள், அதாவது 97 சதவிகித கைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில் இயங்காமல் உள்ள 6,193 கைப்பம்புகளைச் சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசைப்பம்புகளைப் பொறுத்தவரை, ஊராட்சிகளில் 35,809 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,770 விசைப்பம்புகள், நகராட்சிகளில் 1,511 விசைப்பம்புகள், , மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 1,181 விசைப் பம்புகள் உள்ளன. இதில், ஊராட்சிகளில் 34,885 விசைப்பம்புகள், பேரூராட்சிகளில் 4,680 விசைப்பம்புகள், நகராட்சிகளில் 1,484 விசைப்பம்புகள், மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) 1,147 விசைப்பம்புகள் நன்கு இயங்குகின்றன. ஆகவே, மொத்தம் அமைக்கப்பட்டுள்ள 43,271 விசைப்பம்புகளில், 41,079 விசைப்பம்புகள், அதாவது 95 சதவிகித விசைப்பம்புகள் சரியாக இயங்குகின்றன. மொத்தத்தில் இயங்காமல் உள்ள 1,075 விசைப்பம்புகளைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அரசு, தொடர்ந்து எடுத்துவரும் இத்தகைய சிறப்பு நடவடிக்கைகளினால், உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகள் நூறு சதவீதம் எரிவதற்கும், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் அனைத்தையும் செம்மையாக இயங்கிடச் செய்ய முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதி தங்கு தடையின்றிக் கிடைத்திடவும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. ★






# தமிழக தேசிய மாணவர் படையின் சாதனை போற்றத்தக்கது

**– முதலமைச்சர் கலைஞர்**

தேசிய மாணவர் படையினரின் – முதல் அமைச்சர் பேரணி அணிவகுப்பு விழா சென்னை–கலைவாணர் அரங்கில் 4–2–2000 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு :

தேசிய மாணவர் படையினர் நடத்திடும் முதலமைச்சரின் முதல் பேரணியில் பங்குபெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் தமிழக தேசிய மாணவர்படை இயக்கத்திலிருந்து பங்குகொண்டு பரிசுபெற்ற வீரர்களை நாம் அனைவரும் பாராட்டுகிறோம். குடியரசு தின அணிவகுப்பில், தமிழக என்.சி.சி. மிகச்சிறந்த சாதனைப் படைத்தமையை அறிந்து மகிழ்கிறேன்.

### ஐந்தாண்டுக்குப் பின் பிரதமரின் பதாகை

ஐந்தாண்டுக்குப் பின்னர், புதுடெல்லியில் குடியரசு தின அணிவகுப்பில் தமிழக அணி பாரதப் பிரதமரின் பதாகையை வென்றுள்ளது. மேலும், தமிழக தேசிய மாணவர் படையினர் பல போட்டிகளில் வென்று கோப்பையையும் கைப்பற்றியுள்ளனர். இவர்களின் இச்சாதனை கண்டு பெருமிதம் எய்துகிறேன்.

என்.சி.சி. பணிகளில் தமிழகம் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. தேசிய மாணவர்படை தொடங்கப்பட்ட 1948–ஆம் ஆண்டு முதலாகவே பிரதமரின் பதாகையைத் தமிழகம் அதிகமுறை அதாவது 11 முறை பெற்று படைத்துள்ள சாதனை மிகவும் போற்றத்தக்கதாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மிகக் குறைந்த புள்ளிகளிலேயே இப்பதாகையை வென்றிடும் வாய்ப்பினைத் தமிழகம் இழந்து வந்துள்ளது. இந்த ஆண்டில் நாம் இப்பதாகையை மறுபடியும் கைப்பற்றியுள்ளோம். இது உங்கள் அனைவரின் அயராத உழைப்பினாலும் ஒட்டு மொத்த மன உறுதியாலும், உங்களுடைய தளராத முயற்சிகளாலும் தான் சாத்தியமாகி உள்ளது. இதற்காக எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களை உங்களனைவருக்கும் உரித்தாக்குகிறேன்.

இவ்வெற்றியை ஈட்டுதற்கேற்ப பயிற்சிகள் அளித்து ஊக்கமும், உறுதியும் அளித்துவரும் அலுவலர்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். இதுபோன்றே தொடர்ந்து வருமாண்டுகளிலும் எல்லா முயற்சிகளிலும் நீங்கள் தொடர்ந்து வெற்றிபெற வேண்டும் எனவும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான்– நிகோபார் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய தமிழக தேசிய மாணவர் படையில் 98 ஆயிரத்து 590 வீரர்கள் உள்ளனர். அவர்களில் 92 ஆயிரத்து 940 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். நாடு முழுவதும் 3.9 சதவிகித மாணவ – மாணவியர் இந்தத் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர். தமிழகத்தில் மட்டும் 7 சதவிகித மாணவர்கள் இப்படையில் சேர்ந்துள்ளனர். தமிழகத்திலே உள்ள 220 கல்லூரிகளிலும், 738 பள்ளிகளிலும் தேசிய மாணவர் படைப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. சமுதாயத்தின் பல்வேறு நிலைகளிலிருந்தும் இம்மாணவர்கள் எழுகின்றனர். நமது மாணவர் படையினரின் இணக்க மனப்பான்மை, ஒழுக்கம், சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற ஆர்வம் ஆகியவை இம்மாணவர்கள் அனைத்திந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் எப்பொழுதும் பரிசுகளை வென்றிட துணை புரிகின்றன.

தேசிய மாணவர் படையினரின் பணிகளில் அமைப்பு ரீதியான பயிற்சி, வீரதீரச் செயல்கள் புரிந்திடும் வண்ணம் சிறந்த பயிற்சி, விளையாட்டுகள், இளைஞர்கள் பரிமாற்றத் திட்டம், சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஆகியவை அடங்கும்.

## ஆடவருக்கு இணையாக மகளிருக்கும் வாய்ப்புகள்

தேசிய மாணவர் படையில் மகளிரும் ஆடவருக்கு இணையாகப் பங்கேற்கும் வகையில் வாய்ப்புகள் அளிப்பது பெருமைப்படத் தக்கதாகும். என்.சி.சி. பணிகளில் அவர்கள் மிகச் சிறப்பாக ஈடுபடுகிறார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். எனவே, மகளிர் முன்னேற்றத்திற்கு என்.சி.சி. மிகச்சிறந்த முறையில் பங்காற்றுகிறது.

நாட்டு முன்னேற்றத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் என்.சி.சி. ஆற்றும் அரிய பணிகளை அரசு அறிந்தே உள்ளது. தேசிய மாணவர் படை இயக்ககத்திற்குச் செய்திடும் செலவு, இந்திய மற்றும் நமது மாநிலம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகச் செய்திடும் முதலீடாகவே மதிக்கப்படுகிறது.

தேசிய மாணவர் இயக்கத்தை மேம்படுத்துவது, மத்திய மாநில அரசுகள், முப்படைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டுப்பொறுப்பாகும். தமிழக என்.சி.சி. வீரர்கள் இந்தியாவிலேயே மிகச்சிறந்த முறையில் பயிற்சி பெறுகிறார்கள் என்பதை உறுதி செய்திடும் பெரும் பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு.

தேசிய மாணவர் படை வழங்கும் பயிற்சிகள் மூலம், இதன் வீரர்கள் மட்டும் பயன்பெறுவதில்லை. ஒழுக்கமும், கட்டுப்பாடும் வாய்ந்த என்.சி.சி. வீரர்கள் மூலம் கல்வி நிறுவனங்களில் அவர்களோடு பயிலும் மாணவ – மாணவியரும், ஒட்டுமொத்தமாக நல்லொழுக்கங்களின்பால் ஈர்க்கப்படுகிறார்கள். என்.சி.சி. மாணவர்கள் விரும்பத்தகாத செயல்களைப் புறக்கணிப்பதில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க்கைப் பாதையில் எல்லா முனைகளிலும் செயலாற்றுவதற்கு தேசிய மாணவர் படை ஒரு படிக்கட்டாகவே அமைகிறது. படைப்பிரிவுகள், அரசு நிறுவனங்கள், பல தனியார் நிறுவனங்கள் ஆகியவை வேலைவாய்ப்புகளை அளித்திடும் போது என்.சி.சி. மாணவர்களுக்கு உரிய முன்னுரிமையில் அளித்து வருகின்றன. ஒழுக்கம், தன்னலமின்மை, ஈடுபாடு ஆகியவையே என்.சி.சி. படையினரின் பண்புகளாகும். அனைத்துத் தொழில் முதலீட்டாளர்களும், தாங்கள் அளித்திடும் வேலைகளில், என்.சி.சி. பயிற்சி பெற்றவர்களுக்கு முக்கியத்துவம் அளித்திட வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய மாணவர் படையின் கட்டுப்பாடு மிகுந்த இளைஞர்கள் அனைத்து நிறுவனங்களிலும் பரவலாக பங்கு பெறுவதன் மூலம் அவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்திட முடியும். மாநில அரசும் மத்திய அரசும் இத்தகைய கட்டுப்பாடான பல அமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழக அரசு இந்த ஆண்டு தேசிய மாணவர்படை இயக்ககத்திற்குப் பதிமூன்று கோடியே பதினான்கு இலட்ச ரூபாய் அளித்துள்ளது. தேசிய மாணவர் படையினரின் 80 முதுநிலைப் பிரிவு வீரர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூபாய் ஆயிரத்து இருநூறு வீதமும், 90 இளநிலைப் பிரிவு வீரர்களுக்கு ஆண்டுக்கு ரூபாய் அறுநூறு வீதமும் அரசு உதவித்தொகை வழங்குகிறது.

தமிழகத்தில், தேசிய மாணவர் படையினருக்குப் பொறியியல் கல்லூரிகளில் சேர இரண்டு இடமும், ஒவ்வொரு கல்லூரிகளிலும் இளநிலை பட்டப்படிப்பில் சேர ஒரு இடமும், முதுநிலைப் பட்டப்படிப்பில் சேர ஒரு இடமும், அதேபோல் பாலிடெக்னிக்குகளில் சேர ஒவ்வொன்றிலும் ஒரு இடமும் நாங்கள் ஒதுக்கீடு செய்துள்ளோம்.

மேலும் இந்த அரசு தேசிய மாணவர் படையினருக்கு ஒவ்வொரு ஆண்டும், ஊக்கத் தொகையாக இரண்டு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் அளித்து வருகிறது.

இந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் சில அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன். பொறியியல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படையினருக்கு ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் இரண்டு இடங்கள் இந்த ஆண்டு முதல் பத்து இடங்களாக உயர்த்தப்படும்.

மேலும், தேசிய மாணவர்படை இயக்கத்தில் சாதனைகள் படைத்திடும் வீரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நூறு ரூபாய் பரிசுத்தொகை இனி ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக என்.சி.சி. நாட்டிலேயே மிகச்சிறந்தது எனும் பெருமை தொடர்ந்து நீடித்து நிலைக்கும் வகையிலும், நமது நாட்டிற்கும், மாநிலத்திற்கும் அதன் சிறந்த சேவை தொடர்ந்து கிடைக்கும் வகையிலும் என்.சி.சி. செயல்படத் தேவையான அனைத்து உதவிகளையும், தமிழக அரசு வழங்கிடும் என்பதை இப்பேரணியில் தெரிவித்துக் கொள்கிறேன். ★



# உலகக் கவி

முப்பாவை உலகக்க விதந்த தாலே
முக்கடலில் சிலையாக காட்சி தந்தார்
ஒப்பில்லா முதற்குறளில் உலகைக் கண்டு
உயாவான தமிழ்ப்பேழை தந்து சென்றார்
கப்பலேற்ற முடியாத கருத்துக் கோவை
காலத்தால் அழியாத கலையின் சிறபம
போப்பெல்லாம் மொழிபெயர்ப்பு செய்து கொண்ட
பொதுமறையே உலகத்தில் உயர்ந்த நூலே!
சான்றாண்மை பண்புடைமை அன்பு மானம்
சேராமை செங்கோண்மை கல்வி கேள்வி
ஆன்றபெரும் இறைமாட்சி படையின் மாட்சி
அருளுடைமை கள்ளாமை கொல்லா நோன்ப
தோன்றிவரும் இல்வாழ்க்கை மக்கள் வாய்மை
துளங்குகின்ற நட்புகாலம் ஈகை கோபம்
ஆன்றோர்கள் தவம்புகழும் நாடு திட்பம்
ஆய்வியலும் அறிவியலும் அனைத்தும் சொன்னார்
இறவாத வரலாற்றில் எழுதப் பெற்றார்
எம்தாத்தா வள்ளுவரும் இந்த நாட்டில்
உறவுபகை அத்தனையும் ஒன்றாய் கண்டார்
உயிரனைத்தும் பிறப்பொன்றே! இறப்பு வேறே!
நறவுமொழி உலகத்தில் நடக்க விட்டார்
நல்லாட்சி கோட்ட முதல் குமரி கண்டார்
கறங்குகின்ற உலகத்தைக் காக்க வேண்டி
கடல்நடுவில் உயரத்தில் நின்றார் வாழ்க!
சாதிமத பேதமற்ற சமூகம் கண்டார்
சமுதாயம் தழைக்கின்ற வழியைச் சொன்னார்
நீதிமுறை அங்கங்கே வலிந்து சொன்னார்
நிமிராது உழைப்பவர்க்கு ஊக்கம் தந்தார்
ஓதிவைத்த கருத்துக்கள் உலகின் நோக்கம்
ஒவ்வொன்றும் ஒன்னாத வைரக் கற்கள்
மீதியின்றி அத்தனையும் சொல்லி வைத்தார்
மேலான அவர்வழியில் நடப்போம் வாரீர்!



கவிஞர்
அ. பொன்னுசாமி

# ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஐந்நூற்றவர் செக்கு

கரூர் மாவட்டம், கரூர்–திண்டுக்கல் பழைய நெடுஞ்சாலையில் உள்ள வெள்ளியணை நத்தமேட்டில் இச்செக்கு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்செக்கு பற்றிய அரிய தகவல்களைத் தொல்லியல்துறை இயக்குநர் வெளியிட்டார்.

இச்செக்கின் வாய்ப்பகுதியில் கி.பி.10–ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் சுருதி வட்டமாக ஒரு கல்வெட்டும் வெட்டப்பட்டுள்ளது. 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற மங்கலச் சொல்லுடன் தொடங்கி 'சோமூர் மகாதேவர்க்கு அஞ்நூற்றுவர் இடுவிச்ச செக்கு' என்று இக்கல்வெட்டுள்ளது. சோமூர் இறைவனுக்காக ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுவினர் இச்செக்கினை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

பெருவழிகள் சந்தித்தன என்பது இன்று கரூர் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண்.7 ஆகும். கொங்கப் பெருவழி என்பது மேற்குக் கடற்கரையில் கோழிக்கோட்டில் தொடங்கி பாலக்காடு காங்கேயம், கரூர், உறையூர் வழியாகக் கீழக்கடற்கரையில் உள்ள பூம்புகாருக்குச் சென்ற பெருவழியாகும்.

இவ்வணிகர்கள் வழி நெடுகத் தங்களுக்கு வழித்துணையாக அமைந்த தெய்வங்களுக்கும், கோயில்களுக்கும் கொடைகள் நல்கியுள்ளனர். ஏரி, குளம் அமைத்தல், வழியில் உள்ள ஏரிகளுக்குத் தூம்பு அமைத்தல், குமிழி செய்தல் போன்ற பணிகளையும்



ஐந்நூற்றுவர், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர் ஐந்நூற்றுவர், அய்யப்பொழிலார், நானாதேசிகன், பதிவெனிலிவிஷயத்தார், சித்திரமேழி பெரிய நாட்டார் என்ற பல பெயர்களில் பண்டைய தமிழகத்தில் வணிகக் குழுக்கள் இருந்துள்ளன. இவைப் பண்டையப் பெருவழிகளில் நெடும் பயணம் மேற்கொண்டு அங்கங்கு கிடைக்கும் பொருள்களை வாங்கியும் பிற இடங்களில் பெற்ற பொருள்களை விற்றும் நடமாடும் வணிகர் குழுக்களாக இருந்துள்ளன.

பண்டைய வணிகத்தில் கரூர் பெரும் பங்காற்றியது. சிறந்த வணிக நகரமாக கரூரில் தக்ஷிணபதம், கொங்கப் பெருவழி என்ற இரு மேற்கொண்டுள்ளனர். இவ்வகையில் சோமூர் கோயில் இறைப்பணிகளுக்காக உதவும் வகையில் இவர்கள் அமைப்பித்த செக்குகள் இவை என்று கருத முடிகிறது. இவ்விடத்தில் கல்வெட்டில்லாமல் மேலும் இரண்டு செக்குகள் உள்ளன. பண்டையத் தமிழகத்தின் வணிகர் அமைப்பு, வணிகப் பெருவழிகள், கோயில் பொருளாதாரத்தில் அவர் தம் பங்கு ஆகியவைப் பற்றி ஆய்வு செய்ய இச்செக்குகளும் கல்வெட்டும் துணை செய்கின்றன.

வெள்ளியணை அருகில் உள்ள தாளியாம்பட்டித் திரு புவனேந்திரன் தந்த தகவலின் அடிப்படையில் கரூர் தொல்லியல்துறை அலுவலர் திரு நாக.கணேசன் செக்குள்ள இடத்தை ஆய்வு செய்து, கல்வெட்டைப் படியெடுத்து புகைப்படம் எடுத்துள்ளார். துறைச் சிறப்பு நிலை கல்வெட்டாய்வாளர் முனைவர் சு. இராசகோபால் கல்வெட்டினைப் படித்தளித்துள்ளார். ★



# வருமுன் காப்போம் திட்டம் : படகில் சென்ற மருத்துவக் குழுவினர்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அற்புதமான மக்கள் நலத்திட்டம் "வருமுன் காப்போம்" திட்டம் என்று சொன்னால் அது மிகையாகாது. இத்திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஜனவரி 2000 திங்களில் மட்டும் 12 முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மாவட்டத்தில் மணல்மேடு என்ற பகுதியில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு 2315 பேர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 295 நபர்கள் தொடர் சிகிச்சைப்பெற பரிந்துரை செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து செம்பொன்னார்கோவில், வெள்ளப்பள்ளம், திருவாடுதுறை, கொடியம்பாளையம், கட்டுமாவடி, மேலையூர், மஞ்சக்கொல்லை, செட்டிப்புலம், மாப்படுகை, ராதாமங்கலம் மற்றும் திருவிளையாட்டங்குடி ஆகிய இடங்களில் இத்திட்டம் மக்களின் ஆதரவோடு செயல்படுத்தப்பட்டு ஜனவரி திங்களில் மட்டும் 19,224 பேர் பயனடைந்துள்ளனர். இதில் 1789 பேர் தொடர்ச் சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர்.

அனைத்து முகாம்கள் குறித்தும் எழுத இடம் போதாது என்பதால் வித்தியாசமான முகாமான ஒரு தீவில் செயல்படுத்தப்பட்ட விதத்தையும், அதில் பத்திரிக்கையாளர்கள் பொது மக்களைப் பேட்டி கண்டு பொதுமக்கள் கருத்தை நாளிதழில் அளித்ததையும் வாசகராகிய உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## கொடியம்பாளையம் தீவு

நாகை மாவட்டம் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொடியம்பாளையம் என்ற ஊராட்சி 3 பக்கம் ஆறுகளாலும் ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்ட ஒரு தீவுப்பகுதி ஆகும். இங்கு செல்ல வேண்டுமானால் படகில் தான் பயணம் செய்து செல்ல முடியும். இந்த தீவில் 2000 மக்கள் வசிக்கின்றனர். இந்த தீவில் "வருமுன் காப்போம்" திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. அரசு மருத்துவமனை கொடியம்பாளையத்தில் இருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சீர்காழியில் உள்ளது.

## மருத்துவ முகாம்

இதே போல் கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அரசு மருத்துவமனை உள்ளது. இந்த மருத்துவமனைக்கு தான் இந்தப் பகுதி மக்கள் மருத்துவ வசதி பெற செல்ல வேண்டும். இந்தத் தீவில் "வருமுன் காப்போம்" திட்ட மருத்துவ முகாம் தொடங்கி வைக்கப்பட்டது.

## படகில் பயணம்

முகாமினைத் தொடங்கி வைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் சிவ்தாஸ் மீனா, மருத்துவ





நிபுணர்கள், அரசு அலுவலர்கள், மருந்துப் பொருட்கள், மருத்துவ சாதனங்களுடன் படகில் பயணம் செய்தனர். அங்குள்ள புயல் பாதுகாப்பு மையத்தில் "வருமுன் காப்போம்" திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இதில் 725 பேர் சிகிச்சைப் பெற்று பயன் அடைந்தனர். தோல் நோய், தொழு நோய், மகப்பேறு மருத்துவம், பல் சிகிச்சை, சித்த மருத்துவம் என மருத்துவர் குழு சிகிச்சை அளித்தது.

புதுப்பட்டிணம் மெயின் ரோட்டில் வசிக்கும் மணிமேகலை தனது 15 வயது மகளுடன் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தொடர் சிகிச்சைக்காக நல்லூர் சுகாதார மையத்துக்குப் பரிந்துரைத்தனர். கடந்த 1 வருடமாக இதய வால்வு அடைப்பினால் புதுவையில் உள்ள ஜிப்பர் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைப் பெற்று வரும் பக்கிரிசாமி என்பவர் இந்த "வருமுன் காப்போம்" திட்டத்தால் பயன் அடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

**தீவைக் கடந்து**

நாகை மாவட்டத்தில் கடைக்கோடியில் உள்ள இந்தத் தீவில் போதுமான வசதிகள் இல்லாமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். தாய்மார்கள் பிரசவத்திற்குக் கூட நீர்ப் பகுதிகளைக் கடந்து தான் செல்ல வேண்டும். பரங்கிப்பேட்டை வழியாகச் சிதம்பரத்துக்கோ, சீர்காழிக்கோ சென்று சிரமப்பட வேண்டியுள்ளது. அரசும் மாவட்ட நிர்வாகமும் நல திட்டங்களில் இந்த ஊராட்சிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என ஊர்த் தலைவர் கெங்கமுத்து தெரிவித்தார்.

**பாலம் வசதி**

கட்சி பேதமில்லாமல் சந்தத் துறை ஆற்றில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் எனத் தெரிவித்தனர். கொடியம்பாளையத்தினைச் சேர்ந்த கொல்லிமலை என்பவர் உப்பு நீர் சூழ்ந்த பகுதியானலும் தங்கள் ஊர் குடிநீர் சுத்தமாக உவர்ப்பு இல்லாமல் இருக்கிறது. போக்குவரத்து வசதி செய்துதர வேண்டும், ஒரு மருத்துவரும், ஆசிரியரும் நிரந்தரமாக தங்க வேண்டும் என கூறினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வை**

இந்த ஊராட்சியில் அய்யன் திருவள்ளுவர் படிப்பகம், 'வருமுன் காப்போம்' முகாம் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டார். சிகிச்சை பெற்ற பொதுமக்களிடம் பதிவு அட்டையை வாங்கிப் பார்த்தார்.

'வருமுன் காப்போம்' திட்டத்திற்காக ஒரு முகாமில் ஏறத்தாழ 500 பேர் பயனடைவார்கள் என்ற அரசின் இலக்கை மிஞ்சி மக்கள் பயனடைந்துள்ளனர். அரசின் செயல்பாடுகளை மக்கள் எந்த அளவிற்கு பயன்படுத்தி மகிழ்கிறார்கள் என்பதற்கு இதுவே சான்றாக கருதலாம். பத்திரிக்கைகளும் இத்திட்டத்தை பாராட்டியுள்ளன என்பது கண்கூடு. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

கோ-ஆப்டெக்ஸின்

பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய் திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலு... ல் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் ம... ல், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

**குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவ... ஓர் அரிய வாய்ப்பு!**

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (3+4) ரூ. | அரசு தள்ளுபடி * ரூ. | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள... ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு ... அரசால் வழங்கப்ப்டும் தள்ளுபடி சதவீதம் க... வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, ப... குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - ... கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெ... ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆ... மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் ... பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்...

கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண்



# தமிழரசு








# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
மாசி

பிப்ரவரி 16–29, 2000

மலர் : 31 இதழ் : 16

விலை ரூ.5


*இந்த இதழில்...*


- சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதலமைச்சரின் பட்டமளிப்புப் பேருரை -- 2
- விளக்குகள் ---------- 6
- தந்தையோடு ஒரு சொல் ---------- 7
- கிங் மருத்துவ நிலைய நூற்றாண்டு விழா ---------- 9
- இளநீர் இனிய மருந்து ---------- 12
- உழவர் சந்தைகள் – கிராமப் பொருளாதாரத்தில் ஒரு புரட்சி ---------- 15
- திருவள்ளுவர் தீபம்; தீப்பந்தம் ---------- 17
- பன்னாட்டுச் சுற்றுலா ---------- 21
- தமிழகம் முழுவதும் கணினி மயமாக வேண்டும் ---------- 24
- கீர்த்தி ---------- 26
- சிறுசேமிப்பும் வருமான வரிச்சலுகையும் ---------- 34
- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை ---------- 37
- தொலைதூர வனப்பகுதிகளில் மனுநீதி நாள் ---------- 39
- வேளாண்துறையின் சவால்களும் சாதனைகளும் ---------- 41
- உடல் உழைப்புத் தொழிலாளர் நலத்திட்டம் ---------- 45


## திருக்குறள்

*மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்*
*கற்றா ரனைத்திலர் பாடு.*

கற்றவர் என்ற பெருமை, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டைப் போக்கிவிடும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*




# ஆற்றும் பணிகள் அத்தனையிலும் நீவிர் குவித்திடும் வெற்றிகள், வரும் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் வரலாறாய் விளங்கிடும்!

**சென்னைப் பல்கலைக்கழகத்தின் 142ஆவது பட்டமளிப்பு விழாவில் 18-2-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**

இந்தியத் திருநாட்டின் புகழ் பூத்த மூத்தப் பல்கலைக்கழகங்களில் ஒன்று சென்னைப் பல்கலைக்கழகம். இந்தப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா உரைகள், 1857–ஆம் ஆண்டு முதல் 117 ஆண்டுகளாக ஆங்கிலத்தில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வந்தன. அந்த நெடிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக 118–வது பட்டமளிப்பு விழா உரையை 20.9.1975 அன்று முதன் முதலாகத் தமிழில் நிகழ்த்தியவன் நான் என்பதை இவ்வேளையில் நினைவூட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**"பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலை குலையும், எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே, மனக்குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலகம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது.**

**குறிக்கோள் தெளிவாக அமைந்திடின், மாணவர்களிடம் மாண்புமிகுச் செயலினை எதிர்ப்பார்க்க முடியும்"**

— என்று **பேரறிஞர் அண்ணா** அவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரையில், பட்டம் பெறும் மாணவர்களுக்குக் குறிக்கோள் அவசியம் என்பதை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்கள்.

குறிக்கோளை நீங்கள் தேர்வு செய்திடும் வேளையில், வருங்கால வாழ்வுக்கு வளம் சேர்க்கும் தொழில், அதைத் தேர்வு செய்தல், அதில் வெற்றி பெறுதல் — வளம் பெறுதல் என்பது ஒரு புறம்.

அதன் மறுபுறம், நமது சமூகப் பண்பாட்டு வரலாறு. அந்த வரவலாற்றில் காணப்படும் மேடு பள்ளங்கள், அவற்றைக் கடந்து நாம் இன்று கண்டுள்ள முன்னேற்றம் — இந்த முன்னேற்றம் தொடர்ந்து நீடிக்க, மேலும் நமது சமுதாயம் நலம்பெற உங்கள் பங்கு என்ன? கடமை எது? — என்ற அடிப்படையிலும், உங்களுடைய குறிக்கோள் அமைந்திட வேண்டும் என்று விரும்புகிறேன்.

## தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்வீர்

இருபதாம் நூற்றாண்டு, உலகில் பல புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கி உள்ளது. இக்கால கட்டத்தில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் நீவிர் சீர்தூக்கி ஆராய்ந்திட வேண்டும். நலிந்த சமுதாயம் எழுச்சிப் பெறத் தேவையான அடித்தளங்கள் பல எழுப்பப்பட்டுள்ளன இந்த நூற்றாண்டில்.

அத்தளங்களின் மீது மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் அமைக்க வேண்டியப் பொறுப்பும், கடமையும் உங்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

1901–ஆம் ஆண்டில் தமிழகத்தில் வாழ்ந்தவர்களில் கல்வியறிவுப் பெற்றோர் 6 விழுக்காட்டினர் மட்டுமே. 1991–ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 63.72 விழுக்காட்டினர் கல்வியறிவு பெற்றிருந்தனர். இன்றைய நிலையில் அந்த எண்ணிக்கை ஏறத்தாழ 80 விழுக்காடு அளவுக்கு உயர்ந்திருக்கக்கூடும்.

உயர் கல்வியில் தமிழகம் இந்திய மாநிலங்களில் முன்னணியில் உள்ளது. இந்த வளர்ச்சிக்குக் காரணம் — தமிழகம் முழுவதும் பரவலாகக் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் — கல்வி நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் உரிய எண்ணிக்கையில் இடம் பெறக்கூடிய வகையில் இடஒதுக்கீடு உரிமைகளைத் திராவிட இயக்கம் அவர்களுக்குப் பெற்றுத் தந்தமை தான் மிக முக்கிய காரணம் என்பதை எவராலும் மறுத்திட முடியாது; மறைத்திடவும் இயலாது.

## ஆட்சி அதிகாரங்களில், அலுவலகப் பணிகளில் அடித்தட்டு மக்கள்

இன்று அதன் பயனாகக் காலங்காலமாய்ச் சமுதாயத்தின் அடித்தட்டுகளில் முட்டி மோதிக் கொண்டு கிடந்த பாமர மக்களெல்லாம் — மேல்தட்டினை நோக்கித் தட்டுத் தடுமாறி — மெல்ல, மெல்ல முன்னேறி — ஆட்சி அதிகாரங்களில், அலுவலகப் பணிகளில் இடம் பிடித்து, ஏற்றம் பெற்று வரும் அரிய காட்சிகளைச் சமுதாயத்தில் இன்று நாம் காண முடிகிறது.

இந்த மாற்றத்தை உருவாக்கியதில் திராவிட இயக்கத்திற்கும், பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர், டாக்டர் நடேசனார், முத்தையா முதலியார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கும், அவர்களைத் தொடர்ந்து இன்றைய தமிழக அரசுக்கும் முக்கியப் பங்குண்டு என்பதை நாடறியும்.

இந்த வரலாற்றை இன்றைய இளைஞர்கள் அறிந்து, தெளிவது அவர்கள் தங்கள் கடமைகளை வகுத்துக் கொள்ள வழி பிறக்கும்.

ஏழை, எளியோர், நலிந்தோர், மெலிந்தோர் ஏற்றம் பெற அணி திரண்டு உழைப்பது உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள்களில் ஒன்றாய் அமைந்திட வேண்டும்

## தீண்டாமைக் கொடுமை அகற்றிடுவீர்

நமது சமுதாயத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்திடும் தீண்டாமைக் கொடுமைகளை அகற்றிடப் பாடுபட வேண்டியதும் நம் கடன்களில் ஒன்றாய் அமைந்திடல் வேண்டும் என்பது என் கருத்தாகும்.

தீண்டாமை என்பது மனித நாகரிகத்திற்கு அப்பாற்பட்ட ஓர் அவமானச் சின்னம். அது நமது நாட்டுச் சட்டத்தின்படி அகற்றப்பட்டு விட்டது. ஆயினும் நமது மக்களின் மனங்களிலிருந்து இன்னும் அது அகன்றிடவில்லை. அதனை அகற்றும் பொறுப்பும், கடமையும் உமக்குண்டு.

எந்தப் பெரியார் இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டும் என்பதற்காகத் தம்முடைய தள்ளாத வயதிலும் பாடுபட்டாரோ, அவர் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு கூட, சென்னையில் தியாகராய நகரில் நடைபெற்றக் கூட்டத்தில் எவ்வளவு உறுதியோடு, அழுத்தம் திருத்தத்தோடு, சாதி ஒழிப்புக் குரலை அன்றைக்கு உயர்த்தினாரோ, அந்தப் பெரியார் உலவிய இந்த மண்ணில், அந்தப் பெரியாரின் குரல் கேட்காத பட்டிதொட்டிகள் இல்லை என்று சொல்லக் கூடிய இந்த மண்ணில், இன்றைக்கு அந்தப் பெரியார் இல்லை. அவர் இல்லை என்பதால் அவரின் கொள்கையும் இல்லாமல் போய்விடுகிறதோ என்ற ஏக்கம் தான் என்னை அலைக்கழித்துக் கொண்டு இருக்கிறது.

## மனிதனை மனிதன் அழித்திடும் மாபெரும் அவலம்

சாதிகளின் பெயரால், மதங்களின் பெயரால், பகைமையை வளர்த்துக் கொண்டு, மனிதனை மனிதன் அழித்திடும் மாபெரும் அவலம் இந்த மண்ணில் இனியும் நிகழ்ந்திடலாமா? இன்னும் எத்தனை காலத்திற்கு இந்தக் கொடுமைகள் தொடர்ந்திட வேண்டும்?

இளைஞர் சமுதாயம் நினைத்தால் இக்கொடுமையைக் கிள்ளி எறிந்திடல் எளிதாகும் என்பது என் நம்பிக்கை.

நாட்டு முன்னேற்றம் கருதும் நல்லோர் தம் தோளிற்குத் துணையாக — தூய தோழனாக இளைஞர் சமுதாயம் அணி திரண்டிட வேண்டும். அதற்கு உங்களின் தொண்டு துணை நிற்க வேண்டும் என உங்களை அன்போடு அழைக்கிறேன்.

அண்மைச் சில நாட்களுக்கு முன் ஓர் ஆங்கில நாளிதழில் இடம் பெற்றச் செய்தி ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதில் நான் மெத்தவும் மகிழ்ச்சியடைகிறேன்.

## உலகையே குக்கிராமமாகச் சுருக்கி விட்ட தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்பம் இன்று உலகையே ஒரு குக்கிராமமாகச் சுருக்கி விட்டது. தகவல் தொழில்

நுட்பத் துறையில் அமெரிக்கா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புகள் மிகுந்துள்ளன. அங்குத் தேவைப்படும் மனித ஆற்றல் இந்தியாவிலிருந்து, குறிப்பாக, நமது தமிழகத்தின் சென்னை மாநகரிலிருந்து அதிகமாகச் செல்கிறது என்னும் பெருமைப்படத்தக்க செய்தியை அந்த நாளேடு குறிப்பிட்டுள்ளது.

**1998 அக்டோபர் முதல் 1999 செப்டம்பர் வரை சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் 21,371 பேருக்கு விசா வழங்கியுள்ளது.**

**அந்த எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவாக மும்பை 9,734 விசாக்களை இக்காலக் கட்டத்தில் வழங்கியுள்ளது. புதுடெல்லி 5,460 பேருக்கும், கல்கத்தா 1,367 பேருக்கும் இத்தகைய விசாக்களை வழங்கியுள்ளன.**

**கடந்த ஆண்டிலும், முந்தைய ஆண்டிலும் சென்னை வாழ் தமிழ் இளைஞர்களே அதிகம் பேர் விசா பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்க நாட்டுக்கு விசா பெறுவோர் எண்ணிக்கையை நோக்கினால் மற்ற நகரங்களுக்கும், சென்னைக்கும் உள்ள இடைவெளி ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது'.**

— என்று குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளது அந்த நாளேடு.

தாம் பெற்ற கணிப்பொறி ஆற்றல் மூலம் நமது இளைஞர்கள் தமிழகத்திற்குத் தேடித் தந்துள்ள பெருமை இது.

இத்தகைய பெருமைகள் தமிழகத்திற்குத் தொடர்ந்திட வேண்டும் என்பதற்காகத் தான் இந்த ஆட்சியில், தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பத்துறை புதிதாகத் தொடங்கப்பட்டு, தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் பெருகிடத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கணினிப் புரட்சியில் தமிழ்ச் சமுதாயம் பின்தங்கி விடக்கூடாது.**

டைடல் பார்க், டானிடெக் போன்ற நிறுவனங்களும், சென்னையிலிருந்து செல்லும் மாமல்லபுரச் சாலை நெடுகிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில் பூங்காக்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. நிகழ்ந்து வரும் கணினிப் புரட்சியில் தமிழ்ச் சமுதாயம் பின்தங்கி விடக்கூடாது என்பதற்காக மேல்நிலைப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்கள் அனைவரும் கணினியில் ஆற்றல் பெற்று வெளிவர வேண்டும் என்பதனை ஒரு கொள்கையாக் கொண்டுள்ளது தமிழக அரசு.

இந்த அடிப்படைதான் இந்த ஆண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 112 கோடி ரூபாய் செலவில் கணினி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் ஆண்டில் எஞ்சிய அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும், இத்திட்டம் விரிவுப்படுத்தப் படவுள்ளது.

உலக அளவில் வாழும் தமிழர்கள் அனைவரும் கணினியில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயம் பயன் பெறும் எனும் உணர்வுடன் கணினியில் தமிழ் மொழி இடம் பெறச் செய்வதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**உலகத் தரத்திற்கு இணையாகத் தமிழ் விசைப் பலகை**

அதற்காகவே தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு சென்னையில் நடத்தப்பட்டு, உலகத் தரத்திற்கு இணையாகத் தமிழ் விசைப்பலகை வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ் வரி வடிவக் குறியீடு தரப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதிலும் சமுதாய இணைய மையங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இவையெல்லாம் தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் தமிழகம் மேன்மைபெறத் தமிழக அரசு எடுத்துவரும் முக்கிய நடவடிக்கைகளில் சிலவாகும்.

இத்தகையப் பணிகள் தொடரவும், இவற்றை மேலும் வளர்த்திடவும், இத்திட்டங்களின் வளர்ச்சியில் இயன்ற வழிகளில் எல்லாம் உங்களுடைய பங்கு அமைந்திடவும் வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

**காலத்தால் கருதிச் செய்யும் செயல்கள் ஞாலத்தை உங்கள் கைப்படச் செய்யும்**

இப்படி எத்திசைச் சென்றால் அத்திசையில் அறிவாற்றலை வளர்க்கலாம், நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை மேம்படச் செய்யலாம் என்று தோன்றுகின்றதோ அவ்வழிகள் அனைத்திலும் உங்கள் கவனங்கள் செல்லட்டும்.

காலத்தால் இடத்தால் கருதிச்செய்யும் செயல்கள் இந்த ஞாலத்தையும் உங்கள் கைப்படச் செய்யும் என்பதை நீவிர் மறந்திட வேண்டாம். அதே நேரத்தில், மற்றொன்றையும் இவ்வேளையில் உங்களுக்கு நினைவுப்படுத்திட விரும்புகிறேன்.

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாத வாறு.**

**கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ?**

***— கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...***



**"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவுங்கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"**

— என மகாகவி பாரதியார் கூறியதை மனம் கொள்வீர்.

எத்திசை நோக்கி — எந்த நாடு நோக்கி நீவிர் சென்றிடினும், அந்தந்தத் திசைகளில் எல்லாம் — அந்தந்த நாடுகளில் எல்லாம் உங்கள் ஆற்றலையும், அறிவையும் நிலைநாட்டிப் புகழ் ஈட்டிடுவதுடன், தாய்நாட்டிற்குத் திரும்பி வந்து உங்களுடைய உழைப்பின் பயனை உங்களைப் பெற்றெடுத்தத் தாய், தந்தையரும், வளர்த்து ஆளாக்கி வாழ வைத்தத் தமிழ் மண்ணும், தாயகமும் பெருமை கொள்ளும் வகையில் பயன்படுத்திட வேண்டும் எனும் உணர்வு உங்கள் குருதியோடு ஒன்றிட வேண்டும் என்பதனை வலியுறுத்திட விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் அறிவாயுதங்களாக வெளிக்கிளம்பும் செறிவார்ந்த என்னருமை மாணவச் செல்வங்களே!

மீண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய மொழிகளை எடுத்துரைத்து — வாழ்த்துக்களை மொழிந்து உங்களை வழியனுப்பிட விரும்புகிறேன்.

அண்ணா கூறினார்:

**"Dear Brother,**
**Go to the People.**
**Live among them.**
**Learn from them.**
**Love them.**
**Serve them.**
**Plan with them.**
**Start with, what they know.**
**Build on, what they have."**

**"அன்பு உடன்பிறப்பே,**
**மக்களிடம் செல்**
**அவர்களுடன் சேர்ந்து வாழ்**
**அவர்களிடமிருந்து அறிந்துகொள்**
**அவர்களிடம் அன்பு செலுத்து**
**அவர்களுக்குத் தொண்டு செய்**
**அவர்களுடன் திட்டமிடு**
**அவர்களுக்கு எது தெரியுமோ,**
**அதிலிருந்து தொடங்கு**
**அவர்கள் எதைக் கொண்டுள்ளார்களோ**
**அதைப் பயன்படுத்தி அவர்கள்**
**முன்னேறப் பாடுபடு"**

— இது அண்ணா கூறிய அறிவுரை.

இதையே அமெரிக்க அதிபராகத் திகழ்ந்த உட்ரோ வில்சன் என்பாரும் இப்படிக் கூறுகிறார்.

**"Nations are renewed from the bottom not from the top.... real wisdom of human life is compounded out of the experiences of ordinary men",**

**"சமுதாயச் சீரமைப்பு என்பது கீழ் மட்டத்திலிருந்து தொடங்கப்பட வேண்டுமே தவிர, மேல் மட்டத்திலிருந்து அல்ல! சாதாரண சராசரி மனிதனது எண்ணங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் எண்ணி உணர்ந்து இணைத்துச் சிந்தித்துச் செயலாற்றிட வேண்டும். அதுதான் மனிதத் தன்மை மேம்பட்ட அறிவு ஆற்றல் என்பது"**

— என்று உட்ரோ வில்சனும் கூறினார்.

எனவே சாமானியர்களது எண்ணங்களின் அடிப்படையில் எழும் மனிதத் தன்மையை ஆற்றலை, அறிவை உங்களது ஆடைகளாய் அணிமணிகளாய்க் கொள்வீர்களாக!

**"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்க முடையா னுழை"**

**"உறுதியான ஊக்கம் உடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, உயர்வு அவர்களிடம் போய்ச்சேரும்"**

— என அய்யன் திருவள்ளுவன் உரைத்த மாணிக்க மொழிகளை மனம் கொள்வீர். இவை உமக்கு ஏணிப்படிகளாய் அமைந்து ஏற்றம் தரல் திண்ணம். ஊக்கமுடன் செயல்படுவீர்.

**"இளந்தமிழா, கண்விழிப்பாய்!**
**இறந்தொழிந்த**
**பண்டைநலம் புதுப்புலமை**
**பழம்பெருமை அனைத்தையுந்நீ**
**படைப்பாய்! இந்நாள்**
**தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்**
**துறைதோறும் துறைதோறும்**
**துடித்தெ ழுந்தே!"**

— எனப் புரட்சிக் கவிஞர் புகன்ற மொழிகளைப் பொன்போல் போற்றிடுவீர்!

ஆற்றும் பணிகள் அத்தனையிலும் நீவிர் குவித்திடும் வெற்றிகள் தாய்த் தமிழகத்திற்கும் — இந்தியத் திருநாட்டிற்கும் இணையற்ற பெருமைகளாய் இலங்கிடும்! அவை வரும் தலைமுறைகளுக்கு வழிகாட்டும் வரலாறாய் விளங்கிடும். இது உறுதி.

வாழ்க நீவிர்.
வெல்க நீவிர்.

★

# விளக்குகள்



□ கவிஞர் அப்துல் ரகுமான்

***விளக்குகளே! விழிகளின் விழிகளே!***

நீங்கள் இரவின் புன்னகைகளா?
இல்லை, கண்ணீர்த் துளிகளா?

நீங்கள் இரவின் நினைவுகளா?
இல்லை, கனவுகளா?

நீங்கள் இரவின் ஆபரணங்களா?
இல்லை, ரணங்களா?

நீங்கள் சூரியனின் எச்சில் துளிகளா?
இல்லை, நிலவின் வியர்வைத் துளிகளா?

நீங்கள் இருள் மலரை மொய்க்கும்
மஞ்சள் வண்டுகளா?
இல்லை, பறக்காத மின்மினிகளா?

நீங்கள் வெறி தணிந்த சாதுக்களா?
இல்லை, இருட்டை மதம் மாற்றச்
சுடர் நாவால் உபதேசிக்கும் பாதிரிகளா?

நட்சத்திரங்களால்
கடவுள் எழுதும் பதில் கடிதத்திற்கு
மனிதன் எழுதும் பதில் கடிதத்தின்
எழுத்துக்களா நீங்கள்?

கறுப்புச் சந்தையில் மட்டும்
செலாவணி ஆகும் நாணயங்களோ நீங்கள்

விட்டில்கள் தம் உயிரையே
பரிசமாகத் தந்து மணம் முடிக்கும் அளவுக்கு
உங்கள் காதலில் அப்படி என்ன பேரின்பம்?

எரிவதிலும் சுகமுண்டோ?

காதல் பள்ளியறையில்
பாடங்கள் கண்களால் படிக்கப்படுவதில்லை
அதனால்தான் அங்கே
உங்களை அணைத்துவிடுகிறார்கள்



ராத்திரி ரகசியங்களுக்கு
நீங்கள் சாட்சிகளாக இருந்தாலும்
உங்கள் நாவோ பேசுவதில்லை
அப்படி இருந்தும்
விடியலில் உங்கள் நாவு ஏன்
துண்டிக்கப்படுகிறது?

திருடர்கள் இருட்டில் திருடுகிறார்கள்
நீங்களோ இருட்டையே திருடுகிறீர்கள்

உங்கள் சுடர்
கும்பிடும் கை போல் இருப்பதால்தானோ
ஆலயங்களில் உங்களுக்கு ஆஸ்தானம்?

ஆயிரம் ரூபங்கள் உங்களுக்கு
ஆனாலும் நீங்கள் பேசும் உண்மை
ஒன்றுதான்

இருட்டு என்ற ராட்சஸ எதிரியை
அஞ்சாமல் எதிர்த்துப் போராடும்
சின்னஞ்சிறு வீரர்களே!
உங்கள் போராட்ட குணத்தை
எங்களுக்கும் கற்றுக்கொடுங்கள்

எரியவும் எரிக்கவும் எங்களுக்குத் தெரியும்
ஆனால் உங்களைப் போல்
ஒளி கொடுக்க மட்டும் தெரியவில்லையே!

**– சாகித்திய அகடமி விருது பெற்ற**
**'ஆலாபனை' நூலிலிருந்து**

**வெளியீடு : கவிக்கோ பதிப்பகம்**
**20, முதல் ஸீவார்டு சாலை சென்னை – 41.**





# தந்தையோடு ஒரு சொல்

**சிற்பி**



காவல் தெய்வம்
கன்னியா குமரி
கண் பார்த்திருக்கும்
தென் திசைக் கடலில்

தாய் நிலம் நோக்கி
நிற்கும் எம் தந்தையே...

உன்னைச் சுற்றிலும்
ஓயாது ஒழியாது
ஆர்ப்பரிக்கின்றது கடல்
நீ - ஆழம்காண விரும்பிய
மானிட வாழ்க்கை போல்...

ஒன்றுடன் ஒன்றாய்
ஒன்றிக் கலந்து
கை கோத்துக் கொள்கின்றன
முப்பெரும் கடல்கள்.
ஒப்பரும் உன் பேரறிவு ஆய்ந்த
அறம் பொருள் இன்பங்கள் போல்...

வைகறை ஒவ்வொன்றிலும்
முதல் கிரணங்கள்
உனக்கு வைர முடி சூட்டுகின்றன
வெளிச்சத்தின் தூதுவன்
நீ என்பதால்.

கடைசிக் கிரணங்களுக்கும்
நீயே விடை கொடுத்தனுப்புகிறாய்
இருண்ட கண்டங்களில்
தேனொளி தூவ...
உன் குறள் ஞாயிறுகளின்
திருப்பணி அதுதானே!

நிலவும் நட்சத்திரங்களும்
கனவுகள் மின்னும்
நெடிய இரவுகளில்
திசைகளைத் துழாவும்
உன் விழிகள்
சிந்தனையில் மூழ்கி விடுகின்றன
புதிய குறள் ஒன்று
புனைவது போல...

ஆடும் கடல் நடுவே
அசைவற்று நிற்கும் உன் கம்பீரம்
'செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்'
என்ற வரிகளை நினைப்பூட்டுகின்றது
எனினும்





குறுகிய சொற்களுக்குள்
கோடிப்பொன் விதைத்தபடி
உன் பாதக் குறடுகள்
ஒவ்வொரு தலைமுறையின்
தாழ்வாரங்களிலும்
நடைபோடும் ஓசை
கேட்டுக் கொண்டே இருக்கிறது

சங்குகளும் கிளிஞ்சல்களும்
புதைந்த மணல் வெளியில் நின்று
உன் 'பால்மடி' நூலெனப்
பரந்து கிடக்கும் கடலையும்
எழுதிய குறட் சுவடி போல்
கலைந்து விரியும் அலைகளையும்
அந்தி மயக்கத்தில்
கண்டு நிற்கையில்
வானமும் பூமியும்
விளிம்புகள் தேய்ந்து கரைந்திருந்தன

உன்னை
உலகத்துக்குத் தந்து விட்டோம்
என்ற பாரதி வாசகம்
எனக்குள் உறைத்தது

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'
என்று ஞாபகப்படுத்தும்
உன் உயரத்தை
விம்மிதத்தோடு பார்த்துப் பார்த்து
வியந்து நிற்கையில்
ஓ! விடியல் வந்து விட்டது!

தமிழ் பூமியைத் தாய்மை விழிகளால்
வருடும் உன்னோடு
வாழ்க்கையின் அர்த்தங்கள் பேச
அடங்காத ஆசையை ஒத்தி வைக்கிறேன்

இது
விழாக்களின் வேளை
இன்னொரு நாள் வருகிறேன்.



# நோய் தடுப்பு கிங் மருந்து நிலைய நூற்றாண்டு விழா

என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன் ஒரு வித்தியாசமானக் கருத்தை விளக்கிட விரும்புகிறேன். இன்று நடைபெறும் விழா ''கிங் இன்ஸ்டிட்யூட் ஆப் பிரிவென்டிவ் மெடிசின்'' என்ற நிறுவனத்தின் நூற்றாண்டு விழா. ஆங்கிலத்தில் சொல்லும் போது இது பொருத்தமாக உள்ளது. இதனைத் தமிழிலே எப்படி மொழி பெயர்த்து அழைப்பிதழிலேயும், பத்திரிகைகளிலும் திறப்பு விழா பலகையிலும் வெளியிட்டிருக்கின்றார்கள் என்றால்- கிங் நோய் தடுப்பு மருந்து நிலைய நூற்றாண்டு விழா என்று. ''கிங் நோய்'' என்று எந்தவிதமான நோயும் கிடையாது. எய்ட்ஸ் நோய் தடுப்பு என்பதைப் போல கிங் நோய் தடுப்பு மருந்து நிலையம் என்ற பெயரை முதலில் நான் ஆட்சேபிக்கிறேன்.

சில நேரங்களில் மொழி பெயர்ப்பு இப்படிப்பட்ட ஆபத்தான நிலைகளை உருவாக்கி விடும். ஒரு வேடிக்கையான துணுக்குப் படித்திருக்கிறேன். பெரும் மழை பொழிந்தது. மறுநாள் தமிழ் பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆங்கிலத்திலே அந்தச் செய்தியை அனுப்பியவர் ஒரு ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் - நூறு ஸ்லீப்பர்ஸ் வர்ஷ்டு அவுட் - என்று ஆங்கிலத்திலே செய்தி அனுப்பினார். அதை தமிழிலே மொழி பெயர்த்தவர், ரெயில் தண்டவாளத்திலே தூங்கிக் கொண்டிருந்த நூறு பேர் மழை வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டு இறந்து விட்டார்கள் என்று செய்தி வெளியிட்டு விட்டார்.

ஸ்லீப்பர்ஸ் என்று செய்தி அனுப்பியவர் குறிப்பிட்டது, தண்டவாளத்திற்கு அடியிலே இருக்கின்ற குறுக்குச் சட்டங்களேயாகும். அந்தச் சட்டங்கள் தான் மழை வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டது. ஆனால் ஸ்லீப்பர்ஸ் என்பதற்குத் 'தூங்கிக் கொண்டிருந்தவர்கள்' என்று பொருள் எடுத்துக் கொண்டு செய்தி வெளியாகி விட்டது. அதைப் போல கிங் இன்ஸ்டியூட்டை 'கிங் நோய் தடுப்பு' என்றால் ''கிங் நோய்'' என்பது ஒரு நோயாகவும், அதைத் தடுக்கின்ற நிலையம் இது என்றும் வித்தியாசமான பொருள் வந்து விடும் என்பதற்காக நான் சொல்கிறேன்.

**நோய் தடுப்பு கிங் மருந்து நிலையம் என்று பெயர் வைக்க வேண்டும்**

எனவே தயவு செய்து இனிமேலாவது இந்த நிலையத்தை 'நோய் தடுப்பு கிங் மருந்து நிலையம்' - என்று பெயர் வைக்க வேண்டும். மருத்துவ நிலையங்களிலே கிங் ஆக இருக்கிறது. எதிலே என்றால் நோயைத் தடுப்பதில் கிங் ஆக இருக்கிறது என்ற அளவில் இந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். ஆங்கிலத்தில் அப்படியே இருக்கலாம். அதிலே பொருள் கெடவில்லை.

கிங் என்பவரால் நூறு ஆண்டுகளுக்கு முன்பு இதே வளாகத்திலே ஆரம்பிக்கப்பட்ட சிறிய கட்டடம் இங்கே இருக்கின்றது. அதனுடைய பெரும் வளர்ச்சிதான் இன்றைய தினம் நாம் காணுகின்ற இந்த நிறுவனமாகும். தொற்று நோய்கள், பயங்கரமான நோய்கள் - இவைகளையெல்லாம் தீர்க்கவே முடியாது, இதெல்லாம் கடவுள் இட்ட கட்டளை, என்று மக்கள் கருதிக் கொண்டிருந்த காலம் ஒன்று உண்டு. ஹார்ட் அட்டாக் [இதய நோய்] வந்தால் கூட இருதயம் வெடித்து இறந்து விட்டால் கூட, இரவு காட்டுப் பகுதியிலே போய் கொண்டிருந்தான், அங்கே மதுரை வீரனோ, முனியனோ அடித்து விட்டான். அதனால் ரத்தம் கக்கிச் செத்து விட்டான் என்று எண்ணிக் கொண்டிருந்த காலம் கிராமப் பகுதிகளிலே ஒன்று இருந்தது.

**எந்த நோய் என்று கண்டுபிடிக்கின்ற விஞ்ஞான காலம்**

இன்றைக்கு எந்த முனியனும் பேயும் பிசாசும் பூதமும் அடிக்கவில்லை, இது இதய நோய் என்று கண்டுபிடிக்கின்ற விஞ்ஞான காலம் முகிழ்ந்திருக்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம்.

அதைப் போலவே காலரா என்றால் காளியம்மன், பெரியம்மை என்றால் மாரியம்மன் என்பார்கள். இன்னும் சொல்லப் போனால் கோவை பகுதியிலே பிளேக் என்ற பயங்கரமான நோய் ஒன்றுண்டு. பிளேக் மாரியம்மன் என்று இப்போதும் வட கோவை காந்தி மைதானத்தில் ஒரு கோவில் இருக்கிறது.

1945-ஆம் ஆண்டு நான் கோவையிலே சிங்காநல்லூரிலே குடியிருந்தேன். என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதே கோவையில் சிங்காநல்லூருக்குப் பக்கத்தில் இராமனாதபுரம் என்கிற ஒரு சிறிய பகுதியிலே வாழ்ந்து கொண்டிருந்தார். அப்போது பிளேக் நோய் சிங்காநல்லூரிலே அதிகமாகப் பரவியது.

காலையிலே எழுந்து வெளியே சென்றால் கோயில்களுக்குக் காவடிகள் செல்வதைப் போல, பாடைகள் சென்று கொண்டே இருக்கும். அந்த அளவிற்கு பிளேக் நோயினால் மக்கள் இறந்து கொண்டே இருந்தார்கள். அந்த பிளேக் கிருமி மக்களுடைய முழங்காலுக்கு கீழே தான் அவர்களைத் தாக்கும். எலியிலிருந்து உற்பத்தியாகின்ற கிருமி, முதலில் எலிகளுக்கு அந்த நோய் வந்து, எலிகள் இறந்து போய், இறந்த எலிகளின் உடலிலிருந்து இலட்சக்கணக்கான அளவிற்கு கிருமிகள் உற்பத்தியாகி, அந்தக் கிருமிகள் கால் உயரத்திற்கே பறக்கக் கூடிய சக்தி பெற்றவை என்பதால் மனிதர்களைக் கால்களிலே தாக்கும். பிளேக் உருவாகும். அந்த நோய் வந்த மனிதன் ஒரு நாள்

*நோய் தடுப்பு கிங் மருத்துவ நிலைய நூற்றாண்டு விழாவில் 27-2-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

அல்லது ஒன்றரை நாளுக்கு மேல் உயிரோடு இருக்க மாட்டான்.

## பிளேக் நோய் இன்றைக்கு அறவே கிடையாது

இப்படிக் கொள்ளைநோயாக பிளேக் நோய் கோவையிலே வந்தபோது தான், சிங்காநல்லூரிலே இருந்த நான் எம்.ஜி.ஆருடைய வலியுறுத்தலின் பேரில் அவருடைய வீட்டிலே சென்று இரண்டு மூன்று மாத காலம் இருவரும் ஒன்றாக வாழக்கூடியச் சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது தான் அவரை நான் கட்சி மாற்றினேன். பிளேக் நோய் அந்த வகையிலே அன்றைக்குப் பயன்பட்டது. அதுவரை கதராடையோடும் உத்ராட்ச மாலையோடும் இருந்தவர் எம்.ஜி.ஆர். அந்த எங்களுடைய சந்திப்பிற்குப் பிறகு தான் கட்சி மாறினார். இப்போது அவர் இல்லை என்பதற்காகச் சொல்லுகின்ற செய்தி அல்ல இது. அவருடைய சுயச் சரித்திரத்தில் அவரே இதைச் சொல்லியிருக்கிறார். அது பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. அந்த பிளேக் நோய் இன்றைக்கு அறவே கிடையாது.

காளியம்மன் கோவில் எல்லா ஊர்களிலும் இருக்கிறது. ஆனால் காலரா நோய் இப்போது கிடையாது. காளியம்மன் ஒரு கரண்டி எண்ணெய் கொடுத்துவிட்டான், அதனால் காலரா வந்தது என்று சொல்லுகின்ற காலம் ஒன்று இருந்ததை நாம் மறந்துவிட முடியாது. அதைப்போல பெரியம்மை வார்த்தால், பிழைத்தவர்கள் மிக மிகக் குறைவு. ஆனால் இன்றைக்கு பெரிய அம்மை என்ற நோயே இல்லாமல் அதை அகற்றியே விட்டோம்.

அப்படிப்பட்ட சாதனையை மருத்துவ உலகம், குறிப்பாக விஞ்ஞான உலகம், அறிவு உலகம் இன்றைக்குச் செய்து முடித்திருக்கின்ற காட்சியை, இன்றைக்கு நாம் காணுகிறோம். அதன் காரணமாகத் தொத்து நோயால், கொள்ளை நோயால் கொள்ளை கொள்ளையாக ஆயிரம், இரண்டாயிரம் பேர் சாகின்ற நிலை இப்போது மாறியிருக்கின்றது.

## விழா மலரில் எமனுக்கு எமன் கதை

இன்றைக்கு வெளியிடப்பட்ட மலரை மேடையிலே இருந்தவாறு படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு சிறு கதை எழுதியிருக்கிறார்கள். டாக்டர் நளினிஹரி என்ற பெண் டாக்டர் அதை எழுதியிருக்கிறார். 'எமனுக்கு எமன்'' என்ற தலைப்பிலே அது எழுதப்பட்டுள்ளது.

நூற்றாண்டு விழா நடக்கின்ற நேரத்திலே எமன் இங்கே வந்து இந்த வளாகத்திலே இறங்குகிறான். என்ன நடக்கிறது என்று விசாரிக்கிறான். நூற்றாண்டு விழா நடக்கிறது என்கிறார்கள். எமன் வந்த விவகாரம் என்னவென்றால் சில பேர் சாகாமல் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பிடிக்க வேண்டுமென்று தான் பாசக்கயிறோடு எருமை வாகனத்திலே ஏறி வந்திருக்கிறான். நான் இன்னின்னாரை குறித்துக் கொடுத்திருந்தேனே, அவர்கள் எல்லாம் என்ன ஆனார்கள்? நாய் கடிக்கப்பட்ட நாகலிங்கம் என்ன ஆனான்? பாம்பு கடித்த பரமசிவம் என்ன ஆனான்? காலராவால் தாக்கப்பட்ட காமாட்சி என்னவானாள்? என்று கேட்கிறான்.

இப்படி அடுக்குச் சொற்களையெல்லாம் பார்க்கும்போது எங்கள் ஆள் தான் யாரோ எழுதியதைப் போல் இருக்கிறது.




அவன் அவ்வாறு கேட்டதற்கு அவர்கள் எல்லாம் தப்பித்துக் கொண்டார்கள். கிங் இன்ஸ்டிட்யூட்டிலே எல்லாவற்றுக்கும் மருந்து கண்டுபிடித்து விட்டார்கள், அதனால் தப்பித்துக் கொண்டார்கள் என்று பதில் சொல்கிறார்கள். திடீரென்று எருமை மாட்டைக் காணோம். எங்கே என்று எமன் கேட்கிறான். அது சாலையில் யார் மீதோ முட்டி விட்டது. அதனால் அவனுக்குக் காயம் ஏற்பட்டுவிட்டது என்கிறார்கள். உடனே எமன், அப்படியா சப்பாஷ், மாடு தாக்கியவனாவது சாவான் அல்லவா என்கிறான். அவனும் சாகமாட்டான். அவனுக்கு கிங் இன்ஸ்டிட்யூட்டிலே கண்டுபிடித்த ''டெட்டனஸ்'' ஊசி போட்டு விட்டார்கள் என்று பதில் கூறுகிறார்கள். உடனே எமனுக்குக் கோபம் வந்து, மேல் உலகத்திற்குச் சென்று சபையைக் கூட்டச் சொல்லித் தேவர்களையெல்லாம் வைத்துக் கொண்டு தான் ராஜினாமா செய்வதாகக் கூறுகிறான். எனக்கு இப்போது வேலையே இல்லை. கிங் இன்ஸ்டிட்யூட்டில் எல்லாவற்றையும் தடுத்து விட்டார்கள் என்று கூறி எமன் செய்த ராஜினாமாவைப் பற்றி, ஒரு அழகான கதை இந்த மலரிலே வெளி வந்திருக்கின்றது.

## கொள்ளை நோய்களைத் தடுக்கக்கூடிய நல்ல சூழ்நிலை

இது ஒன்றும் வேடிக்கையல்ல. உண்மையிலேயே இப்படிப்பட்ட பயங்கரக் கொள்ளை நோய்களைத் தடுக்கக் கூடிய அளவிற்கு நல்ல சூழ்நிலை இன்றைக்கு அமைந்திருக்கின்றது. இந்த ஆராய்ச்சியிலே ஈடுபடுகிற வர்கள் எல்லாம் என்னுடைய வாழ்த்துக்கு உரியவர்கள், பாராட்டுக்கு உரியவர்கள். இங்கே நல்வாழ்வுத் துறை அமைச்சரும், மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலுவும், மாநகராட்சி மன்றத்தின் மேயரும் பேசும் போது குறிப்பிட்டார்கள். 'வருமுன் காப்போம்' என்பதுதான் நம்முடைய குறிக்கோள். நம்முடைய இலட்சியம். அதற்காக இந்த அரசினால் தொடங்கப்பட்டுள்ள ஒரு திட்டம், மக்களை நோக்கி மருத்துவ முகாம்கள் செல்வது இப்போது நகர்ப்புறங்களிலே, மாநகர் பகுதிகளிலே மக்களுக்கு நோய் வந்தாலோ அல்லது வருவதற்கு முன்போ தடுத்துக் கொள்ள வேண்டுமென்று அக்கறை இருக்கிறது. ஆனால் கிராமப்புற மக்களுக்கு அந்த அக்கறை அவ்வளவாக இருப்பதில்லை.





கிராமப் பகுதிகளிலே கூட அங்குள்ள ஆண்கள் தப்பித் தவறி நகர்ப்புறங்களுக்குச் செல்லும்போது டாக்டரைப் பார்த்து விட்டுச் செல்வோமே என்று செல்கிறார்கள். ஆனால் பெண்கள் அதிகமாக நகர்ப்புறங்களுக்கு வராமல் கிராமங்களிலேயே இருக்கின்ற காரணத்தால் அவர்கள் டாக்டர்களைப் பார்ப்பதே அரிது. அதையெல்லாம் யோசித்துத்தான் ஒரு பெரிய திட்டத்தை இந்த அரசு ஆரம்பித்து 29.11.1999 இல் அதனைத் தொடங்கி, 'வருமுன் காப்போம்' என்ற அந்தத் திட்டத்தின்படி இந்த ஓராண்டிற்கு மாத்திரம் கிட்டத்தட்ட 8,400 முகாம்கள் நடத்துவதாக இருக்கிறோம். இதில் 25.2.2000 அன்று வரை 1,070 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

## மக்களுக்குத் தோழனாக உள்ள கால்நடைகளுக்குப் பாதுகாப்புத் திட்டம்

அந்த முகாம்களுக்கு எல்லாச் சாதனங்களோடு எல்லா துறை நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்களும் சென்று கிராமங்களிலேயே முகாமிட்டு அங்கே வருகின்ற ஆயிரக்கணக்கான கிராமப்புற மக்களைச் சந்தித்து அவர்களுக்குத் தேவையான யோசனைகளைச் சொல் கிறார்கள். மருந்துகளைத் தருகிறார்கள். சிகிச்சைகளைச் செய்கிறார்கள்.

இதுவரை அப்படி நடத்தப்பட்ட முகாம்கள் 1,070. அவைகளிலே பரிசோதிக்கப்பட்ட நபர்கள் 12 இலட்சம் பேர்.

இவர்களில் சிலருக்கு நோய் முற்றிப்போய் இருந்தால், அவர்களுக்குத் தொடர்சிகிச்சை செய்யப்பப்பட வேண்டும் என்பதற்காக நகர்ப்புறங்களுக்குப் பெரிய மருத்துவ மனைகளுக்குப் பரிந்துரையோடு அனுப்பி வைக்கப் பட்டவர்கள் மாத்திரம் 82,912 பேர்.

இந்த முகாம்களிலே நோயாளிகளுக்கு இதுவரை இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு 49 இலட்சத்து 8 ஆயிரத்து 930 ரூபாய்.

மக்களுக்கு மாத்திரமல்ல, மக்களுக்குத் தோழனாகத் துணையாக இருக்கின்ற கால்நடைகளுக்குக் கூட கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை விவசாயிகளுக்கு உதவியாக ஒரு திட்டத்தை ஜனவரி 18-ஆம் தேதி திருக்கழுக்குன்றத்திலே தொடங்கி, இதுவரை 270 முகாம்கள் நடைபெற்றுள்ளன.

இந்த 270 முகாம்களில் பயன் பெற்ற கால்நடைகள், 2,42,433 மாடுகள்; 42,655 எருமைகள்; 2,88,595 செம்மறியாடுகள்; 1,67,552 வெள்ளாடுகள்; 1,58,379 கோழிகள்; 4,949 இதர வகைக் கால்நடைகள்- ஆக மொத்தம் 9 இலட்சத்து 4 ஆயிரத்து 563 கால்நடைகள் 23.2.2000 வரையிலே பயன்பெற்றிருக்கின்றன.

மக்களுக்காக மாத்திரமல்லாமல், மக்களுக்குத் துணையாக இருக்கின்ற கால்நடைகளுக்காகவும் பாடுபடுகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி தன்னுடையச் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கின்றது, விரிவாக்கிக் கொண்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்லி இவைகளுக்கெல்லாம் மிக மிக முக்கியம், அது ஆடாக இருந்தாலும், மாடாக இருந்தாலும், மனிதனாக இருந்தாலும் நோய் வருவதற்கு முன் தடுப்பதுதான் முக்கியம். அப்படித் தடுப்பதற்கான ஒரு நிலையம் மருந்துகளைத் தயாரிக்கின்ற ஒரு நிலையம் காலஞ்சென்ற, என்றைக்கும் மறைந்தும் மறையாமல் இருக்கின்ற புகழ் வாய்ந்த கிங் அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள இந்த மருந்து நிலையத்தினுடைய நூற்றாண்டு விழாவிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதிலே பெரு மகிழ்ச்சி அடைந்து இந்த நிலையம் மேலும் மேலும் புகழ் பெற்று வாழ்க வாழ்க என்று வாழ்த்தி என் உரையை நிறைவு செய்கிறேன்.

# இளநீர் ஓர் இனிய மருந்து

*"கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே"*

– என்று வள்ளலார் பாடியுள்ளார். எல்லோரும் விரும்பிப் பருகும் இளநீர் பல பிணிகளைத் தீர்க்கும் வல்லமை பொருந்தியது. கோடைகாலத்தில் அதிகமாக குளிர்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து, இளநீர் அருந்துவது உடலுக்கு நல்லது. இரத்தத்தைச் சுத்தமாக்கும் நல்லவிதமான இரசாயனப் பொருட்கள் நிறைய இருக்கின்றன. அதற்காக இளநீரை அதிகமாகவும் அருந்தக் கூடாது.

அவ்விதம் அருந்தினால் உடலில் இருக்கும் நீர் அதிகமாக வெளியேற்றப்பட்டு உடல் பலவீனமாகிவிட வாய்ப்புகள் உண்டு. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு தானே?

இளநீர் மனித இனத்திற்கு இயற்கையின் விலைமதிப்பற்ற வரப்பிரசாதம். தாகத்தைத் தணிப்பது மட்டுமல்லாமல், மிக எளிதில் ஜீரணமாகிறது. ஜீரண உறுப்புகளை வேகப்படுத்தி, ஆகாரம் ஜீரண மாவதைச் சுலபமாக்குகிறது.

தீரும் பிணிகள்

உடல் சூடு, நீர்ச் சூடு, சிறுநீர், நீர்க் கடுப்பு, நீரிழிவு, ஆஸ்துமா, காமாலை, சொரி சிறங்கு, அம்மை போன்ற பிணிகள் மற்றும் காலரா, வாந்தி, பித்த வாத கப சம்பந்தமான பிணிகள், மூலநோய், டைபாய்டு, பேதி, இரணம், நச்சுத்தன்மை, பருவு, கரும்புள்ளி, தோல்நோய், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு, ஹிஸ்டீரியா போன்ற பிணி, நரம்பு சம்பந்தமான பிணிகள் மற்றும் பல.

## பயன் முறை

எக்ஸிமா தோல் நிறமாற்றம், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு

ஒரு கையளவு பச்சரிசியை எடுத்துப் புதிய இளநீரை வாங்கிச் சீவி அந்த இளநீரைக் காயிலிருந்து வெளியேற்றாமல் அதில் போட்டு ஊறவைக்கவும். நன்கு ஊறி, புளித்த வாசனை வந்த பிறகு எடுத்து தோல் நிறமாற்றம், அரிப்பு, கைகள், பாதங்களில் ஏற்படும் வெடிப்பு இவைகள்மேல் தொடர்ந்து பூசி வந்தால், நாளடைவில் வியக்கத்தக்க விதத்தில் நலமாகும்.

சொட்டுச் சொட்டாக நீர் போதல்...

இளநீர் வாங்கி, சீவி எடுத்து அதில் உள்ள இளநீரை ஒரு டம்ளரில் ஊற்றி ஆரஞ்சு ஜூஸ் அதில் கலந்து அருந்திவரும் பட்சம் நாளடைவில் சொட்டு, சொட்டாகப் போகும் சிறுநீர் நீங்கி தாராளமாக வரும்.

அம்மை நோயினால் ஏற்படும் தழும்புகள் மறைய...

மூன்று இளநீர் வாங்கி சீவி எடுத்து, அதற்குண்டான இளநீர் எடுத்துத் தடவினால் நாளடைவில அந்தத் தழும்புகள் படிப்படியாக மறையும். இது அனுபவ முறை.

ஹிஸ்டீரியா என்ற பிணிக்கு...

தேவையான வாழைத்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட நீரை, இளநீரோடு கலந்து அருந்தி வரும்பட்சம் நாளடைவில் ஹிஸ்டீரியா போன்ற நரம்பு சம்பந்தமான பிணிகள் நீங்கி நலம் பெறும்.

உடலின் தோலின் மீது கொப்புளம், சொரி, சிறங்கு மற்றும் தோலில் காணும் வறட்சி, முகத்தில் காணும் கருக்கங்கள், பரு, கரும்புள்ளிகள் நீங்க எளிய முறை...

தேவையான இளநீர்களை வாங்கி அருந்தி வந்தாலும், தினசரி முகத்தை இளநீரில் கழுவி வந்தாலும், பருவு கரும்புள்ளிகள் படிப்படியாக நீங்கி, மாசு மருவற்ற தோற்றத்தை அடைய இதுபெரும் சக்தியாக அமைகிறது.

குழந்தைகளுக்கு...

இந்த இளநீரில் சில அமினோ அமிலங்கள், அலனைன், ஆர்ஜுனைன், சிஸ்டைன், சிரைன் – பசும்பாலில் உள்ளதைவிட அதிகமாக இருப்பதால், குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றதாக அமைகிறது.

நீரிழிவு நோய் பிடிக்கப்பட்டவர்களுக்கும், ஜீரண உறுப்புக் கோளாறுகளால் வேதனைப்படும் குழந்தைகளுக்கும் இவை குணமாக...

தேவையான தேங்காய் நீக்கிய இளநீர்களை வாங்கி தினசரி குழந்தைகள் அருந்தி வந்தால், அவர்களது தாகத்தை எளிதில் தீர்க்கும். ஜீரண உறுப்புகளும் நன்கு இயங்கும் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கும் சிறந்த பானமாக இது அமைகிறது.

வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியினாலும், காலராவினாலும் அவதிப்படுகிறவர்கள் குணமாக...

உடலில் நீர் வற்றிய நிலையில் குளுகோஸ் கொடுப்பதற்குப் பதிலாக இந்த இளநீரை அருந்தக் கொடுக்கலாம். நாளடைவில் மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

மூலநோய், பிராங்கைட்டீஸ், மலச்சிக்கல்

இளநீரோடு ஒரு மேஜைக் கரண்டி தேனை ஊற்றி அருந்திவந்தால் நாளடைவில் நோய்கள் நீங்கப் பலனை எதிர்பார்க்கலாம்.

மஞ்சட் காமாலைக்கு

சிறுநீர்க் காய்களில் இரத்த ஓட்டத்தை அதிகரித்து தாதுக்களில் ஏற்படும் விஷத் தன்மையை நீக்குகிறது. எனவே, மஞ்சட்காமாலைக்கு இளநீர் ஓர் வரப்பிரசாதம்.





உடலில் சூடு, குடலில் இரணம், வாந்தி இவைகள் நீங்க...

தேவையான இளநீர் வாங்கி அருந்துவதினால், உடலில் காணும் சூடு, குடலில் காணும் இரணம், வாந்தி இவைகள் நாளடைவில் நீங்கி நலம்பெறும்.

ஆஸ்துமா, டைபாயிட், சிறுநீர்க் கோளாறு, பேதி...

இளநீரைத் தொடர்ந்து அருந்துவது சாலச்சிறந்தது ஆகும். மேலும் பெரிய இரண சிகிச்சைக்குப் பிறகுகூட இளநீர் அருந்திவரும் பட்சம் இரணம் சீக்கிரமாகக் குணமாகிவிடும்.

உணவுக்கு முன் இளநீர் அருந்த வாதநோய் போகும். மாலையில் அருந்த மெய்யிற்பித்தம் போகும். காலையில் அருந்தக் கபம் அறும்.

உணவு உண்ட பின்பு இளநீர் அரை தம்ளர் உட்கொள்ள வாதம், பித்தம், சிலேத்துமம், கண்ணோய், பாண்டு போன்றவை தீரும் மற்றும் மலம் கழியும், நோய் அணுகாது.

இழந்த ஆரோக்கியத்தை மீண்டும் பெற...

இளநீர் மிக முக்கியமான ஒன்று. தேங்காயை எளிதில் ஜீரணிக்க முடியாத ஒருவருக்கு, இளநீர் ஒரு நல்ல பானமாகும்.

நிறைமாத கர்ப்பிணியாக உள்ள சிலருக்கு நீர் இறங்குவதற்கு உள்ள சிரமத்தைப் போக்க, தேவையான வெங்காயத்தைப் பொரித்துப் பொடி செய்து ஒரு வேளைக்கு 2 கிராம் அளவு எடுத்து ஒரு இளநீரில் கலந்து கலக்கிக் கொடுக்க 15 நிமிடங்களில் நீர் தாராளமாக இறங்கி உடல் நிலை நலமாகும்.

சிறுசீர் எளிதாக வெளிவருவதற்கு...

கதலி வாழைப்பழத்தை இளநீரில் ஊறவைத்துச் சாப்பிடுவது, சிறுநீர் எளிதாக வெளியேற்ற உதவும்.

கண்களுக்கு...

போதிய அளவு இளநீர் அருந்துவதினால், நாளடைவில் கண்களும் மிகுந்த பிரகாசத்தை பெறமுடியும்.

ஆரஞ்சு நிற இளநீர் - ஏலக்காய்

குள்ளமான தென்னை மரத்தில் காய்க்கும் ஆரஞ்சு நிறமுள்ள இளநீர்க் காயை எடுத்து, அப்படியே நீரில் போட்டு, அது சிகப்பு நிறமாகும்வரை கொதிக்க வைத்து – பிறகு, இக்காயிலிருந்து இளநீரை எடுத்து சிறிது ஏலக்காய் பொடி சேர்த்துக் கலக்கி அருந்தி வரும்பட்சம் சிறு நீரும் மலமும் எளிதாக வெளியேறும்.

சூட்டைத் தணிக்க...

உடல், அளவுக்கு அதிகமாக சூடாகிவிட்டால், தேவையான இளநீரை எடுத்து அதில் சந்தனம் சேர்த்து அருந்த சூட்டைத் தணிக்கலாம்.

மது, புகையிலை ஆகியவைகளால் ஏற்படும் தீமையினால், இந்தப் பிணிகளை அகற்ற, காலையில் பல் துலக்கிய பிறகு ஒரு வாரம் தொடர்ந்து இளநீரை அருந்தி வர மேற்கண்டவையினால் ஏற்படும் தீமைகள் விலகும்.

இருதய நோய் உள்ளவர்கள் இளநீர் அருந்தக்கூடாது. மற்றும் இளநீர் அருந்திவிட்டு இளநீரில் உள்ள வழுக்கையாக இருக்கும் தேங்காயையும் சுரண்டி சாப்பிடக்கூடாது.

காரணம்? இதில் கொலஸ்டிரால் என்ற கொழுப்புச் சத்து அதிகம் இருக்கிறது. எனவே, இளநீர் அருந்திவிட்டு அவஸ்தைப் படுவதைவிட அருந்தாமலேயே இருந்துவிடலாம்.

நிக்கோபார் தீவில் இருக்கும் பழங்குடியினர் நோயுற்ற போதும், நோயிலிருந்து நலமாகி இருக்கும் போதுகூட அவர்கள் அதிகமான இளநீரை அருந்துகின்றனர்.

உலகப் போரின்போது கூட, போர் வீரர்களுக்கு, இளநீர் ஊசி மூலமாக உடலில் செலுத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாக அறிக்கைகள் உள்ளன.

ஆயுர்வேத மருத்துவத்தில் கூட இளநீர் நீர்க்குழம்பு என்னும் லோஷன், பல மூலிகைகளை இளநீரில் கொதிக்க வைத்துத் தயாரிக்கப்படுகிறது. உடலில் சேரும் நச்சுத் தன்மையைச் சிறுநீர் மூலமாக வெளியேற்ற இந்த இளநீர் உதவுகிறது. மேலும், மீனினால் ஏற்படும் நச்சுத்தன்மை, கொதிக்கவைத்த இளநீரை அருந்துவதனால் முறிகிறது.

இந்தியா, இலங்கை, இந்தோனேசியா போன்ற நாடுகளில் காலராவினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு இளநீரை ஊசி மூலம் செலுத்தி நோயைக் குணப்படுத்தியதாகத் தெரியப்படுத்தியுள்ளார்கள். இளநீரில் சலைன் ஆல்ப்யூமின்கள் போன்றவை இருப்பதால், காலரா நோயினால் ஏற்படும் வாந்தி தடுக்கப்படுகிறது.

## வினிகர் தயாரிப்பு

இளநீரில் வினிகர் தயாரிக்கப்படுகிறது. இளநீருடன் சம அளவு பழுப்புச் சர்க்கரை சிறிதளவு "பினிஸ்மேன் ஈஸ்ட்" சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஐந்து வாரம் வரை சேமிக்கப்படும்போது வினிகராக மாற்றம் அடைந்துவிடுகிறது. பிறகு இதன் பிரதான பிரிவு அதை வடிகட்டி சுத்தம் செய்து உபயோகப்படுத்தப்படுகிறது. இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இளநீரிலிருந்து வினிகர் வர்த்தக ரீதியில் தயாரிக்கப்படுகிறது.

அண்மையில் விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் இளநீரின் மருத்துவக் குணங்களைத் தமது ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தி உள்ளார்கள். டைட்ராமைசின் என்று பொதுவாக அழைக்கப்படும் ஆக்சிடெட்ராசைக்ளின் என்னும் ஆண்ட்டிபயாடிக் மருந்தை இளநீரிலிருந்து மிக எளிதாக உற்பத்தி செய்ய முடியும் என்று பிலிப்பைன் தேச விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

குரும்பை கருவுற்றதில் இருந்து ஏழு மாதங்கள் கழித்து எடுக்கப்படும் இளநீரில் நல்ல தரமான நீர் கிடைக்கிறது. இதில் ஐந்து சதம் கரையும் உப்புக்கள் உள்ளன. ஏழு மாத காலத்தில் உள்ள இளநீரில் அதிக அளவில் சர்க்கரை உள்ளதால் அருந்துவதற்கு இனிப்பாக இருக்கிறது.

100 கிராம் இளநீரில் 17 கலோரி சத்துள்ளது. மேலும், இளநீரில் புரோட்டின் கொழுப்புச் சத்து, சோடியம், பாஸ்பரஸ், கந்தகம், குளோரின் போன்றவையும் பி, சி வகுப்பினைச் சேர்ந்த வைட்டமின்களும் உள்ளன. எனவே, இளநீருக்கு தகுந்த இனிப்பு, இளநீரிலுள்ள சர்க்கரைச் சத்தாலும், தாதுக்களாலும் ஏற்படுகிறது.

## பொதுப் பண்பு

இளநீரில் முக்கியமாகப் பெருவாரியாக இருப்பது சர்க்கரைச் சத்துக்கள் இளநீரை தினமொன்று அருந்துவதால், மஞ்சட்காமாலை, டைபாய்ட் மற்றும் அல்சர் என்று சொல்லப்படும் வயிற்று ரணம் முதலிய உபாதைகள் வர வாய்ப்பில்லை.

இளநீரில், வழுக்கை என்று சொல்லப்படும் முற்றாசிலேடையை எடுத்து, வறுத்து கசகசாவுடன் சேர்த்தரைத்து உண்டால் வாய் ரணம், நெஞ்செரிச்சல் முதலியவை நீங்கி நலமாகும்.

இளநீர் பருகிய பின் வெட்டிப் போட்ட ஓடுகள், மட்டைகளைக் குடிசை வாழ்மக்கள் அடுப்புக்கு எடுத்துச் செல்வதை நாம் பார்க்கிறோம்.

வீட்டுக்கொரு மரம் வளர்ப் போம். அது தென்னையாக இருப்பின் நன்மையாக இருக்குமே!

"தென்னைய பெத்தா – இளநீரு
பிள்ளைய பெத்தா – கண்ணீரு"

– என்பது கவியரசர் அமரர் திரு. கண்ணதாசனின் தத்துவப் பாடல்களில் ஒன்றல்லவா!

– டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

❖ ❖ ❖

## ‘காக்கா’ பிடித்தவர்களுக்கு நேர்ந்த கதி

ஒரு முறை அக்பரும் பீர்பலும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுடைய உரையாடல் எங்கெங்கோ சென்று, சாப்பாடு பற்றிய சங்கதியில் வந்து முடிந்தது.

உடனே பீர்பல் தாம் முன் தினம் நண்பர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டு வந்த விருந்தைப்பற்றி விமர்சனம் செய்தார். அக்பர் மிகச் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். பீர்பல் விருந்தில் பரிமாறப்பட்ட ஒவ்வொரு பண்டங்களைப் பற்றியும் அவற்றின் சுவைகளைப் பற்றியும் விரிவாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அப் போது சேவகன் ஒருவன் வந்து சக்கரவர்த்தியிடம் ஏதோ கூறவே, சக்கரவர்த்தி எழுந்து சென்று விட்டார். சற்று நேரம் கழித்து பீர்பலும் அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

பிறகு அரசவையில் பீர்பலைப் பார்த்தபோதுதான் அக்பருக்குத் தாம் விருந்து பற்றிய பேச்சை இடையிலேயே நிறுத்திவிட்டு வந்தது நினைவுக்கு வந்தது. உடனே பீர்பலைப் பார்த்து, "அப்புறம் என்ன?" என்று கேட்டார்.

"அப்புறம் என்ன? பாயசம்!" என்றார், பீர்பல்.

உடனே சக்கரவர்த்தி தம் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை ஒன்றைக் கழற்றிப் பீர்பலுக்குப் பரிசாக அளித்தார்.

இதைப் பார்த்த பொறாமைக்காரர்களுக்கு வயிறு எரிந்தது. வெறும் 'பாயசம்' என்று சொன்னதுமே ஒரு முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்து விட்டாரே! நாம் உண்மையாகவே பாயசத்தைக் கொண்டு சென்று சக்கரவர்த்திக்குக் கொடுத்தால் நமக்கு நிறையப் பரிசுகள் கிடைக்கும்' என்ற கருத்துடன் பொறாமைக்காரர்கள் அனைவரும் அன்றே தத்தம் மனைவிமாரிடம் பாயசம் செய்து கொடுக்கச் சொல்லி அதை வாங்கிக் கொண்டு அரசரிடம் சென்றார்கள்.

"அரசே, தங்களுக்குப் பாயசம் மிகவும் பிடிக்கும் ..." என்று ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சக்கரவர்த்தியின் முகத்தில் கோபம் தெறித்தது.

"யார் சொன்னது?" என்று கோபத்துடன் கேட்டார் சக்கரவர்த்தி.

"அன்று பீர்பல் பாயசம் என்று சொன்னவுடனே மகிழ்ச்சியுடன் முத்துமாலையைப் பரிசாக அளித்தீர்களே!"

"அதற்காகப் பாயசம் கொண்டு வந்து கொடுத்து, நிறையப் பரிசுகள் பெற்றுச் செல்லலாம் என்று வந்தீர்களா? பைத்தியக்காரர்களே, பீர்பலின் பேச்சு பாயசத்தைவிட இனிப்பாக இருந்தது! அதற்குத்தான் பரிசளித்தேன். முடியுமானால் நீங்களும் பீர்பலைப் போல் சாதுரியமாகப் பேசிப் பரிசுகள் பெறலாமே! அதைவிட்டு இது என்ன வேலை? பாயசம் கொண்டு வருவதும், வடை கொண்டு வருவதும்! முன்னே இவைகளையெல்லாம் தூக்கிக் கொண்டு ஓடிப்போங்கள். இல்லாவிட்டால் உங்கள் முகத்தில் தூக்கி ஊற்றுவேன்" என்று கடுமையாகக் கூறினார், அக்பர்.

இதற்கு மேலும் அங்கு நிற்க அவர்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா, என்ன? ஓடியே போய்விட்டார்கள்!

- பீர்பல் கதைகள்' தொகுப்பிலிருந்து...





# உழவர் சந்தைகள் - கிராமப் பொருளாதாரத்தில் ஒரு புரட்சி

□ முதலமைச்சர் கலைஞர்

இன்றைய தினம் 25-வது உழவர் சந்தை அருப்புக்கோட்டையிலும், 26-வது உழவர் சந்தை இராஜபாளையத்திலும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 100 உழவர் சந்தைகளைத் தமிழகத்திலே எல்லா நகரங்களிலும் உருவாக்குவது என்று உத்தேசித்து அதற்கான முயற்சிகளை விரைவுபடுத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த உழவர் சந்தைகளைத் தொடங்கி வைக்கிற நிகழ்ச்சிகளிலே நானும், அமைச்சர் பெருமக்களும் கலந்துக் கொண்டு இன்றைக்கு நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் கிருஷ்ணன் அவர்களுடைய அரிய முயற்சியினால் மிகச் சிறப்பாக 2 உழவர் சந்தைகளுடைய திறப்புவிழா நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த உழவர் சந்தை உழவர் பெருமக்களுக்கு எவ்வளவு பயனுடைய ஒன்று என்பதை இங்கே என்னுடைய தம்பி வைகோ அவர்கள் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

கிராமப்புறத்தில் ஒரு புதிய பொருளாதார மாற்றத்தை இந்த உழவர் சந்தை ஏற்படுத்துகிறது என்பது என்னுடைய எண்ணம். இதை தொடங்கும் போது நானே கூட, இப்படிக் கருதவில்லை. திட்டமிட்டு தொடங்கப்பட்ட உழவர் சந்தை என்றாலும் கூட இவ்வளவு வெற்றிகரமாக நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

### உழவர் சந்தை இந்த அளவிற்கு உருப்பெறும் என்று நான் கருதவில்லை

நேற்று மதுரையிலே உள்ள செய்தித் தாள்களில் மதுரையிலே உழவர் சந்தை 100-வது வெற்றிகரமான நாள் என்று பெரிய திரைப்படங்களுடைய வெற்றியை 100-வது நாளிலே குறிப்பிடுவதைப் போல குறிப்பிட்டு விளம்பரங்கள் வந்திருந்த நிலையை நான் பார்த்தேன்.

இதைத் தொடங்கும் பொழுது இந்த அளவிற்கு உழவர்சந்தை உருப்பெறுமா என்று நானும் கருதவில்லை. அரசு அதிகாரிகளும், மாவட்ட ஆட்சியர்களும் கூடக் கருதவில்லை. தொடங்கிய பிறகு தான் தெரிகிறது உழவர்கள் எந்த அளவிற்கு இப்படி ஒரு நல்ல நிலைமைக்காகக் காத்துக் கிடந்தார்கள் என்ற உண்மை இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கூடத் தெரிகிறது.

கிராமப் பொருளாதாரத்திலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொன்னேன். கிராமங்களிலே உள்ள உழவர்கள் தாங்கள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளை இடைத் தரகர்கள் மூலமாக வியாபாரிகளுக்கு விற்று அவர்கள் அதிக விலைக்கு அதிக இலாபம் வைத்து விற்ற

காரணத்தால் பொதுமக்களும் - அதை வாங்கிப் புசிக்கின்ற நுகர்வோர் எனப்படுகின்ற பொதுமக்களும் அதிக விலை கொடுத்துக் காய்கறிகளை வாங்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றைக்குக் கட்டுப்படியான விலைக்கு விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய்கறிகளை விற்பனை செய்கின்ற காரணத்தால் பொதுமக்கள் அதிக விலை தரவேண்டிய அவசியம் இல்லாமலே நியாயமான விலை தந்து காய்கறிகளைப் பெறமுடிகிறது.

அதே நேரத்தில் விவசாயிகள் இடைத்தரகர்கள் என்ற ஒரு தொல்லையிலே இருந்து விடுபடுகிறார்கள். ஒவ்வொரு உழவர் சந்தையிலும் விவசாயிகள் 5 பேர் அல்லது 7 பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் அந்தக் குழுவினர் இன்றைக்குக் காய்கறி என்ன விலை விற்கலாம். வெண்டைக்காய் கிலோ என்ன விலை விற்கலாம்? கத்தரிக்காய் என்ன விலை விற்கலாம்? என்று அந்தக் குழுவினர் விலையை நிர்ணயம் செய்து அதன்படி விற்கப்படுகிறது. அதன்படி வாங்கப்படுகிறது.

அது மாத்திரமல்ல. இதிலே எந்தவிதமான தவறும் நடைபெறக்கூடாது என்பதற்காக தராசு, படிக்கல் இவை இரண்டையும் கூட அரசாங்கமே வழங்குகிறது. இல்லாவிட்டால் சில படிக்கற்கள் தானாக தேய்ந்துவிடும். சில தராசுகள் நாம் சரியாக கவனிக்காத நேரத்திலே ஒரு பக்கம் சாய்ந்துவிடும். அது எந்தப் பக்கம் சாயும் என்று உங்களுக்குத் தெரியும். எனவே அப்படியெல்லாம் தராசு சாயாமல், படிக்கல் தேயாமல் நல்ல படிக்கல்லாக, நல்ல தராசாக நல்ல உழவர்களாக அவர்களும் இருக்க வேண்டும். வாங்குகின்ற பொதுமக்களும் நல்ல மக்களாக இருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இந்த ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கின்றது.

அது மாத்திரமல்ல, விவசாயிகளுக்கும் மற்றொரு சலுகை இந்த உழவர் சந்தை இவ்வளவு நேர்த்தியாகக் கட்டிமுடித்து அவர்களுக்கு வழங்கும் போது அதிலே வாடகையும் கிடையாது. அவர்கள் வைத்து விற்பனை செய்கின்ற இடத்திற்கும் வாடகை கிடையாது. அங்கே காய்கறிகளைக் கொண்டு வருவதற்குக் கிராமத்திலே இருந்து அவர்கள் பேருந்துகளிலே வருவார்களேயானால் அவர்களுக்கு மாத்திரம் தான் கட்டணம். அவர்கள் கொண்டு வருகின்ற லக்கேஜ் என்று சொல்லப்படுகின்ற அந்தக் காய்கறி மூட்டைகளுக்கு அந்தக் காய்கறிச் சுமைக்கு அவர்கள் கட்டணம் கட்ட வேண்டிய அவசியம் கிடையாது. அது இனாம்.

இன்னொரு தொல்லை அவர்களுக்கு இன்றைக்கு நீக்கப்பட்டிருக்கிறது. காய்கறிகளை பஸ் ஸ்டாண்டிலே வந்து இறக்கும் பொழுது அங்கே நான் தூக்குகிறேன், நீ தூக்குகிறேன் என்று போட்டி போட்டுக் கொண்டு அதைத் தூக்குகின்ற கூலிகள் என்கின்ற பெயரால் சில பேர் வியாபாரிகள் வழியாக வந்து விவசாயிகளைத் துன்புறுத்துகின்ற சில நிலைமைகளும் நடைபெறுவதை பேருந்து நிலையங்களிலே கண்டு இருக்கின்றோம். அதைப் போல யாரும் வந்து ''நான் தூக்குகிறேன் இவ்வளவு கூலி கொடு'' என்று போட்டி போட்டுக்கொண்டு கேட்கின்ற அந்த நிலையும் இல்லாமல், கொண்டு வந்த காய்கறிகளை கொண்டு வந்த வியாபாரிகளை கொண்டுப் போய், தான்

*கண்ணுக்குத் தெரியாமல் கசிகிறது*
*காற்றின் இரத்தம்;*
*வேலைக்காத்தான் முட்கள்.*

– அறிவுமதி

□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□□

விற்க வேண்டிய இடத்திலே வைத்து விற்பனை செய்கின்ற அந்த நிலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வளவும் ஒரு அரசாங்கத்தினுடைய சலுகைகள், வசதி வாய்ப்புகள் மூலமாக விவசாயிகளுக்கு செய்துத் தரப்படுகிறது.

இது ஒவ்வொரு ஊரிலும் இன்றைக்கு இந்த நிலைமை என்றால் மதுரை மாநகரத்திலே தொடங்கி, நேற்று அல்லது நேற்று முன்தினம் வரையிலே ஏறத்தாழ 22 உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டதில் 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவிற்கு விற்பனை ஆகியிருக்கின்றது.

இதிலே ஒரே ஒரு முக்கியத்துவத்தைச் சொல்ல விரும்புகின்றேன். ஒரு சிறப்பைச் சொல்ல விரும்புகின்றேன். எல்லா சந்தைகளும், எல்லா மாவட்டங்களிலும் நல்ல முறையிலே விற்பனையானாலும் கூட எங்கள் திருவாரூர் மாவட்டத்தில் - எங்கள் என்று சொன்னதற்காக மன்னிக்கவும், நான் பிறந்த திருவாரூர் என்பதால் சொல்லுகின்றேன். அந்த மாவட்டத்திலே மாத்திரம் திருத்துறைப்பூண்டி என்ற நகரத்திலே அங்கே தான் விற்பனை குறைவு.

**விவசாயிகள் தோட்டப் பயிர்களை விளைவிக்க அரசாங்கமே செய்து தரும் ஏற்பாடு**

என்ன காரணம் என்றால் அந்த நகரத்தைச் சுற்றியிருக்கின்ற கிராமப் பகுதிகளில் நெல் விளைகிறது. வேறு வகையான தானியங்கள் விளைகிறது. தோட்டப் பயிர்கள் விளைச்சல் அதிகம் இல்லை. அதனால் அந்த உழவர் சந்தைக்கு வருகின்ற காய்கறிகள் கிலோ எடை குறைவு. அந்த எடை குறைவான காரணத்தால் வருகின்ற பொதுமக்களுக்குத் தேவையான காய்கறிகள் கிடைப்பதில்லை. ஆகவே அங்கே மாத்திரம் மற்ற இடங்களிலே பத்தாயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆகிறது என்றால், அங்கே ஐந்தாயிரம் ரூபாய்க்கு என்று விற்பனை ஆகிறது. அதனால் ஏற்பட்டுள்ள ஒரு பயன் என்னவென்றால் அங்குள்ள விவசாயிகள் இனிமேல் தோட்டப்பயிர்களை அங்கே போட்டு விளைவித்து அதை அந்தச் சந்தைக்குக் கொண்டு வருவது என்று முடிவு செய்திருக்கின்றார்கள். அதற்கும் அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து, வசதிகளைச் செய்து தருவது என்று தீர்மானித்து அந்த உறுதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

எனவே கிராமப்புறத்திலே ஒரு சிறிய அளவிற்குக் கிராமப் பொருளாதாரத்திலே ஒரு புரட்சி ஏற்படுகின்ற நிலையை இன்றைக்கு இந்த உழவர் சந்தைகள் உருவாக்கியிருக்கின்றன என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

**– பரமக்குடி, இராமநாதபுரம், அருப்புக்கோட்டை மற்றும் இராஜபாளையம் உழவர் சந்தைகள் திறப்பு விழாவில் 22-2-2000, 23-2-2000 ஆகிய தேதிகளில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**



# திருவள்ளுவர் தீபம்; தீப்பந்தம் !



சேலை நெய்தும், வேட்டி செய்தும் சில வேளைகளில் மறைக்கமுடியாத தமிழர்களின் மானத்தைத் திருக்குறள் என்கிற ஒரு நூலால் மறைத்த நுண்மையாளர் திருவள்ளுவப் பெருமான்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டு வரலாற்று ஆசிரியர்களால் வரவு வைத்துக் கொள்ளப் பட்ட நூற்றாண்டு. இந்த நூற்றாண்டிலேதான் ஆரிய மதத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக, சராசரி மனிதர்களுக்கான சமரைத் தொடங்கினார் கௌதம புத்தர். ஆனந்தன் என்கிற சீடன் அவரை நோக்கி, "புத்தனே! ஞானம் பெறுவது எப்படி என்று கற்றுத் தருவாயா?" என்று கேட்டான். "உனக்கு நான் கற்றுத் தர இயலாது. ஆனால், நீ படித்துக் கொள்ளலாம்" என்று புத்தர் சொன்னார். இவ்வளவு அறிவு செறிந்திருந்த காலம் அது.

"இருளைப் பழிப்பதைவிட வெளிச்சம் ஏற்றுவது இனிமையானது" என்ற கன்ஃபூசியஸ் வாழ்ந்த காலம் அது. இதே காலத்தில்தான் "ஏன் என்ற கேள்வியை எதற்கும் கேட்பீர்; எவரிடமும் துணிவுடன் விளக்கம் கேட்பீர்" என்று கிரேக்கத்தின் தெருக்களில் சாக்ரட்டீஸ் பேசினார். இதே நூற்றாண்டிலேதான் யூதேயாவில் இறைவாக்கினர் தோன்றி மக்களுக்கு வர இருக்கிற காலத்தைக் குறித்து எச்சரிக்கை விடுத்தார்கள்.

இந்த நூற்றாண்டிலேயே தமிழர்களாகிய நமக்கு வாழ்க்கை இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் இருந்தது. அப்படிப்பட்ட மண்ணிலிருந்து திருக்குறள் என்கிற ஒளிப் பறவை, தனது வெளிச்ச அலகுகளால் உலகத்தின் இருட்காட்டைக் கிழித்தெறியப் புறப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் திருக்குறள் இயற்கை விதிகளுக்கு அப்பால், நின்று நிலைப்பதற்கு என்ன காரணம்?

விவிலியத்தில் ஒரு வரி வரும். "நோயாளிக்கே மருத்துவன் தேவைப்படுகிறான்". அதைப்போலவே வாழ்வில் இருள் சூழ்கிறபோது மனிதனுக்கு அகலாவது அவசியப்படுகிறது. திருக்குறள் தீபமாகவும், தீப்பந்தமாகவும் இருப்பதால் மனித வாழ்க்கைக்கு அது வழிகாட்டுகிற வேலையைத் தொடர்ந்து தொய்வின்றிச் செய்துவருகிறது. ஒரு நாட்டுக்கு, ஒரு மொழிக்கு என்று அது எழுதப்படவில்லை. நித்தியமான உண்மைகளைச் சொன்னது மாத்திரம் அல்லாமல், சொன்னது சென்று சேர்ந்ததா என்று பார்த்துக் கொண்டே சொல்லுகிறது. திருக்குறள் நிலைப்பதற்கான காரணங்களைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். மற்றவைகளின் பார்வைகளிலிருந்தும் எப்போதும் வாழுகிற இலக்கியம் எப்படி வேறுபடுகிறது என்பதைப் பொறுத்தும் அதன் வாழ்க்கை இருக்கிறது. இந்த நுட்பத்தை வெளிப்படுத்துவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

*"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்*
*உண்பதூஉம் இன்றிக் கெடும்"*

*(அழுக்காறாமை –166)*

**வலம்புரி ஜான்**



எண்ணங்களை வெளிப் படுத்துகிறவர்களில் எழுத்தாளர் களும், பேச்சாளர்களும் இரு வகை. சிறந்த எழுத்தாளர் என்பவர் சொன்னது சென்று சேருமா என்று பார்த்துக் கொண்டே எழுதுகிறவர். மேலும் வேறு ஒருவர் அதைச் செப்பமாக்குவதற்கு இடமின்றி முழுமையாகச் சொல்லிவிடுகிறவர். சிலையில் மூக்கு வடிந்துவிட்டால் உளி ஓய்வெடுக்க வேண்டும் அல்லவா? அதுபோல. திருவள்ளுவப் பெருமானுக்கு இந்தக் கலை சிறப்பாகவே கைவந்திருக்கிறது.

இருந்தும், கொடுக்க மனம் இல்லாதவன் ஒரு வகை. பெற வருகிறவனைக் காயப்படுத்தி விட்டு காசு என்கிற களிம்பு போட்டு விடுகிறவன் ஒரு வகை. இழுத்தடித்து, பிறகு கொடுக் கலாம் என்று தெருமுனைகளைத் தேய வைக்கிறவன் ஒரு வகை. திருவள்ளுவர் இந்த இடத்தில் இவர்களைக் குறித்துப் பேசாமல் கொடுப் பதைக் கெடுப்பவனைக் குறித்துப் பேசுகிறார்.

கொடுக்க மறுக்கிறவனுக்கு வராத கெடுதல் கொடுப்பதைத் தடுக்கிறவனுக்கு வரும் என்று உறுதிபடப் பேசுகிறார். அவன் தானும் தரவில்லை, தருகிறவனையும் தர விடவில்லை. இந்த இடத்தில் உலகத்தில் பாய்ந்தாக வேண்டிய இரக்க வெள்ளத் திற்கு உலர்ந்துபோன சருகுகளால் அணை கட்டுகிறவர்களை, அமில நதியின் அனல் வீச்சோடு திருவள்ளுவர் பார்க்கிறார். கொடுக்க மறுக்கிறவனின் மீது அவருக்கு வராத கோபம் கொடுப்பதைத் தடுக்கிறவன் மீது படை நடத்திப் பார்க் கிறது.







ஆகவே, கொடுப்பதைத் தடுக்கிறவன், அதிலும் பொறாமை கொண்டு தடுக்கிற வனுக்கு என்ன நேரும் என்று சொல்ல வருகிறபோது 'உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்' என்று பேசுகிறார். இந்த வரிகளில் உண்ண இயலாமல் கெடுவான் என்பதை உண்பதற்கு ஒன்றும் கிடைக்காமல் கிடப்பான் என்றும் கொள்ளலாம். ஆனால், நுட்பம் அதுவல்ல.

உண்பதற்குக் கிடைக்காவிட்டால் இரந்தாவது வாழலாம். இரந்து வாழ்வதற்கு மானத்தை மறைக்கின்ற ஓர் ஆடையேனும் மனிதனுக்கு அவசியம். மானத்தை மறைத்துக் கொண் டல்லவா வீதியில் வந்து கையேந்த வேண்டும்? இங்கே 'உடுப்பதூஉம்' என்பதை முதலில் வைத்தார். அப்படியென்றால், உடுத்தவே ஒரு முழத் துணி கிடைக்காத ஒருவன் எவ்வாறு வெளியில் வர இயலும்? வந்தால் அல்லவா கையேந்துவது? ஆகவே, கொடுப்பதைத் தடுக்கிறவன் பிச்சை எடுக்கக் கூட வழியில்லாது கெட்டழிவான் என்பது திருவள்ளுவப் பெருமானின் ஆழ்ந்த கருத்து.

திருவள்ளுவப் பெருமான் வாழ்ந்த காலத்தில் சமண சமயம் தமிழ் மண்ணில் ஏறத்தாழ இருந்ததற்கான அடையாளங்கள் உண்டு. இவர்களில் சிலர் திகம்பரர்கள். இவர்கள் ஆடை அணியாதவர்கள். ஆனால், திருவள்ளுவப் பெருமான் 'உடுக்கை இழந்தவன்' என்று பேசுவதால் இந்த மரபிற்கு முற்றிலும் மாறானவர் என்பதை இந்த இடத்தில் நினைக்கவேண்டும்.

ஒரு மலரைப் பார்க்கிறபோது, இதைக் கசக்கிப் பிழிந்தால் எத்தனைத் துளிகள் அமுத மது கிடைக்கும் என்று எண்ணுவது ஒரு பார்வை. அந்த அழகின் சிரிப்பில் அகிலத்தையே முகம் பார்த்துக்கொள்ளுவது வேறு ஒரு பார்வை. பொருள் ஒன்றாக இருக்கலாம்; பார்வைகள் வெவ்வேறாக இருக்கலாம். திருவள்ளுவரைக் காலம்தோறும் நிலைக்கவைப்பது அவரது வேறுபட்ட பார்வையும் ஆகும்.

இதைப்போலவே,

*"அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண் பில்லா தவர்"*

*(பண்பு உடைமை - 997)*

— என்று திருவள்ளுவர் பேசுகிறார்.

அறிவியல் வளர்ச்சி பெற்ற இருபத்தியோராம் நூற்றாண்டில் தாவரங்களைப் பற்றிய அறிவு முற்றிலுமாக மாறி வருகிறது. மரம் என்பது உயர்திணை என்று கவிஞர்கள் கற்பனை மாடங்களில் நின்றுகொண்டு கதைக்கிறார்களா என்றால், அதுதான் இல்லை. கற்பனையே கவிதையாக இருந்தது ஒரு காலம். அறிவின் ஊற்றிலிருந்து கவிதைப் பறவை சிறகு விரிப்பது வரவிருக்கிற நூற்றாண்டின் நுட்பமான அடையாளங்களில் ஒன்று.

அந்த வகையில் ஒரு மரத்திற்கு முன்பாக நிற்கிறபோது மரம் என்ன உணருகிறது என்பதை நீ அறியமாட்டாய்; ஆனால், நீ என்ன நினைக்கிறாய் என்பதை மரம் ஒரு வேளை உணர்ந்துகொள்ளுகிறதோ என்று அய்யப் படுகிற அளவிற்கு மனிதச் சிந்தனை இப்போது வளர்ந்திருக்கிறது. மரங்கள் அன்பு, ஆத்திரம் இவற்றைப் புரிந்துகொள்ளுகின்றன என்பது மெய்ப்பிக்கப்பட்ட உண்மை. நான் பயன்படவில்லை. ஆனால், மரம், நின்றால் மரம்; விழுந்தால் விறகு; எரிந்தால் கரி; புதைந்தால் வைரம். ஆகவே, எல்லா நிலைகளிலும் பயன்படுகிற மரத்தைப் பண்பில்லாதவருக்கு ஒப்பிடலாமா என்பது கேள்வி.

திருக்குறளை முழுவதுமாக உள்வாங்கிக் கொண்டால், திருவள்ளுவப் பெருமான் தாவர உலகத்தைப் பற்றிய தனி அறிவும் பெற்றி ருந்தார் என்றே கொள்ள இடமிருக்கிறது. ஆகவே, இந்த இடத்தில் வேறு சொல் இன்மையால் மரம் என்று குறித்திருக்க வேண்டும். ராகுல சாங்கிருத்தியாயன் என்கிற பேரறிவாளர் பாலி மொழியில் தம்மம் என்கிற சொல் ஆறு பொருள்களில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்று பேசுகிறார். 'தரு' என்கிற வடசொல் வரவெல்லாம் பின்னால் நிகழ்ந்தது.

ஆங்கிலத்தில் இக்குறளைப் பெயர்த்தவர்கள் பலர், மரம் என்கிற சொல்லுக்கு Tree என்கிற



பதத்தையே பயன்படுத்தினார்கள். ஆனால், திருக்குறளை ஆங்கிலத்தில் பெயர்த்த போப்பையர் அவர்கள் இந்தக் குறளில் வருகிற மரம் என்கிற சொல்லுக்கு மாத்திரம் தனது மொழிபெயர்ப்பில் Wood என்று போட்டார். திருவள்ளுவரின் உள்ளத்தைத் தெரிந்தவர்களில் அவரும் ஒருவர். போப்பையர் அவர்கள் இன்று மொழி பெயர்த்திருந்தால் உயிரைப் பற்றிய இலக்கணம் முற்றிலுமாக மாறிப்போன இக்காலத்தில் கட்டை என்று கூட ஒரு சொல்லைப் பெய்திருக்க இயலாது. ஆகவே, இந்தக் குறளில் திருவள்ளுவர், மரம் என்று சொன்னது அவரது மரபுவழிச் சிந்தனையைக் காட்டவில்லை; அதற்கு மாறாகச் சில வேளைகளில் மொழிக்கு நேர்ந்துவிடுகிற இயலாமையை மாத்திரமே அது சுட்டுகிறது.

**குன்றின் மேலிட்ட விளக்கெனப் பொலியும் குறளினிடத்தே குற்றம் கண்டார் ஒருவரும் இல்லை; ஒருவரோடொருவர் முரண்பட்டார் அனைவரும் கூட தத்தம் கொள்கைக்குத் திருக்குறளையே எடுத்துக்காட்டாக எடுத்தாள்வர்.**

**– வித்துவான் தெ. பொ. மீ.**

***"உண்ணற்க கள்ளை உணிலுஉண்க, சான்றோரான்***
***எண்ணப் படவேண்டா தார்"***

***(கள் உண்ணாமை–922)***

'உண்ணாதே கள்ளை' என்று உத்தரவிட்டிருக்க வேண்டிய திருவள்ளுவர், 'உணில் உண்க' என்று ஏன் நீக்குப் போக்கோடு, நெளிவு சுளிவோடு பேச வேண்டும் என்று கேட்கிறார்கள்.

சான்றோர்கள் எப்போதுமே பார்த்துப் பார்த்துத்தான் பேசுவார்கள். மக்களைத் திருத்துவதற்காக அவர்கள் பேசுகிறவர்களாக இருந்தாலும், எப்போது பேசவேண்டும், எதை, எவ்வளவு என்கிற கணக்கையெல்லாம் பார்ப்பார்கள். பகவத் கீதைக்கு ஞானதேவர் எழுதிய உரையினைச் சிறந்த உரையாசிரியரான ஆச்சார்ய வினோபாபாவே 'என மனத்தின் மகுடபதி' என்று வருணிக்கிறார். இதில் ஓரிடத்தில், "நீங்கள் சூரியனையும், சந்திரனையும் வழிபடுகிறீர்கள்; அவ்வாறு வழிபடுவதும் என்னையே சேருகிறது. எனினும் அது எப்படிப்பட்டது என்றால், ஒரு செடியின் வேரில் நீரூற்றாமல் அதன் இலையிலும், காயிலும் நீரூற்றுவதைப் போன்றது" என்று கிருஷ்ண பரமாத்மா பேசுவதாக வருகிறது.

இறைவன் படைக்கப்பட்டவைகளை வழிபடாதே என்று சட்டம் இயற்றமாட்டான். பார்த்துப் பார்த்துப் பேசுவான். பைபிளில் "மனம் வருந்துகிறவர்களுக்குக் குடிக்கக் கொடு. அவர்கள் தங்கள் வேதனைகளை மறந்திருக்கட்டும்" என்றே வருகிறது. என்றாலும், வேறு சில இடங்களில் குடிக்கிறவன் ஒரு போதும் தேறமாட்டான் என்றும் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது.

இதைப்போலவே இசுலாமியர்களுக்கான கட்டளைகளில் 'குடித்தால் தொழாதே' என்று முதலில் வந்தது. பிறகு 'குடிக்கவே குடிக்காதே' என்று கட்டளை பிறந்தது. சண்டாளச் சாதியைச் சார்ந்த பெண்ணைத் தனது சங்கத்தில் சேர்த்துக்கொள்ள முடிந்த புத்தரால் எடுத்த எடுப்பில் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானம் என்று சொல்லிவிட இயலவில்லை. ஏனென்றால் அந்த அளவிற்குத்தான் அப்போதைக்கு அவரால் முற்போக்காக இருக்க முடிந்தது. ஆகவே, காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப மக்களின் மனநலத்தைப் பண்படுத்தவும் வேண்டும்; அதேநேரத்தில் பண்பட்ட நிலத்திலேதான் விதைகளை ஊன்றவும் வேண்டும் என்பதால் திருவள்ளுவரும் பார்த்துப் பார்த்துப் பேசுகிறார். இந்தக் குறள் திருவள்ளுவர் மரபுக்கு மரியாதை தருகிற அதே நேரத்தில், புதுமையையும் போற்றுகிறவர் என்று நமக்குக் காட்டுகிறது.

❖ ❖ ❖



# பண்பாட்டுச் சுற்றுலா



ஆலயத் திருவிழா, உறவினர்களின் இல்லங்களில் நடைபெற்ற விழாக்கள் போன்றவை பழங்காலத்தில் சுற்றுலாச் செல்ல காரணங்களாக அமைந்தன. இவை அக்காலத்தின் நிலைப்பாடு. அறிவியல் வளர்ச்சியில் கல்வி, வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள், இதழ்கள் மூலமாகத் தாங்கள் அறிந்ததை நேரில் காண வேண்டும் என்ற அவா. எனவே அதற்காகச் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளப்படுதல். இவை இக்காலத்தில் நிலைப்பாடு.

பண்பாடு என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்கப்படும் நிகழ்வு. எனவே இது எழுதாத சட்டம். நம் இல்லத்திற்கு வருகை தருகின்றவர்களை கைகூப்பி வரவேற்பது, கை கொடுத்து குலுக்குவது, இன்முகத்துடன் உரையாடுவது, நன்றாக விருந்தோம்புவது, நினைவுப் பரிசு வழங்குவது, விடை பெறும்போது வாயில் வரை வந்து வழி அனுப்புவது என்பதற்கெல்லாம் எந்த விதிமுறைகளிலும் கிடையாது.




ஆனால் இவைகளை நாம் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிக்கிறோம். எனவே அவைகள் எழுதப்படாத சட்டமாகும்.

மனித வாழ்க்கையில் நடைபெறும் பல நிகழ்வுகள், அதாவது உறவு முறைகள், மண விழா நிகழ்ச்சிகள், பொழுது போக்குகள், இசை, ஓவியம், நாடகம், கைத்திறன்

காட்டும் கலைச்செல்வங்கள் என்பவை நமது பண்பாட்டு நிகழ்வுகளாகின்றன. மேலும் ஊருக்கு ஓர் சிறப்பு என்பதாகக் கூடச் சிலவற்றைக் கூறலாம்.



மணப்பாறை மாடு, மாயவரம் ஏரு, மதுரை ஜில்லா ஆளு, பொள்ளாச்சிச் சந்தை, விருதுநகர் வியாபாரி என்றும், தஞ்சைக் கதம்பம், கும்பகோணம் கொழுந்து வெற்றிலை, சேலத்து மாங்கனி, காஞ்சிப் பட்டு, மதுரை சுங்கடி என்று கூறிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் அன்றாட வாழ்க்கை வகைப்பாடுகள்.

பண்பாட்டில் ஆலயங்களுக்கு மிகவும் முக்கிய இடமுண்டு. இந்து மதமோ, புத்த மதமோ, இஸ்லாமிய மதமோ, கிருஸ்துவ மதமோ, எதுவாகிலும் அதற்குரிய வழிப்பாடுகள், விழாக்கள் நிலைப்பெற்றுள்ளன. ஓய்வு நேரங்களில் தங்களது பொழுது போக்கிற்காகப் பலவிதமான இசை, நாட்டியம், நாடகம் போன்றவை எழுச்சி பெற்றன. அவையே இன்றைக்கு நமது பண்பாட்டை எடுத்துச் சொல்லும் சிறப்பானதொரு விளம்பரச் சாதனங்களாகும்.

மேலும் நமது இலக்கியங்களில் தமிழகத்தின் நிலப்பரப்பையே குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரித்து ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய பழக்கவழக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகள் சிறப்பித்துக் காண்பிக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்பானதொரு சான்றாகும்.

தமிழகத்தின் பண்பாடு நமது பாரம்பரியத்தின் தொடர்ச்சியான பயணத்தின் சிறப்பான பகுதியாகத் தொடர்கிறது. இவைச் சுற்றுலாவின் மேன்மைமிகு கூறுகளாகும். தமிழகத்தில் பல்வேறுப் பகுதிகளை ஆண்ட மன்னர்கள் மாபெரும் ஆலயங்கள், கோட்டைகள், கொத்தளங்கள், அரண்மனைகள், நினைவாலயங்கள், வழிபாட்டுச் சின்னங்கள், ஏரிகள், ஆறுகள் போன்றவற்றை அமைத்து அவர்களின் மன ஈடுபாட்டை வெளிப்படுத்தினர். இவைகள் நமது பண்பாட்டினை பிரதிபலிப்பதாக உள்ளன. இது போன்ற பலவகைப்பட்ட கலைத்திறன்கள், விழாக்களைப் பார்க்கும் போது நாம் மட்டுமல்ல அயல் நாட்டினரே வியக்கின்றனர்.

இயற்கை அள்ளித் தெளித்த எண்ணற்ற சிதறல்களும், நமது பாரம்பரியத்தின் அழகும் தமிழகத்தைச் சுற்றுலாவின் சொர்கபூமியாக ஆக்கியுள்ளன. ஆகவே பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து நமது பண்பாட்டைக் கண்டு மகிழ்கிறார்கள்.

தற்போது நமது பண்பாட்டுச் சின்னங்களாக விளங்கும் சில இடங்களையும், கோயில்களையும், விழாக்களையும் பார்ப்போம்.

"ஆயிரம் கோயில்கள் நகரம்" எனும் பெருமைக்குரியது காஞ்சிபுரம். இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் ஒன்று. பல்லவர்களின் தலைநகரம். ஏகாம்பரேஸ்வரர் கோயில், வரதராஜசாமி கோயில், வைகுண்டப்பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில், காமாட்சியம்மன் கோயில் போன்றவை பண்பாட்டுச் சின்னங்களாக உள்ளன.



பல்லவ மன்னர்கள் சிற்பக் கலைக்குச் செழுமைச் சேர்த்த இடம் மாமல்லபுரம். எட்டாம் நூற்றாண்டில் எழுப்பப்பட்ட இணையற்ற கடற்கரைக் கோயில். அர்ஜுனன் தபசு, ஐந்து ரதம், புலிக்குகை போன்ற சிறப்பு மிக்கச் சிற்பங்கள் காண்போரை மெய்மறக்கச் செய்கின்றன.

இராசராச சோழனால் எழுப்பப்பட்ட மிகப் பெரிய பிரகதீஸ்வரர் ஆலயம், கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக் கலைகள் காண்போரை வியக்கச் செய்கின்றன.

ஆனந்தக் கூத்தாடும் தில்லை நடராசனின் அழகிய கோயில் உள்ள நகரம். நாட்டியத்திற்கு இலக்கணம் வகுத்த அபிநயங்கள் 108–ம் இங்கே காணலாம். இவை நாட்டிய உலகின் மிகப் போற்றுதற்குரியவையாகக் கருதப்படுகின்றன.

இதைப்போல திருவரங்கம், மதுரை, தாராபுரம், கங்கைகொண்ட சோழபுரம், நெல்லையிலுள்ள காந்திமதி நெல்லையப்பர் ஆலயம், கிருஷ்ணாபுரம் சிற்பங்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் நமது முன்னோர்களின் பண்பாட்டுச் சின்னங்களாகும். அவைகளை எப்படியேனும் பாதுகாப்பதே நமது தலையாயக் கடமையாகும்.

இவ்வரிய ஆலயங்களில் அக்கால நாட்டியச் சிறப்பை எடுத்து இயம்பும் வண்ணம் பல விழாக்கள் நடத்தப்படுகின்றன. மாமல்லபுரத்தில் பண்பாட்டு விழா (டிசம்பர்–ஜனவரி), சிதம்பரத்தில் நாட்டியாஞ்சலி விழா (பிப்ரவரி–மார்ச்), தஞ்சையில் கலை மற்றும் இசை விழா (நவம்பர்–ஜனவரி), மதுரையில் சித்திரைத் திருவிழா (ஏப்ரல்–மே), குமரியில் குமரிமுனைத் திருவிழா, பொங்கல் சுற்றுலா விழா எனப் பல விழாக்கள் நடத்தப்படுகிறது.

நமது மக்களின் கலைத்திறன்கள் வெளிப்படுத்தும் கற்சிலைகள் ஐம்பொன் சிலைகள், தஞ்சை கலைத்தட்டு, மர வேலைப்பாடுகள், ஓலைச்சுவடிகள், சித்தன்னவாசலில் ஓவியங்கள் எனப் பலவகை கைத்திறன்கள் மிக்கது.

கிராமியக் கலைகளான பொய்க்கால் குதிரையாட்டம், கோலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், கும்மி, ஒயிலாட்டம், தேவராட்டம், தப்பாட்டம், சிலம்பாட்டம், பொம்மலாட்டம், கழைக்கூத்து, தெருக்கூத்து என்பன அக்கால மக்களின் பொழுதுப் போக்கு நிகழ்வாக இருந்தவை.

வீர விளையாட்டுகள், எருது தழுவுதல் (ஜல்லிக்கட்டு), ரேக்ளா ஓட்டம், சிலம்பம், மற்போர், வாள்போர் எனப் பலவகை வீர விளையாட்டுகள் அக்காலத்து மக்கள் வீர உணர்வுடன் கூடிய உடல் வலிமை மிக்கவர்களின் வீர தீரச் செயல்களாக காணப்பெறுகின்றன.

இவ்வாறு எல்லா வகைகளிலும் சிறப்பு மிக்க நமது பண்பாடு தான் இன்றைய சுற்றுலா வளர்ச்சிக்கு ஆணி வேர். எனவே இப்பண்பாட்டையும், பாரம்பரியத்தையும் பாதுகாக்கவும், அவற்றை வெளி உலகத்திற்கு மேலும் உணர்த்தவும் உரிய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

உலகில் வளர்ந்து வரும் பொருளாதாரச் சந்தையில் தெற்காசிய நாடுகளின் பண்பாட்டு மீது வெளிநாட்டு மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இந்திய நாட்டின் பண்பாட்டு முறையைக் கண்டு அறிந்து கொள்ள பேரார்வம் காட்டுகின்றனர். ஏனெனில் இந்தியா முக்கியமாகக் பண்பாட்டுச் சுற்றுலாவுக்கான நாடாகவேக் கருதப்படுகிறது. அந்தப் பண்பாட்டு எழுச்சியின் ஓர் அங்கம் தான் தமிழ்நாடு.

சுற்றுலா மக்களின் வாழ்க்கை முறையில் ஓர் அம்சமாக மாறி வருகிறது. ஆகவே அம்மக்களை ஈர்க்க இங்கே வரலாற்று நினைவிடங்கள் சிறப்புமிகு ஆலயங்கள், கல்வெட்டுக்கள், கைத்தொழில் திறன்கள், கலைத் திறன்கள், ஓவியங்கள், குகைக் கோயில்கள் என தடுக்கி விழுகின்ற இடமெல்லாம் நமது பண்பாட்டு படிவங்கள் தான். எனவே தமிழகமே ஓர் பண்பாட்டுச் சுற்றுலா மையமாக காண்போரது சிந்தையைக் கவரும். இதை நாம் எந்நாளும் போற்றிப் பாதுகாப்போம்.

— ந. பாலுசாமி, துணை இயக்குநர்,
சுற்றுலா இயக்ககம்.

❖❖❖❖❖❖❖❖❖ ——— ❖❖❖❖❖❖❖❖❖

## மூன்று கேள்விகள்

*அக்பருடைய அரசவையில் காஜாஸாரா என்று ஒருவன் இருந்தான். அவன் பீர்பல் அடைந்து வரும் செல்வாக்கைக் கண்டு பொறாமைப்பட்டான். பீர்பலை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் எவராலும் பதில் சொல்ல முடியாத மூன்று கேள்விகளை அக்பரிடம் சொல்லி, அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருந்தான்.*

*அக்பரும் பீர்பலை அழைத்து, "பூமியின் நடு மையம் எது? வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் உள்ளன? உலகத்தில் உள்ள மக்கள் தொகையில் சரியாக ஆண்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? பெண்கள் எத்தனை பேர் இருக்கின்றனர்? பீர்பல் காஜாஸாராவின் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல், பார்ப்போம்" என்றார்.*

*பீர்பல் உடனே ஒரு பெரிய கழியை எடுத்து நிறுத்தி வைத்து, "அரசே! இந்தக் கழியின் மேல் முனைதான் பூமியின் மத்திய பாகம். வேண்டுமானால் காஜாஸாராவை ஆகாயத்திலிருந்து பூமியை அளந்து பார்க்கச் சொல்லுங்கள்" என்றார்.*

*அடுத்தபடியாக ஒரு செம்மறி ஆட்டை இழுத்து வந்து, "அரசே! இந்த ஆட்டிற்கு எத்தனை ரோமங்கள் உள்ளனவோ அத்தனை நட்சத்திரங்கள்தான் வானத்தில் இருக்கின்றன. சந்தேகமாயிருந்தால், காஜாஸாராவைத் தம்முடைய ஓய்வு நேரத்தில் எண்ணிப் பார்க்கச் சொல்லுங்கள். மூன்றாவது கேள்விக்குப் பதில் சற்று சிரமம். நான் விடை அளிப்பதற்குள் பல புதிய ஜீவன்கள் உலகில் பிறந்து விடக்கூடும். எனவே, உலகிலுள்ள ஆண், பெண் அத்தனை பேரும் கொல்லப்பட்டுவிட்டால் சரியான ஜனத்தொகையைச் சுலபமாகச் சொல்லிவிடலாம்" என்றார், பீர்பல்.*

*பீர்பலின் சாமர்த்தியமான பதில்களைக் கேட்ட அக்பர் சிரித்தார். காஜாஸாராவின் முகத்தில் அசடு வழிந்தது!*

*– 'பீர்பல் கதைகள்' தொகுப்பிலிருந்து–*

❖❖❖❖❖❖❖❖❖ ——— ❖❖❖❖❖❖❖❖❖

# தமிழகம் முழுவதும் கணினி மயமாக வேண்டும்

– முதலமைச்சர் கலைஞர்

"திருவையாற்றில் நடைபெறுகின்ற இந்த இனிய விழா நிகழ்ச்சியில் 3 கோடியே 14 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 295 புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. 2 கோடியே 48 இலட்ச ரூபாய் செலவில் 53 திட்டப் பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. 1 கோடியே 7 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் 2062 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

### ரூ.6.9 கோடியில் கட்டடங்கள் திட்டப்பணிகள் தொடக்கம்

20 இலட்ச ரூபாய் செலவில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களைக் கணினிமயமாக ஆக்குகின்ற திட்டம் தொடங்கி வைக்கப்படுகின்றது. ஆக 6 கோடியே 89 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடங்களும், திட்டப் பணிகளும் இந்த விழாவில் தொடங்கப்படுகின்றன என்ற நற்செய்தியை உங்களுக்கெல்லாம் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

முக்கியமாக புதுமையாக கணினி மயமாக வட்டாட்சியர் அலுவலகங்களை ஆக்குகின்ற ஒரு முயற்சி இன்றைக்கு இந்த மாவட்டத்திலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பெரிதும் பாராட்ட விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில் இரண்டு மாவட்டங்களில் தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் இந்த கணினி வட்டாட்சியர் அலுவலகம் வரையிலே பரவுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்த பெருமை நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் டாக்டர் ராஜாராம், இ.ஆ.ப. அவர்களுக்கும், அதைப் போல திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் சாரும்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் முனைப்பாக பணியாற்றி எல்லா வட்டாட்சியர் அலுவலகங்களும் கணினி மயமாவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இந்த வட்டாட்சியர் அலுவலகங்கள் கணினிமயமாக ஆக்கப்படுவதால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையிலே தஞ்சை மாவட்டத்தில் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் உள்ள கணினிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே உள்ள தலைமை கணினியோடு மிகுவிரைவுப் பிணையம் (High Speed Network) இணைக்கப்பட்டுச் செய்தி மற்றும் தகவல் பரிமாற்றம் இப்பொழுது நடைபெறுகிறது. இவ்வாறு அமையப்பெறும் மிகுவிரைவுப் பிணையம் நேரடியாகச் செயற்கைக்கோள் (Satellite) உதவியோடு, உயர் தகவல் பரிமாற்றச் சாதனங்களோடு இணைக்கப்படுவதால் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களும் இணைய இன்டர்நெட் வசதியையும் பெறுகின்றன என்ற ஒரு நிலையும் ஏற்படுகிறது.

### தஞ்சை மாவட்டத்தில் மிகுவிரைவுப் பிணையம்

இத்தகைய மிகுவிரைவுப் பிணையம் வட்ட அளவில் இந்தியாவிலே முதல் முறையாகத் தஞ்சாவூர் மாவட்டத்திலே தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது என்னுடைய மாவட்டம் என்பதால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று யாரும் கருதக்கூடாது. மாவட்டத்துக்கு அமைகிற ஆட்சித் தலைவர்கள் அப்படி, அதற்கு நான் என்ன செய்ய முடியும், இந்த மிகு விரைவுப் பிணையத்தை நிர்மாணித்து, இயக்கி, கண்காணித்துச் செயல்படுத்த மாவட்டத் தகவலியல் மையத்தில் (National Informatic Centre) இரு தொழில்நுட்ப அலுவலர்கள் மாவட்ட ஆட்சியரின் கீழ்ப் பணியாற்றி வருகின்றார்கள். வட்டாட்சியர் அலுவலகக் கணினியிலே பின்வரும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

ஒன்று நிலப் பதிவேடுகளில் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா கணக்குகள், இரண்டு நில ஆக்கிரமிப்பு அடங்கல், பட்டா மாற்றம், நில ஒப்படை மற்றும் நிலம் சம்பந்தப்பட்ட பணிகள், பிறகு முதலமைச்சருடையச் சிறப்புக் குறை கேட்கும் மனுக்கள் என்ற அந்தத் திட்டமும் இந்தக் கணினியினால் பயன் பெறுகின்றன. முதியோர் உதவித் திட்டத்திற்கும் இந்தக் கணினி பயன்படுத்தப்படுகிறது. மனுநீதி நாள் மனுக்களின் மீதான நடவடிக்கை எடுக்கவும், இந்தக் கணினி பயன்படுத்தப்படுகின்றது. முக்கியமாகப் பொது விநியோகத் திட்டத்திற்கும் இந்தக் கணினி பயன்படுத்தப்படுகிறது. சம்பளப் பட்டியல் தயாரித்தல், பணியாளர்களுடைய பணிப் பதிவேடுகள், இவைகளுக்கும் பயன்படுகிறது. இப்பணிகளுக்கான மென்பொருள்கள் மாவட்ட தேசிய தகவல் மையத்தினால் தயாரிக்கப்பட்டு, கடந்த சில ஆண்டுகளாக மாவட்டத் தகவல் மையத்திலே செயல்படுத்தப் பட்டு வருகின்றன. தற்போது இப்பணியானது வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி மயமாக்குதல் திட்டத்தின் அடிப்படையில் வட்டாட்சியர் அலுவலகங்கள் விரிவுப்படுத்தப்பட்டு இன்று தொடங்கி வைக்கப் பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

> “ஏழை, எளிய மாணவர்கள், கிராமப்புறத்து மாணவர்கள், கணினிப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு எனக்கே புல்லரித்து போய்விட்டது.”

### 906 கிராமங்களிலும் கணினி மூலம் பணிகள்

இன்னொன்று தமிகத்திலேயே தஞ்சை மாவட்டத்தில் தான் மாவட்டத்திலே உள்ள அனைத்து 906 கிராமங்களிலும் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா கணக்குகள் கிராம வாரியாகப் பதிவுச் செய்யப்பட்டு, பட்டா மாற்றம் மற்றும் சிட்டா நகல் வழங்குதல் போன்றப் பணிகள் முழுவதும் கணினியிலேயே செயல்படுத்தப் படுகின்றன.

இது வரையிலே இதற்காக அலைந்து கொண்டிருந்த பொதுமக்கள், கிராமப்புறத்து மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இனி அலையத் தேவையில்லை. அதற்காக இடையிலே எடுத்துக் கொள்ளப்பட்ட நாட்கள் மிக மிகக் குறைந்து உடனடியாக நீங்கள் கோருகின்ற விவரங்களை வட்டாட்சியர் அலுவலகத்திலேயே பெற முடியும் என்கின்ற அந்தச் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. எனவே தமிழக முழுவதும் கணினிமயமாக ஆகவேண்டும் என்ற குறிக்கோளோடு இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. அப்படியானால் இன்னும் பணிகள் விரைவிலேயே முடியும் என்பதை நானும் உணர்கிறேன். கணினிப் பற்றிய விவரம் தெரிந்த அனைவரும் உணர்கிறார்கள்.

### 1200 மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிப் பயிற்சி அளித்திட திட்டம்

இதை ஒரு பெரிய பயிற்சியாக ஆக்கி மாணவர்கள் எதிர்காலத்திலே படிப்பை முடித்தவுடன் இப்பொழுது உள்ள மாணவர்களைப் போல திடீரென்று வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார்களே யானால் அவர்கள் கணினி படிக்காமல் சென்றால் அந்த வேலை வாய்ப்புக்களைப் பெறுவது கடினமாக ஆகிவிடும். எனவே தான் தமிழ்நாட்டில் 1200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பயிற்சியைத் தொடங்குவது என்று அறிவித்து முதல் கட்டமாக 666 பள்ளிகளில் 112 கோடி ரூபாய் அரசின் செலவில் இந்த ஆண்டு கணினிப் பயிற்சி தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த கணினிப் பயிற்சியை நடத்தித் தருகின்றவர்கள் தனியார்களாக இருந்தாலும், அற்கானத் தொகையை அரசு தான் அவர்களுக்குத் தருகின்றது. அவர்கள் மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சியை நடத்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விருப்பப்பட்ட மாணவர்கள் அதற்கான தொகையைச் செலுத்தி இந்தப் பயிற்சியைப் பெற்று வருகிறார்கள்.

நான் பல இடங்களிலே சுற்றுப் பயணம் செய்யும் பொழுது யாருக்கும் அறிவிக்காமலேயே, ஆனால் ஒரே ஒரு அதிகாரிக்கு மட்டும் அறிவித்து, திடீரென்று மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று பல பள்ளிகளைப் பார்த்தேன். சேலம் மாவட்டத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில், நான் பல மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சென்றுப் பார்த்தேன். அங்கெல்லாம் மிக அருமையாக, ஆர்வத்தோடு, அக்கறையோடு கிராமப்புறத்து மாணவர்கள் கணினிப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

முதன் முதலாக சென்னைக்கு அடுத்துள்ள பூவிருந்தவல்லிக்குத் திடீரென்று ஒரு நாள் பகல் 3 மணிக்கு யாருக்கும் சொல்லாமல் சென்றுக் கணினிப் பயிற்சி நடப்பதைப் பார்த்தேன். எவ்வளவு ஆர்வத்தோடு ஏழை, எளிய மாணவர்கள், கிராமப்புறத்து மாணவர்கள், அந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு எனக்கேப் புல்லரித்து போய்விட்டது. அவர்களைக் கேட்டேன், நீ யாருடைய மகன் என்று கேட்டால் யாரோ ஆறுமுகம், குப்புசாமி என்று சொல்லுகிறார்கள். உங்கள் அப்பாவுக்கு என்ன வேலை என்று கேட்டால் அவர்கள் விவசாயி, தோட்ட வேலை என்று சொல்லுகிறார்கள். பையன் படிக்கிறான், படித்து விட்டுப் பள்ளியிலிருந்தோ அல்லது கல்லூரியிலிருந்தோ வெளியேறும் போதுக் கணினிக் கற்றவனாக வெளியே வந்தால் அவனுக்காக வேலைவாய்ப்புக் காத்துக் கொண்டிருக்கிறது.

### கணினி முறையைப் பரவலாக்கித் தமிழகத்தின் நிலையை உயர்த்திடுவோம்

இந்தியாவிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்கிறார்கள். கணினிப் பயிற்சிப் பெற்றவர்கள், மென்பொருள் பயிற்சிக் கற்றவர்கள், இன்டர்நெட்டில் பயிற்சிப் பெற்றவர்களெல்லாம் இன்றைக்கு அமெரிக்காவுக்குச் சென்று, அங்குக் குவிந்துக் கிடக்கின்ற வேலை வாய்ப்புக்களைப் பகிர்ந்துக் கொள்வதற்காகச் செல்கிறார்கள். நான் உங்களுக்குப் பெருமையோடுச் சொல்கிறேன், அப்படிச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே நம்முடைய தமிழகத்திலே தான் அதிகம் என்பதை நான் பெருமையோடுச் சொல்லிக் கொள்கின்றேன். அதன் மூலமாக நமக்குக் கிடைக்கின்ற அன்னியச் செலாவணி கூட மிக அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

எனவே கணினியை மேலும், மேலும் வளர்த்து, பரவலாக்கி, விரிவாக்கி, விரைவாக வளர்த்து, நம்முடைய மாணவச் செல்வங்கள் எதிர்காலத்திலே ஒளிமயமான வாழ்வைப் பெறுவதற்கும், தமிழகத்தினுடைய நிலையை உயர்த்துவதற்கும் பயன்பட வேண்டுமென்ற வாழ்த்துக்களோடு இன்றைக்கு நான் இந்த வட்டாட்சியர் அலுவலகங்களைக் கணினி மயமாக்குகின்ற நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்திருக்கின்றேன் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

திருவையாற்றில் 20-2-2000 அன்று நடைபெற்ற அரசு விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.



# கீர்த்தி



□ சா. கந்தசாமி

கீர்த்திவாசன் கைக்கடிகாரத்தை ஒரு முறை உற்றுப் பார்த்துக் கொண்டு மதில் மீது இருந்து கீழே குதித்தான். அவனை இடித்தபடி உட்கார்ந்திருந்த சுந்தரம் சட்டையைப் பிடித்து மேலே இழுத்தான்.

"கொஞ்சம் வேல இருக்கு, போகணும்" என்றபடி கீர்த்திவாசன் முன்னே ஒரடி எடுத்து வைத்தான்.

"எங்க? நாய் மாமா வீட்டுக்கா?" என்று முன்னே வந்தான் லோகநாதன்.

"டேய், இவன் நாய் மாமாகிட்ட நல்லா மாட்டிக்கிட்டான். நாய் மாமா தன் கிட்ட இருக்கற ஒரு சொர்ணரேகாவை இவனுக்குக் கட்டி வச்சிடப் போறார்."

கீர்த்திவாசன் திரும்பி சுந்தரத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு முன்னே காலெடுத்து வைத்தான்.

"கீர்த்தி, மறந்து போயிடுச்சா. இது மயிலு வர்ற நேரம்."

"ஆமாண்டா, மயிலு இன்னைக்கி சால்வார் கம்மீஸ் மாட்டிக்கிட்டு ஜெகஜெகன்னு வந்திருக்கு" என்று சொல்லிவிட்டு மதில் மீது தாவி ஏறி உட்கார்ந்து கொண்டான் லோகநாதன்.

"கீர்த்தி, திங்கக்கிழம நீ இல்ல. மயிலு சுத்திச் சுத்திப் பார்த்துட்டுப் போச்சி ... டேய், நிஜமா மயிலு உன்னத்தான்டா சையிட் அடிக்குது"– சுந்தரம் மதில் மேல் இருந்து இறங்கி வந்து இவன் தோள் மீது கை வைத்தான்.

இவன் பார்வை சிவப்பாய் பூத்துக் குலுங்கும் குல்மோகர் மரத்தைத் தாண்டி பெண்கள் மேல்நிலைப் பள்ளிப் பக்கம் சென்றது. மயில் என்று இவர்கள் பெயர் சூட்டியிருக்கும் சித்ரா மீது இவனுக்கு ஒரு கண் தான். ஆனால் அவளோ இவனைப் பார்த்ததும் பயந்தது மாதிரி தலையைக் கவிழ்த்துக் கொண்டு ஓடிப் போய்விடுகிறாள்.

ஒரு நாள் மயில் தன்னந்தனியாக மாட்டிக் கொண்டாள். இவன் அவள் பின்னாலேயே நடந்தான்.



இரண்டு தெருக்கள் இவனைப் பார்க்காதது மாதிரி சென்றவள், திடீரென்று நின்று ஒரு சிரிப்புச் சிரித்தாள். சந்தோஷத்தில் இவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்படியே நின்று கொண்டிருந்தான். சாலையில் இரண்டு மூன்று பஸ்கள் சென்றன. அப்புறம் திடீரென்று சாலை வெறுமை ஆனது. மயிலைக் காணோம். பஸ் ஏறிப் போய்விட்டாள் போலும் என்றபடி மெது மெதுவாக நடந்தான்.

கடற்கரை வந்தது. நிழல் பரப்பிக் கொண்டு இருந்த ஒரு பூவரசு மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்து நோட்டுப் புத்தகத்தை எடுத்து எழுத ஆரம்பித்தான். எழுத எழுத வார்த்தைகள் சரசரவென்று வந்து கொண்டே இருந்தன. எழுத எழுத நெஞ்சுக்குள் மயில் டக்டக்கென்று நடப்பது மாதிரியும், தலையசைத்துச் சிரிப்பது மாதிரியும் இருந்தது.

கீர்த்திவாசன் ஒன்றும் பெரிய படிப்பாளி இல்லை. தட்டுத் தடுமாறித்தான் பள்ளிக்கூடப் படிப்பை முடித்தான். அவன் வாங்கிய மார்க்கைப் பார்த்ததுமே அம்மா கலங்கிப் போய்விட்டாள். அன்றிரவு முழுவதும் அவளுக்குத் தூக்கமே வரவே இல்லை. புரண்டு புரண்டு படுத்தாள். கொஞ்ச நேரத்திற்கு அப்புறம் எழுந்து உட்கார்ந்து கொண்டாள். மனத்தில் என்னென்னவோ யோசனைகள் எல்லாம் உதித்துக் கொண்டிருந்தன. விடியும் நேரத்தில் அவளுக்குத் திடீரென்று வக்கீல் மாமா நினைவுக்கு வந்தார்.

வக்கீல் மாமா நாராயணசாமி முதலியார் அவள் வீட்டிற்கு நான்காவது வீடு. அந்தத் தெருவிலேயே அது தான் பெரிய வீடு. வீட்டின் முன்னே இரண்டு வேப்ப மரங்கள். காம்பௌண்டைச் சுற்றி உயர உயரமான தென்னை மரங்கள். மாமா ஐந்தாறு வருஷத்திற்கு முன்னாலேயே கோர்ட்டிற்குப் போவதை விட்டு விட்டார். ஆனால் அவரிடம் யோசனை கேட்க வக்கீல்கள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

வக்கீல் மாமா வீட்டில் ஏழெட்டு நாய்கள், இரண்டு கறவைப் பசு, ஒரு சமையல்காரன், இரண்டு தோட்டக்காரர்கள், ஒரு காவல்காரன், ஒரு கார் – எல்லாம் உண்டு. ஆனால் அவர் வீட்டு நாய்கள்தான் பிரசித்தி. உயரமான, குட்டையான, குண்டான, கருப்பான, வெளுப்பான என்று வித்தியாசமான நாய்கள். வித்தியாசமான நாய்களில் வித்தியாசமே இல்லாதது, எல்லாம் பொட்டை நாய்கள் என்பதுதான். எப்பொழுது பார்த்தாலும் ஒரு நாய் இரண்டு மூன்று குட்டிகளோடு அலைந்து கொண்டே இருக்கும்.

மாமா தன் வீட்டு நாய்களுக்கெல்லாம் சொர்ணமோகினி, சொர்ணசுந்தரி, சொர்ணகலா, சொர்ணரேகா, சொர்ணலதா, சொர்ணசொரூபி என்று பெயர் வைத்திருந்தார். காலைப் பொழுதில் மாமா தனது சொர்ண சுந்தரிகளோடு வெள்ளை பனியனும் கருப்புப் பேண்ட்டும் போட்டுக் கொண்டு வேக வேகமாக நடந்து செல்லுவார். குளிர், மழை, வெயில் என்று ஒன்றையும் பார்க்க மாட்டார். காலை ஆறு மணிக்கு ஆரம்பித்து ஏழரை மணிக்குள் இரண்டு தெருக்களைச் சுற்றி வந்துவிடுவார். அந்த நடை நாய்களுக்கா இல்லை மாமாவுக்கா என்று சந்தேகப்பட்டவர்கள் கூட உண்டு.

புதிதாக பத்மநாபபுரத்திற்குக் குடிவந்த ஜானகி அம்மாள் காலைப் பொழுதில் நாய்களோடு நடந்து போகும் மாமாவைப் பார்த்து பயந்து போய்விட்டாள். இரண்டு நாட்கள் கழித்து இவன் அம்மாவிடம், "யார் மாமி அது? எமதர்மன் மாதிரி விடியக் காலத்திலே இருபது முப்பது நாய இழுத்துக்கிட்டு திரியறது" என்று கேட்டாள்.

"அப்படிச் சொல்லாதீங்கோ மாமி. இவர் பெரிய லாயர். இந்திராகாந்திக்கு எல்லாம் அட்வைஸரா இருந்தவர். இந்தப் பகுதியே அவர் தாத்தா பெயரில தான் பத்மநாபபுரமென்று இருக்கு. நம்ப தெருவில வக்கீல் மாமா இருக்கறது நமக்கெல்லாம் பெருமை மாமி." என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு கீர்த்திவாசன் அம்மா சொன்னாள்.



'யார் அம்மா, நம்ப நாய் மாமாவா?" என்று கீர்த்தி முன்னே வந்து நின்றான்.

"போடா தடியா." அம்மா அவனை அடிக்க கையை மேலே தூக்கினாள். அவன் குனிந்து பின்னால் ஓடினான்.

"பார்த்தா பெரிய மனுஷன் மாதிரிதான் தெரியுது. ஆமாம் மாமா பெயரு என்ன சொன்ன."

"நாராயணசாமி முதலியார்."

"மெட்ராஸ் முதலியா? பொண்டாட்டி புள்ள ஒண்ணும் இல்ல."

"மூணு வருஷத்திற்கு முன்னால தான் மாமி தவறிப் போயிட்டா. ரெண்டு பையன்கள். அமெரிக்காவில் இருக்கா. பொண்ணு ஆஸ்திரேலியாவில"

"இவ்வளவு ஜனம் இருந்துமா கிழம் தனியா இருக்கு. ஏன் ... யாரும் கூட்டிக்கிட்டு போக மாட்டேன்னுட்டாங்களா?"

"இல்ல மாமி ... மாமாதான் போக மாட்டேன்னுட்டார்."

"ஏன்? எதுக்காம்?"

"பொறந்து வளர்ந்த ஊர விட்டுட்டு கடைசி காலத்தில புத்தி உள்ள மனுஷன் வேற நாட்டுக்குப் போவானானுட்டார் மாமி!"

"ஏன் சரோஜா? மனுஷன் என்ன கொஞ்சம் கிறுக்கா?"

"மாமி, மாமா காதுல விழுந்தா, நாய விட்டுத் தான் உங்களக்கடிக்க விடுவார்" என்றபடி அவசர அவசரமாக உள்ளே சென்றாள்.

ஏழு ஆண்டுகளாக சரோஜா பத்மநாபபுரத்தில் குடியிருந்து வருகிறாள். வக்கீல் மாமாவைப் பற்றி இப்படியொருத்தி சொல்லி அவள் கேட்டதே இல்லை. வக்கீல் மாமா என்றால் எல்லோருக்கும் பயம் கலந்த ஒரு மரியாதை. எதிரே அவரைப் பார்க்க நேர்ந்த போது கூட தலை குனிந்தபடி வேக வேகமாகப் போய் விடுவார்கள். அவசியம் என்று வீட்டிற்குப் போனால் மாமா தன்னால் ஆனது என்றுதான் இல்லை – ஆகாது என்று சொல்லாமல் செய்து எதையும் முடித்து விடுவார் என்று சொல்லிக் கொள்வார்கள்.

அவள் வக்கீல் மாமாவைத் தேடிக் கொண்டு இரண்டு முறை சென்றாள். முதல் முறை அவள் கணவன் சங்கரநாராயணன் ஞாயிற்றுக்கிழமை நாடக ஒத்திகை பார்த்துவிட்டு ஸ்கூட்டரில் வரும்போது, அண்ணா சாலையில் பஸ்ஸில் அடிபட்டு போய்விட்டான். டி.வி.யில் தமிழ்ச் செய்தி கேட்டுக் கொண்டு இருக்கும்போது ராயப்பேட்டை மருத்துவமனையில் பாடி இருக்கிறது என்று ஒரு போலீஸ்காரன் வந்து சொன்னான். ஒரு நிமிஷம் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. பூமியே காலுக்குக் கீழே இறங்குவது மாதிரி இருந்தது.

கீர்த்திவாசன் கையைப் பிடித்துக் கொண்டு சப்தமே இல்லாமல் அழுதாள். கொஞ்ச நேரத்தில் செய்தி தெரு முழுவதும் பரவி விட்டது. ஒவ்வொருவராக துக்கம் விசாரிக்க வந்து கொண்டே இருந்தார்கள்.

எதிர்வீட்டு சுந்தரமூர்த்தி அவள் பக்கமாக வந்து, "பாடிய எடுத்தாற என்னம்மா ஏற்பாடு பண்ணியிருக்க?" என்று மெதுவாக விசாரித்தார்.

" ... ... ..."

"போலீஸ் கேஸ்.. நம்ப சார் வேற குடிச்சிட்டு இருந்து இருக்கார். அதெ சொல்லியே நாலு பக்கமும் பணம் புடுங்கப் பார்ப்பாங்க ..... யாராவது போலீஸுக்கு தெரிஞ்ச ஆளு இருந்தா காரியம் சுலபமா நடக்கும்".

"... போலீஸில நமக்கு யாரைத் தெரியும்" அம்மா முந்தானையை எடுத்து கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"அம்மா, நம்ப வக்கீல் மாமாவுக்கு போலீஸில ஏகப்பட்ட செல்வாக்கு ... மாமா ஒரு வார்த்தைச் சொன்னா போதும் ..."

" .... ... ..."

"நமக்கும் மாமாவுக்கும் நாய் விஷயத்தால ஒரு சின்ன தகராறு ... ரெண்டு வருஷமா பேச்சு வார்த்தை இல்லை ...."



அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"நீங்கள் மாமாகிட்டப் போனா, காரியம் செத்த நேரத்தில முடிஞ்சிடும்"

அம்மா கீர்த்திவாசன் கையைப் பிடித்துக்கொண்டு நாராயணசாமி முதலியார் வீட்டிற்குச் சென்றாள். இவர்களைப் பார்த்ததும் நாய்கள் லொள் லொள் என்று குரைத்தன. அம்மா பயந்து போய் நின்றாள். அவன் முன்னே ஒரடி எடுத்து வைத்தான். எட்டி அம்மா அவன் கையைப் பிடித்தாள்.



நாய்களுக்கு மத்தியில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி படித்துக் கொண்டிருந்த மாமா எழுந்து வந்தார். குரைத்த நாய்களை அதட்டி அமைதிப்படுத்தினார்.

"... எல்லாம் கேள்விப்பட்டேம்மா."

அம்மாவுக்குத் தன் துயரத்தைத் தாள முடியவில்லை. முந்தானையை எடுத்து முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

மாமா ஒரடி முன்னே வந்து கீர்த்தி கையைப் பிடித்து இழுத்து தன்னோடு அணைத்தபடி, "அழாதேம்மா ... நீ இந்த வயசில ரொம்ப கஷ்டப்பட்டுட்ட... பகவான் எதுக்குத்தான் இப்படி உன்ன சோதிக்கிறானோ தெரியல" என்றார்.

அவள் ஒன்றும் பதில் சொல்ல முடியாதவளாக சுவரோடு சுவராகச் சாய்ந்து கொண்டாள்.

"பாடி ஆஸ்பத்திரியிலதானே இருக்கு?"

" .... ... ..."

"ஆஸ்பத்திரியில இருந்து நேரா பரியல் கிரெவுண்ட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போறீங்களா? இல்ல வீட்டுக்கு வருதா?"

"... வீட்டுக்கு வந்துட்டுப் போகட்டும்'.

"சரி ... அதுதான் சரி, காலையில் பாடி வந்துடும் ...



அந்த வேலையை எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... அப்புறம் யாருக்கெல்லாம் தகவல் சொல்லணும்... போன் இருக்கு... இந்த போனிலேயே சொல்லிடலாம்".

கீர்த்தி அம்மாவையும் மாமாவையும் மாறி மாறிப் பார்த்தபடி இருந்தான்.

'இரு' என்பது மாதிரி மாமா கையைக் காட்டிவிட்டு உள்ளே சென்றார். அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள். படுத்துக்கிடந்த சொர்ணரேகா என்ற பெரிய நாய் எழுந்து முன்னே வந்தது.

"சொர்ணா" என்று நாயின் தலையில் ஒரு தட்டுத் தட்டி பின்னால் அனுப்பிவிட்டு கீர்த்தியிடம் ஒரு சின்ன பையைக் கொடுத்தார். அவன் தடவிப் பார்த்தான்.

"அவசர செலவு இருக்கும். அதுக்கு இருக்கட்டும் அம்மா."

"இல்ல மாமா ... .அவர் தன் கடைசி செலவுக்குன்னு கொஞ்சம் பணம் வச்சிட்டுப் போயிருக்கார்."

"இருக்கட்டும்... இருக்கட்டும் அம்மா."

இரண்டு நாய்கள் குரைத்துக் கொண்டு வந்தன. மாமா அவற்றை அடக்கி இழுத்துக் கொண்டு பின்னால் சென்றார்.

கீர்த்திவாசனுக்கு ஒரு கல்லூரியிலும் அட்மிஷன் கார்டு வராமல் போகவே அம்மாவுக்கு மறுபடியும் பயம் பிடித்துக் கொண்டுவிட்டது. அவள் வாழ்க்கையின் நம்பிக்கையே அவன்தான். சவூதி அரேபியாவில் சிவில் எஞ்சினியராக இருக்கும் அவள் தம்பி பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு கடிதத்திலும், கீர்த்தியை சிவில் எஞ்சினியராகவோ – பி.காமாகவோ அனுப்பி வை அக்கா. மற்றதையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று எழுதிக் கொண்டே இருந்தான். அவள் தம்பியின் கடிதத்தை எடுத்து இவனிடம் கொடுத்தாள்.

"அதெல்லாம் அவரையே படிக்கச் சொல்லும்மா. நம்ப படிப்பெல்லாம் வேற" – என்று சொல்லிவிட்டு தலையை ஒரு சிலுப்பு சிலுப்பிக் கொண்டு போய் விட்டான்.



அவள் இரவு முழுவதும் யோசித்தாள். மனத்தில் இனந்தெரியாத கலவரமும் பயமும் மூண்டுவிட்டது. அவளால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து உட்கார்ந்து கொண்டாள். பரண் மீது எலி உருட்டுவது மாதிரி இருந்தது. விளக்கைப் போட்டாள். கீர்த்தி கால்களை நீட்டி மல்லாக்கப் படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டு, இருந்தான். விளக்கைப் போட்டதும் புரண்டு படுத்தான். அவன் தூக்கம் கலைந்து விடுமோ என்ற பயத்தோடு அவசர அவசரமாக எழுந்து விளக்கை அணைத்துவிட்டு சுவரொடு சாய்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

கூர்க்கா தரையில் தடியால் தட்டிக் கொண்டு சென்றான். வேப்ப மரத்தில் இருந்து பறவைகள் கூட்டமாகக் கத்திக் கொண்டு பறந்தன. பால் வண்டி சென்றது. அவள் எழுந்து குளித்துவிட்டு ரேடியோவில் சுப்ரபாதம் கேட்டுக் கொண்டு இருந்தாள்.

எட்டு மணிக்கு அவன் படுக்கையில் இருந்து எழுந்தான். அம்மாவைப் பார்த்ததும் அவனுக்குப் பயம் வந்துவிட்டது.

"என்னம்மா, ராத்திரி எல்லாம் தூங்கவே இல்லையா?" என்று கேட்டான்.

"வக்கீல் மாமா, உங்கிட்ட என்னமோ பேசணுமாம். கூட்டிக்கிட்டு வரச்சொன்னார்."

"நாய் மாமாவா, அம்மா."

"உம்."

"எதுக்கு அம்மா?"

"என்னக் கேட்டா."

அவன் அவசர அவசரமாகக் குளித்துவிட்டு ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வந்தான். இரண்டு பேரும் வக்கீல் மாமா வீட்டிற்குச் சென்றார்கள். நாய்களோடு கொஞ்சிக் கொண்டிருந்த மாமா இவர்களை உட்காரச் சொன்னார். அவள் கீர்த்திக்குப் பின்னால் வந்து நின்று திரிந்து கொண்டிருக்கும் நாய்களைப் பார்த்தபடி இருந்தாள்.

வக்கீல் மாமா ஒரு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "கீர்த்தி..எந்தெந்த காலேஜ்க்கு அப்ளிகேஷன் போட்டிருக்க?" என்றார்.

"தேவராஜ் காலேஜிலே இங்கிலிஷ் லிட்."

"அப்புறம்..."

"செயின்ட் ஜார்ஜில பாட்டனி."

"சரி".

"கருப்பண்ணன் செட்டி கல்லூரியில ஹிஸ்டரி."

"சரித்திரமா?"

" ..... ... ..."

"கீர்த்தி படிச்சி மேல வந்துதான் குடும்பத்தைக் கரையேற்றணும்."

"நீ ஒண்ணும் கவலப் படாதேம்மா. நம்ப கீர்த்தி படிச்சி பெரிய ஆளா வந்துடப் போறான்."

அம்மா ஆச்சரியத்தோடும் இனங்கண்டு கொள்ள முடியாத ஆனந்தத்தோடும் மாமாவைப் பார்த்தபடி இருந்தாள்.

"காலேஜுக்கு அப்ளிகேஷன் போட்டு இருக்கற விவரத்தை எல்லாம் இங்க கொடு."

கீர்த்தி சட்டைப் பையில் மடித்து வைத்திருந்த பேப்பரை எடுத்து மாமாவிடம் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு, "சரி... நான் இன்னம பார்த்துக்கறேம்மா... நீ ஒண்ணுக்கும் கவலப்பட வேண்டாம்" என்றார்.

"மாமா, நான் உங்களத்தான் மலை போல நம்பி இருக்கேன் மாமா" என்று கரம் கூப்பினாள்.

"மலை மேல் இருக்கற ஏழுமலையான வேண்டிக்க அம்மா. அவர்தான் நம்ப எல்லோருக்கும் மேல... ஆனா ஒண்ணு... அவர் ரொம்ப வருஷத்துக்கு யாரையும் கஷ்டப்பட விடுறது இல்ல."

அவன் மெதுவாக தலையசைத்தபடி கீர்த்தி கையைப் பிடித்துக் கொண்டு மாமா வீட்டை விட்டு வெளியில் வந்தாள்.

கீர்த்திவாசன் கருப்பண்ணஞ் செட்டியார் கல்லூரியில் சேர்ந்து மூன்று மாதங்கள் சென்று விட்டன. அவன் கிராப்பை மாற்றிக் கொண்டு விட்டான். பேண்ட் ஜீன்ஸாக மாறிவிட்டது. மயிலைப் பிடிக்க நான்கு மணிக்கெல்லாம் மதில் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். மயில் வலையில் விழுந்துவிட்டது என்று தான் சிநேகிதர்கள் சொன்னார்கள்.ஆனால் அவனோ தலை குனிந்தபடி தான் போய்க் கொண்டு இருந்தான்.

ஒரு நாள் வக்கீல் மாமா வரச் சொன்னதாக அம்மா சொன்னாள். இரண்டு நாட்கள் கழித்து காலைப் பொழுதில் சென்றான். மாமா முகக்சவரம் செய்து கொண்டிருந்தார். இரண்டு நாய்கள் இப்படியும் அப்படியுமாகத் திரிந்து கொண்டிருந்தன. கையைக் கட்டிக் கொண்டு தலையை நீட்டிப் பார்த்தான். பெரிய நாய் இவனைப் பார்த்து லொள் லொள் என்று குரைத்தது பயந்து போய் ஹாலுக்குள் சென்றான். ஹாலில் வரிசையாகக் கண்ணாடி வைத்த அலமாரிகள். ஒவ்வொரு அலமாரியிலும் தடித் தடியானப்





புத்தகங்கள். ஒவ்வொரு புத்தகத்தின் முதுகிலும் கொட்டை கொட்டையாகப் பெயர். குனிந்து படித்துப் பார்த்தான். சட்டம், சரித்திரம், பூகோளம், அரசியல், நாவல், கவிதை- படித்துக் கொண்டே ஒவ்வொரு அடியாகக் காலெடுத்து வைத்து முன்னே சென்றான். நாற்காலி நகர்த்தும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான்.

"புஸ்தகம் பார்க்கிறீயா பாரு... இங்க இருக்கற புஸ்தகத்தில பாதிக்கு மேல தாத்தா வாங்கினது... கொஞ்சம் அப்பா... ஒரு ஆயிரம் போலத்தான் நம்ப வாங்கினது" என்றபடி நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தார் வக்கீல் மாமா.

"பெரிய லைபரரி மாதிரியே இருக்கு மாமா .."

"பார்க்கிறவங்க எல்லாம் இப்படித்தான் சொல்லுறாங்க ... நீ இப்படி உட்காரு" – மாமா தனக்கு நேர் எதிராக இருந்த நாற்காலியைக் காட்டினார்.

கீர்த்தி அமர்ந்தான். காபி வந்தது. மாமா தலையசைத்தார். தயங்கியபடியே வாங்கி ஒரு மிடறு குடித்தான். கமகமவென்று காபி மணத்தது. கண்களை மூடியபடி இன்னொரு மிடறு குடித்தான். காபியின் சுவையில் மனம் நிறைந்து போனது.

"கீர்த்தி, நம்ப கண் டாக்டர் ஒரு ஆறு மாசத்துக்கு ஒண்ணுமே படிக்கக் கூடாதுன்னுட்டார். புஸ்தகம் படிக்காம இருக்கறது ஒரு வாழ்க்கையா? அதுக்கு என்ன பண்ணலாம்னு யோசிச்சிப் பார்த்தேன் ... அப்பத்தான் உன் நினைப்பு வந்துச்சி..."

அவன் வக்கீல் மாமா முகத்தையே பார்த்தபடி இருந்தான். ஒரு சின்ன கருப்பு நாய் மாமா காலடியில் வந்து குந்தி இவனை நிமிர்ந்து பார்த்தது.

"வாரத்திலே மூணு நாள் ... திங்கள், புதன், வெள்ளி காலேஜ் விட்டதும் நேரா இங்க வர்ற... கைகால் அலம்பிட்டு ஒரு காபி சாப்பிட்டு விட்டு ஒரு புஸ்தகத்தை எடுத்து ஒரு பத்துப் பதினைந்து பக்கம் படிக்கற..."

கீர்த்தி அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

"புஸ்தகம் படிக்க நான். நீன்னு நிறைய பேரு வந்தாங்க ... எனக்கு அந்தக் குரல் எல்லாம் பிடிக்கல.... உன் குரல்ல ஒரு அழகு இருக்கு... அதான்."

அவன் சந்தோஷமாகத் தலையசைத்தான். மாலையில் சிநேகிதர்களைச் சந்தித்த போது மாமா வீட்டில் புஸ்தகம் படிக்கப் போகிற விஷயத்தைச் சொன்னான்.

"டேய் மாமாகிட்ட மாட்டிக்கிட்ட இல்ல. அவ்வளவுதான் ... உன் கழுத்தில ஒரு சங்கிலிய கட்டி பத்தோடு பதினொன்னா உன்னையும் ரோட்டுல இழுத்துக்கிட்டுப் போகப் போறார்..."

"ஐயோ... பாவண்டா."

"யாரு?"

"யாரு? எல்லாம் நாய் மாமா கிட்டமாட்டிக் கிட்ட நீதான்."

"போங்கடா" – அவன் கையை வீசிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

அம்மா விளக்கேற்றி வைத்துவிட்டு ஐயப்பன் படத்தின் முன்னே விழுந்து கும்பிட்டுக் கொண்டு இருந்தாள். அவன் நின்று ஒரு பார்வை பார்த்துவிட்டு சப்தம் இல்லாமல் உள்ளே சென்றான்.

திங்கள்கிழமை, அவன் தயங்கியபடி வக்கீல் மாமா வீட்டிற்குள் சென்றான். சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்த மாமா,"வா... வா...' என்று தலையசைத்து வரவேற்றார். அவருக்குப் பின்னால் நின்று கொண்டு இருந்த மூன்று நாய்கள் ஒரே குரலில் குரைத்தன. கையை முன்னே நீட்டி, நாய்களை அடக்கி விட்டு அவனை உட்காரச் சொல்லி நாற்காலியைக் காட்டினார்.

காபி வந்தது. தயங்கியபடியே வாங்கிக் குடித்தான். ஒரு பெரிய நாய் மெது மெதுவாக இவன் பக்கமாக வந்தது.

"சொப்பனா" என்று மாமா நாயை அதட்டினார். அது நின்று நிமிர்ந்து பார்த்தது " உள்ள போ... உம்.." கையைப் பின்னால் நீட்டினார். அது பின்னால் சென்று சுவரோடு சுவராக ஒட்டிப் படுத்துக் கொண்டது. மாமாவையும் சொப்னாவையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தான்.

"கீர்த்தி, நீ நாய்களைப் பற்றி படிச்சி இருக்க?"

அவன் நின்று கொண்டும் படுத்துக் கொண்டும், இருக்கும் நாய்களையே பார்த்தபடி இருந்தான்.

".... அறுபது எழுபது வருஷத்துக்கு முன்னால அமெரிக்காவில ஒரு எழுத்தாளன் நாயை முன்னால வச்சி ஒரு நாவல் எழுதியிருக்கான். அவனுக்கு அமெரிக்காவை விட அந்தக் காலத்து சோவியத்தில நல்ல பேரு... மகா புத்திசாலி... ஆனா வாழ்க்கை ஒன்னும் சரியா இல்ல... ரொம்ப கஷ்டம் நஷ்டம் ... ஆனா எழுத்தில அதெல்லாம் இல்ல... ரொம்ப ஜோரா ஜொலிச்சிக்கிட்டு இருந்தான்... இன்னி வரைக்கும் அந்த ஜொலிப்பு அடங்கவே இல்ல... அதுதான் அவன் மகத்துவம்..."

ஒரு பழுப்பு நிற நாய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு இவனுக்கு நேர் எதிராக கால்களை முன்னே நீட்டிக் கொண்டு உட்கார்ந்தது.

"கதை, ரொம்பச் சின்னக் கதை. ஒரு சீமான் வீட்டல ஒரு நாய் ரொம்ப சொகுசா இருந்துக்கிட்டு, இருக்கு. அதை ஒரு வேலைக்காரன் திருடி விற்று விடுகிறான். அது தங்கம் எடுக்க வடதுருவத்த நோக்கி நாய் வண்டி கட்டிக்கொண்டு நூற்றுக் கணக்கில் ஆட்கள் போய்க் கொண்டிருந்த காலம். சீமான் வீட்டு நாய் தங்கம் எடுக்கப் போற ஒரு வண்டியில கட்டி விடுறாங்க... பாவம் அதுக்குப் பழக்கம் இல்ல... ஓடவும் தெரியாம... வண்டி இழுக்கவும் தெரியாம ரொம்பக் கஷ்டப்படுது..."

அவன் மேல் சட்டையை இழுத்து விட்டுக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"வண்டியில கூட கட்டியிருந்த மற்ற நாய்கள் எல்லாம் சீமான் வீட்டு நாயைக் கடிக்க ஆரம்பித்து விட்டன. வண்டி ஓட்டியேன்னு வண்டிக்காரன் சாட்டையை எடுத்து விளாச ஆரம்பிச்சிட்டான்... பாவம் சொகுசா இருந்த நாய்க்கு இப்பத்தான் உலகம் தெரிகிறது. அந்த மாற்றத்தை – இது புரிந்து கொள்வதை ஒரு ஞானி அறிந்து கொள்வது மாதிரியான ஒரு தொனியில் சொல்லி இருக்கிறான்..." வக்கீல் மாமா நெகிழ்ந்து குரல் உடைய சொன்னார்.

அவர் முகத்தையே பார்த்தபடி இருந்தான். மாமா பின்னால் தன் நாய்களை ஒரு முறை பார்த்துக் கொண்டார். படுத்துக்கிடந்த ஒரு புள்ளி நாய் எழுந்து உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு முன்னே வந்தது. மணி ஐந்து அடித்தது. மாமா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

"கீர்த்தி ... நீ புதன்கிழமை வர்ற... அன்னிக்கி நான் ஒண்ணும் பேசல... நீ தான் படிக்கற...."

அவன் தலையசைத்துக் கொண்டு எழுந்தான். இரண்டு நாய்கள் வாலை அசைத்தபடி இவன் பக்கமாக வந்தன.

மறுபடியும் அவன் மாமா வீட்டிற்குச் சென்ற போது மேசை மீது ஐந்தாறு புத்தகங்கள் இருந்தன. ஏதாவது ஒன்றை எடுத்துப் படி என்பது மாதிரி கையைக் காட்டிவிட்டு மாமா கண்களை மூடிக்கொண்டு விட்டார். அவன் ஒரு சரித்திரப் புத்தகத்தை எடுத்தான். பக்கங்களைத் தள்ளிக்கொண்டே மாமாவைப் பார்த்தான். கண்களை மூடியபடி கேட்கத் தயாராகிக் கொண்டு இருந்தார். நடுவில் இருந்து அவன் படிக்க ஆரம்பித்தான். குரைத்துக் கொண்டிருந்த நாய்கள் வாயை மூடிக் கொண்டன. தலையை மெல்லமெல்ல அசைத்து மாமா அவன் படிப்பதை சந்தோஷமாக செவிமடுத்துக் கொண்டிருந்தார்.

நாட்கள் ஆக ஆக படிப்பதில் அவனுக்கே ஒரு விதமான சந்தோஷம் இருப்பது மாதிரி இருந்தது. அப்புறம் படிப்பதைக் கேட்கும் வக்கீல் மாமா, பரவசத்தோடு ஒரு சின்னப் பையன் மாதிரி ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்தார். இடையிடையே நிறுத்தி, "நல்லா படிக்கற... குரல் ரொம்ப வளமா இருக்கு" என்று பாராட்டிக் கொண்டு வந்தார். அவர் பாராட்டு மேலும் மேலும் அவனை ஆட்கொண்டது. சிநேகிதர்கள், மயில் – எல்லாவற்றையும் விட படிப்பை அவன் முக்கியமாக எடுத்துக் கொண்டான். அதிலும் சரித்திரம்; சரித்திர புத்தகமாகவே எடுத்து எடுத்துப் படித்தான். கல்லூரியில் பேராசிரியர் சொன்ன புத்தகங்களுக்கு மேலாக மாமாவிடம் புத்தகங்கள் இருந்தது அவனை ஆச்சரியமடைய வைத்தது. தன்னை அடக்க மாட்டாதவனாக, "மாமா எங்க நூலகத்தில கூட ஆனந்த குமாரசுவாமி புஸ்தகமெல்லாம் இல்ல மாமா!" என்றான்.

அவர் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். சந்தோஷத்தில் முகம் மலர்ந்தது.

"எல்லாம் எங்க தாத்தா வாங்கினது... கொஞ்சம் அப்பா வாங்கிச் சேர்த்தது. நம்ப பண்ணி இருக்கற காரியம் என்ன தெரியுமா?"

அவன் பதிலொன்றும் சொல்லாமல் மாமா முகத்தையே பார்த்தபடி இருந்தான்.

"அப்பா, தாத்தா வச்சிட்டுப்போயிருக்கிற புஸ்தகத்தை எல்லாம் விற்காம வச்சியிருக்கறது தான். உம்... நீ... படி..." அவர் ஆனந்தகுமாரசுவாமி புஸ்தகத்தை எடுத்துப் படிக்கச் சொன்னார்.

சிவதாண்டவத்தைப் படிக்கிற போது அவனுக்குச் சில இடங்களில் புரிவது போலவும் பல இடங்களில் புரியாதது போலவும், இருந்தது. ஆனாலும் படித்துக் கொண்டே போனான். மூன்று பக்கங்கள் முடிந்தன.

"போதும்... இது போதும்" என்றார் மாமா.

அவன் படிப்பதை நிறுத்தி விட்டு மாமாவை நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன?"

"நான் வீட்டுக்குப் புஸ்தகத்தை எடுத்துக்கிட்டுப் போய் கொஞ்சம் படிச்சிப்பாக்கறேன் மாமா."

"நீ நாளைக்கு வா... நம்ப ரெண்டு பேரும் முதல்ல இருந்து படிக்கலாம்."

அவன் புஸ்தகத்தை, எடுத்த அலமாரியில் வைத்துப் பூட்டிவிட்டு சாவியை மாமாவிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்தான். டி.வி.பார்த்துக் கொண்டிருந்த அம்மாவுக்கு அவன் வருகை ஆச்சரியமாக இருந்தது. சாதாரணமாக அவன் பத்துப் பத்தரை மணிக்குத் தான் வீட்டிற்கு வருவான். வந்தாலும் சாப்பிட உட்கார்மாட்டான். டி.வி.பார்ப்பான். சாப்பிடக் கூப்பிட்டு கூப்பிட்டு அம்மா சோர்ந்து போய் உட்கார்ந்தபடியே தூங்கிப் போய் விடுவாள்.

சினிமா பார்த்துப் பார்த்து அப்பா மாதிரி ஆகிவிடுவானோ என்று ஓரோர் சமயம் அம்மாவுக்குப் பயம் வந்துவிடும். அந்தப்பயம் வந்துவிட்டால் கை காலெல்லாம் நடுங்க ஆரம்பித்துவிடும். நடுக்கத்தோடு மாங்காடு, திருவேற்காடு, திருமுல்லைவாயில் – என்று கோவில் கோவிலாகக் கிளம்பிப் போய்விடுவாள்.

"அம்மா, இந்த நாய் மாமா சுத்த மோசம் அம்மா" என்றபடி நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அம்மா பக்கத்தில் உட்கார்ந்தான்.

"ஏன்? எதுக்கு?"

"பின்ன என்னம்மா... படிக்க ஒரு புஸ்தகம் கேட்டா கொடுக்க மாட்டேங்கறார்."

"கொடுப்பார், எல்லாம் கொடுப்பார்."

"ஒரு நாளைக்கு புஸ்தகத்தை எல்லாம் சுட்டுக்கிட்டு வந்துடப் போறேன்."

"அது என்ன சுடறது."

"அதுவா அம்மா, திருட்டு."

"அடப்பாவி, அப்படி எல்லாம் ஒண்ணும் பண்ணிடாத" – அம்மா எட்டி அவன் கையைப் பிடித்தாள், அவன் தலையசைத்தான்.

திங்கள்கிழமை அவன் வக்கீல் மாமா வீட்டிற்குச் சென்ற போது அவர் ஊஞ்சலில் மெதுவாக ஆடிக் கொண்டிருந்தார். சுற்றிலும் சொர்ணரேகா, சொர்ணதாரா, சொர்ணசுந்தரி, சொர்ணலதா, இவனைப் பார்த்து சந்தோஷமாக தலையசைத்து வாலை ஆட்டின. மாமா கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தார். மணி நான்கு அடித்தது.

"நான் உன் வயசில இந்த மாதிரி ஒழுங்கா ஒரு காரியமும் செய்ததில்லை" என்றார் மாமா. பதிலொன்றும் சொல்லாமல் எதிர் நாற்காலியில் உட்கார்ந்தான். மாமா இடுப்பில் சொருகி இருந்த சாவிக்கொத்தை எடுத்து அவனிடம் நீட்டினார். சாவிக் கொத்தை வாங்கிக் கொண்டு புஸ்தகம் எடுத்து வரச்சென்றான்.

வக்கீல் மாமா எழுந்து போய் நாய்களை பின்னால் கட்டிவிட்டு வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து மெல்ல அசைத்தார். சங்கிலி கிறீச்சிட ஊஞ்சல் அசைந்தாடிக் கொண்டிருந்தது. அவன் கையில் ஒரு புத்தகத்தோடு வந்து, நாற்காலியில் உட்கார்ந்து நிமிர்ந்து பார்த்தான். 'படி' என்பது போல மாமா தலையசைத்தார். இரண்டு



பக்கங்களைத் தள்ளினான். பார்வை ஓரிடத்தில் நிலைகொண்டது.

அவன் படிக்க ஆரம்பித்தான்.

"நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். ஒரு பொழுதும் உன்னை பலவீனன் என்று சொல்லாதே., எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் இரண்டு தோள்கள் மீது சுமந்து கொள். உன் விதியைத் தீர்மானிப்பவன் நீயே என்று அறிந்து கொள். உனக்குத் தேவையான வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடி கொண்டிருக்கின்றன.'

படிக்கப் படிக்கச் சந்தோஷம் கூடிக்கொண்டு போவது மாதிரி இருந்தது. அவன் குரலை உயர்த்தி படித்துக் கொண்டே போனான். பின்னால் இருந்து குட்டிகளோடு சொர்ணசுந்தரி முன்னால் வந்தது. அவன் ஒரு பக்கத்தைத் தள்ளிவிட்டு விட்டு மாமாவைப் பார்த்தான். அவர் கண்கள் மூடியிருந்தன.

"மாமா"

"... ..."

"மாமா"

அவன் புத்தகத்தை மூடினான். மாமா திடீரென்று கண் விழித்தது மாதிரி தலையசைத்துக் கொண்டார்.

அவன் நாற்காலியில், இருந்து எழுந்து அவர் பக்கத்தில இருந்த புத்தக அலமாரி சாவியை எடுத்தான்.

"எதுக்கு எடுக்கற?"

"புஸ்தகத்தை வச்சி பூட்ட மாமா."

"வேணாம்... ஒண்ணும் வேணாம்."

"... ... ..."

"நீ வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போய்படி."

கீர்த்திவாசன் ஆச்சரியத்தோடு மாமாவை தலை நிமிர்ந்து பார்த்தான். அவர் முகத்தில் லேசாக சிரிப்பு மலர்ந்து கொண்டிருந்தது. பின்னால் இருந்து இரண்டு நாய்கள் ஆனந்தமாக விளையாடிக் கொண்டு வந்தன...

– 'இன்னொரு மனிதன்' தொகுப்பிலிருந்து
வெளியீடு : நர்மதா பதிப்பகம்,
தி.நகர், சென்னை–17.

# சிறுசேமிப்பும், வருமான வரிச் சலுகையும்

ஒவ்வொரு நிதியாண்டிலும், சனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில், பணியிலிருப்போர் தாம் வருமானவரி செலுத்தியும், வரி விலக்கு பெற்றும், தமது "வருமானவரி அறிக்கையை" சமர்பிக்க வேண்டியவர்களாக உள்ளனர். வணிகம் மற்றும் தொழில் புரிவோரும் தாம் வருமான வரி செலுத்துவதிலிருந்து விலக்குபெற எவ்வாறு முதலீடு செய்ய வேண்டுமென்ற ஆர்வத்துடன் உள்ளனர். நல்ல குடிமகனாக இருந்திட "வருமான வரி செலுத்துவது அவசியம். வருமான வரி செலுத்தவில்லையெனில்" சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டிய நிலை உள்ளது.

இத்தருணத்தில் பாதுகாப்பான முதலீடாக அமைந்து மனநிறைவான வட்டியினைத் தந்து, வருமான வரிச்சலுகை அளித்திடும் கீழ்க்கண்ட அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களை ஒப்பு நோக்கினால், வருமான வரிச்சலுகையும் பெற்று எதிர்கால பாதுகாப்பிற்கு சேமித்து வைக்கும் மனநிறைவு அடைவோம் என்பதில் பெருமை கொள்ளலாம்.

**முதலீட்டிற்கு வருமான வரிச் சலுகை அளித்திடும் முத்தான மூன்று அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்கள்**

| வ. எண். | சிறுசேமிப்பு திட்டத்தின் பெயர் | குறைந்த பட்ச முதலீடு | அதிக பட்ச முதலீடு | வருமான வரிச் சலுகை பெற்றிடும் முதலீட்டு தொகை | வட்டி சதவீதம் | முதிர்வுகாலம் இதர பயன்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆவது வெளியீடு | ரூ.100 அனைத்து அஞ்சலகங்களிலும் ரூ.100, 500, 1000, 5000, 10,000 ஆகிய இனங்களிலும் கிடைக்கும் | உச்ச வரம் பில்லை | ரூ.60,000 வரையிலான முதலீடுக்கு 20% வரி விலக்கு (டாக்டர்கள் எஞ்சினியர்கள், கலைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் வருமானவரிச் சட்டம் பிரிவு 88—ன் படி ரூ.70,000 வரை முதலீடு செய்து 25% வருமான வரி விலக்கு பெறலாம்) | 11% கூட்டுவட்டி ரூ.100 முதலீடு ஆறாண்டுகளில் ரூ.190.12 ஆகிறது. | 6 ஆண்டுகள் வட்டிக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு—88 மற்றும் 80எல்—ன் கீழ் வரிவிலக்கு பெறலாம். |
| 2. | தேசிய சேமிப்புத் திட்டம்—1992 | ரூ.100 அனைத்து தலைமை அஞ்சலகங்கள் மற்றும் தேர்வுநிலை துணை அஞ்சலகங்களில் கணக்கு துவக்கலாம் | உச்ச வரம்பு இல்லை ஒரு மாதத்தில் எத்தனை முறை வேண்டு மானாலும் பணம் செலுத்தலாம் | ரூ.60,000 வரை முதலீடுக்கு 20% வரிவிலக்கு (டாக்டர்கள் கலைஞர்கள் எஞ்சினியர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் வருமான வரிச் சட்டம் பிரிவு—88ன் படி ரூ.70,000 வரை முதலீடு செய்து 25% வருமான வரிவிலக்கு பெறலாம்) | 10.5% கூட்டுவட்டி | நான்காண்டுகள்/ வட்டிக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு 80எல்—இன் படி ரூ.12,000 வரை வரி விலக்கு உண்டு |
| 3. | 15 வருட பொது வருங்கால வைப்பு நிதித்திட்டம் | ஒரு நிதியாண்டில ரூ.100 | ரூ.60,000 ஒரு நிதியாண்டில | ரூ.60,000 வரை முதலீட்டுகு சட்டம் பிரிவு—88ன்படி வருமான வரி விலகக்கு (விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோருக்கு 25% வரி விலக்கு) | 11% கூட்டுவட்டி | 15 ஆண்டு கணக்கு ஆரம்பித்த 3ஆவது நிதியாண்டி—லிருந்து கடன்பெறவும் ஏழாவது நிதியாண்டி லிருந்து பணம் எடுக்கும் வசதியும் உண்டு. நீதிமன்ற ஜப்தி கிடையாது. வட்டிக்கு முழுவரி விலக்கு உண்டு. |

**தேசிய சேமிப்பு பத்திரங்களில் ரூ.10,000 முதலீடு செய்து வருடந்தோறும் வருமான வரிச்சட்டம் பிரிவு 88—ன் கீழ் வட்டிக்கு வரிச் சலுகை பெற்றிட கீழ்க்கண்ட அட்டவணை பயனுள்ளதாக அமையும்.**

| வ. எண். | ஆண்டு விவரம் | முதலீடு செய்யப்பட்ட காலம் (1.1.99க்கு முன்பு) | 1.1.99 முதல் 14.1.2000 வரை | 15.1.2000க்கு பின்னர் |
|---|---|---|---|---|
| 1. | முதலாண்டு | 1240 | 1183 | 1130 |
| 2. | இரண்டாமாண்டு | 1390 | 1323 | 1258 |
| 3. | மூன்றாமாண்டு | 1560 | 1480 | 1400 |
| 4. | நானகாமாண்டு | 1750 | 1654 | 1558 |
| 5. | ஐந்தாமாண்டு | 1970 | 1851 | 1735 |
| 6. | ஆறு ஆண்டு இறுதியில் | 2240 | 2069 | 1931 |



இதர திட்டங்களான, மாதாந்திர வருவாய்த்திட்டம், ஐந்தாண்டு தொடர் வைப்புத்தொகை திட்டம் ஆகிய திட்டங்களில் கிடைக்கும் வட்டி/போனசுக்கும் வருமான வரிச்சட்டம் பிரிவு 80எல்–ன்படி ரூ.12,000 வரை விலக்கு பெறலாம்.

வரியை வருமானமாக்கிட திரு. **X** என்ற நபர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை கீழ்க்கண்ட வற்றை கண்ணுற்று பார்த்து நீங்களும் பயன்பெறலாம்.

| | | ரூ. |
|---|---|---|
| 1. | திரு **X** என்பவரின் ஆண்டு நிகர வருமானம் | 1,25,000 |
| 2 | வரிவிதிப்பு நிரந்தர கழிவு (Std, deduction) | 20,000 |
| 3 | வரி கட்டுவதற்குரிய வருமானம் | 1,05,000 |
| 4 | வரி விவரம் | |
| | (i) ரூ.50,000 முதல் ரூ.60,000 வரை = 10 சதவீதம் | 1,000 |
| | (ii) ரூ.60,000 முதல் ரூ.1,05,000 வரை = 20 சதவீதம் | 9,000 |
| | மொத்த வருமானவரி=ரூ.1,000 + 9,000 | 10,000 |
| | பொது வருங்கால வைப்பு நிதியில் (GPF) மாதந்தோறும் ரூ.3,000 செலுத்தியதால் வரி கழிவு(–) | 7,200 |
| | மீதம் | 2,800 |
| | இவர் ரூ.14,000ஐ தேசிய சேமிப்பு பத்திரங்களில் முதலீடு செய்வதால் பெறும் வரிவிலக்கு | 2,800 |
| | கட்ட வேண்டிய வரி | இல்லை |

இவர் ரூ.2,800 வரி கட்டுவதால் ஆறு ஆண்டில் அத்தொகை ரூ.5,323 வரை இழப்பாகும்.

ஆனால் அவர் ரூ.14,000ஐ தேசிய சேமிப்பு பத்திரத்தில் முதலீடு செய்வதால், அத்தொகை ஆறாண்டுகளில் ரூ.26,617 ஆக வளர்வதுடன், ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கும் வட்டிக்கும் (ஐந்தாண்டுகள் வரை) வருமானவரி பிரிவு 88ன் படி வரிச்சலுகை உண்டு.

வருமான வரியும் அரசு நிதி ஆதாரமாக அமைகிறது. உங்களது சேமிப்போ உங்களுக்கு பாதுகாப்பான முதலீடாக அமைந்து அரசு திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட நிதி ஆதாரமாக அமைவதால், இத்தருணத்தில் செலவினை சுருக்கி சேமிப்பினை பெருக்கிடவும் "வரிச்சலுகை பெற" சிறந்த தேசிய திட்டங்களான தேசிய சேமிப்பு பத்திரம், தேசிய சேமிப்பு திட்டம் 1992 மற்றும் 15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதித் திட்டங்களில் முதலீடு செய்து பயன் பெறுங்கள்.

***"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை***
***போகா றகலாக் கடை"***

— என்ற வள்ளுவர் வாக்கின்படி நம் வாழ்வினை அமைத்துக் கொள்வோமாக!

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.**

முறையாக நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

***– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து.***



# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

*□ வைகை செல்வி*

பெண் பிறரைச் சார்ந்து வாழ வேண்டியவள் அல்லது பெண்ணால் பிறரைச் சாராமல் வாழ முடியாது என்று காலங்காலமாகப் பெண்களை மூளைச்சலவை செய்து விட்டனர். பெண்களின் உலகம் வீடு மட்டுமே என்று இருந்த நிலைமை மலையேறி விட்டாலும், கிராமப்புறங்களிலும், சிறிய நகரங்களிலும் இன்னும் பெண்ணுக்கு வீடு மட்டுமே உலகமாக இருக்கிறது. இத்தகு சூழலில் பெண் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறாள். இவ்வாறு சார்ந்திருப்பதால் திடீரென ஏற்படும் கஷ்டங்களையோ, இழப்புகளையோ எதிர்கொள்ள முடிவதில்லை. எனவே, பெண்ணுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் ஏற்பட வழி காட்டப்பட்டால் பெண்களின் வாழ்க்கையில் ஒரு சன்னல் கதவு திறப்பது போலிருக்கும். இத்தகு சன்னலைத் தான் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் திறந்திருக்கிறது.

பல காரியங்களிலும் இன்றைய மகளிரின் நிலை பின்னுக்குத் தான் இருக்கிறது என்பதைச் சூசகமாக உணர்த்துவது போலத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அண்ணா சாலையின் மெயின் ரோட்டிலிருந்து உட்பக்கம் தள்ளியிருந்தாலும் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்திற்காக முன்னணியில் நின்று பாடுபட்டு வருகிறது. பொதுவாகப் பெண்களுக்கு அரசின் திட்டங்கள் எல்லாமே நலப்பணி சம்பந்தப்பட்டதாகவே அதாவது கல்வி, குடிநீர், புகையில்லாத அடுப்பு வழங்கல், விதவை மற்றும் கைவிடப்பட்ட பெண்களுக்கான திட்டம் என்று இருக்கின்ற நிலையில், பெண்களுக்கான பொருளாதாரச் சுதந்திரத்தை அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த நிறுவனம். பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் என்பது, 'பெண்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல், ஏழ்மையை அகற்றல், நிர்வாகத் திறமையைக் கற்பித்தல் மற்றும் தொழில் முனைவோராக உருவாக்குதல்' போன்றவற்றை அளிப்பதாக இருக்க வேண்டியதன் அவசித்தைக் கருதி அத்தகுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண்களிடையே குழுக்களை உருவாக்குவதும் அக்குழுக்களைப் பலப்படுத்துவதும் பெண்களை முன்னேற்றுவதற்கான ஒரு உத்தி என எட்டாவது திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இது பெண்களுக்குப் பல விதங்களில் உதவி புரியும். குழுவாக ஒன்று சேர்ந்து செயல்படுகையில் ஒற்றுமை, பரஸ்பரம் விட்டுக் கொடுத்தல், புரிந்து கொள்ளுதல், ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகிய பண்புகள் வளர்கின்றன. மேலும் தனித்து இயங்குவதை விட குழு உறுப்பினராகச் செயல்படுகையில் பலம் அதிகரிக்கும். கிராமப்புறங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அதன் மூலம் பெண்களுக்குத் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உதவி புரிந்து வருகிறது. இதுவே இந்நிறுவனம் அமல்படுத்தும் மகளிர் திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவனத்திலிருந்து (International Fund for Agricultural Development) நிதியுதவிப் பெற்று, கிராமப் பகுதியிலுள்ள ஏழை மகளிரின் மேம்பாட்டிற்கான ஐஃபாட் திட்டம் 1989-ஆம் ஆண்டு மே திங்கள் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் அரசு சாரா அமைப்புகள், வணிக வங்கிகள் ஆகியவற்றிற்கிடையிலான தனித்தன்மை வாய்ந்த கூட்டமைப்பாகும். இத்திட்டத்தில் பங்கு பெற்றுப் பயனடைய பெண்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகாரம் பெற்ற அந்தந்தப் பகுதிகளில் உள்ள அரசு சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் (Non-Governmental Organisation) இணைந்து செயல்பட வேண்டும். இவையே வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 21 வயதிற்கு மேற்பட்ட தேவைமிக்க பெண்களைத் தெரிவு செய்து சுய நிதிக் குழுக்கள் அமைத்து, பெண்களுக்குப் பயிற்சிகளைத் திட்டமிட்டு நடத்துகின்றன. பயிற்சி நாட்களில் சுய உதவிக் குழுக்களின் நோக்கம், ஒற்றுமை, சமூக அந்தஸ்து, சேமிப்பு, சுகாதாரம் குழந்தைக் கல்வி, சேவை மனப்பான்மை, பெண்களின் சட்ட உரிமை, விழிப்புணர்வு, குடும்ப வருமானத்தைப் பெருக்க வழிவகை அறிதல், அரசின் நலத் திட்டங்களை அறியச் செய்தல், குழுக் கூட்டங்களை நடத்துவது எப்படி என்பன போன்ற பல வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு பயிற்சி பெற்ற பெண்கள் வங்கிகளில் கடன் பெற்று, பால் விநியோகம் செய்தல், கால்நடைகள் வளர்த்தல், மூலிகை சேகரித்தல், மாவு அரைத்தல் போன்ற பல சிறு தொழில்களை ஆரம்பித்து இலாபகரமாக நடத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள 75 வளர்ச்சி வட்டாரங்களில் 31.8.98 வரையில் 5207 குழுக்கள் இயங்கி 1,20,960 பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். இதற்கு அடிப்படை 'சுயநிதிக்குழு' அமைப்பாகும். அதிகப்பட்சம் 20 பெண்கள் ஒன்று சேர்ந்து மகளிர் மன்றம் ஒன்றை ஆரம்பித்து, மாதம் ஒரு குறிப்பிட்டத் தொகையைப் போட்டுச் சேமிக்கத் தொடங்குகின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு ஊக்குநர் அதாவது தலைவி போன்று ஒருவர் இருப்பார். மகளிர் தங்களுடைய சேமிப்பை அது எவ்வளவு குறைவாக இருந்தாலும் பொது நிதியில் சேர்த்து வைக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். இதனால் பெண்களுக்குச் சேமிக்கும் பழக்கம் ஏற்படுகிறது. தொடர்ந்து இவ்வாறு சேமிக்கப்படும் சுயநிதியிலிருந்து, தேவைப்படுகிற உறுப்பினர்களுக்குச் சிறு கடன் உதவியும் வழங்கப் படுகிறது. தனிப்பட்ட முறையில் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிய பெண்கள் சேமிப்பின் மூலம் தங்களுடைய பணத்திலிருந்து தேவைப்படும் பெண்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கக்கூடிய அளவிற்கு மேம்பட்ட

நிலையை அடைவது கண்கூடாகத் தெரிகிறது. தனிநபர் சேமிப்பு மூலம் மட்டுமல்லாது குழு உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலமாகவும் குழுவின் நிதி வளர்கிறது. இதனால் பெண்கள் வட்டியைக் கணக்கிடும் முறையையும், கடனைத் திருப்பிச் செலுத்துவதன் முக்கியத்துவத்தையும் கற்றுக் கொள்வதுடன் நிதி மேலாண்மையில் ஒரு ஒழுங்கையும் கடைப்பிடிக்கின்றனர். முறையான அடிப்படையில் இச்சுயநிதி உதவிக் குழுக்கள் செயல்பட ஆரம்பித்த பின்னரே வங்கிக் கடன் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. பெண்ணுக்குச் சிறு கடன் வழங்குதல் என்பது வாழ்வதற்கான நம்பிக்கையை அவளுக்கு வழங்குவதற்குச் சமம். இச்சிறுகடன் மூலம் ஒரு தொழிலை உருவாக்குகிறாள். இதுவரை வெளிப்படாமல் இருந்த தன் திறமைகள் மூலம் அவளின் குடும்பத்தை வறுமையிலிருந்து மீட்க அவளால் இயலுகிறது. ஐஃபாட் திட்டம் தமிழ்நாட்டில் நல்ல முறையில் செயல்பட்டதை அடுத்து இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு மகளிர் திட்டம் என மறுமலர்ச்சி பெற்று, தமிழ்நாட்டின் 21 மாவட்டங்களிலும் செயலாக்கப்பட்டுள்ளது. விரைவில் எல்லா மாவட்டங்களிலும் செயலாக்கப்படவுள்ளது.

இந்த மகளிர் மன்றங்கள் ஆரம்பித்தப் பிறகு பெண்களின் வாழ்க்கையில் பொருளாதார மாற்றம் மட்டுமின்றி வேறு பல மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. வீணாக வெட்டிக் கதைப் பேசிப் பொழுதைப் போக்காமல் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் முன்னேற்றுவதற்காகக் கூடிப் பேசும் வழக்கம் உண்டாகியுள்ளது. கிருஷ்ணகிரியைச் சேர்ந்த பி.சரஸ்வதி என்ற பெண்மணி, 'பெண்களின் முன்னேற்றத்திற்காக எத்தனையோ திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அவை பெண்களைப் போய்ச் சேராததற்குக் காரணம் பெண்களுக்குக் கூடிப்பேசி ஆலோசிக்கும் பழக்கம் இல்லாததே. ஏனெனில் அதற்கான வாய்ப்பும் தரப்படவில்லை. இந்தச் சுயநிதிக் குழுக்கள் மூலம் பெண்கள் அத்தகைய வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்று உணர்ந்து கூறுகிறார். மேலும் இதனால் வெளி உலகத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. பொதுப் பிரச்சினைகளில் ஈடுபட ஆர்வம் எழுகிறது. குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர். குடும்ப வரவு - செலவுகளை எழுதி வைக்கின்றனர். எதிர்காலத்தில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று திட்டமிடும் பக்குவமும் தன்னம்பிக்கையும் இப்பெண்களிடையே ஏற்பட்டுள்ளது.

நாளடைவில் இச்சுயநிதிக் குழுக்களைச் சுயசார்புத் தன்மை அடையச் செய்து சுயமாகச் செயல்பட வைப்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். பெண்கள் பொருளாதாரச் சுதந்திரத்தை அல்லது மேம்பாட்டைச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் அடைவதனால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. பெண்களிடம் அதிக வேலை வாங்கிக் குறைந்த ஊதியம் கொடுக்கின்ற முதலாளிகளின் தொல்லை இருக்காது. உடல் நலக் குறைவாயிருந்தாலும் கட்டாயமாக நீண்ட மணி நேரங்கள் வேலைப் பார்க்க வேண்டிய சூழலிலிருந்து பெண்கள் விடுபடலாம். கொத்தடிமை போன்ற கொடிய பழக்கங்கள் குறையும். பாலியல் வன்முறை, அநாகரிகமாகப் பெண்களை நடத்துதல் போன்ற தொல்லைகளிலிருந்து பெண்கள் தப்பலாம். திருமணமானப் பெண்களுக்கு வீட்டில் இருந்து கொண்டு குடும்பத்தையும் கவனித்தபடி குடும்ப வருமானத்தைப் பெருக்கவும் முடிகிறது.

'ஓடி விளையாடு பாப்பா' என்று பாரதி பெண் குழந்தைகளுக்குச் சொல்லியிருந்தாலும் கூட வளர்ந்த பிறகு பெண்ணின் வாழ்க்கையில் பொழுது போக்கு, விளையாட்டு, முதலிய அம்சங்களுக்கு இடம் தரப்படுவதில்லை. நேரமும் கிடைப்பதில்லை. இத்தேவையைக் கண்டறிந்து 1997-98-ஆம் ஆண்டில் தருமபுரி, சேலம், விழுப்புரம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் மாவட்டம் ஒன்றுக்குப் பத்து வீதம் ஐம்பது மகளிர் நல மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையத்தில் செய்தித் தாள்கள், விளையாட்டுச் சாதனங்கள், ஒலி நாடாப்பதிவு இணைந்த சிறிய வானொலிப் பெட்டி ஆகியவை உண்டு.

மேலும் இந்நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படும் 'முற்றம்' என்ற மாத இதழில் பெண்களுக்கான பல்வேறு துறைகளின் திட்டங்கள், செயல்பாடுகள், பெண் தொழிலாளர்களுக்கான சட்டங்கள் பற்றியெல்லாம் செய்திகளைக் காணலாம். இந்த இதழ் மூலம் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளைப் பற்றியும் அறிய முடிகிறது.

பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தின் மூலம் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தை ஏற்படுத்துவதும், அவர்களின் திறமையை வெளிக்கொணர்ந்து பெண்களிடம் தன்னம்பிக்கை, நிர்வகிக்கும் திறமை ஏற்படுத்துவதுமே இக்கழகத்தின் நோக்கம் என்று ஒரு உயரதிகாரி கூறினார். அவரிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வெளியேறுகையில் கையில் கிடைத்த 'முற்றம்' இதழைப் புரட்டியபோது கூத்தம்பாக்கம், அன்னை தெரஸா குழுவைச் சேர்ந்த எழிலரசி என்பவர், 'முன்பு எங்களால் முடியாது என்று ஒதுக்கப்பட்ட காரியங்கள் யாவும் இப்போது பெண்களாலும் செய்ய முடியும் என்று நிரூபணமாகி வருகிறது' என்று கூறியிருந்ததை வாசிக்கையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தனது நோக்கத்தை விரைவில் எட்டிப்பிடிப்பதற்கான சரியான பாதையில் போய்க் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

பிறர் கைகளையே எதிர்பார்த்துக் கொண்டிராமல் தன்னாலேயே தனக்குப் பொருளாதார மேம்பாட்டைத் தேடிக்கொள்ள முடிகிறது என்பதில் உள்ள மனநிறைவு எதிலுமே இல்லை. அது மட்டுமல்ல, தன் கையால் தனக்கு மட்டுமல்ல, 'தன் கையே தனக்குதவி' என்ற நிலையிலிருந்து உயர்ந்து, பிறருக்கும் உதவப் பிற பெண்களுடன் கையோடு கை கோர்த்துக் கொண்டு, எத்தனையோ காரியங்களைப் பெண்கள் சாதிக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

– முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவித்து
செயல்படுத்தப்படும் 'மகளிர் திட்டம்' குறித்து
20-2-2000 நாளிட்ட தினமணி கதிரில்
இடம் பெற்ற கட்டுரை.

நன்றி : தினமணி கதிர்



# தொலைதூர வனப்பகுதியில் மனுநீதி நாள் முகாம்

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி ஊராட்சி ஒன்றியம் எல்லைக்குட்பட்ட வனப்பகுதியில் அமைந்துள்ள பிலிகுண்டு என்ற கிராமத்தில் இதுவரை தருமபுரி மாவட்ட வரலாற்றில் மனுநீதி நாள் முகாம் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். அங்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்ற குறை அப்பகுதி மக்களிடம் இருந்து வந்தது. இதனைக் கேள்வியுற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., அவர்கள். 16-2-2000 அன்று ஒக்கேனக்கல் வனப்பகுதி பிலிகுண்டு கிராமத்தில் சிறப்பு மனுநீதி நாள் முகாமிற்கு ஏற்பாடு செய்தார். கார் செல்லக்கூடிய அளவுக்கு வசதி இல்லாத சாலையில் ஜீப் மூலம் அதிகாரிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பிலிகுண்டு கிராமத்தில் அனைத்துப் பகுதிகளையும் சுற்றிப்பார்த்து நிலைமைகளைக் கண்டறிந்தார். அங்குள்ள பள்ளியில் பயிலும் மாணவர்களையும் அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து, ஆசிரியர் சரியாக பணிக்கு வருகிறாரா, சீருடைகள் வழங்கப்படுகிறதா என்பதைக் கேட்டறிந்தார். குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவையும்



பரிசோதித்துப் பார்த்தார். அப்பகுதியில் வாழும் இருளர்கள், செம்படவர்கள், தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டினையும், காலிமனைகளையும் கண்ணுற்ற அவர், பட்டா கோரிய பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றதோடு, பட்டா பெற்றுள்ள நபர்களின் பட்டியலையும் கண்டு அவ்விடத்திலேயே 22 தொகுப்பு வீடுகளை உடனடியாக கட்ட தளி ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உத்தரவிட்டார்.

அதில் 12 வீடுகள் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கும், 10 வீடுகள் மலைவாழ் மக்களுக்குமாக மாவட்ட ஆட்சியர் ஒதுக்கீடு செய்தார். மொத்தம் 80 குடும்பங்களும் சுமார் 400 பேரும் கொண்ட தொட்டமச்சி ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட பிலிகுண்டு கிராமத்தில் 22 வீடுகளை ஒதுக்கீடு செய்துள்ளதை ஒரு சிறப்பு ஒதுக்கீடு என்று கூறினால் அதுவே பொருந்தும். மீதம் பட்டா பெறும் நபர்களுக்கு அடுத்த ஆண்டில் தொகுப்பு வீடுகள் வழங்கப்படும்.

பின்னர் அங்குள்ள ஆழ்துளை குழாய்க் கிணறுகளை பார்வையிட்டு அத்தண்ணீர் உப்புத் தண்ணீராக இருப்பதை சுவைத்து கண்டறிந்து உடனடியாக ஆற்றுப்படுகை ஓரத்தில் 2 ஆழ்குழாய் கிணறுகளை அமைக்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு உத்தரவிட்டார். அப்பகுதி பொதுமக்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்கொடுக்க கேட்டுக்கொண்டார்கள். இன்னும் ஆறு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உத்தரவாதமளித்தார். ஏற்கெனவே இக்கிராமத்தில் 10 தெருவிளக்கு எரிவதை கண்ணுற்று தொகுப்பு வீடு பணி முடியும் தருவாயில் கூடுதலாக தெருவிளக்கு அமைக்கவும் உத்தரவிட்டார்.



இக்கிராமத்தில் 65 குடும்ப அட்டைகள் உள்ளதாகவும், இன்னும் 40 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அத்தோடு பகுதிநேர நியாயவிலைக் கடை வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்கள். இதற்கு உடனடியாக தகுதியுடைய நபர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்படும் என்றும், அரசிற்கு சிறப்பு இனமாக இப்பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க பரிந்துரை செய்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அமைக்கப்படும் என உத்திரவாதமளித்தார். இப்பகுதியில் தொடங்கப் படவுள்ள பகுதிநேர நியாயவிலைக் கடை இங்கு செயல்பட்டு வரும் மகளிர் குழுவினரால் நடத்தப்படும்.

பின்னர் 18 நபர்கள் முதியோர் உதவித்தொகையும், உடல் ஊனமுற்றோர் உதவித்தொகையும் கோரி, மனுக்கள் வழங்கினார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள் துணை இயக்குநர் (மருத்துவம்), மாவட்ட மறுவாழ்வு அலுவலர், சம்பந்தப்பட்ட துயர்துடைப்பு வட்டாட்சியர் ஆகியோரை ஸ்தலத்திலேயே ஆய்வு செய்ய உத்தரவிட்டு தகுதிபெற்ற 18 நபர்களுக்கும் உதவித் தொகைக்கான ஆணைகளையும் வழங்கினார். வனப்பகுதியில் அமைந்துள்ள சாலைப்பணியினை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி ஒதுக்கீட்டில் இருந்து செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வனத் துறையினரின் அனுமதி கிடைக் காததால் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது என்றும், விரைவில் அனுமதி பெற்று சாலைப்பணி முடித்துத் தரப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார்.

மத்திய அரசின் நீர் ஆணையம் சார்பில் செயல் பட்டு வரும் காவிரி நதி நீர் அளவு மையத்தை நேரில் சென்று பார்வையிட்டார். பின்னர் பொது மக்களிடம் கூறுகையில், விரைவில் வனப் பகுதியில் அமைந்துள்ள இக்கிராமம் மிகவும் வளர்ச்சியடைந்த கிராமமாக மாற்றப்படும் என்ற உத்திரவாதத்தையும் அளித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவரை வழியனுப்பிவைத்த கிராம பொது மக்கள், இதுவரை வாக்குறுதிகளை மட்டுமே பெற்றுவந்த நாங்கள் இன்று உங்களின் வருகையினால் பல்வேறு அரசின் உதவிகளையும், குறிப்பாக குடியிருக்க வீடு, குடிதண்ணீர், பகுதிநேர நியாயவிலைக் கடை, இலவச வீட்டுமனைப்பட்டா மற்றும் ஸ்தலத்திலேயே உதவித் தொகைகளுக்கான ஆணைகளைப் பெற்றுள்ளோம். 1974ஆம் ஆண்டு கலைஞர் அரசால் மின் விளக்குகளைப் பெற்ற நாங்கள் இன்று அவரது ஆட்சியிலே அனைத்து வசதிகளையும் பெற்றுள்ளோம் என்ற மனநிறைவோடும் மனநெகிழ்வோடும் உங்களை வழியனுப்புகிறோம்.

**– மு. பழனிசாமி**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி

★



# வேளாண்மை வளர்ச்சியில் சாதனைகளும் சவால்களும்

□ **டாக்டர் க. அருள்மொழி, இ.ஆ.ப.,**
**இயக்குநர், வேளாண்மைத்துறை**

நம் மாநிலத்தின் மக்கட் தொகையில் மூன்றில் இருபங்கினர் கிராமப்புற பொருளாதாரம் சார்ந்துள்ளனர். கிராமப்புற பொருளாதாரமோ வேளாண்மை சார்ந்த வளர்ச்சியை மையமாக உள்ளது. எனவே வேளாண்மையும் அது சார்ந்த தொழில், வணிக வளர்ச்சியும் மாநில பெருவாரி மக்களின் வளமைக்கு தளமாக உள்ளன. இயற்கை வளங்களையும், உடல் உழைப்பையும் பெருமளவு சார்ந்த வேளாண்மைத் தொழில், நகர்ப்புற ஆலை, இயந்திரத் தொழில்களைவிட குறைந்த வருமானம் ஈட்டுவதாலும், மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) பகுதி நேர வேலையின்மை (Partial Unemployment) உள்ளிட்ட காரணங்களாலும், வறியவர்களின் களமாகத் திகழ்கிறது. சவால்கள் நிறைந்த வேளாண் மக்களின் வாழ்வில் மலர்ச்சி தோன்றிட தமிழக அரசின் வேளாண்மைத்துறை ஆற்றி வரும் பணி மற்றும் தொலைத் திட்டங்கள் பற்றிய விவரங்களை இக்கட்டுரை மூலம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.

வேளாண்மைத் துறையின் முக்கிய முதன்மை குறிக்கோளானது உணவு தானிய உற்பத்தியில் முதற்படியாக தற்சார்பு நிலையும், படிப்படியாக உபரி உற்பத்தி நிலையும் எட்டுவதாகும். அண்மையில் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்தின் மக்கட் தொகை மதிப்பீட்டின்படி நம் மாநில மக்கள் எண்ணிக்கை 6.36 கோடியை (2000 ஆண்டு) எட்டியுள்ளது. ஆடவர் (32.6%), மகளிர் (31%), சிறுவர் (24.3%), குழந்தைகள் (12.1%) ஆகியோரின் குறைந்தபட்ச அரிசித் தேவை அடிப்படையில் கணக்கிட்டால் (முறையே நபர்க்கு/ நாளுக்கு 365, 310, 296, 190 கிராம் விகிதத்தில் கணக்கிடப்பட்டது) 71.0 இலட்சம் டன் அரிசித் தேவையுள்ளது. நமது அண்மைக் கால அரிசி உற்பத்தி முன் எப்பொழுதும் இல்லாத சாதனை அளவை எட்டியுள்ளதை கீழே குறிப்பிட்டுள்ள புள்ளி விவரங்களின் மூலம் காணலாம்.

| ஆண்டு | உற்பத்தி (இலட்சம் டன்) |
|---|---|
| 1996–97 | 58.05 |
| 1997–98 | 68.94 |
| 1998–99 | 81.41 |

எனவே, அரிசி உற்பத்தியில் சுயசார்பு நிலையைக் கடந்து உபரி நிலை நோக்கி நம் மாநிலம் நடைபோட்டு வருவது கண்கூடு. இந்த உபரி உற்பத்தியை வரும் ஆண்டுகளில் நிலைப்படுத்தி, ஏற்றுமதி வாய்ப்புகள் மூலம் உயர் வருவாய்களுக்கு முனையவேண்டும்.

**உணவு தானியங்களில்** அரிசிக்கு அடுத்தபடியாக சிறுதானியங்கள், பயறுவகைத் தானியங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆயினும் புஞ்சைப் பயிர்களான சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு ஆண்டுதோறும் குறைந்து வருகிறது. பாசனவசதி பெருக்கத்தாலும், இலாபகரமான இதரப் பயிர்கள் விவசாயிகளை ஈர்ப்பதாலும், ராகி, கம்பு போன்ற தானியங்கள் உண்பது குறைந்து வருவதாலும் இந்த வகையில் உற்பத்தி குறைவு தவிர்க்க முடியாமல் உள்ளது. இவற்றின் உற்பத்தியில் பெரும்பங்கு கால்நடைத் தீவனம், மாவு (Starch) மருத்துவ சர்க்கரை (குளுகோஸ்/டெக்ஸ்ட்ரோஸ்) போன்றன தயாரிக்கப் பயன்படுகின்றன. கூடுதல் அரிசி உற்பத்தி வாய்ப்புகளால் மொத்த உணவு தானிய இலக்கு பெரும்பாலும் எட்டப்பட்டாலும், சத்துள்ள சிறு தானியங்களாக இவற்றைக் (Nutritive Grains) கருதுவதால், அவற்றின் சாகுபடியில் தொடர்ந்து விரிவாக்க முயற்சிகளை முடுக்கிவிட்டு, சாகுபடி சரிவைத் தடுத்து வருகிறது.

| ஆண்டு | மொத்த உணவு தானிய உற்பத்தி (இலட்சம் டன்) | |
|---|---|---|
| | இலக்கு | சாதனை |
| 1996–97 | 95.00 | 69.30 |
| 1997–98 | 95.00 | 81.04 |
| 1998–99 | 97.75 | 94.12 |

நடப்பு ஆண்டில் (1999–2000) 100 இலட்சம் டன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிறுதானியங்களான சோளம், கம்பு சராசரி உற்பத்தித் திறனில் அகில இந்திய அளவில் நம்



மாநிலம் முக்கிய இடம் வகிக்கிறது. பயறு உற்பத்தியில் கடும் குறைபாடுள்ளதாக மதிப்பிடப்பட்டாலும், இந்த மதிப்பீட்டு முறையிலேயே கடும் குறைபாடுகள் உள்ளதால் சரியான நிலை நிர்ணயிக்க இயலவில்லை. பொதுவாக புஞ்சைப்பயிர்களில் இரண்டாம் பயிர், கோடைப்பயிர், கலப்புப் பயிர் / இடைப் பயிர்கள் பதிவு செய்வதில் விடுபாடுகள் மலிந்துள்ளதால் இறுதி முன்மதிப்பீடுக்கும், இறுதி மதிப்பீடுக்கும் கடும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் சரியான உற்பத்திநிலையை முன்மதிப்பீட்டு அடிப்படையில் ஈடுசெய்ய திட்டமிடுவதே சாத்தியமாக உள்ளது. பொதுவாக பயறு வகையில் உயர் விளைச்சல் ரகங்கள் உருவாக்குவதில் தேக்க நிலையிருப்பினும் உழவியல் நுட்பங்களான இலை வழியாக டி.ஏ.பி. தெளிப்பு போன்ற முறைகளைப் பிரபலப்படுத்தி விளைச்சல் உயர்த்த விரிவாக்க முயற்சிகள் முடுக்கப்பட்டுள்ளன.

கரும்பு விளைச்சலில் உலகளவில் பெறப்படும் உயர் சராசரி மகசூலைவிட (எகிப்து 110 டன்) தமிழ்நாட்டில் கூடுதலாக (118 டன்/எக்டேர்) விளைகிறது. மொத்த எண்ணெய்வித்துப் பயிர்களில் தமிழ்நாடு இந்தியாவிலேயே அதிகபட்ச சராசரி மகசூல் விளைவித்து முதலிடத்தில் உள்ளது. (Agricultural Statistics at a glance - GOI, 1999).

| எக்டர் மகசூல் (9 எண்ணெய்வித்து பயிர்கள்) | கிலோ | இடம் |
|---|---|---|
| இந்தியா | 840 | – |
| தமிழ்நாடு | 1432 | 1 |
| குஜராத் | 1312 | 2 |
| பஞ்சாப் | 1131 | 3 |

அதிகம் பயிராகும் மணிலாவில் நம் மாநிலம் முதல் நிலையில் (1630 கிலோ/எக்டர்) உள்ளது இதற்குக் காரணமாகும். பருத்தியில் நம் மாநில உற்பத்தியில் ஒரு தேக்க நிலை தொடர்கிறது.

| ஆண்டு | பஞ்சு உற்பத்தி (இலட்சம் பேல்) | பரப்பு (இலட்சம் பேல்) | சராசரி மகசூல் (இலட்சம் பேல்) |
|---|---|---|---|
| 1996–97 | 3.28 | 2.58 | 221 |
| 1997–98 | 4.02 | 2.48 | 276 |
| 1998–99 | 4.06 | 2.19 | 316 |

பயிர் பாதுகாப்பு செலவினங்கள் கூடுதலாகவும், பஞ்சுவிலை நிலையற்றதாக உள்ளதாலும் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. எனினும் சராசரி மகசூல் உயர்வால் மொத்த உற்பத்தியில் சரிவு தடுக்கப்படுகிறது. எனினும் உள்ளூர் ஆலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும், விவசாயிகளுக்குக்



கட்டுப்படியான விலைகள் உறுதி செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக "பருத்தி மன்றம்" (Cotton Council) அமைத்து, வரும் ஐந்தாண்டுகளில் பஞ்சு உற்பத்தியை மும்மடங்கு உயர்த்த உத்திகள் வகுக்கப்பட்டுள்ளன.

**சவால்களை எதிர் கொள்ள நடவடிக்கைகள்:**

பசுமைப்புரட்சியின் விளைவாக உணவுப் பஞ்சம் தவிர்க்கப்பட்டு, தற்சாா்பு நிலை அடைந்தாலும், உயர் விளைச்சல் உத்திகளான இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் பயன்பாட்டு மூலம் அடையப்பட்ட உயர் விளைச்சல்கள் சுற்றுச்சூழல் எதிர் விளைவுகளைத் தோற்றுவித்துள்ளன. இவற்றை தவிர்த்து மண், பாசனநீர், பயிர் தூய்மைகளைப் பேணும் வகையில் இயற்கை வேளாண்மை (Organic Farming) முறைகள் ஊக்குவிக்கப்படுகின்றன. நெற்பயிரில் நீலப்பச்சைப் பாசி, அசோலா, அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் போன்றவைகள், பசுந்தாள் எருக்கள் மூலமும் மண் வளமையைக் கூட்டி உயர் விளைச்சல் பெற முடியும்.

இதுபோன்று ஏனைய பயிர்களிலும் இயற்கை எருககள், நுண்ணுயிர்கள் (அசடோபாக்டர், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா) போன்றவை பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இவைகளை அளவோடு வழங்கும் இரசாயன உரங்களுடன் ஒருங்கிணைந்து உயர் மகசூல் பெற வழிவகை செய்யப்படுகின்றன.

இராசயன பூச்சிக் கொல்லிகளைக் குறைத்து இயற்கை முறைப்பயிர் பாதுகாப்பு வழிகளும் கண்டுபிடித்து விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கப் படுகிறது. 1983–84இல் 10,367 டன்னாக இருந்த இராசயன பூச்சி மருந்து விற்பனையை (தொழில்நுட்பத்தரம்) படிப்படியாக குறைத்து தற்போது 1730 டன்னாக (1998–99) உள்ளது. தாவர பூச்சிக் கொல்லிகள் சுற்றுச்சூழல் நச்சுத்தன்மை மிகாமல் காப்பதால் இவையே பெரும்பாலும் பரிந்துரைக்கப்படுகின்றன. உதாரணமாக 1994–95இல் 30,000 லிட்டர் வேம்பு அடிப்படை பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்பட்ட நிலை மிகுந்து, இப்போது 3,60,000 லிட்டர் வரை உயர்ந்துள்ளது. தவிரவும் அனுகூலப்பூச்சிகள் பாக்டீரியா, வைரஸ் மூலம் நாசகாரப பூச்சிநோய்களைக் கட்டுப்படுத்தியும் பயிர் சேதங்கள தடுக்கப்படுகிறது. உதாரணமாக 1994–95இல் 60,000 டன் பயன்படுத்திய பாசில்லஸ் துரிஞ்சன்சிஸ் இப்போது 10 மடங்கு உயர்ந்து 6 டன் அளவு பயன்படுத்தப்படுகிறது. என்.பி.வி. உபயோகமும் 4 மடங்கு உயர்ந்துள்ளது.

பாசனத் தேவைகள் மிகுந்து, சேமிப்பு வாய்ப்புகள் குறைந்து வருவதால் பாசன மேலாண்மை முறைகள், பயிர் மாற்று உத்திகள் (Crop Diversification) செயல் விளக்கங்கள் மற்றும் பயிற்சி முகாம்கள் மூலம் பிரபலப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக பொதுப்பணித்துறை சீரமைத்த பாசன ஏரி ஆயக்கட்டுகளில (1998–99இல் 83 ஏரிகள்) பயிர் மாற்று செயல் விளக்கங்கள் மூலம் பயிர் சாகுப்படித்திறன் (Cropping Intensity) உயர்த்தி, கூடுதல் பண்ணை வருவாய் பெற பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. தவிர பருத்தி, கரும்பு, எண்ணெய்வித்து வளர்ச்சி திட்டங்களில் தெளிப்பு / சொட்டு நீர்பாசன அமைப்புகள் பொருத்தி குறைந்த நீர்த்தேவையில் மிகுந்த பரப்பில் சாகுபடி செய்ய சலுகைகள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறையும் இணைந்து செயல்படுகிறது.



புதுயுகத்தின் சமத்துவக் கருத்தையொட்டி பண்ணை மகளிர்க்கு பெண் அலுவலர்கள் மூலமே பயிற்சிகள் அளித்து புதிய தொழில் திறமைகளை வழங்கி மகளிர் மேம்பாட்டுக்கும் (Gender Equity) டான்வா திட்டத்தின் மூலம் இத்துறை பணியாற்றி வருகிறது. மகளிர் வருவாய் அவர்களது

பொருளாதார சமத்துவத்தை ஈட்ட உறுதுணையாக அமைவது, இத்திட்டத்தில் மாநிலம் முழுவதும் கண்கூடாக தெரிவதை விவசாயக் குடும்பத்தினர் அறிவர்.

பயன்படாமல் உள்ள தரிசு நிலங்களைப் படிப்படியாக பயன்படுத்தும் நோக்கில் நடப்பு ஆண்டில் 10 மாவட்டங்களில் தலா 1,000 எக்டர் வீதம் 10,000 எக்டர் மரச்சாகுபடிக்கு கொண்டு வரப்படுகிறது. இதைத்தவிர நீர்ப்பிடிப்பு பகுதிகளில் வேளாண்மை வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டத்திலும் 84 ஊராட்சி ஒன்றியங்களில் இவ்வாண்டு ரூ.1,700 இலட்சம் செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

பல்வேறு வேளாண்மை சார்ந்த துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் வட்டாரந்தோறும் 50 எக்டர் பரப்பில் பல்துறை செயல் விளக்கத் திடல்கள் அமைத்து எண்ணற்ற வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை உள்ளூர் வளம் மற்றும் தேவைக்கேற்ப செயல்படுத்தி விவசாயிகள் பயன்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### உழவர் சந்தை

வேளாண்மை விற்பனைத்துறை மூலம் செயல்படும் மாண்புமிகு முதல்வரின் "உழவர் சந்தை" திட்டத்திலும் வேளாண்மைத்துறைப் பணியாளர்கள் தீவிர பங்கேற்றுப் பணியாற்றுகிறார்கள். உற்பத்தியாளர்களையும், நுகர்வோர்களையும் ஒருங்கிணைத்து இருசாராரும் பயன்பெறும் வண்ணம் தீட்டப்பட்டுள்ள இத்திட்டம் வேளாண் வளர்ச்சியில் ஒரு புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

### எதிர்காலத் திட்டங்கள்

வேளாண்மை போன்ற பரந்து விரிந்த துறையின் தேவைகள், சவால்கள் எண்ணில் அடங்கா. தென்னையில் அண்மை யாண்டுகளில் சவாலாக உருவாகியுள்ள "ஈரியோபிட்" சிலந்தி தாக்குதல், கரும்பு பயிரில் பல பிரபலமான இரகங்களையும் தாக்கிவரும் செவ்வழுகல் (Red Rot) நோய் போன்ற சவால்கள், பாசன / எரிசக்தி தேவைகளில் எழுந்துள்ள பற்றாக்குறைகள், புதிய பொருளாதார சூழ்நிலைகளால் தோன்றியுள்ள வாய்ப்பு ஆகியவைகளை எதிர்கொள்ள இத்துறை தயாராகி வருகிறது.

பல சிறுவிவசாயிகள் இணைந்து உயர் வேளாண் முதலீட்டில், அதிநவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் (Co-operative/Corporate farming) வாய்ப்புகளை ஊக்குவித்தல், இலாபகரமான ஒட்டு நெல் இரகங்களை தெரிவு செய்து உபரி உற்பத்தி மூலம் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாக்குதல், விவசாயிகள் பலவகைப்பயிர்களையும் காப்பீடு செய்யும் வசதிகளை உருவாக்கி விரிவுபடுத்துதல் போன்ற பல தொலைநோக்கு திட்டங்கள் தயாராகி வருகின்றன.

மேலும் அதிகரிப்பதற்கு வாய்ப்பில்லாத சாகுபடிப்பரப்பு மற்றும் நீர்ப்பாசன ஆதாரங்க்ள், பெருகிவரும் மக்கள் தொகை, வாங்கும் திறன் (Purchase Power) பெருக்கத்தால் உயர்ந்து வரும் நுகர்வு (Percapita Consumption) உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக அறிஞர்கள், தன்னார்வ ஆய்வு நிறுவனங்கள், சகோதரத்துறையினர் மற்றும் விவசாயிகளுடன் இணைந்து ஆக்கபூர்வமாக பணியாற்றி சாதனை புரிய தமிழக வேளாண்மைத்துறை ஆயத்த நிலையில் உள்ளது. ★

## தன்னார்வப் பயிலும் வட்டம்

வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் இளைஞர்கள், போட்டித் தேர்வுகளில் கலந்துக் கொண்டு பணி நியமனம் பெறுகின்ற அளவுக்குத் தங்களின் திறமைகளை அதிகரித்துக் கொள்ள ஏதுவாக தமிழ்நாட்டிலுள்ள 24 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலை நாடுவோர்களின் தன்னார்வப் பயிலும் வட்டம் (Study Circles) ஏற்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டது.

1. காஞ்சிபுரம்; 2. திருவள்ளூர்; 3. வேலூர்;
4. திருவண்ணாமலை; 5. கடலூர்; 6. திருவாரூர்;
7. தஞ்சாவூர்; 8. நாகப்பட்டினம்; 9. நீலகிரி;
10. பெரம்பலூர்; 11. கிருஷ்ணகிரி; 12.கரூர்;
13. ஈரோடு; 14. திண்டுக்கல்; 15. சிவகங்கை;
16. இராமநாதபுரம்; 17. விருதுநகர்; 18.திருநெல்வேலி;
19. தூத்துக்குடி; 20. நாகர்கோவில்; 21. புதுக்கோட்டை;
22. விழுப்புரம்; 23. நாமக்கல்; 24. தேனி ஆகிய
24 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேலை நாடுவோர்கள், தன்னார்வப் பயிலும் வட்டங்களில் உறுப்பினர்களாக இணைந்து, போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு தங்களின் போட்டியிடும் திறனை அதிகரித்து வெற்றியைத் தேடிக்கொள்ள, இந்தத் தன்னார்வப் பயிலும் வட்டங்கள் உதவும். தன்னார்வப் பயிலும் வட்டங்களில், போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் மனுதாரர்களுக்கு இலவசச் சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும். போட்டித் தேர்வுகளுக்குப் பயன்படும் புத்தகங்கள், மாதாந்திர மற்றும் வாராந்திர இதழ்கள் வாங்கப்பட்டு, தற்போது இந்தத் தன்னார்வ பயிலும் வட்டங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புத்தகங்கள்/ நாளிதழ்கள்/ வாரஇதழ்கள்/ இருவார இதழ்கள் ஆகியவற்றைப் போட்டித் தேர்வுக்காகத் தங்களைத் தயார் செய்பவர்கள் வேலைவாய்ப் பகங்களுக்குச் சென்று இவற்றைப் பயன்படுத்தலாம். இந்தத் தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாரத்தில் ஏழு நாட்களும் செயல்படும். ★



## உடல் உழைப்புத் தொழிலாளர் நலத் திட்டம்

தமிழ்நாடு அரசு 1982–ஆம் வருடத்திய தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி வரன்முறை மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தினை இச்சட்டத்தில் கண்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 55 தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தும் நோக்கத்தோடு இயற்றியுள்ளது. அவை



- ☐ சுமை ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், பேக்கிங் செய்தல், தூக்கிச் செல்லுதல், எடைபோடுதல், அளத்தல் ஆகிய தொழிலில் ஈடுபடுவோர், இத்தொழில் தொடர்பாகக் கீழ்க்கண்ட இடங்களில் பணிபுரிவோர்
  - ❖ மார்க்கெட், கடைகள், டிப்போ, தொழிற்சாலை, வேர்ஹவுஸ், கிடங்கு உள்ளிட்ட நிறுவனங்கள்.
  - ❖ துறைமுகங்களில் மேற்கண்ட சுமைப்பணிகளில் ஈடுபடுகிற துறைமுகத் தொழிலாளர்கள் அல்லாத ஏனையத் தொழிலாளர்கள்
  - ❖ ரயில்வே யார்டுகள், குட்ஷெட்டுகளில் சுமைப்பணிச் செய்யும் ரயில்வே தொழிலாளர்கள் அல்லாத ஏனையத் தொழிலாளர்கள்
  - ❖ தமிழக வேளாண் பொருட்கள் சந்தைக்குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள சந்தைகளில் சுமைப்பணி புரிவோர்.
- ☐ பப்ளிக் டிரான்ஸ்போர்ட் வாகனங்களில் சுமை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் அது தொடர்பான பணிகளில் ஈடுபடுவோர்
- ☐ கிடங்குகளில் (Godown) தானியங்களை ஏற்றுதல், இறக்குதல், எடுத்துச் செல்லுதல், பிரித்தல், தானியங்களைச் சுத்தம் செய்தல், கோணிகளில் நிரப்புதல், முட்டைகளைத் தைத்தல் மற்றும் இவை தொடர்பான வேலைகளில் ஈடுபடுவோர்.
- ☐ உப்பளம் (Salt pans)
- ☐ மீன் பிடிக்கும் தொழில் (Fishing Industry)
- ☐ படகு சம்பந்தமான தொழில்கள் (Boat Working)
- ☐ மரம் சம்பந்தப்பட்ட தொழில் (Timber Industry)
- ☐ கயிறு தொழில் (Coir Industry)
- ☐ அணைகள், பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடம் சம்பந்தப்பட்ட பணிகள்
- ☐ கல் வெட்டுதல் மற்றும் கல் உடைத்தல் சம்பந்தப்பட்ட தொழில்
- ☐ தோல் பதனிடுதல் மற்றும் தோல் உற்பத்தி
- ☐ தானியங்கி பணிமனை (Automobile workshop)
- ☐ அப்பளம் தயாரிப்பு
- ☐ வெளுத்தல் மற்றும் சாயம் இடல்
- ☐ மாட்டு வண்டி ஓட்டுதல்
- ☐ செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்பு
- ☐ பந்தல் அமைத்தல்
- ☐ உணவு தயாரித்தல்
- ☐ தேங்காய் உரித்தல்
- ☐ வனப்பொருட்கள் சேகரித்தல்
- ☐ உணவு நிறுவனங்கள்
- ☐ முந்திரிக் கொட்டை தொழிற்சாலை (Cashewnut Industry)



- ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுதல்
- சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம்
- சைக்கிள் ரிக்ஷா ஓட்டுதல்
- பொறியியல் பணிகள்
- தீப்பெட்டி, பட்டாசு தயாரித்தல்
- துணி பொருட்கள் மடித்தல்
- காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல்
- கோணி/சாக்கு தொழில்
- தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்கள் தயாரித்தல்
- கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெய்தல்
- அகர்பத்தி தயாரித்தல்
- சலவையகங்கள் மற்றும் துணி துவைத்தல்
- பதநீர் இறக்குதல்
- நீப் தயாரித்தல்
- மாவு ஆலை, எண்ணெய் ஆலை, பருப்பு ஆலை, ரைஸ் மில் தொழில்
- அச்சகத் தொழில்
- விசைத்தறித் தொழில்
- தனியார் பாதுகாப்புப் பணிகள்
- பிளாஸ்டிக் தொழில்
- மண்பாண்டத் தொழில்
- குப்பை சேகரித்தல்
- முடி திருத்துதல் மற்றும் அழகு நிலையங்கள்
- சாலையோர வியாபாரம்
- ஜவ்வரிசித் தொழில்
- செயற்கை வைரம் அறுத்தல்
- பட்டுப்பூச்சி வளர்ப்பு
- கடைகள் மற்றும் நிறுவனங்கள்
- தையல் தொழில்
- மரம் ஏறுதல்
- தகர கொள்கலன் தயாரித்தல்
- பாத்திரங்கள் தயாரித்தல்
- மரப்பொருட்கள் செய்தல்

அணைகள், பாலங்கள் சாலைகள் ஆகியவற்றை கட்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழில் இந்தப் பட்டியலில் 10–வது பொருளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொழிலில் இடம் பெற்றுள்ள பணிப் பிரிவுகள்

- கல்வெட்டுபவர் (அ) கல் உடைப்பவர்
- கொத்து வேலை செய்பவர் மற்றும் கொத்தனார்
- தச்சர்
- வர்ணம் பூசுபவர் (அ) வார்னிஷ் அடிப்பவர்
- பிட்டர் மற்றும் கம்பி வளைப்பவர், கம்பி கட்டுபவர்
- பிளம்பர்
- எலக்ட்ரீஷியன்
- மெக்கானிக்
- கிணறு வெட்டும் வேலை செய்பவர்
- வெல்டர்
- கூலியாள்
- தெளிப்பவர் மற்றும் கலப்பவர் (தார் ஜல்லி)
- மரத்தால் கட்டுபவர், கல் கட்டுபவர்



- கிணற்றில் தூர் எடுப்பவர்
- சுத்தியல் அடிப்பவர்
- கூரை வேய்பவர்
- மேஸ்திரி
- கருமான், கொல்லன்
- மரம் அறுப்பவர்
- சந்துகள் அடைத்து நீர் உட்புகாமல் செய்பவர்
- கான்க்ரீட் கலப்பவர்
- பம்ப் ஆபரேட்டர்
- மிக்ஸர்
- ரோலர் டிரைவர்
- கலாசி
- காவலாளி
- மொஸைக் தொழிலாளி
- சுரங்க வழி தோண்டுபவர்
- பாறை உடைப்பவர் மற்றும் கற்குடையு தொழிலாளி
- சலவைக்கல் தொழில் செய்பவர்
- கட்டுமானத் தொடர்புடைய மண் வேலை செய்பவர்
- சாலைத் தொழிலாளி
- சுண்ணாம்பு தயாரிப்பு பணியில் இருப்பவர்
- கடல் அரிப்புத் தடுப்புப் பணியில் ஈடுபடும் வேலையாள்
- அணைகள், பாலங்கள், சாலைகள் ஆகியவற்றைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் இதர கட்டுமான பணியில் ஈடுபட்டுள்ளவர்.

1.11.94 முதல் மேற்படிச் சட்டம் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்படிச் சட்டத்தின் பிரிவு 3ல் உடல் உழைப்புத் தொழிலாளர்களின் பொது நலனுக்காகத் திட்டங்கள் மற்றும் நிதிகள் உருவாக்கப்படலாம் என்றும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் அடிப்படையில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக1994 ஆம் வருடத்திய தமிழ் நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டம், அரசால் உருவாக்கப்பட்டது. 1.11.94 முதல் இத்திட்டம் சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி மற்றும் கோவை மாநகராட்சி ஆகிய மூன்று மாநகராட்சியின் எல்லைகளுக்கு மட்டும் பொருந்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குக் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டம், வருங்கால வைப்புநிதித் திட்டம், தொழிலாளர் மாநில காப்பீடுத் திட்டம், ஓய்வூதியம் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் ஆகிய நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட வேண்டும்.

இந்நலத் திட்டங்களை அமல் செய்வதற்குத் தேவையான நிதிக்காக அரசு ஒரு நல நிதியை அமைத்துள்ளது. இந்நல நிதியின் பெயர் "தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் பொது நல நிதி" ஆகும். 1982–ஆம் ஆண்டு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை சீரமைப்பு மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தின் பிரிவு 8–ஏ–ன்படி தமிழ்நாட்டின் எல்லைக்குள் கட்டுமானப் பணியினை மேற்கொள்ளும் எந்த ஒரு நபரும் அக்கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினை அந்நிதிக்குச் சந்தாவாகச் செலுத்த வேண்டும். 1.11.94 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மொத்த மதிப்பீட்டின் 0.1% ஆக இருந்தது. 1.7.97 முதல் இந்த சதவிகிதம் கட்டுமானப் பணியின் மதிப்பீட்டில் 0.3% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



இத்திட்டத்தினை அமல் செய்வதற்காக அரசு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை உருவாக்கியுள்ளது. அவ்வாரியத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 21. இவர்களில் 5 பேர் அரசு தரப்பு உறுப்பினர்கள். 8 பேர் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் மற்றும் 8 பேர் வேலை அளிப்பவர்களின் பிரதிநிதிகள். அரசு பிரதிநிதியான தொழிலாளர் ஆணையர் இவ்வாரியத்தின் தலைவர் ஆவார்.

தமிழ்நாட்டின் எல்லைக்குள் பணிபுரியும் எந்த ஒரு கட்டுமானத் தொழிலாளியும் ரூ.25/–ஐ செலுத்தி இவ்வாரியத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கட்டுமானத் தொழிலாளர்களின் பதிவு சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நடைபெறுகிறது. பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு கட்டுமானத் தொழிலாளிக்கும் ஒரு அடையாள அட்டை வழங்கப்படுகின்றது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்ட கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் தற்போது கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் அமல் செய்யப்பட்டு வருகின்றன.

- ☐ விபத்துக் காப்பீட்டுத் திட்டம்
- ☐ ஈமச்சடங்கு உதவித் திட்டம்
- ☐ இயற்கை மரணம் உதவித் திட்டம்
- ☐ கல்வி உதவித் தொகைத் திட்டம்
- ☐ திருமண உதவித் தொகைத் திட்டம்
- ☐ மகப்பேறு / கருச்சிதைவு உதவித் தொகைத் திட்டம்

**விபத்துக் காப்பீட்டுத் திட்டம்**

வாரியத்தில் பதிவு செய்து கொண்ட அனைத்துக் கட்டுமானத் தொழிலாளர்களும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் குழு விபத்துக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாறு காப்பீடு செய்யப்பட்ட தொழிலாளர்கள் விபத்தில் காயம் அடைந்தாலோ அல்லது உயிரிழந்தாலோ, காப்பீடு தொகை பெறுவார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி விபத்தில் உயிரிழந்தால் ரூ.1,00,000, 10.5.98 முதல் காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் இக்காப்பீட்டுத் தொகை ரூ.50,000–ஆக இருந்தது. விபத்தில் காயம் அடைந்தால் அக்காயத்தால் தொழிலாளிக்கு ஏற்படும் நிரந்தர ஊனத்தின் தன்மையைப் பொறுத்து அவருக்குக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.



**ஈமச்சடங்கு உதவித் தொகைத் திட்டம்**

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இறந்தால் அவருடைய நியமனதாரருக்கு 28.2.99 முடிய உள்ள காலத்தில் ரூ.500 ஈமச்சடங்கு உதவித் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. 1.3.99 முதல் இத்தொகை ரூ.2000–ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

**இயற்கை மரணம் உதவித் தொகைத் திட்டம்**

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி இயற்கை மரணம் அடைந்தால் அவரது நியமனதாரருக்கு ரூ.5000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது

**கல்வி உதவித் தொகைத் திட்டம்**

வாரியத்தில் பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் 10ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.750–ம், 12ஆம் வகுப்புத் தேர்ச்சி பெற்றால் ரூ.1000–ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**திருமண உதவித் தொகைத் திட்டம்**

வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் மகன்/மகள் திருமணத்திற்குத் திருமண உதவித் தொகையாக ரூ.1000 வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை இரு பிள்ளைகளுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**மகப்பேறு / கருக்கலைப்பு உதவித் தொகைத் திட்டம்**

பதிவுபெற்ற பெண் கட்டுமானத் தொழிலாளிக்கு மகப்பேறு / கருக்கலைப்புக்கு உதவித் தொகையாக ரூ.2000 வழங்கப்படுகிறது. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906






27 செப் 2000
... ஆவணக் காப்ப...
...ம்பூர், சென்னை-600 008

# தமிழரசு

மார்ச் 1 - 15, 2000 ரூ. 5







# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
மாசி – பங்குனி
மார்ச் 1–15, 2000
மலர் : 31 இதழ் : 17
விலை ரூ.5


முதல் மற்றும் கடைசிப்பக்க அட்டையில்

**மகளிர் தின விழா**

இரண்டு மற்றும் மூன்றாம் பக்க அட்டையில்

**பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம்**



## இந்த இதழில்...


❖ மகளிர் குழுக்கள் சமுதாய மாற்றத்தின் அடையாளம் ..... 2
❖ பெண்ணுரிமையும் பெண்ணின் பெருமையும் ..... 6
❖ பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் ..... 8
❖ தூய்மை சென்னை 2000 ..... 15
❖ மக்களின் வளர்ச்சிக்கும் வளமைக்கும் உறுதியளிக்கும் தமிழ்நாடு அரசு ..... 18
❖ தொடரும் பயணம் ..... 25
❖ ததீசினி ..... 41


### திருக்குறள்

*செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்*
*செல்வத்து ளெல்லாந் தலை.*

**செ**ழுமையான கருத்துகளைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*



# மகளிர் குழுக்கள் சமுதாய மாற்றத்தின் அடையாளம்

உலக மகளிர் நாள் விழாவில் முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்

உலக மகளிர் நாள் விழா நிகழ்ச்சி மிகச் சிறப்பாக அரசின் சமூக நலத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு அதிலே கலந்து கொள்ளுகின்ற நல்ல வாய்ப்பினை நான் பெற்றமைக்காக பெருமகிழ்ச்சி அடை கின்றேன். இங்கே குழுமியிருக்கின்ற இந்தக் கூட்டத்தைப் பார்த்து திருமதி. ரேவதி தன்னுடைய வியப்பை வெளிப்படுத்தினார். தாமதமாக வராமல் சற்று முன்னே வந்திருந்தால் இன்னொரு பங்கு கூட்டத்தை இந்த வள்ளுவர் கோட்டத்திலே ரேவதி - பார்த்திருக்கக் கூடும். அவ்வளவு பெரும் கூட்டமாக இங்கே இந்த விழாவிலே கலந்து கொண்டு உங்களுடைய முன்னேற்றத்திலே உங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தியமைக்காக நான்மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

**ஆணும் பெண்ணும் சமம் என்பதை பாரதிதாசன் கவிதையில் கூறியிருக்கிறார்**

பேசியவர்கள் எல்லாம் ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லி மேடையிலே இருந்த எங்களையெல்லாம் கொஞ்சம் தெளிய வைத்தார்கள். நானே சொல்லுகிறேன், என்னை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் எல்லாம் கூட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உள்ளிட்ட இந்த இயக்கத்தினர் அனைவருமே பெண்களின் விடுதலைக்காக, பெண்களுடைய முன்னேற்றத்திற்காக அரும்பாடு பட்டவர்கள் என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

மிகச் சுலபமாக பாரதிதாசன் ‘ஆணும் பெண்ணும் சமம் தான்’ என்பதை உணர்த்தியிருக்கிறார். ஏணை அசைத்தலும் கூடும், அது யார் அசைத்தாலும் ஆடும் என்பது அவருடைய கவிதை வரி. குழந்தை தூங்கும் ஏணையை அது விழித்துக் கொள்ளும் போது பெண்கள் அதை அசைத்தாலும் ஆடும். பெண்கள் மாத்திரமல்ல, அதை ஆண் அசைத்தாலும் ஆடும். ஆண் அசைக்கின்றான் என்பதற்காக ஏணை ஆடாமல் இருந்து விடாது. அதனால் ஏணையை அசைப்பது பெண்களுக்குத் தான் உரியது என்றிருந்து விடாமல் ஆண்களும் ஏணையை அசைக்க வேண்டும். குழந்தையைப் பராமரிக்க வேண்டும் என்ற அந்தப் பொருளில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியிருக்கிறார்.

இது இன்று நேற்றல்ல, நீண்ட நெடுங்காலமாக இங்கே மேயர் குறிப்பிட்டதைப் போல 1929-ஆம் ஆண்டிலேயே அருகிலே உள்ள செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் பெண்களுடைய முன்னேற்றத்தையே, விடுதலையையே மையமாக வைத்துப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலே மிக முக்கியமான ஒரு தீர்மானம்தான் ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்திலே பங்கு அளிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானமாகும்.





அந்தத் தீர்மானத்தைச் சட்ட வடிவமாக ஆக்குவதற்கு அறுபதாண்டு காலம் தேவைப்பட்டது தமிழ்நாட்டில். இந்தியாவில் முதல்முறையாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய மாநிலம் தமிழ்நாடு, நிறைவேற்றிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை எண்ணி நான் பெருமிதம் கொள்கிறேன். அந்தச் சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றிய போது நான் சொன்னேன் - அறுபதாண்டுகளுக்கு முன்பு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு இன்றைக்கு வடிவம் கொடுக்கிறோம் - என்று சட்டப் பேரவையில் நான் அறிவித்தேன்.

**சாதியை ஒழிப்பதிலே பெண்கள் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள்**

• ஆண்களைவிட பெண்கள் தாழ்ந்து விட்டதாக யாரும் நினைக்கத் தேவையில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால் இந்த நாட்டிலே சாதி ஒழிய வேண்டுமென்று உத்தமர் காந்தி அடிகள் சொன்னார், பாரதி பாடினார், பெரியார் முழங்கினார், அண்ணா எழுதிக் காட்டினார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் போன்றவர்கள் கவிதைகளை அதற்காக இயற்றினார்கள். ஆனால் உள்ளபடியே சாதியை இன்னமும் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஆண்கள் தான். ராமசாமி செட்டியார், குப்புசாமி முதலியார், நடேச அய்யர் என்று சாதியைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்திருப்பவர்கள் ஆண்கள்தான். சரஸ்வதி செட்டியார் என்றோ, லட்சுமி முதலியார் என்றோ, பார்வதி கவுண்டர் என்றோ எந்தப் பெண்ணும் சாதிப் பெயரை தங்கள் பெயருக்குப் பக்கத்தில் போட்டுக் கொள்வதில்லை. இதிலிருந்தே ஆண்களை விட பெண்கள் உயர்ந்தவர்கள், சாதியை ஒழிப்பதிலே என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

அத்தகைய ஒரு முற்போக்கான கொள்கை அவர்களுடைய பெயரிலேயே இன்றைக்கு அடங்கியிருக்கின்றது. ஏனென்றால் சாதி என்ற அந்த வாலை அவர்கள் நறுக்கி விட்டிருக்கின்றார்கள். அந்த வாலை எடுத்து ஆண்கள் ஒட்ட வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பல மூடநம்பிக்கைகளை இன்றைக்கு நம் நாட்டுத் தாய்மார்கள், சகோதரிகள் கடைப் பிடிக்கிறார்கள். அவர்கள் மூட நம்பிக்கைகளிலே ஆழ்ந்து போகின்ற காட்சிகளை நான் கண்டு மிக மிக வருந்துகிறேன். ஆண்கள் மூட நம்பிக்கையிலே உழல்வதற்கும் ஒரு குடும்பத்திலே உள்ளவர்கள் மூடநம்பிக்கையிலே உழல்வதற்கும் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள், இன்று வரையில் தாய்மார்களாக இருக்கிறார்கள். அதை தாய்மார்கள் உணர வேண்டும்.

எப்படியென்றால் குழந்தையைத் தொட்டிலிலே இட்டு ஆட்டுகின்ற நேரத்தில் குழந்தை தூங்க மறுத்து அழுது கொண்டிருந்தால் தாயார் செய்கின்ற வேலை என்னவென்றால், பேசாமல் தூங்கு, அழாதே, அழுதால் அஞ்சு கண்ணன் வருவான், பத்து கண்ணன் வருவான் என்று அந்த அஞ்சு கண்ணனைப் போல் குரல் கொடுத்து, குரல் கொடுக்க முடியாத தாய்மார்கள் தங்களுடைய விரல்களைத் தொண்டையிலே வைத்து அழுத்திக் கொண்டு ஒருவிதமான ஓசையை எழுப்பி அஞ்சு கண்ணன் வருகிறான் என்று குழந்தையைப் பயமுறுத்தியே தூங்க வைக்கிறார்கள். இப்படி குழந்தைப் பருவத்திலேயே குழந்தைக்கு பய உணர்ச்சி ஊட்டப்படுவதால் எதிர்காலத்திலே அந்தக் குழந்தை வீரமாக வளர முடியாமல் துணிவுள்ள வர்களாக வளர முடியாமல் போகின்றது என்பதை அருமைத் தாய்மார்களும், சகோதரிகளும் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மூடநம்பிக்கையிலே உழலும் நிலைமை தாய்மார்களிடத்திலே இருக்கிறது**

சாதி என்கின்ற அந்த அவச் சொல்லை, அந்தக் களங்கத்தைத் தங்களுடைய பெயருக்குப் பின்னால் வைத்துக் கொள்ளாவிட்டாலுங் கூட மூட நம்பிக்கையிலே இன்றைக்கு உழன்று கொண்டிருக்கின்ற நிலை தாய்க் குலத்திலே இருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. திடீரென்று ஒரு நாள் பத்திரிகையிலே சிலுவை குழந்தை பிறந்திருக்கிறது. கோடம்பாக்கத்திலே அந்தக் குழந்தை இருக்கிறது. அதைப் பார்க்க ஏராளமான மக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள், என்று அந்த சிலுவைக் குழந்தையினுடைய படத்தையும் புகைப்படம் எடுத்து பத்திரிகையிலே போடுவார்கள். ஒரு நான்கு நாள் பத்திரிகையிலே பரபரப்பாக அந்தச் செய்தி வரும். பிறகு பார்த்தால் சிலுவையும் இல்லை, குழந்தையுமில்லை, சிலுவையோடு, குழந்தையோட தகப்பனார் எங்கோ ஓடிவிட்டார் என்று செய்திவரும். அதுவரையில் வசூல் நடைபெறும். அந்த வசூலுக்குக் காரணகர்த்தாக்களாக இருப்பவர்கள் நம்முடைய அப்பாவி தாய்மார்கள் தான் என்று எண்ணும் பொழுது நான் கவலைப் படுகின்றேன்.

அதுமாத்திரமல்ல; ஒரு தோட்டத்தில் அல்லது ஒரு வீட்டுக் கொல்லையில் பூக்கின்ற பூக்களிலே ஒரு பரங்கிப் பூ கொஞ்சம் நிமிர்ந்து நின்று பூத்திருக்கும். அதைப் பார்க்கும் பொழுது ஏதோ ஒரு ஜாடையில் பாம்பு படம் எடுத்ததைப் போலத் தெரியும்; உடனே பரங்கிக் கொடியிலே நாகராஜன் தரிசனப்படுகிறான் என்று நான்கு நாள் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவார்கள். அதைப் பார்க்க ஒரு கூட்டம் செல்லும். இப்படி சாமியார்கள், பூதங்கள், சிலுவைகள் - சிலுவையின் பெயரால் மோசடிகள், இவைகள் எல்லாம் நடைபெறுவதை நாம் தடுத்தாக வேண்டும். அப்படி தடுப்பதற்குத் தாய்மார்கள் முதலில் தங்களுடைய பகுத்தறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அப்படி பகுத்தறிவைப் பெருக்கிக் கொண்டால் அதற்கு ஏற்றவாறு இந்தச் சமுதாய அமைப்பு நல்ல முறையிலே உருவாகும் என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப் பட்டிருக்கின்றேன்.

**பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை அரசு தீட்டிச் செயல்படுத்துகிறது**

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் பெண்களுக்கு என்று பல திட்டங்களைத்

தீட்டியிருக்கின்றோம். அந்தத் திட்டங்களிலே ஒன்றுதான் மகளிர் சுய உதவிக்குழு திட்டம். குழுக்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலும் இருபது பெண்களுக்குக் குறையாமல் இணைந்து அந்தக் குழுக்கள் ஒவ்வொரு ஊரிலும் நல்ல முறையில் செயல்படுகின்ற காட்சியை நானே பல இடங்களுக்கு நேரில் சென்று கண்டு களித்திருக்கின்றேன்.

ஏறத்தாழ 23 ஆயிரம் அல்லது 24 ஆயிரம் குழுக்கள் இன்றைக்குத் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டு இருக்கின்றன. இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் குழுக்களாக இருந்த இந்த மகளிர் குழுக்கள் 23 ஆயிரம் அல்லது 24 ஆயிரம் குழுக்களாக இன்றைக்கு அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே இன்றைக்கு இருக்கின்ற மொத்த மகளிர் ஏறத்தாழ நான்கு இலட்சம் பேர் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள் என்பது மகளிர் முன்னேற்றத்திலே அவர்களுக்கே அக்கறை வந்திருக்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக் கின்றது. அதிலே அவர்கள் சேர்த்த பணம், அவர்களாக வசூலித்து அவர்கள் செலவழித்துக் கொண்டிருக்கின்ற பணம், அந்தக் குழுக்களில் சேமிப்பாக வந்திருக் கின்ற பணம் மாத்திரம் ஏறத்தாழ 32 கோடி ரூபாய் என்று கேள்விப்படும் பொழுது நான் பெருமை அடை கின்றேன்.

அவரவர்களும் அந்தந்த ஊரில் இந்தக் குழுக்களை அமைத்துக் கொண்டிருக்கின்ற நேர்த்தியைக் காணும் பொழுது, நானே இரண்டு குழுக்களைத் திடீரென்று சென்று பார்த்தேன். வருவதை அறிவித்து இன்ன தேதியில் இத்தனை மணிக்கு வரப்போகின்றேன் என்றெல்லாம் எடுத்துச் சொல்லாமல் திடீரென்று சென்று அந்தக் குழுக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். அவர்க ளிடத்திலே பேசும் பொழுது எனக்கே தமிழ்நாட்டில் தான் இருக்கின்றோமா என்கின்ற அளவிற்கு சந்தேகம் ஏற்பட்டது. அந்த அளவிற்கு பெண்கள் தங்களுக்குள்ளாக ஒற்றுமையாக இருக்கிறார்கள். பெண்கள் ஒற்றுமையாக இருப்பது என்பது அதிசயம் தான். அந்த அதிசயத்தை இன்றைக்கு தமிழ்நாட்டிலே என்னால் காண முடிகின்றது, இந்தக் குழுக்களின் மூலமாக.

### தமிழகத்தில் சமுதாய மாறுதல்களுக்கு நல்ல அடையாளம்

குழுக்களிலே இருக்கின்ற பெண்கள் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சாதி பாகுபாடு இல்லாமல் எல்லோரும் சகோதரிகள், எல்லோரும் ஒரே குலம் என்கின்ற அளவிலே அவர்கள் பழகுவது, அவர்கள் பயிற்சி பெறுவது, அவர்கள் மற்றவர்களுக்கு உதவுவது இவைகளையெல்லாம் பார்க்கும் பொழுது, அதுமாத்திர மல்ல; கள்ளச் சாராயக் கடைகள் எங்கிருந்தாலும் அதை அகற்ற வேண்டும் என்பதிலே முனைப்பாக குழுக்களிலே இருக்கின்ற பெண்களையும் நான் பார்த்து வியந்து போனேன். கலப்புத் திருமணங்களைச் செய்து வைக்கின்ற பெண்களையும் பார்த்தேன். அனாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கின்ற பெண்களுடைய குழுக்களையும் பார்த்தேன். இவைகளையெல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டு இருக்கின்ற பெரிய சமுதாய மாறுதல்களுக்கு அடையாளம் என்று சொன்னால் அது மிகையாகாது.

எனவே இத்தகைய குழுக்களிலே ஒன்றுதான் இன்றைக்கு இந்த விழாவிலே பெருவாரியாக கலந்து கொண்டிருக்கின்ற மகளிர் என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன்.

கலப்புத் திருமணத்திட்டம் இந்த அரசில் நல்ல முறையிலே நடத்தப் படுகிறது. அதற்காக தொடக்கத்திலே தங்கப்பதக்கம் பரிசளிக்கப் பட்டு இப்பொழுது கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களில், இருவர்களிலே ஒருவர் ஆதிதிராவிட சமுதாயமாக இருந்தால் - தாழ்த்தப்பட்ட சமுதாயமாக இருந்தால் 20,000 ரூபாய் நிதி வழங்கும் திட்டமாகவும் இருந்து வருகிறது. அதே மாதிரி விதவை மறுமண நிதியுதவி திட்டம் 1975-ஆம் ஆண்டில் இதே தி.மு.கழக ஆட்சியில் தான் தொடங்கப்பட்டு 89-லே இந்தத் திட்டத்திற்கான நிதியுதவி 5,000 ரூபாய் என்றும், 97-98-இல் 7,000 ரூபாய் என்றும் இந்த ஆண்டு முதல் 10,000 ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

தொடக்கப்பள்ளிகளில் பெண்களே ஐந்தாம் வகுப்பு வரையிலே ஆசிரியர்களாக பணிக்கு அமர்த்தப்பட வேண்டும் என்கின்ற விதி முறைகள் செய்யப்பட்டு அதுவும் நடைமுறையில் இருக்கின்றது. 73-ஆம் ஆண்டு அப்பொழுது நான் முதலமைச்சராக இருந்த பொழுது தான் காவல்துறையிலே பெண்களும் சேர்க்கப்பட வேண்டும் என்று முதல் முதலாக தமிழ்நாட்டிலே காவல் துறையிலே பெண்கள் சேர்க்கப்பட்டதும் 73-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த பொழுது தி.மு.கழக ஆட்சிலே தான்.

இந்தியாவிலே முதல் தடவையாக 89-ஆம் ஆண்டு தமிழக அரசு அலுவலகங்களிலும், பொது நிறுவனங் களிலும், வேலை வாய்ப்புக்களில் பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்டு அந்த நியமனங்கள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. அது மாத்திரமல்ல; தொழில் முனையும் முதல் தலைமுறை மகளிர்க்கு 50,000 ரூபாய் வரை மானியம் வழங்குகின்ற சிறப்புத் திட்டமும் இந்த ஆட்சியிலே செயல்படுத்தப் படுகிறது. பெண்களுக்கு 30 விழுக்காடு அளவிற்கு வேலை வாய்ப்பு வழங்கும் தொழிற்சாலைகளுக்கு முதலீட்டில் 15 விழுக்காடு அல்லது உயர்ந்த பட்சமாக 5 இலட்சம் ரூபாய் வரை மானியம் உதவி வழங்கி பெண்கள் பல்வேறு தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்பு பெற இந்த ஆட்சியிலே வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஒரு ஒப்பீடு உங்களுக்குச் சொல்ல வேண்டுமேயானால், பல்வேறு பெண்கள் திட்டத்தின்படி கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியில் உதவி பெற்ற மகளிருடைய எண்ணிக்கை 62 ஆயிரத்து 180 பேர். இந்த 4 ஆண்டு கால கழக ஆட்சியில் 22 இலட்சத்து 8 ஆயிரத்து 357 பெண்கள் உதவி பெற்றிருக்கிறார்கள்.

கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் தரப்பட்ட மொத்த உதவித்தொகை 29 கோடியே 52 இலட்ச ரூபாய். இந்த 4 ஆண்டு காலத்தில் தரப்பட்ட உதவித் தொகை 206 கோடி ரூபாய். இதிலிருந்து இந்த அரசு பெண்களுடைய முன்னேற்றத்திலே அவர்களுடைய பொருளாதாரத் துறை உட்பட எல்லாவற்றிலும் எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

இங்கே நம்முடைய அமைச்சர் திருமதி சற்குணம் அவர்கள் ஒரு 4 திட்டங்களுடைய பெயர்களை என்னிடத்திலே எழுதிக்கொடுத்து அதற்கு சமுதாயத் தலைவர்களுடைய பெயர்களை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

### ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பெயர்கள்

ஏற்கெனவே ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம்" என்று பெயர் சூட்டியிருக்கிறோம். ஏன் மூவலூர் அம்மையார் பெயர் வைத்தோமென்றால் அந்த அம்மையாருடைய வாழ்க்கையில் அனாதைப் பிள்ளைகளுக்கு, விதவைப் பிள்ளைகளுக்குக் கலப்புத் திருமணம் என்ற பெயரிலோ, சாதாரண திருமணங்களோ, பகுத்தறிவுத் திருமணங்க ளாகவோ அந்த அம்மையாருடைய வாழ்நாள் முழுவதும் ஏறத்தாழ ஒரு 10,000 திருமணங்களாவது செய்து வைத்த பெருமாட்டி மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அவர்களாவார்கள்.

அதைப் போலவே விதவைப் பெண்களுடைய மறுமணத்திற்கு ஆதரவளிக்கும் திட்டத்திற்கு "டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை திருமணத் திட்டம்" என்று ஏற்கெனவே பெயர்சூட்டி இருக்கிறோம்.

கலப்புத் திருமணங்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்திற்கு "அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டம்" என்று பெயர் வைத்திருக்கிறோம். ஏன் அஞ்சுகம் அம்மையார் பெயர் வைக்கப்பட்டது என்றால், எங்கள் வீட்டில்தான் நிறைய கலப்புத் திருமணம் நடந்திருக்கிறது. அதற்கெல்லாம் எங்கள் அம்மா அஞ்சுகம் அம்மையார் தான் ஆதரவாக இருந்தார்கள். ஆகவே அவருடைய பெயர் அந்தத் திட்டத்திற்கு வைக்கப் பட்டிருக்கிறது.

ஆதரவற்ற பெண்களுடைய திருமணத்திற்கு நிதியுதவி வழங்குகின்ற திட்டத்திற்கு "அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்" என்று ஏற்கெனவே பெயர் வைத்திருக்கிறோம்.

விதவைப் பெண்களுடைய மகள் திருமணத்திற்கு உதவி வழங்கும் திட்டத்திற்கு "ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமணத் திட்டம்" என்று பெயர் வைத்திருக்கிறோம்.

> "கலப்புத் திருமணங்களை செய்துவைக்கின்ற பெண்களையும் பார்த்தேன். அனாதைக் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கின்ற பெண்களின் குழுக்களைப் பார்த்தேன். இவைகளெல்லாம் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பெரிய சமுதாயம் மாறுதலுக்கான அடையாளம்."

கருவுற்ற ஏழைத் தாய்மார்கள் சத்துணவு உட்கொள்ள பேறு காலத்துக்கு முன் இரு மாதங்களுக்கும், பின் இரு மாதங்களுக்குமாக நான்கு மாதங்களுக்கு மொத்தமாக 500 ரூபாய் நிதி வழங்கும் திட்டத்திற்கு "டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறுத் திட்டம்" என்று பெயர் வைத்திருக்கிறோம். முத்துலெட்சுமி ரெட்டி ஒரு சமுதாய சிந்தனையாளர். பெண்களுக்காக புரட்சிகள் பல செய்தவர். அவருடைய பெயரை அதற்கு வைத்திருக்கிறோம்.

பட்டப்படிப்பு வரை ஏழை மாணவிகளுக்கு இலவசக் கல்வி வழங்கும் திட்டம் அதற்கு பெரியாருடைய துணைவியார் "ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம்" என்ற பெயரை வைத்திருக்கிறோம்.

### 4 திட்டங்களுக்குப் புதிய பெயர்கள்

இப்பொழுது நான்கு திட்டங்களுடைய பெயரை சற்குணம் என்னிடத்திலே கொடுத்து அதற்குப் பெயர் சூட்டுங்கள் என்று கேட்டிருக்கிறார்.

அதில் ஒன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனத் திட்டம். அதற்கு இந்த நாளில் நான் சூட்டுகின்ற பெயர், அண்ணாவை ஈன்று நமக்குத் தந்த அன்னை, "பங்காரு அம்மையார் நினைவுத் திட்டம்" என்று பெயர் சூட்டுகின்றேன்.

இன்னொன்று பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம். அதற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களை ஈன்று வழங்கிய அன்னை, "சிவகாமி அம்மையார் நினைவுத் திட்டம்" என்று பெயர் சூட்டுகிறேன்.

இன்னொரு திட்டம் 'அரசு குழந்தைகள் காப்பகம்'. அதற்குப் பெயர் எம்.ஜி.ஆர். அவர்களை ஈன்றளித்த அன்னை, "சத்தியா அம்மையார் நினைவுத் திட்டம்" என்று பெயர் சூட்டுகிறேன்.

மகளிர் இலவச தையல் எந்திரங்கள் வழங்கும் திட்டத்திற்கு அண்மையில் மறைந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக மாத்திரமல்ல, மகளிர் குலத்திற்கு பெரும்பாடுபட்ட - பெரும் பணியாற்றிய அன்னை சத்தியவாணிமுத்து பெயரால் - "சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் எந்திரம் வழங்கும் திட்டம்" என்று பெயர் சூட்டுகிறேன்.

இந்தத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று வாழ்த்தி, இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற அருமைத் தாய்மார்களுக்கும், அன்புச் சகோதரிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து சாதி சமயமற்ற சமுதாயத்தைக் காண, பொருளாதாரத்திலே தாழ்வற்ற சமுதாயத்தைக் காண, முற்போக்கான சமுதாயத்தைக் காண, மூட நம்பிக்கை ஒழிந்த சமுதாயத்தைக் காண அனைவரும் ஒன்று திரள்வோம் என்று கூறி விடை பெறுகிறேன்.

*- உலக மகளிர் நாள் விழாவில் 9-3-2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

# பெண்ணுரிமையும் பெண்ணின் பெருமையும்

**— மகாத்மா காந்தி**

பழக்க வழக்கங்களும் சட்டங்களும் பெண்ணை அடக்கி வைக்கவே வந்திருக்கின்றன; பழக்க வழக்கங்களும் சட்டங்களும் ஆடவன் வகுத்தவையேயன்றி பெண் வகுத்தவையல்ல. அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையில் ஆடவன் தன் வாழ்க்கையை நிர்ணயிப்பதற்கு என்ன உரிமையிருக்கிறதோ, அதே உரிமை பெண்ணுக்கும் அவள் வாழ்க்கையை நிர்ணயிப்பதில் இருக்கவேண்டும்.

✧ ✧ ✧

ஆடவர்களுக்குத் தாங்கள் அடிமைகளே என்று கருதும்படிதான் பெண்களை நாம் பயிற்றி வந்திருக்கிறோம். பெண்கள் தங்கள் பூரணமான தகுதி என்னவென்பதை உணர்ந்து ஆடவரோடு சமமாகக் கலந்து வேலை செய்ய வல்லவர்களாகும்படி செய்வது - செய்ய வேண்டிய பெரும் பணியாகும்.

✧ ✧ ✧

ஆடவர் தங்கள் மனைவியரை வெறும் பதுமைகளாக வைத்துக் கொஞ்சிக் குலவினால் போதாது. பொதுவான சேவையில் உடன் உழைக்கிற தோழரைப் போலக் கௌரவமாக அவர்களை நடத்த வேண்டும். இதன் பொருட்டுப் பள்ளிக்கூடம் சென்று அதிகம் படித்திராத பெண்களுக்கு அவர்களுடைய கணவன்மார் முடிந்த அளவு கல்வி போதிக்க வேண்டும்.

✧ ✧ ✧

பெண்கள் என்றால் அவர்களிடம் இயற்கையாகவே சில குணாதிசயங்கள் இருக்கத்தான் வேண்டும் என்று நமது சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. சாஸ்திரங்களில் கூறப் பட்டுள்ள இந்த மாசுகளை அகற்றுவதே பெண்களின் மறுமலர்ச்சிப் பணியில் நாம் செய்ய வேண்டிய மிகப்பெரிய முயற்சியாய் இருக்க வேண்டும்.

✧ ✧ ✧

ஆணின் தோழி பெண்; ஆணைப் போலவே பெண்ணுக்கும் அதே சிந்தனைத் திறன் இருக்கிறது. அடிப்படையில் ஆண்களும் பெண்களும் ஒன்றே என்று நான் நினைக்கிறேன். ஆகையால் அவர்களுடைய பிரச்சினையின் சாரமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயமாகும்.

✧ ✧ ✧

விரும்பத் தகாதவையும், தகுதியற்றவையுமான எல்லாக் கட்டுப்பாடுகளையும் எதிர்த்துப் பெண்கள் கலகம் செய்ய வேண்டும். கட்டுப்பாடுகள் பலனளிக்கத் தக்கவைகளாக இருக்க வேண்டுமென்றால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப் படுபவைகளாக இருக்க வேண்டும்.

✧ ✧ ✧

கல்வி அறிவில்லாத மனிதப் பிறவிக்கும், மிருகத்திற்கும் அதிக வித்தியாசமில்லை என்று கூறுவது மிகையாகாது. ஆகையால் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் கல்வி அவசியமாகும்.

✧ ✧ ✧







பெண்களின் (வாரிசு) உரிமைகளைப் பற்றிய விஷயத்தில் நான் கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மாட்டேன். ஆண்களுக்கில்லாத சட்டபூர்வமான நிர்ப்பந்தம் எதுவும் பெண்களுக்கு இருக்கக் கூடாது என்பதே என்னுடைய அபிப்பிராயம். பெண்கள், பிள்ளைகள் இருவருக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கப்படுவதையே நான் விரும்புகிறேன்.

✧ ✧ ✧

சமூகக் கொடுமைகளை அல்லது இதரக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்குப் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் பயிற்சி அளிக்கத் தவறும் ஒரு கல்வி முறையில் ஏதோ ஒரு பெரிய தவறு இருக்கத்தான் வேண்டும்.

✧ ✧ ✧

ஆண் குழந்தை பெண் குழந்தை என்று பாகுபாடு காட்டுவது எவ்வளவு அர்த்தமற்ற கொடுமை என்பதைச் சமூகம் என்றைக்காவது உணரத்தான் செய்யும் என்ற உறுதியுடன், வேலை செய்ய வேண்டும்.

✧ ✧ ✧

நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்திருந்தால், தன்னுடைய விளையாட்டுக் கருவியாக இருப்பதற்காகத் தான் பெண் பிறந்திருக்கிறாள் என்று ஆண்கள் வேஷம் போடுவதை நான் எதிர்த்துப் போராடுவேன்.

✧ ✧ ✧

பெண்களின் அங்க அமைப்புகளை நுட்பமாக விவரிப்பது இலக்கியத்தின் அத்தியாவசியமான அம்சமா என்று எனக்குப் புரியவில்லை.

✧ ✧ ✧

ஒரு பெண் தாக்கப்படும் போது ஹிம்சை, அஹிம்சை என்றெல்லாம் அவள் நினைத்துப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தன்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்கு எந்த வழியும் அவளுக்குத் தோன்றும். எந்த வழியையும் பின்பற்ற அவளுக்கு உரிமையுண்டு.

✧ ✧ ✧

பலவந்தமாகக் கடத்தப்பட்ட பெண்கள் ஒரு குற்றத்தையும் செய்யவில்லை என்பதிலும், அவர்களுக்கு ஒரு மாசும் ஏற்படவில்லை என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. நியாய புத்தி உள்ள ஒவ்வொரு மனிதனின் இரக்கத்திற்கும், தீவிரமான உதவிக்கும் அவர்கள் உரியவர்கள். அத்தகைய பெண்களைக் குடும்பங்கள் மனப்பூர்வமாகவும், வாஞ்சையுடனும் வரவேற்க வேண்டும்.

✧ ✧ ✧

அகிம்சைப் போராட்டத்தில், ஆண்களின் பங்கைவிடப் பெண்களின் பங்கு அதிகமானதாக இருக்க வேண்டும்.... தார்மிக சக்தி தான் பலமென்றால், பெண்கள் ஆண்களை விட எவ்வளவோ உயர்ந்தவர்கள்.

✧ ✧ ✧

அகிம்சையின் அவதாரம் பெண்.... அளவில்லாத அன்பு என்பதே அகிம்சையின் பொருள். அத்துடன் எந்தக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்ளுவதும் அதனுடைய விசேஷமாகும். மனிதனை ஈன்றெடுக்கும் அன்னையாகிய பெண்ணைத் தவிர வேறு யாருக்கும் இந்தச் சக்தி அவ்வளவு அதிகமாக இருக்கிறது? ....

✧ ✧ ✧

தியாகத்தின் உருவாகப் பெண்கள் அமைந்திருக்கிறார்கள். பெண்கள் சரியான உணர்ச்சியுடன் ஒரு காரியத்தில் இறங்கினால், மலைகளைக் கூட அவர்கள் நகர்த்தி விடுகிறார்கள், பெண்களை மெல்லியலார் என்று கூறுவது அவர்களை அவதூறு செய்வதாகும். இது ஆண்கள் பெண்களுக்கு இழைக்கும் அநீதியுமாகும். ✧

# பண்ணை மகளிர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட மகத்தான ஒரு திட்டம்

## வேளாண்மையில் பெண்கள் பங்கு

வேளாண்மை உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். வேளாண்மை பணிகளில் சுமார் **60%** க்கும் மேலாக பெண்களின் பங்கு உள்ளது. நடவு செய்தல், களையெடுத்தல், அறுவடை செய்தல், தானியங்களைத் தூற்றிச் சுத்தம் செய்தல், ஏர் உழவு செய்தல், தண்ணீர் கட்டுதல், உரமிடுதல் போன்ற பல பணிகளையும் கூட பெண்கள் செய்வதை நாம் பார்க்கின்றோம். சில மாவட்டங்களில் டிராக்டர் உழவு செய்யும் பண்ணை மகளிரையும் நாம் காணலாம்.

தமிழகத்தில் விவசாய முன்னேற்றம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இதை மனதில் கொண்டுதான் வேளாண்மையில் முக்கிய பங்கு வகிக்கும் சிறு மற்றும் மிகச்சிறு பண்ணை மகளிரின் மேம்பாட்டுக்காக தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் 1986ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## பண்ணை மகளிர் தேர்வு

பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கும் பண்ணை மகளிர் கீழ்க்கண்ட தகுதி அடிப்படையில் டான்வா (TANWA-Tamil Nadu Women in Agriculture) பெண் வேளாண்மை அலுவலர்களால் தேர்வுச் செய்யப்படுகின்றனர்.

* திருமணமானவராக இருக்க வேண்டும்
* 20–45 வயது
* குறைந்தபட்சம் 1 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும்
* சிறு அல்லது மிகச்சிறு விவசாயியாக இருக்க வேண்டும்
* தான் கற்றதை மற்ற பெண் விவசாயிகளுக்கும் கற்றுத் தரும் தகுதி உள்ளவராக இருக்க வேண்டும்
* தலைமைப் பண்பு உள்ளவராக இருக்க வேண்டும்

## டான்வா என்றால் ...

* பண்ணை மகளிர் பயிற்சி
* டென்மார்க் நாட்டு நிதி உதவியுடன்
* பகுதி I – ரூ. 4 கோடியில் செயலாக்கம் (1986–1993 வரை).
* பகுதி II – ரூ. 33.92 கோடியில் செயலாக்கம் (1994–2002 வரை).

## திட்ட நோக்கம்

* சிறு/மிகச்சிறு பண்ணை மகளிருக்கு வேளாண் தொழில் நுட்ப பயிற்சி அளித்தல்.
* இதர சகபண்ணை மகளிருக்குத் தொழில்நுட்ப பயிற்சி அளித்தல்
* பண்ணை மகளிரின் சமூக/பொருளாதார நிலையை உயர்த்துதல்
* உணவு உற்பத்திக்கு உத்திரவாதம்

## திட்ட செயல்பாடுகள்

### கிராம அளவிலான பயிற்சி

| | |
|---|---|
| நோக்கம் | : கிராம அளவில் வேளாண் தொழில் நுட்பங்களை செயல் விளக்கங்கள் மூலம் பயிற்றுவித்து தனித்தனியே பழக்கப் படுத்திக் கொள்ள பயிற்சி அளித்தல் |
| பயிற்சிப் பெறுபவர் | : 25 மகளிர் / உதவி வேளாண்மை அலுவலர் தொகுதி |
| பயிற்சிக் காலம் | : 5 நாட்கள் |
| பயிற்சியாளர் | : வேளாண் அலுவலர் (டான்வா) |







### பண்ணை மகளிர் கருத்தரங்கு

| | |
|---|---|
| நோக்கம் | : பயிற்சி பெற்ற பண்ணை மகளிர் சந்தித்து அவரவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் சுயஉதவிக் குழு அமைக்கவும் வழி வகை செய்தல் |
| கலந்து கொள்வோர் | : 50–75 டான்வா மகளிர், வேளாண் விஞ்ஞானிகள், முன்னோடி வங்கி அலுவலர், இதர துறை அலுவலர்கள் |
| பயிற்சிக் காலம் | : 2 நாள் |

### குழு அமைத்தல் பயிற்சி

| | |
|---|---|
| நோக்கம் | : டான்வா சுயஉதவிக் குழுக்கள் அமைத்திட பண்ணை மகளிரை ஊக்குவித்தல் |
| பயிற்சி பெறுபவர் | : 20 மகளிர் |
| பயிற்சிக் காலம் | : 2 நாட்கள் |
| பயிற்சியாளர் | : திட்ட வெளி ஆலோசகர், வேளாண் அலுவலர் (தொடர்பணி) |

### மாவட்ட பண்ணை மகளிர் குழு ஒருங்கிணைப்பு கருத்தரங்கு

| | |
|---|---|
| நோக்கம் | : குழுக்கள் சுயமாகத் தொழில் தொடங்கு வதற்கான வாய்ப்பை உருவாக்கவும், குழுக்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் வழிவகை செய்தல் |
| கலந்து கொள்வோர் | : 50 மகளிர் ./ 10 குழுக்களின் உறுப்பினர்கள் |
| பயிற்சிக் காலம் | : 1 நாள் |

### சிறப்புப் பயிற்சி

| | |
|---|---|
| நோக்கம் | : ஆண்டு முழுவதும் வருமானம் கிடைத்திட வேளாண் சார்ந்த தொழில்களான கால்நடைத் துறை, தோட்டக்கலைத் துறை, காளான் வளர்ப்பு ஆகியவற்றில் பயிற்சி அளித்தல் |
| பயிற்சிப் பெறுபவர் | : 26 பயிற்சிப் பெற்ற மகளிர் |
| பயிற்சிக் காலம் | : 4 நாட்கள் |
| பயிற்றுவிப்பவர் | : வேளாண்மை அலுவலர் (ப.ம.ஒ.), சம்மந்தப்பட்ட துறை வல்லுநர்கள் |

### மாதிரிப் பண்ணை

| | |
|---|---|
| நோக்கம் | : ஒருங்கிணைந்த பண்ணையத்தை அடிப்படையாகக் கொண்டு பயிர் சாகுபடியுடன் பழமரங்கள், மலர் மற்றும் காய்கறி சாகுபடி, கறவைமாடு, ஆடு வளர்ப்பு போன்ற சார்பு தொழில்களில் ஊக்குவித்து பண்ணை மகளிரின் வயலில் மாதிரிப் பண்ணை அமைத்தல். |

### பன்மடங்கு பெருக்குப் பயிற்சி

| | |
|---|---|
| நோக்கம் | : வேளாண் தொழில்நுட்பங்கள் எளிதில் கிராமங்களில் பரவ, டான்வா மகளிரைக் கொண்டு சக பண்ணை மகளிருக்கு கற்று தந்து, டான்வா குழுக்கள் அமைத்திட ஊக்கமளித்தல். |






| | | |
|---|---|---|
| பயிற்சி | : | 25 மகளிர் கொண்ட 5 குழுக்கள் / உதவி வேளாண்மை அலுவலர் தொகுதி. |
| பயிற்சிக் காலம் | : | 5 நாட்கள் |
| பயிற்சியாளர் | : | தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறும் திறன் வாய்ந்த டான்வா மகளிர், தொடர்பு தலைவி, வேளாண் அலுவலர் (டான்வா). |

**பருவக்கால பயிற்சி**

| | | |
|---|---|---|
| நோக்கம் | : | கிராம அளவில் பருவத்திற் கேற்ற பல புதிய தொழில் நுட்பங்களை செயல் விளக்கங்கள் மூலம் நினைவூட்டுதல். |
| பயிற்சிப் பெறுபவர் | : | டான்வாத் திட்டத்தில் பயிற்சி பெற்ற மகளிர்/ இதர பண்ணை மகளிர். |
| பயிற்சிக் காலம் | : | 2 நாட்கள் |
| பயிற்சியாளர் | : | வேளாண் அலுவலர் (தொடர்பணி) |

## டான்வா பண்ணை மகளிர் குழு

**ஏன்?**

★ வறுமை நிலை

★ சேமிப்பு பழக்கம் இல்லாமை

★ நிரந்தர வருமானம் இல்லாமை

★ அவசர தேவைக்கு அதிக வட்டிக்கு கடன் பெறுதல்

★ குறைந்த தொழில்நுட்ப அறிவு

★ போதிய சமூக நிலை கிடைக்காது இருத்தல்.

**உறுப்பினர்கள் தகுதி**

★ டான்வா பண்ணை மகளிர்

★ இதர சிறு / குறு பண்ணை மகளிர்

★ திருமணமான மகளிர் 20–45 வயதிற்குள்

★ மொத்த உறுப்பினர்கள் 20 நபர்கள்

★ உறுப்பினர்களுக்குள் ஒருமித்த கருத்து

★ ஒரே கிராமத்தில் வசிப்பவர்கள்

**குழுக் கூட்டம் நடத்தும் முறை**

★ ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் நடத்துதல்

★ அனைத்து முடிவுகளும், பெரும்பாலான உறுப்பினர்களின் ஒப்புதலுடன் எடுக்கப்படுதல்

**குழுவின் பணிகள்**

★ மாதக் கூட்டம் நடத்துதல்

★ நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல், (தலைவி, உபதலைவி, பொருளாளர், செயலாளர்)

★ சிறுசேமிப்பு செய்தல்

★ குழு உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்தல்

★ கடன் வசூல் செய்தல்

★ வேளாண்மை, வேளாண்மை சார்ந்த உபதொழில்கள் மற்றும் பிற தொழில்கள் மூலம் வருவாய் உயர நடவடிக்கை எடுத்தல்.

## திட்ட சாதனைகள்

★ டான்வா திட்டத்தின் மூலம் 215 பெண் வேளாண் பட்டதாரிகள் பணியமர்த்தப் பட்டுள்ளனர்.









★ 66,020 சிறு/மிகச்சிறு பண்ணை மகளிர் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ளனர்.

★ இதில் 19,800 தாழ்த்தப்பட்டப் பழங்குடி பண்ணை மகளிர்.

★ பயிற்சிப் பெற்ற மகளிர் மூலம் 5,00,000 சக பண்ணை மகளிர், வேளாண் தொழில்நுட்ப அறிவை பெற்றுள்ளனர்.

★ பயிற்சிப் பெற்றவர்களில் 1,800 மகளிர் ஊராட்சி அமைப்புகளில் பெண் உறுப்பினர்கள்.

★ 800 டான்வா பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

★ சிறு/மிகச்சிறு பண்ணையில் வேளாண் உற்பத்தி திறன் 14 சதவிகிதத்திலிருந்து அதிகபட்சமாக 80 சதவிகித உயர்வு.

★ பண்ணை மகளிர் கழனியில் மாதிரிப் பண்ணைகள்.

★ 400 தொடர்பு தலைவிகள் சகபண்ணை மகளிருக்கும் வேளாண் துறைக்கும் பாலமாக செயல்படுகின்றனர்.

★ பயிற்சிப் பெற்ற பண்ணை மகளிர் விரிவாக்கத்தில் தொடர்பு விவசாயிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ வேளாண் விரிவாக்க மையங்களில் இடுபொருட்களை எளிதில் பெற அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

★ சாகுபடி இல்லாக் காலங்களில் தொடர் வருமானம் பெற வேளாண் சார்ந்த உபதொழில் சிறப்புப் பயிற்சி.

★ டான்வா மகளிர் தங்கள் வேளாண் விளைபொருட்களை உழவர் சந்தையில் விற்று நேரடி இலாபம் அடைதல்.

★ பண்ணை மகளிர் குழுவினர் சமுதாய பணிகளில் ஈடுபாடு.

★ பண்ணை மகளிரின் தன்னம்பிக்கை உயர்வு.

## ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம்

**நோக்கம் :**

★ பயிர் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர, உபதொழில்கள் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

★ இயற்கை சீற்றத்தால் பயிர் வருமானம் குறைந்தால், உபதொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் இதை ஈடுசெய்ய உதவும்.

★ பயிர் சாகுபடி இல்லாத பருவத்திலும், உபதொழில்கள் மூலம் தொடர்ந்து வருமானம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மாதிரி வழி முறைகள் :**

ஒரு ஏக்கர் நிலப்பரப்பில், ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம் கடைப்பிடிக்கக் கூடிய சில வழிமுறைகள் :

**வழிமுறை–1 :**

☐ பயிர் – 80 சென்ட்

☐ தீவனப்பயிர் – 10 சென்ட்

☐ பழமரங்கள் – 10 சென்ட்

இவற்றுடன் கறவை மாடுகள் வளர்ப்பு.

**வழிமுறை–2 :**

☐ பயிர் – 50 சென்ட்

☐ காய்கறி – 20 சென்ட்



☐ மரங்கள் /
பழமரங்கள் – 13 சென்ட்

☐ மழைநீர் குட்டை – 2 சென்ட்
(பண்ணை குட்டை)

☐ தீவனப்பயிர் – 5 சென்ட்

☐ பழமரங்கள் – 10 சென்ட்

இவற்றுடன் கறவை மாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு.

**வழிமுறை–3 :**

☐ பயிர் – 50 சென்ட்

☐ மரங்கள்/
பழமரங்கள் – 25 சென்ட்

☐ மலர்கள் – 20 சென்ட்

☐ தீவனப்பயிர் – 5 சென்ட்

இவற்றுடன் கறவை மாடு, வெள்ளாடு வளர்ப்பு மற்றும் தேனி வளர்ப்பு.

**கவனிக்க வேண்டியவை :**

★ கால்நடை வளர்த்தால், கோ–1, கோ–2, கோ–3, களிபுல் அல்லது கொழுக்கட்டை புல் போன்ற தீவனப் பயிர்களையும், வருடாந்திர தீவனப்பயிர்களான சோளம், மக்காச் சோளம், கம்பு ஆகியவற்றையும் சாகுபடி செய்ய வேண்டும்.

★ முருங்கை, அகத்தி, சுபாபுல் போன்ற தீவன மரங்களை வரப்பில் வளர்க்கலாம்.

## வீட்டுக் காய்கறித் தோட்டம்

| காய்களின் பெயர் | பருவம் |
|---|---|
| தக்காளி மற்றும் வெங்காயம் | ஜூன்–செப்டம்பர் |
| முள்ளங்கி | அக்டோபர்–நவம்பர் |
| பீன்ஸ் | அக்டோபர்–பிப்ரவரி |
| வெண்டை | ஜனவரி–மே |
| கத்தரி | ஜூன்–செப்டம்பர் |
| கீரை | மே |
| மிளகாய் மற்றும் முள்ளங்கி | ஜூன்–செப்டம்பர் |
| தட்டைப் பயிர் | டிசம்பர்–பிப்ரவரி |
| பெரிய வெங்காயம் | மார்ச்–ஆகஸ்ட் |
| வெண்டை மற்றும் முள்ளங்கி | ஜூன்–ஆகஸ்ட் |
| முட்டை கோசு | செப்டம்பர்–டிசம்பர் |
| கொத்தவரை | ஜனவரி–மார்ச் |
| பீட்ருட் | செப்டம்பர்–நவம்பர் |
| தக்காளி | டிசம்பர்–மார்ச் |
| வெங்காயம் | ஏப்ரல்–மே |
| கொத்தவரை | ஜூன்–செப்டம்பர் |
| கத்தரி மற்றும் பீட்ருட் | அக்டோபர்–ஜனவரி |
| டின்டா | பிப்ரவரி–மே |
| கேரட் | செப்டம்பர்–டிசம்பர் |
| பூசணி | ஜனவரி–மே |
| வெங்காயம் | செப்டம்பர்–டிசம்பர் |
| அவரை | ஜூன்–ஆகஸ்ட் |
| மல்லி | ஏப்ரல்–மே |





### பல பருவத் தாவரங்கள்

| | |
|---|---|
| முருங்கை | ஒரு வரிசை |
| வாழை | ஐந்து வரிசை |
| பப்பாளி | ஐந்து வரிசை |
| மரவள்ளி | இரண்டு வரிசை |
| கறிவேப்பிலை | ஒரு வரிசை |
| தவசிக்கீரை | ஒரு வரிசை |
| செர்ரிப் பழம் | இரண்டு வரிசை |
| அகத்தி | ஒரு வரிசை |
| அரநெல்லி | ஒரு வரிசை |

**பழப்பயிர்கள் சாகுபடி குறிப்புகள்**

| வ. எண் | பயிர் | ரகங்கள் | சாகுபடி பருவ காலம் | குழி அளவு மீட்டரில் | இடைவெளி மீட்டரில் | 1 எக்டேருக்கு தேவைப்படும் செடிகள் | உர சிபாரிசு(வளர்ந்த மரங்களுக்கு) மரம் 1க்கு தழைமணி சாம்பல் | மகசூல் (எக்டேருக்கு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | மா | நீலம், பி.கே.எம்1 பெங்களூரா களப்பாடு பங்கனப்பள்ளி | ஜூலை முதல் டிசம்பர் வரை | 1x1x1 | 10x10 | 100 | 1:1:1.5 கிலோ/மரம் | 15–20 டன் |
| 2. | எலுமிச்சை | பி.கே.எம்.1 | ஜூன் முதல் டிசம்பர் வரை | 0.75x0.75 x0.75 | 5–6x5–6 | 275 முதல் 400 வரை | 0.6:0.2:0.3 கிலோ/மரம் | 25 டன் |
| 3. | கொய்யா | அலகாபாத், பனாரசி, லக்னோ–49 | ஜூன் முதல் நவம்பர் வரை | 0.45x0.45 x0.45 | 5–6x5–6 | 275 முதல் 400 வரை | 1:1:1 கிலோ/மரம் | 25 டன் |
| 4. | சப்போட்டா | ஓவல், கீர்த்தபர்த்தி கோ–1, கோ–2 பி.கே.எம்.1,2,3 | ஜூன் முதல் நவம்பர் வரை | 1x1x1 | 9–10x9–10 | 100 முதல் 110 வரை | 1:1:1.5 கிலோ/மரம் | 12–25 டன் |
| 5. | மாதுளை | கணேஷ், கோ1 ஏற்காடு 1 | ஜூன் முதல் டிசம்பர் வரை | 0.6x0.6 x0.6 | 2.5–3.0 x2.5–3.0 | 1100 முதல் 1600 வரை | 0.6:0.5:1.2 கிலோ/மரம் | 20–25 டன் |
| 6. | நெல்லி | பனாரசி | ஜூன் முதல் டிசம்பர் வரை | 1x1x1 | 9x9 | 110 | 0.2:0.5:0.2 கிலோ/மரம் | 5–10 டன் |

### ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு

**நோக்கம்**

★ வளமான பயிரை நலமான சூழலில் வளர்த்தல்.

★ நன்மை தரும் பூச்சிகளை பாதுகாத்து பெருக்குதல்.

★ பயிரை தொடர் கண்காணிப்பில் வைத்தல்.

★ தங்கள் வயலுக்கு தாங்களே நிபுணர்கள் என விவசாயிகளை ஆக்குதல்.

★ சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, காற்றையும், நீரையும், உணவையும் நஞ்சாக்காமல் இருத்தல்.

### ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள்

**உழவியல் முறை**

★ பூச்சி, நோய்களை எதிர்க்கும் சக்தி உள்ள ரகங்களை பயிரிடுதல்

★ கோடை உழவு

★ ஒரே சமயத்தில் விதைப்பு

★ பொறிப்பயிர்களை வளர்த்தல்

★ சரியான இடைவெளியில் நடுதல்

★ பயிர் சுழற்சி

★ நீர் நிர்வாகம் மற்றும் உர நிர்வாகம்

## பூச்சி நோய் கண்காணிப்பு

★ விளக்குப் பொறி மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிவைத்து கண்காணித்தல்.

## உயிரியல் முறை

★ நன்மை செய்யும் பூச்சிகள், ஒட்டுண்ணிகள் கொண்டு பயிரைத் தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்துதல்

★ இயற்கைப் பூச்சி நாசினிகளான வேப்பெண்ணை, புகையிலைச்சாறு கொண்டு கட்டுப்படுத்துதல்

★ பயிரைத் தாக்கும் பூச்சிகளின் முட்டைக் குவியல் மற்றும் புழுக்களை பொறுக்கி அழித்தல்.



## சமூக ஒத்துழைப்பு

★ அனைத்து விவசாயிகளும் ஒன்றி செயல்பட்டு பூச்சிகளை கட்டுப்படுத்துதல்

(உ–ம்) நிலக்கடலையில் சிவப்புக் கம்பளிப்பூச்சி அழிப்பு, எலி ஒழிப்பு

## கவனிக்க வேண்டியவை

அனைத்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தும், பூச்சி தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந்தால், சரியான பூச்சிக்கொல்லி மருந்தை, பரிந்துரைக்கப்பட்ட அளவில் உபயோகிக்க வேண்டும்.

## குழுவினரால் நன்மைகள்

★ சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கப்படுகிறது.

★ குழு உறுப்பினர்களின் பொருளாதார அவசர தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.

★ வருடம் முழுவதும் நிரந்தர வருமானம் கிடைக்கிறது.

★ சமூக, பொருளாதார நிலை உயர்த்தப்படுகிறது.

★ வயதான காலத்தில் சேமநல நிதிபோல உதவுகிறது.

## வங்கியில் டான்வா குழுவின் நடவடிக்கைகள்

★ அரசால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் கணக்கு தொடங்குதல்.

★ வங்கியின் நம்பிக்கை பெற்ற உடன் தொழில் தொடங்க கடன் பெறுதல்.

★ குறிப்பிட்ட காலத்தில் கடனை திருப்பி செலுத்துதல்.

***"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"***

– என்ற பாரதியின் கூற்றை நினைவாக்கும் வகையில் டான்வா திட்டத்தின் மூலம் பண்ணை மகளிர் பெற்றுவரும் வெற்றியையும் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளதையும் காணும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. ★



நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!

**– மகாகவி பாரதியார்**



**ஆலோசனை கூறிய, உறுதுணையாக இருந்த, ஒத்துழைத்த, நிறைவேற்றிய அனைவருக்கும் நன்றி**

# தூய்மை சென்னை

இந்தியாவிலேயே முதல் தடவையாக சென்னை மாநகரத்திலே இந்த நவீன தூய்மைத் திட்டத் தொடக்க விழா இன்று நடைபெறுகின்றது. இந்தியாவிலேயே முதலாவதாகத் தொடங்கப்பட்ட பல திட்டங்களில் ஒன்றாக இன்றைக்கு இந்தத் தூய்மைத் திட்டமும் தொடங்கப்படுகின்றது. இதைத் தொடங்குகிற நேரத்தில் நவீன முறையிலே ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு மிச்சம் ஏற்படுகின்ற வகையிலே இந்தத் திட்டம் நடைபெற்றாலுங் கூட, இதற்கு உதவிட வேண்டிய பெரும் பொறுப்பு மாநகராட்சி மன்றத்திலே வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் உள்ளது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தென்றால் இந்தத் திட்டத்தை இங்கே தொடங்குவதற்கு முதலிலே ஆலோசனை கூறிய தம்பி முரசொலி மாறனுக்கும், அந்த ஆலோசனைக்கு உறுதுணையாக இருந்த முன்னாள் மாநகராட்சி ஆணையர் கோலப்பனுக்கும், ஒத்துழைத்து தொடர்ந்து உதவிகரமாக இருந்த நண்பர் டிட்கோ

ஏனென்றால் மக்கள் ஒத்துழைத்தால்தான் எந்தத் திட்டமும் நல்ல முறையிலே நிறைவேற முடியும். இந்தத் திட்டத்தை அறிந்துகொள்ள, இதைத் தங்கள் நகரங்களிலே அறிமுகப்படுத்த புனாவிலிருந்தும், விஜயவாடாவிலிருந்தும் வருகின்ற அளவிற்குத் திட்டத் தொடக்கத்திலேயே சென்னை மாநகரம் மாநகரங்களுக்கெல்லாம், இந்தியாவிலே உள்ள மற்ற நகரங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையிலே அமைந்திருக்கிற



கோபாலனுக்கும், இதை நிறைவேற்றுவதிலே முனைப்பாக இருந்து நிறைவேற்றிக் காட்டியுள்ள மேயர் தம்பி மு.க.ஸ்டாலினுக்கும் உங்கள்அனைவர் சார்பாக என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டங்கள் பாராட்டப்பட வேண்டிய திட்டங்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். ஆனால் எந்தத் திட்டம் எல்லோராலும் போற்றப்படுகின்ற, புகழப்படுகின்ற திட்டமாக இருந்தாலும், அதைப் பழித்துப் பேசுகின்ற, இழித்துப் பேசுகின்ற, அதற்கு எதாவது குதர்க்கம் சொல்லுகின்ற சிலர் இருக்கத்தான் செய்வார்கள். வீட்டிலே குப்பை இருப்பதைப் போல, தெருவிலே புழுதி இருப்பதைப் போல, நாட்டிலே அப்படிப்பட்ட சக்திகள், இருக்கத்தான் செய்கின்றன. அவைகளையெல்லாம் கூட்டி ஒதுக்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் தினம் தினம் இப்படி ஒதுக்கினால் போதாது, நவீன முறையிலே ஒதுக்க வேண்டுமென்ற வகையில் இன்றைக்கு தம்பி ஸ்டாலின் இந்தத் திட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

குப்பை என்பது ஒரு கேவலமான சொல், ஆனால் அந்தக் குப்பையை அகற்றுவதற்காக தமிழர் திருநாளையொட்டிய ஒரு நாளையே தமிழர்கள் போகிப் பண்டிகை என்று கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அன்றைக்குத் தான் அசுத்தங்களை, அழுக்குகளை, குப்பைகளையெல்லாம் அகற்ற வேண்டுமென்பதற்காக, தமிழன் குப்பையைச் சகித்துக்கொள்ள மாட்டான் என்பதற்கு அடையாளமாக அதற்கு ஒரு திருநாளையே கொண்டாடிக் கொண்டிருக்கின்றான்.



ஆனால் திருநாளோடு அது முடிந்துவிடக் கூடிய காரியமாக இருக்கக் கூடாது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நாம் நடத்தி, நடைமுறையிலே செயல்படுத்த வேண்டிய காரியமாக இந்தக் குப்பை அகற்றுகின்ற காரியத்தை நாம் செய்தாக வேண்டும்.

வெளிநாடுகளிலே எந்த அளவிற்கு அந்த நகரங்கள், ஊர்கள் தூய்மையாக இருக்கின்றன என்பதை நான் நேரிலே பார்த்தவன் என்ற முறையில், சென்னை போன்ற நகரங்களைக் காணும் போதெல்லாம் அந்த நகரங்களின் நினைப்பு எனக்கு வருவதுண்டு. அந்த நகரங்களைப் போல சென்னை ஆகாதா என்கிற நினைப்பு தோன்றுவதுண்டு.

ஒரு சிறு துண்டுத் தாள் நம்முடைய கையிலிருந்து கீழே விழுந்தாலும் நாம் துண்டுத் தாளைத் தானே கீழே போட்டோம் என்று நாம் எண்ணிக் கொள்கிறோம். நம்மைப் போல பல இலட்சம் மக்கள் ஆளுக்கொரு துண்டுத் தாளை, கிழிந்த தாளை அல்லது ஒரு அழுக்குத் துணியை அல்லது ஒரு அழுக்குத் தாளைத் தெருவிலே போட்டு விட்டுப்போனால் அதுதான் தம்பி ஸ்டாலின் தன் பேச்சிலே குறிப்பிட்ட **1,800** டன், **2,500** டன் குப்பை என்றாகிறது.

### நோய்கள் வராமல் தடுக்க இந்தத் தூய்மைப் பணி

அந்தக் குப்பையை டன் கணக்கிலே நாம் கூட்டிப் பெருக்கிக் குவித்துப் பார்க்கும் போது உருவாகின்ற டன் கணக்கான குப்பைகளையெல்லாம் அகற்றினால் தூய்மை ஏற்படுவது மாத்திரமல்ல, பார்ப்பதற்கு பாதைகள், வீதிகள், தெருக்கள் எல்லாம் அழகாக இருக்கும் என்பது மாத்திரமல்ல, நோய்கள் வராமல் தடுக்கக் கூடிய சாதன மாகவும் இந்தத் தூய்மைப் பணி அமைகின்றது. அதற்கேற்ற வகையிலே தான் இந்தத் திட்டம் இங்கே இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு சென்னை மாநகரத்திலே இந்தப் பணியிலே ஏறத்தாழ பத்தாயிரம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் இந்தத் திட்டம் வரும்போது பத்தாயிரம் பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய பணிக்கு ஏதாவது இதன் மூலமாக ஆபத்து வருமா என்று தம்பி ஸ்டாலினிடம் கேட்ட போது, "யாருடைய பணிக்கும் ஆபத்து வராது,







இது இப்போது தொடக்கமாக மூன்று மண்டலங்களிலே தான் நாங்கள் நடத்தவிருக்கிறோம், இந்த மண்டலங்களிலே உள்ளவர்களும் இந்தப் பணியிலே ஈடுபடலாம் அல்லது அடுத்த மண்டலங்களிலே சென்று அங்கேயுள்ள பணியிலே ஈடுபடுவதற்கு வழிவகைகள் இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

### தூய்மைப் பணித் திட்டம் ஒரு சமுதாயப் புரட்சித் திட்டம்

தம்பி மாறன் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல புதிய பணி ஏறத்தாழ இரண்டாயிரம் பேருக்கு இந்த் நவீன முறையின் மூலமாக கிடைத்திருக்கின்றது. அவர்களையெல்லாம் இங்கே நாம் பார்க்கிறோம். அழகான உடை அணிந்து இங்கே வீற்றிருக்கிறார்கள். அவர்கள் நாளைய தினம் குப்பையை அகற்றுவதற்காக இந்தப் பணியிலே ஈடுபடும் போது, இதற்கென்றே இதுவரை குறிப்பிடப்பட்ட ஒரு பிரிவினர் அல்லது ஒரு வகுப்பினர் எப்படி பார்க்கப்படுகிறார்களோ அப்படி பார்க்கப்படாமல் சமுதாயத்திலே அவர்களும் ஒரு அங்கம் என்ற அளவிலே பார்க்கப்படுவார்கள்.

இவர்களையெல்லாம் காணும் போது சுரங்கங்களிலே பணியாற்றுபவர்களைப் போல தோற்றமளிக்கிறார்கள். இவர்கள் குப்பை கூட்டுபவர்கள் என்பது பார்த்தவுடனே தெரிந்துவிடும். இதுவரையிலே இருந்த பழக்கம், இனிமேல் கேட்டுத்தான் தெரிந்து கொள்ள முடியும். இவர்கள் பணி என்ன என்பதை, அந்த அளவிற்கு இவர்கள் நாகரிக உடை அணிந்து இந்தப் பணியிலே ஈடுபடவிருக்கிறார்கள் என்கிற போது மாறன் குறிப்பிட்டதைப் போல இது ஒரு சமுதாயப் புரட்சி தான். அந்தப் புரட்சி தோன்ற வேண்டிய இடத்திலே தோன்றியிருக்கின்றது. அதைத் தோற்றுவிக்க வேண்டியவர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அப்படிப்பட்ட இந்தப் பணியை இன்றைக்கு நான் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொருவரும் தங்களுடைய கடமையை உணர்ந்து இந்தப் பணி சிறப்பதற்குப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கென்ன, அவர்கள் குப்பையை அள்ளிக் கொண்டு போவார்கள் என்று இருந்து விடாமல், அவர்களுக்கு நாமும் உதவிட வேண்டும். இந்த வண்டிகள் ஒவ்வொருவருடைய வீடு நோக்கி வருகிற நேரத்தில் அங்கே குவிந்த குப்பைகளையெல்லாம் அதன் மூலமாக அகற்றுகின்ற பணியிலே ஈடுபடுவதற்கு தாய்மார்கள், தோழர்கள், பெரியோர்கள் அனைவரும் ஒத்துழைப்பைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு சென்னை நகரம் தூய்மையான நகரமாக, மேலும் தூய்மையான நகரமாக சிங்காரச் சென்னையாக மாற அனைவரும் ஒத்துழைப்பைத் தாருங்கள் என்று கேட்டு, இந்தப் பணியை நான் உங்களுடைய அன்பான ஒத்துழைப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையோடு தொடங்கி வைக்கிறேன்.

***– "தூய்மை சென்னை 2000" என்கிற சென்னை மாநகராட்சி தூய்மைத் திட்டத்தை 4–3–2000 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து...*** ★

# மக்களின் வளர்ச்சிக்கும் வளமைக்கும் உறுதியளிக்கும் தமிழ்நாடு அரசு

– தமிழக ஆளுநர்
நீதிபதி செல்வி **மீ. பாத்திமா பீவி**

புத்தாயிரம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் தமிழ்நாடு சட்டப் பேரவையின் இந்த முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தாயிரமாண்டு மலர்ந்த நல்வேளையில், கடல்சூழ்ந்த கன்னியாகுமரி முனையில், 133 அடி உயர வானளாவிய அய்யன் திருவள்ளுவர் சிலையை நமது முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திறந்து வைத்து, தமிழ்மறையாம் திருக்குறள் தந்த அந்த மாபெரும் தத்துவஞானிக்கு, உலகளாவிய புகழைக் கூட்டுவதாக அமைந்துள்ளது. மக்கள் நலன் காப்பதில் மேலும் செம்மையாகச் செயல்படுவதற்கு திருவள்ளுவரின் கருத்துரைகள் நமக்கு கலங்கரை விளக்கமாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் மறுஆய்வு செய்யும் போது, இந்திய நாட்டின் ஒருமைப்பாடும், ஒற்றுமையும், மதச்சார்பின்மையும், உறுதியும், வலிவும் கொண்டு நிலைபெறுவதற்கேற்பவும், சிறுபான்மை சமுதாய மக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொண்ட சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் கொண்டதாக அரசியலமைப்புச் சட்டம் அமைய வேண்டுமென்றும் இந்த அரசு வலியுறுத்தும்.

மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்தையும் மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக ஆக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசு வலியுறுத்திவரும் மொழிக் கொள்கையாகும். அரசியலமைப்புச் சட்ட மறுஆய்வுக் குழு இந்தக் கருத்தினை ஏற்றுக் கொள்ளும் என நம்புகிறேன்.

திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பழமையானதும், சிறப்புப் பெற்றதும், இலக்கிய இலக்கண வளம் மிக்கதுமான தமிழ் மொழியை முதற்கட்டமாக மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக்கிட இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தும்.

கார்கில் போரில் இந்திய வீரர்களின் தீரம் மிகுந்த தேசப்பற்றினை நாம் அனைவரும் நினைந்து மனம் கனிந்து பாராட்டுவதற்கு இதுவே தக்க தருணமாகும். தமிழக மக்கள் கார்கில் இராணுவ வீரர் நிவாரண நிதிக்கு பெருமளவில் வரிசை வரிசையாகத் தாமே முன் வந்து தாராளமாக நன்கொடை வழங்கியதால், தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 50 கோடி ரூபாயை தமிழ்நாடு அளிக்க இயன்றது என்பதை இங்கே தெரிவிப்பதில் நான் பெருமையடைகிறேன்.





இந்தியத் திருநாட்டின் பாதுகாப்புக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்த அந்த வீரர் தம் குடும்பத்தினர் துயர் துடைக்க இந்த அரசு அந்தக் குடும்பங்களுக்குச் சிறந்த பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியுள்ளது. இவற்றுள் கருணை உதவித் தொகை ரூ.5 இலட்சம்; மற்றும் ரூ.7 இலட்சம் முதல் ரூ.11 இலட்சம் வரை மதிப்புள்ள அடுக்கு மாடி வீடு அல்லது தனி வீடு, இன்னுயிர் ஈந்த வீரரின் குழந்தைகளுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, தொழில்நுட்பக் கல் லூரிகளில் இட ஒதுக்கீடு, அவர்தம் குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு தமிழ்நாடு அரசில் வேலைவாய்ப்பு ஆகியவை அடங்கும்.

கார்கில் வீரர்களுக்குப் பெருமளவில் உதவி புரிந்து நாட்டுப்பற்றை வெளிப்படுத்திய நாம், இயற்கைச் சீற்றத்தால் இன்னலுறும் மக்கள், எந்த மாநிலத்தவராக இருப்பினும், அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி நம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதிலும் முன்னணி வகிக்கிறோம். கடந்த ஆண்டு ஒரிசாவைத் தாக்கிய வரலாறு காணாத கடும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட "ஒரிசா புயல் நிவாரண நிதிக்கு" ரூ.2 கோடியே 77 இலட்சம் நிதியுதவியை அளித்து, தமிழ்நாட்டு மக்கள் தங்கள் ஆழ்ந்த பரிவுணர்வை வெளிப்படுத்தினர். புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் பொருட்டு, இந்த அரசு ஒரு கோடி ரூபாய்க்கான பால் பவுடரையும், மூன்று கோடி ரூபாய்க்கான வேட்டி சேலைகளையும், ஏனைய நிவாரணப் பொருட்களையும் அனுப்பி வைத்தது. ஒரிசா அரசு மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கு கொண்டு உதவிட வேண்டி, தேவையான மருந்து பொருட்களுடன் மருத்துவர்கள் குழு ஒன்றும் அங்கு அனுப்பப்பட்டது.

மொழிவழிச் சிறுபான்மையினரின் நலனுக்குப் பாதகம் ஏதுமின்றி,"எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என்ற உன்னத குறிக்கோளை எய்துவதில் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. நீதிபதி மோகன் குழுவின் பரிந்துரைகளை இவ்வரசு ஏற்றுக் கொண்டு, அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியைக் கட்டாயமாக முதல் மொழியாகவும், ஒன்று முதல் ஐந்து வரையிலான வகுப்புகளுக்கு பயிற்று மொழியாகவும் ஆக்கியுள்ளது.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணை புரியவும், தமிழ் இலக்கியங்களை மற்ற மொழிகளிலும், மற்ற மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழி பெயர்ப்பதை ஊக்குவிக்கவும், சாதனை படைக்கும் சிறந்த தமிழ் எழுத்தாளர்களுக்கு "குறள் பீடம்" விருது வழங்கிடவும், "தமிழ்ச் சங்கப் பலகை" (தமிழ் அகாடமி) இந்த ஆண்டு சனவரி 16 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் "உருது அகாடமி" என்ற அமைப்பினை ஏற்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ஒரு கோடி ரூபாய் தேவையென பரிந்துரைக்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக ரூபாய் 15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

1998–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பதினோராவது நிதி ஆணையம், தனது இடைக்கால அறிக்கையை அண்மையில் மத்திய அரசிடம் அளித்துள்ளது. இறுதி அறிக்கையை இந்த ஆண்டு ஜூன் திங்கள் முடிவுக்குள் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைக்கு இந்த ஆணையம் வந்திருந்த போது, தமிழ்நாடு போன்ற முற்போக்கு மாநிலங்களுக்கு, மத்திய அரசிடமிருந்து கூடுதல் நிதிப் பகிர்வினை அளிக்கப் பரிந்துரை செய்திட வேண்டும் என்று இவ்வரசு வலியுறுத்தியுள்ளது. அதனை ஏற்று இந்த ஆணையம் தமிழ்நாட்டிற்குக் கூடுதல் நிதிப் பகிர்வை பரிந்துரை செய்திருக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம்.



மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 சதவிகிதத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளித்திட வேண்டுமென்று இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தப் பிரச்சினையில் இடையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைப் போக்கி, மத்திய அரசு இதற்கான அரசியல் சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

மாநிலத்திற்கான திட்ட ஒதுக்கீட்டை எய்துவதில் இந்த அரசு தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது. 1998–99–ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப் பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.4500 கோடி முழுவதுமாக எய்தப்பட்டது. நிதி ஆதார இடர்ப்பாடு இருந்தபோதிலும், ஒப்புதலளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடான ரூ.5,250 கோடியை நாம் இந்த ஆண்டிலும் எய்திடுவோம். அடுத்த ஆண்டிலும் இந்த ஆண்டைவிட



அதிக ஒதுக்கீட்டுடன் திட்டப்பணிகள் செம்மையாக செயல்படுத்தப்படும்.

சட்டம் – ஒழுங்கைப் பராமரிப்பதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு சாதி, மத நல்லிணக்கத்தைப் பேணிக்காக்க எடுத்து வரும் தொடர் முயற்சியாலும், விஷமிகள் மீது திறம்பட எடுத்த உறுதியான நடவடிக்கைககளினாலும், அரசின் நடவடிக்கைகளுக்கு மக்கள் அளித்து வரும் இதயபூர்வமான ஆதரவின் காரணமாகவும், எங்கணும் பொதுவாக அமைதி நிலவுவதை உறுதி செய்ய முடிந்துள்ளது. கடந்த ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தலை மிக அமைதியாக நடத்தியுள்ளது, இந்த அமைதி நிலைக்கு ஓர் எடுத்துக் காட்டு. தமிழகத்தை அமைதிப் பூங்காவாகத் தொடர்ந்து திகழச் செய்வதற்கு சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதன் அவசியத்தை உணர்ந்து செயல்படும் இந்த அரசு, அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும், சமூக மறு மலர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் உகந்த கொள்கைகளை வகுப்பதற்காக சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் சமூகச் சீர்திருத்தத் துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தியுள்ளது.

பொதுவாக இந்த ஆண்டு மாநிலத்தின் பல பகுதிகளில் வடகிழக்குப் பருவ மழையின் அளவு இயல்பான அளவுக்கும் குறைவாக இருந்த போதிலும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், கரூர், பெரம்பலூரர் ஆகிய மாவட்டங்களில் கடும் மழையின் காரணமாக வெள்ளச்சேதம் ஏற்பட்டது. தூர்வாருதல் போன்ற தக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் பெருமளவு உயிரிழப்போ, கால்நடைகளுக்குச் சேதமோ மற்றும் உடைமைகள் இழப்போ இல்லாமல் பாதுகாக்கப்பட்டது. வெள்ள நிவாரண நடவடிக்கைகளுக்காகவும், சேதமடைந்த சாலைகள் போன்றவற்றைச் சீர் செய்யவும் இம்மாவட்டங்களுக்கு அரசு ரூ.32.25 கோடி வழங்கியுள்ளது.

இன்றியமையாப் பொருள்களின் விலைவாசியை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. பொதுவாக இம்மாநிலத்தில் கடந்த ஆண்டில் இன்றியமையாப் பொருட்களின் விலைகள் நிலையாக இருந்தன. பொது விநியோக முறையில் மூன்று கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்றும், 17 கிலோ அரிசி கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 75 பைசா என்றும் இருந்ததை மாற்றி, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் 20 கிலோ அரிசியும் கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 பைசா என்று வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் உள்ள விலையுடன் ஒப்பிடும் போது இது மிகக் குறைவான விலையாகும். ஏகபோக கொள்முதல் முறையை இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தியதன் மூலம் அரிசி இருப்பைப் போதுமான அளவுக்கு உயர்த்துவதை அரசு உறுதி செய்துள்ளது. ஏகபோகக் கொள்முதல் முறையின் கீழ்வரும் விவசாயிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கும் மேலாக, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50 ஊக்கத்தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு நமது மாநிலத்தில் விளைச்சல் வளமாக இருந்தமையால், முன் எப்போதுமில்லாத அளவுக்கு அரிசி உற்பத்தி 82.15 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்ந்தது. இந்த ஆண்டும் இதே அளவு நல்ல விளைச்சல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விவசாயத்திற்காகக் கடன்பெற்றோர், கடன்பெறாதோர் என்ற இருசாராருக்கும் பொருந்தும் வகையில், ஒரு புதிய விரிவான பயிர்காப்புறுதித் திட்டம் இம்மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் உணவுப் பயிர்களும், தோட்டக்கலைப் பயிர்களும் அடங்குவதோடு, சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய காப்பீட்டுக் கட்டணத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அளிக்கப்படும்.

வேளாண்மையை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு பாசனத் திட்டங்களில் தொடர்ந்து கணிசமாக முதலீடு செய்து வருகிறது. இந்த ஆண்டு சிறு பாசன ஏரிகளை மேம்படுத்தும் பணிக்கு முதலீடு செய்வதற்காக நபார்டு வங்கியின் ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காவிரி நதி நீர்க் கால்வாய்களில் ரூ.50 கோடி செலவில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாசனப் பகுதிகள் மேம்பாடு மட்டுமின்றி, மானாவாரிப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களின் மேம்பாட்டிற்கும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. தரிசு நில மேம்பாட்டுப் பணிகளை ஊக்குவித்து, துரிதப்படுத்த வேண்டி, மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் தரிசு நில மேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்டேர் தரிசு நிலப்பரப்பை பத்தாண்டு காலத்தில் மேம்படுத்துவதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில், புதுக்கோட்டை, திருநெல்வேலி, ஈரோடு, விழுப்புரம்,



சிவகங்கை, மதுரை, விருதுநகர், திருவண்ணாமலை, தருமபுரி, பெரம்பலூரர் ஆகிய மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் தரிசு நில மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடைச் செல்வத்தின் தரத்தையும் வளத்தையும் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ள இந்த அரசு மாநிலத்தில் உள்ள சுமார் 2 கோடி கால்நடைகளின் நலத்தைப் பாதுகாக்க, தொலைநோக்குப் பார்வையுடன், கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றைப் புதிதாகத் தொடங்கியுள்ளது. கால்நடை மருந்தகத்தை எளிதில் சென்றடைய வசதியில்லாத தொலை தூரத்திலுள்ள கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்டு, அந்தக் கிராமப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு இலவசமாக மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் அளிக்கும் வகையில் சிறப்பு கால்நடைப் பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. 26.2.2000 தேதி வரை 297 முகாம்கள் நடத்தப்பட்டு 9,99,582 கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கால்நடை வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் ஒரு புதிய கொள்கையை முதலமைச்சரின் வேண்டுகோளைத் தொடர்ந்து மாநிலத் திட்டக்குழு வகுத்துக் கொண்டிருக்கின்றது.

உழவர்களின் விளை பொருள்களுக்குத் தேவையான விற்பனைச் சந்தை வசதிகளை மேம்படுத்த இந்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உழவர்கள் தாம் உற்பத்தி செய்த பழங்கள், காய்கறிகள் போன்றவற்றுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும், தனியார் அங்காடிகளை விட குறைந்த விலையில் நுகர்வோர் அத்தகைய பொருட்களைப் பெற்றிடவும், இந்த அரசு உழவர்களையும் நுகர்வோரையும், இடைத்தரகர்களின்றி, ஓரிடத்தில் சேர்த்திடும் புதியதோர் அமைப்பான உழவர் சந்தைகளைத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு உழவர்களிட மிருந்தும், பொதுமக்களிட மிருந்தும் மிகப்பெரும் வரவேற்பும் பாராட்டும் கிடைத்ததனால், மாநிலம் முழுவதும் படிப்படியாக 100 நகர்ப்புற மையங்களில் இத்தகைய உழவர் சந்தைகளை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ஏற்கனவே அறிவித்தவாறு, மதுரையில் ரூ.17 கோடி செலவில் நெல் விற்பனை அங்காடி ஒன்றும் திருச்சியில் ரூ.12.30 கோடி செலவில் வெல்ல விற்பனை அங்காடி ஒன்றும், பெருந்துறையில் ரூ.30.89 கோடி செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி ஒன்றும் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாநிலத்தில் புதிய தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழ்நாடு தொடர்ந்து வெற்றியடைந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். தகவல் தொழில்நுட்பவியல் துறை அதிக அளவில் முதலீட்டினை ஈர்க்கும் துறையாகும். டாடா ஆலோசனை நிறுவனம், எச்.சி.எல்., இன்போசிஸ், விப்ரோ, போலாரிஸ் போன்ற மென்பொருள் மேம்பாட்டில் முன்னணி வகிக்கும் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கு அரசு அளிக்கும் ஆதரவுடன், தமிழ்நாட்டில் மென்பொருள் மேம்பாட்டு மையங்களை உருவாக்கியுள்ளன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகமும் (TIDCO), தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன்மும் (ELCOT) சேர்ந்து ரூ.338 கோடி முதலீட்டில் சென்னை தரமணியில் அமைத்து வரும் நவீன தொழில் நுட்ப வசதியுடன் கூடிய டைடல் பூங்கா இன்னும் சில மாதங்களில் முடிவு பெற்று செயல்படத் துவங்கும். சமுதாய இணையப் பணிகள் கணிசமான அளவிற்கு அதிகரிப்பதற்கு உதவும் வகையில் இம்மாநிலத்தில் நவீன தகவல் தொடர்பு கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவதற்காக, "வோர்ல்ட் டெல்" நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் உருவாக்கிய திட்டம் வரும் நிதி ஆண்டில் செயல்படத் தொடங்கும். சிங்கப்பூர் பிரதமர் அண்மையில் இங்கு வருகை தந்ததும், அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு குழுவினர் சிங்கப்பூருக்குச் சென்றதும் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நல்லதோர் சூழ்நிலையை உருவாக்கியுள்ளன.

வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில் நுட்பத்தை அரசு நிர்வாகத்தில் பயன்படுத்திக் கொண்டு மக்களுக்கான



சேவைகளை வெளிப்படையாகவும், விரைவாகவும், துல்லியமாகவும் வழங்கிடும் நோக்கத்துடன், மாவட்ட நிர்வாகத்தை கணினி மயமாக்கும் முயற்சியை இந்த அரசு முனைப்புடன் மேற்கொண்டுள்ளது. திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள கணினி மயமாக்கும் இந்தத் திட்டம் ஏனைய எல்லா மாவட்டங்களுக்கும், படிப்படியாக அரசின் அனைத்துத் துறைகளுக்கும் விரிவு படுத்தப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோல, இந்த அரசு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும், துணை நகரங்களையும், தொழிற்பேட்டைகளையும் உருவாக்குவதற்கும் தேவையான முதலீடுகளை கணிசமாக அதிகரிக்கும். செய்யாறு, திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, வடமங்கலம், சிறுசேரி ஆகிய இடங்களில் மாநிலத் தொழில் முன்னேற்ற கழகம் புதிய தொழிற் பூங்காக்களை உருவாக்கிவருகிறது. நெமிலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வளர்ந்து வரும் தொழிற்பூங்காக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், அடிப்படை வீட்டுவசதி கட்டமைப்புப் பணிகளும் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்சக்தித் துறையைப் பொறுத்தவரை, தனியார் துறையில், பேசின்பிரிட்ஜ் அருகே 196 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் ஒரு மின்சக்தித் திட்டம் சென்ற ஆண்டு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. பிள்ளைப்பெருமாநல்லூர், நெய்வேலி, சாமல்பட்டி ஆகிய இடங்களில் தனியார் மின்சக்தித் திட்டங்கள் உருவாக்கும் வேலை நடந்து வருகிறது. தமிழ்நாடு மின்வாரியத்தின் 330 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட பார்சன் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் வரும் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். கோவில்களப்பாலில் எரிவாயுவை ஆதாரமாகக் கொண்ட 107 மெகாவாட் உற்பத்தி திறன் உள்ள மின்திட்டம், வரும் நிதியாண்டில் மின் உற்பத்தியைத் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், மாநிலத்தில் கிடைக்கும் ஒட்டுமொத்த மின் உற்பத்தி, மாநிலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில், மத்திய அரசின் மின் உற்பத்தித் திட்டங்களுக்குக் கணிசமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு மின் வாரியமும் தடையின்றி தரமாக மின்சாரத்தை நுகர்வோர்களுக்கு அளிக்கவும், மின்இழப்பை 16 சதவீதத்திற்குக் கீழ் குறைப்பதற்கும், மின் அனுப்புகை மற்றும் மின்பங்கீட்டுத் திட்டங்களில் அதிக அளவில் முதலீடு செய்து வருகிறது.

மாநிலத்தின் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வாழ்வதைக் கருத்தில் கொண்டு, நகர்ப்புறப் பகுதிகளில் அதிக முதலீடு செய்வதன் அவசியத்தையும், இந்த முதலீட்டிற்குத் தேவையான நிதி ஆதாரத்தைத் திரட்டுவதில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் பங்கையும் இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கான விரிவான சட்டமொன்றை இம்மாமன்றம் ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் நிதி நிறுவனங்களிடமிருந்தும், சந்தையிலிருந்தும் நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கும், நகர்ப்புற வசதிப் பணிகளை நிறைவேற்றுவதில் தனியாரை ஈடுபடுத்துவதற்கும் இந்த சட்டம் உதவும். தொழில் வரி விதிக்கும் நடைமுறை, அது மிகவும் வெளிப்படையாக இருக்கும் வகையிலும், நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் வருவாயை அதிகரிக்கும் வகையிலும் சீரமைக்கப் பட்டுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநிலத்தின் வருவாயிலிருந்து கணிசமான நிதியை மாற்றித் தருவதோடு, அவற்றின் அடிப்படை வசதித் திட்டங்களுக்காக நிதி அமைப்புகளிலிருந்து நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கும் மாநில அரசு வழிவகை செய்து தருகிறது. மொத்தம் 205 மில்லியன் அமெரிக்க டாலர் செலவில் செயல்படுத்தப்படவுள்ள தமிழ்நாடு நகர்ப்பகுதி இரண்டாவது மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலகவங்கி ஒப்புதலளித்து 105 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளளது. நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை அதிகரிக்கவும், அப்பகுதிகளில் மக்களுக்குத் தேவையான வசதிகளை அதிகரிப்பதற்கும் தேவைப்படும் மானியம் மற்றும் கடன் வசதிகளை அளிக்க வழிவகை செய்யும் இத்திட்டம் நடப்பு நிதி ஆண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது.

மாநிலத்தில் உள்ள நகர்ப்புறப் பகுதிகளில் ரூ.215 கோடி செலவில் தெருக்களையும் சாலைகளையும் மேம்படுத்தும் பெருந்திட்டம் ஒன்றை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. மாநிலத்தில் நகர்ப்புறப் பகுதிகளிலுள்ள அனைத்து பொது உலர்கழிப்பிடங்களையும் நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றியமைப்பதற்கு ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்ட திட்டம் இவ்வாண்டில் முழுமை பெறும். மாநகராட்சிகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கு ஓலைகளற்ற தீப்பிடிக்காத கல்நார்க் கூரை வீடுகள் கட்டும் திட்டத்தின் மூலம், இந்த ஆண்டு 12,082 குடும்பங்கள் பயனடையும். மாநகராட்சிப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் எஞ்சியுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வரும் ஆண்டில் கல்நார்க் கூரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். சென்னை மாநகரில் நீர்க்கால்வாய்ப் பகுதிகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்வோருக்கும், சென்னை மாநகர் துரித ரயில் திட்டத்தினால் இடம் பெயர்ந்தோருக்கும் மாற்றிடம் வழங்கும் திட்டத்தின் கீழ் 3,000 குடியிருப்புகள் ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கட்டப்பட்டு, பிப்ரவரி மூன்றாம் நாள் அண்ணா நினைவு நாளன்று முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதே பகுதியில் மேலும் 3,500 குடியிருப்புகள் கட்டும்பணி நடைபெற்று வருகின்றது.



அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்து அறிவித்ததற்கிணங்க இருபது ஆண்டு காலமாக அனுபவித்து வரும் அரசு புறம்போக்கு நிலங்களை, அரசுக்கு அந்த நிலம் தேவையில்லாத பட்சத்தில், அனுபவித்து வருபவர்களுக்கே அந்த இடங்களுக்கான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவதற்குரிய வழிமுறைகள் வகுக்கப்படும்.

தமிழகத்தின் தலைநகரத்தை எழிலார்ந்த நகரமாக மாற்றும் திட்டத்தின் கீழ் சென்னை நகருக்குள் தொடங்கப்பட்டுள்ள மேம்பாலப் பணிகளுள் இரண்டு மேம்பாலங்கள் திட்டமிட்ட காலத்திற்கு முன்னரே கட்டி முடிக்கப்பட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது பெருமையும் மனநிறைவும் அளிக்கின்றது. எஞ்சியுள்ள மேம்பாலங்களும் விரைவில் கட்டி முடிக்கப்படும். மாநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இவை பெரிதும் உதவும். ரூ.213 கோடி செலவில் சென்னையைச் சுற்றியுள்ள முக்கிய ஆரச்சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டப்பணி நடைபெற்று வருகிறது. 19 கி.மீ. நீளமுள்ள சென்னை புறவழிச் சாலை அமைக்கும் பணி வரும் அக்டோபர் மாதத்துக்குள் முடிவுற்று, அச்சாலை வாகனப் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும். மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் நோக்கத்துடன், கோயம்பேட்டில் ரூ.103 கோடி செலவில் வெளியூர்ப் பேருந்து முனையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் நிலைப்பணி விரைவாக நிறைவேறி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த இரண்டாம் நிலைப் பணி புனித தோமையர் மலை வரை நீட்டிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையிலுள்ள முக்கியநீர் வழிகளில் தூர்வாரும் பணி ரூ.300 கோடி செலவில் ஹட்கோவின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் பங்கிங்காம் கால்வாயிலும், அடையாறிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. "நமக்கு நாமே" திட்டம் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வரவு-செலவுத் திட்டத்தில் இத்திட்டத்திற்காக முதலில் ரூ.10 கோடி நிதியொதுக்கப்பட்டிருந்த போதிலும், பொதுமக்களின் தேவைக்கேற்ப, இந்த நிதியாண்டில் இதற்காக இந்த அரசு மேலும் ரூ.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. எனவே இத்திட்டம் "மக்களின் திட்டமாக, மக்களாலேயே அவர்களின் உதவியோடு மக்களுக்காக நிறைவேற்றப்படும் திட்டமாக", செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாக மலர்ந்துள்ளது. அரசின் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளை எல்லாம் கிராம அளவில் ஒருமுனைப்படுத்துவதற்கென்றே உருவாக்கப்பட்ட "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" இதுவரை 634 கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைமையை ஆய்வு செய்வதற்காக அரசு இரண்டாவது மாநில நிதி ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆணையம் தனது அறிக்கையை 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாளுக்கு முன்னர் அளிக்கும்.

மாநிலத்தில் வறுமையை ஒழிப்பதில் நாம் அடைந்துள்ள வெற்றி குறித்து பெருமிதம் கொள்ளும் வேளையில், இதன் காரணமாக ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கான நிதியொதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். மத்திய அரசு தமிழ்நாட்டிற்கான இத்திட்டங்களின் ஒதுக்கீட்டை, மொத்த ஒதுக்கீட்டின் 7.062 சதவீதத்திலிருந்து 4.987 சதவீதமாகக் குறைத்துள்ளதால், நமது மாநிலம் ரூ.277 கோடி அளவுக்கு மத்திய நிதியுதவியை இழந்துள்ளது. இந்த அரசு இப்பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஊரக வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கான ஒதுக்கீட்டின் ஒரு பகுதியை வறுமை ஒழிப்புத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தும் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு மாநில அரசின் இந்தக் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கும் என்று நம்பி எதிர்பார்க்கிறோம்.

தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட இந்த அரசு, நீதியரசர் திரு இரத்தினவேல்பாண்டியன் அவர்கள் தலைமையில், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் திரு. ஆர்.ஏ.சீத்தாராமதாஸ், திரு. ஏ.வெங்கட்ராமன் ஆகியோரை உறுப்பினர்களாகவும், திரு. என்.முருகன், ஐ.ஏ.எஸ்., அவர்களைச் செயலாளராகவும் கொண்டு குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவினர் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து மக்களை நேரடியாகச் சந்தித்து கருத்தறிந்து வருகின்றனர். இக்குழு தனது இடைக்கால அறிக்கையை பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வரும் ஏப்ரல் மாதத்தில், இக்குழு, இறுதி அறிக்கையை அரசுக்கு அளிக்கும்.

மக்கள் தொகைக் கட்டுப்பாட்டில் நமது மாநிலம் மிகப் பெரும் வெற்றியை அடைந்துள்ளது. இச்சூழ்நிலையில், மாநில வாரியான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை முடிவு செய்ய 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களைப் பின்பற்றாமல் 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே தொடர்ந்து பின்பற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்துக்குத் தேவையான திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்ற தமிழக சட்டப் பேரவையின் தீர்மானத்தை ஏற்று நடவடிக்கை எடுக்க முடிவெடுத்துள்ள மத்திய அரசுக்கு நமது பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கவும், பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திடுவோரின் எண்ணிக்கையைக் குறைக்கவும் தொடக்கக் கல்வி இயக்க முனைப்பு நடவடிக்கைகளை அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. பள்ளிகளில் கணினிக் கல்வியை அளிக்கும் திட்டத்தின் கீழ், முதல் கட்டமாக 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினிக் கல்விக்கான வசதிகளை அரசு அளித்துள்ளது. எஞ்சிய அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், அரசுக் கல்லூரிகளுக்கும் அடுத்த கல்வியாண்டில் இத்தகைய வசதிகளை செய்து கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற ஏழை மகளிருக்கு சிறு வியாபாரம் செய்ய குறைந்த வட்டி வீதத்தில், எளிதில் கடன் கிடைக்கும் வகையில், "மகளிர் சிறுவணிக சேமிப்புடன் இணைந்த

கடன் திட்டம்" என்றழைக்கப்படும் திட்டத்தின் கீழ் 55,956 மகளிருக்கு ரூ.5.35 கோடி கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1999-2000ஆம் ஆண்டில், சென்னை மாநகர் நீங்கலாக ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் திட்டத்தினை அரசு செயல்படுத்தியுள்ளது. 2000ஆம் ஆண்டு சனவரித் திங்கள் நிலவரப்படி, 22,000 சுய உதவிக் குழுக்களில் சேர்ந்து 4.2 இலட்சம் மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து இரண்டாவது திட்டத்தின் கீழ் ஏற்கெனவே பயனடைந்த 318 வளர்ச்சி வட்டாரங்களில் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மூன்றாவது திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படத் தொடங்கியுள்ளது. உலக வங்கியிடமிருந்து இதற்காக 5 ஆண்டு காலத்தில் ரூ.86.95 கோடி நிதியுதவி பெறப்படும். கருவுற்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேலும் உயர்த்துவதற்கும், இளம் பெண்களின் உடல் நலம் மற்றும் அவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு மான பல்வேறுத் திட்டப் பணிகளை ஒருமுனைப்படுத்திட இத்திட்டம் உதவிடும்.

அனைவருக்கும் முழுமையான சுகாதார நலத்தை அளிக்கும் நோக்கத்துடன், திருவள்ளூர் மாவட்டத்தில் முதலமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்ட "வருமுன் காப்போம் திட்டம்" மாநிலம் முழுதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தொலைதூரத்தில் உள்ள, அரசு மருத்துவ அமைப்புகள் இல்லாத கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அங்கு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இம் மருத்துவ முகாம்களில், நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களால் அனைவருக்கும் உடல் நலப் பரிசோதனை செய்யப்படுவதோடு, நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்படுகின்றன. நோயைக் கண்டறிந்து போக்குவதற்கும், தேவையான சுகாதார நலப் பணிகளை மக்களுக்குப் பெருமளவில் அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏராளமானோர் இத்திட்டத்தினால் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கு மக்களிடமிருந்து பெருமளவு வரவேற்பு கிடைத்து வருகிறது. இதுவரை 1,016 முகாம்களில் 11,32,855 பேர் பயனடைந்துள்ளனர்.

சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன், இந்த அரசு ஒவ்வோர் ஆண்டும் ரூ.17.50 கோடி செலவில், 50 இடங்களில் "பெரியார் நினைவு சமத்துவபுரங்களை" ஏற்படுத்தி வருகிறது. இதுவரையில், 64 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன; மேலும் 86 சமத்துவபுரங்கள் அமைக்கும்பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் பொதுவாக தொழில் அமைதி நிலவி வருகின்றது. தொழிலாளர் நலனுக்கு இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தொழிற்சாலைகள் மூடப்படுவதன் காரணமாக வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.250 நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று 1999ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அமைப்பு ரீதியில் அல்லாத பல்லாயிரம் தொழிலாளர்களின் நலனைப் பேண ஒரு வாரியம் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாக அவர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம், மகப்பேறு நலத்திட்டம், பணி முடிவு நலத்திட்டம் முதலிய திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்பாடு தொடங்கப்பட்டுள்ளது.

மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய புதுத் திட்டங்களை உருவாக்குவது எவ்வளவு அவசியமானதோ, அந்த அளவுக்கு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களினால் உருவான பொதுச் சொத்துக்களை முறையாகப் பராமரித்து வருவதும் முக்கியமானது. இதனை கருத்திற்கொண்டு, வரும் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி முனைப்பான நடவடிக்கை எடுத்திடவும், முந்தைய ஆண்டுகளில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாத பணிகளை விரைவுபடுத்தி முடித்திட முன்னுரிமை அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களின் நலனுக்காகத் தீட்டப்படும் பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் முழுப்பங்கேற்றுள்ள அரசுப் பணியாளர்களின் நலனை இந்த அரசு பேணிக் காப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்து வருகிறது. நிதி இடர்ப்பாடு இருந்த போதிலும், அரசுப் பணியாளர்களுக்கு, அதிகரிக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் பொங்கல் ஊதியக் கொடை வழங்கியதின் மூலம் அரசு தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது.




தமிழ்நாடு மக்களின் வளர்ச்சிக்கும், வளமைக்கும் இப்புத்தாயிரம் ஆண்டு மேலும் அதிக வாய்ப்புகளை உருவாக்கி வழங்கிடுமென்ற நம்பிக்கையுடன் நான் எனது உரையை நிறைவு செய்கிறேன்.

*– தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1-3-2000 அன்று மேதகு தமிழக ஆளுநர் நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி அவர்கள் ஆற்றிய உரை.*

* * *





# தொடரும் பயணம்...

□ முதலமைச்சர் கலைஞர்

ஆளுநர் உரையின்மீது நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில் என்னையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் தவிர்த்து 37 பேர் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கின்றார்கள். அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 10 பேர், தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 8 பேர், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 பேர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேரும் இரண்டு மணி நேரம் உரையாற்றியிருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த 8 பேரும் இரண்டேகால் மணி நேரம் உரையாற்றி யிருக்கின்றார்கள். இந்த விவாதத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டசபையிலே நாலைந்து நாட்களாகப் புயல் அடித்தது, அடித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தப் புயலுக்கு மாறாக அவருடைய பேச்சு தென்றலாக இன்றைக்கு அமைந்து நமக்கெல்லாம் தெம்பூட்டியிருக்கின்றது.

பொதுவாக, தமிழ்நாட்டு மக்கள், சட்டமன்றத்திலே எது நடக்கிறது, யார் எதை, எப்படிப் பேசுகின்றார்கள், அதனால் யாருக்கு என்ன பலன் என்பதையெல்லாம் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

சட்டமன்றத்திற்குள்ள அந்தச் சிறப்பான தனி உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு, எதை வேண்டுமானாலும் பேசலாம், பொத்தாம் பொதுவில் புழுதி வாரித் தூற்றலாம் என்றால், மக்கள் மன்றம் நம்மை மன்னிக்கத் தயாராக இருக்காது. குறைகளைக் குறிப்பிட்டுச் சொல்லும் பொழுது, அதனைக் களைந்திடல் வேண்டும். குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் எடுத்துரைக்கும் போது அதுபற்றிய உண்மையை அறிய விசாரணை நடத்திடல் வேண்டும், நடவடிக்கை எடுத்திடல் வேண்டுமென்ற அக்கறை உள்ளவன் நான் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக, இந்த அவையில் உள்ளவர்கள் அறிவீர்கள். இதுவரை நடந்து வந்துள்ள நிகழ்வுகளைக் கவனித்தால் இந்த உண்மை நிச்சயமாக விளங்கும் என்றே நான் நம்புகின்றேன்.

## ஜனநாயகத்திலும் சட்டமன்றத்திலும் நம்பிக்கை

ஜனநாயகத்திலும், ஜனநாயகத்தின் காப்பகமாக விளங்கிடும் சட்டமன்றத்திலும், நாம் எல்லோரும் மிகுந்த நம்பிக்கையும், ஈடுபாடும் கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் இங்கே வந்து அமர்ந்து நாட்டு நலத்திற்கும், வளத்திற்குமானத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துவது பற்றிப் பேச அவையிலே போதுமான இடம் இல்லை என்ற காரணத்தால்தான் நம்மையெல்லாம் தேர்ந்தெடுத்து அவர்களுக்காகப் பேச, வாதாட, விவாதிக்க இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, இங்கே பேசுகின்றவர்கள் யாராக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் அல்லது எதிரிக் கட்சியாகவே இருந்தாலும் கூட, நாம் பேசுகின்ற விஷயங்கள் நாட்டுக்கு, தொகுதிக்கு, மக்களுக்கு எந்த அளவிற்குப் பயனுள்ளதாக, பலன் தருவதாக் இருக்கும் என்பதை முடிவு செய்து கொண்டு பேசுவதுதான் மக்களாட்சியின் மாண்புக்கு நாம் செலுத்திடும் மரியாதையாக அமைந்திடும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நானோ, இங்கே உள்ள அமைச்சர்களோ, ஆளும் கட்சி உறுப்பினர்களோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களும் இல்லை. விமர்சனத்திற்குப் பயந்து ஒளிந்து கொள்கிறவர்களும் இல்லை. பொது வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம்.

எதையும் தாங்கும் இதயம் வேண்டுமென்ற அளவில் தான், செய்யப்படுகிற விமர்சனங்கள், தரம் உள்ளவையாக இருந்தாலும், தரம் தாழ்ந்தவையாக இருந்தாலும் 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்று எல்லாவற்றையும் அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல பொறுத்துக் கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதில் எள் முனையளவும் பிசகாமல் நாங்கள் நடந்து வருகிறோம்.

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தரப் பகைவர்களும் இல்லை என்று பேரறிஞர் அண்ணா சொன்னது கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமல்ல; அரசியலில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும்தான்.

நண்பர்களாக இருக்கும்போது போற்றிப் பாராட்டி புகழ்வதும் எதிர் முகாமிற்குச் சென்றதும் இல்லாததைப் பொல்லாததையும் பேசுவதும் தான் அரசியல் என்று ஆகிவிட்டால் பொது வாழ்க்கை என்பதே வெறும் போர்வையாக ஆகிவிடும். அதுமாத்திரமல்ல; அரசியல், பொது வாழ்க்கை என்றாலே மக்களிடம் கசப்பும், வெறுப்பும் ஏற்பட்டுவிடும் என்பதையும் மறுப்பதற்கில்லை. எனவே, இவற்றையெல்லாம் கவனமாகக் கருத்திலே நாம் அனைவரும் கொண்டிட வேண்டுமென்று விரும்புகின்றேன், கேட்டுக் கொள்கின்றேன்.

அந்த அடிப்படையிலே இங்கே நடைபெறுகின்ற வாதப் பிரதிவாதங்கள் அமைய வேண்டும் என்பது என்னுடைய விழைவு. வாதப்பிரதிவாதங்களில் சில நேரங்களில் சூடு பறந்து, சில நேரங்களில் விரசம் தலைகாட்டி, கவலைக்கு உள்ளாக்கியது என்றாலும் கூட, ஒரு சிலர் மிகுந்த கவனத்தோடு, எச்சரிக்கையோடு தங்களுடைய வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கல்லூரியின் ஆண்டறிக்கை போல் இருக்கிறது

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல செய்திகளை இங்கே எடுத்துக்கூறி இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டுமென்கிற வேண்டுகோளை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மீண்டும் ஒருமுறை அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் அறிக்கைபற்றி தொடக்கத்தில் எடுத்த எடுப்பில், இது ஒரு கல்லூரி ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொல்லி பத்திரிகையிலே அந்தச் செய்தி வெளி வந்தது. அதை நான் முழுமனதோடு ஏற்றுக் கொள்கின்றேன்.

'அக இருள் அகற்றி அறிவு ஒளி வீசச் செய்யும் இடம் தான் கல்லூரி' அவர் சொன்னது கல்லூரி யினுடைய ஆண்டு அறிக்கை போல இருக்கிறது என்று சொன்னார்கள். கல்லூரி என்பது சாதாரணமானது அல்ல. அவர் கல்லூரியைக் கேவலமாக எண்ணி சொல்லியிருக்கமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அக இருள் அகற்றி அறிவு ஒளிவீசச் செய்யும் இடம் தான் கல்லூரி, அங்கு சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மாணவர்கள் தேர்ச்சி அடையக்கூடிய பணி மேற்கொள்ளப் படுகிறது.

அதே போல இப்போது தமிழகத்திலே கல்வியிலே கணினியைப் புகுத்தி, சமூக ஒற்றுமைக்கு சமத்துவபுரங்களை நிறுவி, கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உழவர் சந்தைகளை ஏற்படுத்தி, மக்களின் ஆரோக்கியமான நல்வாழ்விற்கு, வருமுன் காப்போம் போன்ற திட்டங்களால் இந்த ஆண்டில் தமிழகம் அடைந்துள்ள மேம்பாடுகளை உள்ளடக்கிய ஆளுநர் உரையின் சிறப்பை, ஒரு கல்லூரியின் ஆண்டு அறிக்கைக்கு ஒப்பிட்டு, சுருக்கமாக, அதே நேரம், மிகச்சிறப்பானதாக அவர் எடுத்துரைத்தது, அதுபோல வேறொரு வாழ்த்துரையை நாம் எங்கும் காண இயலாது. எனவே அவருக்கு நான் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஆண்டு அறிக்கைதான்; நான்கு ஆண்டு காலம் ஆண்டு; இப்போது தரப்படுகின்ற அறிக்கைதான், இந்த அறிக்கை என்பதையும் நான் அவருக்குக் கூற விரும்புகிறேன்.



ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது என்று ஒரு கேள்வி. சில விஷயங்களைப் பாராட்டி நம்முடைய முனிச்சாமி போன்றவர்கள் பேசினார்கள். சுப்பராயன் அன்றைக்கு, என்ன இதில் ஒன்றுமே இல்லை; இதிலே உள்வாங்குவதற்கு, இந்த உள்வாங்குவது என்பது அவருக்கே உரிய ராயல்டி வார்த்தை. இதிலே உள்வாங்குவதற்கு என்ன இருக்கிறது என்று அன்றைக்கு அவர் கேள்வியை எழுப்பினார்கள். ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்கின்ற விவாதம் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து பல பேரால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இருப்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

## குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப்பலகை நிறுவியுள்ளோம்

தமிழ் எழுத்தாளர்களுக்கு குறள்பீடம் விருது. இதை நம்முடைய அருமை நண்பர், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் ஒரு புத்தக வெளியீட்டு விழாவிலே எடுத்துச் சொன்னார்கள். ஞானபீட விருது தரப்படுவது போல இங்கேயும் ஒரு பீடம் ஏற்படுத்தி ஒரு விருது தர வேண்டும். அந்த விருதை வழங்குகின்ற அகாடமிக்கு முதலமைச்சரே தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளே இருந்து எதிர்க்கட்சிகள் சொல்வதை மாத்திரம் அல்ல; வெளியிலே இருந்து எதிர்க்கட்சிகள் மூலமாகத் தரப்படுகின்ற கருத்துக்களைக்கூட 'உள்வாங்குகின்ற' அரசு தான் இந்த அரசு என்பதற்கு அடையாளமாகத் தான் அவருடைய விருப்பப்படி நானே தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டு குறள்பீடம் விருது வழங்க தமிழ்ச் சங்கப்பலகை ஒன்றை நிறுவி இருக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே உருது அகாடமி அமைக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு 15 இலட்ச ரூபாய் இப்போது முன் பணமாக அதற்கு வழங்கப்பட இருக்கிறது. சமூக சீர்திருத்தத்துறை என்ற புதிய துறையை ஏற்படுத்தி, அன்றைக்கு இங்கே பேசப்பட்டது போல பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்ப மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள நாம் முனைந்திருக்கிறோம்.

## கடந்தகால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை

ஏகபோக கொள்முதல் முறையின் கீழ் மத்திய அரசு நிர்ணயித்த குறைந்த ஆதரவு விலைக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை அளிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். கடந்த கால ஆட்சியில் இந்த அளவுக்கு ஊக்கத் தொகை தரப்படவில்லை என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

தரிசு நிலமேம்பாட்டு அதிகார மன்றம் ஒன்று அமைக்கப்பட்டு, 10 மாவட்டங்களில் 10,000 எக்டேர் நிலங்களில் தரிசு நில மேம்பாட்டுப்பணி முடிக்கப்பட்டுவிட்டது. வரும் ஆண்டில் சுமார் 30,000 எக்டேர் நிலப்பரப்பு மேம்பாட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கால்நடை வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் புதிய கொள்கையை உருவாக்க வேண்டுமென்று மாநில திட்டக் குழுவை நான் கேட்டுக்கொண்டு அந்த முயற்சியிலே மாநில திட்டக்குழு மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது. வருகிற நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டம் இடம் பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது

100 நகர்ப்புற மையங்களில் உழவர் சந்தைகள் அமைக்கப்பட்டுள்ளன. உழவர் சந்தையைப்பற்றி பேசப்பட்டது. நல்ல திட்டங்களைப் பற்றியெல்லாம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வேறு சிலரும் இங்கே பேசி அதிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். குறைகளே இல்லையென்று நான் சொல்லமாட்டேன். எதிலும் குறை இருக்கிறது. சந்திரனுக்கே கூட களங்கம் இருக்கிறது. அதுபோல எந்தத் திட்டமாக இருந்தாலும் ஒரு குறை இருக்கும். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உழவர் சந்தை தொடங்கப்பட்டது நவம்பர் மாதம் 14 ஆம் தேதி மதுரையில் — பேரவைத் தலைவர் அவர்கள் முன்னிலையிலே இந்த உழவர் சந்தைத் தொடங்கப்பட்டது. இதுவரையில் 27 சந்தைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இவைகள் பல தேதிகளில் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த 27 உழவர் சந்தைகளில் 8.3.2000 வரை, அதாவது நேற்று வரை விற்பனையான காய்கறிகளின் மதிப்பு 11 கோடியே 8 இலட்சத்து 31,708 ரூபாய் என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விற்பனையினுடைய அளவு எத்தனை கிலோ காய்கறிகள் என்றால் ஒரு கோடியே 89 இலட்சத்து 32,086 கிலோ காய்கறிகள் விற்பனையாகி இருக்கின்றன. இதிலே பயன் பெற்ற விவசாயிகள், பயன் பெற்ற விவசாயிகள் என்றால் வந்தவர்களே மறுநாள் வரக்கூடும். ஆனாலும் தொடர்ந்து வந்தவர்கள், திரும்பத் திரும்ப வந்தவர்கள் என்ற கணக்கைப் பார்த்தால் 1,55,998 விவசாயிகள். பயன் பெற்ற பொது மக்களும், திரும்பத் திரும்ப வந்திருக்கக்கூடும். அந்தக் கணக்கைப் பார்த்தால் 68,32,673 பேர். மேலும் 73 உழவர் சந்தைகள் விரைவிலே தொடங்கப்பட இருக்கின்றன ' என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மதுரை, திருச்சி, பெருந்துறையில் அங்காடிகள்

மதுரையிலே 17 கோடி ரூபாய் செலவிலே நெல் விற்பனை அங்காடி; அதனுடைய பணி,

தொடங்கப்பட்டு விட்டது. திருச்சியிலே 12 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் வெல்ல விற்பனை அங்காடி, அதனுடைய பணியும் தொடங்கப்பட்டு விட்டது. பெருந்துறையில் 30.89 கோடி ரூபாய் செலவில் மஞ்சள் விற்பனை அங்காடி; பணி தொடங்கப்பட்டுவிட்டது. அதுபற்றி நேற்றைய தினம் நம்முடைய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் சிலாகித்து நன்றி கூறி பேசினார், நல்ல நேரத்திலே, நான் இல்லாமல் போய் விட்டேன். மற்ற நேரங்களிலே, இருந்தேன். நன்றி கூறிப் பேசுகிற நேரத்திலே நான் இங்கு இல்லாமல் போய்விட்டேன். அதற்கு நான் வருந்துகிறேன். பிறகு கேள்விப்பட்டேன், படித்துப் பார்த்தேன் பேச்சை, அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

தரமணியில் 338 கோடி ரூபாய் செலவிலே டைடல் பூங்கா ஒன்று அமைக்கப்படுகிறது. 10 இலட்சம் சதுர அடி கொண்ட அந்தப் பூங்கா மே மாதத்திலே திறப்பு விழா நடைபெற இருக்கிறது என்பதையும் நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்கின்றேன்.

தீப்பிடிக்காத கல்நார் வீடுகள், மாநகராட்சிகளிலே இந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட இருக்கிறது. 19 கிலோ மீட்டர் நீளம் உள்ள சென்னை புறவழிச்சாலை, இந்த ஆளுநர் உரையிலே அந்தத் திட்டமும் இடம் பெற்றிருக்கிறது. 213 கோடி ரூபாய் செலவிலே சென்னையைச் சுற்றியுள்ள ஆரச் சாலைகளை மேம்பாடு செய்யும் திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. அரசு மேல்நிலைப்பள்ளி, கல்லூரிகளில் கணினி வசதிக்காக, இதுவரையிலும் 666 மேல்நிலைப்பள்ளிகளிலே கணினி பயிற்சிக்கான ஏற்பாடு நடைபெற்றதைத் தொடர்ந்து மேலும் 535 மேல்நிலைப் பள்ளிகளில் இந்த ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு முடிவடைய இருக்கிறது.

420 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு இரண்டாவது திட்டம் **Urban Development** திட்டம் இந்த ஆளுநர் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. மேலும், 86 சமத்துவபுரங்கள், இதுவரையிலே 64 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதிலே ஒன்றிரண்டு சமத்துவபுரங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அவைகளை எல்லாம் சரிப்படுத்தி, 35 ஆயிரம் ரூபாய் போதாது என்று சொன்னார்கள், அதைவிட குறைந்த செலவிலே கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் எல்லாம்கூட நல்ல முறையிலே இருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**கணினிமயமாக்கும் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படவிருக்கிறது**

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் கணினி மயமாக்குகின்ற திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த ஆண்டு விரிவாக்கப்பட இருக்கிறது. கணினிமயம் என்பது சாதாரணமான விஷயமல்ல. இன்றைக்கு இந்தியாவிலேயே கணினி மயமாக்குகின்ற திட்டத்தில் தமிழ்நாடுதான் முதல் இடம் வகிக்கிறது என்பதையும் நான் சிறப்பாக இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நகர்ப்புற பகுதிகளில் 215 கோடி ரூபாய் செலவில் தெருக்களையும், சாலைகளையும் மேம்படுத்தும் திட்டம். 10 கோடி ரூபாய் செலவில் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் நீரடிக் கழிப்பிடங்களாக மாறும் திட்டம். இது சாதாரணமான திட்டமாகத் தெரியலாம். ஆனால், உலர்க் கழிப்பிடங்களை நீரடிக் கழிப்பிடங்களாக மாற்றுவதால் மலத்தை தலையிலே அள்ளி சுமக்கின்ற மனிதனுடைய, சமுதாய விடுதலை அதிலே தொக்கி நிற்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது. 20 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்போருக்கு பட்டா வழங்கப்படும். அரசுக்குத் தேவையில்லாத பட்சத்தில் அந்த இடம் அவர்களுக்கே உரிமையாக்கித் தரப்படும். 300 கோடி ரூபாய் செலவில் சென்னையில் உள்ள நீர் வழிகளில் தூர்வாரும் பணி ஒரு திட்டம். அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**நீதிபதி இரத்தினவேல்பாண்டியன் குழு பரிந்துரை செய்துள்ள திட்டம்**

தென் மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு திட்டங்களுக்கான உச்சநீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் இரத்தினவேல்பாண்டியன், சீத்தாராமதாஸ், ஓய்வு பெற்ற ஐ,ஏ,எஸ், அதிகாரி, வெங்கட்ராமன், ஓய்வுபெற்ற, ஐ,ஏ,எஸ், அதிகாரி செகரட்டரி முருகன் இவர்களைக் கொண்டு ஒரு குழு தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து அவர்கள் ஒரு திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். ஒரு பகுதி வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த பகுதி விரைவிலே வழங்கப்பட இருக்கிறது. அவைகள் வழங்கப்பட்ட பிறகு என்னென்ன பணிகள் தொடங்கப்படும் என்பதை வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவிப்பேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக ஆளுநர் உரையிலே முதல் பக்கத்திலே அல்லது இரண்டாம் பக்கத்திலே இடம் பெற்ற அரசியல் சட்டத்திலே மாறுதல் அல்லது ஆய்வு அல்லது திருத்தம். இதில் ஏதோ ஒன்று நடைபெறும் போது, எந்தெந்தப் பிரச்சினைகள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதை வகுத்துச் சொல்லியிருக்கிறோம். 1999–ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியினுடைய தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள வாசகத்தை இங்கே படித்துக் காட்டவிரும்புகின்றேன்.

1999 நாடாளுமன்ற தேர்தல்களை ஒட்டி உருவாக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில்,



"We shall appoint a Commission to review the Constitution of India not only in the light of experiences and developments since 1996, but indeed, of the entire post-independence period, and to make suitable recommendations.

We are convinced that there is a clear case for devolution of more financial and administrative powers and functions to the States. We will take suitable steps to ensure harmonious Centre-State relations in the light of the recommendations of the Sarkaria Commission and also effect decentralisation right upto the grass roots level by activating and involving Panchayats and local bodies"

– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது,

"1996–ஆம் ஆண்டிலிருந்து மேலும் நாடு விடுதலை பெற்றதிலிருந்து நமக்கு ஏற்பட்டு வரும் அனுபவங்கள் மற்றும் விளைவுகள் ஆகியவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தை மறுஆய்வு செய்து உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கு ஒரு கமிஷனை அமைப்போம்.

மாநிலங்களுக்கு மேலும் அதிக நிதி மற்றும் நிர்வாக ஆதாரங்களையும், செயல்பாடுகளையும் வழங்குவதற்கு தெளிவான நிலை ஏற்பட்டு இருப்பதை நாங்கள் நம்புகிறோம். சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்திய, மாநில உறவுகள் இணக்கமான வகையில் அமைவதை உறுதி செய்து கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மேலும் ஜனநாயக அமைப்பின் வேர்களாக விளங்கும் ஊராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை ஈடுபடுத்தும் வகையில், அவைகளுக்கு தேவையான அதிகாரங்களை வழங்குவோம்".

– என்ற தேர்தல் அறிக்கைக்குப் பிறகு 1–2–2000 அன்று மத்திய அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம்:

"The Commission shall examine in the light of experience of the past 50 years as to how far the existing provisions of the Constitution are capable of responding to the needs of efficient, smooth and effective system of governance and socio-economic development of modern India and to recommend changes, if any, that are required to be made in the Constitution within the framework of parliamentary democracy **without interfering with the basic structure or basic features of the Constitution"**

இதுதான் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். அதாவது,

"அரசியல் சட்ட மறு ஆய்வுக் கமிஷன் கடந்த 50 ஆண்டு காலமாக ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில், தற்போது உள்ள அரசியல் சட்டத்தின் அம்சங்கள், திறமையான, சுமூகமான நல்ல விளைவுகளை வழங்கிடக் கூடிய நிர்வாக அமைப்பின் தேவைகளை எப்படியெல்லாம் நிறைவு செய்துள்ளது என்பதைப் பரிசீலனை செய்து,

நவீன இந்தியாவின் சமூக, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை ஆய்வு செய்து, அரசியல் சட்டத்தின் அடிப்படை அமைப்பையோ, **அடிப்படை அம்சங்களையோ குலைத்திடாத வகையில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற கட்டமைப்புக்குள் தேவையான பரிந்துரைகளை வழங்கும்",**

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969ஆம் ஆண்டு பொங்கல் விழாவையொட்டி 'காஞ்சி' இதழில் எழுதிய கட்டுரையில்,

இதுதான் அண்ணா அவர்கள் "தம்பிக்கு கடிதம்" என்று கடைசியாக அவர்கள் மறைவதற்கு சில நாட்களுக்கு முன் எழுதிய கடிதம் அதில் –

"மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரம் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் எடுத்துக் கூறி வருகின்றேன்.

இதற்கான நல்லாதரவு நாளுக்கு நாள் வளர்ந்தபடி இருக்கின்றது என்பதிலே எனக்குத் தனியானதோர் மகிழ்ச்சி.

நமது கழகம் மட்டுமின்றி வேறு பல அரசியல் கட்சிகளும் இப்போது இதனையும் வலியுறுத்த முன்வந்துள்ளன.

அரசியல் கட்சிகளைச் சாராத அறிவாளர் பலரும் இதற்கு ஆதரவு காட்டுகின்றனர்.

நாம் அரசு நடத்தியதால் கிடைத்திருக்கின்ற நற்பயன்களிலே இதனையும் ஒன்று என்றே கருதுகின்றேன்".

பொங்கலையொட்டி வெளியிடப்பட்ட **'Home Rule'** இதழில் **"HAIL! THE DAWN!"** என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரையில்,

"If by being in office, the D.M.K. is able to bring to the notice of the thinking public, that the present Constitution is a sort of dyarchy by the back door that would be a definite contribution indeed to the political world".

அதாவது,

"பதவியில் இருப்பதன் மூலம்; இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் கொல்லைப்புறமாகக் கொண்டுவரப்பட்ட ஒரு இரட்டை ஆட்சிதான் என்பதைச் சிந்திக்கக்கூடிய பொதுமக்களின் கவனத்திற்கு தி.மு.க. கொண்டுவர முடியுமானால், அது

உண்மையிலேயே அரசியல் உலகிற்குச் செய்யப்படும் குறிப்பிடத்தக்க உதவியாகும்" என்று அண்ணா எழுதியுள்ளார்.

சோவியத் ரஷ்யாவில்,
1918-ஆம் ஆண்டு, பின்னர்
1924-ஆம் ஆண்டு, பின்னர்
1936-ஆம் ஆண்டு, பின்னர்
1974-ஆம் ஆண்டு

ஆகிய ஆண்டுகளில், நான்கு முறை அரசியல் சட்டத்தைத் திருத்தினார்கள். மன்னிக்க வேண்டும். திருத்தவில்லை. அடியோடு மாற்றினார்கள். திருத்தங்களைச் செய்யாமல், பழைய பிரிவுகளை நீக்காமல், புதிய பிரிவுகளை இணைக்காமல், மாறிவரும் சூழ்நிலைகளையும், மக்களின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, புதிய அரசியல் சட்டங்களே சோவியத் ரஷ்யாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

## அரசியல் சட்ட நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு கூறிய கருத்து

அரசியல் சட்ட நிர்ணய சபையில் பண்டித ஜவஹர்லால் நேரு பேசும்போது;

'While we want this Constitution to be as solid and as permanent in structure as we can make it, nevertheless there is no permanence in Constitutions. There should be a certain flexibility. If you make anything rigid and permanent you stop a nation's growth, the growth of a living, vital, organic people'. ............In any event, we should not make a Constitution, such as some other great countries have, which are so rigid that they cannot be adapted easily to changing conditions. Today especially, when the world is in turmoil and we are passing through a very swift period of transition, what we may do today may not be wholly applicable tomorrow''

அதாவது,

இந்த அரசியல் சட்டம், கெட்டியானதாகவும், நிரந்தரமானதாகவும் அமையத்தக்க வகையில் நாம் உருவாக்கினாலும் கூட, அரசியல் சட்டங்களில் நிரந்தரமானது என்று எதுவும் இல்லை. அதில் நெகிழ்வுத் தன்மை இருந்திடல் வேண்டும். எதையும் இறுக்கமானதாகவும், நிரந்தரமானதாகவும் அமைத்துவிட்டால், நாட்டின் வளர்ச்சியை வாழும், உயிர்ப்பு சக்திமிக்க மக்களின் வளர்ச்சியையும் நிறுத்திவிடுகிறீர்கள் என்று ஆகிவிடும்...ஒருசில நாடுகளில் இருப்பதைப் போல, இறுக்கமான, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி மாற்றி பின்பற்ற முடியாததான அரசியல் சட்டத்தை நாம் உருவாக்கிவிடக்கூடாது. கொந்தளிப்பான சூழலில் உள்ள இன்றைய உலகில், வேகமாக மாறிவரும் சூழ்நிலைகளில், இன்று நாம் உருவாக்குவது, நாளையே முழுதும் பயனற்றதாகப் போய்விடக்கூடும்.

மேலும் சொல்கிறார் :

''A Constitution which is unchanging and static-it does not matter how good it is - is a constitution that has outlived its use. It is in its old age already and gradually approaching its death. A constitution to be living must be growing, must be adaptable, must be flexible, must be changeable''

அதாவது,

"எவ்வளவு நல்ல அரசியல் சட்டம் என்றாலும், ஓர் அரசியல் சட்டம் மாறாமல் நிலைத்துவிட்டதாக இருக்குமானால், அந்த அரசியல் சட்டம் அதன் பயன்பாட்டை இழந்துவிட்டது என்று பொருள். அது ஏற்கெனவே முதுமை அடைந்து விட்டது என்று அர்த்தம். அப்படிப்பட்ட அரசியல் சட்டம் மரணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகப் பொருள். ஓர் அரசியல் சட்டம் உயிரோடு இருக்குமென்றால், அது வளர்ந்து வருவதாக, பின்பற்றக்கூடியதாக, நெகிழ்வுத் தன்மை உள்ளதாக, மாற்றியமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும்".

## டாக்டர் அம்பேத்கர் கருத்து

டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார் :

''A Constitution is not an end in itself, rather a means for ordering the life of a nation. The generation of yesterday might not know the needs of today, and 'if yesterday is not to paralyse today; it seems best to permit each generation to take care of itself''

அதாவது,

அரசியல் சட்டம் என்பது, அதுவே முடிந்த முடிவாக அமைந்துவிட முடியாது. அது ஒரு நாட்டின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வழிமுறை மட்டுமேயாகும். நேற்றைய தலைமுறையினருக்கு, இன்றைய தலைமுறையினரின் தேவைகள் எவையென்று தெரிந்திருக்க முடியாது. "நேற்றைய தினம்" என்பது "இன்றைய தினத்தை" வலுவிழக்கச் செய்யக்கூடாது. ஒவ்வொரு தலைமுறையினரும் தமது தேவைகளுக்கேற்ப வழிமுறைகளை வகுத்துக்கொள்ள அனுமதிப்பதே சிறந்தது.

**சோ. பாலகிருஷ்ணன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியில் சங்மாவை சேர்த்திருக்கிறார்கள் இல்லையா? அவர் காங்கிரஸ் தலைவர் திருமதி. சோனியா காந்திக்கு பரம எதிரியாக இன்று கருதப்படுபவர். அவரைச் சேர்த்தது எந்த வகையில் நியாயம்? அதை ஏன் நீங்கள் எதிர்க்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் விரிவான விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்தை எந்த வகையிலேயும் மாற்றக்கூடாது என்று சொல்லப்படுகின்ற வாதங்களுக்கு பதிலாக அது அமைந்திருக்கக்கூடும். அரசியல் சட்டம் மாற்றப்பட வேண்டும்தான். ஆனால் சமூக வளர்ச்சியின் தேவைக்கு தக்கபடி முற்போக்கான திசைவழியில் மாற்றுவதா? அல்லது சமூகச் சக்கரத்தை பின்னுக்கு இழுக்கிற முறையில் மாற்றுவதா என்பதுதான் கேள்வி. மத்தியிலே இருக்கிற பி.ஜே.பி. அரசு ஒருபோதும் சமூகத்தை முன்னுக்கு கொண்டு போகிறபடி சிந்திக்காது என்பதால் அவர்கள் அப்படி மாற்ற மாட்டார்கள் என்ற அச்சத்தைத்தான் நாங்கள் தெரிவித்தோமே தவிர வேறு அல்ல.

**ச. அழகிரி :** பேரவைத் தலைவர் அவர்கள், முதல்வர் அவர்கள் சோவியத் ரஷ்யாவில் 4 முறை அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டதைப் பற்றி சொன்னார்கள். அந்த தேசத்தை உருவாக்கியவர்கள், புரட்சி செய்தவர்கள்; அவர்கள் அந்தச் சட்டத்தை மாற்றி அமைத்தார்கள். சட்டத்திலே திருத்தங்களைக் கொண்டு வரலாம். ஆனால் அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதைத்தான் நாங்கள் சொன்னோம்.

## அரசியல் சட்டத்தின் அடிப்படை மாற்றப்படக் கூடாது என்றுதான் கூறிக் கொண்டிருக்கிறேன்

**முதல்வர் கலைஞர் :** 'விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு இராமன் சித்தப்பா' என்று சொன்னதாக ஒரு பழமொழி உண்டு. அதேபோல, அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை மாற்றப்படக்கூடாது என்பதைத்தான் நான் இங்கே எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலேதான் இந்தக் குழுவும் போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சங்மாவை சேர்க்கலாமா என்று கேட்டார்.

**ஜே. ஹேமச்சந்திரன் :** அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான ஒரு கமிட்டி உருவாக்குகிற நேரத்தில் அதுவும் நாடாளுமன்றத்திலே வைக்கப்பட்டு, நாடாளுமன்றம் நிறைவேற்றுகிற குழுவாக அமைவதுதானே அது சிறந்ததாக இருக்கும் என்பதை முதல்வரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர் :** நான் இப்போது சதாவதானம் எடுத்து 4 கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். அழகிரி கேள்விக்கு பதில் சொல்லிவிட்டேன். எதிர்க்கட்சித் தலைவர் சங்மாவை சேர்க்கலாமா என்று கேட்டார்கள். கமிட்டியிலே யாரைப் போடுவது என்பது பற்றியல்ல நாம் இப்பொழுது பேசிக்கொண்டிருப்பது. இப்பொழுது நாம் சொல்லிக் கொண்டிருப்பது அரசியல் சட்டத்திற்கு மாறுதல் தேவையா, இல்லையா என்ற வாதத்தைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கமிட்டியிலே போடுபவர்களைப் பற்றி பிறகு பேசிக் கொள்ளலாம்.

## நல்லமுறையில் மாற்றப்பட்டால் ஆதரிப்போம் இல்லையென்றால் எதிர்க்கப் போகிறோம்

சுப்பராயன் அவர்கள் இது முற்போக்காக மாற்றப்பட வேண்டுமே என்று சொன்னார்கள். எப்படி மாற்றப்படும் என்று இப்பொழுது நான் ஒன்றும் ஜோசியம் சொல்ல முடியாது. இது நல்லமுறையில் மாற்றப்பட்டால் நாம் ஆதரிக்கப்போகிறோம், இல்லையென்றால் எதிர்க்கப்போகிறோம். நாமெல்லாம் மிக விழிப்போடு இருந்து அதை கவனித்துக்கொண்டு இருக்கப் போகிறவர்கள். அதனால் இது நமக்கு தீங்கு அளிக்கக்கூடிய முறையில் சிறுபான்மை சமுதாயத்திற்கோ அல்லது நம்முடைய ரிசர்வேஷன் போன்ற கொள்கைகளுக்கோ எதிரானதாக அடிப்படையை மாற்றக்கூடியதாக இருந்தால் நாம் வன்மையாகக் கண்டிக்கப்போகிறோம் என்பதிலே எள்ளளவும் சந்தேகம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தைக் கூட்டி அல்லவா கமிட்டி போட்டு இருக்கவேண்டும் என்று கேட்டார்கள். இந்தச் சட்டம் அந்தக் கமிஷனால் ஆலோசிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு வந்த பிறகு நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதல் இல்லாமல் அது நிறைவேற முடியாது. கடைசி எல்லை நாடாளுமன்றம்தான். அப்படி இருக்கும்போது நாம் அஞ்சத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதை மாற்றும்போது ஒழுங்காக மாற்றப்பட வேண்டும் என்பதுதான் இங்கே சொல்லப்பட்ட கருத்து. அடிப்படை மாறாமல் மாற்றப்பட வேண்டுமென்பது தான் இங்கே சொல்லப்பட்ட கருத்து.

ஆனால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அதி.மு.க. தலைவி அவர்கள் அண்மையில் விடுத்த அறிக்கையில், "அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு தனிப்பட்ட கட்சி நலனுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல. இது பி.ஜே.பி. கட்சியாக இருந்தாலும் சரி, அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியிலுள்ள மற்ற கட்சிகளாக இருந்தாலும் சரி, அவற்றின் நலனுக்காக அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றக்கூடாது. அரசியல் சட்டம் உண்மையிலேயே புனிதமானது. (அதிலே மாறுபட்ட கருத்து எல்லோருக்கும் உண்டு. அது புனிதமானதா, அல்லவா என்பது. புனிதமானதாக இருந்தால் 80 முறை அதில் கைவைத்திருக்க மாட்டார்கள் அதைத் திருத்துவதற்கு) அவசரப்பட்டு எதுவும் செய்யக்கூடாது. மிகவும் கவனமாகவும், ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் மாற்றம் செய்ய வேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒரு அரசியல் கட்சியின் சலனத்தால் கருத்துக்கும், கற்பனைக்கும் ஏற்ப அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்யக்கூடாது"

— என்று அம்மையார் அவர்கள் ஓர் அறிக்கை விட்டார்கள்.

## அரசியல் சட்ட மாற்றம்; கொள்கையில் முரண்பாடு

ஆனால் அதே அம்மையாரைத் தலைவராகக் கொண்ட அ.தி.மு.க. கட்சி **24–9–1996** அன்று அவர்களுடைய பொதுக் குழுவிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது.

"தற்போதுள்ள ஆட்சி முறையில் தக்க மாற்றம் கொண்டுவந்து, நாட்டின் ஜனாதிபதியிடம் முழு அதிகாரம் வழங்கப்பட்டு, அமெரிக்க ஜனாதிபதியைப் போன்று, ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை அமைய வேண்டுமென்றும், அதற்கேற்ப அரசியல் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும் இப்பொதுக்குழு கோருகிறது. அதே நிலையில் மாநிலங்களின் ஆளுநர் பதவிகளெல்லாம் நீக்கப்பட்டு, மாநில ஆட்சித் தலைவர் மாநில மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறை உருவாக்கத் தேவையான மாற்றங்களை அரசியல் சட்டத்தில் செய்ய வேண்டுமென்று இப்பொதுக்குழு கோருகிறது".

என்னென்ன மாற்றமோ, அது வேறு விஷயம். ஆனால் அரசியல் சட்டத்திலே மாற்றங்கள் செய்யலாம் என்று **1996**ஆம் ஆண்டு பொது. குழுவிலே தீர்மானித்துவிட்டு, இப்பொழுது மாற்றவே கூடாது என்று கூறுகின்ற அந்த விபரீதமான முரண்டுபாடுகளும் இன்றைக்கு நாட்டிலே காணப்படுகிற காட்சிகளாக அமைந்திருக்கின்றன.

இன்னொன்று, இதன் தொடர்பாகப் பேசிய பிரச்சினைகளில் மிக முக்கியமானது; ஆர்.எஸ்.எஸ். பிரச்சினை. ஏதோ என்னையே ஒரு ஆர்.எஸ்.எஸ். என்பதுபோல் சிலபேர் இங்கே உருவகப்படுத்திப் பேசினார்கள்; அல்லது கருதிக் கொண்டு தங்களுடைய வாதத்தை இங்கே எழுப்பினார்கள். நாங்கள் முஸ்லிம் லீகை ஆதரித்தபோது எங்களையெல்லாம் வகுப்புவாதிகள் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள்; முஸ்லிம் லீகோடு நாங்கள் உறவு கொண்டிருந்தபோது – இப்போது அல்ல, ஜின்னா காலத்திலேயே சொல்லுகின்றேன். அந்தக் காலத்தில் இருந்தே, ஜின்னா, அண்ணா என்று பேசப்பட்ட அந்தக் காலத்திலேயே முஸ்லிம் லீகில் சேர்ந்தவர்கள் எல்லாம் வகுப்புவாதிகள் என்று நாங்கள் அன்றைக்கு புறக்கணிக்கப்பட்டோம் ஆர்.எஸ்.எஸ்க்கு ஒன்றும் நான் வக்காலத்து வாங்க விரும்பவில்லை. இருந்தாலும் பழைய அரசியல் வரலாறுகளை நினைவூட்டுவது இந்த நேரத்தில் பொருத்தமாக இருக்கும் என்பதால் நினைவூட்ட விரும்புகின்றேன்.

## ஜனசங்கம் இருந்த அரசில் சி.பி.ஐ.அங்கம் வகித்தது

**1967**ஆம் ஆண்டு தேர்தல் முடிவுக்குப் பிறகு பஞ்சாப், உ.பி., பீகார் ஆகிய 3 மாநிலங்களிலும், அகாலிதளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஜனசங்கம் என்பது ஆர்.எஸ்.எஸ். கட்சியினுடைய நிழல் என்று சொல்லப்படுகின்ற ஜனசங்கம், பாரதிய கிரந்திதளம், அகாலிதளம் ஆகிய இந்தக் கட்சிகள் எல்லாம் பங்குபெற்ற அரசில் சி.பி.ஐ. கட்சி அங்கம் வகித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அணியிலே பங்குபெற மறுத்துவிட்டது. ஆனால் அந்த அரசுகளுக்கு நிபந்தனையோடு கூடிய ஆதரவை அளிக்க மார்க்சிஸ்ட் கட்சி ஒப்புக்கொண்டது. இது, **1967**இல் சட்டசபை தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு!

**கே.சுப்பராயன் :** முதல்வர் அவர்கள் சொல்வது உண்மைதான். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஒரு மாநிலக் குழு தீர்மானித்தது அப்படி பங்குபெற்றது தவறு என்று மத்திய தலைமை சுட்டிக்காட்டியிருக்கிறது. எனவே, அதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அதிகாரபூர்வமான கருத்தாக எடுத்துக் கொள்ள இயலாது.

**முதல்வர் கலைஞர் :** நான் அந்த அரசில் இவர்கள் அங்கம் வகித்தார்கள் என்றுதான் சொன்னேன். அது மாநிலக் குழுவா, மத்தியக் குழுவா என்பதெல்லாம் அல்ல. அப்படிப்பட்ட ஒரு அரசில் சி.பி.ஐ. அங்கம் வகித்தது என்பதுதான்; ஜனசங்கம் இருந்த அரசில்,

பிறகு, **1977**இல் நடந்த தேர்தலில் மத்தியில் மொரார்ஜி தேசாய் தலைமையிலே ஜனதா அரசு அமைந்தது. ஜனதாவிலே இடம் பெற்ற கட்சிகளில் ஒன்று ஜனசங்கம் என்பதை அனைவரும் அறிவீர்கள். அந்த அரசில் வாஜ்பாய், அத்வானி, நானாஜி தேஷ்முக் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்கள். மார்க்சிஸ்ட் கட்சி வெளியேயிருந்து அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

**1989–90**இல் வி.பி.சிங் தலைமையிலே மத்தியில் ஆட்சி. அப்போது சி.பி.எம்., பா.ஜ.க. இரண்டுமே வெளியே இருந்து வி.பி.சிங் ஆட்சியை ஆதரித்தார்கள். அத்துடன், பல மாநிலங்களில் மைனாரிட்டி பலத்தோடு அமைந்த ஜனதா அரசுகளையும் பா.ஜ.க. ஆதரித்தது. என்னவோ, தி.மு.க.மாத்திரம் தான் ஜனசங்கத்தை அல்லது ஆர்.எஸ்.எஸ்.ஐ ஆதரிப்பதாகச் சொல்லி, ஆர்.எஸ்.எஸ்.ஐ. நாங்கள் ஆதரிக்காத காலத்தில்கூட, பி.ஜே.பி.ஐ. ஆதரிக்கின்ற காரணத்தினாலேயே நாங்கள் எல்லாம் ஆர்.எஸ்.எஸ்.ஐ. ஆதரிக்கிறோம் என்று சொல்லி குற்றம் சாட்டுகின்ற அந்தத் தன்மைக்காகத்தான் இந்த சரித்திரத்தை நான் எடுத்துச் சொன்னேனே அல்லாமல் வேறல்ல.

நம்முடைய அழகிரி அவர்கள், பெரியாருடைய கொள்கையிலும், அண்ணாவினுடைய கொள்கையிலும் நாங்கள் திடமாக இருக்க வேண்டும் என்பதில் ரொம்ப அக்கறையாக இருக்கிறார். பெரியாருக்கே அந்த அளவுக்கு அக்கறை இருக்குமோ, இருக்காதோ; அண்ணாவிற்கே அந்த அளவிற்கு அக்கறை இருக்குமோ இருக்காதோ; அவ்வளவு அக்கறையாக இருக்கிறார். மூப்பனார் கூட சொன்னார். கருணாநிதி செய்கின்ற இந்த வேலையைப்



பார்த்து பெரியாரும் அண்ணாவும் இருந்திருந்தால் ரத்தக் கண்ணீர் வடிப்பார்கள் என்று சொன்னார். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. குத்தூசி குருசாமி - விடுதலையிலே பலசரக்கு மூட்டை என்ற தலைப்பிலே எழுதுவார். அதிலே அவர் எழுதியிருந்தார். திராவிடக் கழகத்துக்காரர்கள், பெரியார், இவர்கள் கட்டைவிரல்களை எல்லாம் வெட்ட வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்கள் பேசிய காலத்தில் குத்தூசி குருசாமி, பலசரக்கு மூட்டை என்ற தலைப்பில் விடுதலையில் எழுதிய அந்தக் கட்டுரை எல்லாம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

## பராசக்தி படம் என்ன பாடுபட்டு வந்தது? எத்தனை முறை தடை விதிக்கப்பட்டது?

"வாட்டர்" படத்தைப் பற்றிச் சொன்னார்கள்; என்னவோ இங்கே எல்லாம் தாராளமாக படம் எடுக்கிற மாதிரி. பராசக்தி படத்தைப் பற்றிச் சொன்னார்கள்; பராசக்தி படம் என்ன பாடுபட்டு வெளியே வந்தது, எத்தனை முறை அதற்கு தடை விதிக்கப்பட்டது; பராசக்தி படம் வந்தபோது காங்கிரஸ் நண்பர்கள் தெருவுக்குத் தெரு கூட்டம் போட்டு கண்டனம் செய்தார்கள். நம்முடைய நண்பர் சின்ன அண்ணாமலை அவர்கள் பராசக்தி எதிர்ப்புக்காக ஒரு அணியை அமைத்து தெருவுக்குத் தெரு, சென்னையிலும் சரி, திருச்சியிலும் சரி, கோவையிலும் சரி கூட்டம் போட்டு என்ன சொன்னார்கள் தெரியுமா? பராசக்தி படம் பார்க்கிற தியேட்டருக்கு பெண்களே நீங்கள் எல்லாம் கையில் துடைப்பக்கட்டையோடு செல்லுங்கள் என்று பேசினார்.

மறைந்துவிட்டார்; இருந்தாலும் அவர் பேசிய பேச்சு ஞாபகத்தில் இருக்கிறது. நான் அவரை ஒன்றும் இப்போது குறை சொல்ல விரும்பவில்லை. அந்த அளவிற்கு பராசக்தி படத்திற்கு எதிர்ப்பு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது தடை செய்யப்படும்; தடை செய்யப்படவேண்டும் என்றெல்லாம்கூட சொல்லப்பட்டது. ஒரு வாரப் பத்திரிகையில் பராசக்தியைத் தாக்கிப் பேசுவதை எழுதவே ஒரு அட்டைப் படமே போட்டார்கள். பரப்பிரம்மம் என்று போட்டு, ஒரு நிர்வாணப் பெண்ணை அந்த அட்டைப் படத்திலே போட்டு, பரப்பிரம்மம்; கதை வசவு தயாநிதி என்றே அதைச் சித்தரித்தார்கள்; அந்த அட்டைப் படத்திலே. அந்த அளவுக்கு எதிர்ப்பு பராசக்தி வந்தபோது இருந்தது. அதைப் போல, சொர்க்கவாசல்; சொர்க்கவாசல் படத்திலே ஒரு பாட்டு, உடுமலை நாராயணக்கவியுடைய பாட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது அறிந்து
சொல்வீரே;

நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

– என்று ஒரு பாட்டு. அது சென்சாரிலே அப்போது வெட்டு.

"ஆஸ்திகம் எது; நாஸ்திகம் எது; அறிந்து
கொள்வீரே;

நன்றாய்ப் புரிந்து கொள்வீரே"

– என்ற அந்த வரிகள் சென்சாரிலே அப்போது வெட்டப்பட்டது. அதற்குப்பிறகு அந்தப் பாட்டை நாராயணக்கவி மாற்றி எழுதிக் கொடுத்தார்.

"ஆகும் நெறி எது; ஆகா நெறி எது, அறிந்து கொள்வீரே, நன்றாய்ப் புரிந்து கொள்வீரே" என்று எழுத வேண்டிய நிலைமை அன்றைக்கு இருந்தது.

## காஞ்சித் தலைவன் படத்தில் 'வெல்க காஞ்சி' என்பதை 'வெல்க நாடு' என்று மாற்றச் சொன்னார்கள்

காஞ்சித் தலைவன் படத்திலே வாதாபி என்று ஓர் ஊர். காஞ்சிபுரம் என்று ஓர் ஊர். இரண்டு ஊருக்கும் சண்டை வாதாபியிலேயிருந்து படையெடுத்து வருகிறவன், "வெல்க வாதாபி, வெல்க வாதாபி" என்று சொல்லிக் கொண்டு வருகிறான். காஞ்சிபுரத்திலேயிருந்து படையெடுத்து கொண்டு வருகிற நரசிம்மவர்மன், "வெல்க காஞ்சி; வெல்க காஞ்சி" என்று சொல்லி வந்தான். வெல்க காஞ்சி என்று சொன்னால், அது அண்ணாவைக் குறிக்கும் என்று சென்சார் வெட்டி விட்டார்கள். அதை மாற்றிப் போடச் சொல்லி "வெல்க நாடு; வெல்க நாடு" என்று, அதுவும் நாடுதான். இதுவும் நாடுதான். எந்த நாடு வெல்வது, இருந்தாலும், வெல்க நாடு என்று மாற்றிப் போடச் சொன்னார்கள்.

திரும்பிப்பார் படத்திலே, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, திரும்பிப் பாருங்கள்; அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்" இது ஒரு வசனம். அது வெட்டு; ஏன் என்று கேட்டால், சென்சார் ஆபீசர் சொல்கிறார். திருக்கோஷ்டியூர் கோவில் கோபுரத்திலே இராமானுஜச்சாரியார் ஏறி நின்று, கீழே குதித்து விழுந்து செத்துப் போய்விட்டார். அதனாலே நீ அவரைக் கிண்டல் பண்ணுகிறாய் என்று சொன்னார். நான் எழுதியது, "கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, அந்தக் கொள்கைகளிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்; திரும்பிப் பாருங்கள்" அதை ஏற்றுக் கொள்ளவில்லை அன்றைக்கு இருந்த சென்சார். இவ்வளவு கஷ்டங்களுக்கு இடையிலேதான் அப்போது படம் வெளிவர முடிந்தது. இப்போது உள்ள இந்தக் கஷ்டங்களைப் பார்க்கும்போது அந்தக் கஷ்டங்களெல்லாம் சாதாரணமானவை என்று யாரும் கூறிவிட முடியாது.

**ச. அழகிரி :** எவ்வளவு சிரமங்கள் இருந்தபோதும், பராசக்தி படம் எடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி பராசக்தி படத்தை நீங்கள் எடுப்பதற்கு அனுமதி மறுக்கவில்லை; தடை செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கிற பாரதீய ஜனதா அரசாங்கம், 'வாட்டர்' படத்தை எடுப்பதற்கே இங்கே அனுமதிக்கவில்லை.

### கருத்து சுதந்திரம் என்ற பெயரால் மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்தவும் கூடாது

**முதல்வர் கலைஞர் :** பிரச்சினை அது அல்ல. அரசாங்கம் அனுமதித்து ஒரு சாரார் அதை எதிர்க்கிறார்கள். அவ்வளவுதான் பிரச்சினை. அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. வெளிநாட்டுக்காரர் வந்து படம் எடுக்கிறார். அதை இந்திய அரசாங்கம் அனுமதித்துவிட்டது. அதாவது, பி.ஜே.பி. அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்று சொல்வது தவறு. அனுமதித்து விட்டது. இங்கே உள்ளவர்கள் அது அவர்களைப் புண்படுத்துகிறது என்று சொல்லி, எதிர்க்கிறார்கள். நான் சொல்வது, கருத்து சுதந்திரத்தை எதிர்ப்பது முறையல்ல என்பதில் நான் அழகிரியோடு ஒத்துப் போகிறேன். அதே நேரத்தில் கருத்து சுதந்திரம் என்ற பெயரால், எல்லாவற்றையும் சொல்லி, மற்றவர்களின் மனதைப் புண்படுத்துவதும் கூடாது. அதையும் மறந்துவிடக் கூடாது. இந்து மதத்திலே உள்ள சில தவறான நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளையெல்லாம் ஒரு இந்துவைக் கொண்டு சொன்னால், அது விஷயம் வேறு. அதை இன்னொரு மதத்தைச் சேர்ந்தவரைக் கொண்டு சொன்னால் அந்த விஷயம் வேறு. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். விரிவாக நான் இதைப் பற்றிப் பேசுவது நல்லதல்ல என்பதால் விட்டு விடுகிறேன்.

**தீரன் :** சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புகின்ற படங்களுக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தடை விதிக்கப்பட்டது என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 'வாட்டர்' திரைப்படம், ஒரு விதவையான இந்துப் பெண், தவறான வழியிலே நடப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறாள். அதிலிருந்து மீண்டு, அவள் ஒரு பொதுக் காரியத்திலே ஈடுபடுகின்ற ஒரு சிறப்பான செயலாக, ஒரு தாழ்த்தப்பட்ட சகோதரனை மணந்து கொள்கிற வகையிலே கதை போகிறது. இப்படிப்பட்ட ஒரு படமும், ஒரு சீர்திருத்த, புரட்சிகரமான படம்தான். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது எந்த வகையில் நியாயமானது என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

### டாக்டர் குமாரதாஸ் சொன்ன கருத்து தவறான கருத்து

**முதல்வர் கலைஞர் :** இதே கேள்வியை நானும் கேட்டிருக்கிறேன். அதனால், எனக்கு முரண்பாடான கேள்வியை தீரன் அவர்கள் கேட்கவில்லை.

இங்கே உரையாற்றிய நமது குமாரதாஸ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அது தேசத்தைப் பற்றிய, தேசத்தின் பாதுகாப்பைப் பற்றிய ஒரு குற்றச்சாட்டு. அதனால் நான் பதில் சொல்லியே ஆகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், "தமிழ்நாட்டினுடைய சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று கவர்னர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். சுமார் 3 தினங்களுக்கு முன்பு மேற்கு பகுதியினுடைய இராணுவத் தளபதி லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் சென்னைக்கு வருகைத் தந்து ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார். நீங்கள் இந்த விஷயத்தை மிகக் கண்ணும் கருத்துமாக கவனிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வழியாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அன்றைய தினம் பேசியிருக்கிறார்கள். உண்மையிலேயே லெப்டினென்ட் ஜெனரல் விஜய் ஓபராய் அவர்கள் அப்படிப் பேசவில்லை என்பதுதான் உண்மை. 4—3—2000 அன்று சென்னை இராணுவ அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் நடைபெற்ற பயிற்சி நிறைவு ஆண்டு அணிவகுப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார். அப்போது "நமது நாட்டைச் சீர்குலைக்க பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. பல்வேறு வகைகளிலும் சதி செய்து வருகிறது" என்று குறிப்பிட்டிருந்தார்.

**"Pakistan's ISI was trying to destabilise India, Oberoi said"** என்று **The New Indian Express, Chennai, 5-3-2000** அன்று வெளிவந்தது. பி.டி.ஐயில் கூட

**"Lt.Gen.Oberoi said forces like the Pakistani Inter-services Intelligence were going all out to destabilise the country in various ways and hence the armed forces had always to be fully on the guard"** என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். இதுதான் பத்திரிகையில் வந்திருக்கிறது. எனவே பாகிஸ்தானிலிருந்து போதைப் பொருள்கள் தமிழகம் வாயிலாக வந்து இலங்கைக்குக் கடத்தப்படுகிறது என்று சொன்னதாக நம்முடைய டாக்டர் குமாரதாஸ் சொன்ன அந்தக் கருத்து தவறான கருத்து என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மறுக்கப் போகிறீர்களா?—

**டாக்டர் தே. குமாரதாஸ் :** நான் நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே வேறுபடவில்லை. ஆனால் ஒரு கருத்து. இராணுவத் தளபதி இங்கிருந்து பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு தமிழ்நாடு வழியாக கடத்தினார் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தால் நான் திருத்திக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் கடைப்பகுதி நெல்லை மாவட்டம் சாத்தான் குளம், திருச்செந்தூர் ஆகியப் பகுதிகளிலே கடந்த ஒன்றரை ஆண்டுகளாக கிட்டத்தட்ட 100 முதல் 200 கோடி ரூபாய் போதைப் பொருள்கள் பிடிபட்டிருக்கிறது என்பது பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வந்த செய்தி. அவைகள் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகளின் மூலமாக கடத்தப்படுவதாகவும், கைது செய்யப்பட்டவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்களாக, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலே விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இந்தப் பகுதியிலே இருக்கிறது. போதைப் பொருள்கள் கடத்துகிற ஒரு பகுதியாக தமிழ்நாடு அமைந்துவிடக்கூடாது என்ற உணர்வின் அடிப்படையிலே சொல்லப்பட்டது. போதைப்பொருள்கள் அப்படி கடத்தப்படுகிற செய்திகள் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் வந்திருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### எதிர்க்கட்சியில் இருந்தபோது ஆதாரத்தோடு குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறேன்

**முதல்வர் கலைஞர் :** தங்களுடைய கருத்தாக சொன்னால் தவறு இல்லை. ஒரு லெப்டினென்ட் ஜெனரல் ஓபராய் அவர்கள் சொன்ன கருத்தாக சொன்னால்தான் தவறு என்று நான் குறிப்பிடுகிறேன். இது தங்களுடைய கருத்தாக இருக்குமேயானால் அதற்கும் என்னிடத்திலே பதில் இல்லாமல் இல்லை.

மத்திய அரசினுடைய வருவாய்த் துறை, நுண்ணறிவுப் பிரிவினரும், போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவினரும் மத்திய சுங்கத்துறை அதிகாரிகளும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளுடைய நடமாட்டத்தை மத்திய உளவுப் பிரிவினரும், மாநில க்யூ பிராஞ்ச் பிரிவினரும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள் என்பதையும் அதனால்தான் கடத்தப்பட்ட பொருள்கள் எல்லாம் பிடிபட்டிருக்கின்றன என்ற செய்தியைக் கூட தாங்களே சொல்கிறீர்கள் என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தாங்கள் சொன்னதற்காக அல்ல. குறிப்பாக குற்றச் சாட்டுக்களைச் சொல்வது தவறு அல்ல. எப்படி குறைகளைச் சொன்னால் அதைக் களைய வேண்டுமோ அதைப்போல குற்றச்சாட்டுக்களைச் சொன்னால் விசாரித்து அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது ஒரு ஜனநாயக அரசினுடைய தார்மீக கடமையாகும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும் என்பது ஒரு முறை. ஆதாரமே தேவையில்லை என்று ஒரு வாதம் எழுப்பப்பட்டு தலைவராகிய தாங்கள் அதற்கு தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். எனவே அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை.

பொதுவாக நான் இந்த அவையிலே எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்த போது என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதிலும் சரி, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதும் சரி குறைகளையும் சொல்லியிருக்கிறேன். குற்றச்சாட்டுக் களையும் எடுத்து வைத்திருக்கிறேன். ஆனால், ஆதாரங்களோடு அந்தக் குற்றச்சாட்டுக்களை எடுத்து வைத்திருக்கிறேன்.

ஒருமுறை, மின்சார வாரியத்திற்காக எருக்கஞ்சேரியிலே நிலம் வாங்கியதிலே நடைபெற்ற ஊழலை விஸ்தாரமாக விவரித்துப் பேசும்போது அப்போது மின்வாரியத் துறை அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் எழுந்து, "என்ன ஆதாரங்களோடு பேசுகிறீர்கள்" என்று கேட்டார். "ஆதாரங்களை நான் அவைத் தலைவரிடத்திலே கொடுத்திருக்கிறேன். இப்போதும் தருகிறேன்" என்று சொல்லி அது சம்பந்தமான எல்லா பத்திரங்களையும் எடுத்து மேசை மீது வைத்தேன். அதை வாங்கிக்கொண்டு, நாளை விசாரித்து, அதைப்பற்றிப் பேசுகிறேன் என்று ஆர்.வி. அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு அதை ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு விசாரிக்கப்பட்டது. விசாரிக்கப்பட்டு நான் சொன்ன குற்றச்சாட்டு உண்மைதான் என்று நிரூபிக்கப்பட்டது.

### ஆதாரத்தோடு குற்றம் சாட்டியபோது எம்.ஜி.ஆர். அளித்த பதிலுரை

அதேபோல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது, பல்கேரியா பால்டிகா கப்பல் பேரத்தில் நடைபெற்ற சில தவறுகளைச் சுட்டிக்காட்டி, ஒன்று, இரண்டு, மூன்று என்று இருபது ஆதாரங்களை இதே அவையிலே, இந்த இடத்திலே நான் எடுத்துவைத்துப் பேசினேன். அன்று பதிலளிக்க வேண்டிய எம்.ஜி.ஆர். அவர்கள், அவருடைய பதிலுரையை அன்றைக்கு நிகழ்த்தாமல் நாளைய தினம் நிகழ்த்துகிறேன் என்று சொல்லிவிட்டு மறுநாள் வந்து அந்தப் பதிலுரையை நிகழ்த்தினார்கள். அப்போது சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துவைத்த அந்த ஆதாரங்களையொட்டி அந்தக் கப்பல் வாங்குகிற அந்த முயற்சி கைவிடப்பட்டு விட்டது என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, எதற்கும் ஆதாரங்களை எடுத்து வைத்துப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனேயல்லாமல், வேறல்ல.

ஆனால் இங்கே ஒரு கடத்தலைக் கண்டு பிடித்துவிட்டோம் என்பதற்காக பதவி விலகுங்கள் என்று சொன்னதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கடத்தலைக் கண்டுபிடித்து, வெறும் டிரைவரை அல்ல, சாதாரண அப்பாவி ஆட்களை அல்ல, அதற்கு மூலகர்த்தாக்களாக இருந்தவர்களையே கைது செய்து, அவர்களுக்குச் சொந்தமான 5 லாரிகளையும் பறிமுதல் செய்து, வழக்கைத் தீவிரமாக நடத்துகிறோம். புலன் விசாரணையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது, 'நீங்கள் பதவி விலகுங்கள்' என்று அவசரப்பட்டுச் சொல்வது, வெறும் அரசியலுக்குத்தான் பயன்படுமேயல்லாமல் அது ஆக்கபூர்வமான ஒரு காரியமாக இருக்க முடியாது என்பதுதான் என்னுடைய கருத்து.

பக்குவத்திற்கும், அமைதிக்கும் பெயர் பெற்ற பழனிச்சாமி கூட, அதைச்சொன்னால்தான் தன்னுடைய பேச்சு வேகம் என்று எண்ணிக் கொள்வார்கள் என்பதைப்போல, 'நேரு உடனடியாக பதவி விலக வேண்டும்' என்று சொன்னார். நேரு பதவி விலக வேண்டுமென்று நேரு காலத்திலிருந்தே சொல்லப்படுகிற விஷயம்தான். ஆனால் ஒரு

குற்றத்தைக் கண்டுபிடித்து கைது செய்ததற்காக, அந்தக் கடத்தலைத் தடுத்து நிறுத்தியதற்காக, பறிமுதல் செய்ததற்காக, அதைச் செய்தவர்களை உடனடியாக பதவி விலக வேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதற்காகச் சொல்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார் :** நேற்று இந்த பிரச்சினையிலே விளக்கம் தருகிற போது, அமைச்சர் அவர்கள், 1996—97ஆம் ஆண்டு, 1997—98ஆம் ஆண்டு என்று ஆண்டு வாரியாக புள்ளி விவரங்களைத் தந்தார்கள். 1996—97ஆம் ஆண்டு கோடிக் கணக்கான ரூபாய் அரிசி கடத்தப்பட்டது என்று சொன்னால், அதற்கு நடவடிக்கை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால், 2000—2001ஆம் ஆண்டிலே இந்தத் தவறு நடந்திருக்கக் கூடாது.

**முதல்வர் கலைஞர் :** உங்கள் திருப்திக்காக நீங்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம்.

**பி.ஆர்.சுந்தரம் :** இந்த உணவுக் கடத்தலிலே, சி.பி.சி.ஐ.டி. விசாரணை வைத்திருக்கிறீர்கள். அரிசி வாங்கிய ஜெகதீசன் என்பவரை இதுவரை பிடிக்கவில்லை. ஆகவே, இதில் நீங்கள் நீதி விசாரணை நடத்தவேண்டும்.

**மு. அப்பாவு :** முதலமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு பேச வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்றுக் கொள்கிறேன். இந்து பத்திரிகையிலே, மத்தியிலே, ஆட்சி செய்கின்ற மத்திய உணவுத் துறையினுடைய உயர் அதிகாரியே, தமிழகத்தில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படுகின்ற அரிசியில் பெரும்பகுதி வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது என்பதை அவரே சொல்லும்போது, இந்த ஆதாரம் போதாதா? என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**முதல்வர் கலைஞர் :** அப்படி விற்கப்பட்ட, எடுக்கப்பட்ட, கடத்தப்படுகிற அரிசியெல்லாம் பிடிக்கப்படுகிறது. அந்த விவரத்தைத்தான், தன்னுடைய உரையில் இறுதியாக, நம்முடைய அமைச்சர் நேரு அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலே, அவர் சொன்ன வார்த்தைகள், அரிசி கடத்தல்கள் அப்போதும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், அப்போது வழக்குகள் போட்டு பொருட்களைக் கைப்பற்றினார்களே தவிர, ஒருவரைக்கூட, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைக்கவில்லையென்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், கழக அரசில் நான்கு ஆண்டு காலத்தில் 14 பேரை, கடத்தல் தடுப்புச் சட்டத்திலே சிறையிலே அடைத்திருக்கின்றோம். ஜெயலலிதா ஆட்சியில் 18,871 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. கழக ஆட்சியில் 16,991 வழக்குகள். கடத்துவது ஒரு மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். 100 மூட்டையாக இருந்தாலும் கடத்தல்தான். இது வழக்குகளினுடைய எண்ணிக்கை. ஆனால், இந்தக் கடத்தலிலே சம்பந்தப்பட்டவர்கள் யாரையும் தண்டிக்கின்ற, சிறையிலே அடைக்கின்ற காரியங்கள் கடந்த ஆட்சியில் நடைபெறவில்லை, இந்த ஆட்சியிலேதான் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

29.11.1999 அன்று அப்பாவு சொன்ன அதே இந்து பத்திரிகையிலே தான் எழுதியிருக்கிறார்கள்.

"பொது விநியோகத்தில் சாதாரண ரக அரிசியை நிறுத்திய அரசின் அறிவிப்பால் இதுவரை அதைவேறு வகையிலே விநியோகித்துப் பலன் பெற்றவர்களுக்குத் தான் பாதிப்பே தவிர, குடும்ப அட்டைதாரர்களுக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது என்று அந்த ஏழை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன"

— என்று இந்து எழுதுகிறது. அதை ஏற்றுக் கொண்டால் இதையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, அப்பாவு அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ, இங்கே அரிசி விலை ஏறிவிட்டது, விலை ஏறிவிட்டது என்று ஒரு பிரச்சாரம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம், அரிசி விலையை ஏற்றிவிட்டோம் என்று கூறுகிறார்கள். முன்பு மூன்று கிலோ 2 ரூபாய் வீதம் கொடுத்தோம். அது 6 ரூபாய். 17 கிலோ ரூ.3.75 வீதம் கொடுத்தோம். அது ரூ.63.75 காசு. ஆக மொத்தம் ரூ.69.75 செலவழித்த ஒருவன், இப்போதுள்ள 20 கிலோ அரிசியும் ரூ.3.50 காசு வீதம் கொடுக்கும் போது 70 ரூபாய் தான் செலவழிக்கிறான். அதிகமாக 25 பைசா தான் செலவழிக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் 20 கிலோ அரிசியும் நல்ல அரிசியாக கிடைக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

### அரிசி விலையை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்

மாநிலத்தினுடைய ஒப்பீடுகளைப் பார்த்தால்; மேற்கு வங்கத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு 5 ரூபாய், கிலோ அரிசி; மேலே உள்ளவர்களுக்கு 10 ரூபாய் 40 காசு. எவ்வளவு கிலோ தருகிறார்கள் என்றால் ஒருவருக்கு 2 கிலோ அரிசி தான் கொடுக்கிறார்கள்.

கர்நாடகத்திலே 10 கிலோ அரிசி தான் கொடுக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கு ரூ.3.50; மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.80.

கேரளாவிலே வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளவர்களுக்கு ரூ.3.90; மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.60, மொத்தம் கொடுக்கிற அரிசி 10 கிலோ தான்.

ஆந்திராவிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே ரூ.3.50 மேலேயுள்ளவர்களுக்கு ரூ.9.50, 20 கிலோ தருகிறார்கள்.



தமிழ்நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ளவர்களுக்கும் மேலேயுள்ளவர்களுக்கும் 3.50 ரூபாய் வீதம் 20 கிலோ அரிசி கொடுக்கிறோம் என்று சொன்னால் அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் குறைக் கூறுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

அப்பாவு இன்னொன்று சொன்னார். கோவில்பட்டியில் ஒரு அதிகாரி. டி.எஸ்.ஓ. அவருடைய சாவைப் பற்றிச் சொன்னார். அதைப்பற்றி நான் விசாரித்தேன். ஏற்கெனவே அது பற்றி தகவல்கள் வந்திருக்கிறது என்னிடம் மீண்டும் அதை விசாரித்து, உறுதிப்படுத்திக் கொண்டேன். கோவில்பட்டி வட்ட வழங்கல் அதிகாரி, டி.எஸ்.ஓ. ராஜகோபால் 7.1.98 அன்று, இரண்டு வருடங்களுக்கு முன்பு, இப்போதுள்ள பிரச்சினைகளோடு அப்பாவு இதைச் சேர்த்துப் பேசினார். இது 1998—ஆம் ஆண்டு பிரச்சினை. 98—இல், தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது பற்றி கோவில்பட்டி கிழக்கு காவல்நிலைய எண்.21/98, பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

அவரது இறப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்களும் மற்றவர்களும் புகார் கூறியதால் இவ்வழக்கு 302 ஐ.பி.சி. பிரிவாக மாற்றப்பட்டு, சி.பி., சி.ஐ.டி. விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

15.2.1999 அன்று இவ்வழக்கு தற்கொலை தான் என்று முடிவு செய்யப்பட்டது.

3.1.98 அன்று TCG 9805 TSF 5254 என்ற இரு லாரிகள் அருப்புக்கோட்டையில் இருந்து அரிசி ஏற்றிச் செல்லும் போது எட்டையபுரத்தில் அவை ராஜகோபால் மற்றும் அதிகாரிகளால் மறிக்கப்பட்டு பின்னர் கோவில்பட்டி அரிசி வியாபாரி பழனிசெல்வம் மூலம் 13 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொண்டு ராஜகோபால் அந்த லாரிகளை விடுவித்துள்ளார்.

6.1.1998 அன்று அருப்புக்கோட்டை அரிசி வியாபாரிகள் கோவில்பட்டி கோட்டாட்சியரிடம் இதுகுறித்து புகார் செய்யவே — கோட்டாட்சியர், ராஜகோபாலை அழைத்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தியுள்ளார்.

ஏற்கெனவே 81—ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கில் சிக்கி சிரமத்திற்கிடையே இருந்த ராஜகோபால் எவ்வாறாவது பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று எண்ணி முயற்சி செய்ததாகவும், ஆனால் பணத்திற்கு வழி செய்ய இயலாததால் மனமுடைந்து 7.1.1998 அன்று விடியற்காலையில் தற்கொலை செய்து கொண்டதாக சி.பி., சி.ஐ.டி. முடிவுக்கு வந்தது என்ற இந்த விவரத்தை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

### கொடைக்கானலில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

நம்முடைய செல்லக்குமார் கொடைக்கானல் உட்லன்ஸ் ஹோட்டல் பற்றிச் சொன்னார்கள். **Change of land use** அதிலே அதிகாரிகள் செய்த தவறுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த அதிகாரிகள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அதை செல்லக்குமார் சுட்டிக்காட்டினார். இதற்கும் வேறு ஒரு கொடைக்கானல் கேசுக்கும் சம்பந்தம் கிடையாது. அது மலை, இது மடு என்பதை மாத்திரம் தம்பி செல்லக்குமாருக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அவர்கள் இன்னொன்று சொன்னார்கள்.

### பரிந்துரை செய்த இரண்டு செயலாளர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை

**டாக்டர் அ.செல்லக்குமார் :** இந்த மூன்று ஹோட்டலுக்கான அனுமதியில் அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சருடைய தகவலுக்கு, பார்வைக்கு வராமல் ஒரு அரசாணை ஒரு அரசிலே பிறப்பிக்கப்படுமா என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மூன்று அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசாணை பிறப்பிக்கப்பட்டு மூன்று மாதத்திற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் எச்சரிக்கை உணர்வு காரணமாக அதை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்குத்தான் நான் பாராட்டும் தெரிவித்தேன். முதலமைச்சர் அவர்கள் இதைத் தட்டிக் கழிக்காமல் தவறு யார் செய்திருந்தாலும் அந்தத் தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே தன் ராஜினாமாவை அறிவிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**முதல்வர் கலைஞர் :** அவர் சொன்ன கொடைக்கானல் பிரச்சினை வேறு. இந்தக் கொடைக்கானல் பிரச்சினை வேறு. 4 ஆண்டு காலமாக நாட்டிலே விவாதிக்கப்படுவதல்ல இது. அந்த விவகாரமே வேறு; எல்லோரும் தடுத்து, செயலாளர்கள் எல்லாம் தடுத்து, அதைக் கேட்காமல் போடப்பட்ட கையெழுத்து அது. அது நீதிமன்றத்திலேயே ஏற்கெனவே இருந்து தண்டிக்கப்பட்ட விவகாரம். மறுபடியும் நீதிமன்றத்திலே அப்பீலிலே இருக்கிற விவகாரம். அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை.

ஆனால், இதில் ஒரு செயலாளர், இன்னொரு செயலாளருக்கிடையே ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அமைச்சர், அந்த மாறுபாடு ஏற்பட்டதும், ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவினர் சென்று அதைப் பார்த்துவிட்டு வந்து விவரம் தெரிந்து கொண்டு வந்து சொன்னார்கள். போனவர்கள் இவர்களுக்குக் கொடுக்கலாம். விதி விலக்கு அளிக்கலாம் என்று சொன்னார்கள். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டார்.

இந்த விவரம் எனக்குத் தெரிந்தவுடன் உடனடியாக அதைப் பற்றி விசாரிக்கச் சொல்லி, தலைமைச்செயலாளருக்கு உத்தரவிட்டு, தலைமைச் செயலாளர் அந்த உத்தரவின்படி நடந்து கொண்டு இரண்டு செயலாளர்கள் மீதும் நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஒழுங்கு நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் சொல்ல முடியும்.

அடுத்து 'வோர்ல்ட் டெல்' பற்றி செல்லக்குமார் இங்கே சொன்னார். சென்ற ஆண்டே இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசி இருக்கின்றோம்.

அவர் இப்போது கூறிய குற்றச்சாட்டு, அந்த நிறுவனம் ஒரு தனியார் நிறுவனம் அல்ல. அந்த நிறுவனத்திற்கு ஏன் குளோபல் டெண்டர் போடாமல் இந்தப் பணியினை ஒப்படைத்தீர்கள் என்ற இரண்டு தான்.

### அரசு நிறுவனத்துடன் இணைந்த கூட்டு திட்டங்களில் குளோபல் டெண்டர் தேவையில்லை

குளோபல் டெண்டர் பற்றி நேற்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விளக்கியிருக்கிறார். ஒரு தொழில் தொடங்குவதற்காக தனியாரோ — அல்லது அரசு நிறுவனத்தோடு இணைந்து கூட்டு நிறுவனமாக **Joint Venture** என்ற அடிப்படையிலே முன்வரும் போது அதற்கு குளோபல் டெண்டர் விடத் தேவையில்லை என்பது மரபு.

உதாரணமாக கூற வேண்டுமேயானால் **Ford, Hyundai** போன்ற தொழிற்சாலைகள் குளோபல் டெண்டர் விட்டுத் தரப்படவில்லை. இது தனியார் தொழில் தொடங்குவதற்கு உதாரணம், **M.O.U.** போட்டு விடப்பட்டது.

**Joint Venture**—க்கு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால் ஸ்பிக் தொழிற்சாலை கூட்டு நிறுவனத்திற்கு உதாரணம். அதுவும் குளோபல் டெண்டர் விட்டுத் தரப்படவில்லை.

இந்தத் திட்டத்தில் வெளிநாட்டு ஒத்துழைப்பு இருக்கும் வகையில் 30.11.99 அன்று மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 'வோர்ல்ட் டெல்' நிறுவனம் 18.1.2000 அன்று மத்திய அரசின் தகவல் தொடர்புத் துறையிலிருந்து தேவையான அனுமதிகளைப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் சமுதாய இணைய மையங்கள் ஏற்படுத்துவதற்கு அடிப்படைத் தேவையான, தேசிய நெடுஞ்சாலைகள், மாநிலச் சாலைகள் மற்றும் இதர சாலைகள் வழியாக **Optic Fibre Cables** அமைக்கத் தேவையான அனுமதி பல்வேறு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தகவல் தொடர்பு சம்பந்தமான தாராள மயமாக்கல் கொள்கையின்படி, இணையம் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கு, யார் வேண்டுமானாலும் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அப்படி இதுவரை மத்திய அரசிடமிருந்து நூறு நிறுவனங்கள் அனுமதிகளைப் பெற்றுள்ளன. அனுமதி வழங்குதலை மத்திய அரசு தாராளமயமாக்கியதன் நோக்கமே, **VSNL** மற்றும் **DOT** தவிர, மற்ற நிறுவனங்கள் இணைய சேவையை எளிதாக எல்லா இடங்களுக்கும் வழங்கிட வேண்டும் என்பது தான்.

இந்த 'ஆப்டிக் பைபர் நெட்வொர்க்' என்பது, மாநிலம் முழுவதும் தொலைதூரத்தில் உள்ள கிராமங்களிலேகூட இணைய வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான அதிநவீன, அதிவேகம் கொண்ட தொடர்பு சாதனமாகும். இது இணையத்திற்காக காத்திருக்கும் நேரத்தை வெகுவாக குறைத்து விடுகிறது. இந்த நிலையில், 'வோர்ல்ட டெல்' நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் இணைய மையங்களாக அமைப்பதற்கு முன் வந்துள்ளது.

'வோர்ல்ட் டெல்' நிறுவனம் 'ஆப்டிக் பைபர் நெட்வொர்க்'ஐ தமிழ்நாடு முழுவதும் அமைத்ததற்குப் பிறகு சேவையை கட்டாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று, யாரையும் யாரும் நிர்பந்திக்க முடியாது.

**VSNL** என்ற நிறுவனம், நாட்டிற்கு வெளியே இணைய தொடர்பு **(Internet access)** மற்றும் தகவல் இணைப்பு **(Data links)** ஆகியவற்றை வழங்குவதற்கென்றே உருவாக்கப்பட்ட நிறுவனம். மாநிலத்திற்குள் தகவல் தொடர்புக்கு அடிப்படைத் தேவையான கட்டமைப்புகளை அந்த நிறுவனம் வழங்குவதில்லை.

**MTNL** என்ற நிறுவனத்தைப் பொறுத்தவரை மும்பையிலும், டெல்லியிலும் மட்டுமே அது செயல்பட்டு வருகிறது. சென்னையில் இல்லை.

**DOT**—ஐ பொறுத்தவரை தமிழ்நாட்டில் தகவல் தொடர்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை நவீனப்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை செய்ய இதுவரை முன்வரவில்லை. அதனால்தான், சென்னை தொலைபேசித் துறையை ஒரு நிறுவனமாக மாற்றி, அதிக முதலீடுகளைச் செய்யவேண்டுமென்று மத்திய அரசைத் தொடர்ந்து கோரி வருகிறோம்.

'வோர்ல்ட் டெல்' நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ளது ஒரு கூட்டு நிறுவன ஒப்பந்தம் மட்டுமே. இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது **Tender, Bidding** என்பதெல்லாம் தேவை இல்லை. மாநில மக்களுக்கு பயன்படும் என்று தோன்றும் போது, திறன் பெற்றுள்ள எந்த நிறுவனத்தோடும் இப்படி கூட்டு நிறுவன ஒப்பந்தம் **(Joint Venture)** செய்து கொள்ளலாம். இப்படி கூட்டு நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையோ அல்லது உருவாக்கப்படும் சேவைகளையோ, அரசோ அல்லது அரசு நிறுவனங்களோ வாங்கி பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே



பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் கிடையவே கிடையாது. கூட்டு நிறுவனம் என்பது ஒருவருக்கு மட்டுமே உரிமை **(Non-exclusive basis)** என்ற அடிப்படை எதுவும் இல்லாதது.

'வோர்ல்ட் டெல்' நிறுவனம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப்போல, அரசு விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளும் எந்த நிறுவனமும், அதுபோன்றதொரு கூட்டு முயற்சியாகவோ தனியாகவோ ஒப்பந்தத்தை செய்துகொள்ள முன் வரலாம். இதில் ஒளிவு மறைவு எதுவும் கிடையாது.

செல்லக்குமார் சொல்லியது போல இன்போசிஸ், சத்தியம், டிஸ்னெட், அல்காடில், சீமென்ஸ் போன்ற நிறுவனங்கள் வோர்ல்ட் டெல் நிறுவனத்திற்கு இணையாக தமிழ்நாட்டில் இணைய மையங்களுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை அமைக்க முன்வந்தால் வோர்ல்ட் டெல் நிறுவனத்திற்கு என்ன நிபந்தனைகளின்படி அனுமதி வழங்கப்பட்டதோ அதே போல அவர்களுக்கும் அனுமதி வழங்கப்படும்.

**டாக்டர் அ.செல்லக்குமார் :** தனியார் நிறுவனம் என்பதற்கு நான் சொல்கிறேன். 27.7.1999 அன்று கம்பெனி லா போர்டு அலுவலகத்திலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய பங்குதாரர்கள் யார் என்று சொன்னால்

1. **B.H.Kothari, No.11 M.G.Road, Chennai - 34**
2. **Dr.N.Ravi, 302. Pinner Road, Horrow, Middlesex, HAI, 4LB., U.K.**

இவர்கள் இரண்டு பேரும் தான் பங்குதாரர்கள் என்று கம்பெனி லா போர்டிலே மத்திய அரசாங்கத்தினுடைய கம்பெனி லா போர்டிலே பதிவு செய்யப்பட்ட சான்றுகள் நான் வைத்திருக்கிறேன்.

**பேரவைத் தலைவர் :** ஒப்பந்தம் — டெண்டர் கால்ஃபார் பண்ண வேண்டிய முறை தேவையில்லை என்பது முதலமைச்சருடைய வாதம். ஆகையினால் நீங்கள் அதற்கு மேலே வாதம் பண்ணுவதற்கு ஒன்றும் இல்லை.

**முதல்வர் கலைஞர் :** யார் வேண்டுமானாலும் இந்த வேலையைச் செய்யலாம் என்று இருக்கும் போது அதற்கு டெண்டர் தேவையில்லை. எம்.ஓ.யு. போதும் என்பது தான் என்னுடைய வாதம். இங்கு செல்லக்குமார் சொன்ன அந்த கம்பெனிகளும் கூடவரலாம். அது வருவதற்கு தடை கிடையாது.

### புறம்போக்கு நிலத்தில் 20 ஆண்டுகள் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா

நான் இந்த ஆளுநர் உரையில் மிக முக்கியமான ஒரு சீர்திருத்தமாக புறம்போக்கு நிலங்களை 20 ஆண்டுகள் குடியிருந்தவர்களுக்கு அரசுக்குத் தேவைப்படாமல் இருந்தால் அவர்களுக்கே வழங்கப்படும் என்ற ஒரு திட்டம் — நிலச் சீர்திருத்தத்திலே இந்த அரசுக்கு நீண்ட காலமாக இருந்து வருகின்ற ஆர்வத்தினுடைய அடையாளமாகவும் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய வீடு, மனை இவைகளுக்காக நாம் ஆக்கபூர்வமாக செய்யவேண்டிய காரியங்களை செய்து வருகிறோம். இவைகள் எல்லாம் ஒரு தொர்டர்கதை. நில உச்சவரம்புச் சட்டம் 1960—ஆம் ஆண்டு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்கின்ற அளவுக்கு அறிவிக்கப்பட்ட போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அந்த சீரிய திட்டத்தை காமராஜரையே ஏமாற்றுகின்ற அளவிற்கு அன்றைக்கு பலர் செயல்பட்டு நிலங்களைப் பிரித்துக் கொண்டு அதன் காரணமாக வெற்றி பெற முடியாமல் செய்தார்கள். அன்றைக்கு தமிழ்நாட்டிலே இருந்த நிலத்தில் 24,194 ஏக்கர் தான் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டு, 16,330 ஏக்கர் தான் கைப்பற்றப்பட்டு அதில் ஒரு ஏக்கர் கூட உபரி நிலமாக யாருக்கும் வழங்கப்படவில்லை. அதையொட்டித்தான் 15.2.1970ல் நான் முதலமைச்சராக இருந்தபோது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற ஒரு சட்டத்தைப் போட்டு எடுக்கப்பட்ட உபரி நிலம் 1,97,900 ஏக்கர். நிலம் அற்றவர்களுக்கு வழங்கப்பட்ட நிலம் 1,71,673 ஏக்கர். மீதம் உள்ள நிலங்கள் நீதிமன்றங்களிலே பிரச்சினைகளாக இருந்து வருகின்றன. 15 ஸ்டாண்டர்டு என்று கொண்டு வந்துவிட்டு பிறகு 1,97,900 ஏக்கர் எடுத்தோம். 1,71,673 பேருக்கு நிலத்தை வழங்கினோம். அதிலே பயன் பெற்ற உழவர்களுடைய எண்ணிக்கை 1,37,236 பேர்.

இவர்களில் ஆதிதிராவிடர்கள் 61,985 பேர். பழங்குடி மக்கள் 204 பேர். 1971—ஆம் ஆண்டு குடியிருப்பு மனைச் சட்டம் என்றவொரு தீவிர சட்டத்தைக் கொண்டு வந்து 1,75,000 பேருக்குக் குடியிருப்புக்களைச் சொந்தமாக்கிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை அனைவரும் அறிவீர்கள். அப்போது மதிப்பிற்குரிய பெரியவர் மணலி கந்தசாமி அவர்கள், அந்த விழா திருத்துறைப்பூண்டியிலே நடைபெற்றபோது — நம்முடைய பழனிச்சாமி அவர்களெல்லாம் ரொம்ப இளைஞர்கள் அப்போது; அந்த விழா நடைபெற்ற போது மணலி சொன்னார்கள்— 'பல தோழர்களுடைய ரத்தத்தைச் சொரிந்தும் கிடைக்காத இந்த வரத்தை ஒரு துளி மையைச் செலவழித்து கருணாநிதி சட்டமாக ஆக்கியிருக்கிறார்' என்று அன்றைக்குப் பேசி பெருமைப்படுத்தினார்.

இதிலே ஆதிதிராவிடர்கள் மாத்திரம் இலட்சத்து இரண்டாயிரம் பேர். இதிலே பலன் பெற்றார்கள் இப்படி வரிசையாக நிலச் சீர்திருத்தத்திலே அக்கறையுள்ள இந்த அரசு இப்போது பட்டாக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டுமென்பதற்காக 20 ஆண்டுகள் புறம்போக்கு நிலங்களிலே குடியிருந்தவர்களுக்கு மனைப்பட்டா, அரசுக்குத் தேவைப்படாத பட்சத்தில், வழங்குகின்ற அந்தத் திட்டத்தையும் அறிவித்துள்ளது.



நான் எதிர்பார்த்தேன், எல்லோரும் இதுபற்றிப் பேசுவீர்கள் என்று. யாரும் பேசவில்லை. சில நண்பர்கள் பேசியிருக்கின்றீர்கள். எல்லோரும் இதைப்பற்றிப் பேசவில்லை. ஏனென்றால் இது ஒரு மிக முக்கியமான அறிவிப்பு. இருந்தாலும்கூட இப்போது சொல்லப்பட்ட கருத்துக்கள், சி.ஞானசேகரன், கே. சுப்பராயன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர்கள் அவர்களெல்லாம் சொல்லிய அந்தக் கருத்துக்களை மனதிலே வைத்துக்கொண்டு இந்தத் திட்டம் தயாரிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பணி நியமன சுழற்சி முறையில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு கூடுதல் இடம்**

ஒரு முக்கியமான அறிவிப்போடு என்னுடைய பேச்சை முடிக்க இருக்கின்றேன். அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்யும்போது சுழற்சி முறையைப் பற்றி அன்பிற்குரிய நண்பர் ராமதாஸ் அவர்களும் மற்றும் இங்கே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர்களும், தீரன் போன்றவர்களும் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு அரசுக்கும் இயல்பாக உள்ள அந்த உணர்வோடு அதை அறிவிக்கின்றேன்.

அரசுத் துறைகளிலே பணி நியமனம் செய்யும்போது, எந்த இடத்திலே இட ஒதுக்கீடு சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும் என்பது குறித்து அரசின் நிர்வாகச் சீர்திருத்தத்துறை 13–8–1992இல் ஒரு ஆணை, ஆணை எண் 280–ஐ வெளியிட்டுள்ளது. அதன்படி, முதல் 10 பணிகளுக்குத் தற்போது பின்பற்றிவரும் சுழற்சி முறையின்படி பொதுப்பட்டியலிலே உள்ளவர்களுக்கு 4 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒரு இடம் என்றும் இப்போது இருக்கிறது.

இந்த முறையை மாற்றி பொதுப்பட்டியலிலே உள்ளவர்களுக்கு 3 இடங்கள் என்றும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 2 இடங்கள் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 3 இடங்கள் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 2 இடங்கள் என்றும் மாற்றியமைக்கும்படி அரசுக்குக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை ஏற்று இனிமேல் முதல் 10 இடங்களுக்கு சுழற்சி முறையைக் கணக்கிடும்போது மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இதுவரை ஒரு இடம் என்பதற்குப் பதிலாக 2 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்று கூறி, ஆளுநர் உரையின் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உரையாற்றிய எல்லா உறுப்பினர்களுக்கும், எதிர்த்தும், ஆதரித்தும் பேசிய அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஞானசேகரன் தூண்டி விடுகிறார். Walk-out உண்டா என்று கேட்கிறார். ஆளுநர் உரையிலே Walk-out மரபல்ல என்று அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். ★

*தமிழ்நாடு சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரை மீதான விவாதங்களுக்கு பதிலளித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 9–3–2000 அன்று ஆற்றிய உரை.*





# த தீ சி னி

**– இந்திரா பார்த்தசாரதி**

டாக்டர் தம்பிமுத்து, 'சரக்கு மாஸ்டர்' வைத்தாவையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பாதி வழுக்கையாயிருந்த தலை ஒரு காலத்தில் முழுக் குடுமியாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றியது. இருந்த பாதியும் அழுது வடியும் பழுப்பு நிறத்திலிருந்தது. ஆங்காங்கே, ஓரிரண்டு வெண் முடிகளின் புன்னகை.

எண்ணெய்க் கறை படிந்த ஒரு காசித் துண்டு தோளை அலங்கரித்தது. அழுக்கு வேட்டி, அழுக்குப் பூணூல்.



வைத்தா, உட்கார மறுத்து நின்று கொண்டிருந்தார். முகத்தில், தாம் சொல்வதை டாக்டர் மறுக்க மாட்டார் என்ற எதிர்ப்பார்ப்பு தெரிந்தது.

தம்பிமுத்துவுக்குத் திடீரென்று கோபம் வந்தது, என்ன மனுஷன் இவன்? இவருடைய அக்காவுக்கு கான்ஸரா இருக்கலாமென்று தான் சந்தேகப்படுவதை அவளுக்குச் சொல்ல வேண்டாமாம்! அவளுக்கு இது அதிர்ச்சியைத் தரலாமென்ற நல்ல எண்ணமெல்லாம் இல்லை, வடிகட்டின சுயநலத்தின் காரணமாக இச்செய்தியை அவளுக்குச் சொல்ல வேண்டாமென்கிறார்! இது ஒரு மனிதப் பிறவியா?!

"என்ன டாக்டர், பேசாமெ இருக்கேள்?"

"என்ன சொல்லறது, உங்க சுயநல காரணத்துக்காக, என்ன வியாதியா இருக்கலாங்கிறத்தை உங்க அக்காகிட்டே சொல்ல வேண்டாங்கிறீங்க, அப்படித்தானே?"

"சுயநலம் இல்லே டாக்டர்... என் நிலைமையையும் நீங்க யோசிச்சுப் பாக்கணும்..."

அவர் 'நிலைமை'யையும், வைத்தா விளக்கிச் சொல்லிவிட்டார்.

ஐந்து பெண்கள். மூத்தவள் அம்பா. இருபது வயது. இரண்டு வயது இடைவெளியில், மற்றையப் பெண்கள்.

'கண்ணே கண்ணெ'ன்று ஓர் உருப்படாத பிள்ளை.

அம்பாவுக்குத் திருமணம் செய்தாக வேண்டும், அதற்குத் தேவை, பணம்.

பணம், வைத்தாவின் அக்காவிடம் இருக்கிறது. அவரிடமில்லை. வைத்தாவின் அக்கா, இரண்டாம் தாரமாகப் போய், போன சுவட்டிலேயே பிறந்தகம் திரும்பி வந்துவிட்டாள். பிறந்தகம், வைத்தா வீடு தான். அவருக்குப் பெற்றோர்கள் -இல்லை.

வைத்தாவின் அக்காவுக்கு இறந்த கணவர் மூலம் வந்த கொஞ்ச நஞ்சம் சொத்தும், வைத்தாவின் பெரிய குடும்பப் பராமரிப்பில், கரைந்துவிட்டது. ஆனால், வைத்தாவின் அக்காவுக்கு வேலை கிடைத்தது.

ஒரு பணக்காரக் குடும்பத்தில், அவருடைய தம்பியைப் போல, 'கைவண்ணம்' காட்டும் உத்தியோகம். இருபது வருஷ உத்தியோகத்துக்குப் பிறகு, பத்தாயிர ரூபாய் சேமிப்புடன், தம்பி வீட்டுக்கு மூன்றாண்டுகளுக்கு முன் வந்துவிட்டாள். காரணம், அந்தப் பணக்கார வீட்டுப் பெரியவர் போன பிறகு, அந்த வீட்டுச் சமையல் அடியோடு மாறியது. வைத்தாவின் அக்காவுக்குப் புதிதாக எதுவும் கற்றுக்கொள்ள முடியவில்லை.

தம்பியின் வீட்டுக்கு வந்ததும், அவள் சொன்னாள்: 'இந்தப் பணம் அம்பாவின் கல்யாணத்துக்கு. நல்லவனாகப் பார்..!'

கல்யாணத்துக்காக வைத்திருக்கும் பணத்தைக் கான்ஸருக்காகவா செலவழிக்க முடியும்? வைத்தாவை அடியோடு குற்றம் சொல்ல முடியாது. அவர் மனைவி வாழ்க்கை என்ற யதார்த்தத்தை எதிர்நோக்க வேண்டிய அவசியத்தை அவருக்கு இடித்துரைத்தாள்.

வயது வந்த பெண்ணுக்குத் திருமணம் செய்வது முக்கியமா, அல்லது எழுபது வயது கிழவிக்கு வைத்தியம் செய்யவேண்டியது முக்கியமா?

'எக்ஸிஸ்டென்ஷியல்' பிரச்சினை. வைத்தா, ஆரம்பத் தயக்கத்துக்குப் பிறகு, மனைவி சொல்வதை ஏற்றுக்கொண்டார்.

இதுதான் 'நிலைமை'. மார்பகப் புற்று நோய் என்று உறுதியாகிவிட்டால், வைத்தியம் செய்தாக வேண்டும். வாயுப் பிடிப்புதான் என்று சொல்லி, மருந்து கொடுத்தால், போதாதா?

கிராமத்தை விட்டு, தஞ்சாவூர் போய் மருத்துவப் பரிசோதனை என்றெல்லாம் ஏன் வீண் வேலை? இன்னும் சில தினங்களில் அம்பாவின் திருமணம் நிச்சயமாக்க் கூடும்...

தம்பிமுத்து நாற்காலியிலிருந்து எழுந்தான். ஒன்றும் பேசாமல், கழுத்தில் மாலையாகச் சுற்றி வைத்திருந்த 'ஸ்டதஸ்கோப்பை' மேஜையின் மீது வைத்தான்.

''என்ன டாக்டர்... என் நிலைமை புரிஞ்சுதா?'' வைத்தா சற்றுத் தலையைச் சாய்த்து, தம்பிமுத்துவைக் கேட்டார்.

"எனக்கு நீங்க சொல்லறது புரியுது. ஆனா அந்த அம்மா வந்து கேட்டா, பரிசோதனை செய்துக்கிடறது நல்லதுதான்னு சொல்லுவேன்... நான் டாக்டர்... அதை மறந்துடாதீங்க..."

"அவ வந்து கேக்கலேன்னா?"

தம்பிமுத்து அவரைக் கோபத்துடன் பார்த்தான்.

"கோபப்படாதீங்க டாக்டர்... எனக்கு என் அக்கா பேரிலே பாசம் இருக்கத்தான் இருக்கு... ஆனா ஆத்துக்குப் போனா என் சம்ஸாரம், சும்மா விடமாட்டா... 'டாக்டர்கிட்டே சொல்லிட்டேளா, சொல்லிட்டேளா'ன்னு தொளைச்சு எடுத்துடுவா... அவ பேரிலேயும் தப்பில்லே... கல்யாணத்துக்கு அஞ்சு பொண்ணு இருக்கு..."

"பத்தாயிரம் ரூபாயை வச்சுகிட்டு, அஞ்சு பொண்ணுக்குக் கல்யாணம் செய்யப் போறீங்களா?"





" 'மைக்' கடை நாணுதான் அம்பாவைப் பண்ணிக்கிறேங்கிறான், டாக்டர்..."

தம்பிமுத்து திடுக்கிட்டான்: ''அவனா? அவன் வடிகட்டின அயோக்கியன், அரசியல் வாதிகளுக்கு ஜால்ரா, அவனுக்கா கட்டிக் கொடுக்கப் போறேங்கிறீங்க...? மை காட்!"

''என்னோட மத்தப் பொண்களுக்குக் கல்யாணம் செய்து வைக்கிறது தன்னோட பொறுப்புன்னு அவன் சொன்னான், டாக்டர்...?"

நாணுவை, தம்பிமுத்து அறிந்தவரை, அவன் கல்யாணம் செய்து வைக்கமாட்டான், 'தொழில்' நடத்துவான் என்று தோன்றிற்று.

அம்பாவை அவனுக்கு நன்றாகத் தெரியும். நல்ல, கெட்டிக்காரப் பெண். பத்தாவது வரைப் படித்துவிட்டு, இரண்டு மூன்று இடத்தில் வேலை செய்துவிட்டு, பிடிக்காமல் இப்பொழுது வீட்டிலிருக்கிறாள்.

அவளுக்கு நர்ஸ் பயிற்சிக்குப்போக வேண்டுமென்ற ஆசை. ஆனால், பிராம்மணப் பெண் அந்த வேலைக்குப் போகக் கூடாதென்று அவள் அம்மா தடுத்துவிட்டாள். அவளுக்கு அம்பா, நாணுவைத்தான் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரே பிடிவாதம்.

நாணு, வரதட்சிணையாகப் பத்தாயிரம் ரூபாய் கேட்டிருக்கக் கூடும்.

"என்ன டாக்டர்... ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறீங்க...?"

''அம்பாவுக்கு இப்பொ கல்யாணம் செய்துதான் ஆகணுமா? நர்ஸ் பயிற்சிக்குப் போனாள்னா, அவளுக்கே நல்ல வருமானம் வரும்... நல்ல பையனா பாத்துக் கட்டிக்கிறா... நாணுவைப் பத்தித் தெரிஞ்சும், அவனை மருமகனா வரணுங்கிறீங்களே, உங்களை என்ன சொல்லறது...?"

"என் சம்ஸாரம் ஒரே பிடிவாதமா இருக்கா டாக்டர்... அம்பா பொணத்தையும் அதையும் தொடக்கூடாதுன்னு... நான் அடுப்படியிலே வேகறவன், வாயில்லாப் பூச்சி... என் ஆம்படையாளோட பேசி என்னாலே சமாளிக்க முடியாது..."

"சரி... சரி... உங்க அக்கா இங்கே வந்து கேட்டாங்கன்னா, நான் பொய் சொல்ல மாட்டேன்... நீங்க அவங்ககிட்டே என்ன பொய் வேணுமானாலும் சொல்லி எக்கேடு கெட்டுப் போங்க... தயவு செய்து, என் கோபத்தைக் கிளறாதீங்க... போயிட்டு வாங்க, எனக்கு வேலை இருக்கு...'' என்றான் தம்பிமுத்து.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, எல்லா நோயாளிகளையும் பார்த்து முடித்தபிறகு, மதிய உணவுக்காக தம்பிமுத்து புறப்படும்போது, அம்பா வந்தாள்.

''என்னம்மா உடம்பு உனக்கு?'' என்று அவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

"என்னோட அத்தைக்கு வெறும் வாயுப் பிடிப்புதானா, டாக்டர்?"

சுற்றி வளைக்காமல், விஷயத்துக்கு நேரடியாகவே வந்துவிட்டாள் அம்பா.

"அப்பா அப்படிச் சொன்னாரா?"

''ஆமாம். நீங்க அப்படிச் சொன்னதா சொன்னார்".

தம்பிமுத்து சில விநாடிகள் மௌனமாக இருந்தான்.

"என்ன டாக்டர்... ஏன் பேசாமெருக்கீங்க?"

"என்னை உங்கப்பா உங்க அத்தைகிட்டே அப்படிச் சொல்லச் சொன்னார். நான் சொல்ல முடியாதுன்னு சொன்னேன். அவர் நான் சொன்னதா தான் சொல்லப் போறதா சொன்னார்..."

"இதெ பத்தி உங்களுக்கு ஆட்சேபணை கிடையாதா, டாக்டர்?"

"உண்டு. நான் என்னம்மா செய்ய முடியும்? உங்க அத்தை வந்து 'கன்ஸல்ட்' பண்ணாங்க. வீங்கியிருக்கிறதைப் பாத்ததும், தஞ்சாவூர் போய் பரிசோதனை செய்துகிட்டா நல்லதுன்னு தோணிச்சு... அவங்ககிட்டே சொன்னா பயப்படுவாங்களேன்னு,, உங்கப்பாகிட்டே சொன்னேன். அவரு இப்படி 'ரியாக்ட்' பண்ணுவார்னு எனக்கு எப்படிம்மா தெரியும்...?"

"நான் என் அத்தை கிட்டே, பரிசோதனை செய்துண்டா நல்லதுன்னு நீங்க சொன்னதா சொல்லலாமா?" டாக்டர்.





''தாராளமா சொல்லலாம்...''

'' 'கான்ஸர்'னு நினைக்கிறீங்களா, டாக்டர்?''

தம்பிமுத்து சற்றுத் திடுக்கிட்டான். 'இந்தப் பெண்ணால் எப்படி வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேச முடிகிறது?'

''தெரியலே... எதுக்கும் பாத்திடறது நல்லது இல்லியா?''

அம்பா சிறிது நேரம் பேசாமல் நின்றாள்.

''எங்கம்மா பத்தி உங்களுக்குத் தெரியாது, டாக்டர்... அவ ராட்சசி... எங்க அத்தை எங்க குடும்பத்துக்காக ஓடா உழைச்சாங்க. எங்கேயோ யார் வீட்டிலியோ அடுப்படியிலே வெந்துண்டு, நாங்க நன்னா சாப்பிடணும்னு, பணம் அனுப்பிச்சிண்டிருந்தாங்க. டாக்டர்... இப்பொ அவங்களுக்கு வியாதின்னா, அந்தப் பணம் அவங்களுக்கு உபயோகப்படாமெ...''

அவன் இடைமறித்தான் ''எனக்கு எல்லாம் தெரியும்... நீங்க அத்தையைக் கூட்டிகிட்டு தஞ்சாவூருக்கு வாங்க. நானும் வரேன்... 'டெஸ்ட்' பண்ணிப் பார்த்திட்டு தேவையா இருந்தா, பட்டினத்துக்குப் போய் கான்ஸர் இன்ஸ்டிடியூட்லே 'அட்மிட்' பண்ணுவோம். நான் நினைக்கிறது தப்பா இருக்கலாம், தப்பாத்தான் இருக்கணுங்கிறதுதான் என் பிரார்த்தனை... ஓ.கே...?''

''வைத்தியத்துக்கு எத்தனை செலவாகும், டாக்டர்?''

தம்பிமுத்து உடனே பதில் சொல்லவில்லை. அதுவரை நின்று கொண்டிருந்தவன், நாற்காலியில் உட்கார்ந்தான். சில விநாடிகள் மௌனத்துக்குப் பிறகு சொன்னான். ''உங்க அத்தைக் கிட்டேருக்கிற பத்தாயிரம், கான்ஸரா இருந்தா, வைத்தியத்துக்குப் பத்தாது, வைத்தியத்துக்கு வேற ஏற்பாடு என்னாலே பண்ண முடியும். ஆனா நான் வேற ஏற்பாடு செய்யறேன். உங்கப்பாவுக்கோ, உங்கம்மாவுக்கோ தெரிஞ்சா, இந்தப் பத்தாயிரத்தை நாணுகிட்டே கொடுத்துருவாங்க. உங்க கழுத்திலே சுருக்குப்போட... அதனாலே, அத்தை பணம் அத்தை வைத்தியத்துக்குத்தான்னு நீங்க உறுதியா சொல்லணும், சரியா...? அப்பொத்தான் அந்த அயோக்கியனைக் கட்டிக்கிறத்திலேர்ந்து நீங்க தப்பிச்சுக்கலாம், புரிஞ்சுதா?''

அம்பா, கண்களில் நீர் கசிய, டாக்டர் தம்பிமுத்துவைப் பார்த்தாள். உணர்ச்சி வயப்பட்ட நிலையில், அவளால் பேச முடியவில்லை.

அடுத்த நாள் விடியற்காலையில், கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு, தம்பிமுத்து எழுந்துபோய்க் கதவைத் திறந்தான்.

அம்பாவின் அத்தை!

''என்னம்மா இந்தக் காலையிலே வந்திருக்கீங்க; உடம்பு எப்படி இருக்கு...?''

''உள்ளே வரலாமா, டாக்டர்?''

''வாங்க... வாங்க...''

வாடி உலர்ந்திருந்த உடம்பு. ஆனால், கண்களில் ஒரு தீட்சண்யம் தெரிந்தது.

''உட்காருங்கம்மா...''

''இல்லே, வேணாம், வந்ததைச் சொல்லிட்டுப் போயிடறேன்.. எனக்குப் பரிசோதனையும் வேணாம், ஒண்ணும் வேணாம், டாக்டர். எனக்கோ எழுபது வயசாயிடுத்து. இதுவரையிலும் சாதிக்காத எதையும் புதுசா நான் ஒண்ணும் சாதிக்கப் போறதில்லே... அந்தப் பத்தாயிரம் அம்பா கல்யாணத்துக்குத்தான். என்ன வியாதியா இருந்தாலும், அது இருந்துட்டுப் போகட்டும்...''

அவளுக்குப் பேசும்போது மூச்சிறைத்தது. வீட்டில் பெரிய யுத்தம் நடந்திருக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. அம்பா, அவளுடைய பெற்றோர்களுடன் சண்டை போட்டிருக்கக்கூடும். அம்பாவின் அம்மா 'நாவண்ணம்' அந்தக் கிராமத்தில் பிரஸித்தம். மகள் மீதுள்ள கோபத்தையெல்லாம் நாத்தனாரிடம் காட்டியிருப்பாள்.

அம்பாவின் கல்யாணத்தைத் தடுக்க அவரும், அம்பாவும் சேர்ந்து போட்டிருக்கும் இத்திட்டத்தைப் பற்றிக் கூறலாமா என்று அவன் ஒருகணம் யோசித்தான். ஆனால், இதற்கு அவள் உடன்படுவாளோ என்ற சந்தேகம் அவனுக்கு வந்தது.

''தோ பாருங்கம்மா, உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருக்கு இல்லையா, கடவுள் அம்பாவின் கல்யாணம் நடக்கும்படியா பாத்துப்பாரு. இந்தப் பணம் உங்க வைத்தியச் செலவுக்குத்தான், கவலைப்படாதீங்க...''

''அந்தக் கடவுள் என் வைத்தியச் செலவைப் பாத்துக்கட்டுமே...''

இவ்வளவு சுலபமாக மடக்கப்படுவோமென்று தம்பிமுத்து எதிர்பார்க்கவில்லை.

''எது இப்பொ முக்கியம்னு கடவுளுக்குத் தெரியும்மா... இப்பொ முக்கியம், உங்க வைத்தியம். உங்களுக்கு ஒரு வியாதியுமே இல்லாமெ இருக்கலாம், பரிசோதனை செய்துக்கிறதிலே என்ன தப்பு...?''

அம்பாவின் அத்தை சிறிது நேரம் பேசாமல் நின்றாள். அவன் கூறியதை அவள் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்று அவனுக்குப் பட்டது.

''அம்பா மனசை உங்களாலே மாத்த முடியாதா, டாக்டர்...? எனக்காக அவ, அவளைப் பெத்தவாளோட இப்படியா சண்டை போடணும்?''

''இது உங்க வீட்டுப் பிரச்னை.. என்னாலே குறுக்கிட முடியாது...''

''நீங்க சொல்லித்தானே அவ இப்படி வழக்காடறா, டாக்டர்... உங்க நல்ல எண்ணமும்





எனக்குப் புரியறது, அவளோட நல்ல எண்ணமும் எனக்குப் புரியறது, நான் எலும்பும் தோலுமா ஆயிட்டேன், எதற்காக இந்த உசிரைப் பிடிச்சுண்டிருக்கணும்னு தோணறது. தயவுசெய்து நீங்க....''

தம்பிமுத்து குறுக்கிட்டார். "என்னாலே முடியாது, மன்னிச்சுக்கங்க..."

சில வினாடிகள் சிலையாக நின்றவள் போய்விட்டாள்.

தஞ்சாவூர் வர இவள் சம்மதிப்பாளா? என்று அவனுக்குச் சந்தேகம் வந்தது.. வர மறுத்துவிட்டால்...? அம்பாவிடம் பேசி, அவள் அத்தையை எப்படியாவது இதற்குச் சம்மதிக்கச் செய்யவேண்டும். இது புற்று நோய்தான், சந்தேகமில்லை. புற்றுநோய் என்று தெரிந்தும், ஒரு நோயாளி வைத்தியம் செய்துகொள்ள மறுத்தால், டாக்டரின் கடமை என்ன?

புற்று நோய் ஆரம்ப நிலையிலிருந்தால், குணமாக்கி விட முடியும். அது ஆரம்ப நிலையிலிருந்து, அவள் வைத்தியம் செய்துகொள்ள மறுப்பதை அவன் அப்படியே ஏற்றுக்கொண்டு சும்மா இருந்து விட்டானானால், அவன் கொலைக்கு உடந்தை என்று அர்த்தம்.

அடுத்த நாள் அவன் வயலோரமாக உலாவச் சென்றபோது, அம்பா எதிரே வந்தாள்.

அவன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"அத்தை நேத்திக்கு உங்களைப் பாக்க வந்தாளா?"

"ஆமாம்..."

" 'இந்தப் பணம் உன் கல்யாணத்துக் காகத்தாண்டி'ன்னு ஒரேயடியா கெஞ்சினா... நான் சொன்னேன், அந்த நாணு அயோக்கியனைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு... அதுக்குள்ளே என்னோட அம்மா என் பேரிலே பாஞ்சு, 'என்னடி பண்ணான் அவன்? அவனுக்குப் பெரிய மனுஷ சகவாஸம் இருக்குன்னு பொறாமையினாலே கண்டவா கண்டபடி பேசுவா,... அவனைத்தான் நீ கல்யாணம் பண்ணிண்டாகணும், அதுக்குத்தான் உங்க அத்தைப் பணம், அத்தை மனசை நோகும்படியா செய்யாதே'ன்னா... அத்தை பேரிலே இவ்வளவு கரிசனமான்னு எனக்குச் சிரிப்பா வந்தது... நான் அத்தைகிட்டே கண்டிப்பா சொல்லிட்டேன், அத்தே, உங்க பணம் உங்க வைத்தியத்துக்குத்தான். நான், நீங்க, டாக்டர் தம்பிமுத்து மூணு பேரும் நாளைக்குத் தஞ்சாவூர், போறோம்... வேற பேச்சே இல்லே, அப்படின்னு... என்ன டாக்டர், நான் சொன்னது, சரிதானே...?"

"சரிதான், உங்க அத்தை என்ன சொன்னாங்க?"

அப்பொ ஒண்ணும் சொல்லலே... அப்புறம் அம்மா இல்லாதபோது தனியா வந்து பேசினா... 'நாணுவை வேணாம்னா வேற யாரையாவது, நல்லவனா பாத்துக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா'ன்னு கேட்டா.. நான் படிக்கப் போறேன் அத்தேன்னு சொன்னேன்".

அவளுக்குச் சற்று மூச்சு வாங்குவதுபோல் தோன்றிற்று...

"சரி... அப்புறம் ;கிளினு'க்குக்கு வாங்க, பேசிக்கலாம்", என்றான் தம்பிமுத்து.



"இல்லே, டாக்டர்... சொல்லிடறேன்... 'உங்க வைத்தியச் செலவுக்கு டாக்டர் ஏற்பாடு பண்றார்... ஆனா இது அம்மாவுக்குத் தெரியக்கூடாது, உங்க பத்தாயிரத்தைதான் வைத்தியத்துக்குச் செலவழிச்சமாதிரி காமிக்கணும், அப்பதான்



நாணுக்கிட்டேயிருந்து என்னால் தப்பிக்க முடியும் என்று உண்மையை சொல்லிட்டேன் டாக்டர்"

தம்பி முத்து சற்று திடுக்கிட்டான்.

"நீங்க இப்பிடி சொன்னதும் அவங்க என்ன சொன்னாங்க?" என்று கலவரமடைந்த நிலையில் குரலில் ஏற்றமிறக்கத்துடன் அவன் கேட்டான்.

"ஒண்ணுமே சொல்லலே... கொஞ்ச நேரத்துகப்புறம் புன்னகை செஞ்ச மாதிரி இருந்தது..."

"அப்பொ நம்ம ஏற்பாட்டுக்கு அவங்க சம்மதம்னு அர்த்தம். அப்பொ தஞ்சாவூர் போக ஏற்பாடு செய்யலாம்..."

"செய்யலாம் டாக்டர்..."

அம்பாவின் பெற்றோர்களைக் குற்றம் சொல்ல முடியுமா? நடுத்தரத்துக்கும் மிகக் கீழான நிலையிலிருக்கும் பெரிய குடும்பம். நாதுக்கான தார்மீக உணர்வுகள் என்ற ஆடம்பரம் அவர்களுக்குக் கட்டி வருமா? அம்பாவின் அத்தை, வாழ்க்கை அவளை இப்படி நடத்தியிருப்பதற்கு, இவ்வளவு நல்லவளாக இருப்பதுதான் ஆச்சர்யம்.

அப்பொழுது வாசற் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது.

யார் இந்த நேரத்தில்?

தம்பிமுத்து எழுந்து விளக்கைப் போட்டான்.

மணி 11.30

அவன் வாசற் கதவைத் திறந்தான். அம்பாவின் அத்தை!

அவள் மௌனமாக உள்ளே நுழைந்தாள்.

"என்னங்க, இந்த நேரத்தில்...?" அம்பாவின் அத்தை ஒரு துணி முடிப்பை அவனிடம் நீட்டினாள்.

"என்னங்க இது?"

"பணம். பத்தாயிரம் ரூபா, ஆத்திலேயிருந்தா அம்பாவுக்குக் கிடைக்காது... உங்ககிட்டேத்தான் இது பத்திரமா இருக்கணும்.. டாக்டர், உங்களைத்தான் நான் நம்பறேன்... சரி அம்பாவை பாத்துக்கோங்கோ.. நான் வரட்டுமா?"



அவன் ஏதோ பேச ஆரம்பிப்பதற்குள், அவள் போய்விட்டாள்.

இன்னும் விடியவில்லை.

அதற்குள் மறுபடியும் கதவு தட்டப்படும் சப்தம்.

தம்பிமுத்து அப்பொழுதுதான் தூங்க ஆரம்பித்திருந்தான். சிறிது எரிச்சல் உணர்வு முகத்தில் தோன்ற, வாசற் கதவைத் திறந்தான்.

வைத்தாவும், அவர் மனைவியும்!

"எங்கக்காவைக் காணோம், இங்கே வந்தாளா?" என்றார் வைத்தா படபடத்த குரலில்.

என்ன பதில் சொல்வது? இந்தச் சந்தர்ப்பத்தில் பொய்தான் உண்மை.

"வரலியே..."

"எங்கே போயிருப்பா? பணத்தையும் எடுத்துண்டு போயிட்டாளே படுபாவி..." என்றாள் வைத்தாவின் மனைவி.

"எனக்கு ஒரே கவலையாயிருக்கு, டாக்டர்..." என்றார் வைத்தா.

"பணம் போயிடுத்துடுன்னா?"

"என் பொண்டாட்டி கிடக்கிறா டாக்டர், அவளுக்குப் பணந்தான் முக்கியம்... வியாதிக்காரி இப்படி சொல்லாமெ கொள்ளாமெ எங்கே போயிருப்பா?"

"தஞ்சாவூருக்கு அனுப்பிச்சிருப்பார் உங்க டாக்டர்.." என்றாள் வைத்தாவின் மனைவி.

"இதோ பாரும்மா.. என்னை அநாவசியமா இந்த வம்பிலே இழுக்காதீங்க... இது உங்க குடும்பப் பிரச்னை. அந்தம்மா வைத்தியம் பண்ணிகிட்டா என்ன, பண்ணாமெருந்தா எனக்கென்ன? தயவுசெய்து வெளியிலே



போங்க, எனக்குக் கோபம் வராது, வந்தா, உங்களாலே தாங்கிக்க முடியாது".

இதுவரை தம்பிமுத்து குரலை உயர்த்தி இவ்வாறு பேசியதில்லை.

அவர்கள் போன பிறகு, அசதியினாலா, கோபத்தினாலா, எதனால் ஏற்பட்டது இந்தக் களைப்பு உணர்வு என்று யோசித்தவாறு, அவன் கட்டிலில் சாய்ந்தான்.

அம்பாவின் அத்தை, பரிசோதனை செய்து கொள்ளத் தயாராக இல்லை. அம்பாவுக்கு அவளால் எந்தப் பிரச்னையும் வரக்கூடாதென்று வீட்டை விட்டே போய்விட்டாள். எங்கே போயிருக்கக் கூடும்?

வேறொரு வீட்டில் வேலை செய்வதற்காகவா? இந்த உடம்புடன் அவளால் வேலை செய்ய முடியுமா?

"கோட்டப் முதல் குமரி வரை" மலரிலிருந்து...

பத்தாயிரம் ரூபாயை அவனிடம் ஒப்படைத்துவிட்டு அவள் போய்விட்டாள்!

'டாக்டர்,' உங்களைத்தான் நான் நம்பறேன் அம்பாவைப் பாத்துக்கோங்கோ!'

இதற்கு என்ன அர்த்தம்..? இதைப்பற்றி யோசித்த போது, அவன் திடுக்கிட்டான்! பத்தாயிரம் ரூபாயை எதற்காக அவனிடம் அவள் கொடுக்கவேண்டும்?

நாலு கிராமம் தள்ளி ஒரு சின்ன ஊரிலிருந்த பாழுங் கிணற்றில், அம்பாவின் அத்தை நிம்மதியான மீளா உறக்கத்தில் இருந்தாள் என்ற தகவல், இரண்டு நாட்கள் கழித்து வந்ததும், அம்பாவின் அத்தை திருக்குறள் படித்திருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் தம்பிமுத்துவுக்கு வந்தது.

*'பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த*
*நன்மை பயக்கும் எனின்'.*

# பெண்கள் விடுதலைக் கும்மி

□ மகாகவி பாரதியார்



*கும்மியடி! தமிழ் நாடு முழுதும்*
*குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!*
*நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின*
*நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி)*

*ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்*
*றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;*
*வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற*
*விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)*

*மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்*
*மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,*
*வீட்டில் எம்மிடங் காட்ட வந்தார், அதை*
*வெட்டி விட்டோமென்று கும்மியடி! (கும்மி)*

*நல்ல விலை கொண்டு நாயை விற்பார் அந்த*
*நாயிடம் யோசனை கேட்ப துண்டோ?*
*கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை*
*கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார். (கும்மி)*

*கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு*
*கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;*
*வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்*
*வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)*

*பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்*
*பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்,*
*எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்*
*இளைப்பில்லை காணென்று கும்மியடி! (கும்மி)*

*காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்*
*காரியம் யாவிலும் கைகொடுத்து,*
*மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்*
*மாட்சி பெறச் செய்து வாழ்வமடி! (கும்மி)*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906





தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23








நண்டலாறு தூர்வாருவதற்கு முன்னும்




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
பங்குனி
மார்ச் 16–31, 2000
மலர் : 31 இதழ் : 18
விலை ரூ.5


இந்த இதழில்...


- ❖ நிதிநிலை அறிக்கை .......... 2
- ❖ திருவாரூர் மாவட்டத்தில் கணினி பயன்பாடு .......... 9
- ❖ திருவள்ளுவர் தமிழகத்தின் முதல் புரட்சியாளர் .......... 13
- ❖ தஞ்சை மாவட்டத்தில் கணினி புரட்சி .......... 17
- ❖ தமிழகச் சுற்றுலாத் தலங்கள் .......... 20
- ❖ அரை மனிதன் .......... 31
- ❖ எது வள்ளுவம்? .......... 36
- ❖ அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி .......... 39
- ❖ பத்தாம் வகுப்பு, +2 மாணவர்களுக்கு .......... 41


திருக்குறள்

*அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனு மிலர்.*

அறிவு இல்லாதவர்களுக்கு வேறு எது இருந்தாலும் பெருமையில்லை. அறிவு உள்ளவர்களுக்கு வேறு எது இல்லாவிட்டாலும் சிறுமை இல்லை.

*- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*

# நிதிநிலை அறிக்கை 2000 - 2001

*2000-2001ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை 24-3-2000 அன்று சட்டப் பேரவை முன்வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி (Gross State Domestic Product) 6.6 விழுக்காடாக இருக்கும். 'ஆட்டோ மொபைல்' போன்ற முக்கிய தொழில்களில் தேக்கநிலை அகன்று உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கி யுள்ளதால் தொழில் துறையின் (manufacturing sector) வளர்ச்சி, 13 விழுக்காடாக இருக்கும்.

வரும் நிதியாண்டில் தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ் சாலைகள், மாவட்ட சாலைகள், ஊரகச் சாலைகள், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள தெருக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான மொத்த முதலீடு ரூ.1685 கோடியாக இருக்கும். தொலைத் தொடர்புத் துறையில் மொத்த முதலீடு ரூ.2285 கோடி ஆகவும், குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணி ஆகியவை உள்ளிட்ட நகர்ப்புற கட்டமைப்பு வசதித் திட்டங்களில் முதலீடு ரூ.1407 கோடியாகவும், மின் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு மின் வாரியத்தின் முதலீடு ரூ.1034 கோடியாகவும் இருக்கும். இத்துடன், மாநிலத்தின் மின் உற்பத்தியில் தனியார் துறையினர் ரூ.1332 கோடி அளவுக்கு முதலீடு செய்வார்கள். வரும் நிதி ஆண்டில் சென்னை, எண்ணூர், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் ரூ.482 கோடி முதலீடு மத்திய அரசினால் செய்யப்படும்.

### உள்ளாட்சி அமைப்புகள்

மாநில அரசின் வரி வருவாயி லிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு நடப்பு நிதியாண்டில் ரூ.845 கோடி வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில் இத்தொகை ரூ.1036 கோடியாக உயர்த்தப்படும். இதுதவிர, கேளிக்கை வரியில் 90 விழுக்காடு பங்காக ரூ.78 கோடி உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். மாநில அரசின் பல்வேறு மானியங்கள், வரி வருவாய்ப் பங்கீடு மற்றும் திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஆகிய வகையில் உள்ளாட்சி மன்றங் களுக்கு, வரும் நிதியாண்டில் மொத்தம் ரூ.2401 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.




ஊரக, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட ஆண்டுத் திட்டத்தையும், ஐந்து ஆண்டுத் திட்டத்தையும் அடுத்த ஆண்டு முதல் தயாரித்து வழங்கிடும் வகையில் மாவட்ட திட்டக் குழுக்கள் செயல்முறைக்குக் கொண்டு வரப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இயங்கி வந்த இத்திட்டக் குழுக்கள், இனி மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் செயல்படும். இக்குழுக்கள் இயங்குவதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டிலும் வரும் நிதியாண்டிலுமாக 11,600 கி.மீ. கிராமச் சாலைகளை தார்சாலைகளாகவும், 5,000 கி.மீ. தெருக்களை சிமெண்ட் விதிகளாக்கவும் சுமார் ரூ.900 கோடி செலவிடப்படும். நடப்பு நிதியாண்டில் 3,600 கி.மீ. தார்சாலை அமைக்கும் பணியும், 2,800 கி.மீ. சிமெண்ட் விதிகள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள பணி வரும் நிதியாண்டில் நிறைவுபெறும.

பொது மக்களின் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள உழவர் சந்தைகளில் தாங்கள் விளைவித்த காய்கறிகளை உழவர்கள் நேரடியாக நியாய விலையில் விற்பதைப் போல, கிராமப்புற மக்கள் தாங்கள் தயாரித்த கைவினைப் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்பனை செய்து உரிய விலை பெறுவதற்கான நிலையான மையங்களை அமைத்துத் தர இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இத்தகைய விற்பனை மையங்களை எல்லா



மாவட்டங்களிலும் ஏற்படுத்தவும், கிராமப்புறப் பொருட்களுக்கு "பூமாலை" என்னும் வணிகச் சின்னம் உருவாக்கி, அவற்றின் விற்பனையை அதிகரிக்கவும் ரூ.14.60 கோடி வரும் நிதியாண்டில் செலவிடப்படும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 634 கிராம ஊராட்சிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.518 கோடி மதிப்பில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கிராமப்புற வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியுள்ளோம். வரும் நிதியாண்டில் 210 கிராமங்களில் இதனை ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல் படுத்திட ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டம் மக்களிடையே பெற்றுள்ள நல்ல வரவேற்பின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு வரும் நிதியாண்டில் ரூ.30 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பொதுமக்களுடைய பங்கேற்பு அதிகரிக்கும் போது, அதற்கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கப்படும்.

ஆதிதிராவிட மக்களுக்காவும் மற்றும் ஏழை எளிய மக்களுக்காகவும் இந்த அரசு தொடங்கிய இலவச கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின் கீழ், சென்ற நான்கு ஆண்டுகளில் 2 இலட்சத்து 84 ஆயிரம் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. வரும்நிதி ஆண்டில் மேலும் 31,000 வீடுகள் ரூ.99 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

கல்வி, தகவல், பயிற்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு துப்புரவு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதை மாவட்ட அளவில் ஓர் இயக்கமாக நடத்திடத் திட்டமிட்டு இந்த நிதியாண்டில் 4 மாவட்டங்களிலும், வரும் நிதியாண்டில் மேலும் 4 மாவட்டங்களிலும் "ஊரகத் தூய்மை இயக்கம்" (Rural Sanitation Campaign) என்ற பெயரில் ரூ.12 கோடி செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும்.

### நிர்வாக சீரமைப்பு

பத்திரப் பதிவுத் துறையில் பொதுமக்களுக்குப் பயனுள்ள பல வசதிகள் விரைவில் கிடைத்திடும் வகையில் இதுவரை 25 பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் இந்த வசதி மற்ற பதிவு அலுவலகங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் வில்லங்கச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ் போன்றவற்றை விரைவில் பெற்றுக் கொள்ள முடியும்.

அனைத்து மாவட்ட வளர்ச்சி முகமைகளும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்பட்டு, திட்டப் பணிகளின் முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் கணினி மயமாக்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மற்ற மாவட்டங்களில் 52 ஒன்றியங் களில் கணினி மயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும். அனைத்து ஒன்றியங்களும் அடுத்த இரண் டாண்டுகளில் கணினி மயமாக்கப்படும்.

**வெள்ளை அறிக்கை :** மாநில அரசுப் பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இட ஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன் மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்.

வரும் நிதியாண்டில் 6000 பள்ளி ஆசிரியர்களும், காவலர்கள் உள்ளிட்ட சுமார் 4000 சீருடைப் பணியாளர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டு நியமிக்கப்படுவார்கள்.

### ஊரகக்குடிநீர் திட்டம்

மாநிலத்தில் ஊரகக் குடிநீர் வழங்கல் பணிகளுக்காக நடப்பு நிதியாண்டின் ஒதுக்கீடான ரூ.450 கோடி என்பது, வரும் நிதியாண்டில் ரூ.500 கோடியாக உயர்த்தப் படுகிறது...

ஊரகப் பகுதிகளில் அனை வருக்கும் முதற் கட்டமாக, நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் குடிநீர் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு கொள்கை வகுத்தது. 1996-ஆம் ஆண்டு ஏறக்குறைய 32,000 குடியிருப்புகள் அந்த நிலையை எய்தாமல் இருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.960 கோடி செலவில் பெருமளவில் ஊரகக் குடிநீர் திட்டங்களை நிறைவேற்றிய தால், இதுவரை 21,000 குடியிருப்புகளுக்குப் போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் எஞ்சிய குடியிருப்புகளிலும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்படும்.

### பொது விநியோகம்

நியாய விலைக் கடைகளில் பொருள்களை வாங்குவோரில் மகளிரே அதிகமாக உள்ளதாலும், மகளிரே நடத்தும் கடைகள் சிறப்பாக செயல்பட்டு வருவதாலும் மகளிர் நடத்தும் நியாயவிலைக்



கடைகளுக்கு அரசு ஊக்கம் அளித்து வருகிறது. மாநிலத்தில் தற்போது 210 நியாய விலைக் கடைகள் மகளிரால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இதனை அதிகரிக்க இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

### வேளாண்மை

தரிசு நில மேம்பாடு, அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. முதலமைச்சர் தலைமையில் தரிசு நில மேம்பாட்டுக் குழுமம் (Wasteland Development Authority) ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்த ஆண்டில் ரூ.5.56 கோடி செலவில், பத்து மாவட்டங்களில் 25,000 ஏக்கர் தரிசு நிலங்களில் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு முதன் முறையாக முந்திரி, வேம்பு, பழச்செடிகள் போன்றவை அங்கே பயிரிடப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், மேலும் 75,000 ஏக்கர் தரிசு நிலங்கள் 24 மாவட்டங்களில் மேம்படுத்தப்படும். அடுத்து வரும் 10 ஆண்டுகளில், ஏறத்தாழ 25 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை மேம்பாடு செய்வதற்கான தொலை நோக்குத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

தொடங்கப்பட்ட நான்கு மாதங்களில் இதுவரை மொத்தம் 32 உழவர் சந்தைகள் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இந்த 32 உழவர் சந்தைகளில் 23-3-2000 தேதி வரை ரூ.15 கோடி மதிப்பிற்கு 2 கோடி 46 இலட்சம் கிலோ காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. மீதமுள்ள 68 உழவர் சந்தைகள் வரும் நிதியாண்டிலேயே துவக்கப்படும்.

பலவகை தரிசு நிலங்களை பயன்படுத்தவும், மண் அரிப்பினைத் தடுக்கவும், கடல் ஓரங்களில் காற்றுத் தடை ஏற்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் முந்திரி விவசாயம் பெரிதும் உதவுகிறது. முந்திரி சாகுபடியை அதிக அளவில் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், முந்திரி சாகுபடிக்கு ஏற்ற அரசுக்குச் சொந்தமான தரிசு நிலப்பரப்பினைத் தேர்வு செய்து, அவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் முந்திரி சாகுபடி செய்ய முன் வருவோருக்கு ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களை நவீனப் படுத்திடவும், கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பாசனத்திறன் அதிகரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், அடவிநயினார், கொடுமுடியாறு, நம்பியாறு, வடக்கு பச்சையாறு, கிருதுமால் அணைக்கட்டு, மொரதானா திட்டம், ராஜாத் தோப்புகானாறு திட்டம், பொய்கையாறு திட்டம், சோத்துப்பாறை திட்டம் ஆகிய 9 பாசனத் திட்டங்களை விரைந்து முடிக்கவும் உலக வங்கி உதவியுடன் பணிகள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை ரூ.763 கோடி மதிப்பீட்டில் 268 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில் இப்பணிகளுக்காக ரூ.218 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய வேளாண் கொள்கை ஒன்றை உருவாக்கவும், அதன் செயல்பாட்டினை கண்காணிக்கவும் முதலமைச்சரை தலைவராகவும் வேளாண்மைத்துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் வல்லுநர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும்.

மாவட்டங்களில் வேளாண்மை விற்பனை குழுக்களின் மூலம் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து வரும் விவசாயிகளுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

30.6.99-க்கு முன்பு தவணை தவறிய வேளாண்மை சார்ந்த கடன்களுக்கு, 30.6.2000-க்குள் வட்டியுடன் கடனை செலுத்தும் சிறிய, பெரிய, அனைத்து விவசாயிகளுக்கும் அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மேலும், திருப்பிச் செலுத்தப்படும் நடப்பு கடன் தொகை வட்டியில் கடந்த ஆண்டு 6.25 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக அரசின் சார்பில் வழங்கப்பட்டதற்கு மாறாக இந்த ஆண்டு 7 சதவீதம் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். நடப்பாண்டில் ஏற்கெனவே முழு கடன் பாக்கியை செலுத்தியவர்களுக்கும் இது பொருந்தும். இத்திட்டத்தால் சுமார் 10 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

விவசாயிகள் பாசன நீரை எடுத்துச் செல்ல அரசு நிலங்களில் பதிக்கும் குழாய்களுக்காக இதுவரை விதிக்கப்பட்டு வந்த பாதைக் கட்டணம் (Track Rent) ரத்து செய்யப்படும்.

தனியார் கரும்பாலைகள் கொடுக்க வேண்டிய விவசாயிகளின் பாக்கியைத் தீர்த்திட ஆலை அதிபர்களை அழைத்துப் பேசப்படும்.

### மீனவர் நலன்

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் இதுவரை 16,000 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு






அவற்றுள் 11,500 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 4,500 வீடுகள் கட்டும் பணி விரைவில் முடிவடையும். வரும் நிதியாண்டில் மேலும் 4000 வீடுகள் ரூ.14.80 கோடி செலவில் கட்டப்படும். ஆக, 1996-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட வண்ணம், மீனவர்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் 20,000 வீடுகள் கட்டும் திட்டம் வரும் நிதியாண்டில் நிறைவுறும்.

மீனவர்கள், மீன்களை விற்பதற்குப்படும் சிரமங்களை நீக்குவதற்கும், சுகாதாரமான முறையில் விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கும், 'மீனவர் அங்காடி' தமிழகத்தில் முதற்கட்டமாக 10 இடங்களில் அமைக்கப்படும். நவீன வசதிகள், குடிநீர் மற்றும் கழிப்பறை கொண்ட விற்பனைக் கூடங்களாக அவை அமைக்கப்படும். மீன்கள் தரமாகவும், கெடாமலும் விற்பதற்கு வசதியாக ஒட்டு மொத்த ஏலம் நடக்கும் இடங்களில் ஏலக்கூடமும் (Auction Hall) உலர்களமும் (Drying Yard) அமைத்துத் தரப்படும்.

### கால்நடைப் பாதுகாப்பு

கால்நடைகளின் பாதுகாப்பு, இனவிருத்தி ஆகியவற்றை அதிகரிக்கும் வகையில் கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தொடங்கப்பட்ட இரண்டு மாதங்களில் 22-3-2000 வரை 600 முகாம்கள் நடத்தப்பட்டு 20 இலட்சத்து 88 ஆயிரம் கால்நடைகள் மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளன.

தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம் 1997-98-ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 1999-ஆம் ஆண்டு இறுதி வரை சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலங்களில் வனவளர்ப்புப் பணிகள் ரூபாய் 211 கோடி மதிப்பில் முடிக்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் 200 கிராமங்களில் ஒரு இலட்சத்து 89 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ரூ.109 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### சாலைகள்

ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி யில்லாமல் இருந்த 301 கிராமங் களுக்கு நடப்பாண்டில் இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கப்படும் என்று சென்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டவாறு இப்பணி முடிக்கப்பட்டு, தமிழகத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை நாம் எய்தியுள் ளோம். அடுத்த கட்டமாக, 500 முதல் 1000 வரையிலான மக்கள் தொகை கொண்ட, இணைப்புச் சாலை வசதி இல்லாத 340 கிராமங்களுக்கு நடப்பாண்டில், சுமார் ரூ.123 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டில், மேலும் 140 கிராமங்களுக்கு சுமார் ரூ.90 கோடி செலவில் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும்.

சாலை மேம்பாட்டுக்காக தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) ஊரக அடிப்படை கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியத்தின் (Rural Infrastructure Development Fund) மூலமாக இதுவரை ரூ.701 கோடி மதிப்பீட்டில் 2865 சாலைப் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், இதுவரை 2062 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. வரும் நிதியாண்டில் மேலும் 803 பணிகள் முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக வரும் நிதி ஆண்டில் ரூ.231 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இதர மாவட்டச் சாலைகள் என்ற வகையைச் சேர்ந்த 4290 கிலோ மீட்டர் முக்கியமான சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ரூ.159 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் படிப்படியாகத் தொடரும் வகையில், வரும் நிதியாண்டில் 8235 கிலோ மீட்டர் இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தப்படும்.

### தொழில் வளர்ச்சி

**கடலூரில் தொழிற்பூங்கா :** கடலூர் அருகே சுமார் 950 ஏக்கர் பரப்பளவில் இந்த ஆண்டு தொழிற்பூங்கா (Industrial Park) உருவாக்கும் பணி துவங்கப்படும்.

**ஆடை தயாரிக்கும் பூங்கா :** (Garment Park) : சென்னைக்கு அருகே 200 ஏக்கர் பரப்பளவில் ஏற்றுமதி வளர்ச்சி மையம் ஒன்று ஆடை தயாரிப்பதற்கென்றே உருவாக்கப்படும். இத்தகைய தொழிற்கூடங்கள் பல நூறு பேருக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்.

**மலர்ப் பூங்கா** (Floriculture Park) : ஓசூரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நவீன மலர்ப் பூங்கா 200 ஏக்கர் பரப்பளவில் துவங்கப்படும். இதில் 125 ஏக்கர் பரப்பளவில் ரோஜாச் செடிகள் பயிரிடப்பட்டு, கிளிப்பிங்ஸ் செய்யப்பட்டு, அம்மலர்கள் தொடர்ந்து குளிர்சாதனப் பெட்டி களில் பாதுகாக்கப்பட்டு, பெங்களூர் மற்றும் சென்னை விமான நிலையங்களிலிருந்து ஐரோப்பா, கிழக்காசிய நாடுகள், ஜப்பான், ஆஸ்திரேலியா, அரேபியா நாடுகள் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

சென்னைக்கு அருகே எண்ணூரில் சுமார் ரூ.6000 கோடி செலவில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பெரியதோர் ஜப்பானிய கம்பெனியான மிட்சூயி (Mitsui) உடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப் பட்டுள்ளன.

### உயிரியல் தொழில்நுட்பம்

உயிரியல் தொழில் நுட்பம் (Bio-technology) அதிக வேலை வாய்ப்பை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய தொழில் நுட்பமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னைக்கு அருகே கேளம்பாக்கத்தில் பெண் தொழில் முனைவோர்களுக்கு என்று தனியாக உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றினை உருவாக்கி வருகின்றது. இது அடுத்த சில மாதங்களில் செயல்பட தொடங்கும்.

### தகவல் தொழில்நுட்பம்

பல ஆண்டுகளை வீணடித்து விட்டு, இந்தியத் தகவல் தொழில் நுட்பப் புரட்சியில் (Indian Information Technology Revolution) தாமதமாக நுழைந்திட்ட தமிழ்நாடு, கழக அரசு உருவான கடந்த நான்காண்டுகளில், ஹார்வர்டு பல்கலைக் கழக அறிக்கை குறிப்பிடுவது போல "குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை" (Remarkable Progress) அடைந்திருக்கின்றது. தமிழ்நாட்டிலிருந்து குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு மென்பொருள் ஏற்றுமதியே இல்லை என்கிற நிலையிலிருந்து 1998-99-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியான மென்பொருட்களின் மதிப்பு ரூ.1,246 கோடி என்பதும், இது 1997-98-ஆம் ஆண்டு ஏற்றுமதி மதிப்பை விட 192 சதவிகிதம் அதிகம் என்பதும் நாம் பெருமைப்படும் சாதனையாகும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் இணைந்து ரூ.338 கோடி செலவில், 12 இலட்சம் சதுர அடி பரப்பில் சென்னை தரமணியில் உருவாக்கி வரும் டைடல் (TIDEL) மென்பொருள் தொழிற் பூங்கா முடிவடையும் தருவாயில் உள்ளது.

### இளைஞர் நலன்

இளைஞர்களை ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திடவும், சிதறிக் கிடக்கும் அவர்கள் ஆற்றலைத் திரட்டிடவும் அவர்களை மன உறுதி படைத்தவர்களாகவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" எனும் சங்க காலப் பாடலை நினைவு கூறும் வகையில் இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்கென தனித்துறையை நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே அறிவியல் முனைப்பு, மத, சமூக நல்லிணக்கம், நல்லொழுக்கம் மற்றும் சமுதாய விழிப்புணர்வை மேம்படுத்தவும், அவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கவும் திட்டங்கள் செயலாக்கப்படும்.

### வருமுன் காப்போம்

மக்கள் நல்வாழ்வுத் துறை மூலமாக மருத்துவர்கள் கிராமங்களை நாடிச் சென்று முகாம் இட்டு ஏழை எளியோர்க்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் செய்கிற வருமுன் காப்போம் திட்டத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்து வருகிறது. தொடங்கப் பட்ட நான்கு மாதங்களில் 21.3.2000 தேதி வரை 1634 முகாம்களில் 17.4 இலட்சம் பேர் பயன் பெற்றுள்ளனர். இதில் சுமார் 88 விழுக்காடு பயனாளிகள் கூலி வேலை செய்யும் ஏழை எளியோர்கள் என்றும்,



இதில் 40 விழுக்காடு பயனாளிகள் பெண்கள் என்றும், 26 விழுக்காடு சிறார்கள் என்றும், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களே இம்முகாம்களினால் பயனடைந்துள்ளனர் என்றும் இத்திட்டத்தினை ஆய்வு செய்ததில் தெரிய வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் பயன் பெறும் வகையில், தமிழ்நாடு முழுவதும் 10,000 முகாம்களை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வரும் நிதி ஆண்டில் ரூ.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### வாழ்ந்து காட்டுவோம்

பெண்களை சமூக பொருளாதாரத் துறைகளில் அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவதற்கு அவர்களை சுய உதவிக் குழுக்களாக அமைத்து, அவர்களுக்கேற்ற சுய வேலை வாய்ப்புப் பயிற்சியும், வசதிகளும் அளிக்கும் திட்டம் இந்த அரசால் 1989-90-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் மகளிர் அடைந்த பயன்களைக் கருத்தில் கொண்டு, 1997-98-ஆம் ஆண்டில் மகளிர் திட்டத்தை செயல்படுத்தி இந்த சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்த முனைந்துள்ளோம். தமிழ்நாடு மகளிர் திட்டம் தமிழகத்தில் சென்னைப் பெருநகரம் நீங்கலாக ஏனைய 28 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சுமார் 24,000 சுய உதவி குழுக்களில் 4 இலட்சத்து 42 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மகளிர்



உறுப்பினர்களாகச் சேர்ந்து, ரூபாய் 32 கோடிக்கும் அதிகமாக சேமித்துள்ளதோடு, இந்தக் குழுக்களுக்கு வங்கிகள் மூலமாக ரூபாய் 97 கோடிக்கும் மேல் கடன் உதவியும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சேமிப்பு திட்டம், மகளிர் தம் அவசர அவசிய செலவுகளுக்காக தனியார் கடன் அளிப்பவர்களை நாடி அதிக வட்டியில் கடன் பெறும் இக்கட்டான நிலைமைக்கு ஆளாகாமல் பாதுகாக்கிறது.

இந்த மகளிர் திட்டங்களையும் மற்றும் ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், விதவைகள் மறுமணத் திட்டம், கலப்புமணத் திட்டம் என்றுள்ள மகளிர் திட்டங்களையும், அவை தனித் தனி துறைகளின் மூலம் நடைமுறைப் படுத்தப்படினும் அனைத்தையும் ஒருங்கிணைத்து (Co-ordinate) முதலமைச்சர் செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் செயல்படுத்தப் படும். இந்த ஒருங்கிணைப்பு திட்டம் "வாழ்ந்து காட்டுவோம்" என்ற பெயரில் இயங்கும். இப்பெரும் திட்டத்திற்காக வரும் நிதியாண்டில் மொத்த ஒதுக்கீடு ரூ.120 கோடியாக இருக்கும்.

### பழங்குடியினர் நலன்

நமது மாநிலத்தில் சுமார் ஆறு இலட்சம் பழங்குடியினர் வாழ் கின்றனர். இதுவரை அவர்களின் மேம்பாட்டுத் திட்டங்கள் அனைத்தும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இயக்ககம் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. பழங்குடியினர் நலனைக் காப்பதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருப்பதாலும், அவர்களின் நலத்திட்டங்களை முனைப்பாக செயல்படுத்த வேண்டியும், பழங்குடியினர் நலனுக்கென ஒரு தனி இயக்ககம் (Directorate) உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.




### சமூகப் பாதுகாப்பு

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் ஆதரவற்ற முதியோர், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற பிரிவினருக்கு, வயதின் அடிப்படையில் வழங்கப்படும் ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 என்பது வரும் நிதி ஆண்டு முதல் ரூபாய் 200 ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்த ஓய்வூதியம் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை வரம்பற்றது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.50 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

### நெசவாளர் நலன்

60 வயதை அடையுமுன் இறக்க நேரிடும் கைத்தறி நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இந்த அரசு வழங்கத் தொடங்கிய காப்பீட்டுத் தொகை நடப்பு நிதியாண்டில் ரூ.35,000-லிருந்து ரூ.40,000 ஆக உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து, வரும் நிதி ஆண்டில் இந்தத் தொகை ரூ.50,000 ஆக உயர்த்தப்படுகிறது. 60 வயதை தாண்டிய நெசவாளர்கள் பயன் பெறும்வகையில் வழங்கப்படும் மாத ஓய்வூதியத் தொகை ரூ.150 என்பது ரூ.200 ஆக உயர்த்தப் படுகிறது.

### பத்திரிகையாளர் நலன்

1996-97-ஆம் ஆண்டு பத்திரிக்கையாளர் ஓய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ.500 லிருந்து ரூ.1000 ஆக உயர்த்தப்பட்டது. பின், கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அவர்களது ஓய்வூதியம் ரூ.1500 ஆக உயர்த்தப் பட்டது. தற்போது அவர்களது கோரிக்கையை ஏற்று அவர்கள் ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.2000 ஆக உயர்த்தி வழங்க முடிவெடுக்கப் பட்டுள்ளது. மேலும், பணிபுரியும் போது பத்திரிக்கை யாளர்கள் இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை ரூ.40,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்த்தி இனி வழங்கப்படும்.

### வீட்டு வசதி

மாநகராட்சிப் பகுதிகளில் ஆட்சேபணை இல்லாத இடங்களில் வாழ்கிற 50,000 குடும்பங்களுக்கு தரமான, தீ பற்றாத கல்நார் தகடுகளாலான கூரை, சுவர் மற்றும் கதவுடன் கூடிய வீடுகள் கட்டப்படும் என்று சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தேன். அதன்படி ரூ.15 கோடி செலவில் 12 ஆயிரம் குடும்பங்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. வரும் நிதி ஆண்டிலும் இத்திட்டம் தொடரப் பட்டு, ரூ.39 கோடி மதிப்பீட்டில், 26 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப் படும்.

### தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டங்கள்

தென்மாவட்டங்களின் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான திட்டங்களை வகுத்தளித்திட நீதியரசர் திரு.இரத்தினவேல் பாண்டியன் அவர்களைத் தலைவ




ராகவும், திரு ஆர்.ஏ.சீத்தாராமதாஸ் அவர்களை துணைத் தலைவராகவும், திரு ஏ.வெங்கட்டராமன் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு அமைக்கப்பட்ட குழு தனது இடைக்கால அறிக்கையை சென்ற மாதம் 28-ஆம் தேதி அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கையின் பரிந்துரைகளையொட்டி பின்வரும் திட்டங்கள் வரும் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்,

இராமாதபுரம், விருதுநகர் மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள்.

நபார்டு உதவியோடு குளங்கள் மற்றும் கண்மாய்கள் புனரமைப்புத் திட்டம்; ஒவ்வொரு கண்மாய்க்கும் பயன்படுத்துவோர் குழு அமைத்து அவற்றின் மூலம் கண்மாய்களைப் பராமரித்தல்.

தோட்டக்கலைப் பயிர் உற்பத்தியை மேம்படுத்த சிறப்புத் திட்டம்

தென்மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் வசதிகளை உருவாக்கி அதன் மூலம் வேலை வாய்ப்பு வசதிகளை பெருக்குதல், மதுரை, திருநெல் வேலி ஆகிய இடங்களில் இந்திய மென்பொருள் தொழில் நுட்பப் பூங்கா (Software Technology Park of India) மூலமாக சர்வதேச இணைப்புகளை ஏற்படுத்துதல்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக இரப்பர் மற்றும் இரப்பர் மர அடிப்படையிலான பொருட்களை உற்பத்தி செய்ய ரூ.14 கோடி முதலீட்டில் இரப்பர் தொழிற்பூங்கா ஏற்படுத்துதல்.

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு நாங்குநேரியில் 2000 ஏக்கர் பரப்பில் ஹை-டெக் தொழில்நுட்பப் பூங்கா.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் துறைமுகத்தினை மேம்பாடு செய்வது தொடர்பாக பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கையை சுமார் ரூ.4.6 கோடி செலவில் மலேசிய அரசு தயாரித்து வருகிறது. இன்னும் சில மாதங்களில் ஆய்வு அறிக்கை பெற்ற பின் குளச்சல் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி அரசு முடிவு எடுக்கும்.

மொசைக் கற்கள், செராமிக் சுவர் மற்றும் தள ஓடுகள் மற்றும் பளிங்குக் கற்கள் ஆகியவற்றிற்கு விற்பனை வரி 20 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்ட முதலாம் அட்டவணை பிரிவு E வரிசை எண் 3ல் உள்ள செராமிக் துப்புரவுக் கலன்கள், வரிசை எண் 5ல் உள்ள இஸ்திரிப்பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்ற வீடு மற்றும் வணிகத்திற்குரிய மின் சாதனங்கள் மற்றும் வரிசை எண் 7ல் உள்ள அனைத்துவகை மின் சக்திக் கருவிகள், உபகரணங்கள், சாதனங்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

முதலாம் அட்டவணைப் பிரிவு E வரிசை எண் 6ல் உள்ள அனைத்து வகை மின் சக்தி பொருட்கள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

உருளைகள் (Bearings) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

மின்னணு பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

நித்தியகல்யாணி இலை மற்றும் வேர், அடிசரக்கு இனங்கள், காது கேட்கப் பயன்படும் கருவிக்கான கம்பி (cord) அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, வணிகச் சின்னமில்லாத காய்கறி வத்தல்கள், தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் மற்றும் பைகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி அறவே நீக்கப்படுகிறது.

அனைத்து கண்ணாடி மற்றும் கண்ணாடி கலன்கள், உலோகப் பூச்சுகள் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டி லிருந்து 12 விழுக்காடாக குறைக்கப் படுகிறது.

பேஜர்கள், செராமிக் கற்கள் (Ceramic Bricks) மற்றும் வெளுப்புத் திரவத்தின் (Bleach Liquid) மீதான விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாக குறைக்கப்படுகிறது.

வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்படுகிறது. ★



# திருவாரூர் மாவட்டத்தில் கணினியின் பயன்பாடு

☐ செ. உமாசங்கர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
திருவாரூர் மாவட்டம்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி அரசுப் பணிகளை விரைவாக செய்வதற்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள நல்ல வளர்ச்சி என்று கூறினால் அது மிகையாகாது. அரசுத் துறையில் மிக அதிக அளவு உள்ள தகவல்களையும் (database) இந்த தகவல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மற்றும் பரிமாற்றங்களை தற்போது மனித ஆற்றலின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் ஓரே பணியினை திரும்ப திரும்ப அரசு அலுவலகங்களில் கைகளினால் எழுத வேண்டியது உள்ளது. இதனால் கால விரயம் ஏற்படுவதுடன் பொது மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவதிலும் சுணக்கம் ஏற்படுகின்றது. மேலும் திட்டங்கள் முழுமையாக சென்றடையாத நிலையும் காணப்படுகிறது. இதனால் பொது மக்களுக்கு அரசு இயந்திரத்தின் மீது ஒரு வித அவநம்பிக்கை ஏற்பட வாய்ப்பு உள்ளது. தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் பல்வேறு சுவைகளை பொதுமக்கள் தற்போது நுகரத் தொடங்கி உள்ளார்கள். Satelite டி.வி. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். இன்று Internet மூலம் பொருட்களை வாங்கவோ விற்கவோ முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. இத்தனை சுவைகளைக் கண்ட பொது மக்கள் அரசுப் பணியில் மட்டும் தகவல் தொழில் நுட்பத்தினை சுவைக்காமல் இருப்பது அவர்களுக்கு ஒரு மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது. இதனை தீர்க்க வேண்டியது நியாயமான ஒன்றாகும். அரசுப் பணிகளை கணினி மயப்படுத்துவது என்பது அரசு அலுவலகங்களில் எழுதப்படும் கடிதங்களை கணினி வாயிலாக அச்சிடுவது (Print Out) என்பது பொருளல்ல. உண்மையான கணினி மயப்படுத்துவது என்பது அரசு அலுவலகங்களில் உள்ள தகவல்களை கணினிக் கோப்புகளாக மாற்றி இந்த கணினிக் கோப்புகளை ஒவ்வொரு நாளும் புதுப்பிப்பதோடு மட்டுமின்றி மென்மேலும் கால மாற்றத்திற்கு ஏற்ப கூட்டி கழித்து மாற்றி அமைத்திட வேண்டியதொன்றாகும். இவ்வாறு மாற்றங்கள் செய்ய இயலாத கணினி தகவல்களால் பயனில்லாமல் போய்விடும். இது போன்று கூட்டுதல், கழித்தல் போன்ற மாற்றங்கள் செய்யும் பணிக்கு தகுதியான மென்பொருள் தயாரித்து வழங்க வேண்டியது அவசியமாகும். அரசுப் பணிகளில் பெரும்பாலான பகுதி தகவல்களைக் கொண்டதாகும். தகவல்களை (data base) கணினி மயப்படுத்துவதே உண்மையான கணினி மயமாக்கலாகும். அப்படி இல்லை என்றால் அரசு அலுவலகத்தில் பொருத்தப்படும் கணினி என்பது ஒரு வேடிக்கை பொருள் என்றே பொருள் கொள்ள வேண்டும். அதன் வழியே கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தால் அது பொதுமக்களுக்கும் பயன் தராது, அரசு அலுவலர்களுக்கும் பயன் தராது. எனவே அரசுத் துறையினை கணினி மயமாக்குவது என்பதை எடுத்துக் கொள்ளும் போது முதன் முதலில் கவனிக்க வேண்டியது இப்பணிகளில் தகவல் கோப்புகள் (Data base content) எவ்வளவு என்பதை கணிக்க வேண்டும். குறைந்த பட்சம் 80% அளவிற்காவது தகவல் கோப்புகள், இருந்தால் அது பொதுமக்களுக்கு நன்மை உடையதாக அமையும்.



அரசுப் பணிகளை கணினி மயமாக்கும் போது இன்னொரு முக்கிய அம்சம்

என்னவென்றால் இக்கணினிக் கோப்புகள் எந்த மொழியில் உள்ளது என்பதாகும். கணினிக் கோப்புகளை முடிந்தவரையில் எந்த மாநிலத்திற்காக உருவாக்கப்படுகிறதோ அந்த மாநில மொழியில், இருப்பது அவசியமாகும். தமிழ் நாட்டில் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டியது அவசியமாகும். கணினிக் கோப்புகள் மட்டும் அல்லாமல் கணினி மென்பொருளும் தமிழில் தோன்றுமாறு அமைத்திட வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் இதனைக் கருத்தில் கொண்டு கணினி மென்பொருள் அனைத்தும் ஆங்கிலம் மற்றும் தமிழில் மாறி மாறி தோன்றும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கணினிக் கோப்புகள் அனைத்தும் தமிழிலேயே வடிவமைக்கப்படுகின்றன.

கணினியில் எந்த ஒரு பணியைச் செய்தாலும் அதனை இரண்டு முறைகளில் செயல்படுத்தலாம். ஒன்று Online முறையில் செயல்படுத்துவது மற்றொன்று Back Office முறையில் செயல்படுத்துவது. Online முறையில் கோப்புகள் அனைத்தும் கணினியிலேயே இருக்கும். கோப்புகள் எதுவும் இருந்தாலும் மிகவும் சொற்ப அளவே இருக்கும். பெரும்பாலும் Online முறையில் பெறப்படும் கணினிக் கோப்புகள் கணினி வாயிலாகவே எடுக்கப்பட்ட அறிக்கைகளாகவே இருக்குமே தவிர காகிதக் கோப்புகளாக இருப்பது மிக மிக அரிது. இவ்வாறு கணினியிலேயே முழுத்தகவல்களும் பரிமாற்றம் செய்யப்படுவதினால் அரசுப் பணிகள் மேற்கொள்ளும் போது அப்பணி மிக இலகுவாகின்றது. எந்த ஒரு முடிவிற்கு வர வேண்டும் என்றாலும் அதனை Online முறையில் கணினி வாயிலாகவே எடுத்துவிடலாம். இது Online முறையின் மிகப் பெரிய நன்மையாகும். இதனால் காலதாமதம் முழுவதுமாக தவிர்க்கப்படும். Online முறையில் ஒரு முடிவு எடுக்கும் பொழுது அதற்கான கீழ் அலுவலர்களின் ஆலோசனைகளை பெற வேண்டும் என்பது எழுவதில்லை. உதாரணமாக 30 நாட்களில் செய்து முடிக்கக்கூடிய பணியினை 3 நிமிடங்களில் Online முறையில் கணினியில் செய்துவிடலாம். Online கணினி நிர்வாகம் என்பது கணினி மயத்தின் உச்சநிலை நிர்வாகம் என்று கூட கூறலாம். ஏன் என்றால் Online கணினி மயமாக்குவதில் நிறைய சிறப்பம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

திருவாரூர் மாவட்டத்தை Online முறையில் நிர்வாகம் செய்திட ஏதுவாக மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் திருவாரூர் மாவட்டத்தில் பெற்ற அனுபவம் மற்றவர்களுக்கும் மிக்க பயனுள்ளதாக அமைந்திட வாய்ப்புள்ளது. உதாரணமாக முதியோர் உதவித் திட்டம் Online முறையில் கடந்த ஒன்பது மாதங்களாக திருவாரூர் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் அளவில் நடைபெற்று வருகின்றது. இந்த Online முறையில் முதியோர் உதவித் தொகை நிர்வகிக்கும் பணி மூலம் வழங்கும் ஒப்பற்ற அனுபவம் திருவாரூர் மாவட்டத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. ஏற்கனவே நிர்வகிக்கப் பட்டு வந்த காகிதக் கோப்புகள் முறை முற்றிலும் மாற்றப்பட்டு முழுவதும் கணினிக் கோப்புகள் முறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு வெகு விரைவில் உத்தரவுகள் கிடைக்கப் பெறுகின்றது.

இதன் முக்கிய அம்சங்கள் என்னவென்றால் வருவாய் ஆய்வர் விசாரணை தவிர வேறு அனைத்துப் பணிகளையும் Online முறையில் தானியியங்கி முறையில் செயல்படுகின்றன. மனுதாரர் எந்த நேரமும் மனுவின் நிலை என்னவென்பதை தெரிந்து கொள்ளலாம். திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கான முதியோர் உதவித் தொகை கோரும் மனுதாரர்களின் விண்ணப்பங்கள் 15 தினங்களுக்கு மேல் நிலுவையில் உள்ளதா என்பதை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமாக தெரிந்து கொள்ள Network முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. பணவிடை அனைத்தும் வட்ட அலுவலகங்களுக்கும் மூன்று அல்லது 4 மணி நேரத்திற்குள் கணினி மூலம் அச்சிடப்பட்டு விடுகின்றது. இதனால் பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் 4 அல்லது 5 தேதிக்குள்ளாக பணவிடையினை பெறுகின்றனர். ஒரு பயனாளி இறந்துவிட்டால் அவருக்கான பணவிடை நிறுத்தத்தினை Online முறையில் செய்திட வசதியுள்ளது. அதே போன்று ஒருவருக்குப் புதிதாக முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டால் அவருக்கு தானியியங்கி முறையில் பணவிடை அச்சிடவும் முகவரி மாற்றம் மற்றும் கணினிக் கோப்பில் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ள வேண்டியிருந்தால் அதனை எளிதாக செய்திடவும் வசதி உள்ளது.

மாணவர்களுக்கு தன் தாய்மொழியில்
எழுதவும் படிக்கவும்
முதலில் கற்பியுங்கள்; அது
அவர்கள் வள வாழ்விற்கு
வழிவகுக்கும்.

**– எச்.ஜி.வேல்ஸ்**

உதாரணமாக விதவைகளுக்கான ஓய்வூதியம் பெறும் மனுதாரர்கள் வயது முதிர்ச்சியின் காரணமாக முதியோர் உதவித் தொகை பெறும் திட்டத்திற்கு மாற்றம் செய்வதற்கும் தானியியங்கி முறையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் முழுவதும் தமிழிலேயே அனைத்து தர நிர்ணய முறைகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது இதன் கூடுதல் சிறப்பு அம்சமாகும்.

வட்ட அலுவலகங்களைத் தானியியங்கி முறையில் செயல்படுத்த Taluk Automation Software (TAS) என்ற மென்பொருள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.12.1999 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்த மென்பொருள் தற்போது திருவாரூர் மாவட்டத்திலுள்ள 7 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சிறப்பான தரக்கட்டுப்பாடுகளுடன் 361 கிராமக் கணக்குகள் Online முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 214 கிராமத்திற்கான கணக்குகள் ஓரிரு வாரங்களில் முழுமையாக இக்கணினி மென்பொருளுடன் இணைக்கப்படும்.



வட்டாட்சியர் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளில் பட்டா மாறுதல் என்பது முக்கியமான பணியாகும். இதுவரையில் பட்டா மாற்றம் செய்வதற்கு அதற்கான விண்ணப்பங்கள் முதலில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களது கருத்துரையினைப் பெற்றபின் வட்ட அலுவலகங்களிலுள்ள பதிவேடுகளில் மாற்றம் செய்யப்பட்டு வந்தது. இதனை மாற்றி தற்போது பட்டா மாறுதல் உத்தரவு கணினிக் கோப்புகள் அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. பொதுமக்கள் எவரேனும் பட்டா மாறுதல் கோரி மனு செய்தால் முதலில் அம்மனு நேரடியாக கணினிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

கணினியில் நிலத்தினை விற்றவரின் பெயரும் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்து கொண்டவரின் பெயரும் அரசு ஆவணங்களில் ஒத்து இருந்தால் ஒருசில நிமிடங்களுக்குள்ளாக பட்டா மாற்ற உத்தரவு கணினிக் கோப்புகள் மூலமாக வழங்கப்படுகிறது. இந்த பட்டா மாற்ற உத்தரவினை அப்பொழுதே ரூ.20 கொடுத்து மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம். பட்டா மாற்ற உத்தரவு தானியியங்கி முறையில் லேசர் பிரிண்ட் மூலம் அச்சிடப்படுகின்றது. இந்த கணினி சேவைக்குத்தான் மனுதாரர் ரூ.20 வழங்க வேண்டி உள்ளது. ஆயினும் பட்டா மாற்றம் கோரி பொதுமக்கள் மனு செய்து கொண்டு மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை மாறி மனு செய்து கொண்ட மறு நிமிடமே ஆவணங்களைச் சரி பார்த்து கணினியில் பட்டா மாற்ற உத்தரவினை பெற்றுக் கொள்ளக் கூடிய இந்த புரட்சிகரமான நிலையினை இந்த Online கணினி நிர்வாக முறை திருவாரூர் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பட்டா மாற்ற உத்தரவினைத் தவிர பட்டா நகலினை எந்த நேரமும் பொதுமக்கள் ரூ.10 செலுத்தி லேசர் பிரிண்ட் மூலமாக தொடர்புடைய வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். இதற்காக லேசர் பிரிண்டர் அனைத்து வட்ட அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவு மேற்கொள்ளுகின்ற போது நிலத்தினை வாங்குபவருக்கு ஏற்கெனவே அந்த கிராமத்தில் சொந்தமாக நிலங்கள் இருந்து அவரது பெயருக்கு பட்டா இருந்தால் அந்த எண்ணையும் பத்திரம் பதிவு செய்கின்ற பொழுதே அவரிடமிருந்து பெற்று வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுப்பும் அறிக்கையோடு சேர்த்து அனுப்புமாறு திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. பொதுமக்கள் நலனுக்காக வட்டாட்சியர் அலுவலகங்களில் இது தொடர்பான அறிவிப்புப் பலகை ஒன்று அனைத்து விவரங்களையும் தெரிவிக்கும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. இம் மென்பொருள் மூலமாக அ-பதிவேடு, அடங்கல் மற்றும் பட்டா நகல்களை எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.




பட்டா மாற்றம் செய்யும் போது பதிவு ஆவணங்களில் நிலத்தினை விற்பனை செய்பவரின் பெயரும் அரசு ஆவணங்களில் உள்ள பெயரும் மாறுபட்டால் அவ்வாறான விண்ணப்பங்கள் விசாரணைக்காக கீழ் அலுவலர்களுக்கு அனுப்பப்படுகின்றது. இவ்வாறு அனுப்பப்படும் நடவடிக்கைகளையும் தானியியங்கி முறையில் கணினி மூலம் அச்சிட்டு அனுப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. விசாரணைக்குப் பிறகும் தானியியங்கி முறையில் உத்தரவுகளைப் பிறப்பித்து ஆணைகளை அச்சிடவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக

வட்ட அலுவலகங்களில் மிக அதிக அளவு காகிதம் செலவிடப்படுவது சாகுபடி பற்றிய விவரங்களை பதிந்து கொள்வதற்குத்தான். இதனால்

சாகுபடி மற்றும் அறுவடை விவரங்கள் முழுமையாக கணினி மயப்படுத்தப் பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு முழுவதும் நடைபெறும் சாகுபடி மற்றும் அறுவடை விவரங்களை கிராம நிர்வாக அலுவலர்கள் தத்தம் கிராமங்களுக்கான கணினிக் கோப்புகளில் பதிவு செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்த உடன் அடங்கல் நகலில் சாகுபடி, அறுவடை மற்றும் புலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரிந்து கொள்ள இயலும். மேலும் அடங்கல் நகலினை பொதுமக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம். அடங்கல் நகலுக்காக விண்ணப்பம் செய்து கொண்டு நாட்கணக்கில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

அதோடு மட்டுமின்றி இந்த மென்பொருள் மூலம் வருடாந்திர கிராம ஜமாபந்தி கணக்குகளைக் கணினி மூலமே தானியியங்கி முறையில் செய்திட வசதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பட்டா மாறுதல், நஞ்சை வஜா கணக்கு, சாகுபடி கணக்கு ஆகிய கணக்குகள் தானியியங்கி முறையில் உருவாக்கிட வசதி செய்யப் பட்டுள்ளது. இவற்றோடு சேர்த்து பி மெமோ, நிலவரி வசூல் ஆகிய கணக்குகள் கணினியிலேயே செயல்படுத்த வசதி செய்யப்பட்டுள்ள தினால் மிக முக்கிய கணக்கான 10 பகுதி 2 (10 Part-II) என்ற கணக்கும் தானியியங்கி முறையில் உருவாக்கிட வசதி செய்யப் பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊரக கிராமக் கணக்கு களையும் கணினி மூலம் இந்த ஆண்டு ஜமாபந்தி நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. உண்மையில் கூறப் போனால் திருவாரூர் மாவட்டத் திலுள்ள கிராமக் கணக்குகளைத் தணிக்கை செய்திட அடுத்த பசலி ஆண்டு முதல் ஜமாபந்தி நடத்திட வேண்டிய அவசியம் ஏற்படாது என்ற நிலை தற்போது உருவாக்கப் பட்டுள்ளது. ஏனென்றால் கணினியில் உள்ளீடு செய்யப்படும் ஒவ்வொரு தகவலும் தானியியங்கி முறையில் தணிக்கை செய்யப்பட்ட பின்னரே உள்ளீடாக கணினியில் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு கணினி மென்பொருளில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது. எனவே விவரங்கள் அனைத்தும் முறையாக தணிக்கை செய்யப்பட்டு விடுவதால் மீண்டும் ஒரு முறை ஜமாபந்தி மூலம் தணிக்கை செய்திட வேண்டிய அவசியம் ஏற்படாது. இதனால் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பெரிய தலை வலியாக இருக்கும் ஜமாபந்தி என்ற முறை இல்லாமலே போய்விடும் பிரகாசமான வாய்ப்பு உள்ளது. இது Online முறையில் கணினி நிர்வாகம் செய்வதன் மூலம் கிடைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய நன்மையாகும். இதன் அடுத்த பயன் என்னவென்றால் நூற்றுக்கணக்கான கிலோ கணக்கில்

> **பழமை என்பதற்காக எல்லாவற்றையும் போற்றும் பழக்கத்தை மாற்றவேண்டும்.**
>
> **– பெர்னார்ட் ஷா**

காகிதம் விரயமாவதை தடுப்பதும் ஆகும். நடப்பாண்டிலேயே புஞ்சை வஜா, நஞ்சை சாகுபடிக் கணக்கு, தண்ணீர் தீர்வை போன்ற கணக்குகளை கணினி மூலம் தயார் செய்து அவற்றை அச்சடிக்காமல் Adobe acrobat என்ற நிரந்தர கணினிக் கோப்புகளாக மாற்றி அதனை CD-Romகளில் பதிவு செய்து வட்டாட்சியர் அலுவலக வைப் பறையில் பாதுகாத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் காகிதம் மிச்சப்படுத்தப்படுவதுடன் கால விரயமாவதும் தடுக்கப்படும்.

இதற்கடுத்தாற்போல் திருவாரூர் மாவட்டத்திலுள்ள நியாய விலைக் கடைகளை Optical Mark Reader என்ற முறையில் திருவாரூர் வட்டத்திலுள்ள 55 கடைகளை சோதனை அடிப்படையில் கணினி படுத்தப்பட்டு 1.10.1999 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு செயல் பட்டு வருகிறது.

இதன் மூலம் அங்காடி விற்பனை யாளரால் கொடுக்கப்படும் OMR விற்பனை ரசீது ஆனது OMR கருவியின் மூலம் கணினியில் உள்ளீடு செய்யப்பட்டு அங்காடிகளில் ஒதுக்கீட்டிற்கு அதிகமாக விற்பனை செய்யப்பட்டிருந்தால் அதனை கண்டுபிடித்திட வசதி செய்யப் பட்டுள்ளது.

இந்த OMR பட்டியலின் மூலம் குடும்ப அட்டைதாரர்கள் முகவரிக்குச் சென்று தணிக்கை செய்து குடும்ப அட்டைகளில் அங்காடி விற்பனை யாளரால் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள் சரிதானா என்று சோதனை செய்திட இயலும். 1.10.1999 முதல் 31.1.2000 வரை அங்காடி விற்பனையாளர்களால் செய்யப்பட்ட முறைகேடுகளை OMR பட்டியல் மூலம் கண்டு பிடித்து இதுவரையில் சுமார் 8 இலட்ச ரூபாய் அபராதமாக வசூலிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியா வசியப் பொருட்கள் முறையாக விநியோகம் செய்யப் படுகின்றதா என்பதைக் கண்காணிக்க முடிவதுடன் அங்காடி தினந் தோறும் திறக்கப்படுகின்றதா என்பதையும் அங்காடிகளிலுள்ள இருப்பு விவரங் களையும் துல்லியமாக தெரிந்து கொள்ள முடிகிறது.

திருமண உதவித் திட்டம் மற்றும் இதர உதவித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி முகமை மூலம் நடைபெறும் பணிகள் வேளாண் கூட்டுறவு வங்கி, கல்வி உதவித் தொகை, சிறு வணிகக்கடன் திட்டம், வட்டார போக்குவரத்து அலுவலகம், சாதி சான்றிதழ், அரசு மருத்துவமனை போன்றவைகளின் பணிகள் கணினி மயமாக்கப் பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு விரைவாக பயன்கள் கிடைக்கிறது. அத்துடன் கணினி மயமாக்கப் பட்டதால் மனுநீதி நாளில் பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக செயல்பட்டு குறைதீர்க்க முடிகிறது.

எனவே ஏராளமான நன்மைகளை இந்த கணினி மயமாக்கலால் திருவாரூர் மாவட்ட மக்கள் பெற்று வருகின்றனர்.

★ ★ ★



# திருவள்ளுவர் தமிழகத்தின் முதல் புரட்சியாளர்

உலக மக்கள் உயர்ந்த நெறியில் வாழ்ந்து இன்பம் பெறுவதற்காக வழிவகைகளை வகுத்துக் கூறியவர் திருவள்ளுவர். அவர் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அவருடைய ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா இன்று தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. தமிழ் மக்கள் அவரை என்றும் போற்றிப் புகழக் கடமைப்பட்டுள்ளனர். வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் பெற்றுள்ளோம் அன்றோ!

கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியர் பிறமொழித் தாக்குதலால் தமிழ் அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தினார். திருவள்ளுவர், அயல் மக்கள் செல்வாக்கால் தமிழ்ப் பண்பாடு அழிந்து போவதைத் தடுத்து நிறுத்தினார். தமிழ் மக்களின் பழைய பண்பாட்டில் காணப்பட்ட நல்வாழ்வுக்குப் பொருந்தாதவைகளையும் களைந்தெறிய அறிவுரை கூறியுள்ளார்.

புரட்சி என்பது மக்கள் வாழ்வில் காணப்படும் பொருந்தாத மூட நம்பிக்கைக் கொள்கைகளை எதிர்த்துப் போர் முழக்கம் செய்து மாற்றி அமைக்க முயலுவதே ஆகும். பழமையைப் புரட்டிவிட்டு, அகற்றிவிட்டு - புதுமையைப் புகுத்துவதுதான் புரட்சி. புரட்சி என்றால் பூசலும் போரும், கொள்ளையும், கொலையும் தோன்றுமென்று கருதலாம். மேல்நாடுகளில் அவ்வாறுதான் புரட்சிகள் நடந்துள்ளன. ஆனால் திருவள்ளுவர் செய்துள்ளது எண்ணப் புரட்சியாகும். எண்ணமே செயலின் அடிப்படையாகும். அதனால் செயலின் தாய் எண்ணம் என்பர் மேனாட்டார்.



எண்ணம் திண்ணியதாக உருவானால் செயல்தானே தோன்றிவிடும். எண்ணம் தோன்றுமிடம் மனம். அம்மனம் தூய்மையாக இருக்க வேண்டுமென்று வள்ளுவர் கூறுவதே ஒரு புரட்சியாகும். மனம் தூய்மையாக இருத்தலே அறம் என்கின்றார். மனம் தூய்மையற்று என்ன நற்செயல்கள் செய்தாலும் அவை பயன்படா. வெறும் ஆர்ப்பரவ வேட்கைக்கு உரியனவாகிவிடும். மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்; ஆகுலநீர பிற என்பதை நோக்குமின்.

எவ்வகையினும் சாதியாலோ நிறத்தாலோ பொருளாலோ, வேறுபாடு அற்று வாழ்ந்த தமிழ் மக்களிடையே சாதி வேறுபாடுகள் புகத்தொடங்கின. அச்சாதி வேறுபாடுகள் இன்றும் அகன்றுவிடவில்லை. மக்களை அலைக்கழித்து வருகின்றன. வள்ளுவர் அன்றே பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றார்.

பிறப்பால் உயர்வு தாழ்வு பேசுதல் பேதமை. ஒழுக்கத்தால் உயர்ந்தோரே நல்ல குடியில் பிறந்தோர் ஆவார். ஒழுக்கக்கேடர்களே இழிந்த பிறப்பினர் ஆவார்கள். ஆதலின் ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும் என்று இடித்துரைத்தார். ஒழுக்கத்தால் உயர்வுபடுத்தும் நெறி வெற்றி பெற்றிருக்கு மேல், இன்று நாட்டில் பூசல்கள் தோன்றுமா? ஒழுக்கம்

• சி. இலக்குவனார்

உடையாரை ஒதுக்கிப் புறக்கணிப்பதனால் அன்றோ இன்று எங்கு நோக்கினும் பூசற் களமாகக் காணப்படுகின்றது. மக்களாட்சி வெற்றிபெற வேண்டுமென்றால் ஒழுக்க முடையோர் உயர்ந்தோராகக் கருதப்பட்டு உயர்வாகப் போற்றப்படுதல் வேண்டும்.

மக்களில் கல்விப்பேறு அடைதற் குரியவர் சிலரே என்றனர். சில நாடுகளில் படிப்பவர் வேறு உழைப்பவர் வேறு என்று வகைப்படுத்தினர். உயர்ந்தோரே படித்தல் வேண்டும் உழைப்பவர் படித்தல் வேண்டாம் என்றும் விதியாக்கினார். ஆனால் வள்ளுவர் கூறியது என்ன? கல்வி அனைவர்க்கும் பொது; கண்கள் அனைவர்க்கும் இயல்பாக உரியன; அது போலக் கல்வியும் எல்லார்க்கும்



உரியதாகும். கண்களோடு பிறத்தல் போலக் கல்வியோடு வளர்தல் வேண்டும். கண்ணில்லாது வாழ முடியாதது போல் கல்வியில்லாதும் வாழ முடியாது. கல்வி பெறாதிருத்தல் பெருங்குற்றம். பெற முடியாது தடுத்தல் அதனினும் பெருங்குற்றம். கல்வியைப் பறிப்பது கண்ணைப் பறிப்பது போலாகும் என்று கல்வி, கல்லாமை என்னும் இயல்களில் தெளிவுறக் கூறியுள்ளார். எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு என்று கூறுவதில் ஒரு புரட்சியையும் செய்துள்ளார். கல்வி என்றால் வெறும் காப்பியங்களை மட்டுமோ இலக்கண நூல்களை மட்டுமோ கற்றல் அன்று. அறிவியலை (எண்)யும், கலை (எழுத்து)களையும் ஒருவர் கற்றால்தான் முழுமைக் கல்வியாகும் என்கிறார். இரு பகுதிகளையும் கற்பவர் தாம் மக்களாக வாழ்வர். பிறர் மாக்களாகி விடுவர் என முன்னறிவுப்புக் கொடுத்துள்ளார்.

ஒருவனுடைய ஏற்றத்தாழ்வு அவன் போன பிறவியில் செய்துள்ள புண்ணிய பாவங்களுக்கேற்பவே உண்டாகும். சிலர் பல்லக்கில் (அக்காலத்தில் மகிழ் உந்து இல்லை) ஏறிச் செல்லுகின்றனர் என்றால் அவர்கள் போன பிறவியில் புண்ணியம் செய்தவர்கள் ஆவார்கள்; அதனைச் சுமந்து செல்பவர்கள் போன பிறவியில் பாவம் செய்தவர்கள் ஆவார்கள் என்று கூறி வந்தனர். இக்கூற்று மிகமிகக் கொடியது; உண்மைக்கு மாறுபட்டது. இன்று காண்கின்றோம், அறஞ்சாரா நெறியில் அளவுகடந்து பொருளீட்டியவர் அழகார்ந்த வியன் உந்தில் ஆர்ப்பரவுடன் செல்கின்றார். அறநெறி கோடாது வாழ்கின்றவர் அடக்கமாக நடக்கின்றார். வியன் உந்தில் வீறு தோன்றச் செல்லுகின்றவர் புண்ணியம் செய்தவர் என்றும், கால்நோவ நடந்து செல்லுகின்றவர் கடும் பாவம் செய்தவர் என்றும் கழறுதல் பொருந்துமா? பொருந்தாது அன்றோ? ஆகவே திருவள்ளுவர் அறத்தாறு இதுவென வேண்டா; சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை எனச்சினந்து உரைத்தார். இதன் உண்மைப் பொருள் : பல்லக்கில் ஏறியிருப்பவரையும் அதனைச் சுமந்து செல்பவரையும் காட்டி இது தான் அறவழியென்று கூறற்க என்பதாகும். பிற்காலத்தார் அவ்வுண்மைப் பொருளை மறைத்து வேறு வகையாகக் கூறிவிட்டனர். ஏனெனில் உண்மைப் பொருளை அறிந்த மாந்தர் பல்லக்கில் செல்லுபவரை வாளா விட்டுவிட மாட்டார் என்று அஞ்சியே ஆகும். உண்மைப் பொருளுணரின் பல்லக்கில் செல்லுபவரைக் கீழே இறக்கிப் பல்லக்கைச் சுக்கு நூறாக உடைத்துத் தள்ளி விடுவரன்றோ.

கொடுத்தல் நன்று தான். ஆனால் ஆளறிந்து கொடுக்க வேண்டும். சிலருக்குக் கொடுத்தால் தான் வீடு பேறு கிட்டும். வேறு சிலருக்குக் கொடுத்தால் நரகம் தான் கிட்டும் என்றனர். கொடுத்தலால் வீடு அடைதல் போன்றே பெறுதலாலும் வீடு அடையலாம் என்ற கொள்கை பரப்பப்பட்டு வந்தது. ஆனால் பழந்தமிழர் கொள்கையோ இதனின்றும் வேறுபட்டது. ஈயென இரத்தல் இழிந்தது; ஈயேன் என்றல் அதனினும் இழிந்ததாகும்; கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தது; கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்ததாகும். இவ்வாறு கூறி ஒழுகி வந்தனர் பழந்தமிழர். திருவள்ளுவர் இத்தமிழ்க் கொள்கையில் ஊறி முதிர்ந்தவர். ஆகவே அவர் கூறினார், நல்லாறு எனினும் கொளல் தீது; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று. பிறரிடம் ஒன்றைப் பெறுவது சிறந்த வாழ்வு நெறியாகும் (யாசகம் புருட இலட்சணம்) என்று சிலர் கூறினாலும் பிறரிடம் ஒன்றைக் கொள்ளுதல் கொடுங்குற்றமே. கொடுப்பதனால் வீடு கிட்டாது எனத் தெரிந்தாலும் கொடுத்தலே நல்ல செயலாகும்.



வீடு (மோட்சம்) கிட்டாது என்றாலும் கொடு; வீடு கிட்டுமென்றாலும் வாங்காதே என்பது எத்தகைய புரட்சிக் கொள்கையாகும் என்பதை எண்ணுமின்!

வேள்விகளைச் செய்து ஆற்றலைப் பெறலாம். அடைதற்கரியனவற்றை அடையலாம் என்ற கூற்றில் மயங்கி வேள்வியை அறியாத் தமிழ் நாட்டில் வேள்வி செய்தலைப் பெருங்கடனாகச் செய்தனர் சிலர். தமிழரசர்களில் சிலர் எளிதில் எதையும் பெறலாம் என்று எண்ணி வேள்விகளைச் செய்வதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தனர். பல வேள்விகளைச் செய்த அரசர்க்குப் பல்வேள்விசெய்தோன் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது. பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்பதே சான்றாகும்.

அவ்வேள்விகளில் ஆடு மாடு குதிரைகளைக் கொன்றனர். மக்கள் நலன் அடைய மாக்களைக் கொல்லுதல் அறமாகுமா? பேரருளாளர் வள்ளுவர் தம் எதிர்ப்புக் குரலை எழுப்பினார். அரச சீற்றத்திற்கு ஆளாவோமே என்று அஞ்சினார் இலர். அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று என ஓங்கி முழங்கினார். வேள்விகளைச் செய்யாதே; வீணில் உயிரைக் கொல்லாதே என்பது வியத்தகு புரட்சி அன்றோ? வேந்தரை எதிர்ப்பது அக்காலத்தில் சாகும் தண்டனைக்கு ஆட்படுத்துமே!

மாந்தர்களில் பலர் மனத்தின்கண் மாசு கொண்டு புறத்தில் மாண்புடையார் போன்று நடித்துப் பொய்க் கோலம் பூண்டு வாழ்ந்து வருகின்றனர். வள்ளுவர் காலத்திலும் வாழ்ந்தனர். இவர்கள் பொதுமக்களை ஏமாற்றித் தம் வலைக்குள் சிக்க வைத்துத் தாம் எண்ணியபடி ஆட்டி வைத்தனர். அவர்களால் பூசனையும் பொருளும் பூவையரும் பெற்றனர். அணிந்திருந்த வேடத்திற்கும் துணிந்திடும் செயலுக்கும் பொருத்தமின்றி ஒழுகி வந்தனர். வஞ்ச மனத்தினராய்க் கரவொழுக்கம் பூண்டு வாழ்வதைக் கண்டு அவர்களின் ஐம்பூதங்களும்கூட அகத்தே நகா நிற்கும். அக்காலத்தில் துறவிகட்கு மக்களிடையே நல்ல செல்வாக்கு இருந்தது. துறவிகள் கடவுளைவிட உயர்ந்தவராகக் கருதப்பட்டனர். உண்மைத் துறவிகள் மக்களுக்காக உயிர் வாழ்ந்ததனால் அத்தகைய மதிப்பை அவர்கள் பெற முடிந்தது. எங்கு மதிப்பும் மாண்பும் கிட்டுகின்றனவோ அங்குக் கயவர்கள் புகுவர் அன்றோ? ஆதலின் துறவிகளின் கூட்டத்திலும் கயவர்கள் புகுந்தனர். துறவிகள் போல் உருக்கொண்டனர். அக்காலத் துறவிகளில் சிலர் தலைமயிரை நீளமாக வளர்த்துச் சடையாகப் பின்னி, முடியாகக் கொண்டிருந்தனர். சிலர் தலை மயிரைப் போக்கி மொட்டையாக இருந்தனர். உண்மைத் துறவிகள் தலைமயிரால் அழகு செய்து கொள்ள விரும்பிலர். தலைமயிரைப் பேணாது விடின் சடையாய்ப் பின்னலுறுவது இயல்பு. இதனைப் பொருட்படுத்தாது வாழ்ந்தனர் சிலர். சடைமுடித் தொல்லையைத் தாங்க இயலாதவர்கள் தலைமயிரைக் களைந்து கொண்டனர். இவர்களே மொட்டையாகக் காட்சி அளித்தவர்கள்.



கரந்துறை மாந்தர்கள் - துறவிகள் இவ்வாறு இருப்பதனால் தான் மதிப்புப் பெறுகின்றனர் என்று கருதினர். அவர்களில் சிலர் தலைமயிரைச் சடையாக வளர்த்தனர். சிலர் மழித்துக் கொண்டு மொட்டையாயினர். துறவிகள்போல் தோற்றம் கொண்டு நடித்ததனால் பொதுமக்கள் மயங்கி அவர்களைப் பூசித்துப் பொன்னும் பொருளும் அளித்துப் போற்றினர். அவர்களோ போலித்துறவிகள். தவம் மறைந்து அல்லவை செய்தனர். பெற்றம் புலித்தோல் போர்த்திப் பசும் பயிரை மேய்வது போல் அஞ்சத்தகும் வடிவம் பெற்றுத் துறவி போல் காட்சி அளித்து நெஞ்சில் துறவாது படிற்றொழுக்கம் கொண்டிருந்தனர். திருவள்ளுவர் அவர்கள் வாழும் முறையைக் கண்டு வெறுப்புற்றார். இத்துறவிகளை, அவர்களுடைய செல்வாக்கினைக் கண்டு அஞ்சாது எதிர்க்கத் தொடங்கினார். மன்னரினும் வலிமை வாய்ந்த அவர்களைக் கண்டு வள்ளுவர் அஞ்சினார் இலர். உலகம் - உயர்ந்தோர் - பழிக்கும் குற்றங்களை நீக்கி வாழ்ந்தால் அ∴தே உயர்ந்தோர் ஆக்கும்; சடையை வளர்த்தலும் மொட்டையடித்தலும் எதற்கு? என்று அவர்களை நோக்கி அறைகூவல் விடுத்தார் மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்.



மகளிரின் உயர்வுக்காகப் போராட்டம் தொடங்கிய முதல் புரட்சியாளரும் வள்ளுவரே. பெண்களின் சமநிலைக்காக அவர் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் என்றும் பொன் போலப் போற்றத்தக்கன. மனைவியை வாழ்க்கைத் துணை என முதல் முதலாக அழைத்தவரும் அவரே. கணவனும் மனைவியும் நண்பர் போன்று வாழ்தல் வேண்டும் என்று கட்டுரைத்தவரும் அவரே. ஆண் மகனுடைய ஒழுக்கத்திற்குப் பெண்மகளை எடுத்துக்காட்டாகக் கூறியவரும் இப்பெரியாரே. ஒருமை மகளிரே போல் பெருமையும் தன்மைத்தான் கொண்டொழுகின் உண்டு என்பதை நோக்குக. இல்லவள் மாண்பானால் இல்லது என் என்று எல்லாம் மனைவியால் தான் என மகளிரை உயர்த்திக் கூறினார். இவ்வாறு மகளிரை உயர்வுபடுத்தும் வள்ளுவர் மகளிரைச் சிறுமைப்படுத்தினால் வாளாயிருப்பாரா?

சிலர் தம் மனைவியின்பால் ஐயங்கொண்டு தாம் இல்லாத காலத்தில் கெட்டுவிடுவாள் என்று அஞ்சி, தம் இனிய நல்வாழ்வுத் துணையைக் காவலுக்கு ஆட்படுத்தினர். வீட்டினுள் பூட்டி வைத்தனர். மகளிர் விரும்பின் எக்காவலையும் கடந்து எதனையும் செய்யும் ஆற்றலுடையவர். இதனை அறியாது ஏன் அவர்களைச் சிறுமைப்படுத்திச் சிறையிட வேண்டும்? அவர்கள் உள்ளத்தை அறிந்து உள்ளம் ஒன்றுபட வாழ முற்படின் அவர்களே தம்மைக் காத்துக் கொள்வர். ஆதலின் திருவள்ளுவர் ஆடவரை நோக்கிச் சிறைகாக்கும் காப்பு என்ன செய்யும்? மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை என்று கழறினார்.

மக்கட் பேறு எதற்கு? என்ற வினாவுக்கு விடையாகப் பரிமேலழகர் கூறுகின்றார் : புதல்வரைப் பெறுதல், அஃதாவது இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும் தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லாது இறுக்கப்படாமையின், அக்கடன் இறுத்தற் பொருட்டு நன்மக்களைப் பெறுதல். ஆகவே மக்களின் கடன் தென்புலத்தார்க்குக் கடன் செலுத்துதல் ஆகும் என்று நம்பி வந்தனர் என்று தெரிகின்றது. தென் புலத்தார் என்பவர் பிதிரர் ஆவார். படைப்புக்காலத்து அயனால் படைக்கப்பட்டது கடவுட்சாதி. அவர்க்கிடம் தென் திசையாதலின் தென் புலத்தார் என்றார். இவ்வாறு கூறுபவர் பரிமேலழகர். பிதிரர் என்பார் இறந்து போன முன்னோர் அல்லர் என்பது அவர் கருத்து. ஆனால் பெற்றோர் இறந்து போனால் அவரை நினைத்து அவர் தாம் பிதிரர் என்று கருதி அவர் தம் மக்கள் அவர் இறந்த நாளில் புரோகிதரை அழைத்துப் பொன்னும் பொருளும் கொடுக்கின்றனர். இதனை, திதி, திவசம், சிரார்த்தம் என்றெல்லாம் அழைப்பர். மக்கள் தம் தந்தைக்குச் செய்யும் கடன் இதுதான் என்று, இன்றும் பலர் கருதுகின்றனர். ஆனால் வள்ளுவரோ இதனை ஏற்றுக் கொண்டார் இலர். வெளிப்படையாகவே மறுத்துள்ளார். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல் என்று முழங்கினார். மகன் தந்தைக்குச் செய்யும் கடனாவது எல்லா வகையாலும் சிறந்து விளங்கும் இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன தவம் செய்தானோ? என்று உலகத்தார் சொல்லும் சொல்லை உண்டாக்குதல் ஆகும் என்பது இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்துமன்றோ?

இவ்வாறு பல புரட்சிகளைத் திருவள்ளுவர் ஆற்றியுள்ளார். ஊன் உண்ணுதலை எதிர்த்தார். கள் உண்ணுதலைக் கடிந்தார். கவறாடுதலை இகழ்ந்தார். இவர் செய்துள்ள புரட்சிகளை விரிப்பின் பெருகும். இவரைத் தமிழகத்தின் - ஏன் உலகத்தின் முதற்புரட்சியாளர் என்று வாயார வாழ்த்தி நெஞ்சார நினைந்து அவர் வழிமுறைகளில் வாழ்ந்து அவருக்கு நன்றி செலுத்துவோமாக!

நன்றி : குறளமுதம்
வெளியீடு : தமிழ் வளர்ச்சித்துறை

★ ★ ★



# சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலும் கணினிப்புரட்சி!

## வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகிறது தஞ்சை மாவட்டம்

மனித சமூகம் தோன்றிய நாள்தொட்டு, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினை படிப் படியாகக் கொண்டு முன்னேற்றப் பாதையில் நடைபோட்டு வருகின்றது. இயற்கையையும் அதன் பல்வேறு கூறுபாடுகளை ஒரு காலத்தில் பார்த்து அஞ்சிய மனித சமூகம் இயற்கையின் போக்கையே வெல்லுகின்ற திறம் பெற்றதை விஞ்ஞான வளர்ச்சி நினைவூட்டுகின்றது.

''அகிலத்தை மாற்றிய ஐந்து சிந்தைகள்'' (Five Ideas that changed the World) என்ற அற்புதமிகு நூலை வரைந்திட்ட - பார்பாரா வார்டு (Barbara Ward) என்ற அற்புதமிகு எழுத்தாளர், இலண்டன் ஒலிபரப்பு நிறுவனத்தின் ஆளுநராக இருந்த பெருமைமிக்க பெண்மணி, ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார்.

''மனித இனம் எண்ணவோட்டத்திற்கும், கற்பனைத் திறனுக்கும் முழுமையாக ஈடுகொடுக்கும் வகையில் வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக்கிறது'' (For the first time in History Human beings have resources almost to match their imagination) என்று குறிப்பிடுகின்றார்.

கணிப்பொறி வளர்ச்சியும் நிர்வாக செயல்பாட்டின் பிரிவுகள் கணினி மயமாகும் நிலையும் இந்த கருத்திற்கு வலு சேர்க்கின்றன என்றால் மிகையாகாது.

நிர்வாகத்தில் தூய்மை, செயல்பாட்டில் தேக்கமற்ற நிலை, எதிலும் ஒளிவு மறைவற்ற தன்மை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, ஒவ்வொரு துறையிலும் கணிப்பொறியின் அவசியத்தை நிலை நிறுத்தும் வகையில் திட்டங்களை வகுத்து தமிழக முதல்வர் சீரிய முறையில் அவற்றிற்கு வடிவம் தருகின்றார்கள்.

''சொற்புதிது, பொருள் புதிது, சுவை புதிது'' என்றார் பாட்டுக்கொரு புலவர், பாரதியார்.

''திட்டம் புதிது, செயல்படுத்தும் முறை புதிது, மக்கள் பெறும் பயன் மிகுதி'' என்று சொல்லத்தக்க வகையில், தமிழ்நாட்டில் திட்டங்கள் பலவற்றை முதல்வர் செயல்படுத்தி வருகிறார்கள்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுர திட்டம், வாழ்வொளித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், கால்நடை பாதுகாப்புச் சிறப்பு திட்டம் - இப்படி சீர்மிகு திட்டங்களைத் தந்த முதல்வர், கணிப்பொறியின் பயன்பாடு எல்லாத் துறைகளிலும் வரவேண்டும் என்று எண்ணி, வழிவகைகள் கண்டு, புதுயுகம் நோக்கி தமிழகத்தை வழிநடத்திச் செல்கிறார்கள்.

இது கணினிமய யுகம் (This is the Age of Computerisation) என்று சொல்லத்தக்க வகையில், நிகழ்ந்திடும் அறிவியல் அமைதிப் புரட்சியில் - ''தண்ணீரும் காவிரியே தார்வேந்தனும் சோழமன்னனே'' என்ற புகழோவியத்திற்கு நிலைக்களனாக விளங்கிடும் தஞ்சைத் தரணி பங்கேற்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

தமிழக அரசின் திட்டங்களும், திட்டங்களின் பயன்களும் பொதுமக்களை விரைவாகவும், இடர்பாடு ஏதுமின்றி சிந்தாமல் சிதறாமல் சென்றடைய வேண்டும் என்ற முதல்வரின் எண்ணம் ஈடேறும் வகையில் - முதற்கட்டமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள



☐ டாக்டர் மு. இராசாராம், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.

8 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கணினிகள் நிறுவப்பட்டு, கடந்த 20-2-2000 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகம் கணினிமயமாக்கல் திட்டம், சிறப்பம்சம் பலவற்றை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள கணினிகள், தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தலைமை கணினியுடன் மிக விரைவு இணையம் (High Speed Net Work) மூலம் இணைக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம் செய்தி மற்றும் தகவல் பரிமாற்றம் எளிதாக்கப்பட்டுள்ளது.

மிக விரைவு இணையம் நேரடியாக செயற்கைக்கோள் (Satellite) உதவியுடன் உயர் தகவல் பரிமாற்ற சாதனங்களுடன் இணைக்கப்படுவதால், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களும் இண்டர்நெட் (Internet) வசதி பெற்றுள்ளது.

இத்தகைய மிக விரைவு இணையத்தினை வட்ட அளவில் முதன் முதலில் பெற்ற பெருமை, இந்திய நாட்டிலேயே தஞ்சை மாவட்டத்தைச் சாரும் என்பது குறிப்பிடத் தக்க உண்மையாகும்.

வட்ட அளவில் அமைந்த மிக விரைவு இணையத்தின் மூலம், அரசின் திட்டங்கள் குறித்த விவரங்களையும் அதற்கான விண்ணப்பங்களையும் மக்கள், வட்டாட்சியர் அலுவலகங்களில் விரைவாக பெற்றிடும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், 'அ' பதிவேடுகள், சிட்டா பதிவேடுகள், நில ஆக்கிரமிப்பு, அடங்கல், பட்டா மாற்றம், நில ஒப்படை மற்றும் நில உடமை தொடர்பான பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் பிரிவிலிருந்து பெறப்பட்ட மனுக்கள், முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் பயன்பெறுவோர் விவரம், குடிமைப் பொருள் வழங்கும் திட்டம், சம்பளப்பட்டியல் தயாரித்தல், அரசு அலுவலர்களின் பணிப்பதிவேடுகள் பராமரித்தல் அறிக்கைகளை கூடிய வரை படிவங்கள் வடிவில் கணினி மயமாக்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தில் செயல்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளுக்கான மென்பொருள் (Software) மாவட்ட தேசிய தகவலியல் மையத்தினால் தயாரிக்கப்பட்டு ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்தது.

> ஒரு பூவைப் போல்
> சப்தமில்லாமல் கொடு
>
> ஒரு விளக்கைப் போல்
> பேதமில்லாமல் கொடு
>
> உன்னிடம் உள்ளது
> நதியில் உள்ள நீர்போல்
> இருக்கட்டும்
>
> கொடு
> நீ சுத்தமாவாய்
>
> கொடு
> நீ சுகப்படுவாய்
>
> கொடு
> அது உன் இருத்தலை
> நியாயப்படுத்தும்.
>
> ● கவிக்கோ அப்துல் ரகுமான்

தற்போது இப்பணி வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது

தஞ்சாவூர் மாவட்டத்தில் 906 கிராமங்களில் 'அ' பதிவேடு மற்றும் சிட்டா பதிவுகள் பதிவு செய்யப்பட்டு, பட்டா மாற்றம் மற்றும் சிட்டா நகல் வழங்குதல் போன்ற பணிகள் கணினி மூலம் செயல்படுத்தப் படுகின்றது.

வட்டாட்சியர் அலுவலகங்களைக் கணினிமயமாக்கும் இந்த உன்னத திட்டத்தினை கடந்த 20-2-2000 அன்று திருவையாறு திருநகரில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள கணினி அமைப்பின் செயல்பாடு, பயன்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்திட அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணனின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக்குழு தஞ்சாவூர், பாபநாசப் வட்டாட்சியர் அலுவகங்களில் அமைக்கப்பட்டுள்ள கணினி மையத்தினை பார்வையிட்டு பாராட்டு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து சுமார் 20 இலட்ச ரூபாய்



பெறப்பட்டு, தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கணினி மையம் அமைக்கப் பட்டுள்ளது.

மேலும், வட்டாட்சியர் அலுவலகங்களில் நிலப்பதி வேடுகளை கணினிமயமாக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதித்த ரூ.15 இலட்சத்தை பயன்படுத்தி வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி அறைகள், குளிர் சாதனை வசதிகள், தடையில்லா மின் வழங்கி சாதனங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினி அமைப்பினை செம்மையாக செயல்படுத்துவதற்கு ஏதுவாக 60-க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வருவாய்த் துறையில் கணினி மைய திட்டம் செயல்வடிவம் பெற்றதை தொடர்ந்து வளர்ச்சித் துறையிலும், இந்த அதிநவீன அறிவியல் தொழில்நுட்ப கதிரொளி பாய்ந்து பரவத் தொடங்கியுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாய தகவல் மையம் அமைப்பதற்கான கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது. இந்த தகவல் மையங்களில் கணினி அமைப்பு பணி தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் மூலம் ஊராட்சி ஒன்றியத்தில் இருந்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினை தொடர்பு கொள்ளவும், தகவல் பரிமாற்றம் மேற்கொள்ளவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு பணிகள் அவற்றின் ஒட்டுமொத்த தொகுப்பான மக்கள் சாசனம், மாவட்டம் குறித்த பொதுதகவல், சமத்துவபுரம் மற்றும் சுற்றுலா மையங்கள் குறித்த விவரம் ஆகியவற்றை கணினியில் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்ணாப் பல்கலைக்கழக தொலைநோக்கு ஆய்வு மையத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஊராட்சி வள ஆதார தகவல் அமைப்பு குறித்த புள்ளி விவரங்கள் அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சையின் நகராட்சி குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியங்களிலும் 2 அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டு கணிப்பொறி இயக்கம் தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கணினியாக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்தவும், அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு ஆலோசனை வழங்கி செம்மைப்படுத்தவும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், வருவாய் மற்றும் வளர்ச்சித் துறை அலுவலர்கள், மாவட்ட தகவலியல் அலுவலர் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளார்கள்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் செயல்படுத்தும் கணினியாக்கத் திட்டமும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் உருவாக்கப்படும் கணினி சமுதாய தகவல் மையமும் தஞ்சை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு புதிய ஆக்கம் தரும் என்பதில் ஐயமில்லை.

இன்றைக்கு படித்துக் கொண்டிருக்கிற இளம் மாணவர்கள் எதிர்காலத்தில் வேலை தேடி அலையும்போது வேலைக்கு எடுத்துக் கொள்வோர் அவர்களிடம் கேட்கின்ற முதல் கேள்வி ''உனக்கு கம்ப்யூட்டர் (Computer) தெரியுமா என்பதாகத்தான் இருக்கும். வளர்ந்துவரும் விஞ்ஞான உலகத்தில் கம்ப்யூட்டர் சாதனம் மிக அவசியமான ஒன்றாகிவிட்டது'' என்று குறிப்பிட்ட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பினை துவக்க ஆணை பிறப்பித்து, முதற்கட்டமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 36 மேல்நிலைப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு, 1173 மாணவ-மாணவிகள் கணிப்பொறி பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இதைப் போன்று, நகராட்சிகளில் பிறப்பு, இறப்பு விவரங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு மக்களுக்கு பயன்தரும் வகையில் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முதியோர் ஓய்வூதியத் திட்டம், உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்கான நிதி உதவி வழங்கும் திட்டம், அரசு ஊழியர்களுக்கான வீட்டுவசதி கடன் வழங்கும் திட்டம், வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்டங்கள், பிற சமூக நலத் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் பயன்பெறுவோரின் விவரம், வழங்கப்படும் உதவிகள் ஆகியவை குறித்த விவரங்களையும் கணினி அமைப்பில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரலாற்றாசிரியர்கள் காலத்தை வகைப்படுத்தும்போது (From Adam Age to Atomic Stage) என்று குறிப்பிடுவார்கள். ''ஆதாம் காலத்திலிருந்து அணுயுகம் வரை'' என்பது அதன் பொருளாகும். ஆனால் இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சியின் உயர்ந்த நிலையாக, நவீனயுகத்தின் அடையாளமாக கணினியுகம் கருதப்படுகிறது. அப்படிப்பட்ட கணினி மயமாக்கல் திட்டத்தில், தஞ்சை மாவட்டம், சிறப்பான வளர்ச்சி பெற்று, குறிப்பிடத்தக்க சாதனை படைத்து பெருமை அடைந்துள்ளது.

''அலுவலகங்களைப் புதுமையாக கணினி மயமாக்கும் முயற்சி தஞ்சாவூர் மாவட்டத்தில் முன்னோடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரை நான் பெரிதும் பாராட்ட விரும்புகிறேன்''

– என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருவையாற்றில் நடைபெற்ற விழாவில், தஞ்சை மாவட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகங்களில் உருவாக்கப்பட்டுள்ள கணினி அமைப்பினை துவக்கிவைத்து பேசும்போது குறிப்பிட்டார்கள் என்றால், இந்த வகையில் இம்மாவட்டம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு சான்று பகர வேறென்ன வேண்டும்? □

# தமிழகச் சுற்றுலாத் தலங்கள்

தமிழ்நாடு -
தமிழர்களின் தாயகம்.

தமிழ் - மிகப் பழமையான, மிக வளர்ச்சி பெற்ற இந்திய மூத்த மொழிகளுள் ஒன்று.



தனித்தன்மை வாய்ந்த இனப்பெருமை கொண்டதே இந்த மண். எனினும் இந்தியப் பண்பாடுகளோடு இரண்டறக் கலந்து நிற்கும் ஒரு பகுதியாக, மாபெரும் நாகரிகத்தின் கனிச் சோலையாக இம் மாநிலத்தின் வரலாறு மணம் வீசிக் கமழ்கிறது.

தமிழ்நாடு - கோவில்கள் மலிந்த கலைக்கோட்டம், இங்கே ஆயிரக்கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள் அந்தந்தக் கால நிலையை, சிற்பக் கலையின் எழிலை, தங்களை எழுப்பிச் சிறப்பித்த ஏந்தல்களைக் கண்ணாடி போல் காட்டும் வார்ப்படங்கள்.

தமிழ்நாட்டின் வடக்கே பல்லவர்களும், தெற்கிலும், தென்மேற்கிலும் பாண்டியர், சேரர்களும், கிழக்கே சோழர்களுமாகத் தனித் தனியே கோலோச்சினாலும் பெரும்பாலும் ஒப்புரவு கொண்டவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கலாச்சாரம் ஏசுநாதர் பிறந்த முதல் சில நூற்றாண்டுகளிலேயே சீன நாட்டின் எல்லைவரை பரவியிருந்திருக்கிறது. அதற்குரிய அடையாளச் சின்னங்கள் கம்போடியா, வியட்நாம், மலேசியா முதலான கீழை நாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. கம்போடியாவிலும், வியட்நாமிலும் உள்ள தெருக்கள் வீதிகள் என்னும் தமிழ்ச் சொல்லினால் இன்றைக்கும் வழங்கப்படுகின்றன.

### சென்னை

வானளாவும் கட்டடங்கள், பரந்து நீண்ட கடற்கரைகள், பசுமை கொழிக்கும் பூங்காக்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் தன்னகத்தே கொண்ட சென்னை மாநகர், தமிழகத்தின் தலைநகர்.

கோட்டைக்குள் உள்ள புனித மேரி மாதாகோவில் கி.பி.1680ல் கட்டப் பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதுதான் இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பெற்ற பிராட்டஸ்டண்ட் கிறித்துவ ஆலயமும், ஆசியாவிலேயே மிகப் பழமையானதும் ஆகும்.

### கோட்டை அருங்காட்சியகம்

கோட்டைக்குள் இருக்கும் அருங்காட்சியகம் வரலாற்றுக் கருவூலமாகும். தென்னாட்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிய வரலாறுகளை எடுத்துரைக்கும் கண்கவர் தடயங்கள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. படைக்கலன்கள், உடை வகைகள், நாணயங்கள் பதக்கங்கள், பீங்கான் பாத்திரங்கள் ஆகிவற்றைக் கொண்ட பிரிவுகள் குறிப்பிடத்தக்கன.



### அண்ணா சதுக்கம், எம்.ஜி.ஆர். நினைவிடம்

பேரறிஞர் அண்ணா கோடிக்கணக்கான மக்களின் இதயக் கோவிலிலே குடியேறி தங்களது மூத்த அண்ணனாகவே மக்களால் கருதப்பட்டு ‘அண்ணா’ என்று பாசம் பொங்க அழைக்கப்பட்டார். ஒப்புவமை இல்லாத மக்கள் செல்வாக்குடன் ஒளிவீசிய அவர், தலைசிறந்த அரசியல் சிற்பி, முன்னாள் தமிழக முதல்வர்.

மெரினா கடற்கரையின் வடகோடியில் அண்ணா அடக்க மேடை அமைந்துள்ளது. இதன் நுழைவாயில் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது.



அடக்க மேடையை ஒட்டியே நெடிதுயர்ந்து நிற்கும் நினைவுத் தூண் நம் நெஞ்சம் கவரத்தக்கது.

அண்ணாவின் எண்ணக் கருவூலங்களைப் போன்றே அணையா விளக்கொன்று இங்கே எரிந்து கொண்டேயிருக்கிறது. சுற்றிலும் அழகுமிகு பூங்கா அமைதி தவழுவதாக அமைந்துள்ளது.

அதன் அருகிலேயே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் நினைவிடம் அழகுற நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சமாதிக்கும், அண்ணா சதுக்கம் போன்று ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் வந்து போவதை நாம் காணலாம்.

மெரினா கடற்கரையின் தென்கோடியில் சாந்தோம் கதீட்ரல் பாசிலிகா என்னும் கிறித்துவத் தேவாலயம் அமைந்துள்ளது. 1896ல் கட்டி முடிக்கப் பெற்றுப் புனிதம் செய்யப்பட்ட இக்கோவில் ஜெர்மானிய கோத்திக் கட்டடக் கலையெழிலைக் கொண்டதாகும்.

### செயிண்ட் தாமஸ் மவுண்ட்

புனித தோமையர் மலை என்பது அந்த யேசுபக்தர் வாழ்ந்ததும் மறைந்த இடமுமாகும். பழம் பெருமைமிக்க இக்குன்றின் உச்சியில் உள்ள மாதா கோவிலில் சிலுவை ஒன்று இருக்கிறது.

### காந்தி, இராஜாஜீ, காமராசர் நினைவாலயங்கள்

கிண்டியில் ஆளுநரின் மாளிகையான இராஜ்பவனை அடுத்து மகாத்மா காந்தியடிகள், இராஜாஜி, காமராசர், பக்தவத்சலம் ஆகியோரது நினைவகங்கள் எழுப்பப் பெற்று உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் நினைவாக தியாகிகள் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

### கபாலீசுவரர் கோவில்

மயிலாப்பூரில் உள்ள கபாலீசுவரர் கோவில் கம்பீரமானது; காட்சிக்கு இனியது. புராணக் கதையின் படி, சிவபெருமானின் வரம் வேண்டி முக்தி பெறுவதற்காகப் பார்வதிதேவி மயிலாக உருவெடுத்து இங்கேதான்அவரை வழிபட்டாராம்.

### பார்த்தசாரதி கோவில்

திருவல்லிக்கேணியில் எழுந்துள்ள வைணவக் கோவில் மிகவும் அழகானது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மன்னர் ஒருவரால் கட்டப்பெற்றது. விசயநகர அரசர்களாலும் ஏனைய வேந்தர்களாலும் பலமுறைப் புதுப்பிக்கப் பெற்றது.

### தேசியக் கலைக்கூடம்

எழும்பூர் பாந்தியன் சாலையில், எழில் கொஞ்சும் எடுப்பான பெரும் மாளிகையில் தேசியக் கலைக்கூடம் அமைந்துள்ளது. இக்கட்டடம் இந்து அராபியக் கட்டடக் கலையெழிலுக்கு நேர்த்தியான ஒரு சாட்சியாக நெஞ்சைக் கவர்கிறது. ‘மாடர்ன் ஆர்ட்’ எனப்படும் நவீன ஓவியமும், பழைய வண்ண ஓவியங்களும் கொண்ட கலைச் சோலையாக இது காட்சி தருகிறது. இராசபுதன, முகலாய தென்னிந்திய வகைகளைச் சார்ந்த சில அருமையான வண்ண ஓவியங்களும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.



## அரசு அருங்காட்சியகம்

தேசியக் கலைக்கூடத்தை ஒட்டியே அரசு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப் பெற்றது இது. இங்குள்ள அருங்காட்சிப் பொருள்களில் அமராவதியில் உள்ள புத்த தூபிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திய அருமையான சிற்பப் பொருட்கள் அடங்கிய பிரிவு குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர, சிறுவர் அருங்காட்சியகமும், இப்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

## வள்ளுவர் கோட்டம்

மனித குலச் சிந்தனைகளின் மலையுச்சியான தமிழ் மறையாம் திருக்குறளை, உலகுக்கு அளித்த செந்நாப்புலவர் திருவள்ளுவரின் நினைவாக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் எழுப்பப்பட்ட கலைச்சின்னமே வள்ளுவர் கோட்டம். சென்னை நுங்கம்பாக்கத்தில் எழில் கொஞ்ச இது எழுந்துள்ளது.

இதன் ஒரு பிரிவு திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள தேர்ப்பகுதி, இன்னொன்று பரந்த கலைக்கூடம். தேர்ப்பகுதி, பாதி கருங்கல்லாலும், மீதி கான்கிரிட்டாலும் கட்டப்பட்டது. திருவாரூர் தேரின் வார்ப்படம் போல் இது சிற்பச் சித்திரங்களுடன் அழகுற வடிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 106 அடி (29 மீட்டர்) கலை அரங்கம் நீண்ட இரும்பு உத்திரங்களைக் கொண்டு கட்டப்பட்டது. 220 அடி (64 மீட்டர்) நீளமும், 100 அடி (30 மீட்டர்) அகலமும் கொண்ட இந்தப் பரந்த அரங்கில் ஒரு தூண் கூட இடையில் இல்லை.

ஒரே நேரத்தில் 4,000 பேர் உட்கார வசதியுள்ள இந்த வள்ளுவர் கோட்டம் ஆசியாக் கண்டத்திலேயே மிகமிகப் பெரிய கலை அரங்கமாகக் கருதப்படுகிறது. தொன்றுத் தொட்ட கலைத்திறன் வாய்ந்த சிற்பிகளின் ஆற்றலும் இக்காலத்திய மிக நவீன பொறியியல் நுட்பங்களும் கலந்து கனிந்த கலைக் கோவிலே வள்ளுவர் கோட்டம்.

## கலாச்சேத்திரம்

சென்னையின் தென்பகுதியான திருவான்மியூருக்கு அருகில் கிராமியச் சூழ்நிலையில் அமைந்துள்ளது கலாச் சேத்திரம். தென்னிந்திய நாட்டிய இசைக் கலைகளுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் மாபெரும் பணியைப் பல ஆண்டுகளாகப் புரிந்து வரும் உலகப் புகழ் பெற்ற கலை நிறுவனம் இது.

## மெரினா கடற்கரை

உலகிலேயே மிக நீண்ட கடற் கரைகளில் இது இரண்டாவது. ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் நீளமுள்ள வண்ணப் பூங்காக்கள் அமைந்த வெண்மணற் பரப்பில் அமர்ந்து, வீசிடும் தென்றலில் திளைத்து, சென்னை வாழ் மக்கள் ஆசையோடு பொழுது போக்கி மகிழும் அருமையான திறந்த வெளி மெரினா.

## காஞ்சிபுரம்

இந்தியாவின் ஏழு புனித நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்று. பன்னெடுங் காலமாகக் கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் தலை சிறந்த பீடமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்து வந்திருக்கிறது. இந்து மதத்தோடு சமண சமயமும் பவுத்த நெறியும் இங்கே செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றன. ஆதிசங்கரர் காமகோடிபீடம் என்னும் சமய அமைப்பை இங்கே நிறுவியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த கட்டடக் கலையெழிலுக்குக் கட்டியம் கூறும் கம்பீரமான கோவில்கள் உள்ளன. வைகுந்தப் பெருமாள் கோவில், ஏகாம்ப ரேசுவரர் கோவில், வரதராஜர் கோவில், கைலாசநாதர் கோவில், காமாட்சியம்மன் கோவில், சக்தீஸ்வரர் கோவில் முதலானவை தென்னிந்தியக் கோவில் சிற்பக்கலை வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி மாணவர்க்கு அருமையான வாய்ப்புக்களை வழங்கக் கூடிய பாட பனுவல்களாகும். பட்டுப் புடவைகளுக்கு உலகப்புகழ் பெற்றது காஞ்சிபுரம். காஞ்சிபுரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ஆயிரக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் தங்கள் தறிகளில் வண்ணக் கோல எழில் கொஞ்சும் பட்டுத் துணி நெய்து வாழ்க்கிறார்கள்.



## ஏலகிரி மலை

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தனித்து நிற்கும் கவர்ச்சிமிக்க சுற்றுலாக் குன்று. உடல் நலத்துக்கு உகந்த பருவ நிலை, பசுமை கொஞ்சும் இயற்கையெழில், முருகன் கோவில் இந்த இடத்தில் காணக்கூடிய காட்சிகள். இதன் உயரம் சுமார் 1000 மீட்டர்கள்.

## திருவண்ணாமலை

புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. பஞ்ச பூதங் களில் ஒன்றான நெருப்பின் வடிவமாக சிவன் இங்கே வழிபாடு செய்யப்படுகிறார்.

இரமண முனிவர் ஆசிரமம் இங்கே உள்ளது. இந்தியாவி லிருந்து மட்டுமின்றி உலகம் முழுவதிலுமிருந்து பக்தர் களையும், பார்வையாளர் களையும் இது ஈர்க்கிறது.

## செஞ்சிக்கோட்டை

வரலாற்றுப் பெருமையும் கலையெழிலும் படைத்த செஞ்சிக்கோட்டை நம் நெஞ்சைக் கவர்வதாகும். தேசிங்குராஜன் கொடி கட்டி ஆண்ட சரித்திரச் சிறப்புடையது இந்தக் கோட்டை.

## சிதம்பரம்

பரதக் கலையின் முழு முதற் பொருளான நடராசர் ஆனந்த நடனமாடும் கோலத்தில் காட்சி தரும் இடம் தான் சிதம்பரம். சோழ மன்னன் குலோத்துங்கனால் பொன் ஓடு வேயப்பட்ட இந்தக் கோவிலில் பரதக் கலையின் 108 வகைத் தோற்றங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆனித் திருமஞ்சனம் ஆருத்ரா தரிசனம் ஆகியவை இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழா வாகும். சிதம்பரத்தில் 'நாட்டியாஞ்சலி' நாட்டியக் கலைவிழா பிப்ரவரி-மார்ச் மாதத்தில் நடைபெறும் குறிப்பிடத்தக்க நாட்டிய விழாவாகும்.



## பிச்சாவரம்

சிதம்பரத்திலிருந்து 13 கி.மீ. தூரத்திலேயே பிச்சாவரம் இருக்கிறது. கிழக்குக் கடற் கரையில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு உப்பங்கழிகள் உள்ளடங்கி இருக்கும் இது, அடர்ந்த காடுகளைக் கொண்ட தீவுகளின் கூட்டமாகும். படகுப் பயணத்துக்கும், மீன் பிடிப் புக்கும், நீர் சருக்கு விளையாட் டுக்கும் இங்குள்ள அமைதி யான கடல் நீர் ஏற்ற இடம்.

## பூம்புகார்

சிலப்பதிகாரத்தின் பிறப்பிட மான பூம்புகார் வங்காள விரிகுடாக் கடலோரத்தில் இன்று சின்னஞ் சிறு கிராமமாகச் சிறுத்துக் கிடந் தாலும் ஒரு காலத்தில் சோழப் பேரரசர்களின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. கீழை நாடுகளோடும், கிரேக்கம், ரோமாபுரி ஆகிய மேலை நாடுகளோடும் அது வணிகத் தொடர்பு வைத்திருந்தது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பண்டைய பூம்புகார் சிறப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

இங்குப் புதிதாக எழுந்துள்ள கலைக்கூடம், ஒரு காலத்தில் பெருமையோடு திகழ்ந்த இத்துறைமுகப்பட்டினத்தின் வரலாற்றுச் சிறப்புகளை நினைவுறுத்திச் சிலப்பதிகாரக் காட்சிகளை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.

## தஞ்சாவூர்

நாற்புறமும் அகழிகள் சூழ்ந்த பெரிய அரண்மனைக்

கோட்டையினுள் பிரகதீசுவரர் கோவில் உள்ளது. சிற்பக் கலையின் செழுமை மிகுந்த இப்பெரிய கோவில், பிற்காலச் சோழர்களில் பெரும்புகழ் பெற்ற மாமன்னன் இராஜ இராஜ சோழனால் கட்டப்பெற்றது. மொத்தம் 66 மீட்டர்கள் உயரமுள்ள மிகப் பெரிய கோபுரம் கொண்ட இந்த ஆலயத்தின் மூலக்கருவறையின் மேலேயுள்ள விமானம் எடுப்பான ஒரு சிறப்பு அம்சம். இது அந்நாளையப் பொறியியல் கட்டடக் கலையின் நுட்பமான அற்புதம்.

கோவில் வாசலைக் கடந்து சென்றால், உள்ளே நந்தியைக் காணலாம். நம் நாட்டில் ஒரே கல்லில் வடிக்கப் பெற்ற மிகப் பெரிய சிற்பங்களில் இந்நந்தியும் ஒன்று.

தஞ்சையில் சரபோஜி மன்னரால் உருவான சரசுவதி மகால் புகழ் மிக்க பழங்கால நூலகம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பனை



ஓலைச் சுவடிகளும் தற்கால நூல்களும் இருக்கின்றன. அவற்றில் சில எங்குமே காணக் கிடைக்காத அருமையானவை.

இங்குள்ள கலைக்கூடம் வெண்கலச் சிலைகளுக்கும் கருங்கல் சிற்பங்களுக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்னும் பெருமையோடு இசை, நடனம், மிக நேர்த்தியான கைவினைப் பொருள்கள், பஞ்சலோகச் சிலைகள், வெண்கலத் தாமிரக் கலைப்பொருள்கள், தஞ்சாவூர்த் தட்டுகள், நெட்டி வேலைகள் முதலானவற்றுக்குப் பெயர் பெற்றது.

தஞ்சாவூருக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவையாற்றில், ஆண்டு தோறும் சனவரித் திங்களில் நடைபெறும் தியாக பிரம்ம ஆராதனை விழா சிறப்பானதாகும்.

## வேளாங்கண்ணி

இங்குள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயம் ஆரோக்கிய மாதாவுக்காகக் கட்டப்பட்டது. இக்கோவிலுக்கு நாடு முழுவதிலுமிருந்து எல்லா மதத்தினரும் நாள் தோறும் வருகிறார்கள்.

## நாகூர்

புகழ்பெற்ற இஸ்லாமிய யாத்திரைத் தலம் இது. ஆண்டு தோறும் நடைபெறும் கந்தூரி விழா, திரளான மக்களை இங்கே ஈர்க்கிறது. இந்தப் புண்ணியத் தலத்துக்கு எல்லாச் சமயத்தவரும் வருகிறார்கள்.

## திருச்சிராப்பள்ளி

காவிரிக் கரையில் அமைந்த பழமையான நகரம் திருச்சிராப்பள்ளி. இதன் வரலாற்றில் அற்புதமான அழிக்க முடியாத அத்தியாயங்களைத் தீட்டியவர்கள் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள்.

## மலைக்கோட்டை

திருச்சியில் கம்பீரமாகக் காணப்படும் எண்பத்து மூன்று மீட்டர் உயரமுள்ள மலைக்கோட்டையின் உச்சிக்குச் செல்ல 431 படிகளை மலையிலேயே செதுக்கிச் செய்திருக்கிறார்கள். மலைக்கோட்டையின் உச்சியில் பிள்ளையார் கோவில் இருக்கிறது. இங்குள்ள வேறு இரண்டு குகைக் கோவில்களில் ஆறாவது ஏழாவது நூற்றாண்டுச் சிற்பங்கள் நிரம்ப உள்ளன.

## திருவரங்கம்

காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளின் நடுவே காட்சிக்கு இனிய தீவாகத் திகழ்கிறது திருவரங்கம். 13-14 நூற்றாண்டு அளவில் கட்டப்பட்ட இங்குள்ள அரங்கநாதர் கோவில் மிகவும் புகழ் பெற்றது. இங்கே ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் முதல் சனவரி இரண்டாம் வாரம் முடிய 21 நாட்களுக்கு வைகுந்த ஏகாதசி திருவிழா, கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.



## திருவானைக்காவல்

ஜம்பு என்பது புனிதமான நாவல் மரத்தின் பெயர். அதன் அடியில் சிவலிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. அதனால் திருவானைக்காவலுக்கு ஜம்புகேசுவரம் என்றும் பெயர். ஒரு காலத்தில் இங்குள்ள சிவலிங்கத்தை யானை ஒன்று வழிபட்டதாகப் புராணக் கதையும் உண்டு.

## கல்லணை

காவிரியின் குறுக்கே சோழ மாமன்னன் கரிகால் பெருவளத்தானால் இது எழுப்பப் பட்டுள்ளது.

அந்நாளையப் பொறியியல் கலை வளத்துக்கு இது இணையற்ற சான்றாகும்.

## சங்கத் தமிழ் வளர்த்த மாமதுரை

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே கீழை நாடுகளின் ஏதன்ஸ் எனக் கிரேக்கத் தலைநகரோடு ஒப்பிடத்தக்க புகழ் கொண்ட பெருநகர் மதுரை. மிடுக்காக எழுந்து நிற்கும் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பெயர் பெற்ற மாநகர் இது. வைகை நதிக்கரையில் மதுரை மாநகர் அழகுற அமைந்துள்ளது.

## மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்

மதுரையின் மையத்தில் கவினுற அமைந்துள்ள இந்தக் கோவில் 263 மீட்டர் நீளமும் 247 மீட்டர் அகலமும் உள்ளது. இதன் நான்கு புறங்களிலும் உள்ள நான்கு உயர்ந்த கோபுரங்களிலும் வண்ணச் சித்திரச் சிற்பங்கள் கண்ணைப் பறிப்பனவாகும்.

இது ஓர் இரட்டைக் கோவில்; ஒன்று தென்புறத்தில் உள்ள மீனாட்சிஅம்மன் கோவில். இன்னொன்று சுந்தரேசுவரர் கோவில். இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் கோவில் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது.

## கூடல் அழகர் கோவில்



மதுரை மாநகரின் மேற்குப் புறத்தில் அமைந்துள்ளது. இங்கு ஒன்றின் மேல் ஒன்றாக - உட்கார்ந்த நிலையிலும், நிற்கும் நிலையிலும், ஓய்வாகச் சாய்ந்த நிலையிலும் பொருத்தியுள்ள திருமாலின் தோற்றங்கள் கோவிலின் தனிச் சிறப்பாகும்.

## திருமலை நாயக்கர் அரண்மனை

புகழ்பெற்ற திருமலை நாயக்க மன்னரால் 1636ல் இந்தோ அராபிய பாணியில் எழுப்பப் பெற்றுள்ள பிரமாண்டமான அரண்மனை இது. இங்கு ஒலி-ஒளிக்காட்சி சுற்றுலாத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது.

### திருப்பரங்குன்றம்

சுப்பிரமணிய சுவாமிக்கும் தெய்வயானைக்கும் இங்குத் திருமணம் நிகழ்ந்ததாகப் புராணக் கதையொன்று வழங்கி வருகிறது.

### திருச்செந்தூர்

நீலத்திரைக்கடல் ஓரத்திலே அமைந்துள்ள புகழ்மிக்க இங்குள்ள அருள்மிகு முருகக் கடவுளின் புண்ணியத் தலம், அறுபடை வீடுகளில் ஒன்று.

### கோயம்புத்தூர்

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்பெறும் கோயம்புத்தூரும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் கணக்கிலடங்கா நெசவாலைகளுக்கும், வேளாண்மை மற்றும் நெசவுத் தொழில்களுக்குரிய ஆராய்ச்சிகளுக்கும் கேந்திரப் பகுதிகளாகும். பொறியியல் கருவிகள், நெசவாலைக் கருவிகள் உற்பத்திக்கும் இது முன்னணியில் நிற்கிறது. அருகில் பேரூரில் உள்ள சிவன் கோவிலும் மருத மலையில் உள்ள முருகன் திருக்கோவிலும் கண்டு களிக்கத்தக்கவை. இம்மாவட்டத்திலுள்ள பவானி அணைக்கட்டு பார்க்கத்தக்க ஓர் அழகிய சுற்றுலா இடம் ஆகும்.



### காடு வளம் காண வாரீர்

தமிழ்நாட்டில் எண்ணற்ற வெப்ப மண்டலக் குறுங்காடுகளும், பெரும் புதர்களும் உள்ளன. அவற்றில் வகைவகையான தாவர இனங்களையும், விலங்கினங்களையும் காணலாம்.

### மான்கள் பூங்கா, கிண்டி

புதர்கள் மண்டிய பசுமை கொஞ்சும் பூங்காவாகும் இது. சென்னை நகர எல்லைக்குள் வெப்ப மண்டலப் பகுதிக்குள் அமைந்துள்ள இதில், முப்பதுக்கும் மேற்பட்ட மரவகைகள் உள்ளன. விரைந்து அழிந்துவரும் இந்தியக் கருப்பு நிறக்கலைமான் இனத்தைச் சார்ந்த கணக்கற்ற மான்களுக்கு இங்கே காப்பு வெளி அமைக்கப்பட்டுள்ளது.

### பாம்புப் பண்ணை, கிண்டி

விதவிதமான பாம்புகளையெல்லாம் இந்தப் பண்ணையில் பார்க்கலாம்.

### முதலைப் பண்ணை

சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில், மாமல்லபுரம் செல்லும் சாலையில், கோவளத்தை அடுத்து இந்த முதலைப் பண்ணையைக் காணலாம். மாநில அரசின் துணையோடும், உலகக் காட்டு விலங்கு நிதி உதவியோடும் இது இயற்கைச் சூழலில் நிறுவப்பட்டுள்ளது.

### வேடந்தாங்கல்

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நீர்ப் பறவைப் புகலிடங்களில் வேடந்தாங்கலும் ஒன்று. இது சென்னைக்குத் தெற்கே 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள ஏரியில் நெடிய கால்களைக் கொண்ட நாரைகளின் கூட்டத்தைக் காண்பது தென்னிந்தியாவில் வேறு எங்குமே இல்லாத வியக்கத்தக்க காட்சியாகும். அக்டோபர் முதல் மார்ச் வரையிலான ஆறு மாதங்களில் பருவ நிலைக்கேற்ப எண்ணற்ற நீர்க்கோழிகள் அங்கே நீந்தித் திளைக் கின்றன. ஆண்டுதோறும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பறவைகள் வரை இங்கே வருகின்றன எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

### முதுமலை

தமிழகத்திலேயே மிகப் பெரிய வனவிலங்குப் புகலிடங்களில் ஒன்றான முதுமலைக்காடு, நீலகிரி மலையில் உள்ளது. உதகமண்டலத்திலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இது இருக்கிறது. இங்கே ஒரே சமயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட புள்ளிமான்கள் கூட்டமும், ஏறத்தாழ 20-30



இந்தியக் காட்டெருமைகள் கூட்டமாகச் செல்வதும் காண்பதற்கரிய காட்சியாகும்.

புலிகள், சிறுத்தைகள், குள்ளநரிகள், கழுதைப் புலிகள், புனுகுப்பூனைகள் முதலானவற்றுக்கும் இது வசதியான உறைவிடம். சாம்பர் என்னும் மான் வகைகள், நான்கு கொம்புகள் உடைய கருப்பு மான்கள், மருண்டோடும் புள்ளி மான்கள், மிகப் பெரிய அணில்கள், குலைக்கும் மான்கள், நீலகிரி ஐபெக்ஸ் எனப்படும் மலை ஆடுகள் அடர்ந்த குரங்குகள் இப்படி விந்தையான விலங்குக் கூட்டத்தையும் இங்கே நாம் காணலாம்.

### ஆனைமலை

கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலைக் காடு வகைவகையான தாவரச் செடி, கொடி, மரங்களுக்குப் பெயர் பெற்ற இடம். காட்டு மான்கள், காட்டு நாய்கள், முள்ளம் பன்றிகள், எருமைகள், யானைகள், புலிகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டுப் பன்றிகள், கருமுயல்கள், பறக்கும் அணில்கள், குள்ளநரிகள், புனுகுப் பூனைகள் முதலான கணக்கில் அடங்காத விலங்கினங்களையெல்லாம் இங்கே காணலாம்.

## ஓய்விற்குகந்த குறிஞ்சி நகரங்கள்

### உதகமண்டலம்

இயற்கை எழிலின் இன்பமெல்லாம் ஊட்டுவதாலோ என்னவோ ஊட்டி என்று சிறப்பாக அழைக்கப்படும் உதகமண்டலம் மலைத் தலங்கள் அத்தனைக்கும் பேரரசியாக விளங்குகிறது. இங்குள்ள 2,633 மீட்டர்கள் உயரம் கொண்ட 'தொட்ட பெட்டா' மலையேறிகளுக்கு உவகைக் கிளர்ச்சியூட்டும் அருமையான உல்லாசத் தலம். எழில் மலர்கள் கொஞ்சும் தாவரத் தோட்டங்கள், படகுச் சவாரிக்கேற்ற உல்லாச ஏரி, வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பசுமை கொழிக்கும் தேயிலைத் தோட்டங்கள் இவையெல்லாம்-இந்தியாவில் என்றுமே பசுமை எழில் குன்றாத மலைத் தலங்களில் ஒன்றாக உதகமண்டலத்தை ஒளிவீசச் செய்கின்றன.

இந்நகரை அடுத்து இன்னும் இரண்டு சிறிய மலைத்தலங்கள் உள்ளன. ஒன்று குன்னூர், இன்னொன்று கோத்தகிரி. சிம்ஸ் பூங்கா, லேம்ஸ் பாறை, கேனிங் சீமாட்டி மேடை, டால்பின்ஸ்மூக்கு, ராலையா அணை, லாஸ் அருவி இவையெல்லாம் குன்னூரின் அழகுக் கவர்ச்சிக்கு மெருகு சேர்ப்பவை.

கோத்தகிரியில் கொடநாடு காட்சி முனை, செயிண்ட் கேதரின் அருவி, அரங்கசாமி கல்தூண் மற்றும் கற்பாறை ஆகியவை காணத் தகுந்த இடங்கள். பொதுவாக, நீலகிரி மலைத்தொடர் காபி, தேயிலை, உருளைக் கிழங்கு தோட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். இங்கே தோதர்கள், கோதர்கள், குரும்பர்கள், படகர்கள், பனியாக்கள் ஆகிய பழங்குடி மக்கள் தொன்மைச் சிறப்புள்ள குடும்பத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

### கொடைக்கானல்

மயக்கும் அழகு கொஞ்சும் இந்த மலைத்தலம், கடல் மட்டத்திலிருந்து 2,133 மீட்டர் உயரத்தில் உள்ளது. பிணியகற்றும் பெருமருந்தாகப் பருவ நிலையும் பொருந்தியுள்ள [கோடையில் உச்சவெப்பம் 19.8 டிகிரி சென்டிகிரேடு, குறைந்த வெப்பம் 11.3 டிகிரி சென்டிகிரேடு] இந்த மிடுக்கான மலை நகரில் பகற்பொழுதில் அதிக நேரம் கதிரவனின் ஒளிக்கதிர்கள் பொன்முலாம் பூசுகின்றன. படகு விளையாட்டுப் பந்தயக்காரர்கள் சிந்தை மகிழும் வண்ணம், அணி அணியாகப் படகுகள் பாயும் அழகான ஏரியும் நட்சத்திர வடிவில் காட்சி தருகிறது. பிரியன்ட் பூங்கா, பாறைத் தூண்கள், பெருமாள்குன்று, வெள்ளி நீர் வீழ்ச்சி, கரடிச் சோலை அருவி



போன்றவையும், செண்பகனூர் புனித இருதயக் கல்லூரியில் உள்ள தாவர மற்றும் விலங்குப் பொருட்காட்சியும் கொடைக்கானலை நோக்கி நம் உள்ளத்தைக் கொள்ளையிட்டுச் செல்வனவாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர்கள் இவையெல்லாம் சேர்ந்து கொடைக்கானலை இயற்கை அன்னையின் எழில் கூடமாகவே மாற்றி விட்டிருக்கின்றன.

ஏர்க்காடு

அமைதி தவழும் ஓய்வுக்கு உகந்த உல்லாச மலைத்தலம் ஏர்க்காடு.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத்தொடரில் பசுமையும், குளிர்ச்சியும் கொண்டு இது அமைந்துள்ளது.

## மனங்கவர் கடற்கரைகள் கடலோர ஓய்விடங்கள்

### கோவளம்

மாமல்லபுரம் செல்லும் வழியில் ஓய்வுக்கு உகந்த ஊர் இது. அழகிய கடற்கரை ஓட்டல் ஒன்று இங்கே உருவெடுத்துள்ளது.

### மாமல்லபுரம்

தொன்மைச் சிறப்புமிக்க இந்தக் கடற்கரைப்பட்டிணம் சென்னைக்குத் தெற்கே 60 கி.மீ. தொலைவிலுள்ளது. கி.பி. 600 முதல் 750 வரை தழைத்துச் செழித்த பல்லவர் காலத்து உளிகள் எவ்வாறெல்லாம் கற்களுக்கு உயிரூட்டிச் சிரிக்கும் சிற்பங்களைச் செதுக்கியுள்ளன என்பதை இங்குள்ள பாறைக்கோவில்கள் பறைசாற்றுகின்றன. மாமல்லபுரம் இன்று கடற்கரை ஓய்விடமாகவும், புகழ்மிக்க சுற்றுலாத் தலமாகவும் பெயர் பெற்று விளங்குகிறது.

### குடவரைக் கோவில்கள்

மாமல்லபுரத்தில் உள்ள ஒன்பது குடவரைக் கோவில்களில், கிருஷ்ண மண்டபம் காட்சி எழிலுக்குப் பெயர் பெற்றது ஆகும். மகிஷாசுரமர்த்தினிக் குகையின் ஒரு புறத்தில் மகாவிஷ்ணு கம்பீரமான கோலத்துடன் (அனந்த சயனமாகப்) பள்ளி கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மறுபுறத்தில் எருதுத் தலையுள்ள அசுரர்களோடு காளிதேவி போராடுவதைக் காணலாம்.



### கடற்கரைக் கோவில்

கடல், புயல், வெயில், காலச்சுழல் இவற்றின் தாக்குதல்களுக்கெல்லாம் தப்பித் தலைநிமிர்ந்து நிற்கிறது இந்தத் தொன்மையான கற்கோவில்.

### அர்ச்சுனன் தபசு சிற்பப் பாறை

உலகிலேயே மிக நீளமாக மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கற்பாறைக் கலைப் பெட்டகம் இது. திமிங்கிலத்தின் முதுகு வடிவில் அமைந்த பாறையில் செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பங்கள் இடையிலே பிளவு கொண்டதாகக் கடலை நோக்கி நிற்கிறது.

### ஐந்து ரதங்கள்

மாமல்லபுரத்தில் குகைக் கோவில்களுக்குத் தெற்கே இந்த ஐந்து இரதங்கள் அமைந்துள்ளன. இவை ஐந்தும் ஓரே பாறையில் செதுக்கப்பட்ட சிறப்புக் கொண்டவை. இவை பஞ்ச பாண்டவர் இரதங்கள் என வழங்கப் படுகின்றன.

### இராமேசுவரம்

இந்தியாவின் மிகப் புனிதமான மிகப் பெரிய யாத்திரைத் தலங்களில் இராமேசுவரம் ஒன்று. இது இராமாயண இதிகாசக் கதையை ஒட்டி எழுந்த கோவிலைக் கொண்டது. இக்கோவிலில் வேறெங்கும் காண முடியாத வியப்புக்குரிய மிக நீளமான உள்மண்டபப் பிரகாரம் உள்ளது.

### கன்னியாகுமரி

இந்தியாவின் தென்கோடி முனையில் கன்னியாகுமரி இருக்கிறது. முக்கடல் முத்தமிட்டுத் தாலாட்டும் கன்னியாகுமரிக்குள்ள மாபெரும் மாட்சி, அங்கு நாம் காணும் கதிரவன் கடலில் மறையும் காட்சியாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முழுநிலவு நாளில் சூரியன் மறைவும் நிலவின் உதயமும் ஒரே நேரத்தில் நிகழும் அற்புதமான காட்சியைக் காணக்கூடிய ஒரே இடம் கன்னியாகுமரி தான். பனை ஓலைகளால்





செய்யப்படும் பொருட்களுக்கும், சங்கு மாலைகளுக்கும் இப்பகுதி பெயர் பெற்றது ஆகும்.

### கன்னியாகுமரி அம்மன்

கன்னித் தெய்வமான கன்னியாகுமரிக்கு இங்கே அழகிய ஆலயம் ஒன்று உள்ளது. பெரும்பாலோரால் இந்தியாவுக்கே விழிப்பு மிக்க காவல் தெய்வமாகக் கருதப்படுகிறாள் குமரி அன்னை.

### காந்தி நினைவு மண்டபம்

இந்தியாவின் தந்தை காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்னால், எங்கே பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டிருந்ததோ, அங்கே - அதே இடத்தில் இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

### விவேகானந்தர் நினைவுப் பாறை

கன்னியாகுமரி கோவிலுக்குத் தென் கிழக்காக, கடலில் இரு பாறைகள் உள்ளன. அவற்றில் ஒரு குன்றின் மீது அமர்ந்து, விவேகானந்தர் சில நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். 1970-ல் அவரது நினைவாக ஒரு மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ளது. இந்தியாவின் கட்டடக் கலை எழில்கள் அத்தனையின் முழுமையான கலவையாக இது ஒளிர்கிறது.

### வள்ளுவனின் வானுயரச் சிலை

கன்னியாகுமரியின் விரிகடல் பரப்பில் உலக அதிசயங்களில் ஒன்றென திகழும் வான்புகழ் வள்ளுவனின் 133 அடி உயரம் கொண்ட வானுயரச் சிலை முதலமைச்சர் கலைஞர் அவர்களால் புத்தாயிரம் ஆண்டின் முதல் நாளான 1-1-2000 அன்று திறக்கப்பட்டது. இச்சிலை கண்ணையும் கருத்தையும் கொள்ளைக் கொள்ளும் எழிலுடன் விளங்குகிறது. சுற்றுலா பயணிகளை தன்பால் ஈர்க்கின்றது.

## இசை பாடும் எழில் அருவிகள்

### குற்றாலம்

தீராத நோயெல்லாம் தீர்த்து வைக்கும் மூலிகைகளின் தாயகமாக விளங்கும் குற்றால மலை அருவி உடலுக்கு நலம் தருகிறது. வெள்ளியே உருகி விழுந்தாற்போல் அங்கு விழும் நீர் வீழ்ச்சியில் நீராடுவதே பேரின்பம். ஜூன் முதல் செப்டம்பர் வரை இங்கே பக்குவமான பருவநிலை ஆகும்.

## ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி

பாய்ந்து விழும் நீர்வீழ்ச்சியால் மேனி எழும் நீர்த்திவலைகள் புகைப்படலம் போன்ற எழில் தோற்றம் தருகின்றன. அதனாலேயே 'ஒகேனக்கல்' என்ற பெயர் இதற்கு வந்துள்ளது. விரைந்து கொட்டும் நீர்வீழ்ச்சி, அடர்ந்து செறிந்த மரக்காடுகள், பசுமை கொழிக்கும் இயற்கை எழில்கள் ஆகியவற்றின் அழகுச் சோலையான ஒகேனக்கல் விடுமுறையைக் கழிக்க ஏற்ற இடம் இது.

## காண்போர் வியக்கும் கைவினைப் பொருட்கள்

கலைநுட்பம் வாய்ந்த கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத் தனித்தன்மையுடனும், சிறப்பு அம்சங்களுடனும் புத்தம்புது வகைகளில் உருவாகும் தமிழ்நாட்டு கைவினைப் பொருட்கள் உலகம் முழுவதும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. தறியிலே நெய்யப்படும் புடவையும் சரி, சக்கரத்தில் வனையப்படும் மண் பானையும் சரி, கலைமுத்திரை பதிந்த கவினழகுச் சின்னங்களாகவே உருவாகின்றன. நெடுங்காலமாகவே தமிழ்நாட்டில் கோவில்கள் சமய, சமுதாய அமைப்பின் மையமாக விளங்கி வந்திருக்கின்றன. வண்ணத் துணிகள், மெல்லிய நெட்டி மாலைகள், நேர்த்திமிக்க உலோகச் சிலைகள் - ஒவ்வொன்றும் கலை எழில்மிக்க கைவினைப் பொருட்களாம். சிவன் - பார்வதி வெண்கல விக்கிரகங்கள், நடராசர் சிலை, திருமால், இலட்சுமி சிலைகள் ஆகியவை நுட்பம் செறிந்த கைவினைத் தொழிலுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கலைஞர்களின் அருமையான அழகுப் படைப்புகளாகும். பனை ஓலைகள், கோரைப் புற்கள், போன்றவற்றால் செய்யப்படும் விளக்குக் குல்லாய்கள், பூக்கூடைகள், கைப்பைகள் முதலான பயன்படு பின்னல் பொருட்களை அழகுறப் படைப்பதிலும் தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை முதலான இடங்களில் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் எழில் வடிவங்களில், பட்டிலும், பஞ்சிலும் பாங்காக நெய்யப்படும் வண்ணப் புடவைகள் கண்ணைப் பறிப்பவையாகும்.



இவ்வாறு இதயம் கவரும் சுற்றுலாத் தலங்க தமிழ்நாட்டில் இவை மட்டுமல்ல, இன்னும் பல உண்டு இவை அவற்றுள் குறிப்பிடத்தக்க சில!

★ ★ ★



# ஒரு மனிதன்



■ எம்.வி.வெங்கட்ராம்

மிதமான குடியால் உண்டான மிதமிஞ்சிய உற்சாகத்துடன் வெளிவந்தபோது, மழை முரட்டுத் தனமாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. நனையாமல் காத்துக் கொள்ள நான் 'மழைக் கோட்டும்' கொண்டு வரவில்லை. எங்காவது தங்கி இரவைக் கழிக்கலாம் என்றால், துணையில்லாத தூக்கத்தில் இனிமை ஏது? உடலையும் மூளையையும் ஒட்டிக்கொண்டிருந்த உற்சாகத்தைச் சேதமாக்காமல் அழகாக நனைந்து கொண்டே ரயில்வே ஸ்டேசனுக்குச் சென்றுவிடுவதே நலம் என்று நிச்சயித்து, கால்சட்டையை முழங்கால்கள் வரை மடித்துவிட்டுக் கொண்டு புறப்பட்டேன்.

மழையில் நனைந்து கொண்டே இரவில் தனியாக நடந்து செல்லுவதிலும் இன்பம் இருக்கிறதல்லவா? அந்த இன்பத்தை 'சீட்டி' அடித்து அனுபவித்துக் கொண்டே ஸ்டேசனுக்கு விரைந்தேன். பிளாட்பாரத்தில் நின்றது ரயில்; புறப்படுவதற்கு இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்கள் தான் பாக்கி, அவசர அவசரமாய் டிக்கட் வாங்கிக் கொண்டு சேற்றை வாரி இறைக்கும் பூட்ஸ்கள் கால்வாரி விடாதபடி ஓடி ...

ஒரு வண்டி – நாலு பேர் படுக்கலாம். ஒரே ஒரு வெள்ளைக்காரனைத் தவிர காலியாகக் கிடந்தது. அவனும் தூங்கிக் கொண்டிருந்தான்; கதவைத் தள்ளினேன்; உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. திறந்து கிடந்த ஜன்னல் வழியாக நான் உள்ளே ஏறிக் குதிக்கவும், ரயில் ஊதவும் சரியாக இருந்தது.

முதலில் என்னைக் கவனித்துக் கொண்டேன். ஈர உடைகளைப் பிழிந்ததும், தொப்பியை உதறிக் கொண்டும், 'அப்பாடா', என்று அலுத்துக் கொண்டே படுத்திருந்த ஆளைக் கவனித்தேன். அவன் அசல் வெள்ளைக்காரன்; அசல் என்றால் அசல் தான், கருப்பு மனைவிக்கும் வெள்ளைக் கணவனுக்கும் பிறக்கும் 'அரை ஜாதி' அல்ல; நேராக எங்கோ மேற்கு நாட்டிலிருந்து வந்தவன். நல்ல வெள்ளை நிறத்தை நீளமாய்ப் பரப்பி நன்றாய் உறங்கிக் கொண்டிருந்தான்; வெண்மை படுக்கையில் கூட அழகாகவே இருந்தது. அதிலும் ஆச்சரியம் என்னவெனில், அவன் தன் உடுப்பைக் கழற்றவே இல்லை. கால் சட்டை (பாண்ட்), கோட், பூட்ஸ்கள், நெக்டை, ஏன்? மூக்குக் கண்ணாடியைக் கூட அவன் கழற்றவே இல்லை. லேசாக மேலும் கீழும் போய் வரும் மார்பு–ரயிலின் ஆட்டத்தினால் அசையும் உடம்பு– அவனைப் பார்த்தால் ஒரு அழகான பொம்மையைப் படுக்க வைத்திருப்பது போலத் தோன்றியது.

நான் வருத்தத்துடன் நினைத்தேன்; 'எவ்வளவுதான் நாங்கள் – அதாவது, பனிக்கட்டி போன்ற நிறம் படைத்த அல்லது நிறத்துடன் படைக்கப்பட்ட நாங்கள் – எவ்வளவுதான் 'மேற்கு மோஸ் தருக்குள் உடம்பைத் திணித்துக் கொண்டாலும் அசல் மேற்கத்தியானுக்கு உள்ள கம்பீரமோ நேர்த்தியோ உண்டாகப் போவதில்லை. பிறவியுடன் வருபவை அவை; அவைகளை அடைபவர்கள், பாக்கியசாலிகள்!

"ஆனால், பிறந்து விட்டோம் இப்படி, அந்த நிறத்துடன், அந்த நாட்டில்; எப்படியாவது வாழ்ந்து முடிக்க வேண்டியதுதான். குறைந்த பட்சம் மேற்கு முறையில் நம்மை உயர்த்திக்கொள்ள முயற்சியாவது செய்ய வேண்டியது பொறுப்பு, கடன் ...."

நான் உட்கார வேண்டும். முடிந்தால், ஈரவுடையுடனேயே கொஞ்சம் கைகால்களை நீட்டிக் கொண்டு படுக்கவாவது வேண்டும். அவன் – கண் அயரும் என் மேற்கத்தித் தோழன் – ஒரு 'பெர்த்தில்' தூங்கிக் கொண்டிருந்தான். கீழுள்ள மற்றொரு 'பெர்த்தி'லாவது படுக்கலாமா என்று பார்த்தேன். அங்கே உடைக்காத பிராந்தி பாட்டில் ஒன்று, ஒரு காலி பாட்டில், சிகரெட் பெட்டி ஒன்று, ஒரு தீப்பெட்டி, ஒரு வாக்கிங் ஸ்டிக், எல்லாவற்றையும் விட பயப்படும்படியாக ஒரு கைத்துப்பாக்கி கிடந்தன. எல்லாவற்றையும் கீழே எடுத்து வைத்து விட்டுப் படுப்பதற்கு எனக்கு உரிமை இல்லை.

"ஒருவேளை இந்த கம்பார்ட்மென்ட் முழுவதும் அவன் ரிஸர்வ் செய்திருப்பானோ?" என்று நினைத்தேன். அப்படியாயின் இந்த வண்டியில் ஏறியதே தப்பு. என் தூங்கும் தோழன் விழிப்பில் சாதுவாக இருந்தால் மன்னிப்பு கோரித் தப்பிவிடலாம். அதுவும் அவனுடைய உயர்ந்த பண்பாட்டிற்கு சிஷ்யனாகத் தோற்றம் அளிக்கும் நான் மன்னிப்பு கோரினால் அவன் அளித்துக் கொஞ்ச நேரம் பேசவும் செய்யலாம். ஆனால் அவன் சாதுவாக இராமல் முரடனாக இருந்தால்? கைத்துப்பாக்கி .....

அதைப் பார்த்தேன்; சட்டம் என்றால் 'சட்டம் தான்' என்று நினைத்து, சொல்லி, செய்யும் வெள்ளைக்காரனின் முன் கோபத்திற்குப் பாத்திரம் ஆகிவிட்டால் அவன் என்னை நாயைப் போல் சுட்டுக்கூட தள்ளலாம் ....

நான் அதற்காகப் பயந்து விடவில்லை. இன்னும் நான்கு மணி நேரத்திற்கு மேலாகும் ரயில் புனாவை அடைய – அதுவரையில் மேல் 'பெர்த்தில்' சந்தடி செய்யாமல் படுத்திருக்கலாம் என்று முடிவு கட்டி, மற்றொரு முறை அந்த அழகான வெள்ளைப் பொம்மையைப் பார்த்து பெருமூச்சு விடுத்து, மேலே ஏறி, ஈரவுடலைத் தளர்த்தினேன்.

ஈர நாய் உதறிக் கொள்வது போல் ரயில் இடமும் வலமும் புரண்டு

நின்றது. கீழே படுத்துள்ள தோழன் விழித்துக் கொண்டு என்னைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக மூக்கைக் கையால் பிடித்துக் கொண்டு மூச்சை வெளியில் விட்டேன். வீண் கலாட்டா எதற்கு, அதுவும் ஒரு வெள்ளைக்காரனுடன் என்பது தான் என் அடக்கத்திற்குக் காரணம்; பயம் அல்ல. இல்லவே இல்லை.

கீழே, ஜன்னலிலிருந்து யாரோ கூப்பிட்டார்கள். "ஜான்!" படுத்திருந்தவன் பதில் அளித்தான். ஓ, இருக்கிறேன்."

பிறகு கீழிருந்த ஆள் ஜன்னலுக்கு நடந்து செல்வது தெளிவாய்க் கேட்டது. சாதாரணமாகவே வெள்ளையர் நடக்கும் போது, குதிரை மலை மீது ஓடுவது போல சத்தம் கேட்கும்.

கீழே குரல்கள் பேசின; மறந்து விட்டேன். படுத்திருந்த ஆளின் குரல் கிளாரிநெட் வாசிப்பது போல் 'நொய்ங்' என்றிருந்தது.

வெளிக்குரல்; "உடம்பு எப்படி இருக்கிறது?"

உள் குரல், "நல்ல தூக்கம்".

"மார்வலி இல்லையே? அந்த டோஸ் எடுத்துக் கொண்டாயா?"

"ஓ! மார்வலி இல்லை".

"பிராந்தி, இருக்கிறதா?"

"இருக்கிறது ..... ஆனால் உடம்பு தான் ரொம்ப கனக்கிறது; புனாவுக்குப் போக இன்னும் நாலுமணி நேரமாவது ஆகும். நான் உடம்பை லேசாக்கிக் கொள்ளட்டுமா?"

"செய். ஆனால் ஜன்னலை நன்றாக மூடிவிடு, வெளியிலிருந்து யாரும் பார்க்க முடியாதபடி."

"ஓகே!"

ரயிலின் குரல் அவர்களைப் பிரித்தது; வெளிக்குரல், "அடுத்த ஸ்டேஷனில் பார்க்கிறேன்." என்று சொல்லிவிட்டு ஓடியது

அந்தச் சம்பாஷணை எனக்கு அதிசயமாக இருந்தது. உடல் கனத்தைக் குறைக்க நண்பனின் அனுமதியை ஏன் கேட்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை; ஆடைகளைக் கழற்றுவதானால் யாரும் பார்க்காதபடியாய் ஜன்னலைக் கெட்டியாக மூடும்படி நண்பன் ஏன் யோசனை கூற வேண்டும்? ஒரு வேளை... ஒரு வேளை... முழுக்க முழுக்க உடையின் கனத்தை குறைக்க ....

சே, வெள்ளையர் காட்டு மிராண்டிகள் அல்ல; சூரியன் எப்படிக் கொதித்தாலும், அவர்கள் உடை குறைக்கமாட்டார்களே...

அவர்கள் பேசியதன் பொருள் என்னவென்று புரியவில்லை...

ஜன்னலை—கண்ணாடி உள்பட— இறுக மூடிவிட்டு...பிறகு 'கடபுட' வென்று சிறிது நேரம் கீழே ஏதேதோ சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. நான் அசையவே இல்லை. இன்னும் சிறிது கழிந்து, கீழே மௌனம் நிலவியது.

அவன் என்னதான் செய்கிறான் என்று பார்க்கத் தோன்றியது; ஒருபுறம் கூச்சமாகவும் இருந்தது. தலைமையை மட்டும் மெதுவாய்க் கீழே நீட்டிப் பார்த்தேன்;

மறு நிமிஷம் 'ஐயோ' என்று வாய் தொண்டைக்குள் மானரீகக் கதற, கைகள் தாமாக ஊன்ற கால்கள் பாய, மார்பு படபடக்க எழுந்து உட்கார்ந்தேன்.

அழகாய்ப் படுத்திருந்த வெள்ளைக் காரன் அங்கே இல்லை; அவனுக்குப் பதிலாக தாறுமாறாகவும் கோரமாகவும் வெட்டுண்டது போன்று ஓர் அரை உடல் அங்கே கிடந்தது!

நான் எதற்கும் பயந்ததில்லை; ஆனால் இப்போது பயந்துவிட்டேன். உன்னால் பயப்படாமல் இருக்க முடியுமா, கேட்கிறேன்? கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஓர் ஆளைத் தனியாகப் பார்க்கிறாய்; ஆனால் திடீரென்று அவன் இருக்கும் இடத்தில் பார்வைக்கே பயங்கரமான அரை உடல் கிடந்தால் பயப்படாமல் இருக்க முடியுமா உன்னால்? கண்கட்டு வித்தை நடக்கும் இடம் அல்ல என்பதையும் மறந்துவிடாதே.

நீ எப்படி பயந்திருப்பாயோ, நானும் பயந்துவிட்டேன். கீழே பார்க்கவும் எனக்குப் பயமாக இருந்தது. சிரித்து பயத்தை விரட்டலாம் என்று நினைத்தால் சிரிப்பும் வாயை இளித்துவிட்டது. ரயிலில் இருந்து இறங்கிவிடலாம் என்றால் அது தலை கிறுகிறுக்கும்படி ஓடிக் கொண்டிருந்தது. அபாயச் சங்கிலியை இழுக்கலாமே என்று நீ சொல்லலாம். ஆனால் அபாய காலத்தில் அந்த நினைப்பே உண்டாவதில்லையே!

பயம் ஐந்து நிமிஷங்களைச் சாப்பிட்டபின், என்னைத் தட்டி கொடுத்து சமாளித்துக் கொண்டேன். உயிராசை ஒருபுறம் இழுக்க, பயம் மறுபுறம் இழுக்க, இறுதியில் பயம் சிறிது பின்வாங்கியது.



பேய் பிசாசுகளைப் பற்றி நான் எப்போதும் நம்பியதில்லை; 'எப்போதும்' என்று சொல்லுவதில் பொய்க்கலப்பு இருக்கிறது; சிறு வயதில் இருட்டில் கூட போக மாட்டேன்; விவரம் அறிந்தபின் நான் பேய் பிசாசுகளை நம்பியதில்லை. அவை ரயில் பிரயாணம் செய்ததாய், ...அதுவும் மனித நண்பர்களுடன்...நான் கதையில்கூட படிக்கவில்லை. ஆகவே கீழே கிடப்பவன் ... அல்ல, ...கிடப்பது பேயோ பிசாசோ அல்ல.

பின்?

அவன் தன்னைத் தானே வெட்டிக் கொண்டிருப்பானா?

இது பைத்தியக்கார எண்ணம். வெட்டிக் கொள்ளும் போது ஒருத்தன் கூச்சல்கூட போடமாட்டானா? வெள்ளைக்காரனுக்கு ரத்தம்கூட உண்டு; இல்லையா.

என்ன யோசித்தும் எனக்கு சமாதானப் படவில்லை. யோசனையால் அச்சம் மங்கலுற்று விட்டது. குனிந்து நன்றாய்ப் பார்த்தேன்.



'பாண்ட், கோட்' இல்லாமல் ஒரு ட்ரௌஸர் மட்டும் அணிந்துகொண்டு அந்த உருவம் கிடந்தது. வலது கையும், வலது காலும் இருக்கவேண்டிய இடங்கள் காலி; மார்பின் வலப்பாகம் சரிந்திருந்தது. எல்லாவற்றிலும் கோரம், அந்த உருவத்திற்கு மூக்கே இல்லை.



நான் முதலில் பார்த்த பொம்மை அழகுக்குப் பதிலாகப் பயங்கரமான ...அல்ல; அசிங்கம், சே, அசிங்கமான உருவம்...

நினைப்பில் தடுமாறி என் கால் ஒன்று கீழே சாய்ந்து சப்தம் எழுந்தது.

'யாரது?' என்றது உருவம், குயிலொத்த குரலில்.

நிர்ப்பந்தத்தால் கீழே இறங்கினேன். உருவம் கண்களையும் திறந்து விட்டது; வலது கண் இருக்க வேண்டிய ஸ்தானத்திலிருந்து ஒரு பள்ளம் முறைத்தது; அங்கே கருவிழி, ஒன்றுமே இல்லை! மொத்தத்தில் அந்த உருவம், மனித உடலின் இடது பாதியாகத் தோன்றியது...

"யார் நீ" அதுவும் பயந்துள்ளது என்று அதன் குரலும், இடது கண்ணும் சாட்சி சொல்லின.

"நானா?. ..நான்..." என்று குழறினேன்.

"நீ எப்படி இந்த வண்டியில் வந்தாய்?" அந்த வெள்ளை அரை உடல் தன் இடது கையை ஊன்றி எழுந்திருக்க முயன்றது; முடியாமல் கீழே தொப்பென்று சாய்ந்தது; மீண்டும் சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்துவிட்டது.

"இது ரிஸர்வ் வண்டி என்று உனக்குத் தெரியாதா? கறுப்பு நாயே உனக்குப் புத்தி இல்லையா?"

கடவுளே! உனக்கு (கடவுளுக்கு அல்ல, உனக்கு) இந்த மாதிரி அனுபவம் ஏற்படவே கூடாது. எமனுக்கும் பதில் சொல்லிவிடலாம்; அரை உடலுடன் பேசுவது என்றால்...

"தெரியாமல்..."

"உடம்பு கறுப்பு என்றால் புத்தியுமா கறுப்பு உனக்கு?"

இருமியது; மறுபடி மெத்தைமீது விழுந்து இடக் கையால் சரிந்திருந்த மார்பின் வலப்பாகத்தை தடவிக் கொடுத்தது. அதனுடைய முணுமுணுப்பின் அர்த்தம் நான் நாசமாய்ப் போக வேண்டும் என்பதுதான். நான் ஏன் பேசுகிறேன்?

"ஏய், அந்த பெர்த்மீது, பாட்டிலுக்குப் பக்கத்தில் கிடக்கிறதே சின்ன சீசாவிலிருந்து இரண்டு துளி வாயில் ஊற்று".

அப்படியே செய்தேன். உலகத்தை ஆட்டும் மகா சக்தியின் கட்டளைக்குப் பணிவதுபோல்.

சிறிதுநேரம் அந்த உருவம் துடிதுடித்தது. கழுத்து அறுபட்டதும், கோழி துடிக்குமே. அதுபோல.

கடவுளே, புனாவைக் கொஞ்சம் முன்னாலாவது அனுப்பக்கூடாதா?... என்று என் நெஞ்சு துடிதுடித்தது.

கொஞ்ச நேரத்தில் அந்த உருவம் நிதானமுற்றது. இடது விழியையும் வலது பள்ளத்தையும் விழித்த அந்த பார்வை!

மறுபடியும் அது கஷ்டப்பட்டு எழுந்து அமர்ந்தது.

"நீ எப்போது இங்கே வந்தாய்?" அதன் குரலில் அதிகாரமோ ஆத்திரமோ இல்லை; சாதா உணர்ச்சி ஒலித்தது. நான் உண்மையைக் கூறினேன்.

"அப்படியானால் நீ என்னை உடையுடன் பார்த்திருக்கிறாய்!"

நான் ஒப்புக்கொண்டேன்.

"உட்காரேன்" என்ற குரலில் சாமானியத்தன்மை மட்டும் அல்ல, ஒரு விதப் பணிவும் இருந்தது. உட்கார்ந்தேன்.

"பிராந்தி கொஞ்சம் சாப்பிடுகிறாயா. எடு..."

எடுத்துக் கொடுத்தேன்; நான் சாப்பிடவில்லை. இடது கையில் கிளாஸைப் பிடித்து குடித்துக் கொண்டே அந்த அரை உடல் கேட்டது; என்னை இப்படிப் பார்க்க உனக்குப் பயமாக இல்லையா?"

நான் இப்போது பயப்படவில்லை. அந்த உருவம் பேய் பிசாசு அல்ல என்று எனக்கு நிச்சயமாகிவிட்டது. சாதாரண மனித ஜன்மம்; ஆனால் வெள்ளைப் பிறப்பு.

"நீ கொடுத்தாயே, சின்ன சிசாவிலிருந்து மருந்து. அது மார்வலிக்கு..."

அதற்கு சிகரெட் பற்ற வைத்துக் கொடுத்தேன்.

"ஆடை எல்லாம் அணிந்திருந்த போது நான் எப்படி இருந்தேன்?"

"உம்" என்ற முனகலின் பொருள் வைத்துப் பதில் சொன்னேன்.

"இப்போது?"

பதிலை வேண்டுகிற கேள்வி அல்ல அது; பதில் அந்த உருவிலேயே இருந்தது. இடது கண்ணில் நீர் படிந்தது; வலது பள்ளத்தின் அடியில் நீர் ஊற்று இருக்கலாம். தென்படவில்லை. அந்த உருவம்... பாவம், மனிதன் என்று சொல்ல முடியாவிட்டாலும், அரைமனிதன் என்பதால் என்ன நஷ்டம்? அரைமனிதன் வருந்தினான்.

"நான் பிறவிலேயே இப்படி இருந்தேன் என்று நினைக்கிறாயா?"

அவனை அறிய வேண்டும் என்ற ஆவல் எனக்கும் அதிகமாய் இருந்தது.

"நான் குழந்தையாக இருக்கும் போது ரொம்ப அழகாய் இருந்தேன். என் தாயாரின் குழந்தைகளில் நான்தான் ரொம்ப அழகு என்று பெருமைப்படுவாள். இப்போது அவள் என்னைப் பார்த்தால்...நல்லவேளை! அவள் போய்விட்டாள், அவள் ஆன்மா சாந்தி அடைவதாக!"

அரைமனிதன் பெரிய மூச்சு ஒன்றைச் சீறினான்; அதாவது, மூக்கு இருக்கவேண்டிய இடத்திலிருந்த துவாரத்திலிருந்து 'புஸ்ஸ்' என்ற சத்தம் வந்தது.

''எத்தனை பெண்கள் என் காதலைவேண்டி என் பின்னால் அலைந்தார்கள்? எத்தனை பெண்களுடன் நான் காதல் நாடகம்...சட்டத்திற்கு விரோதமாக... நடத்தினேன்! இப்போது மேரிகூட என்னைப் பார்க்கப் பயப்படுவாள்..."

"மேரி யார்'' என்றேன்; என் ஆத்திரம் எனக்கு.

அவனுடைய இடது கண் ஒரு முழு சூரியனைப் போல பிரகாசித்தது.

"மேரி என் கண்மணி. என் காதலி. என் உயர்வான பாதி! இலண்டனிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் நடனவிருந்து நடக்கும்போது அவளைச் சந்தித்தேன். கன்னியர் கும்பலில் அவளிடம் என் மனம் ஏனோ சென்றது. டான்ஸுக்கு அவளை அழைத்தேன்...அந்த டான்ஸை நினைத்தாலே...ஆஹா! எவ்வளவோ பெண்களுடன் ஆடியிருக்கிறேன்; ஆனால் அவள் எவ்வளவு ஹிதமாக இருந்தாள்! மறுநாள் விருந்தாளியாக அவளால் அழைக்கப்பட்டேன்..."

"தனியாகவா இருந்தாள்".

''இல்லை, தகப்பனாருடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். விருந்தின் போது அவளுடைய தகப்பனாரிடம் என் நிலைமையைச் சொல்லி, அவளை மணக்க விரும்புவதையும் ஜாடையாகச் சொன்னேன். நல்ல மனுஷர், ஒப்புக் கொண்டார். பிறகு அவளிடம் தனிமையில் என் காதலை விவரித்து விவாகத்தைப் பிரேரேபித்தேன்...



நான் இப்போது பயப்படவில்லை. அந்த உருவம் பேய் பிசாசு அல்ல என்று எனக்கு நிச்சயமாகிவிட்டது. சாதாரண மனித ஜன்மம்; ஆனால் வெள்ளைப் பிறப்பு.

அப்போது அவளுடைய முகம் எப்படி சிவந்தது! ரோஜா, ரோஜா!"

புனா நெருங்கிக் கொண்டிருந்தது அரைமனிதனின் காதல் காப்பியத்தைக் கேட்டுக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை. கதையின் முடிவுக்கு அவனைத் துரத்தினேன்.

"நீ எப்படி இப்படி மாறினாய்?"

அரைமனிதன் பரிதாபமாய்ச் சொன்னான், "மேரி என்னை இனி திரும்பியும் பார்க்கமாட்டாள். நான் எந்தப் பெண்ணுடனும் டான்ஸ்கூட செய்ய முடியாது! ஐயோ, நான் செத்திருக்கக் கூடாதா?..."

''மனைவியின் காதல் உனக்கு ஆறுதல் அளிக்கும்...''

''யார் கண்டார் அவளுக்கோ இளம்பருவம்... நான்...என்னை மனிதன் என்று யாரும் கூறமுடியாது. எனக்குக் கலியாணமாகி மூன்று வருஷங்கள் தான் ஆகின்றன. என்னால் அவளுக்கு இரண்டுமாதங்கூட சுகம் இல்லை... அந்த பாழும் ஜெர்மன் எருமைகள் எதற்காகவோ சண்டை ஆரம்பித்து விட்டார்கள்; அவர்கள் நாசமாய்ப் போக! எனக்கு யுத்தத்தில் சேருவதற்கு இஷ்டமில்லை; ஆனால் சர்க்காரின் கட்டளையை யாரால் மீறமுடியும்? ஜெர்மானியனோடு சண்டை போட்டு உயிர் விட்டாலும் கௌரவமுண்டு. இந்த மஞ்சள் பேய்களுடன் குள்ள ஜப்பானியர் களுடன் சண்டை போட என்னை அனுப்பிவிட்டார்கள். அஸ்ஸாமில் ஜாப்கள் குண்டு போட்டார்கள் அல்லவா. அப்போதுதான் எனக்கு உடம்பெல்லாம் காயம். ஒரு கையும் ஒரு காலும் போச்சு, ஒரு கண்ணில் கண்ணாடி புகுந்தது! மூக்குக் காணாமல் போய்விட்டது. இதோ இந்த மார்பைப் பார், ஒரு பக்கம் சரிந்துள்ளதல்லவா? அடிக்கடி சகிக்க முடியாதபடி வலி எடுக்கிறது. அதற்கு மருந்து, ஏன் மண்டையைப் பார்..."

பார்த்தேன். ஒட்டு போட்டாற் போலத் தோன்றியது இரு பிளவாக.

"என் மூளைகூட சரியாக வேலை செய்வதில்லை? அதற்காகவும் அடிக்கடி மருந்து சாப்பிடுகிறேன்.. .இவ்வளவும் போன பிறகு உயிர்மாத்திரம் ஏன் தப்பியதோ தெரியவில்லை. ஆஸ்பத்திரியில் ஒரு வருஷம் கிடந்தேன்; என்னைக் கொன்றுவிடும்படி டாக்டர்களைக் கெஞ்சினேன். என் மூளை மிகவும் உயர்ந்ததாம்; கைகால் எது போனாலும் அது நாட்டுக்கு உபயோகப்படுமாம். அதற்காக என் உயிரை உடலுடன் ஒட்டிவைத்து விட்டார்கள். பாவிகள்! ஆனால் என் மூளை சரியாக இல்லையே!"

அரைமனிதனின் புலம்பல் எனக்கு இரக்கத்தை உண்டாக்கியது. சிறிது கழித்து கேட்டேன், "நான் முதலில் பார்க்கும்போது நீ முழுமனிதன் போல் இருந்தாயே?"

என் தலையை வெளியே அனுப்பினேன். சுமார் பத்து நிமி ஷங்கள் நான் உள்ளே பார்க்கவே இல்லை.

''சரி'' என்றான் அவன்; திரும்பினேன். கைகால் மூக்கு எல்லாவற்றையும் கோர்த்துக்கொண்டு முன் போலவே முழுமையாகத் தோற்றம் அளித்தான் அவன். அந்த போலி மூக்குதான் எவ்வளவு அழகாய் பொருந்தியிருந்தது! 'பொம்மைபோல்' அல்ல, பொம்மைதான் பாவம், அவன் 'ஸ்டிக்கை' எடுத்துக்கொண்டு கம்பீரமாக, ஆனால் சற்று சிரமத்துடன் கதவருகில் சென்றான். பக்கத்து வண்டியில் உட்கார்ந்திருந்த நண்பன் கைலாகு கொடுத்து கீழே இறக்க இருவரும் புறப்பட்டனர்.

''என் நண்பனே, நான் வருகிறேன்" என்று என்னிடம் விடை பெற்றுக் கொண்டு 'டக்டக்' என்று அவன் நடந்ததைப் பார்த்தால், அவன் அரை மனிதன் என்று எவனாலும் கண்டு கொள்ள முடியாது.



கொஞ்ச நேரத்தில் அந்த உருவம் நிதானமுற்றது. இடது விழியையும் வலது பள்ளத்தையும் விழித்த அந்த பார்வை!

''அந்த கண்ராவியைப் பார்க்கிறாயா? இதோ, இந்த கோட்டையும் பாண்டையும் எடுத்துப் பார்..."

அந்த இரண்டிற்கும் கீழே கட்டையால் செய்யப்பட்ட ஒரு கை, ஒரு கால் பூட்டுடன்!...ஒரு போலி மூக்கு, மூக்குக்கண்ணாடி, சின்ன மருந்து சீசா...இவ்வளவையும் தரித்துக் கொண்டால் அவன் முழுமனிதன் போலக் காட்சி அளிப்பான்!

எனக்கு ஒரே திகைப்பு; நீக்கிவிட அவன் விரும்பவில்லை போலும்.

''பத்து நிமிஷத்தில் புனா வந்துவிடும். நீ கொஞ்சம் ஜன்னலுக்கு வெளியில் பார்த்துக் கொண்டு இரேன்". உடல் இப்போது கனமாய்த்தான் இருக்கும்!

அவனுடைய இடது கையில் கைத்துப்பாக்கியிருந்தது. அதை என்னிடம் காட்டிக் கூறினான். "சகிக்க முடிந்தவரையில் சகித்துப் பார்ப்பேன்; கடைசியில் இந்த கைத்துப்பாக்கி இருக்கவே இருக்கிறது. மாய்த்துக் கொண்டு விடுவேன்!"

அவனுடைய பேச்சில் வீரத்தன்மை பீறிட்டது.

புனா ஸ்டேஷனில் ரயில் நின்றது. அவன் தொப்பியைத் தலைமீது வைத்துக்கொண்டான். போலியான வலது கரத்தை கால் சட்டையில் புகுத்தினான். இடது கையில் 'வாக்கிங் ஸ்டிக்கை'...

அவன் நடந்து செல்வதை பிளந்த வாயுடன் பார்த்துக் கொண்டிருந் தேன். வெள்ளைக்காரர்கள் கெட்டிக் காரர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அரை மனிதனை முழு மனிதனாய்த் தோன்றச் செய்யும் சாமார்த்தியமும், அறிவும் உனக்கு எனக்கு உண்டா. வெள்ளைக்காரன், வெள்ளைக்காரன்தான்.

ஆகையால், வெள்ளையரின் ஈடும் இணையும் அற்ற அறிவுக்கு என் வணக்கம் செலுத்துகிறேன்.

**நன்றி :**
**எம்.வி. வெங்கட்ராம் கதைகள்**
**கண்மணி வெளியீடு.**

• • •





# எது வள்ளுவம்?

விடியும்போது
வானம் வள்ளுவம்;
பொழியும் போது
மழை வள்ளுவம்:

எரிக்கவேண்டியதை எரிக்கத்
தவணை கேட்காத
நெருப்பும்

அற்ப ஆயுளில்
முடிந்து போகாதபடி
அறத்தின் சுவாசப் பைக்கு
அவசியமாகும்
காற்றும் வள்ளுவம்.

கர்ப்பம் தரிக்கும்போது
பூமி வள்ளுவம்.

பயிர்களின் தாகத்தை
நினைத்தபடி பாயும் நதியின்
ஈர ஆன்மாவில்,

இன்றுகளின் உள்ளே இருந்து
கைகால்கள் அசைக்கும்
நாளைகளுக்குப் பால்சுரக்கும்
காலத்தின் மார்புகளில்
வாழ்வாங்கு வாழும் மனிதத்தில்
வாழ்வது வள்ளுவம்.

நட்சத்திர ஒளியில்
நனையும் வார்த்தைகளில்,
விதையுள்ள எண்ணங்களில்
வேர்விடும் உணர்வுகளில்,
மனிதமும் வள்ளுவமும்
கைகுலுக்கிக்கொள்கின்றன.

அடங்கி நிற்பவன்
உயரத்தை அளந்து சொல்ல
மலைகளின் கைகளில்
அளவுகோல்கள் கொடுக்கிறது
வள்ளுவம்.

அது,
அலைகளைப்
பிளந்துகொண்டு வெளியேவந்த
கடலின் ஆழம்
அதிசயிக்கும் படி,
ஆயிரம் ஆயிரம் காணிப் பரப்பளவில்
ஒழுக்கம் உள்ளவர் உள்ளத்தைப்
பயிரிட்டு வைக்கிறது.



☐ ஈரோடு தமிழன்பன்

வள்ளுவம்
இலைகளில் பசுமையையும்
மலர்களில் வண்ணங்களையும்





எழுதிய கையோடு
மனித
இதயங்களில் அன்பை
எழுதி வைக்கிறது.

நிலாவில்
குளிர்ச்சியை நிரப்பும் முன்
ஞானிகள் நெஞ்சில்
ஊற்றுகள் திறக்கிறது.





பிறர்க்கெனத் தன்
எலும்புகளையும்
ஆவணம் செய்து வைப்பவன்
இறுதிநாளில்
சிரபுஞ்சிக் கண்களோடு
வழியனுப்பி வைப்பதும்,

அவன் பெயர் சொல்லி
அகன்ற உலகத் தெருக்களில்
அறம்நடுவிழாவை நடத்துவதும்
வள்ளுவம்.

அது
சூரிய வாசனை உள்ள
சொற்களால்
பாடநூல் தயாரித்துச்
சொல்லிக் கொடுக்கிறது
கற்றவழி நடப்பவர்க்கே
பட்டமளிப்பு விழா நடத்துகிறது.

ஆள்பவன்
மக்களால் ஆளப்பட்டவனே
என்று சொன்ன அதன் பொறுப்பில்
அரண்மனைச் சாவிகள்
அடைக்கலமாக,

மகுடங்கள்
மாணிக்கக் கற்களை உதிர்த்துவிட்டு
மக்களைப் பதித்துக்கொள்கின்றன.



காதலர்கள்
முத்தங்களைத் தொகுக்கும்
காடுகளில்,
பூக்களைத் திறந்துகொண்டுவந்து
வாழ்த்துப் பொழிகிறது
வள்ளுவம்.

அவர்கள் பிரிவுகளில் எல்லாம்
காதலை வளர்க்க
வள்ளுவம், செய்வது
உரத்தொழிற்சாலைகளில்
அவசர உற்பத்தி!

இல்லற நாள்களில்
மழலைகள் கைகளில்
கிலுகிலுப்பை அசைத்து
மாயக்
கிலுகிலுப்பை ஊட்டும் வள்ளுவம்,

வரும்
விருந்தை வரவேற்கும்
வாசலில் கோலம் போடப்
புள்ளியும் கோடும்
அள்ளிக் கொடுக்கிறது.

பசித்தவன் வயிற்றில்
பற்றி எரியும் நெருப்பிடம்
படைத்தவன்
முகவரியைக் கொடுத்துப்
'பாதகம் இல்லை தாக்கு!'
என்று
அனுப்புகிற வள்ளுவம்

ஈகையாளன் கரங்களில்
'மறுக்காதே
இந்தா பிடி' என்று
புகழ்கள் புகழும் புகழை
எடுத்துப் போடுகிறது.

கோடிகோடி
எலும்புகளை மென்றுதின்ற
சாவு,
இசைபட வாழ்பவன்
எலும்புகள் கிடைக்காமல்
ஓடி ஒளிகிறது!

வள்ளுவம்
எமது நெறி என்று மனிதர்
சொல்லும் முன்
சொல்லியது இயற்கை,
'வள்ளுவம்
எமது நெறி!'

– 'கோட்டம் முதல் குமரி வரை' மலரிலிருந்து...

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக்கொள்ளக் கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை உலகிற்கு அளித்தது தமிழ். 2000 வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பை அடைந்தவர். அவர் தந்த திருக்குறள் தலைசிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

– சர். ஆர்.கே. சண்முகம்





பட்டுக்கோட்டை அழகிரி நூற்றாண்டு விழா

## தளராத உறுதியும், மாறாத கொள்கையும் உடையவர்!

– தந்தை பெரியார்



"நான் காங்கிரசில் இருந்த பொழுது தோழர் அழகிரிசாமி என்னோடு பணிபுரிந்து வந்தார். நான் அரசியல் பணியிலிருந்து விலகி, சமுதாயப் பணிபுரியத் துவங்கிய 1924ஆம் ஆண்டிலிருந்து அவரை எனக்கு நன்கு தெரியும். அது முதல் 1948 வரையில் ஒரே நிலையில் பணியாற்றி வந்தார்.



அவரைப்போல் தளராத உறுதியுடன் தொடர்ந்து தொண்டாற்றியவர்கள் யாராவது உண்டா என்றால், கண்டு பிடிப்பது சிரமம் என்று துணிந்து கூறுவேன். 1949ஆம் ஆண்டில் முடிவெய்துகிற வரையில் ஒரே கொள்கையுடனும், உறுதியுடனும் நமது இயக்கத்திற்காகத் தொண்டாற்றினார். அவர் கொள்கை மாறியதோ, கருத்து வேறுபாடு கொண்டதோ கிடையாது.

தோழர் அழகிரி நல்ல பேச்சாளி, மக்களின் சிறப்பாக இளைஞர்களின் அபிமானம் பெற்றவர். அவர் நல்ல செலவாளி, தனக்கென்று ஒரு காசும் சேர்த்துக் கொள்ளாதவர். அவருக்கு அடிக்கடி பணக் கஷ்டங்கள் வருவது சகஜம். ஆனால், அதில் தனக்கு எவ்வித தொல்லைகள் ஏற்பட்டபோதிலும் தன் கருத்தையோ, தொண்டையோ கொஞ்சங்கூட மாற்றிக் கொண்டது கிடையாது".

## அழகிரிசாமியே நீயா மறைந்தாய்?

– பேரறிஞர் அண்ணா

சுயமரியாதை இயக்கத்தின் சுடர் –
தன்மதிப்பு இயக்கத்தின் தளபதி!
முடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும்
முன்னணித் தலைவன்!
சீர்திருத்தச் செம்மல்!
சொற்செல்வன்–சோர்வற்ற உழைப்பாளி!
தன்னலம் மறந்து, தன் நாட்டுக்குப் பணியாற்றிய
பண்புடையோன்!
அறிவுப் பாதையில் – அங்கும் இங்கும் எங்கும்
கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய
பகுத்தறிவாளன்!
அறியாமையை அகற்ற அஞ்சா
நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த
ஆண்மையாளன்!
"கல்லடியா – கவலைப்படாதே!
சொல்லடியா – சோர்வடையாதே!
பகைவரின் படையா – பயப்படாதே!
எதிர்க்கட்சியினரா – ஏமாந்துவிடாதே!
சனாதனமா – அதில் சாய்ந்துவிடாதே!
சதியா – அதனைச் சாகடி!
மதமா – அதனை மங்க வை!
மாசுகளைத் துடை; மன்பதையின்
மாணிக்கமாக விளங்கு;
மரியாதையைப் பெறு!
சுயமரியாதையைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ
முற்படு!
இதுவே உன்னுடை குறிக்கோளாக இருக்க
வேண்டும்!



என்று எங்கு சென்றாலும்
எக்காளமிட்டு மூலை
முடுக்கெல்லாம் முரசொலி கிளப்பி
– தன்மான இயக்கத்தின்
தளபதியாக விளங்கி அஞ்சா
நெஞ்சுடன் அறிவுப் பணிபுரிந்து
வந்த அழகிரிசாமியே நீயா
மறைந்தாய்?

# பகுத்தறிவுபுரியின் பாதுகாவலன் பட்டுக்கோட்டை அழகிரி

□ முதல்வர் கலைஞர்

அண்ணன் அழகிரி அவர்கள் மாரியம்மன் கோவிலில் தான் அவர் பகுத்தறிவு கற்றார். அவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் அவருக்குப் போதகராக ஆரம்பக் காலத்திலே இருந்தவர் மாரியம்மன் கோவில் பூசாரி பக்கிரி சட்டாம்பிள்ளை என்பவர். அந்தப் பக்கிரி சட்டாம் பிள்ளையைப் பற்றி அடிக்கடி அண்ணன் அழகிரி அவர்கள் எங்களிடத்திலே நினைவுபடுத்துவார். அவர்தான் புராணக் கதைகளையெல்லாம் அண்ணனுக்குச் சொல்ல, இவர் அந்தக் கதைகளைக் கேட்டு எதிர்க் கேள்விகள் போட, அவர் அந்தக் கேள்விகளுக்கு பதிலிறுக்க அதன் மூலமாக பகுத்தறிவு புரியினுடைய பாதுகாவலனாக பரிணமிக்கக் கூடிய ஒரு நிலை அண்ணன் அழகிரி அவர்களுக்கு ஏற்பட்டது.

### அழகிரி உடல் நலிவுற்ற நேரத்தில் அண்ணா செய்த உதவிகள்

அவரை 'அஞ்சாநெஞ்சன்' என்றும் 'தளபதி' என்றும் அழைக்கிறோம். இதற்கெல்லாம் மேலாக 'கோடையிடி அழகிரிசாமி' என்று அந்தக் காலத்திலே அண்ணன் அழகிரியை அழைத்த அந்த நினைவும் எனக்கு இன்றைக்கும் நெஞ்சத்திலே பசுமையாக இருந்து கொண்டிருக்கின்றது.

அண்ணா அவர்கள் அழகிரி உடல் நலிவுற்றிருந்த காலத்திலே செய்த உதவிகளை பேராசிரியர் இங்கே குறிப்பிட்டார். 'சந்திரோதயம்' என்று ஒரு நாடகம் அண்ணாவே எழுதி அண்ணாவே நடித்த நாடகம். அதிலே மிச்சப்பட்ட நிதி இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய். அந்த நிதியை திருவொற்றியூர் டி. சண்முகம் அவர்களிடத்திலே அண்ணா அவர்கள் ஒப்படைத்து "இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். தேவைப்படும்போது பெற்றுக் கொள்கிறேன்" என்று கொடுத்து வைத்திருந்தார். அண்ணன் அழகிரி உடல் நலிவுற்று பிழைப்பாரா என்பது கேள்விக் குறியாக இருந்த காலக்கட்டத்தில் இங்கே தாம்பரம் சானிடோரியத்திலே அழகிரி சேர்க்கப்பட்டிருந்தார்.

அழகிரிக்கு அண்ணா அவர்களிடத்திலே அதிக உறவு இல்லை. சில மனக்கசப்புகள் உண்டு. ஆனால் அந்த மனக்கசப்புகளுக்கு அப்பால் அண்ணா அவர்களிடத்திலே ஒளிவிட்டுக் கொண்டிருந்த மனிதாபிமானம், மனிதநேயம், பாசம், பகுத்தறிவுபுரியை இன்றைக்கு உருவாக்கித் தந்தவர் தளபதி அழகிரி என்கின்ற நன்றி உணர்வு – இது பட்டுப் போகாமல் இருந்த காரணத்தால் இரவு 12 மணிக்கு அழகிரி மூச்சுத் திணறல் ஏற்பட்டு தவிக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் அண்ணா திருவொற்றியூருக்கு ஓடோடிச் சென்றார். இரவு 12 மணிக்கு திருவொற்றியூர் டி. சண்முகம் பிள்ளையின் வீட்டுக் கதவைத் தட்டி, "அந்த மூவாயிரம் ரூபாயைக் கொடுங்கள்" என்று கேட்டார். அவர், "ஏன்?" என்று கேட்டதற்கு, "கொடுங்கள், தேவைப்படுகிறது" என்று கூறிவிட்டு, அந்தத் தொகையை நண்பர் மதியழகனிடத்திலே கொடுத்து – "இதைக் கொண்டு போய் அழகிரியிடத்திலே கொடுத்து விடு" என்றார்.

அதற்குள்ளாக அழகிரி பிழைக்கமாட்டார் என்ற நிலையை டாக்டர்கள் புலப்படுத்தி, அழகிரி அவர்கள் செங்கற்பட்டு புகைவண்டி நிலையம் சென்று அங்கிருந்து புகை வண்டியில் புறப்பட ஒரு வினாடி இருக்கின்ற நேரத்திலே நண்பர் மதியழகன் ரெயிலுக்குள் சென்று அழகிரியைச் சந்தித்து, "அண்ணா இந்த மூவாயிரம் ரூபாயை உங்கள் சிகிச்சைக்காக கொடுத்தார்" என்று சொன்னதும், அதை வாங்கிய அழகிரி அவர்கள், மதியழகனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "மதியழகா, அண்ணாத்துரையிடம் போய்ச்சொல், நண்பர்கள் யார் என்பதை அழகிரி புரிந்துகொண்டான் என்பதைச் சொல்" என்று கூறிய அந்தச் சொல்லை மதியழகன் மரணமடைகின்ற வரையிலே எங்களைச் சந்திக்கும் போதெல்லாம் அதைச் சொல்லி சொல்லி விம்முவார். அப்படிப்பட்ட சரித்திர நிகழ்ச்சிகள் எல்லாம் அழகிரியின் வரலாற்றிலே இடம் பெற்றிருக்கின்றன.

### 'கலைஞர்' என்று முதன்முதலாக எனக்கு பட்டம் சூட்டியவர்

நானும் நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களும் நடித்து அரங்கேற்றப்பட்ட தூக்குமேடை நாடகத்திற்கு தலைமை வகித்து "கலைஞர்" என்று அவருடைய வாயினால் என்னை முதன்முதலாக அழைத்துப் பட்டம் சூட்டினார்.

அது மாத்திரமல்ல, தஞ்சாவூரில் கிருஷ்ணா தியேட்டரை நடிகவேள் ராதா அவர்கள் தன்னுடைய வீடாகக் கொண்டு அங்கே வசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அந்த நாடகத்தை எழுதுமாறு அவர் என்னைக் கேட்டுக் கொண்டார். நான் அந்த நாடகத்திற்கு கதை, வசனங்கள், காட்சி அமைப்புகள் ஆகியவைகளையெல்லாம் எழுதிக் கொடுத்து, அந்தத் தியேட்டரில் தங்கியிருந்த காலத்தில் எங்களுடனேயே இருந்து ஒவ்வொரு நாளும் நான் எழுதி முடிக்கின்ற ஒவ்வொரு காட்சியையும் படித்துப் படித்து வியந்து பாராட்டியவர் அண்ணன் அழகிரி அவர்கள்.

அவர் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தபோது நான் திருவாரூரிலே இருக்கிறேன். எனக்கு அந்த நேரத்தில் உடல்நிலை மிகவும் கெட்டு, படுத்த படுக்கையாக இருக்கிறேன். அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி திருவாரூருக்குக் கிடைத்தவுடன் உடனடியாக காரை எடுத்துக் கொண்டு தஞ்சைக்குச் செல்கிறோம். தஞ்சையிலே தான் அவர் மறைந்தார்.

தஞ்சையிலே அவர் வீட்டுத், திண்ணையிலே அமர்ந்திருக்கும்போது ஒரு மணியார்டர் அழகிரி பெயருக்கு வருகிறது.

யாரோ ஒருவர் அண்ணாவை ஒரு ஊருக்கு கூட்டத்திற்கு அழைத்தவர்கள், அண்ணாவின் நிபந்தனையான, கூட்டத்திற்கு யார் அவரை அழைத்தாலும் 200 ரூபாய் அல்லது 300 ரூபாய் அழகிரியின் சிகிச்சை நிதிக்கு அனுப்பிவிட்டு, அந்த ரசீதை தனக்கு அனுப்பினால்தான் கூட்டத்திற்கு வருவேன் என்ற கட்டளைப்படி அனுப்பப்பட்ட மணியார்டர்தான் அது. □



பத்தாம் வகுப்பு, +2 படித்த மாணவர்களுக்கு – வழிகாட்டி

# என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்?

□ Dr.P.T. சூரியகுமார்

### தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் மேற்கண்ட குறளுக்கேற்ப, மாணவ, மாணவிகள் பள்ளிக் கல்வியை முடித்த பின் தங்களுக்கு விருப்பமுள்ள ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து, அத்துறை சார்புடைய பல நூல்களைப் படிப்பதன் மூலமும், அந்தத் துறையோடு தொடர்புடைய சான்றோர் மற்றும் வல்லுநர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதாலும், அத்துறையில் அறிவு பெருகி, உலக மக்கள் எல்லோராலும் புகழப்படுகின்ற ஒரு இளைஞனாக திகழ முடியும். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் பெருமானின் வாக்கிற்கிணங்க ஒரு துறையைத் தேர்ந்தெடுத்த பின், அத்துறையில் சமுதாயப் பணியில் ஆர்வம் கொண்டு, மனித இன மேம்பாட்டிற்காகப் பாடுபடுவதன் மூலம், சமுதாயத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற முடியும். ஒவ்வொரு ஆணின் வெற்றிற்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பது எவ்வளவுக் கெவ்வளவு உண்மையோ அது போல் ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்குப் பின்னாலும் ஆர்வமும், தன்னம்பிக்கையும், கடின உழைப்பும், அயராது பாடுபடுதலும் நிச்சயம் இருக்கும். தன் அறிவையும், ஆற்றலையும் ஒருங்கிணைத்து, முனைந்து, செயலாக்குகின்ற போது, வெற்றிப்படியை அடைய முடியும்.

எடுத்துக்காட்டாக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் தனிப்பெரும் நிதி. தந்நிகரில்லாத தமிழ்க் காவலர். தமிழ் நாவலர். தமிழ்த் தொண்டாற்றும் தலைமைச் சான்றோர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் பல புரட்சியைச் செய்தவர். தமிழகப் பெருமையை மூச்செனக் கொண்டவர். செங்கோல் ஏந்தியிருந்தாலும் அவர் சிந்தையில் செங்கோலோச்சுவது செந்தமிழே. கலைஞர் கருவிலேயே எழுத்தாளராக உருவாகி வந்த ஒரு இலக்கியப் படைப்பாளி. இத்தகைய அத்தனைச் சிறப்புகளையும் பெற்றிருக்கின்ற கலைஞரின் வெற்றியின் இரகசியம் என்னவென்றால், அவருடைய ஆர்வம், தனித்திறமை மற்றும் அயராது உழைத்தலும் தான்.

இன்று நம்மில் எத்தனையோ பேர் தினமும் கூறும் தாரக மந்திரம் 'எனக்கு நேரமே இருப்பதில்லை' என்பது தான். மாநிலத்தின் முதல்வருக்கென்று ஒரு நேரம், சாதாரண குடிமகனுக்கு என்று ஒரு நேரம் என்று இல்லை. அனைவருக்கும் 24 மணி நேரம் தான். ஆனால் நாம் அதனை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதில் தான் விஷயமே இருக்கிறது.

### வெற்றியின் இரகசியம்

காலம் என்பது தானாக வருவதில்லை. நாமே உருவாக்கிக் கொள்வது தான். 'ஒரு நிமிடம்' என்று நாம் எளிதாகக் கூறி விடுகிறோம். ஆனால் அந்த ஒரு நிமிடத்தில் நம் நாட்டில் 'எத்தனை இலட்சம்' மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன தெரியுமா? நம் இளைய சமுதாயத்தினரில் பெரும்பாலோர் தம் நேரங்களை தொலைக்காட்சியை நோக்குவதிலும், குறிப்பாக கிரிக்கெட் பார்ப்பதற்கு என்று தான் செலவிடுகின்றனர். ஆனால் இவர்களில் எத்தனை பேர் நல்லதொரு கிரிக்கெட் வீரராக வருவர் என்றால் அந்த எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணி விடலாம். நம்மில் பலர் எதனையும் திட்டமிடுவதில்லை. எந்த ஒரு செயலையும் திட்டமிட்டுச் செய்தால் தான் வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்க இயலும். எனவே மாணவ மணிகள், தங்கள் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கும் படிப்பை, தேர்ந்தெடுப்பதில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். 'செல்லும் பாதைகள்' பல இருக்கலாம். ஆனால் அவற்றில் சரியான 'எந்தப் பாதையில்' சென்றால் நமக்கு வேண்டிய இடத்தை விரைவில் அடையலாம், என்பது தெரிந்திருக்க வேண்டும். அதற்குச் சரியான அணுகுமுறை தேவை. அப்படி சிறந்த அணுகுமுறையோடு



செயல்பட்டால், நாமும் கணிதமேதை இராமானுஜம் போல், கவிக்குயில் தாகூர் போல், கணினியில் பில்கேட்ஸ் போல், 'செஸ்'ஸில் விஸ்வநாதன் ஆனந்த், விஞ்ஞானி அப்துல்கலாம் போல் இவ்வுலகை வலம் வர முடியும். இவர்கள் அனைவரின் வெற்றியின் அடிப்படை இரகசியம் என்னவென்றால் அந்தந்தத் துறையில் அவர்களுக்கு இருந்த, இருக்கின்ற ஆர்வம், தனித்தன்மை மற்றும் அயராது உழைத்தல் தான்.

பத்தாம் வகுப்பு முடித்து விட்டு, பதினொன்றாம் வகுப்பு செல்லும் மாணவர்களுக்காகவும், பனிரெண்டாம் வகுப்பு முடித்து விட்டு கல்லூரியின் வாயிலில் உயர் கல்விக்காக அடியெடுத்து வைக்க காத்திருக்கும் மாணவச் செல்வங்களுக்காகவும், இந்தக் கட்டுரை வழங்கப்படுகிறது. போட்டிகள் நிறைந்த இவ்வுலகில், சிறந்த கல்வியைப் பெற்று, அதற்கேற்ற வேலை வாய்ப்பு பெற நல்ல அணுகுமுறை தேவை. மேற்கூறியது போல் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு தனித்திறமை உள்ளது. அந்தத் திறமையை வெளிக் கொணரும் வகையில் நல்லதொரு படிப்பை தேர்ந்தெடுப்பது சாலச் சிறந்தது. கல்லூரிப்படிப்பு, உயர்கல்வி இவற்றிற்கு அடித்தளமாக அமைவது +2 தான். பத்தாம் வகுப்பு வரை கல்வி என்பது ஒரு வீடு கட்டுவதற்கு அடித்தளம் போடுவது போன்றதாகும். எனவே பத்தாம் வகுப்பு முடிக்கின்ற மாணவர்கள் மேற்கொண்டு பள்ளி உயர்கல்வி, அதாவது பதினொன்றாம் வகுப்பு படிப்பதே நல்லது. அல்லது மேற்கொண்டு Diploma Certificate போன்ற தொழில்துறை சம்பந்தமான துறைகளில் பயில்வது, கட்டாயக் கடமையாகும்.

பத்தாம் வகுப்பு வரை படிப்பது கல்வியில் திருப்புமுனை. ஆனால் +2 படித்து வெற்றி பெறுவது வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைகின்றது. பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் ஓர் வேண்டுகோள். பத்தாம் வகுப்பு படித்தவுடன் ஒரு வேலைக்குச் செல்லலாம் என்று நினைக்காமல் மேற்கொண்டு அகாடெமிக் அல்லது தொழிற்துறையைச் சார்ந்த கோர்ஸுகளில் சேர்ந்து பயில வேண்டும். பணவசதி குறைவு என்ற காரணத்திற்காக பள்ளிப் படிப்பை தொடராமல் இருப்பது மிக பெரிய தவறு. நன்றாகப் படிக்கின்ற மாணவ–மாணவிகளுக்கு அரசாங்கம் பலவழிகளில் உதவுகின்றது என்பதை நினைவூட்ட விரும்புகின்றேன்.

பத்தாம் வகுப்பு படித்து வெற்றிப் பெற்ற மாணவர்கள் 1. Academic Courses 2. Vocational Courses என்ற இருவகை பள்ளி மேற்படிப்பில் பயிலலாம். Academic Courses என்பது பள்ளிகளிலே மேற்கொண்டு 11, 12ஆம் வகுப்பு படித்தல் ஆகும். Vocational Courses (தொழிற்துறை) என்பது பாலிடெக்னிக்குகளில் சேர்ந்து பயிலுதல் ஆகும். இன்றைய இளைஞர்கள் அறிவு மிகுந்தவர்களாகவும் உலக நடப்பினை நன்கு அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். இருப்பினும் இவர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு துறைகளைப் பற்றி சுருக்கமாக விளக்கப்படுகின்றது.

★ ★ ★

**10ஆம் வகுப்பு வெற்றிப் பெற்ற மாணவர்கள் தொழிற்துறை சம்பந்தமாக என்ன படிக்கலாம் என்பதை இப்போது பார்க்கலாம் :**

## HEALTH WORKER TRAINING COURSE

(பெண்கள் மட்டும்) – 1 1/2 வருடம், வயது 18–30.

**கல்லூரிகளின் விவரம், எங்கு கற்கலாம்?**

- ☐ அரசினர் மாவட்ட தலைமை ஆஸ்பிட்டல், திண்டுக்கல், வேலூர், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், கடலூர், நாகர்கோவில், நாகப்பட்டினம், ராமநாதபுரம் போன்ற இடங்களிலும்,
- ☐ தூர்காபாய் டேஷ்முக் ஆஸ்பிட்டல், ஆந்திரா மகிளா சபா, சென்னை–600 028.
- ☐ சி.எஸ்.ஐ. ஆஸ்பிட்டல், திருவள்ளூர்.
- ☐ பெத்தஸ்டா ஆஸ்பிட்டல், ஆம்பூர்.



- ☐ திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி, திருநெல்வேலி.
- ☐ கிருஷ்டியன் பெல்லோஷிப் ஆஸ்பிட்டல், ஒட்டன்சத்திரம்.
- ☐ டேனிஷ் மிஷன் ஆஸ்பிட்டல், திருக்கோயிலூர்.
- ☐ மேத்தா ஆஸ்பிட்டல், புல்லம்பாடி.
- ☐ கஸ்தூரிபாய் ஆஸ்பிட்டல், காந்தி கிராமம், திண்டுக்கல் மாவட்டம்.
- ☐ சி.எஸ்.ஐ. ஆஸ்பிட்டல், தாராபுரம்.

இதைப்படித்தவர்களுக்கு அரசு மருத்துவமனைகளிலும், இதர பொது மருத்துவமனைகளிலும் உடனடியாக வேலை கிடைக்கின்றது. மேலும் புதிய புதியதாக மருத்துவமனைகள் தோன்றுகின்ற இந்த காலத்தில் இந்த படிப்பிற்கு மிகவும் கிராக்கி.

இதற்கு விண்ணப்பங்கள் பெற அந்தந்த கல்லூரிகளின் முதல்வரை அணுகி முழு விவரங்களை தெரிந்துகொள்ளலாம்.

★ ★ ★

## MEDICAL RECORD TECHNICIAN TRAINING COURSE

– 6 மாதங்கள்

**எங்கு கற்கலாம்?**

- ☐ மகளிர், குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர், சென்னை–600 008.
- ☐ இன்னும் சில அரசு அல்லாத மருத்துவமனைகளில் சொல்லிதரப்படுகின்றது.

★ ★ ★

## LAB TECHNICIAN

– ஒரு வருடம்

**எங்கு கற்கலாம்?**

பொதுவாக அரசு மருத்துவமனைகளில் கற்று தரப்படுகின்றது.

- ☐ சென்னை மருத்துவக்கல்லூரி, சென்னை–600 003.
- ☐ ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரி, சென்னை–600 001.
- ☐ கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி, சென்னை–600 010.
- ☐ செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி, செங்கல்பட்டு.
- ☐ மதுரை மருத்துவக்கல்லூரி, மதுரை–625 001.
- ☐ தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்.

★ ★ ★

பொறியியல் துறையில் டிப்ளமோ படிப்பு படிக்கலாம் – மூன்று வருடம் படிப்பு. இதை படித்தவர்கள் சொந்தமாக தொழில் தொடங்கலாம் (அல்லது) தொழில் பட்டறைகளில் பணிபுரியலாம் (அல்லது) அரசுத்துறை நிறுவனங்களில் குரூப் C,D போன்ற பணிகளில் வேலைவாய்ப்பு பெறலாம். கடின



உழைப்பும், உண்மையான பயிற்சியும் முக்கியம். ஏனெனில் டிப்ளமோ படித்து முடித்த இளைஞர்கள் Field Experience என்று கூறுவார்களே அது முழுமையாக தெரிந்து இருக்கவேண்டும். இல்லையேல் இப்படிப்பு ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதுபோல் ஆகிவிடும். எனவே இந்த படிப்புப் பிரிவு (Course) தேர்ந்தெடுப்பவர்கள், நிச்சயமாக அதன் சார்புடைய தொழில்களில் பயிற்சி முழுமையாக தெரிந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்கவேண்டும். முடிந்தால் மாலை நேரங்களில் பட்டறையில் சென்று பயிற்சி பெறலாம். என்னென்ன பொறியியல்துறை சம்பந்தமான படிப்புப் பிரிவுகள் உள்ளன? என்று பார்ப்போம்.



- ☐ Diploma in Civil Engineering
- ☐ Diploma in Mechanical Engineering
- ☐ Diploma in Electrical Engineering
- ☐ Diploma in Electronics and Communications
- ☐ Diploma in Production Engineering
- ☐ Diploma in Commercial Practics
- ☐ Diploma in Costume Design and Dress Making
- ☐ Diploma in Leather Technology
- ☐ Diploma in Printing Technology
- ☐ Diploma in Instrument Technology
- ☐ Diploma in Architectural Assistanship
- ☐ Diploma in Cosmotology
- ☐ Diploma in Chemical Technology
- ☐ Diploma in Petro-Chemical
- ☐ Diploma in Polymer Technology
- ☐ Diploma in Agricultural Engineering
- ☐ Diploma in Computer Science
- ☐ Diploma in Electronics & Telecommunication Engineering
- ☐ Diploma in Refrigeration & Airconditioning
- ☐ Diploma in Textile Technology
- ☐ Diploma in Fibre Technology
- ☐ Diploma in Machine Tool Maintenance & Repairs
- ☐ Diploma in Automobile
- ☐ Diploma in Mettalurgy
- ☐ Diploma in Foundry Technology
- ☐ Diploma in Pulp Paper Technology
- ☐ Diploma in Prosthetics and Orthotics
- ☐ Diploma in Plastic Moulding Technology (Central Institute of Plastic Eng & Tech, Guindy, Chennai - 600 032.
- ☐ Certificate Course in Salesmanship (1 year)

**எங்கு கற்கலாம்?**

பொதுவாக SSLC –யில் வெற்றி பெற்றவர்கள் தொழிற்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் மேற்கூறிய தொழில் சம்பந்தப்பட்ட மூன்று ஆண்டு தொழிற்துறையின் பாடங்களைப் படித்து வேலைக்கு தகுதி பெறுகின்றனர். டிப்ளமோ அளவில் சிறந்த முறையில் வெற்றிப் பெற்றவர்கள் பொறியியல் துறையின் BE (4 வருடம் படிப்பில்) இரண்டாம் ஆண்டில் (Lateral entry) சேர வாய்ப்பு உள்ளது. டிப்ளமோ படித்தவர்கள் 10+3+3=16 வருட படிப்பில் BE படிக்கின்றனர். +2 முடித்தவர்கள் 10+2+4=16 வருட படிப்பில் BE படிக்கின்றனர். மேலும் டிப்ளமோ படித்தவர்கள் குறைந்தது 3–5 வருட Field Experience இருந்தால் BE (Part time) படிக்கலாம். எனவே டிப்ளமோ படிப்பு மிகவும் கவர்ச்சிகரமானது. வேலைக்கு வேலை, படிப்பிற்கு படிப்பு – நல்லமுறையில் ஆர்வமுடன் படிப்பவர்களுக்கு.

பொதுவாக எல்லா அரசுதுறை பாலிடெக்னிக் கல்லூரிகளிலும், சில தனியார் கல்லூரிகளின் பாலிடெக்னிக்குகளிலும் மேற்கூறிய துறைகளில் படிப்புகள் சொல்லி தரப்படுகின்றது.

ஏறத்தாழ தமிழ்நாட்டில் 215 பாலிடெக்னிக் நிறுவனங்கள் உள்ளன. மேற்கூறிய நிறுவனங்களில் சேர முதலில் நுழைவுத் தேர்வு எழுதிட வேண்டும். கவலைவேண்டாம். காரணம் 215 பாலிடெக்னிக் நிறுவனங்களில் ஏறத்தாழ 42,000 (நாற்பத்திரெண்டாயிரம்) இடங்கள் உள்ளன. இதில் பெண்களுக்கென 4,000 (நான்காயிரம்) இடங்கள் உள்ளன. பெண்களுக்கென தனி பாலிடெக்னிக்குகளும் உள்ளன.

பொதுவாக இந்த நிறுவனங்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வது என்னவெனில், தற்போதுள்ள வசதிவாய்ப்புகளை (Infrastructure facilities) அதிகமாக ஏற்படுத்தி, மாணவர்கள் Field Experience –க்கு தயாராக்குங்கள் என்பதுதான்.

டிப்ளமோ கோர்ஸில் சேர SSLC –யில் குறைந்தது 40% கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் எடுத்து இருக்கவேண்டும். அதுவல்லாது இரண்டிலும் வாங்கிய மார்க்குகளின் மொத்தம் 100–க்கு குறையாமல் இருக்க வேண்டும். BC, MBC, DNC சார்ந்தவர்களுக்கு சலுகை உள்ளது. SC/ST இனத்தை சார்ந்த மாணவர்கள் பாஸ் செய்து இருந்தால் போதும்.



மேற்கூறிய மூன்று வருட டிப்ளமோ கோர்ஸ்கள் தவிர, எஸ்.எஸ்.எல்.சி. (SSLC) படித்து முடித்தவர்கள் ஒரு வருடம் அல்லது இரண்டு வருட Certificate Course படிக்கலாம். இது அந்தந்த துறைகளில் பயிற்சிபெறும் வகையில் அடித்தளமாக அமைக்கின்றது. சில குடும்பங்களில் இத்துறையை சேர்ந்த தொழில் செய்யலாம். அவர்களுடைய குழந்தைகள் இதில் படிப்பதால் சிறப்பான முறையில் பல யுக்திகளை கையாள முடியும்.

இம்முறையில் ஒரு வருட படிப்பை வெற்றிகரமாக முடித்தவர்கள் National Trade Certificate என்ற சான்றிதழ் கொடுக்கப் படுகின்றது. மேலும் ஒரு வருடம் அப்பரண்டிஸ்ஷிப் (Apprenticeship) வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், மத்திய அரசு நடத்தும் தேர்வில் வெற்றிப் பெற்றால் நேஷனல் அப்பரண்டிஸ்ஷிப் Certificate கொடுக்கப்படும். இக்காலத்தில் அரசாங்கத்தின் உதவிச் சம்பளமும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதற்கும் கடின உழைப்பும், புதிய யுக்திகளை கையாளத் திறமையையும் பெற வேண்டும். அமெரிக்கா, ஜப்பான், ரஷியா போன்ற மேலைநாடுகள் கைத்தொழில் துறையின் மூலம்தான் வல்லரசாக விளங்குகின்றது. எனவே மாணவர்கள் இத்தகைய தொழிற்சம்பந்தமான படிப்புகளைப் படிக்கும்போது கவனமும் ஆற்றலையும் பயன்படுத்தி படிக்க வேண்டும். வேலையைத் தேடி நீங்கள் செல்லவேண்டாம். வேலை உங்களைத் தேடி வரும். சோம்பேறிகளாக இருக்காதீர்கள். எழுந்திருங்கள், வெற்றிபெறுங்கள். எதையும் உங்களால் செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடன் வெற்றிப் புன்னகையுடன் வருங்கால இந்தியாவின் சிற்பியாக மாறுங்கள்.

**எங்கு கற்கலாம்?**

அரசு I.T.I. என்று சொல்லப்படுகின்ற Industrial Technical Institute–ல் முக்கியமாக எல்லா மாவட்டங்களில் கற்பிக்கப்படுகின்றது. சில சமூக தொண்டு நிறுவனங்களும், தனியார் துறையிலும் ITI நடத்தப்படுகின்றது.

**என்னென்ன கற்று தரப்படுகின்றது?**

கீழ்க்கண்ட துறையில் S.S.L.C. முடித்தவர்கள் படித்து பயன் பெறலாம்.

**ஒரு வருட படிப்பு :**

**Carpenter - Moulder - Mechanic Diesel - Plumber -Mechanic - Tractor - Mason, Painter, Pattern Maker - Welder - Mechanic (Motor), Wiremen, Sheet Metal Worker - Plastic Processing Operator - Computer Software - Stenographer - Hand Compositor - Book Binder - Embroidery and Needle Work - Cutting and Tailoring - Footwear - Leather Goods Maker.**

**இரண்டு வருடப்படிப்பு :**

**Turner - Mechanist - Fitter - Electro Plater - Wireless Mechanic - Surveyor - Electrician - Tool and Die Maker - Draughtsman - Radio & T.V.**

அந்தந்த துறையில் சிறப்பை அடையும் வகையில் கோர்ஸ்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவரவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் முறைதான் வேறுபடுகின்றது. எனக்குத் தெரிந்த நண்பர் S.S.L.C. வரை படித்தவர் Computer Software படித்தவர் மிக அருமையாக எத்தகைய ரிப்போர்களையும் BE படித்த இளைஞனைக் காட்டிலும் செய்து முடிக்கின்றார். எனவே அவருக்கு வரவேற்பு அதிகம்.

**மற்ற துறைகள் :**

SSLC படித்தவர்கள் கீழ்க்கண்ட துறைகளிலும் சேர்ந்து படிக்கலாம்.

☐ Diploma in Film Acting - 1 year

**எங்கு கற்கலாம்?**

☐ சினிமா, வானொலி நிறுவனம், தரமணி, சென்னை–600 113.

☐ சென்னை கிருஸ்துவக் கல்லூரி, தாம்பரம், சென்னை–600 059.

☐ வி.ஜி.பி. நிலையம், ஈஞ்சம்பாக்கம், சென்னை–600 041.

★ ★ ★

**மீன் வளர்ச்சித்துறை**

மீன் படகு துறையில், Mate Fishing Vessel (18 மாத கால கோர்ஸ்), Engine Driver Fishing Vessel (18 மாத கால



கோர்ஸ்) படிக்கலாம். மேற்கண்ட இரு கோர்ஸ்களும் 'Central Institute of Fisheries Nautical and Engineering Training Centre, S.N. Chetty St, Royapuram, Chennai-600 013 என்ற விலாசத்தில் சொல்லித்தரப்படுகின்றது. SSLC யில் குறைந்தது 40% எடுத்தவர்கள் சேரலாம்.

**உணவுத்துறை**

Craftsmanship Certificate Course in Food Production (1 1/2 years கோர்ஸ்) என்ற கோர்ஸ் Institute of Hotel Management and Catering Technology, CIT வளாகம், தரமணி, சென்னை–600 113–ல் சொல்லிதரப்படுகின்றது. SSLC படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

Foodcraft Institute, துவாக்குடி, திருச்சி–620 015 என்ற நிறுவனத்தில் 'Bakery & Confectionery, Cookery, House Keeping (1 வருட கோர்ஸ்) நடத்தப்படுகின்றது.

தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் பலதுறைகளில் இசைப்பயிற்சி பெறலாம். சில துறைகளுக்கு எட்டாம் வகுப்பு படித்தவர்களாக இருந்தாலே போதும். இசைத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**முதல்வர், தமிழக அரசு இசைக்கல்லூரி,**
**கிரீன்வேஸ் தெரு, சென்னை–600 028.**

இங்கு அல்லது அரசு இசைக்கல்லூரி, பதுமலை, மதுரை–625 004 பயிற்சி அளிக்கப்படுகின்றது. மேலும்,

☐ கலைக் காவேரி நாட்டியப்பள்ளி, திருச்சி–620 001.

☐ கலாஷேத்ரா கல்லூரி, சென்னை–600 041.

☐ அரசு நுண்கல்வி, கும்பகோணம்.

☐ தமிழ் இசைச்சங்கம், ராஜா அண்ணாமலை மன்றம், சென்னை–600 108.

☐ ராஜா சர் முத்தையாச் செட்டியார் இசைக்கல்லூரி, அண்ணாமாலைநகர்.

☐ திருவையாறு இசைக்கல்லூரி போன்ற இடங்களில் கற்கலாம்.

★ ★ ★



**+2 மாணவர்கள் என்னப் படிக்கலாம்?**
**எங்கே படிக்கலாம்?**

மேலைநாடுகளில் எல்லாம் பள்ளிக் கல்வி பருவத்திலேயே மாணவர்களுக்கு பலதரப்பட்ட வழிகாட்டி சூழ்நிலைகள் உள்ளன. கீழ்க்கண்ட குறிப்புகள் ஒரு வழிகாட்டிதான். முழுமையான விவரங்களான ஹாஸ்டல் வசதி, பணச்செலவு போன்றவற்றைத் தெரிந்துகொள்ள அந்தந்த நிறுவனத்தை அணுகுவது நல்லது.

+2 படித்த மாணவர்கள் பொதுவாக தேர்ந்தெடுப்பது தொழிற்சம்பந்தமான துறையும், விஞ்ஞானம் போன்ற துறை, கலைத் தொடர்புள்ள துறை என பிரிக்கலாம்.

**தொழிற் சம்பந்தமான துறை**

☐ பொறியியல் துறை (Engineering), அதன் சார்புடைய துறை

☐ மருத்துவம் (Medical), அதன் சார்புடைய துறை

☐ விவசாயம் (Agriculture), அதன் சார்புடைய துறை

☐ சட்டம் (Law)

☐ விலங்கினம் (Vet.Science), அதன் சார்புடைய துறை

**விஞ்ஞானம்**

☐ கம்யூட்டர் (Computer)

☐ இயற்பியல் (Physics)

☐ வேதியியல் (Chemistry)

☐ கணிதம் (Maths)

☐ உயிரியல் (Biology)

**கலை**

☐ வணிகவியல் (Accountancy, Commerce)

☐ மேலாண்மை (Management)

☐ பொருளாதாரம் (Economics)

☐ பூலோகவியல் (Geography)

☐ வரலாறு (History)

☐ மனையியல் (Home Science)

☐ சமூகவியல் (Sociology)

☐ விளையாட்டு (Physical Education)

☐ ஆசிரியர் பயிற்சி (Teacher - Education)

☐ இசை (Music), இன்னும் பல துறைகள்

எனப் பாகுபடுத்தலாம்.

★ ★ ★

## பதினொன்றாம் வகுப்பில் தங்கள் திறமை மற்றும் ஆர்வத்திற்கு ஏற்பப் பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுப்பது எப்படி?

- ☐ மருத்துவம் மற்றும் கால்நடை மருத்துவம் சார்புடைய துறைகளில் பணிபுரிய விரும்புவர்கள், பதினொன்றாம் வகுப்பில் (+1) இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology) போன்ற பாடங்கள் அடங்கிய Pure Science Group எடுத்துப் படிக்கலாம்.
- ☐ தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆர்வம் உள்ளவர்கள், கணிதம் (Maths), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) முதலிய பாடங்கள் அடங்கிய Group–ல் சேரலாம்.
- ☐ தொழில்நுட்பக் கல்வி அல்லது மருத்துவம் இவற்றில் எந்தத் துறையைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதை +2 முடித்த பின் தேர்வு செய்யலாம் என்று நினைப்பவர்கள் கணிதம் (Maths), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry), உயிரியல் (Biology) Group எடுத்துப் படிக்க வேண்டும்.
- ☐ வங்கிகள் (Banks), ஆயுட்காப்பீட்டுக் கழகங்கள் (Insurance Companies) போன்றவற்றில் பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் அல்லது Chartered Accountant, Company Secretary ஆகவோ பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் வணிகவியல் (Commerce), கணக்குப் பதிவியல் (Accountancy), பொருளியல் (Economics) போன்ற பாடங்கள் அடங்கிய Group எடுத்துப் படிக்க வேண்டும்.

வரலாறு (History), புவியியல் (Geography) போன்ற பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுப்பவர்கள் பல்வேறு துறைகளில் பணியாற்றுவர்.

ஒவ்வொரு மாணவனும் எந்தத் துறையில் தனக்கு ஆர்வம் உள்ளது, எந்தத் துறையில் பயின்றால் வேலைவாய்ப்பு அதிகம் உள்ளது, அத்துறை சார்ந்த படிப்புகள் என்னென்ன? அவை எங்கெங்கு நடத்தப்படுகிறது? தமிழ்நாட்டிலும், வெளி மாநிலங்களிலும் எங்கெங்கு உள்ளது? எத்தனை வருடங்கள்? இளங்கலை படித்து முடித்தவுடனேயே வேலை கிடைத்து விடுமா? இல்லை உயர்கல்வி படிக்க வேண்டுமா? என்பது பற்றி நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவனும் தன்னுடைய தனிப்பட்ட திறமை, ஆர்வம், குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, எதிர்காலக் கல்வியை திட்டமிடுவது நல்லது. அவ்வாறு திட்டமிடும் பொழுது, மாணவர்களின் ஈடுபாடும், பெற்றோரின் விருப்பமும் ஒன்றுபோல் இருந்தால் பிரச்சினை இல்லை. ஆனால் சில நேரங்களில் பெற்றோர்கள் அவர்தம் குழந்தைகளின் விருப்பத்தை ஏற்காததையும், தம் விருப்பத்தை குழந்தைகளிடம் திணிப்பதையும் காண முடிகிறது.

★ ★ ★

கல்லூரிக் கல்வி என்பது, ஏதாவது ஒரு பாடப்பிரிவில் சேர்ந்து கல்வி பயில்வது என்று பொருள் கொள்ளக்கூடாது. எந்த ஒரு கல்வியைத் தேர்ந்தெடுப்பதாக இருந்தாலும், அதற்குத் தேவையான தகுதி, திறன் போன்றவை மாணவர்களிடத்தில் இருக்க வேண்டியது அவசியம். (எ–கா) நன்றாக Drawing பண்ணும் திறமை உள்ளவர்கள், கற்பனை வளம், திட்டமிடுதல், பொது அறிவு போன்றவற்றில் திறமை உடையவர்கள் B.Arch கல்விப் பிரிவைத் தேர்ந்தெடுப்பது நலம். கல்லூரிக் கல்வியைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் சில விஷயங்களை நினைவிற் கொள்வது நல்லது.



- ☐ பட்டியலைத் தயார் செய்த பிறகு அது தொடர்பாக திட்டமிடுதலும், முடிவெடுத்தலும் அவசியம். ஏனென்றால் சில நேரங்களில் திட்டமிட்டதை நாம் தொடர்ந்து செயல்படுத்தாத (அல்லது) செயல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்படலாம். எனவே அதனை அலசி, ஆராய்ந்து நல்லதொரு தீர்வு காண முற்பட வேண்டும்.
- ☐ ஒரு குறிப்பிட்ட பாடம்தான் மிகச் சிறந்தது என்று எண்ணுவது தவறான கருத்தாகும். அதுபோல் குறிப்பிட்ட படிப்புதான் படிக்க வேண்டும் என்ற ஆசையையும், மனோ பாவத்தையும் தீவிரமாக மனதில் வளர்த்துக் கொள்வதும், அப்படிப்பில் சேர இடம் கிடைக்காவிடில் மனம் தளர்வதும் கூடாது.

ஒவ்வொரு கல்விப் பிரிவுக்கும், அந்தந்தக் கல்விப் பிரிவுகென்று சில சிறப்புத் தன்மைகள் உள்ளன. இந்தப் பாடம்தான் சிறந்தது, இந்தப் பாடம் சிறந்ததல்ல என்று கருதுவது தவறாகும். எந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தாலும், அந்தத் துறையில் முழு மனதுடன் ஈடுபட்டு, ஆழ்ந்த சிந்தனையுடன், திட்டமிட்டுப் படித்தால், வாழ்க்கையில் வெற்றிக்கனி என்பது நம் உள்ளங்கையில். வாழ்வில் படிக்க முடியாதவர்கள் கூட (அல்லது) தொடர்ந்து படிக்க முடியாத நிலையில் சிக்கித் தவித்த எத்தனையோ பெரியோர்கள், மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்கிறார்கள். இதுபோன்ற கருத்துகளை மனதில் கொண்டு, பள்ளி உயர்கல்விக்குப் பின் என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம் என்று தீர்மானிக்க வேண்டும்.

இது தவிர இன்னும் பல காரணிகளையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

- ☐ பாடப்பிரிவு அல்லது பாடம் (Course) பற்றிய முழு விவரங்களையும் பெற்றோர்கள் உட்பட தெரிந்துகொள்வது அவசியம்.
- ☐ இந்தப் பாடப்பிரிவு தேர்ந்தெடுத்துப் படித்தால் அதற்காக ஆகும் செலவை நம்மால் எதிர்கொள்ள முடியுமா? என்பது பற்றி முன்னமையே சிந்திக்க வேண்டும்.
- ☐ நாம் தேர்ந்தெடுக்கும் கல்லூரியில் போதிய வசதிகள் உள்ளனவா? ஏதேனும் உதவித் தொகை வழங்கப் படுகிறதா? என்பது பற்றி அறிந்துகொள்ள வேண்டும்.
- ☐ சில துறைகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்கும்பொழுது, நாம் படிக்கும் பாடப்பிரிவு தவிர, அது தொடர்புடைய பிற துறைகளிலும் நாம் தேர்ச்சி பெற வேண்டியிருக்கும். உதாரணமாக நூலகம் மற்றும் தகவல் அறிவியல் படிப்பவர்கள், அது தவிர கணினி பற்றியும் படித்திடல் வேண்டும். நூலகம் மற்றும் தகவல் அறிவியல் மட்டும் படித்துவிட்டு வேலைவாய்ப்பு பெற முடியாது. ஏனென்றால் நூலகத்தை கணினி மயமாக்கும் பணி தற்பொழுது மேற்கொள்ளப்படுவதால், கணினி கல்வியும் அவசியம்.



பள்ளி உயர்கல்வி படித்தவர்களில் ஏறத்தாழ 9% பிரிவினர் பொறியியல் (Engineering) பிரிவிலும், 3% பிரிவினர் மருத்துவப் பிரிவிலும் (Medicine) 2% பிரிவினர் கால்நடை மருத்துவப் பிரிவிலும் (Veterinary Science) படிப்பதற்கு ஏற்றவாறு தமிழக அரசின் உயர்கல்விக் கொள்கை அமைந்துள்ளது. வேலைவாய்ப்பு நிறைந்த கல்வித்துறைகள் பின்வருமாறு :

- ☐ மருத்துவம் (Medicine)
- ☐ பொறியியல் (Engineering)
- ☐ இளங்கலை கணிப்பொறி (B.Sc.,Computer Science)
- ☐ Management Courses
- ☐ CA, ICWAI, ACS
- ☐ Fashion Technology
- ☐ Hotel Management

பொறியியல் பாடப் பிரிவில் சேர்ந்து கல்வி பயில விரும்புவர்கள் முதலில்

- ☐ Six I.I.T.s (Indian Institute of Technology)
- ☐ Anna University, M.I.T.
- ☐ P.S.G. Technology, Coimbatore
- ☐ C.I.T. (Coimbatore Institute of Technology)
- ☐ I.I.I.T.(Indian Institute of Information Technology)
- ☐ 17 Regional Engineering College

போன்ற கல்வி நிலையங்களில் சேருவதற்கு தான் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இவைகளில் சேருவதற்கு இந்நாளில் கடும் போட்டி நிலவுகிறது. மேலும், தமிழகத்தில் உள்ள ஏறத்தாழ 140 பொறியியல் கல்லூரிகளில் ஏறத்தாழ 30,000 இடங்களில் சேருவதற்கு வாய்ப்பு உள்ளது. மாணவர்கள், பொறியியல் துறையில் 4 வருடப் பட்டப் படிப்பு பெற்றவுடன், மேல் படிப்பை வெளிநாடு சென்று பயில விழைகின்றனர். பொறியியல் படிக்க, சுயநிதிக் கல்லூரிகளிலும் கடும்போட்டி உள்ளது.

★ ★ ★

### +2 படித்து முடித்தவர்களுக்கு கல்லூரிகளில் உள்ள பாடப் பிரிவுகள்

**ENGINEERING**

- ☐ B.E. - 4 years) (Civil, Mechanical, Electrical, Electronics, EEE, ECE, Computer, ICE, Mettallurgy, Marine)
- ☐ B.E. (Agri) - 5 years
- ☐ B.Tech - 4 years (I.T., Chemical, Textile, Weather Aeronautical, Automobile)
- ☐ B.Arch - 5 years
- ☐ B.Tech (Environmental Technology)
- ☐ B.Tech (Industrial Bio-Technology)
- ☐ M.Sc. (Software) - 5 years
- ☐ A.M.I.E.

**MEDICINE/PARA-MEDICAL COURSES**

- ☐ M.B.B.S. - 4 1/2 years



- ☐ B.V.Sc (Veterinary Science) - 5 years
- ☐ B.S.M.S. (Siddha Medicine) - 5 years
- ☐ B.H.M.S. (Homeopathy Medicine) - 5 years
- ☐ B.A.M.S. (Ayurvedic, Siddha Medicine) - 5 years
- ☐ B.U.M.S.(Unani Medicine) - 5 years

B.D.S. (Dentistry) - 4 years

- ☐ B.W.Y.S.
- ☐ B.P.T. (Physiotheraphy) - 3 years
- ☐ B.O.T. (Occupational therapy) - 3 years
- ☐ B.Sc. Nursing - 3 years
- ☐ B.Sc. Medical Ophthalmic Technology - 3 years
- ☐ B.Sc. Medical Nutrition - 3 years
- ☐ B.Sc. Medical Laboratory Technology - 3 years
- ☐ B.Sc. Human Biology - 3 years
- ☐ B.Sc. Audiology and Speech therapy - 3 years
- ☐ B.Sc. Speechtherapy and Hearing - 3 years
- ☐ B.Sc. Hearing, Language and Speech - 3 years
- ☐ B.Sc. Speech and Hearing - 3 years
- ☐ B.Sc.Speech Pathology - 3 years
- ☐ B.Sc. Radiography - 3 years
- ☐ B.Pharm - 4 years
- ☐ D.Pharm - 2 years

**ACCOUNTANCY**

- ☐ C.A. (Chartered Accountant)
- ☐ I.C.W.A. (Cost and Management Accountancy)
- ☐ A.C.S.(Company Secretaryship)
- ☐ B.Com - 3 years
- ☐ B.B.M. - 3 years
- ☐ B.B.A. - 3 years

**UNDERGRADUATE COURSES (ARTS)**

- ☐ B.A. English - 3 years
- ☐ B.A. Tamil - 3 years
- ☐ B.A. Urdu - 3 years
- ☐ B.A. Hindi - 3 years

- ☐ B.A. Malayalam - 3 years
- ☐ B.A. Telugu - 3 years
- ☐ B.A. Arabic - 3 years
- ☐ B.A. Sanskrit - 3 years
- ☐ B.A. French - 3 years
- ☐ B.A. History - 3 years
- ☐ B.A. Economics - 3 years
- ☐ B.A. Corporate Secretaryship - 3 years
- ☐ B.A. Political Science - 3 years
- ☐ B.A. Psychology - 3 years
- ☐ B.A. Sociology - 3 years
- ☐ B.A. Indian Music - 3 years
- ☐ B.A. Defence - 3 years
- ☐ B.A. Philosophy - 3 years
- ☐ B.A. Co-operation - 3 years
- ☐ B.A. Industrial Organisation - 3 years
- ☐ B.A. Drawing & Painting - 3 years
- ☐ B.A. Geography - 3 years
- ☐ B.A. Social Work - 3 years
- ☐ B.A. Bank Management - 3 years
- ☐ B.A. Oriental Craft - 3 years
- ☐ B.A. Indian Culture - 3 years
- ☐ B.A. Social Science - 3 years
- ☐ B.A. Music - 3 years
- ☐ B.A. Tourism - 3 years

**UNDERGRADUATE COURSES (SCIENCE)**

- ☐ B.Sc. Mathematics - 3 years
- ☐ B.Sc. Chemistry - 3 years
- ☐ B.Sc. Physics - 3 years
- ☐ B.Sc. Biology - 3 years
- ☐ B.Sc. Botany - 3 years
- ☐ B.Sc. Zoology - 3 years
- ☐ B.Sc. Computer Science - 3 years
- ☐ B.Sc. Statistics - 3 years
- ☐ B.Sc. Geology - 3 years
- ☐ B.Sc. Geography - 3 years
- ☐ B.Sc. Biochemistry - 3 years
- ☐ B.Sc. Microbiology - 3 years
- ☐ B.Sc. Applied Microbiology - 3 years
- ☐ B.Sc. Dietics - 3 years
- ☐ B.Sc. Institute Management & Dietics with Chemistry - 3 years.
- ☐ B.Sc. Home Science - 3 years
- ☐ B.Sc. Visual Communication - 3 years
- ☐ B.Sc. Physical Education - 3 years
- ☐ B.Sc.Interior Design & Environment - 3 years
- ☐ B.Sc. Costume Design & Fashion - 3 years
- ☐ B.Sc. Interior Decoration - 3 years
- ☐ B.Sc. Hotel & Catering Management - 3 years
- ☐ B.Sc. Craftsmanship in Food Product - 3 years
- ☐ B.Sc. Catering Technology & Computer Science - 3 years
- ☐ B.Sc. Health Education - 3 years
- ☐ B.Sc. Electronics - 3 years
- ☐ B.Sc. Industrial Electronics - 3 years
- ☐ B.E.S. Electronics Science - 3 years
- ☐ B.Sc. Biotechnology - 3 years
- ☐ B.Sc. Environmental Zoology - 3 years
- ☐ B.Sc. Chemical - 3 years
- ☐ B.Sc. Rehabilitation - 3 years
- ☐ B.Sc. Applied Auto Science - 3 years
- ☐ B.Sc. Leather Science - 3 years
- ☐ B.Sc. Rural Development & Science - 3 years

**SPECIAL COURSES**

- ☐ B.F.Sc.(Fisheries Science) - 5 years
- ☐ B.Sc. Visual Communication Design - 5 years
- ☐ B.Sc. Textile Design & Ceramic Design - 5 years
- ☐ B.Sc. Agri - 4 years
- ☐ B.Sc. Horticulture - 4 years
- ☐ B.Sc. Forestry - 4 years
- ☐ B.L.M. Labour Management
- ☐ B.L. (Law Course) - 4 years
- ☐ B.F.A. (Fine Arts/Drawing/Painting) - 4 years
- ☐ Defence Studies - 3 years
- ☐ Temple Architecture & Sculpture - 2 years
- ☐ Cinematography - 3 years
- ☐ Diploma Plastic Mould Technology Diploma - 3 years
- ☐ Diploma in Fashion Technology - 3 years
- ☐ Teachers Education - 2 years
- ☐ Diploma in Film Technology

அனைத்து கல்விப் பிரிவுகள் பற்றியும் அறிய விரும்புபவர்கள் "Choose the Best Course after +2 என்ற புத்தகத்தை வாங்கி பயன் பெறவும்.

**பேராசிரியர் P.S.B. கல்வி மையம்,**
**4/1399, ஆறாவது ஹால்,**
**முகப்பேர் (மேற்கு), சென்னை–600 058.**

*(அடுத்த இதழில் மேலும் பல சிறப்பு கோர்ஸ்களின் விவரங்களை தெளிவாக படித்து பயன்பெறுங்கள்.)* ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906



கடலூர் மாவட்டம் கோமுகி நதி பாசனக் கால்வாய் அன்றும்



கடலூர் மாவட்டம் கோமுகி நதி பாசனக் கால்வாய் இன்றும்

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

